கதைப்பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்

முனைவர் சு. நிர்மலாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

கதைப்பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்

முனைவர் சு. நிர்மலாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
II Main Road, C.P.T. Campus, Taramani, Chennai - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Kataippāṭalkaḷil kaṭṭuppāṭṭu mīṟalkaḷ
Author	:	Dr. S. Nirmala Devi (Dip. in Epigraphy & Archaeology, Dip. in Manuscriptology) Research Assistant International Institute of Tamil Studies II Main Road, C.P.T. Campus Chennai - 600 113.
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.P.T. Campus Chennai - 600 113. Ph: 22542992
Publication No.	:	589
Language	:	Tamil
Edition	:	First Edition
Year of Publication	:	2008
Paper Used	:	18.6 Kg. TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	x + 318
No. of Copies	:	1200
Price	:	Rs. 95/- (Rupees Ninety five only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Luz, Mylapore, Chennai - 600 004
Subject	:	Studies on Tamil Folk ballads

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

முகவுரை

மனிதகுலத்தின் வாழ்க்கைப் பயண வரலாற்றைத் தேடிப் பார்க்க, கதைப்பாடல்கள் வழிகாட்டுகின்றன.

வாழ்க்கை முறை, வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் வேர்களைச் சொற்களாக்கிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் வாய்மொழி மரபுகள், எழுதப்படாது விடுபட்டுப்போன வரலாற்றின் இன்னொரு முகத்தைக் (கட்டுப்பாடற்ற, கட்டுப்பாடுகளை மீறிய முகத்தைக்) காட்டுகின்றன.

தேவைக்கேற்ப, கடந்தகாலம் புதுப்பிக்கப்பட்டுவரும் வழியில் தேவைகள் மாறும்போது வெறும் சடங்குகளாகி, புராணமாகி, கலைகளில் பல பொழுதுபோக்காகின்றன. அவற்றிலும்கூட இன்றைய தேவைக்குக் கடந்தகாலத் தீர்வுகளைத் தெரிந்து கொள்ளும் முகமாகத் தேடுதல் தொடர்கிறது.

காலத்தின் சுவடுகளைச் சுமந்து வரும் கதைப்பாடல்கள், இசையோடும் கருவிகளோடும் கைகோர்த்து இருப்பைப் புதுப்பித்துக் கொண்டு வந்திருக்கின்றன/வருகின்றன.

கதைப்பாடல்கள் வில்லுப்பாடல்களாகப் பாடப்பெற்றும் ஏடுகளில் இடம்பெற்றும் கணியான் பாடல்களாகவும் உடுக்கடிப் பாடல்களாகவும் பாடப்பெற்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவ்வகையில் கதைப்பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் எனும் இந்நூல் குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றும் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்கள் இந்நூலை ஒரு திட்டப்பணியாகச் செய்துள்ளார்.

நூற்றுக்கும் மேலான கதைப்பாடல்களைப் பார்வையிட்டு ஆய்ந்து இச்சிறந்த நூலை எழுதியுள்ள இவர் பல கதைப் பாடல்களை இந்நிறுவனத்தில் பதிப்பித்தவரும் ஆவார்.

இவ்விரு முயற்சிகளுக்காகவும் அவர் மிகுந்த பாராட்டுக்குரியர் ஆகிறார்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழின் உயர்வுக்குப் பாடுபட்டுவரும் தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கும் நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு கோ. சந்தானம், இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலின் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன், கணிப்பொறியாளர் திருமதி ந. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

முன்னுரை

'கதைப்பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்' என்ற இந்நூல் நிறுவனத்தில் திட்டப்பணியாக எடுத்துக்கொண்டு எழுதப்பட்டதாகும். கதைப்பாடல் வகைகளுள் சமூகக் கதைப்பாடல் என்ற வகையை மட்டும் எடுத்துக் கொண்டு அதில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்துவதாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

முதற்கண் 'நாட்டார் கதைப்பாடல்கள்' என்ற தலைப்பு பொதுவாகக் கதைப்பாடல்கள் பற்றிய செய்திகளைத் தரும் முன்னுரையாக இந்நூலில் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து சமூகக் கதைப்பாடல்களில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்கள் ஐந்து வகையினதாகப் பகுத்துக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன.

காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்களில் சாதிக்குள் தான் மணம்புரிய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை மீறிச் சாதி விட்டுச் சாதி காதல் கொண்டு மணம் புரிந்தவர்களைக் கதைப் பாடல்கள் வழி இனம்காட்டி, இவர்கள் கட்டுப்பாட்டு மீறல்களுக்காகக் கொல்லப்பட்டாலும் இவர்களின் கட்டுப் பாட்டு மீறல்கள் கதைப்பாடல்கள் வழிப் பதிவு பெற்றுச் சமூக மாற்றத்துக்கான வித்துக்களாக அமைந்துள்ளமை சுட்டப் பட்டுள்ளது.

'தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்' என்ற பகுதி குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்கள் குறிப்பிட்ட அந்தந்தச் சாதிக்குரிய தொழில்களையே செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை மீறியவர்களைக் கதைப்பாடல்கள் வழி இனம் காட்டுகின்றது. தங்கள் சாதிக்குரிய தொழில்களை விட்டுப் பிற சாதியார் தொழில்களை மேற்கொண்டு தொழிற்புரட்சி செய்தவர்களின் வேகமும் வீச்சும் ஏற்படுத்திய சமூகச் சித்திரங்கள் வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

உழைப்பாளர் வர்க்கம் எனப்படும் அடிமைவர்க்கம், உடைமையாளர் வர்க்கம் எனப்படும் ஆளும் வர்க்கத்தால் அழுத்தி, அமுக்கி வைக்கப்பட்டுக் கிடந்தது. தங்களுக்குரிய வர்க்க வேறுபாட்டை உடைத்துக் கொண்டு மேலெழும்பி மீறல் நடத்தியவர்களின் சோக வரலாற்றைப் பல சமூகக் கதைப்

பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள் என்ற பகுதி இத்தகையவர்களைப் பற்றிப் பேசுகின்றது.

பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள் என்ற இயலில் பெண்களுக்குச் சொத்தில் பங்கு இல்லை என்பது போன்ற சமூக நியதிகளை மீறிப் போராடிய பெண்கள் குறித்து அலசி ஆராயப்பட்டுள்ளது. பெண்களுக்கான உரிமைகளுக்காகப் போராட்டக் களத்தில் தங்கள் தடம் பதித்த பெண்ணிய விழிப்புணர்வுச் சிந்தனாவாதிகளை அடையாளப்படுத்துவதாக இவ்வியல் அமைந்துள்ளது.

மேற்சொன்ன இயல்களுக்குள் அடங்காத கட்டுப்பாட்டு மீறல்கள் தொகுக்கப்பட்டு அவை, சமுதாய மாற்றம், தலைமுறை மாற்றம் போன்ற சிக்கல், உயர்குல, தாழ்குல மணமறுப்புச் சிக்கல், தொழில் முறை ஏற்றத்தாழ்வு, வெளியூர்க்காரன் செல்வாக்குக்கு எதிரான போராட்டம், ஆளும்வர்க்க அடக்கு முறைக்கு எதிரான போராட்டம் ஆகியவற்றால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்கள் கதைப்பாடற் சான்றுகள் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆக, கதைப்பாடற் காலகட்டம் அதுவரை சமூகத்தில் காணப்பட்ட பல கட்டு திட்டங்களையும் மீறிக் கொண்டு வெளிவரத் துடித்த மக்களின் மனத்துடிப்பை, செயல் வீரத்தை எடுத்துக்காட்டுவனவாக அமைவது சுட்டப்பட்டுள்ளது. இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு நிகரான ஒரு போராட்டம் உள் தமிழகத்துக்குள்ளே நிகழ்ந்துள்ளது என்பது இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தங்களைத் தங்களவரிடமிருந்தே மீட்டெடுக்க நடந்த உள்நாட்டுப் போராட்டத்தைக் கதைப்பாடல்கள் சித்திரித்துள்ளமை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்தும் 48 சமூகக் கதைப்பாடல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. சுவடிகளாக உள்ளவை, சுவடிப் பதிப்புகளாக வெளிவந்தவை, பாடக்கேட்டு ஒலிநாடாவில் பதிவு பெற்று நூலாக்கம் செய்யப்பட்டவை, நூலாக அன்றிக் கதைக் குறிப்புகளாக அறிய வருவன என்ற அனைத்தும் இவ்ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கட்டுப்பாட்டு மீறல்களை நிகழ்த்தியவர்களில் 99 விழுக்காட்டினர் கொல்லப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டு மீறல்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன என்பது இவ்ஆய்வில்

குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தாங்கள் கட்டுப்பட்டுக் கிடக்கிறோம்; அக்கட்டுகளை மீற வேண்டும் என்ற விழிப்புணர்வை ஒரு விழுக்காட்டினராவது கதைப்பாடற் காலகட்டத்தில் பெற்றுவிட்டனர் என்பதும் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, விரைவில் நிறுவன வழி இந்நூலை வெளியிட்ட நிறுவன இயக்குநர் பெருந்தகை முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலின் ஒவ்வோர் எழுத்தையும் நுணுக்கமாகப் பார்வையிட்டு, நூலின் செம்மைக்கும் சீர்மைக்கும் தோன்றாத் துணையாய் நின்ற முனைவர் தசரதன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி.

நூலின் மெய்ப்புத் திருத்தப் பணியில் உதவி புரிந்த முனைவர் பட்ட மாணவமணிகள் ஜெ. முத்துச்செல்வன், சே. கரும்பாயிரம் ஆகியோருக்கு மனம் கனிந்த நன்றி.

இந்நூலை ஒளிக்கோவை செய்தளித்த கணிப்பொறியாளர் திருமதி இலக்குமிக்கு நன்றி.

சூ. நிர்மலாதேவி

நாட்டார் கதைப்பாடல்கள்

நாட்டுப்புறவியல் துறை 1950களில் முகிழ்த்து அறுபதுகளில் அரும்பி, எழுபதுகளில் போதாகி எண்பதுகளில் மலராகி மணம் வீசி வருகின்றது. தமிழகத்தில் இத்துறை குறிக்க நாட்டுப்புறம், நாட்டார் என்ற இரு சொற்களும் ஒரே பொருள் குறிக்க ஆளப்பட்டு வருகின்றன. இந்நூலில் இவ்விரு சொற்களும் இப்பொருள் குறிக்க ஆளப்படுகின்றன. நாட்டுப்புறவியல் துறையில்,

1. நாட்டுப்புறப் பாடல்கள்
2. நாட்டுப்புறக் கதைகள்
3. நாட்டார் கதைப்பாடல்கள்
4. நாட்டுப்புறப் பழமொழிகள்
5. நாட்டார் விடுகதைகள்
6. நாட்டுப்புறக் கலைகள்
7. நாட்டார் நம்பிக்கைகள்
8. நாட்டார் தெய்வங்கள்
9. நாட்டார் வாழ்வியல்
10. நாட்டுப்புற விளையாட்டுகள்
11. நாட்டுப்புற மருத்துவம்

போன்ற பிரிவுகள் உள்ளடங்கும் எனக் கொள்ளலாம். நாட்டுப்புறவியல் துறை ஐம்பதுகளில் முகிழ்த்தது என்றாலும் நாட்டார் இலக்கியமே ஏட்டிலக்கியத்துக்கும் முந்தியது என்பதும் நாட்டார் இலக்கிய வகையினின்று ஏட்டிலக்கிய வகைகள் உருவாயின என்பதும் வி.ஐ. சுப்பிரமணியம் போன்ற அறிஞர்களின் கருத்துகளாகும். ஆகவே ஏட்டிலக்கியத்தின் தாயாகத் திகழும் நாட்டார் இலக்கியங்கள் தனியொரு துறையாகக் கருதப்பட்டு வளர்க்கப்பட்டது 1950 வாக்கில் என்றாலும் இவ்விலக்கிய வகையின் தொன்மைக் காலத்தை வரையறுத்துக் கூறுதல் இயலாது என்பதே உண்மையாகும்.

இத்தகு நாட்டார் இலக்கிய வகையுள் ஒன்றான நாட்டார் கதைப்பாடல்கள் குறித்த சில கருத்துகளைக் காணலாம்.

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

கதைப்பாடல் சொல்விளக்கம்

கதைப்பாடல்களை நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றாக ஆய்வுலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. கதைப்பாடல் என்பது 'பாலட்' (Ballad) என்பதற்கு நிகராகத் தமிழில் அமைத்துக் கொண்ட சொல்லாகும். 'பாலட்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'நடனப்பாடல்' என்பது நேரடிப் பொருளாகும். ஆயினும் இச்சொல் கதைப்பாடல் என்ற பொருளிலேயே இன்று வரையும் தொடர்ந்து ஆளப்பட்டு வருகின்றது. கதை கூறும் பாட்டு என்பது அதன் விளக்கமாக அமையலாம். பாட்டுக் கதை என்ற வழக்கும் உள்ளது. இதற்குப் பாட்டாக அமைந்த கதை என்று பொருள் கூறலாம்.

கதைப்பாடல் இயல்புகள்

கதைப்பாடலின் இயல்புகள் குறித்து ஜி. மால்கம் லாஸ் (G. Molcolm Laws JR) அவர்கள் கூறும் கருத்துகளாவன:

1. கதைப்பாடல் கதைக் கூறினை உயிராக உடையது.
2. தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு கதையைக் கூறுவது.
3. கதைய்யை உள்ளடக்கமாகக் கொண்டது.
4. கதையைப் பாடல் வடிவில் கூறுவது.
5. மக்களின் வாய்மொழியாக வழங்கி வருவது.[1]

நாட்டுப்புறவியல் துறை நாளும் வளர்ந்துவரும் துறையாக உள்ளதால் கதைப்பாடல் இயல்புகள் குறித்த சிந்தனைகளை இத்துறை சார்ந்த அறிஞர்கள் பலரும் வெளியிட்ட வண்ணம் உள்ளனர். தே. லூர்து அவர்கள் கதைப்பாடல் குறித்த விளக்கம் கூறும்போது,

1. நாடக உத்தி அமைந்து காணப்படுவது
2. சில வேளைகளில் ஒருவர் பாடுவதாகவோ, பலர் கூட்டமாகச் சேர்ந்து இசைக் கருவிகளின்

---

1. G. Malcolm Laws Jr., "Stories Told in Song: The Ballads of America", American Folklore, p.93.

துணையுடன் பாடி எடுத்துரைக்கப்படுவதாகவோ அமைந்திருப்பது

3. பெரும்பாலும் ஆண்களே பாடுவது[2]

எனக் கருத்துரைத்துள்ளார்.

திருமதி சரசுவதி வேணுகோபால் அவர்கள் கதையை உள்ளடக்கிய பாடல் கதைப்பாடல் எனக் கருத்துக் கூறியுள்ளார்.[3]

சு. சண்முக சுந்தரம் அவர்கள் கூறும் மொழிகளிலிருந்து அறியவரும் கதைப்பாடல் இயல்புகள் குறித்த கருத்துகளாக,

1. ஒரு கதையை உடையது.

2. உட்கதைகள் பல கொண்ட கூட்டுக்கதை

3, அவ்வுட்கதைகள் மூலக்கதைப் போக்கிற்கு உதவவேண்டும்.[4]

என்பனவற்றை அறிய முடிகின்றது. பி.எஸ்.கே. பக்தவத்சலன், ஏ.என். பெருமாள், சு. சக்திவேல் போன்றோரும் கதைப்பாடல் இயல்புகள் எவை என்பது குறித்துத் தத்தம் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். பன்னிப்பன்னிப் பலரும் பல வடிவங்களில் தம் கருத்துகளை இயம்பியிருப்பினும் 'கதையைப் பாடலாகப் பாடுவது கதைப்பாடல்' என்பதில் அனைவரும் ஒற்றுமைப்பட்டுள்ளனர். தொடர்பான பிற கருத்துகள் எல்லாம் இம்மையப் பொருளின் கிளையாகவும், துணை விளக்கங்களு மாகவே அமைந்துள்ளன என்பது கண்கூடு.

கதைப்பாடல் - காலம்

'உலக முழுவதையும் நோக்கின் 12ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய கதைப்பாடல்களைக் காணமுடியாது'[5] என்பது சு. சக்திவேல் அவர்களின் கூற்றாகும்.

தமிழகக் கதைப்பாடல்களின் காலத்தையும் பல அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். கதைப்பாடலின் தொடக்கக் காலம் 16ஆம் நூற்றாண்டு என்பது மு. அருணாசலம் அவர்களின்

---

2. தே. லூர்து, "கதைப்பாடல்களின் இயல்புகள்", தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.387.

3. சரசுவதி வேணுகோபால், தமிழர் நாட்டுப்புறவியல், ப.2.

4. சு. சண்முக சுந்தரம், நாட்டுப்புற இயல், ப.143.

5. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், ப.73.

கருத்தாகும். கி.பி. 1575ஆம் ஆண்டைய மூவர் அம்மானை காலத்தால் முந்தைய கதைப்பாடல் என இவர் குறிப்பிட்டுள்ளார்.[6] இராமப்பய்யன் அம்மானை கி.பி. 1640, அல்லி அரசாணி மாலை போன்ற கதைப்பாடல்களின் காலம் 1575 - 1625 என்பதும் இவர் கருத்தாகும்.

1863இல் பவளக் கொடி மாலை என்ற கதைப்பாடல் கருணானந்த சுவாமி அவர்களால் முதன்முதலாகப் பதிப்பித்து வெளியிடப்பட்டது எனத் தெரிகிறது.[7]

கதைப்பாடல் காலமாக 16-19ஆம் நூற்றாண்டுகளைக் குறிப்பிடுவதில் அறிஞர்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை.

கதைப்பாடற் பெயர்கள், கதைப்பாடல் ஆசிரியர்கள், கதைப்பாடல் வகைப்பாடுகள் போன்றன பற்றிய குறிப்புகளுக்கு மதுரைவீரன் கதைகள் ஓர் ஆய்வு, வே.ச. திருமாவளவன், நாட்டுப் புறவியல் ஓர் அறிமுகம் - சு. சக்திவேல், தமிழில் கதைப்பாடல்- ஏ. என். பெருமாள் போன்ற நூல்களைக் காணலாம்.

கதைப்பாடல் - எண்ணிக்கை

சுவடிகளிலிருந்தும், வாய்மொழிகளிலிருந்தும், நாட்டார் கலை வடிவங்களில் வாழ்ந்துகொண்டு வருவனவற்றிலிருந்தும் நாளும் பல கதைப்பாடல்கள் பதிப்பித்து வெளிவந்த வண்ணம் உள்ளன. சுமார் 500-க்கும் மேற்பட்ட கதைப்பாடல்கள் இருக்கலாம். இவற்றின் கதை வேறுபாடுகளைப் பொறுத்து எண்ணிக்கை அதிகப்படவும் செய்யலாம்.

கதைப்பாடல் - அடிவரையறை வகைப்பாடுகள்

கதைப்பாடல்கள் சராசரியாக 2,000 அடிகள் முதல் 30,000 அடிகள் கொண்டதாக அமையும் எனக் கூறியுள்ளனர்.[8] நீண்டதாகவும் கதையை உள்ளடக்கியதாகவும் இருக்கும்'[9] என்பார் மு. அருணாசலம்.

இவையெல்லாம் நெடுங்கதைப் பாடல்கள் குறித்த வரையறைகளெனக் கொள்ளப்பட்டுக் கதைப்பாடல்களை,

---

6. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், ப.76.

7. அபிச்சை, தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, ப.27.

8. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், ப.77.

9. மேற்படி.

1. நெடுங் கதைப்பாடல்கள்
2. குறுங் கதைப்பாடல்கள்
3. சிறு கதைப்பாடல்கள்

என்று பிரித்தும் காணுகின்றனர்.[10] ஓர் அமர்வில் பாடப்படுபவை யாக அளவில் குறுகியவை குறுங் கதைப்பாடல்கள் என்றும் ஒரு நிகழ்வை மட்டும் சுருக்கமாகக் கூறுபவை சிறு கதைப்பாடல் என்றும் அடையாளப்படுத்துகின்றனர். நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் என்ற நூலின் மூலம் (கே. ஏ. குணசேகரன், 1988) நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் என்ற ஒரு பிரிவுக் கதைப்பாடலையும் காணமுடிகின்றது.

சமூகக் கதைப்பாடல்கள்

கதைப்பாடல் வகையுள் ஒன்றாகச் சமூகக் கதைப்பாடல் அமைந்துள்ளது. இந்தச் சமூகக் கதைப்பாடல்களில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்தி ஆய்வு செய்வதாக இந்நூல் அமைந்துள்ளது. இதன் பெயரில் உள்ள 'சமூகம்' என்பதை வைத்தே இது சமூகம் தொடர்புடைய கருவையும் உள்ளடக்கத்தையும் கொண்டது என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. என்றாலும் எவை சமூகக் கதைப்பாடல்கள் என்பதை வரையறை செய்வதில் பல்வேறு சிக்கல்கள் இன்று வரையும் நீடிக்கவே செய்கின்றன.

சமூகக் கதைப்பாடல்கள் – வரையறைச் சிக்கல்கள்

1. சமூகத்தில் வாழ்ந்து மறைந்து தெய்வமானவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் கதைப்பாடல்களைத் தெய்வக் கதைப்பாடல்களுள் அடக்கலாமா? சமூகக் கதைப்பாடல்களுள் அடக்கலாமா? என்ற சிக்கல் உள்ளது.

2. ஐவர் ராசாக்கள் கதையை வரலாற்றுக் கதைப்பாடல் வகையுள் அடக்கினால் அதில் அடங்கியுள்ள வீணாதி வீணன் பற்றிய கதை குறிப்பிட்ட காலகட்டச் சமூக ஊழல்களைப் படம்பிடித்துக் காட்டியுள்ளதால் அதனைச் சமூகக் கதைப்பாடலில் அடக்கலாமா என்ற சிக்கல் எழுகிறது.

3. இவைபோன்று இதிகாச, புராணக் கதையுள் அடங்கி யுள்ளவற்றிலும் அவை எழுந்த பிற்காலச் சமூக நிழல் படிந்துள்ளதால் அவற்றைச் சமூகக் கதைப்பாடலாக ஏன் கொள்ளலாகாது என்ற ஐயமும் எழுவது இயற்கை.

---

10. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், ப.78.

இவ்வாறு எழும் பல்வேறு ஐயங்களுக்கும் சிக்கல்களுக்கும் விடை கண்டு சமூகக் கதைப்பாடல்களுக்கு வரையறை காண அறிஞர்கள் பலரும் முயற்சி செய்துள்ளனர்; கருத்துகளையும் இயம்பியுள்ளனர்.

சமூகக் கதைப்பாடல்கள் – வரையறை

நாட்டுப்புறவியல் அறிஞராகத் திகழ்ந்த நா. வான மாமலை அவர்கள் சமூகக் கதைப்பாடல்களின் வரையறையை இயம்பியுள்ளார். சமூகச் சிக்கல்களை அடிக்கருத்துகளாகக் கொண்டவை சமூகக் கதைப்பாடல்கள் எனக் கருத்துரைத் துள்ளார். அத்துடன் சாதி அடக்குமுறை, கலப்பு மணமும் அதன் விளைவுகளும், தந்தைவழிக் கூட்டுக் குடும்ப அமைப்பில் பெண் படும் துன்பம், சுரண்டலுக்கு ஆட்பட்ட விவசாயி வேலை யின்மையாலும் அதன் விளைவுகளாலும் செயல்குலைந்து கொள்ளைக்காரனாக மாறுதல் போன்றவை சமூகக் கதைப் பாடல்களின் அடிக்கருத்துகளாகும் என்றும் வரையறைப்படுத்தி யுள்ளார்.

மேலும் அவர் சமூகக் கதைப்பாடல்களைச் சமூக அடிக் கருத்துகளின் அடிப்படையில் ஐந்து வகையாகப் பிரிக்கவும் செய்துள்ளார்.

1. கலப்பு மணமும் அவற்றின் துன்பியல் விளைவுகளும் - முத்துப்பட்டன், மதுரைவீரன், சின்னநாடான் கதைகள்
2. சாதிய அடக்குமுறையும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த நாட்டார்கட்கு உயர்சாதி மக்களால் விளை விக்கப்படும் கொடுமைகளும் - சின்னத்தம்பி கதை
3. தாய்வழி, தந்தைவழிச் சமூகக் குழுவினருக்கிடையே தாய்வழியினர் தந்தை வழியினரிடம் மணவுறவு தேடும் பொழுது ஏற்படும் சண்டைகள் - தோட்டுக்காரி கதை, வெங்கலராசன் கதை
4. பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்படுதலும் அவற்றின் துன்பியல் விளைவுகளும் - நல்லதங்காள் கதை
5. சாதி சமயக் கட்டுப்பாடுகளைக் கடந்த மனிதநேயம் - கௌதலமாடன் கதை

என வகைப்படுத்தி வரையறை செய்துள்ளார்.[11]

---

11. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல், தொகுதி 1, ப. 83-84.

மற்றொரு நாட்டுப்புறவியல் அறிஞரான கோ. கேசவன் அவர்கள் எவை சமூகக் கதைப்பாடல்கள் என்று கீழ்க்கண்ட வாறு வரையறை செய்துள்ளார்.

"சமூகத்தில் நிகழும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவை. சமூகத்திலுள்ள பல்வேறு முரண்பாடுகளே இவற்றின் ஆதாரமாகும். இத்தகைய முரண்பாடுகள் முற்றி எப்படி அவை இறுதி நிலை எய்துகின்றன என்பதை இவை விளக்கமாகக் குறிப்பிடுகின்றன. சான்று. முத்துப்பட்டன், காத்தவராயன் கதைகள்" எனக் கூறியுள்ளார்.[12]

சமூகக் கதைப்பாடல் குறித்த இருவரின் விளக்கங்களை யும் ஆய்வு செய்த தே. லூர்து அவர்கள் நா.வா. அவர்கள் விரிவாகக் கூறியதையே கோ.கேசவன் அவர்கள் சுருக்கமாகக் கூறியுள்ளார் என்று குறிப்பிட்டுவிட்டுத் தன் கருத்தாகக் கூறும் சமூகக் கதைப்பாடல் வரையறையாவது:

"குறிப்பிட்டதொரு பண்பாட்டில் குறிப்பிட்ட சில சூழல்களில் வாய்மொழியாக ஒரு பாடகனாலோ, ஒரு குழுவின ராலோ நாட்டார் முன்னர் எடுத்துரைக்கப்பட்டு இசையுடன் நிகழ்த்தப்பட்டதும் அல்லது நிகழ்த்தப்படுவதுமான, குறிப்பிட்ட காலச் சமூக உறவுச் சிக்கல்களின் முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கதைப்பாடல்களைச் சமூகக் கதைப்பாடல்கள் எனலாம்" என்று கூறியுள்ளார்.[13]

இவருடைய வரையறையின் முன் பகுதி முழுக்கவும் கதைப்பாடல் இலக்கணம் கூறுவதாகவும் இறுதி வரி மட்டும் சமூகக் கதைப்பாடல் இலக்கணம் இயம்புவதாகவும் உள்ளமை கண்கூடு.

நா.வா., கேசவனின் வரையறைகள் முழுக்கவும் சமூகக் கதைப்பாடல் எது என்பதைத் தெளிவாக விளக்கமாகச் சான்று களுடன் நிறுவுவனவாக உள்ளன. இம்மூவர் கருத்துகளையும் நோக்கச் சமூகக் கதைப்பாடல்கள் சமூக உறவு முரண்பாடுகளை மையமாகக் கொண்ட, சமூக நிகழ்வுகளை அடிக்கருத்துகளாகக் கொண்ட பதிவுகள் என்பது தெளிவாகின்றது.

---

12. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல், தொகுதி 1, ப.84.

13. மேற்படி, ப.85.

சமூகக் கதைப்பாடல்கள் – பொதுநிலை விளக்கம்

சமூகக் கதைப்பாடல்கள் என்று அடையாளப்படுத்தப் பட்டு வெளிவந்திருப்பவை ஐம்பதுக்கு மேல் உள்ளன. பின்னிணைப்பு காண்க. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சமூகக் கதைப்பாடல்களைத் திரட்டி வெளியிட்டால் அவற்றின் எண்ணிக்கை 100-க்கு மேல் தாண்டக்கூடும் என்று தோன்றுகின்றது. 16-18ஆம் நூற்றாண்டைய தமிழகச் சமூகச் சூழலைப் படம்பிடித்துக் காட்டும் சமூகக் கதைப்பாடல்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆயின் இக்காலகட்டத்திய சமூகச் சூழலை ஆய்வு செய்பவர்கள் சமூகக் கதைப்பாடல்களை எந்த அளவில் கவனத்தில் கொள்ளுகின்றனர் என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாகவே நிற்கிறது எனலாம். இவை சமூகவியலார் முன்பும், பிறதுறை ஆய்வாளர்கள் முன்பும் கருத்திற் கொள்ளப்படாமைக்குரிய காரணங்கள் எவை என்பது சிந்திக்கக் கூடியதாகவே உள்ளது.

சமூகக் கதைப்பாடல்கள் முக்கியத்துவம் பெறாமைக்குரிய காரணங்கள்

இந்நூலில் முன்னரே குறிப்பிட்டது போல 1950களில் முகிழ்த்து 1980களில் மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கியுள்ள நாட்டுப்புறவியல் துறை அண்மைக் காலத்தேதான் அடையாளம் காணப்பட்டுத் தனியொரு துறையாக வகைப்படுத்தப்பட்டு வளர்ந்துவரும் ஒரு துறையாகும். வளர்ந்து வரும் ஒரு துறை ஏற்படுத்தும் பாதிப்புகள் எந்த அளவுக்கு ஒரு சமுதாயத்தைச் சென்றடைந்துள்ளது என்பதைக் கணிப்பது மிகவும் கடினம். என்றாலும் நாளும் வெளிவரும் ஆய்வுகளும் ஆய்வு முடிவுகளும் சமூகக் கதைப்பாடல்களுக்குரிய ஒரு பங்கை அளித்துள்ளனவா எனக் கணித்தறிய வேண்டியது ஒரு நாட்டுப்புறவியல் அறிஞனின் கடமையாக அமைகின்றது. அந்த வகையில் சமூகக் கதைப் பாடற் பாதிப்புகள் பல்துறை அறிஞர்களையும் பரவலாகச் சென்றடையவில்லை என்றே கருத்துரைக்க வேண்டியுள்ளது. இதற்கான காரணங்கள் எவை என்று சிந்திக்க வேண்டியுள்ளது. சமூகக் கதைப்பாடல்கள் தக்க முக்கியத்துவம் பெறாமைக்குக் கீழ்க்காணுபவற்றைக் காரணங்களாகக் கருதலாம்.

1. சமூகக் கதைப்பாடல்களைச் சமூக உண்மையாக, வரலாற்று நிகழ்வாக எடுத்துக் கொள்ள இயலுமா என்ற அச்சம் எழுதல்.

2. கதை வேறுபாடுகள் பல கொண்ட ஒரு சமூகக் கதைப் பாடலின் மூல, முதல், உண்மை வடிவம் எது என்பதை வரையறுத்தறிவதில் ஏற்படும் சிக்கல்.

3. புலவன் தன் கற்பனை வளங்களை ஆங்காங்குச் சிதறிப் பாடியுள்ளதால் உண்மை எது? கற்பனை எது? எனப் பிரித்தறிய இயலாமை.

4. கேட்போரின் அல்லது கற்போரின் சுவைக்காக அமைக்கப்பட்டுள்ள அதீத நிகழ்ச்சிகளுக்கும் உண்மை நிகழ்ச்சிகளுக்கும் அதிக வேறுபாடில்லாது ஆகிவிடுதல்.

5. கதைப்பாடல்களுக்கென்று அமைந்துள்ள அமைப்பு முறை ஒற்றுமையால், உண்மையான கதை அமைப்பு அல்லது கதை நிகழ்வு என்ன என்பதைப் பிரித்தறிய இயலாமை.

6. இறந்த அல்லது கொல்லப்பட்ட தலைவன், தலைவியர் கதைப்பாடலில் கூறப்பட்டதற்கு மாறாகப் பிற இடத்தாரால், பிற இனத்தாரால் வழிபாடு செய்யப்பட்டு வரும் நடப்பியல் உண்மையால் நேரும் குழப்பம்.

7. வழிபாடும் நிகழ்த்து கலைகளும் இல்லாமல் உள்ள கதைப்பாடல்களின் உண்மைத் தோற்ற வரலாற்றை ஒப்புக் கொள்ளப் போதிய வேறு சான்றுகளின்மை.

8. கதைப்பாடல்களின் அடிக்கருத்துகளை அடியோடு அகற்றி, உண்மையான கோணத்தைப் பிறழ வைத்துக் காட்டும் கதைப்பாடல் நிகழ்ச்சிகளால் ஏற்படும் சிக்கல்கள்

போன்ற இவற்றால் சமூகக் கதைப்பாடல்களைக் குறிப்பிட்ட காலச் சமூக நிகழ்வுகளின் பதிவுகள் எனக் கருத இயலுமா என்ற ஐயம் ஆய்வாளர்கள் மனதில் எழுவது இயல்பாகின்றது. சமூகக் கதைப்பாடல்களுக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப் படாமைக்கு இவையெல்லாம் காரணங்கள் என்பதை நாட்டுப்புற ஆய்வறிஞர்கள் சிந்திக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாக உள்ளனர்.

சமூகக் கதைப்பாடற் பதிப்பாளர்கள் கடன்

சமூகக் கதைப்பாடல்களைப் பதிப்பித்து வெளியிடும் பதிப்பாசிரியர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் எழும் இத்தகு

ஐயங்களையெல்லாம் கவனத்தில் கொண்டு தம் கதைப்பாடற் பதிப்புகளை மேற்கொள்ள வேண்டும். கதைப்பாடற் பதிப்புகள் கீழ்க்காணுபவற்றைக் கருத்திற் கொண்டு பதிப்பிக்கப்பட வேண்டும்.

1. கதைப்பாடற் பதிப்பு ஓர் அறிமுகப் பதிப்பாக மட்டும் அமையாது ஆராய்ச்சிப் பதிப்பாக அமைய வேண்டும்.
2. கதை வேறுபாடுடைய பல்வேறு பிரதிகளையும் நிகழ்த்து கலைகளையும், வாய்மொழி வடிவங்களையும் தொகுத்து ஆய்ந்து உண்மையான மூலவடிவத்தைக் கண்டறிந்து பதிப்பிக்க வேண்டும்.
3. கதை எழுந்த காலகட்டத்தை உறுதி செய்து, காலப் போக்கில் வந்து இணைந்த கதை நிகழ்ச்சிகளை, கதை மாறுபாடுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்.
4. கதையின் அடிக்கருத்தை வரையறுத்து, அடிக்கருத்து மாற்றம் எக்காலகட்டத்ததாகலாம்? ஏன்? என்பதை விளக்க வேண்டும்.
5. களப்பணியை மேற்கொண்டு, கதைக்கும் களனுக்கு முள்ள தொடர்புகளை அகச்சான்றுகளுடன் நிறுவ வேண்டும்.
6. கதையின் உண்மை மூலவடிவத்தையும் பாடுவோனின் கற்பனை அளவையும் இனம்பிரித்துக் காட்ட வேண்டும்.
7. குறிப்பிட்ட சமூகக் கதைப்பாடலால் அக்கதை நிகழ்ந்த காலத்திய சமூக வரலாற்று மாற்றங்களைப் பிற சான்றுகள் (இலக்கியம், கல்வெட்டு) மூலம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.
8. குறிப்பிட்ட, அல்லது குறிப்பிட்டோர் சிலரின் நெருக்கு தல்களால் மறைக்கப்பட்ட, மாற்றப்பட்ட நிகழ்ச்சி களைச் சான்றுகளுடன் வெளிப்படுத்த வேண்டும்

இத்தகு நோக்கங்களையெல்லாம் உட்கொண்டு சமூகக் கதைப் பாடல்களைப் பதிப்பிக்கும் பொழுது, அவை பல்துறை அறிஞர் களாலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப் படும் என்று உறுதியாகக் கூற இயலும். இத்தகு முறையில் பதிப்பை மேற்கொண்ட மிகச் சிலருள் நாட்டார் இலக்கிய அறிஞர் நா. வானமாமலை அவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்.

இன்று வரையும் கதைப்பாடற் பதிப்பாளர்களுக்கு இவரது ஆய்வுப் பதிப்புகள் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ்ந்து வருகின்றன. இவர் உருவாக்கிய பதிப்பாளர் பரம்பரையினர் இன்றும் தொடர்ந்து தம் பணியை ஆற்றி வருகின்றனர்.

கதைப்பாடல் ஆய்வறிஞர்கள் கடன்

கதைப்பாடற் பதிப்புகள் வெளிவந்துள்ள அளவுக்கு அவை தொடர்பான ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளனவா என்பது சிந்திக்கத்தக்கது. கதைப்பாடல்கள் தொடர்பான ஆய்வுகள் குறைவு. சமூகக் கதைப்பாடல்கள் தொடர்பான ஆய்வுகள் மிகக் குறைவு. இதற்கு என்ன காரணம் என்று சிந்திப்பதை விட, ஆய்வுநோக்கு பெருக என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுவதே சாலச் சிறந்தது.

1. சமூகக் கதைப்பாடல்கள் மாவட்ட வாரியாகத் தொகுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட வேண்டும்.
2. இவற்றுள் நெடுங் கதைப்பாடல்கள், குறுங்கதைப் பாடல்கள், சிறு கதைப்பாடல்களை இனங்கண்டு பிரித்தறிய வேண்டும்.
3. ஒரு மாவட்டக் கதைப்பாடல் பிற மாவட்டத்தில் காணப்படுமாயின் அதன் மாற்று வடிவத்தை அடையாளம் காண வேண்டும்.
4. தனிப்பட்ட கதைப்பாடல்களை ஆய்வு செய்வதுடன் சமூகக் கதைப்பாடல்கள் முழுமையையும் எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட பொருண்மைகளின் கீழ் ஆய்வுக் குட்படுத்த வேண்டும்.
5. சமூகக் கதைப்பாடல்களை நூற்றாண்டு வாரியாகப் பிரித்து, சமூக, வரலாற்றுச் சான்றுகளை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.
6. பல்துறை அறிஞர்களும் பயன்படுத்தும் வண்ணம் கதைப்பாடல் தரவுகளைப் பன்முகப்படுத்தி விளக்க வேண்டும்.
7. தற்காலச் சமூக மேம்பாட்டுக்குச் சமூகக் கதைப் பாடல்கள் பயன்படும் முறைகளை வெளிப்படுத்த வேண்டும்.

8. சமூகக் கதைப்பாடற் புலவர்கள் சமூக மாறுதல்களை விரும்பியவர்கள் என்பதை நிறுவும் முறையில் ஆய்வுப் போக்குகளை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகு முறைகளைக் கருத்திற் கொண்டு கதைப்பாடல் ஆய்வறிஞர்கள் கடனாற்றினால் கதைப்பாடல் ஆய்வுகள் சிறக்கும், வளரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சமூகக் கதைப்பாடல்கள் - கதைக்கருக்கள் எனப்படும் அடிக்கருத்துகள்

கதைப்பாடல்கள் அனைத்தும் உண்மை நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயே தோன்றியிருக்கின்றன என்பார் செசில் ஜெ. ஷார்ப்பின்.[14] இக்கூற்று சமூகக் கதைப்பாடல்களுக்கு முழுக்க முழுக்கப் பொருந்தும். சமூகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடிக் கருத்துகளாகக் கொண்டு சமூகக் கதைப்பாடல்கள் இயற்றப் பட்டுள்ளன. சமூகக் கதைப்பாடல்களின் மையக் கருவாக அமைவனவாக நா.வானமாமலை அவர்கள் குறிப்பிடும் கருத்துகள் முன்னரே கூறப்பட்டுள்ளன. இவர் கூறியுள்ள ஐந்து வகையான கருக்களுடன் ஒப்புமைப்பட்டுக் கருத்துரைத்துள்ளார் சு. சக்திவேல் அவர்கள். அவர் வகைப்படுத்தும் கதைக் கருக்களாவன:

1. சாதிக் கலப்பு மணம்
2. பெண்களுக்குச் சொத்துரிமை
3. சாதிக் கட்டுப்பாடுகளின் அடக்குமுறை
4. பொருந்தா மணம்[15]

இவர் பொருந்தா மணத்தால் நிகழும் விளைவுகளைக் கருக்களாக உடையன என்ற ஒரு கருவைக் கூடுதலாக இணைத்துள்ளார். நா. வானமாமலை குறிப்பிடும் கதைக் கரு வகைப்பாட்டில் ஐந்து கருக்களும் இணைய ஆறு அடிக் கருத்துகளைக் கொண்டவையாக அமைபவை சமூகக் கதைப் பாடல்கள் என்பது பெறப்படுகின்றது. நா. வானமாமலை கதைக்கரு விளக்கத்தில் சேர்த்துள்ள சுரண்டலுக்கு ஆட்பட்ட விவசாயி வேலையின்மையாலும் அதன் விளைவுகளாலும் செயல் குலைந்து கொள்ளைக்காரனாக மாறுதல் என்ற ஓர் அடிக்

---

14. வி.என். திருமாவளவன், மதுரைவீரன் கதைப்பாடல்கள்-ஓர் ஆய்வு, ப.108.

15. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல்-ஓர் அறிமுகம், ப.83.

கருத்தையும் இணைக்க மொத்தம் ஏழு வகையான அடிக் கருத்துகளைக் கொண்டவை சமூகக் கதைப்பாடல்கள் என்பது புலனாகின்றது. இவற்றுடன் இவர்கள் ஆய்வின் பின்னர் வெளிவந்துள்ள சமூகக் கதைப்பாடற் கருக்களையும் நோக்க, அடிக்கருத்துகள் மேலும் பல வகைகளாக விரிவடைகின்றன. ஆக சமூகக் கதைப்பாடற் கருக்களாக அமைவனவற்றைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்திச் சான்றுகளுடன் விளக்கலாம்.

1. சாதிக் கட்டுக்கோப்பு கலையும் வண்ணம் சாதிவிட்டுச் சாதி திருமணம் செய்வதால் விளையும் சிக்கல்.
   சான்று: குறுக்குளாஞ்சி கதை.

2. உயர்சாதி - கீழ்ச்சாதி என்ற சாதி உயர்வு, தாழ்வைக் கருதாது காதல் கொண்டதால் வரும் சிக்கல்.
   சான்று: மதுரைவீரன் கதை, முத்துப்பட்டன் கதை, காத்தவராயன் கதை, சிதம்பர நாடார் கதை

3. நாட்டுப்புறத்தான் - பழங்குடியினர் என்ற இன வேறுபாட்டால் காதலில் விளையும் சிக்கல்.
   சான்று : பளிச்சியம்மன் கதை.

4. பங்காளிச் சண்டை.
   சான்று : மருதநாயகம் பிள்ளை கதை

5. நாட்டாட்சியின் நிமித்தம் நடந்த நிலவுரிமைப் போராட்டம்.
   சான்று : அண்ணன்மார் சுவாமி கதை

6. ஆளும் வர்க்கம் அடிமை வர்க்கம் மீது பாலுறவில் செலுத்திய மேலாண்மை.
   சான்று: சின்னாடான் கதை, பாலம்மாள் கதை, சின்னணைஞ்சான் கதை, சின்னான் கதை

7. செய்யும் தொழிலில் உயர்வு, தாழ்வு கருதியதால் காதலில் வரும் சிக்கல்.
   சான்று : தடிவீரசுவாமி கதை

8. ஒரே சாதிக்குள்ளும் செல்வவள மாறுபாடு, பரம்பரைச் செல்வாக்கு, தாய்வழி, தந்தைவழி போன்ற காரணங் களால் உயர்வு தாழ்வு பாராட்டி, மகட் கொடை மறுத்தலால் விளையும் சிக்கல்.
   சான்று : பூலங்கொண்டாளம்மன் கதை, தோட்டுக்காரி யம்மன் கதை, வெங்கலராசன் கதை

9. குழந்தை மணம் போன்ற பொருந்தா மணத்தால் விளையும் சமூகச் சிக்கல்.
சான்று : குமாரசுவாமி நாடான் கதை.

10. ஆளும் வர்க்க ஆதரவு கிடைத்தோர் - கிடையாதோருக் குள்ள மோதல்.
சான்று : ஈனமுத்துப் பாண்டியன் கதை, பிச்சைக்காலன் கதை.

11. பரம்பரையாக வரும் காவல் உரிமை காரணமாய் அமைந்த போராட்டங்கள்.
சான்று : பலவேச சேர்வைக்காரன் கதை, வன்னியராயன் கதை, மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, சோணமுத்துப் பாண்டியன் கதை.

12. குறிப்பிட்ட இனத்தானின் தொழிலில் பிற தொழிலில் உள்ள இனத்தான் புகுதலால் விளையும் சிக்கல்.
சான்று : சின்னத்தம்பி கதை, அரவமுத்து வீரன் கதை.

13. பழந்தலைமுறை - இளந்தலைமுறைப் பழக்கவழக்க மாறுதல்களால் ஏற்படும் சிக்கல்.
சான்று : பெரியண்ணன் - சின்னண்ணன் கதை

14. பெண் மக்களுக்குச் சொத்துரிமை இல்லாததால் விளையும் சிக்கல்.
சான்று : நல்ல தங்காள் கதை.

15. கணவன் சொத்தில் மனைவிக்கு உரிமை இல்லாததால் விளையும் சிக்கல்.
சான்று: வெள்ளையம்மாள் கதை.

16. உயர்சாதி மமதையால் செய்த பாலியல் பலாத்காரமும் அதன் விளைவுகளும்.சான்று: கௌதலமாடன் கதை.

17. சுரண்டலுக்கு ஆட்படுபவன் தன்பிழைப்புக்காகக் கொள்ளைக்காரனாக ஆதல்.
சான்று : வீணாதிவீணன் கதை.

18. பல்வேறு விதமான சமூகச் சூழல்கள் காரணமாகக் கொள்ளைக்காரர்களாக ஆகி ஏழை, எளிய மக்களுக்கு உதவி, அவர்கள் மத்தியில் தலைவர்களாக மதிக்கப் படுபவர்கள்.

சான்று : சந்தனத் தேவன் கதை, மம்பட்டியான் கதை, ஜம்புலிங்கம் கதை.

19. பெண்ணுக்குச் சொத்துரிமை அளித்தும் அவர்களை அனுபவிக்க விடாமல் அத்தலைமுறையே செய்தல். சான்று : அழகுத் தேவர் கதைப்பாடல்.

என்ற 19 வகைப்பாடுகளில் சமூகக் கதைப்பாடல்களை அடக்கலாம். இன்னும் பல புதிய சமூகக் கதைப்பாடல்கள் வெளிவந்தால் இவ்வகைப்பாட்டெண்ணிக்கை பெருகக்கூடும்.

சமூகக் கதைப்பாடல்கள் - காலவரையறை

சமூகக் கதைப்பாடல்களின் அடிக்கருத்துகள், கதை நிகழ்ச்சிகள், கதை நிகழ்ச்சிகள் நடைபெற்ற சூழல்கள், இடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சமூகக் கதைப்பாடல்களின் காலத்தை வரையறை செய்ய முடியும்.

1. மதுரை வீரன் கதை, கி.பி. 17ஆம் நூற்றாண்டு
2. வீணாதிவீணன் கதை, கி.பி. 16ஆம் நூற்றாண்டு
3. சின்னாடான் கதை, கி.பி. 18ஆம் நூற்றாண்டு
4. வன்னியடி மறவன் கதை, கி.பி. 18-19ஆம் நூற்றாண்டு

என்று காலத்தை வரையறை செய்துள்ளார் கோ. கேசவன்.[16]

முத்துப்பட்டன் கதை கி.பி. 1658-1758 என்று இக்கதைப் பாடற் பதிப்பில் நா. வானமாமலை அவர்கள் காலத்தை வரையறை செய்துள்ளார். நல்லதங்காள் கதை கி.பி. 1800 என்றும் இவர் முடிவு செய்துள்ளார்.

ஆக, பல சமூகக் கதைப்பாடல்களின் காலமும் 16-19ஆம் நூற்றாண்டுகள் எனப் பொதுவாகக் குறிப்பிடலாம்.

சமூகக் கதைப்பாடல்கள் - பிறப்பிடம்

கதை நிகழ்ச்சிகள் நடந்த இடங்களின் அடிப்படையில் சமூகக் கதைப்பாடல்களின் பிறப்பிடத்தை அடையாளம் காண இயலும்.

1. காத்தவராயன் கதை - திருச்சி மாவட்டம்
2. மதுரைவீரன் கதை - மதுரை மாவட்டம்

---

16. கோ. கேசவன், கதைப்பாடல்களும் சமூகமும், ப.55.

3. சின்னத்தம்பி கதை, முத்துப்பட்டன் கதை, வீணாதிவீணன் கதை - நெல்லை மாவட்டம்

4. கௌதலமாடன் கதை, மருதநாயகம் பிள்ளை கதை, சின்னாடான் கதை, சின்னணைஞ்சி கதை, தோட்டுக்காரி கதை, பிச்சைக்காலன் கதை, சிதம்பர நாடார் கதை, பூலங்கொண்டாளம்மன் கதை, பலவேச சேர்வைக்காரன் கதை - கன்னியாகுமரி மாவட்டம்

5. நல்லதங்காள் கதை - இராமநாதபுரம் மாவட்டம்

6. அண்ணன்மார் சாமி கதை, வெள்ளையம்மன் கதை - கோவை மாவட்டம்

7. பெரியண்ணன் - சின்னண்ணன் கதை, சின்னான் கதை - ஆற்காடு மாவட்டம்

எனச் சில சமூகக் கதைப்பாடல்களின் பிறப்பிடத்தை வரையறுக்கலாம். பிறப்பிடத்தில் மட்டுமல்லாது மாவட்டங்கள் கடந்தும் கதைப்பாடல் வழங்கி வருதல் அவற்றின் சிறப்பை வெளிப்படுத்தும்.

சமூகக் கதைப்பாடல்கள் காலத்து அரசியல் சூழல்

சமூகக் கதைப்பாடல்கள் தோன்றிய 16-19ஆம் நூற்றாண்டைய அரசியல் சூழலை அறிந்துகொள்வதன் மூலம் கதைப்பாடல்களின் தோற்றக் காரணங்களை, கதை நிகழ்ச்சிகளின் உண்மையான ஆணிவேர்களைக் கதைக் கருக்களின் கனமான மூலங்களைத் தெரிந்து கொள்ள இயலும் என்ற நிலையில் அக்காலகட்டத்து அரசியல் பின்னணியைக் காண வேண்டிய தேவையுள்ளது.

"16-19ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நிலத்தைப் பல இனத்தினர் கொள்ளைக் காடாகப் பயன்படுத்தினர். நாயக்கர், முஸ்லீம், மராத்தியர், கன்னடியர், போர்ச்சுகீசியர், ஆங்கிலேயர், டச்சுக் காரர், பிரெஞ்சுக்காரர்களின் வேட்டைக் காடாகத் தமிழகம் இருந்தது. அரசும், அரசு சார்ந்த அதிகாரிகளும் தத்தம் நிலைக்கேற்ப மக்களைக் கொள்ளையடித்தனர். இக்கால கட்டத்தைத் 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற காலகட்டமாகக் கருதலாம்".[17]

17. கோ. கேசவன், கதைப்பாடல்களும் சமூகமும், ப.82.

"நாயக்கர்கள் காலத்தில் பெரும்பாலும் மக்கள் அமைதி யற்ற வாழ்க்கை நடத்தினர். வெளிநாட்டுப் படையெடுப்புகளும் உள்நாட்டுக் குழப்பங்களும் நாட்டு வாழ்வைச் சீர்குலைத்தன. 1656இல் நடந்த மைசூர்ப் படையெடுப்பால் கொள்ளை நோயும் பஞ்சமும் ஏற்பட்டன. காட்டு விலங்குகளால் பெருந் தொல்லை ஏற்பட்டது"[18]

கி.பி. 1635, 1640, 1645 - 1648, 1659 - 1660, 1666, 1683, 1709-1710, 1712, 1720 ஆகிய ஆண்டுகளில் மதுரை நாட்டிலும் நெல்லைச் சீமையிலும் கடுமையான பஞ்சங்கள் ஏற்பட்ட தற்கான சான்றுகள் உள்ளன.[19] 1876-1878இல் சென்னை மாநிலத்தின் பன்னிரண்டு மாவட்டங்களில் பருவமழை பொய்த்ததால் பஞ்சமேற்பட்டது. இதனைத் தாது - ஈசுவர ஆண்டுப் பஞ்சமென்பர். பஞ்சத்தால் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர். உணவின்றிக் கொட்டிக்கிழங்கு, மூங்கிலரிசி, புல்லரிசி, தழைகளைத் தின்றனர். களிமண் தின்று பலர் மாண்டனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் குடிபெயர்ந்து தென்னாப்பிரிக்கா, இலங்கை, பிசித்தீவு, பர்மா முதலிய நாடுகளுக்குத் தோட்டக் கூலிகளாகச் சென்றனர். தரகர்கள் (கங்காணிகள்) இவர்களை அடிமைகள் போல் விலைபேசி விற்றனர். ஆப்பிரிக்க நாட்டு ஆவணங்களில் 'விலங்காண்டிகள்', 'அநாகரிகக் குடிகள்' எனத் தமிழர்கள் பதிவு செய்யப்பட்டனர்.[20]

பா. சொக்கநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1659-1682) பஞ்சமும், யுத்தமும் மக்களைக் கடுமையாகப் பாதித்தன. உயிருள்ள எலும்புக் கூடுகளாக மக்கள் நடமாடிக் கொண்டிருந்தனர். தஞ்சைப் பகுதியிலிருந்த மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். சாந்தோம் பகுதிக்கு அடைக்கலமாகச் சென்ற இம்மக்களுக்கு டச்சுக்காரர்கள் உணவளித்தார்கள். போதிய அளவு கூட்டம் சேர்ந்து உடல் பலமும் அவர்கள் பெற்றபிறகு கப்பல்களில் அவர்களை ஏற்றிச் சென்று அயல்நாடுகளில் அடிமையாக விற்றனர் என்று சேசு சபையாரின் கடிதமொன்று கூறுகிறது. கி.பி. 1660இல் தஞ்சையில் உள்ள மக்கள் பஞ்சத்தில் வாடினர். சிறு உணவுத் துண்டுக்காகத் தங்களை அடிமைகளாக

---

18. பா. மாசிலாமணி, தமிழக வரலாறு, ப.292.

19. கதைப்பாடல்களும் சமூகமும், ப.77.

20. கோ. தங்கவேலு, தமிழ் நில வரலாறு, ப.483.

விற்றுக் கொண்டனர். பத்து ஷில்லிங் ஓர் அடிமையின் விலையாக ஆனது. 5000 பேர் நாகப்பட்டினத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். இன்னும் பல்லாயிரம் பேர் பாட்வியாவுக்கு (Batavia) அனுப்பப்பட்டனர்.[21]

1843இல் இந்திய அடிமை முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை ஆங்கிலேய ஆட்சியிலும் அடிமைக் கொடுமைகள் நடந்துகொண்டுதான் இருந்தன.

"விஜயநகர ஆட்சியின் பின்வந்த நாயக்கர்கள் பழமை விரும்பிகளாக இருந்தனர். 1529இல் தொடங்கி 1736 வரையிலான 207 ஆண்டுகள் நடந்த இவர்கள் ஆட்சியில் அரசியல், இராணுவம், பொருளாதார நோக்கோடு பாளையப்பட்டு முறை ஆட்சியே தொடர்ந்து நடத்தப்பட்டது."[22] "விஜயநகர ஆட்சியின் போது ஒருவகைப் படைமானிய முறை தமிழகத்தில் ஏற்பட்டது. அதன் வழித் தோன்றியதே பாளையப்பட்டு முறையாகும். பழமை விரும்பிகளான நாயக்கர் இம்முறையையே தொடர்ந்து கைப் பற்றி நாட்டாட்சி செய்தனர்."[23] பாளையக்காரர்களின் பொறுப்பு களையும் கடமைகளையும் நாயக்கர்கள் வரையறை செய்தனர். 'வரி வசூலித்தல், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுதல், காவல், படை நிருவாகம், நீதி வழங்குதல் முதலான பணிகளைப் பாளையக்காரர்கள் கொண்டிருந்தனர். பேரரசுக்குட்பட்ட சிற்றரசுகளாகப் பாளையங்கள் திகழ்ந்தன.[24]

15ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையும் நடந்த ஐரோப்பியர் வருகைக்கும் அவர்கள் தமிழகத்தில் காலூன்றியதற்கும் நாயக்கர்கள் முக்கியக் காரணமெனத் திகழ்ந்தனர். "நாயக்கர்கள் கடலோரப் பகுதிகளைக் கண்காணிக்கத் தவறியமை, பேட்டைகள், கோட்டைகள் அமைய, மாதா கோயில் கட்ட உரிமைகள் அளித்தமை ஆகிய சூழல்கள் நாடு அடிமைப் படக் காரணமாக அமைந்தன."[25]

1736-க்குப் பின் நாயக்கர்கள் அரசியல் வானிலிருந்து மறைந்தனர். பாளையக்காரர்களுள் கட்டபொம்மன், மருது சகோதரர்கள், பூழித்தேவன் ஆகியோர் தம் எல்லைக்குட்பட்ட

21. ஆ.சிவசுப்பிரமணியன், அடிமை முறையும் தமிழகமும், ப.28.

22. அ.கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, ப.416.

23. கே.இராஜய்யன், தமிழகம் வரலாறும் பண்பாடும், ப.248.

24. நக. மங்களமுருகேசன், இராசம் மங்கள முருகேசன், தமிழக ஆட்சி முறை, ப. 91.

பாளையப்பட்டுக்களின் தனி உரிமைபெற்ற மன்னர்கள் போன்று ஆயினர். ஆயின் மொத்தப் பாளையக்காரர்களும் கூடி இணைந்து செயல்படாமையின் வீழ்ச்சி அடைந்தனர். 1801-க்கு பின் ஆட்சிப் பொறுப்பு ஆங்கிலேயரிடம் சென்றது. மக்கள் அடைந்து கொண்டிருந்த அவலமும் தொடர்ந்தது.

ஆக 16-19ஆம் நூற்றாண்டில் நிலவிய அரசியல் சூழலைக் கீழ்க்காணுமாறு சுருக்கி உரைக்கலாம்.

1. நிலையான ஆட்சி இல்லை
2. சொந்த மண்ணின் மக்கள் ஆட்சிப் பொறுப்பில் இல்லை. அவர்கள் அந்நியர் ஆட்சிக்கடங்கிய அடிமைகளாகக் கிடந்தனர்.
3. ஆட்சிப் பொறுப்பிலிருந்த மண்ணின் மைந்தர்களும் அந்நிய ஆட்சியாளர்களின் கைப்பாவைகளாகச் செயல் பட்டனர். காட்டிக் கொடுக்கும் துரோகிகளாகவும் அந்நியர் அடிவருடிகளாகவும் இருந்தனர்.
4. உள்நாட்டுப் போர்களால் பசி, பஞ்சம், பட்டினி, கொள்ளை நோய்கள் எங்கும் தலை விரித்தாடின. இவற்றாலும் ஆட்சியாளர்களின் சுயநலப்போக்கு களாலும் மக்கள் கூட்டம் கூட்டமாக மாண்டு மடிந்தனர்.
5. ஆண்ட அந்நியர்கள் வந்த அந்நியர்களை வரவேற்று வாழை இலை விரித்தனர். சொந்த மண்ணின் மக்கள் நலனைச் சிறிதும் கருத்தில் கொள்ளவில்லை.
6. ஆட்சிப் பொறுப்பிலிருந்த அதிகாரிகளான மண்ணின் மைந்தர்களுக்குள் ஒற்றுமை நிலவவில்லை. இதனால் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு எளிதில் பலியாயினர்.
7. நாயக்கர் காலத்தில் கோயிற் கட்டடக் கலையும், சிற்பக் கலையும் போற்றப்பட்டுப் பல கோயில்கள் கட்டப் பட்டும் புதுப்பிக்கப்பட்டும் ஆன நற்செயல்கள் நடந்த அளவுக்குப் பொது மக்களின் நலன்காக்கப்படவில்லை. பக்திப் புகழுக்கு மயங்கிய அவர்கள் மக்களின் சக்திப் புகழுக்கு ஆசைப்படாமல் போயினர். 'மக்கள்

---

25. பா. மாசிலாமணி, தமிழக வரலாறு, ப.299.

தொண்டே மகேசன் தொண்டு' என்பதை முற்றிலும் மறந்தவர்களாக ஆயினர்.

8. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் போக்குவரத்திலும், நிருவாகத்திலும், தகவல் தொடர்பிலும், கல்வி மேம்பாட்டிலும், மக்கள் நலத்திட்டங்களிலும் கருத்துச் செலுத்தப்பட்டது. எனினும் அவை அனைத்தும் அவர்களின் சுரண்டல் கொள்கைக்கு வெண்சாமரம் வீசிக் கொள்வதாகவே ஆயினமையின் மக்கள் நலன் நசுக்கப்படவே காரணமாக அமைந்தன.

சமூகச் சூழல்

"பழமை விரும்பிகளான நாயக்கர்கள் ஏற்கெனவே சிலந்தி வலைகளாகப் பின்னிப் பிணைந்து கிடந்த சாதிகளைப் போற்றிப் பாதுகாத்தனர். பார்ப்பனர், செட்டிமார், வேளாளர், கைக்கோளர், கம்மாளர், பறையர், பள்ளர், செம்மார் முதலிய கணக்கற்ற சாதிகள் இருந்தன. பார்ப்பனர்கள் அரசரோடும் அரசுப்பணி தொடர்புடைய தளவாய், பிரதானிகளாகப் பணியாற்றிச் சமூகத்தில் மிகுந்த மதிப்புடையவர்களாகத் திகழ்ந்தனர். நாயக்கர்கள் ஒரு சாதியிலிருந்த சில பிரிவுகளுக் குள்ளும் ஒன்று மற்றொன்றோடு கலந்து விடாமல் கட்டுப்பாடு செய்தனர். கம்மாளர்களுக்குள் இருந்த 5 பிரிவுகள் ஒன்றோ டொன்று கலந்து விடுதல் கூடாது என்று 1623ஆம் ஆண்டுச் சாசனம் குறிப்பிடுகின்றது. இடங்கைச் சாதிகள் 98 ஆகவும் வலங்கைச் சாதிகள் 98 ஆகவும் இருந்தன."[26] இவர்களுக்குள் மேல், கீழ்ப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.

மறவர், ரெட்டி, நாயுடு, பிராமணர், பிள்ளை போன்றோர் நிலவுடைமையாளர்களாக இருந்தனர். செட்டியார், சௌராட்டிரர், குயவர், தட்டார் போன்றோர் சிறு வணிகத்திலும் சிறு உற்பத்தியிலும் ஈடுபட்டிருந்தனர். சாணார், பள்ளர், சக்கிலியர், பறையர் போன்றோர் உழைப்பாளராக இருந்தனர். இவர்களுள் கள்ளர், மறவர், நாயுடு, ரெட்டி, சாணார், பள்ளர் பெரும்பான்மையராக இருந்தனர். பஞ்சம், போர், நோய்ப் பாதிப்புகளெல்லாம் அடித்தட்டு மக்களையே பாதித்தன. ஒவ்வோர் சாதிச் சமூகத்துக்குமுரிய கடமைகள் வரையறுக்கப் பட்டிருந்தன. ஆயின் அன்னாருக்குச் சமூகப் பாதுகாப்பில்லை."[27]

---

26. மதுரை நாயக்கர் வரலாறு, ப. 432-433.

27. கதைப்பாடல்களும் சமூகமும், ப. 78.

அதிகாரப் பொறுப்பிலிருந்த பாளையப்பட்டுக்காரர்களே கள்ளர், மறவர், நாயக்கர் முதலான சாதிகளாகப் பிரிந்து நின்றனர். உழைக்கும் மக்களான பள்ளர், பறையர் ஆகியோர் சொல்லொணாச் சாதிக் கொடுமைகளுக்காளாக்கப்பட்டனர். முழங்காலுக்குக் கீழ் உடை இழிந்து வரக்கூடாதென்றும், பொன்னணிகள் அணியக் கூடாதென்றும் வெண்கலம், செம்பாலான பாத்திரங்களைக் பயன்படுத்தக் கூடாதென்றும் மட்பாண்டங்களையே பயன்படுத்த வேண்டுமென்றும், இக்குலப் பெண்கள் சட்டை போடக் கூடாதென்றும் கட்டுப்பாடுகள் இருந்தன. பயிரிடும் பள்ளர்கள் அடிமைகளாகவே இருந்தனர். இவர்கள் தங்கள் எசமானனைக் கேட்டுத்தான் தங்களுக்கே உரிய, உயிரையும் விட வேண்டிய சூழல் இருந்தது.[28]

சமூகம் பாளையக்காரரில் தொடங்கிப் பயிரிடும் பள்ளர் வரையும் படிக்கட்டுகளைப் போல் காணப்பட்டது. பாளையக் காரரின் உடையும், அணியும், ஊர்வலமும் ஒரு மகாராசாவை நினைவுப்படுத்தும். அவருக்குக் கீழுள்ள மானியக்காரர் சற்றேறக் குறைய பாளையக்காரரை அடுத்த, மதிப்புடையராகத் திகழ்ந்தனர்.

"கோயில்களுக்கும், பார்ப்பனருக்கும் சமுதாயத்தில் முதலிடம் இருந்தது. தனிப்பட்ட தெருக்களும், ஊர்களும் அன்னாருக்கு ஒதுக்கப்பட்டன. தூது செல்லுதல், ஒற்றுப் பார்த்தல், அமைச்சராயிருத்தல் ஆகிய பணிகளை இவர்கள் ஆற்றினர். பொதுவாகக் கோயில்களில் பூசைகள் நடத்துவதற்கே இவர்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்கப்பட்டன."[29]

"பாளையக்காரர், நவாபுகள், ஆங்கிலேயர், தரகர்கள் ஆகியோருக்கிடையில் அகப்பட்ட உழவர்களின் நிலைமை எண்ணுதற்கும் கொடியதாயிருந்தது. நவாபுகளும், ஆங்கிலேயரும் படையெடுக்கும் போதெல்லாம் முல்லைமாறிகளாக மாறி பாளையக்காரர் பலர் தமிழர்களையே கொல்லும் இரண்டகி களாயினர். பூழித்தேவனும் கட்டபொம்மனும் வெற்றி பெறாததற்கு வீரமும் திறனுமிருந்தும் தமிழினத்தின் இரண்டகமே (துரோகம்) கரணியமாயிற்று."[30]

---

28. தமிழ் நில வரலாறு, ப. 409.

29. மேற்படி

மக்கள் வரிச்சுமையால் அல்லற்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சியிலும் இது தொடர்ந்தது. "1795இல் ஆங்கிலேயர் நிலவரித் திட்டமிட்டபோது திண்டுக்கல் 25% கோயம்புத்தூர் 118% கூடலூர் 96% என வரியை உயர்த்தினர். வீடு, வீட்டுக் கொல்லை, பயிரிடா நிலங்களுக்கும் வரி விதித்தனர். கலெக்டர் பிளேஸ் என்பவர் நிலத்தின் உற்பத்தி அளவையும் மிஞ்சுமாறு வரிவிதித்து விதைத் தானியத்தையும் பறித்துக் கொண்டதாக விவசாயிகள் 1798 டிசம்பரில் சென்னைப் பேராயத்துக்குப் (Madras Council) புகார் அனுப்பினர். புகார் கொடுத்த விவசாயிகள் அகற்றப்பட்டு அன்னார் நிலங்கள் பிறருக்குக் கொடுக்கப்பட்டன. ஈரமற்ற வரிக் கொள்கை மற்றும் அதிகாரிகளின் கெடுபிடியால் துன்புறுத்தப் பட்ட விவசாயிகள் உடமைகளைவிற்று வரி செலுத்தி ஓட்டாண்டியானார்கள். அவர்கள் பஞ்சத்தால் மடிந்தனர் அல்லது ஊரைவிட்டு வெளியேறினர்."[31]

ஏற்கெனவே இருந்த பல சாதி சமூக மரபுச் சிக்கல்களுடன் நாயக்கர் காலத்தில் பல புதிய சமூக மரபுகளும் உட்புகுந்து மக்களின் கட்டுகளை மேலும் இறுகச் செய்தன. அப்புதிய சமூக மரபுகளாவன:

1. வரதட்சிணை வாங்கும் வழக்கம்
2. கன்னிகா தானம் செய்தல்
3. உடன்கட்டை ஏறும் வழக்கம் செல்வாக்குப் பெறுதல்
4. குழந்தை வேண்டி அரசு, வேம்பைச் சுற்றும் பழக்கம் ஏற்படுதல்
5. வண்ணார் எனும் தனிச்சாதி உருவாதல்
6. பொட்டுக்கட்டி விடுதல்
7. தாசிகள் கோயிலில் நடனமாடுதல்[32]

பண்டு தொழில் அடிப்படையில் பிரிந்திருந்த வருணப் பிரிவுகள் குறிப்பிட்ட வருணத்தான் குறிப்பிட்ட தொழிலையே செய்தல் வேண்டும் என்றாகி அவன் பரம்பரையும் அத் தொழிலுக்கே உரியது என்று வரையறைப்படுத்தப்பட்டது.

---

30. தமிழ் நில வரலாறு, ப.410.

31. தமிழகம் வரலாறும் பண்பாடும், ப. 294-295.

32. தமிழக வரலாறு, ப.293.

நாயக்கர் காலத்தில் குறிப்பிட்ட தொழிலைச் செய்யும் குறிப்பிட்ட சாதியார் பிற தொழிலைச் செய்தலும் தன் சாதித் தொழிலைச் செய்ய மறுப்பதும் பெருங்குற்றம் எனக் கருதப்பட்டது. கலப்பு மணங்கள், சாதிக் கட்டுக்கோப்பைச் சீர்குலைப்பதுடன், சாதிக்குரிய தொழிலைச் செய்வதிலும் முரண்பட்டு விடுவதால் சமுதாயப் பின்னடைவு நேரும் எனக் கருதப்பட்டது. குறிப்பாக அந்தணர்கள் விவசாயம் செய்வதற்குத் தடை இருந்தது. ஆனால் அவர்கள் நில உடைமையாளர்களாக இருந்தனர். நிலத்தில் இறங்கிப் பாடுபட்டு நிலத்தில் உற்பத்தி செய்பவர்கள் பள்ளர்களாக இருந்தனர். ஆனால் அவர்களுக்கு நிலம் உடைமையானதாக இருக்கவில்லை. இத்தகு சமுதாய முரண்பாடுகள் பேணிக் காக்கப் பட்டன. அந்தணர்களும் வேளாளர்களும் தங்கள் நிலங்களில் பாடுபடும் பள்ளர்களை அடிமைகளாக வைத்திருந்தனர். 1843இல் அடிமை ஒழிப்புச் சட்டம் வந்த பின்னும் கூட அதை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்குமளவு சமூகச் சாதிக் கட்டுக்கோப்பு அவ்வளவு உறுதி வாய்ந்ததாக அமைந்திருந்தது. அடிமை ஒழிப்பு குறித்துத் திருச்சி மாவட்ட ஆட்சியராக இருந்த கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரி வருவாய்க் கழகத்துக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

மாவட்டத்தின் வருவாயைப் பொறுத்தவரை நான் ஒன்றைத் தெளிவாகக் காட்டுவேன். பள்ளர் முறையை (Puller System) ஒழிப்பது மிகவும் ஆபத்தான, கேடு விளைவிக்கும் பின் விளைவுகளை உண்டாக்கும்.... சாதி வேறுபாடு இருக்கும் வரை பிராமணர்கள் விவசாயம் செய்யத் தடை இருக்கும் வரை பள்ளர்களை வைத்திருப்பது அவசியமாகும். மேலும் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவது பள்ளர்களையே பாதிக்கும். ஏனெனில் விடுதலை அடைந்தாலும் அவர்கள் சமுதாயத்தில் மிகவும் கடைநிலைப் பிரிவினராக இருப்பர். இதை விட மோசமான சூழ்நிலைகளில் விவசாயம் செய்ய நேரிடும்.[33]

வேலைப்பளுவும், சவுக்கடிக் கொடுமைகளும், பாலியல் வன்முறைகளும் தாங்க இயலாதபோது ஊரைவிட்டு ஓடிய உழைப்பாள மக்களை ஆட்சி அதிகாரமே திருப்பியழைத்து வந்து அடிமைப்படுத்திய பல காட்சிகளும் அரங்கேறின.

1830இல் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தன் மாவட்டத்திலிருந்து ஓடிப்போன பத்து அடிமைகளைப் பிடித்தனுப்புமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழ்க்காணுமாறு கடிதம் எழுதினார்.

33. அடிமை முறையும் தமிழகமும், ப.35.

அவர்கள் இந்த மண்ணின் அடிமைகள். அவர்கள் சார்ந் திருக்கும் பண்ணையை விட்டுச் செல்லும் உரிமையற்றவர்கள். அந்தப் பண்ணையின் உரிமையாளனான பிராம்மணன் அவர்கள் உதவியின்றிச் சாகுபடி செய்ய இயலாத நிலையில் உள்ளான். அவர்கள் மீது அவனுக்குள்ள உரிமையை நிலைநாட்ட உதவியளிக்கப்படவில்லையானால் நிலம் தரிசாகக் கிடப்பதோடு அரசாங்கமும் இழப்புக்குள்ளாகும்.[34]

சாதிக்கென விதிக்கப்பட்ட தொழில்களை வழிவழியாய்ச் செய்தே ஆகவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இறுகஇறுக ஆங்காங்குக் கட்டு மீறல்கள் வெடித்துக் கிளம்பியுள்ளன. நில உடமைச் சமுதாயத்தின் சாதித் தொழில் பாகுபாடுகள் தகர்த்தெறியப்பட்டுள்ளதைப் பல கதைப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.

ஆக ஒட்டுமொத்தமாக 16-19ஆம் நூற்றாண்டில் நிலவிய சமூகச் சூழல்களைக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம்.

1. எண்ணற்ற சாதிகளும், சாதி உட்பிரிவுகளும் இருந்தன. அவற்றுக்குள் ஏற்றத் தாழ்வுகளும் கடைப்பிடிக்கப்பட்டன.
2. தொழில் அடிப்படையில் அமைந்த சாதிப்பிரிவுகள் சாதிக்குரிய தொழில்களாகி, சாதியும் பிறப்படிப்படையில் குறிக்கப்பட்டு, குறிப்பிட்ட சாதியில் பிறந்தவன் சாதித் தொழிலையே பரம்பரையாகச் செய்யுமாறு வற்புறுத்தப் பட்டது.
3. சாதியே ஒருவனின் அனைத்தையும் நிர்ணயம் செய்வதாக அமைந்திருந்தது. சாதி மூலமாக ஒருவனின் தொழில் நிர்ணயம் செய்யப்பட்டது. சாதிமூலம் மணவுறவுகள் நிர்ணயிக்கப்பட்டன. ஒருவனின் உணவு, உடை, உறையுள் மற்றும் முழு வாழ்க்கையையுமே சாதி நிர்ணயம் செய்தது.
4. சாதிக்கலப்புகள் வன்மையாகத் தண்டிக்கப்பட்டன. ஒரே சாதியிலிருந்த உட்பிரிவுகள் கூடக் கலந்துவிடாமல் மிகக் கவனமாகக் காக்கப்பட்டன.
5. உயர் சாதியினராக அந்தணர்கள் கருதப்பட்டனர். இவர்கள் அரசுத் தொடர்புடைய பணிகளில் அங்கம் வகித்தனர்.
6. உழைக்கும் மக்கள் கீழ்த்தட்டு நிலையிலிருந்தனர். உழைப்பு வாங்கிக் கொள்ளப்பட்டது; உரிமைகள் மறுக்கப்பட்டன.

---

34. அடிமை முறையும் தமிழகமும், ப.33.

ஒவ்வொருவருக்குமுரிய சமூகக் கடமைகள் வரையறுக்கப் பட்டிருந்தன; ஆயின் சமூகப் பாதுகாப்பில்லை.

7. கசக்கிப் பிழிந்து வரி வசூலிக்கப்பட்டது. வரி கட்ட இயலாதவர்கள் ஊரை விட்டு ஓடும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடந்தன.

8. ஏற்கெனவே இருந்த சமூக மரபுகளுடன் புதிதாகச் சில சமூக மரபுகளும் சேர்ந்து மக்களை இறுகப் பிணைத்து மூச்சுத் திணற வைத்தன. சமூக மரபுகளால் சமூக பண்பாட்டுச் சீரழிவுகளே நிகழ்ந்தன.

சமூகக் கதைப்பாடல்கள் காலத்து இலக்கியச் சூழல்

சமூகக் கதைப்பாடல்கள் எழுந்த 16-19ஆம் நூற்றாண்டு களில் இருந்த இலக்கியச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம் இலக்கிய வளர்ச்சிக்குச் சமூகக் கதைப்பாடல்களின் பங்களிப்பு என்ன என்பதை அறிந்து கொள்ள இயலும் என்ற நிலையிலும் செவ்விலக்கிய மரபினின்று வாய்மொழி இலக்கிய மரபான சமூகக் கதைப்பாடல்களின் பங்களிப்பு எத்தகு தனித்தன்மை வாய்ந்ததாக அமைந்திருந்தது என்பதை அறியும் நிலையிலும் அக்காலகட்ட இலக்கியச் சூழல் ஈண்டு விளக்கப் பெறுகின்றது.

16ஆம் நூற்றாண்டைப் புராண வளர்ச்சிக் காலம் என்றும் 17ஆம் நூற்றாண்டைச் சிற்றிலக்கியக் காலம் என்றும் 18, 19ஆம் நூற்றாண்டைச் சமய இலக்கிய வளர்ச்சிக்காலம் அல்லது சமயக் கலப்புக் காலம் என்றும் குறிப்பிடலாம். இக்கால கட்டங்களில் தோன்றிய இலக்கிய வகைகளை உற்று நோக்கும் பொழுது இத்தகு வகைப்படுத்தல் கற்போர் மனங்களில் இயல்பாக எழக்கூடிய ஒன்று. திருவிளையாடற் புராணம், அரிச்சந்திர புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம், திருவொற்றியூர்ப் புராணம், திருவாரூர்ப்புராணம், பாகவத புராணம், சேதுபுராணம், இலிங்கபுராணம், மாகபுராணம், கூர்ம புராணம், திருவானைக்கா புராணம் போன்ற புராணங்கள் 16ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டுள்ளன. பரஞ்சோதி, அதிவீரராம பாண்டியர் நூற்றாண்டெனவும் இதனைக் குறிப்பிடலாம்.

17ஆம் நூற்றாண்டு பெரிதும் சிற்றிலக்கியத்துக்கு உரியது எனக் குறிப்பிடலாம். குமரகுருபரர், சிவப்பிரகாசர் நூற்றாண் டென இதனைக் கூறலாம். இவர்கள் இருவரையும் பிரபந்த மன்னர்கள் என இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடு

கின்றனர்.[35] மாறனலங்காரம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம் முதலான இலக்கண நூல்களும் நீதிநெறி விளக்கம், நன்னெறி போன்ற நீதி நூல்களும் சீறாப்புராணம், பிரபுலிங்க லீலை போன்ற சிறப்பு வாய்ந்த நூல்களும் இக்கால கட்டத்தில் தோன்றியவை எனினும் பெரும்பான்மையான இலக்கிய வகையாகச் சிற்றிலக்கிய வகைகளே உருவாகியுள்ளதால் சிற்றிலக்கியக் காலம் எனக் குறிப்பிடலே பொருத்தமானதாக அமைந்துள்ளது.

இக்காலகட்டத்தில் எழுந்த குறிப்பிடத்தக்க சிற்றிலக்கியங்களாகத் தொண்டை மண்டல சதகம், கொங்கு, சோழ மண்டல சதகங்கள், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருவாரூருலா, அருணைக்கலம்பகம், திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், பண்டார மும்மணிக்கோவை, நால்வர் நான்மணி மாலை, சோணாசல மாலை, நீரோட்டக யமக அந்தாதி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சமயப் பொறைக்காலம், சமயக் கலப்புக் காலம் எனக் குறிப்பிடத் தகுந்த 18-19ஆம் நூற்றாண்டுகளில் பல சமயக் கலப்பு நேர்ந்தமையின் புலவர்களிடையே சமயப் பொறை காணப் பட்டது. தாயுமானவர், இராமலிங்கர் போன்றோர் பொதுமைச் சமயக் கோட்பாடுகளை வலியுறுத்திப் பாடல்களைப் பாடினர். வீரமாமுனிவர், கால்டுவெல், போப் போன்றவர்கள் தமிழகத்தில் தங்கித் தமிழ் இலக்கியப் பணியாற்றினர். இக்கால கட்டங்களைத் தாயுமானவர், சிவஞான முனிவர், வீரமாமுனிவர் காலமெனக் குறிப்பிடலாம். உரைநடை வளர்ச்சிக் காலம் என்றும் கூறலாம். இக்கால கட்டத்தில் பல்வேறுபட்ட இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன.

கைவல்யம் போன்ற வேதாந்த நூல்கள், குற்றாலக் குறவஞ்சி போன்ற நாடக இலக்கிய நூல்கள், உலகநீதி போன்ற சிறுவர் இலக்கிய நூல்கள், தொன்னூல் போன்ற இலக்கண நூல்கள், அவிவேக பரிபூரண கதை போன்ற உரைநடை நூல்கள், தேம்பாவணி போன்ற காப்பியங்கள், மாபாடியம் என்ற சிவஞான போத உரை விளக்க நூல்கள், சோமேசர் முதுமொழி வெண்பா என்ற திருக்குறள் விரிவிலக்கிய நூல்கள் எனப் பல்வேறுபட்ட இலக்கிய வகைகள் இக்கால கட்டத்தில் தோன்றியுள்ளன.

---

35. மு. கோவிந்தசாமி, இலக்கிய வரலாறு, ப. 222

மொத்தத்தில் 16-19ஆம் நூற்றாண்டுகளை உள்ளடக்கிய இக்காலகட்டம் புராண, சிற்றிலக்கிய, உரைநடை வளர்ச்சிக் கால கட்டங்களாக இருந்தது எனச் சுருக்கி உரைக்கலாம்.

செவ்விலக்கியம் – வாய்மொழி இலக்கியச் சமூகக் கதைப் பாடல்கள் – ஓர் ஒப்பீடு

16-19ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய செவ்விலக்கியங்கள் புராணங்களாகவும், சிற்றிலக்கியங்களாகவும், உரை விளக்கங்களாகவும், இலக்கணங்களாகவும், சமய விளக்க நூல்களாகவும் இருக்கின்றன. இவையும் மக்களுக்காக எழுதப்பட்டவைதாம். ஆனால் இவை அனைத்தும் காட்டாத தனியான காட்சி அமைப்புகளை இதே காலகட்டத்து எழுந்த வாய்மொழி இலக்கியமான கதைப்பாடல்கள் காட்டியிருப்பது ஏன்? எப்படி? என்ற வினாக்கள் எழுகின்றன. இத்தகு முரண்பாடான காட்சிகளை இவ்விருவேறு இலக்கியங்கள் ஏன் கொண்டிருக்கின்றன என்பது ஆய்வாளர்கள் முன் நிற்கும் வினாவாகும். இதற்கு முக்கியமான காரணங்கள் எவை என்பதை விளக்குவது மிகத் தேவையானதாகும்; ஓர் ஆய்வாளரின் கடமையுமாகும்.

1. செவ்விலக்கியங்கள் தொட்டியில் வளர்க்கப்படும் செடிகளைப் போன்று சில இலக்கிய மரபுகளுக்குக் கட்டுப்பட்டுப் படைக்கப்படுபவை. வாய்மொழி இலக்கிய வகையினதான சமூகக் கதைப்பாடல்களோ காட்டுச் செடி போன்றவை; கட்டுப்பாடுகள் அற்றவை.

2. செவ்விலக்கியப் புலவர்கள் ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள்; அவர்களின் ஆதரவில் வாழ்ந்தவர்கள். எனவே ஆட்சியாளர்களின் ஆதரவுடன் இலக்கியம் படைத்துப் புகழ் சேர்க்கும் கடப்பாடுடையவர்களாக இருந்தனர். வாய்மொழி இலக்கியப் புலவர்கள் ஆட்சியாளர்களை அண்டிப் பிழைக்கவில்லை. தம்மிடமுள்ள சுய தொழில்கள் மற்றும் நாட்டுப்புறக் கலைகளை நடத்திக்காட்டி வாழ்க்கை நடத்தியவர்கள். எனவே அவர்கள் படைத்த இலக்கியங்கள் சுதந்தரக் காற்றைச் சுவாசித்து வெளிவந்த விடுதலைக் குரல்களாக வேர்விட்டெழும்பின.

3. செவ்விலக்கியங்கள் கல்வித் தரமுடைய மேன்மக்களுக்காக மேட்டிமைக் கருத்துகளுடன் படைக்கப்பட்டவை. வாய்மொழி இலக்கியமோ சாதாரணப் பொதுமக்களுக்காகப் பொது மக்களைப் பற்றிய செய்திகளை உள்ளடக்கியனவாக இருந்தன.

4. செவ்விலக்கியக் கர்த்தாக்கள் சமுதாயச் சீரழிவுகளை நேரில் கண்டும் காணாதது போல் கற்பனைச் சிறகில் பறந்து கொண்டிருந்தனர். வாய்மொழிப் பாடகர்கள் கண்முன் காணும் அவலங்களையே தம் படைப்புகளாகக் கொண்டனர்.

5. செவ்விலக்கியப் படைப்பாளிகள் குதிரைகளைப் போன்று பக்கக் கண்ணாடிகளை மாட்டிக் கொண்டு பயணப் பட்டவர்கள். வாய்மொழி இலக்கியப் படைப்பாளிகள் அரிமா நோக்குடையவர்கள்.

6. செவ்விலக்கியம் ஆளும் வர்க்க இலக்கியம். வாய்மொழி இலக்கியம் உழைக்கும் மக்கள் இலக்கியம்.

அடிப்படையில் இத்தகு வேறுபாடுகள் காணப்பட்டமையின் இரண்டும், வெவ்வேறு பாதைகளில் பயணப்பட்டு வந்த இரு வேறு இலக்கிய வகைகளாகவே திகழுகின்றன; இலக்கியக் காட்சிப் போக்குகளும் மாறுபட்டவையாகவே காணப்படுகின்றன.

எப்படியோ செவ்விலக்கியங்கள் காட்டாத அல்லது காட்ட மறுக்கின்ற சமுதாயக் காட்சிகளை மக்கள் இலக்கியமான கதைப்பாடல்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளன என்பது ஆய்வாளர்கள் கண்முன் நிற்கும் உண்மையாகும். ஒரு முழுமையான சமுதாயத்தைக் கண்டு தேர்வதற்குரிய களனை மக்கள் இலக்கியமான சமூகக்கதைப்பாடல்கள் பெற்றுள்ளன என்பதைக் கற்பவர்கள் அறிய இயலும். எனவே மக்கள் இலக்கியங்களான சமூகக் கதைப்பாடல்களைப் பயிலாமல் செவ்விலக்கியத்தை மட்டும் கற்றுவிட்டு 16-19ஆம் நூற்றாண்டைய சமூகச் சித்திரத்தை வரைபவர் யானை பார்த்த கண்ணற்றவர்களுள் ஒருவரே என்பதைத் திண்ணமாக உரைக்கலாம்.

சமூகக் கதைப்பாடல் ஆய்வுகள் - இருவித நோக்குகள்

செவ்விலக்கியங்களை விடவும் நாட்டார் இலக்கியங்கள்தான் மக்களின் உண்மையான சமூக, பண்பாட்டுக் கூறுகளைக் கலப்பின்றி இன்னமும் தம்மிடம் எச்சமாக வைத்துக் கொண்டுள்ளன என்ற உண்மையை உணர்ந்த மேனாட்டினரின் பார்வை நாட்டுபுறவியலை நோக்கித் திரும்பியது. அப்போது தமிழகத்திலும் விழிப்புணர்வு பெற்ற இலக்கியவாதிகள் நாட்டுப்புறவியலை நோக்கித் தம் பார்வையைத் திருப்பினர். இந்த வரிசையில் 1950களில் முகிழ்த்து 1980களில் மணம் பரப்பத் தொடங்கியது நாட்டுப்புறவியல். நாட்டார் இலக்கியங்கள் தேடப்பட்டன; தொகுக்கப்பட்டன; ஆராயப்பட்டன. இவ்

வகையில் சுவடிகளிலும் மக்கள் கலை வடிவங்களிலும் மக்கள் வாய்மொழிகளிலும் வழங்கப்பட்டு வந்த நாட்டார் இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட்டு அச்சேறின. கதைப்பாடல் களைப் பொறுத்த அளவில் தொடக்கக்கட்டத்தில் புராண, இதிகாசக் கதைப்பாடல்கள் வெளிவரத் தொடங்கின. அடுத்த கட்டத்தில், சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்கள் வெளியிடப் பட்டுள்ளன.

சமூகக் கதைப்பாடல்கள் மட்டும் தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டு, விரிவான முறையில் செய்யப்பட்ட ஆய்வுகள் மிகச் சிலவாகவே உள்ளன. கதைப்பாடல்களில் சமூகக் கூறுகளை எடுத்துக் கொண்டு செய்யப்பட்ட ஆய்வுகளும் உள்ளன. இந்த வகைகளில் குறிப்பிடத்தக்கவைகளாக,

1. குமரிமாவட்டச் சமூகக்கதைப்பாடல்களின் இயல்புகளும் சிக்கல்களும், நா. இராமச்சந்திரன், தூய சவேரியர் கல்லூரி, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, பி.எச்.டி. ஆய்வேடு, 1981.
2. கதைப்பாடல்கள் காட்டும் சமுதாயம், பி. ஜெயா, இராணி மேரி கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழக பி.எச்.டி. ஆய்வேடு, 1983.
3. தமிழ் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் பற்றிய சமூகவியல் திறனாய்வு, சீலா ஆசீர்வாதம், கேரளப் பல்கலைக்கழகம், பி.எச்.டி. ஆய்வேடு, 1983.
4. கதைப்பாடல்கள் காட்டும் சமுதாயம், ஆர். காந்திமதி, சென்னைப் பல்கலைக்கழகம், எம்பில். ஆய்வேடு, சென்னை, 1982.
5. கதைப்பாடல்களும் சமூகமும், கோ. கேசவன், தோழமை வெளியீடு, கும்பகோணம், 1985.
6. சமூகக் கதைப்பாடல்களில் அமைப்பியல் ஆய்வு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், டி.எப். ஆய்வேடு, 1986.

ஆகியவற்றைக் கூறலாம்.

கதை வேறுபாடுடைய ஒரு சமூகக் கதைப்பாடலை எடுத்துக் கொண்டு விரிவான முறையிலும் ஆய்வு செய்துள்ள நிலை காணப்படுகின்றது. சான்று : மதுரை வீரன் கதைகள் - ஓர் ஆய்வு, வே.ச. திருமாவளவன், டிச, 1991.

தனிப்பட்ட ஒரு சமூகக் கதைப்பாடலை மட்டும் எடுத்துக் கொண்டு எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் வெளி வந்துள்ளன.

அண்ணன்மார் சுவாமிகதை,[36] மருதநாயகம்பிள்ளை கதை,[37] நல்லதங்காள் கதைப்பாடல்,[38] பெரியண்ணன்-சின்னண்ணன் கதைப்பாடல்,[39] சோணமுத்து கதைப்பாடல்,[40] காத்தவராயன் கதைப்பாடல்,[41] மதுரை வீரன் கதை,[42]

---

36. ப. கிருஷ்ணசாமி, அண்ணன்மார் வரலாறு, காப்பியம், வழிபாடு, தன்னனானே (1), ஏப்ரல், ஜூன் 1995, ப. 51-57.

    அண்ணன்மார் சுவாமி கதை- பொது நிலை ஆய்வு, எம்.பில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 2000.

    க. கனகராஜ், அண்ணன்மார் சுவாமி கதைகள் - ஓர் ஆய்வு (ஆய்வேடு), பாரதியார் பல்கலைக்கழகம், கோவை, 1999.

    ப. கிருஷ்ணசாமி, கொங்கு நாட்டு வரலாறும் அண்ணன்மார் வழிபாடும், தன்னனானே பதிப்பகம், பெங்களூர், 1998.

    அண்ணன்மார் சுவாமிகதை காட்டும் நம்பிக்கை, நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவை I, ப. 449, 460, இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர், 1987.

37. நா. இராமச்சந்திரன், மருதநாயகம் பிள்ளை கதை, தன்னனானே (இதழ்), 14, மே, 2000, ப.186-200.

38. நீ.வ. கருப்புசாமி, நல்லதங்காள் கதைப்பாடல் கொங்கு நாட்டில் நிலவிய பாங்கு, ஆய்வுக்கோவை I, 1999, ப.348-352.

    ச. பொன்மணி, நல்லதங்காள் - ஒரு கண்ணோட்டம், பத்தாவது ஆய்வுக்கோவை, தொகுதி 3, கோயம்புத்தூர், 1978.

    அ.ம. சத்தியமூர்த்தி, நல்ல தங்காள் கதை - ஓர் ஆய்வு, 17ஆவது ஆய்வுக்கோவை, தொகுதி 3, 1985, ப. 276-281.

    பா.ஜெ. சாந்தகுமாரி, நல்லதங்காள் கதைப்பாடல் ஓர் ஆய்வு, எம்பில் ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1985.

39. பெரியண்ணன்-சின்னண்ணன் கதைப்பாடல்-ஓர் ஆய்வு, ஆய்வுக்கோவை I, 1994, ப. 440-441.

40. சு.சண்முகசுந்தரம், சோண முத்து கதைப்பாடல், தன்னனானே (14) இதழ் மே 2000, ப. 41-50.

41. காத்தவராயன் கதைப்பாடல் அமைப்பு, ஆய்வுக்கோவை II, 1998, ப. 891-895.

42. மதுரை வீரன் கதை, ஓர் அறிமுகம், ஆய்வுக்கோவை III, 1989, ப.534. மதுரை வீரன் கதைப்பாடல் - ஒரு கண்ணோட்டம், தாமரை, நவ. 1990, ப. 45-48.

    மதுரை வீரன் கதையில் பெண் பாத்திரங்கள் நாட்டுப்புறவியல் கருத்தரங்கு, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், பாண்டிச்சேரி, 1987.

வெள்ளையம்மாள் கதைப்பாடல்,[43] உடையார்கதை,[44] காத்தவராயன் கதை,[45] முத்துப்பட்டன் கதை[46] போன்றன இவ்வகைகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

சமூகக் கதைப்பாடல்களைப் பதிப்பிக்கும் பொழுதே அவற்றை நுணுகி ஆய்ந்து வெளியிடும் நிலைகளும் உள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சமூகக் கதைப்பாடற் பதிப்புகளை இவற்றுக்குச் சான்று காட்டலாம்.

இவ்வாறு வெளிவந்துள்ள சமூகக் கதைப்பாடல்கள் ஆய்வுகள் கதைப்பாடல் மூலங்களின் அடிப்படையில் ஆய்வுக் கருத்துகளைத் தந்துள்ளன. கதைப்பாடல் ஆய்வுக்களத்தின் ஒரு திருப்பு முனையாக மார்க்சியக் கொள்கையாளர்கள் சமூகக் கதைப்பாடல்களை ஆளும் வர்க்கம் - அடிமைவர்க்கம் என்ற நிலையில் கொண்டு வேறுபட்ட ஒரு கோணத்தை ஆய்வாளர்களின் முன் வைத்தனர். தமிழ் இலக்கியங்கள் அனைத்தையுமே மார்க்சியக் கொள்கைகளின் அடிப்படையில் மீளாய்வு செய்தல் வேண்டும் என்ற கருத்தை இவர்கள் வைத்தனர்.

1. மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்[47]
2. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை[48]களில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம் போன்ற நூல்கள் மார்க்சியக் கண் கொண்டு தமிழ் இலக்கியத்தைத் தரிசித்தன.

மக்கள் இலக்கியமான சமூகக்கதைப் பாடல்கள் குறித்து வெளிவந்து கொண்டிருந்த ஆய்வுப் போக்குகளிலிருந்து வேறுபட்டு மார்க்சியப் பார்வையில் அவற்றை ஆய்வுக்குட்படுத்தும் முன்னவர் பேராசிரியர் நா. வானமாமலை ஆவார். இவருக்கு முன் வந்திருந்த ஆய்வுப் போக்குகளில் பெருத்த மாற்றம் விளைவிப்பதாக இவரது கோணம் அமைந்திருந்தது.

---

43. செ.இராசு, வெற்றித் திலகம் வெள்ளையம்மாள் கதைப்பாடல், தன்னனானே (16), 2001, ப. 135-145.

44. த.த. தவசிமுத்து, உடையார் கதைப்பாடலில் மரங்களும் மாந்தையர்களும், தமிழியல் ஆய்வு, 1999, ப.197-203.

45. காத்தவராயன் கதைப்பாடல் அமைப்பு ஒரு கண்ணோட்டம், ஆய்வுக் கோவை (20), 1998, ப. 891-895.

46. து. லலிதா, முத்துப்பட்டன் கதையில் இலக்கிய மரபு, ஆய்வுக் கோவை III , 1999, ப. 1476-1480.

47. ஞானி, பரிமாணம் வெளியீடு, கோவை, மார்ச், 1988.

48. கோ. தான்யா, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1990.

1. மதுரை வீரன் காசிராசன் புதல்வனாகப் பிறந்து காட்டில் விடப்பட்டுச் சக்கிலியர் குல மாதிகனால் வளர்க்கப் பட்டவன்; பிறப்பால் சக்கிலியனல்ல; காமுகனானதால் கொல்லப்பட்டான்.

2. அதே போன்று முத்துப்பட்டன் கதையில் வரும் பொம்மக்கா, திம்மக்கா போன்றோரும் சக்கிலியர் களல்லர். அந்தணர்குலப் பெண்ணுக்குப் பிறந்து காட்டில் விடப்பட்டுச் சக்கிலியனால் வளர்க்கப்பட்டவர்கள். முத்துப் பட்டன் மாடுகளை மீட்கும்போது மறைந்திருந்த ஒருவனால் கொல்லப்பட்டான்.

3. சின்னத்தம்பி கதையில் அப்பாவி இளைஞனான சின்னத்தம்பி புதையலெடுக்க நரபலியாகக் கொடுக்கப் பட்டான் என்றும் உள்ள கதை மூலங்களை அப்படியே கொண்டு ஆய்வு நிகழ்த்தியவர்கள் இருந்தனர். 1. கள ஆய்வுகள், 2. நிகழ்த்து கலைகள், 3. கதை நிகழ்ச்சி வேறுபட்டு அமைந்துள்ள கதை மூலங்கள் 4. கதையின் முன்பகுதியில் ஒரு மாதிரியாகவும் பின்பகுதியில் வேறு மாதிரியாகவும் அமைந்திருத்தல். 5. கதை பாடுபவனை நேர்முகங்காணுதல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு கதையின் உண்மை வடிவத்தை வரையறுத்துக் கூறினர் மார்க்சியவாதிகள். சமூகக் கதைப்பாடல்களைப் பொறுத்தமட்டில் அவை இவ்வாறு இருவிதமாகவும் நோக்குவதற்கும் வலியுறுத்துவதற்கான கருத்துகளைக் கொண்டிலங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இருவேறு முறைகளில் பார்க்கப்பட்டுள்ள கோணங்களில் எந்த அளவு உண்மை உள்ளது என்பதை அறிந்து வெளிப்படுத்துவது ஓர் ஆய்வாளனின் முக்கியக் கடமையா கின்றது.

பேராசிரியர் நா. வானமாமலையும் நாட்டுப்புறக் கதைப் பாடல்களும்

நாட்டுப்புறக் கதைப்பாடல்களைக் குறிப்பாகச் சமூகக் கதைப்பாடல்களை மார்க்சிய நோக்கில் அணுகி ஆராய்ந்த முதல் வழிகாட்டி என்ற நிலையில் பேராசிரியர் நா. வா. அவர்களின் நாட்டார் வழக்காற்றியல் பணிகளும் சமூகக் கதைப்பாடல்களை அவர் பார்த்த மாறுபட்ட புதிய கோணங்களும் இங்கு நோக்கப் படுகின்றன.

1955ஆம் ஆண்டு மார்க்சிய அறிஞர் பி.சி. ஜோஷி அவர்கள் தமிழகத்துக்கு வருகை தந்ததாகவும் அப்பொழுது அவரைச் சந்தித்த பேராசிரியரை நாட்டார் வழக்காற்றியல் துறையில் ஈடுபடும்படி ஜோஷி கேட்டுக்கொண்டதாகவும், அதன் பின்னரே நா.வா. அவர்களது கவனம் நாட்டுப்புறவியல்துறை நோக்கித் திரும்பியதாகவும் தெரியவருகின்றது.

1959முதல் இவரின் நாட்டார் இலக்கிய ஆய்வுகள் வெளிவரத் துவங்கின.

1. சின்னத்தம்பி வில்லுப்பாட்டு (தாமரை 1959).
2. முத்துப்பட்டன் கதை (சரஸ்வதி).
3. நாட்டுக் கதைப்பாடல்களில் சமூக உள்ளடக்கம் (தாமரை, பிப்ரவரி, 1968).,
4. கொள்ளைக்காரர்களும் நாட்டுப்பாடல்களும் (தாமரை, ஆகஸ்ட், 1968).
5. வில்லுப்பாட்டுக் கதையும் கதை மாந்தர்களும் (தாமரை, ஏப்ரல், 1974).
6. இராமப்பய்யன் அம்மானைப் பாத்திரங்களின் சமூகத் தன்மை (தாமரை, ஜுன், ஜுலை, 1974).
7. கன்னட நாட்டுப்பாடல்களின் வீரர் படிமம் (தாமரை, 1977).

என்று இவ்வாறு வரிசையாக வெளிவந்த இவரின் கட்டுரைகள் பேராசிரியரின் நாட்டார் வழக்காற்றியல் பணிக்குரிய அடித்தளத்தையும் கோட்பாட்டு அணுகுமுறையையும் விளக்கு பவையாக அமைந்தன.

1960-1964இல் வெளிவந்த 'தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்', 'தமிழர் நாட்டுப் பாடல்' என்ற இரு தொகுதிகளும் மக்களி டையே பெரும் வரவேற்பைப் பெற்றன. இவ்வாறு சிறுசிறு பாடல்களைத் தொகுப்புகள் செய்து வெளியிடுவதிலிருந்து நெடுங்கதைப் பாடல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் 1960 முதல் ஈடுபட்டார். இதில் காலத்தால் முதலில் வெளிவந்தது கட்ட பொம்மு கதை (1960). இந்த வெளியீடுகள் அவரைப் பல்கலைக்கழக மட்டத்திற்கு உயர்த்தின. இவரது படைப்புகளை ஊக்குவிக்க எண்ணம் கொண்ட மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இவருக்குப் பல

நூல்களைப் பல்கலைக்கழகம் மூலம் வெளியிட இசைவு தந்தார். இதன் விளைவாக 17,18ஆம் நூற்றாண்டின் சமூக, வரலாற்று ஆவணத்தன்மை மிக்க,

1. வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப் பாடல் (1971)
2. முத்துப்பட்டன் கதை (1971)
3. காத்தவராயன் கதை (1971)
4. கட்டபொம்மு கூத்து (1972)
5. கான் சாகிபு சண்டை (1972)

ஆகிய நெடுங் கதைப்பாடல்கள் வெளிவந்தன. நாட்டார் வழக்காற்றியலில் சுமார் 20 ஆண்டுக்காலம் அழுந்தக் காலூன்றிப் பணி செய்தார் பேராசிரியர்.

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'ஆராய்ச்சி' என்ற இதழைத் தொடங்கினார் நா. வானமாமலை. இந்த இதழின் அடித்தளம் மார்க்சியம். பல்கலைக்கழகத்துக்கு வெளியே ஓர் ஆராய்ச்சிப் படை உருவாவதற்கு 'ஆராய்ச்சி' பத்திரிகை ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. இத்தகைய முயற்சிகளின் காரணமாக நா.வா. அவர்கள் உ.வே.சாமிநாதையர் அவர்களுடன் ஒப்பிடப் பட்டு 'நாட்டார் வழக்காற்றியலின் தந்தை' என்று பாராட்டப் பெறுகிறார்.

> "நா. வானமாமலையின் தமிழ்ப்பணி அநேக ஏட்டுப் பிரதிகளை அச்சேற்றி அவற்றுக்குச் சாகாவரம் அளித்த டாக்டர் உ.வே.சாமிநாதைய்யரின் தமிழ்ப் பணிக்கு அடுத்தபடியாகச் செல்லத்தக்கது என்று சொன்னால் அது மிகையாகாது."[49]

என்பது கு. அழகிரிசாமி அவர்களின் கூற்றாகும். பேராசிரியர் அவர்கள் நாட்டுப் பண்பாட்டியல் துறைக்கு ஆற்றியுள்ள பணியினை ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் கீழ்க்காணுமாறு வகைப்படுத்துகிறார்.

1. நாடோடிப் பாடல்கள், கதைப்பாடல்கள் ஆகியவைகளைச் சேகரித்து வெளியிடுவது.
2. நாட்டுப் பண்பாட்டியல் பற்றிய கட்டுரைகள் எழுதுவது.

---

49. நா. வானமாமலை, எஸ். தோதாத்ரி, 2001, ப.67.

3. தனக்குக் கிடைக்கும் பிற வாய்ப்புகளை இத்துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது.

4. பிறரையும் இத்துறையில் ஈடுபடச் செய்வது[50]

பேராசிரியருக்கு நாட்டார் வழக்காற்றியலில் அதிக ஈடுபாடு ஏற்பட்டது 1960களுக்குப் பின் எனலாம். ஆயின் நாட்டார் வழக்காற்றியல் துறையில் நா.வா.வின் மிகச் சிறந்த காலம் என 1970-74ஆம் ஆண்டுகளைக் குறிப்பிடலாம். இக்காலகட்டத்தில் பல நெடுங்கதைப் பாடல்களை மிகச் சிறந்த ஆராய்ச்சி முன்னுரைகளுடன் பதிப்பித்ததால் இவ்வாறு கூறலாம்.

சமூகக் கதைப்பாடல்கள் குறித்த நா.வா.வின் ஆய்வு முடிவுகள் ஆழமானவையாகவும் ஆணித்தரமானவையாகவும் மாறுபட்ட கோணமுடையவையாகவும் அமைந்துள்ளன. நிலவுடைமைச் சிதறல் காலகட்டத்தில் தோன்றிய சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை இனங்காட்டிய முன்னவர் பேராசிரியரே ஆவார்.

சமூகக் கதைப்பாடல்கள் குறித்த அவருடைய ஒரு கருத்து இங்குச் சான்றுக்காக வைக்கப்படுகிறது.

> "இக்கதைகள் மூலம் அக்காலத்திய சாதிய அமைப்பு, கொடுமை, ஆளும் சக்திகளின் வரம்பு மீறிய செயல்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. சொத்துரிமையை மிகப்புனிதமாகவும் இறுக்கமாகவும் மக்கள் கருதினர். ஆனால் கீழ்நிலையில் உள்ள மக்களிடையே சாதிய விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தினர். அவர்களிடையே உள்ள திறமைகள் ஒடுக்கப்பட்டன. சாதிய விதிகளை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப் பட்டது."[51]

நா. வானமாமலை அவர்கள் மறைந்த பிறகு வெளிவந்த Interpretation of Tamil Folk creations (1981) என்ற எட்டு அதிகாரங்களை உள்ளடக்கிய ஆங்கில நூல் இவரது நூல்களுக்கெல்லாம் சிகரம் எனக் கருதப்படுகிறது. நாட்டார் வழக்காற்றியலுக்கு இவர் தன் வாழ்க்கை முழுவதிலும் உழைத்ததன் முழுப்பலனும் முழுப்பயனும் இந்நூலில்

---

50. நா. வானமாமலை, எஸ். தோத்தாத்ரி, 2001, ப.67.

51. மேற்படி, ப.77.

வெளிப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. 17,18ஆம் நூற்றாண்டுச் சமூக வரலாறு கற்க விரும்புகிறவர்களுக்கு இந்நூல் ஓர் அரிய கருவூலமாகத் திகழ்வது எனக் கூறலாம்.

நாட்டார் வழக்காற்றியலுக்கு அரிய பணிகள் பலவற்றை ஆற்றிய பேராசிரியர் அவர்கள் இத்துறையில் பலருக்கு வழிகாட்டியாகவும் புதியவர்கள் இத்துறையில் கால்பதிக்கக் காரணமாகவும் அமைந்துள்ளார். இவர் வழிநின்று இடதுசாரிச் சிந்தனையுடன் தொடர்ந்து பணியாற்றியவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்களாக, ஆ. சிவசுப்பிரமணியன், மே.து. இராசுகுமார், கோ.மா. கோதண்டம், சா. அன்புவீரன், சுந்தரம், வாழப்பாடி சந்திரன், அந்திரி, தி.க. சிவசங்கரன், கோ. கேசவன், எஸ். தோதாத்ரி, பொன்னீலன், கா. சுப்பிரமணியம், வெ. கிருஷ்ண மூர்த்தி, டி.எஸ். நடராசன், தே. லூர்து, முத்துமோகன், செந்தீ நடராசன், சொக்கலிங்கம், இராமச்சந்திரன் ஆகியோரைக் கூறலாம். சமூகக்கட்டுப்பாட்டு மீறல்களை மார்க்சிய நோக்கில் கண்ட முதல்வரான நா.வா. வின் கருத்துகளை அடித்தளமாக, ஆதாரமாகக் கொண்டு சமூகக் கட்டுப்பாட்டு மீறல்கள் இனி விரிவாக ஆராயப்படுகின்றன.

சமூகக் கட்டுப்பாட்டு மீறல்கள்

சமூகக் கதைப்பாடல்கள் தோன்றிய காலகட்டத்தில் இருந்த சமூகக் கட்டுப்பாடுகள் சமூகக் கதைப்பாடல்கள் காலத்துச் "சமூகச் சூழல்" என்ற சிறு தலைப்பின்கீழ் முன்னரே குறிப்பிடப் பட்டுள்ளது. இப்பகுதியில் சமூகக்கட்டுப்பாடுகள் எவ்வா றெல்லாம் மீறப்பட்டுள்ளன என்பது விளக்கப்படுகிறது.

சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களுடைய கதைப்பாடல்கள் அட்டவணை விவரம்

சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்தும் கதைப் பாடல்களாக 48 சமூகக் கதைப்பாடல்கள் கண்டறியப் பட்டு அட்டவணையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (பின்னிணைப்பு காண்க) இவ்வட்டவணையுள் உச்சினி மாகாளி கதை, இசக்கியம்மன் கதை போன்ற தெய்வக் கதைப்பாடல்களும் தோட்டுக்காரி கதை, வெங்கலராசன் கதை போன்ற வரலாற்றுக் கதைப் பாடல்களும் இடம்பெற்றிருப்பது அவற்றின் சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்தும் கதைக்கரு

முக்கியத்துவம் கருதியேயாகும். இவை குறித்துக் கட்டுப்பாட்டு மீறல்களை விளக்கும் பகுதியில் பின்னர்த் தெளிவுப்படுத்தப்படும்.

இவ்வட்டவணையில், கிடைத்த கதைப்பாடற் பதிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. இதே தலைப்புகளில் இன்னும் பல பதிப்புகளும் இருக்கக்கூடும். ஒரே கதைப்பாடல் எத்தனை முறை பலரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பது நோக்கமல்ல என்பதால் கிடைத்த ஒரே தலைப்பிலான பதிப்புகள் மட்டும் தொகுக்கப்பட்டுள்ளன. விடுபட்டவையும் இருக்கக் கூடும். சான்றாக இவ்வட்டவணையில் அண்ணன்மார் சுவாமி கதை, மதுரை வீரன் கதை பற்றி இன்றும் பலர் பல பதிப்புகளைச் செய்துள்ளனர் என்பது வெளிப்படை.

இவ்வட்டவணையில் ஒரே தலைப்பிலான கதைப் பாடல்கள் ஆண்டு வாரியாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. முடிந்த அளவு முழு விவரங்களும் பட்டியலில் தரப்பட்டுள்ளன. சிலவற்றுக்கான பழைய பதிப்புகள் கிடைக்கவில்லை. சிலவற்றுக்கு ஆண்டு, பதிப்பகம், பதிப்பாசிரியர் விளக்கங்கள் கிடைக்கவில்லை.

இந்த அட்டவணையிலுள்ள கதைப்பாடல்களை அடிப் படையாக வைத்துக் கொண்டு சமூகக் கட்டுப்பாட்டு மீறல்கள் எவ்வழியிலெல்லாம் நிகழ்ந்துள்ளன என்பது ஆய்வு செய்யப் படுகிறது.

இந்த அட்டவணைக்காகச் சமூகக் கதைப்பாடல்களைத் தொகுத்தபொழுது எல்லாச் சமூகக் கதைப்பாடல்களும் சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்துவன அல்ல என்பது வெளிப்படத் தெரிந்தது. சான்றாகப் பொன்னிறத்தாள் கதை, அந்தரமுடையார் அல்லது ஆந்திரமுடையார் கதைப்பாடல், சின்னான் கதை, வீரமணிச் சாம்பான் கதை, தாதரம்மன் கதை, வேப்பிலைச் சாமிகதை போன்ற சமூகக் கதைப்பாடல்கள் சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்துவன அல்ல என்பது அறியப்பட்டது. ஆயின் இவை சமூகக்கட்டுப்பாடுகள் மீறப்படுவதற்காகக் காரணப் படிநிலைகளை உள்ளடக்கியனவாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சமூகம் கட்டுக்கோப்பாகத் திகழச் சில கட்டுப்பாடுகள் தேவை. இக்கட்டுப்பாடுகள்சமூக ஒருங்கிணைப்புக்கு உதவாமல் சமூக ஒழுங்கின்மைக்கும், சமூக உடைப்புகளுக்கும் காரணமாக

ஆகும் பொழுது கட்டுப்பாட்டு விலங்குகள் உடைக்கப்பட்டு சமூகக் கட்டுப்பாட்டு மீறல்கள் நிகழ்கின்றன. 16-19ஆம் நூற்றாண்டுகளில் இருந்த சமூகக் கட்டுப்பாடுகளில் மூச்சுத்திணறி நீருக்குள்ளிருப்பவனின் வேகத்தோடு மீறல்கள் வெளிப்பட்டுள்ளதைக் கதைப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.

1. குலத்தாலும் இனத்தாலும் சாதியாலும் பிணைக்கப்பட்டிருந்த கயிறுகளை அறுக்க முயற்சிகள் நடந்திருக்கின்றன.
2. சாதிக்குரிய தொழில்கள் என்ற நிலைகள் மீறப்பட்டுள்ளன.
3. முந்தைய தலைமுறை இளைய தலைமுறைப் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.
4. உடமையாளர்களுக்கெதிரான போராட்டங்கள் வெடித்துள்ளன.
5. பெண்ணாதிக்கச் சிந்தனைகள் முளை விட்டுள்ளன.
6. ஆண்டான்-அடிமை வர்க்கக் கோடுகள் அழிக்கப்படப் போராடியிருக்கின்றனர்.
7. செய்யும் தொழிலால் ஏற்றத் தாழ்வில்லை என்ற மனநிலையை வெளிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சமூகக் கட்டுப்பாட்டு மீறல்கள் சமூக அழுத்தத்தை மாற்றி, சமூக அழுக்கை அகற்றிப் புதியதோர் சமூகம் உருவாகக் காரணமாக அமைந்திருக்கின்றன. இந்த நோக்கில் சமூகக் கதைப் பாடல்கள் வெளிப்படுத்தும் சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை 5 வழிகளில் பகுத்துக் கொண்டு கருத்துகள் விரித்துரைக்கப் படுகின்றன. அவையாவன:

1. காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்
2. தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்
3. வர்க்கப் போராட்டங்கள் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்.
4. பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்.
5. பிறவழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்.

முதலில் காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்

சமூகக் கதைப்பாடற் காலகட்டச் சமூகம் சாதியம் எனும் விலங்கால் பலமாகப் பிணைக்கப்பட்டுக் கிடந்தது. குலத்தாலும் இனத்தாலும் சாதியாலும் பிளவுபட்டுப் பல்வேறு பிரிவினை களாகச் சிதறுண்டு இருந்தது. பண்டைக் காலத்தில் தொழில் அடிப்படையில் உருவான சாதிப்பிரிவுகள் காலப்போக்கில் பிறப்பை அடிப்படையாகக் கொண்டவை சாதிகள் என மாற்ற முற்றன. ஜாதி எனும் வடசொல் தற்பவமாய்த் தமிழில் சாதி என வழங்கப்படுகிறது. பிறப்படிப்படையில் சாதி அமைந்தது ஆரியர் வருகையின் பின் என்பது சிலரது கருத்தாகும். மாற்றுக் கருத்தும் உண்டு. ஆயினும் பிறப்படிப்படையில் சாதிகள் அமைந்து விட்டன என்பதை யாராலும் மறுக்க இயலாது. ஒருவன் மூடனாக இருந்து கல்வியில் சிறந்தவனாக மாறலாம்; ஏழையாக இருந்து பணக்காரனாக மாறலாம்; ஒரு மதத்தானாகப் பிறந்து பிற மதத்தானாக மாறலாம். ஆனால் ஒருவன் தான் சாகுந் தறுவாயும் தன் சாதியை மாற்றிக் கொள்ள இயலாது. இத்தகு சூழல் வலுப்பெற்றிருந்த ஒரு காலக்கட்டமாகக் கதைப்பாடற் காலகட்டம் இருந்தது. கதைப்பாடல்களை ஆய்வு செய்யப் புகுபவர்கள் சாதியத்தை விலக்கி வைத்துவிட்டு ஆய்வு செய்ய இயலாது என்ற நிலையை நன்கு உணர முடியும். பல்லவர், சோழர் பாண்டியர், நாயக்கர் என்று படிநிலை ஆட்சி நடந்த தமிழகத் தில் இவர்கள் காலகட்டத்திலேயே ஒவ்வொரு சாதிக்குமுரிய கடமைகளும் உரிமைகளும் வரையறுக்கப்பட்டிருந்ததைக் கல் வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. என்றாலும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற இத்தகு பிரிவினருக்குரிய கடமை களையும் உரிமைகளையும் வகுத்தளித்தவர்கள் அரசகுருமார் களான அந்தணர்களாக இருந்தனர். எனவே குலத்துக்கொரு நீதி எனக் குறிப்பிட்டு அமைந்த மனுதர்ம சாத்திரம், கோதமர் சூத்திரம், சுக்கிரநீதி ஆகிய நூல்கள் சாதிப்பிரிவுகளுக்குள் மிகுந்த ஏற்றத் தாழ்வைக் கற்பிப்பனவாக அமைந்து சில பிரிவு மக்களைக் கீழேயே கிடக்குமாறு செய்தன. இவை கூறும் சில விதிமுறைகளாவன:

1. உயர்ந்த சாதி கன்னிகையைப் புணர்ந்த தாழ்ந்த சாதியானுக்கு மரண வரையில் சிக்ஷை வேண்டியது - மனுதர்ம சாஸ்திரம்.

2. மூன்று வருணத்தாருடைய பெண்களில் எவளையேனும் சூத்திரன் கைப்பற்றினால் அவனுடைய பொருட்களைக் கைப்பற்றுவதோடு அவனுடைய ஆண்குறியையும் அறுத்து விட வேண்டும் - கோதமர் சூத்திரம்

3. பார்ப்பனப் பெண்ணை அரசகுலத்தவரும் திருமணம் செய்ய இயலாது.

4. தெரிந்தோ, தெரியாமலோ, தற்செயலாகவோ பார்ப்பனர்கள் வாழும் அக்கிரகாரம், ஆச்சிரமங்களுக்குள் நுழையும் பறையர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம்.

தமிழகத்தில் வாழ்ந்து வந்த பழமையான குடிகளுள் பறையர் குடியும் ஒன்று.

துடியன் பாணன் பறையன் கடம்பன்என
இந்நான் கல்லது குடியும் இல்லை (புறம். 335)

என்பது இவர்களின் சங்ககாலச் சமூக நிலையாகும். நிலவுடைமை யாளர்களான உயர்குலத்தவரின் பண்ணைகளில் அடிமைகளாக வேலை செய்து ஊருக்கு ஒதுக்குப்புறமான சேரிகளில் வாழும் நிலை கதைப்பாடல்காலச் சமூக நிலையாக இருந்தது.

செய்யும் தொழிலில் தூய்மை, தூய்மையற்றது என்ற நிலை ஊடுருவி அழுக்கில் புகுந்து புறப்பட்டுத் தூய்மைப் பணி செய்வோரையும் தாழ்த்தப்பட்ட சாதியாக மாற்றியது. புலால் உண்ணுபவர், மாட்டுத் தோலுடன் தொடர்புடைய பிற பணிகள் செய்வோர், (தோலில் பறை முதலிய கருவிகள் செய்வோர், செருப்புத் தைப்போர்) தாழ்ந்த சாதியராயினர். வலங்கையில் 98 சாதிகள், இடங்கையில் 98 சாதிகள் என்ற இருபிரிவுகளுக்குள் பெரும்பாலான சாதிகள் அடக்கப்பட்டிருந்தன. இவர்களுக்குள் போட்டியும் பகைமையும் நீடித்த சண்டை சச்சரவுகளும் இருந்தன. சாதி உட்பிரிவுகளும் மணவுறவுகளில் கடுமையான வரன்முறைகளைப் பின்பற்றின. சாதிக்கலப்பு நிகழ்ந்து விடும் முக்கிய ஏதுவாக அமைந்திருந்த மணவுறவுகள் மனம் ஒன்றியவர்களின் மரணப்படுக்கைகளின் மீதமர்ந்தும் காப்பாற்றப்பட்டன. சாதியமைப்புகளுக்குள்ளேயே திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்குக் குடும்பப் பெரியவர்களின் விருப்பம் ஓர் அகநிலைக் காரணம் என்றால் நிலவுடைமைச் சொத்து அந்தச்

சாதிக்குள்ளேயே இருக்கவேண்டும் என்ற ஒரு புறநிலைக் காரணமும் இருந்தமை தெரிகிறது. இதனால் சாதிவிட்டுச் சாதி காதல் கொள்வதும், மணம் புரிவதும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டன. ஆயின் நிலவுடைமைச் சமுதாயத்தின் இத்தகு கட்டுப்பாடுகளை மீறிய காதல்களும் மணங்களும் நிகழ்ந்து, நிலவுடைமைச் சிதறல் காலகட்டம் துவக்கி வைக்கப்பட்ட ஒரு காலகட்டமாகக் கதைப்பாடற் காலகட்டம் திகழ்ந்ததைப் பல கதைப்பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

சாதியும் காதலும்

கதைப்பாடற் காலகட்டத்தில் சாதியத் திருமணங்கள் பெருமளவு நடந்தன என்றாலும் சாதி மீறிய காதல் நிகழ்வுகளும் நடந்தேறியதைக் கதைப்பாடற் பதிவுகள் காட்டுகின்றன. சாதி மீறிய காதலுக்கிருந்த எதிர்ப்புகளைக் காதல் கொண்டவர்கள் அறிந்திருந்தும் தங்கள் காதலில் உறுதியாக நின்றிருக்கின்றனர்.

> **மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**
> **செவ்வி தலைப்படு வார்** (குறள். 129: 9)

என்றார் வள்ளுவர். மலரினும் மெல்லிய அத்தகு காதல்வயப்பட்ட சிலர், தங்கள் காதலில் எத்தகு இரும்புக் கொள்கையுடன் திகழ்ந்தனர் என்பதைக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. சாதிக்குள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற சமூகக் கட்டுப்பாட்டினை மீறியவர்களாக இவர்களை இனம் காணமுடிகின்றது. காதல் உணர்வுகள் இயற்கையானவை. மனிதரால் உருவாக்கப்பட்ட சாதிகளும் சமூகக் கட்டுப்பாடுகளும் செயற்கையானவை. இயற்கையும் செயற்கையும் முரண்படுவது இயல்பான ஒன்றுதான். செயற்கையை மீறி இயற்கை செயல்படும்பொழுது சிக்கல் உருவாகிறது. இயற்கை உணர்வான காதல், ஆற்றலுடன் செயல்படும்பொழுது சமூகக் கட்டுப்பாடுகள் எனும் செயற்கையின் எதிர்ப்பு வெடித்துக் கிளம்பி இயல்பான காதலை நசுக்கிச் சிதைத்துள்ளது. இவ்வகையில் காதலர்கள் மடிந்தாலும் அவர்கள் நிகழ்த்திய சமூகக் கட்டுப்பாட்டு மீறலும் அவர்கள் கொண்ட காதலும் அமரத் தன்மையுடையனவாகக் கதை இலக்கியங்களில் படிந்து பதிந்துள்ளன. காதல் ஆண், பெண் என்ற இரு பாகுபாட்டை மட்டுமே அறியும். சமுதாயப் பிரிவான சாதிப் பாகுபாடுகளை அது அறிந்ததில்லை என்பது இதனால் வெட்டவெளிச்சமாக்கப்பட்டுள்ளது.

சாதி மீறிய காதற் கதைப்பாடல்கள்

சாதி சமூகக்கட்டுப்பாட்டை மீறி நிகழ்ந்த காதலைப் பற்றிக் கூறும் கதைப்பாடல்களாக,

1. காத்தவராயன் கதை
2. குறுக்குளாஞ்சி கதை
3. தடிவீர சுவாமி கதை
4. சிதம்பர நாடார் கதை
5. பூச்சியம்மன் கதை
6. குமாரசுவாமி எனும் சின்னநாடான் கதை
7. சின்னணைஞ்சான் கதை
8. பளிச்சியம்மன் கதை
9. மைக்கேலம்மா கதை

ஆகிய 9 கதைப்பாடல்களை அடையாளம் காட்டலாம்.

காத்தவராயன் கதையில் காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

காத்தவராயன் கதை திருச்சிப் பகுதியில், விஜயநகர ஆட்சிக் காலத்துக்கு முன்பு நடந்த உண்மை நிகழ்வாகும். கதைப் பதிப்புகள் 1873, 1877, 1880, 1886, 1971ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன. நாடகவடிவிலான காத்தவராயன் கதையை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1996இல் வெளியிட்டுள்ளது.[1] குறிப்பிடப்பட்டவை தவிரவும் பல பதிப்புகளை இக்கதை கண்டுள்ளது. சாதிய விதிமுறையின்படி ஒரே சாதிக்குள் மணம் புரியவேண்டும் என்ற சமூகக் கட்டுப்பாட்டை மீறியதையே இக்கதைப்பாடல் கதைக் கருவாகக் கொண்டுள்ளது. நடந்த நிகழ்வு இலக்கியப்படுத்தப்படும் பொழுது பல புனைவுகள் பெற்று வெளிவந்திருக்கின்றது. காலப்போக்கில் நடந்த நிகழ்வின் உண்மையாற்றலைக் குறைக்கும் வண்ணம் கதையில் பல பிற்சேர்க்கைகளும் இடைச்செருகல்களும் உருவாக்கப்பட்டன என்பது நா. வானமாமலை போன்றோரின் கருத்தாகும்.[2]

---

1. கு. இராஜேஸ்வரி, காத்தவராய நாடகம்.
2. நா. வானமாமலை, ஆராய்ச்சி (இதழ்) மலர் 2, இதழ் 2, தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவு (கட்டுரை), மார்ச் 1971, ப.133-134.

கதையின் புனையுந் தன்மைகளையும் பொய்த்தோற்றங்களையும் நீக்கி விட்டு உண்மை நிகழ்வை மட்டும் சுருக்கமாகக் கண்டால் கீழ்க்காணுமாறு கதைச் சுருக்கம் அமையும்.

கதைச் சுருக்கமாவது:

காத்தவராயன், கீழ்ச்சாதி எனக் கருதப்பட்ட பறையர் சாதியைச் சேர்ந்தவன். அவன் கின்னரம் எனும் இசைக் கருவியை இசைத்துப் பாடுவதில் வல்லவன். திருச்சி வடகரை நாட்டுக் குணசீலமங்கலம் புத்தூர் சோமாசிபட்டரின் மகள் ஆரியமாலை என்ற அந்தணர்குலப் பெண், அவனது இசைத்திறமையில் மையல் கொண்டு,[3] தான் பறையர் சாதியான் என்று காத்தவராயன் உரைத்தும்[4] அவனைப் பின் தொடர்ந்து வந்து காதல் கொண்டாள். சாதிக் கட்டுப்பாட்டின்படி அவர்கள் இருவரும் திருமணம் செய்துகொள்வது என்பது இயலாது. எனவே மனங் கலந்த அவர்கள் இருவரும் மணம் செய்துகொண்டு வேற்று நாட்டிலுள்ள பறைச் சேரியில் சென்று வாழ்ந்தனர். இதனை அறிந்து கொண்ட அந்தணர்கள், கீழ்ச்சாதியனான ஒருவன் உயர்சாதிப் பெண்ணை மணம் செய்து கொண்டு உயிருடன் வாழ்வதா என்றெண்ணி அரசனிடம் சென்று முறையிட்டனர். சமுதாய ஒழுக்கம் கெட்டுவிட்டது; மனுதர்மம் அழிந்துவிட்டதென்று ஓலமிட்டனர். காத்தவராயனைப் பிடித்து வந்து கழுவிலேற்றிக் கொல்ல வேண்டும்; இல்லையாயின் தாங்கள் கோட்டை மதிலேறி வீழ்ந்து மாள்வதாக வாதிட்டனர். நாடு காவற் பணி செய்த காத்தவராயனின் வளர்ப்புத் தந்தை சேப்பிளையானிடம் அரசன், சமூகச் சட்டதிட்டங்களுக்குப் புறம்பான செயலைச் செய்த காத்தவராயனைத் தேடிக் கண்டுபிடித்துத் தன் முன் கொண்டு வந்து நிறுத்தவேண்டும் என்று ஆணையிட்டான். இல்லையாயின் சேப்பிளையானைக் கழுவேற்ற நேரிடும் என அச்சுறுத்தினான். தந்தை தேடிக் கண்டறிந்து காத்தவராயனைப் பிடித்து வந்து அரசனிடம் ஒப்படைத்தான். மனங்கலந்த இருவர் மணம் செய்து வாழ்வது

---

3. "என்கின்னாரச் சத்தம் கேட்டு மிகநடந்தாள்
மாதயரே என்பின்னே வாராதே என்றுசொன்னேன்
சோகக் கிளிமொழியாள் என்வசனம் கேட்காமல்
வாரதைக் கண்டு மனதில் பயம் பிடித்தது"
காத்தவராயன் கதை, நா.வானமாமலை, மதுரைப்பல்கலைக்கழகம், 1971.

4. "பார்தனிலே நானும் பறையன் பறையன் என்றேன்" - மேற்படி நூல்.

நியாயமே என்று வாதிட்ட காத்தவராயனை அரசன் கழுவிலேற்றிக் கொல்ல ஆணையிட்டான். ஆணை நிறைவேற்றப்பட்டது.

காதல் கொண்ட இருவர் சாதியால் வேறுபட்டவர்கள்; உயர்வு தாழ்வுடையவர்கள் என்பதால் வேற்று நாட்டிற்குப் பிழைக்கச் சென்ற போதும், தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து கொலைத் தண்டனை அளித்த இந்நிகழ்ச்சி மக்கள் மனத்தை மிகவும் உறுத்தியது. அவர்கள் கதை கதைப்பாடலாக எழுந்தது.

'சாதிக்குள் மணம் புரிய வேண்டும்' என்ற சமூகக் கட்டுப்பாட்டை மீறிய காத்தவராயனையும் ஆரியமாலையையும் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதிகள் எனக் குறிப்பிடலாம். பிற்காலத்தில் கதை நிகழ்வில் கதையின் சீர்திருத்த ஆற்றலைச் சீர்குலைக்கும் வண்ணம் பல மாற்றங்கள், இடைச் செருகல்கள், பிற்சேர்க்கைகள், பல பெண்களை மணந்த காமுகன் எனக் காதலுக்காக உயிர்விட்ட காத்தவராயனின் உயர் பண்பைக் கீழிறக்கும் நிகழ்ச்சிகள் உட்பட அனைத்தும் இணைக்கப் பட்டன. ஆயினும் காதலால் உயர்சாதிப் பெண்ணோடு இணைந்து வாழ்ந்த கீழ்ச் சாதி இளைஞனொருவன் உயர் சாதியாரின் தூண்டுதலின் பேரில் கழுவிலேற்றிக் கொல்லப்பட்டான் என்ற உண்மை நிகழ்ச்சியை மாற்றிட முடியவில்லை; மறைக்கவும் இயலவில்லை. கிடைக்கின்ற சமூகக் கதைப்பாடல்களில் (காதல்வழி சமூகக் கட்டுப்பாட்டை மீறிய வகையில்) காலத்தால் முந்தையது என்ற நிலையில் சாதிப் பேயை அடித்து விரட்ட முனைந்த முன்னவனாக, முதல் புரட்சிக் காரனாகக் காத்தவராயனை நாம் அடையாளம் காட்ட இயலும். சாதிவிட்டுச் சாதி காதல் கொண்டால் மரணமே பரிசாகக் கிட்டும் என்பதை உணர்ந்தவனாக இருந்தும், சமூகக் கட்டுப் பாட்டை மீறிக் காதலுக்கு முதலிடம் தந்து உயிரை விட்டான் காத்தவராயன்.

இவனுடைய சீர்திருத்தச் செயலைப் போற்றும் வண்ணமே அவன் தெய்வமாக்கப்பட்டுக் 'கழுவேற்றப் பாரிவேட்டை' என்ற விழா எடுக்கப்பட்டு வருகின்றது. திருச்சி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பங்குனி, பௌர்ணமி நாளில் இவ்விழா எடுக்கப்பட்டு வருகிறது. இது காத்தவராயன் கழுவேற்றப்பட்ட நாளாகும் (காண்க: காத்தவராயன் கதை, நா. வா. பதிப்பு, ப. 48). காத்தவராயன் 'பரிமளம் (பரிமணம்) என்ற இயற்பெயர் கொண்டவன். 'அனைவரையும் காப்பவன்'

என்ற பொருளில் காத்தவராயனாக ஆகிப் பல ஊர்களில் தெய்வமாகத் திகழ்ந்து வருகிறான். அரசனிடமே சென்று தான் செய்தது நியாயமே என்று வாதிட்டவனை, அநீதியைத் தட்டிக் கேட்டவனைத் தங்கள் வழித் துணைவனாகக் காவல் தெய்வமாக மக்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர்.

குறுக்குளாஞ்சி கதையில் காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகக்கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலிருந்த சுவடி எண் 8425-b குறுக்குளாஞ்சி கதை என்ற கதைப்பாடலை நூலாக்கிப் பதிப்பித்தவர் இந்நூலின் ஆசிரியர் சூ. நிர்மலாதேவி அவர்களாவார். நூல் சென்னை யிலுள்ள ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தால் 1987இல் 'The Wandering Voice' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடியது. இக்கதைப்பாடலின் மூலம் (Original) காலத்தால் முற்பட்டதாக இருந்திருக்கலாம். ஆனால் இச்சுவடிப் பிரதியில் கம்பெனி ஆட்சியின் பின்வந்த வழக்குச் சொற்களான திருச்சினாப்பள்ளி (வரி. 319) ராணுவம் (454) ஆசர் (ஆஜர்) (282) என்பவை இடம்பெற்றுள்ளதால் ஐரோப்பியர் வருகையின்பின் கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பின் இச்சுவடிப் பிரதி எழுதப்பட்டிருத்தல் வேண்டும். 36 X 3 செ.மீட்டர் நீள அகலத்துடன் 24 ஓலைகளில் முழுப் பிரதியாக 633 வரிகளில் அமைந்துள்ளது.

இக்கதைப் பாடலின் கதையாவது:

காஞ்சிபுரத்தில் வாழும் இராமசாஸ்திரி என்பாருக்கு ஏழு ஆண்மக்களும் அருமையாகப் பிறந்த ஒரே ஒரு பெண் மகளுமான பூரணவல்லி என்பாளும் இருந்தனர். இவரது பண்ணையில் வேலைசெய்த முதலியார் சாதி இளைஞனான முத்து என்பானுக்கும்[5] பூரணவல்லிக்கும் தொடர்பு ஏற்பட்டது. வெவ்வேறு சாதியைச் சேர்ந்த இவர்களால் அதே ஊரில் சேர்ந்து வாழ இயலாது என்பதை அறிந்திருந்தனர். எனவே கேரள நாட்டிலுள்ள கொட்டாரக் கரைக்கு ஓடி வந்து செட்டி மக்கள்

---

5. "வாரும்பிள்ளாய் முதலியாரே வார்த்தையொன்று சொல்லக்கேளும்
பண்ணைக்கணக்கரைத் தள்ளிவிட்டோம் பதிலிருந்து பார்க்கவேணும்
சகலகார்வாரும் பார்க்கச்சொல்லித் தானுமங்கே வைத்துக்
கொண்டார்" (வரி. 92-94)

போலக்[6] கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்தி வந்தனர்.[7] பூரணவல்லியின் உடன்பிறந்தோர் ஓடி வந்தவர்களை ஊர், ஊராகத் தேடி வந்தனர். இறுதியில் கொட்டாரக் கரையில் அவர்கள் குடும்பம் நடத்தி வருவதை அறிந்தனர். அந்நாட்டு அரசனிடம் முறையிட்டனர். உயர்ந்த சாதியான தங்கள் பெண்ணைத் தங்கள் பண்ணையில் வேலை பார்த்த, தங்களினும் கீழான முதலியார் சாதி இளைஞன் வைத்து வாழ்க்கை நடத்துவதா? என்று முறையிட்டனர்.[8] முத்துவைத் தூண்டி லிலிட்டுக் கொல்ல ஆணை பிறப்பிக்க வேண்டும்; இல்லாவிடின் தாங்கள் எழுவரும் வாளூன்றி அதில் பாய்ந்து மடிவோம் என உறுதியாகக் கூறினர்.

சூத்திரன் ஒருத்தனுக்கா – நாமள்
சுமக்கலாமோ ஏழுபழி (வரி 387 - 388)

எனச் சிந்தித்த அரசன் முத்துவைத் தூண்டிலிலிட ஆணை யிட்டான். சாதி விட்டுச் சாதி காதல்கொண்டு, நாடு விட்டு நாடு வந்து வாழ்ந்து விட்ட அவன் சாதிய அமைப்பையும் அதன் கட்டுக்கோப்பையும் மீறிவிட்டான். அவனை உயிரோடு வாழ விட்டால் வருங்காலச் சந்ததியினரும் அவனைப் போன்று தவறு செய்யத் துணிவு பெற்று விடுவார்கள். சாதிக் கட்டுக்கோப்பு கலையும். சாதியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும். நிலவுடைமை அமைப்புகள் சீர்குலையும். எனவே அவனை உயிரோடு விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த அவர்கள்

---

6. "பாப்பாத்தி வேசம்விட்டுச் செட்டிச்சி வடிவுகொண்டாள்
செட்டிச்சி உடைஉடுத்தி செட்டிச்சி தலைமுடித்து
செட்டிச்சி நகைபூட்டி செட்டிச்சி தாலிகட்டி
மாப்பிள்ளையும் பெண்ணும்போல வாழ்ந்திருக்கும் நாளையிலே
(வரி. 265-268)

7. கொட்டாரக்கரை ராசாவுட கோட்டையிலே வந்திறங்கி
செட்டியள் தெருவதிலே விடுதிகளுந் தானமத்தி
விடுதிகளுந் தானமத்தி வீத்திருந்தார் ரெண்டுபேரும்" (வரி. 261-263)

8. பண்ணைக்கணக்கைப் பார்க்கவே வைத்திருந்தோ மய்யா
அப்படியிருக்கும் நாளையிலே ஆனதொரு முதலியும்தான்
. . . .
சிறைகடத்திக் கொண்டுவந்தான் சண்டாள முதலியும்தான்
எங்கள் குலத்துக்கெல்லாம் இழுக்குவைத்துக்
கொண்டானே சண்டாளன்" (வரி. 365-370)

அவனைப் போல் தவறு செய்பவர்களுக்குத் தக்க எச்சரிக்கையாக அமையும் வண்ணம் அவன் கோலத்தை அலங்கோலமாக்கி னார்கள்; முகமெங்கும் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தினார்கள்; முடியை உச்சிக் கொண்டையாய் முடித்தார்கள்; எருக்கலை மாலையைக் கழுத்திலிட்டார்கள்; ஊர்வலமாக இழுத்து வந்தார்கள். பின்னர் பலரும் காணும் வண்ணம் பலருக்கும் பாடமாய் இருக்கும்வண்ணம்,

> வட்டப்பிலா மரத்தில் வாய்த்ததொரு தூண்டிலிலே
> (வரி. 405)

போட்டார்கள். உடலெங்கும் தூண்டில் பாய (கொக்கி போன்ற அமைப்புகள்) மண்டையிலே பட்ட தூண்டில் மறுபுறத்தில் பாய (வரி. 407) தொண்டையிலே பட்ட தூண்டில் துளைத்துக் கொண்டு உட்செல்ல (வரி. 408) உயிர் வேதனைப்படத் துடிதுடித்துச் சாக வைத்தனர். முத்து தூண்டிலிலிடப்பட்டதால் தூண்டிமுத்தாகவும் ஆனான். கீழ்ச்சாதியானுடன் வாழ்ந்து கறைப்பட்டுப் போன தங்கள் தங்கையையும் ஒரே வெட்டாக வெட்டிக் கொன்றனர்.

சாதியில் உயர்சாதி, கீழ்ச்சாதி என்ற பிரிவினைக் கயிறு வலுவானதாகவும் இடைப்பட்ட எல்லைக் கோடு அழுத்தமான தாகவும் இருந்திருக்கின்றது. அக்கயிறு அறுக்கப்படும் பொழுதும், கோடு அழிக்கப்படும் பொழுதும் கீழ்ச்சாதியினரான எளியாரை மேல்சாதியினரான வலியார் கடுமையாகத் தண்டித்திருக்கின்றனர். குறைந்த அளவு தண்டனை, அதிக அளவு தண்டனை என்ற வரன்முறைகளெல்லாம் மறுக்கப்பட்டு, ஒரே தண்டனையாக மரண தண்டனையே அளிக்கப்பட்டிருக்கிறது. ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்களும் இதற்கு முழு உடந்தையாக இருந்திருக்கின்றனர். ஆனால் சாதிவிட்டுச் சாதி காதல் கொண்டு நாடுவிட்டு நாடு வந்து வாழ்ந்த போதும் தேடிக் கண்டறியப் பட்டுக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டவர்களின் சோக முடிவு மக்களை ஆழமாகப் பாதித்திருக்கிறது. அதுவே அவர்கள் கதையைப் பாடலாகப் பாடத் தூண்டியுள்ளது. வாழும்பொழுது காதலால் சமூகக் கட்டுப்பாட்டை மீறியதற்காகப் பலி வாங்கப் பட்டவர்கள் மரணத்தின் பின் கொடுந் தெய்வங்களாக வந்து தங்கள் மரணத்துக்குக் காரணமானவர்களைப் பழி வாங்கிய தாகவும், பாடி மன ஆறுதல் கொண்டனர் மக்கள். தெய்வமே

அவர்களுக்குப் பழி வாங்க வரம் அளித்ததாகவும் பாடினர்.[9] கொலையான முத்துவும் பூரணவல்லியும் குறுக்குளாஞ்சி என்ற கொடுந்தேவதையாகி, ஏழு பேரான அண்ணன்மார் சாஸ்திரிகளை எதிர்கொண்டு குத்திக் கொன்றதாகவும் (445) கொட்டாரக்கரை ராசாவுடைய கோட்டையைத் தகர்த்து, கோவிற் காலைப் பிடுங்கி ஆனைப்படை, குதிரைப்படை மற்றும் ராணுவத்தையும் அடியோடு அழித்ததாகவும் பாடல் வரிகள் (450-454) அமைந்துள்ளன.

சமூகச் சீர்திருத்த நோக்கோடு சாதி என்ற வேலியைத் தகர்த்தெறிந்த மனமொத்த காதலர்களுக்கு மரணமே இறுதி முடிவு என்ற அச்சத்தை அகற்றும் போக்கோடு அவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர்; வணங்கப்படுகின்றனர். சாதிக் கட்டுப்பாட்டுக்கு விழுந்த சம்மட்டி அடியாக இதனைக் கொள்ளலாம். இவ்வாறாகக் காதல் வழி சமூகக் கட்டுப்பாட்டை மீறிய முத்துவும் பூரணவல்லியும் கதைப்பாடல் மூலம் இலக்கியமாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என உறுதியாக உரைக்கலாம்.

தடிவீர சுவாமி கதையில் காதல்வழியிலான கட்டுப் பாட்டு மீறல்

இக்கதைப்பாடல் ஓலைச் சுவடியிலிருந்து பதிப்பிக்கப் பெற்றுள்ளது. திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் சுவடி உள்ளது. இச்சுவடிக்கான வேறு பிரதிகள் எதுவும் கிடைக்கவில்லை. சுவடி எண் 8440. இச்சுவடிப்பிரதி கொல்லம் ஆண்டு 1054 இல் அதாவது கி.பி. 1879இல் எழுதப்பட்டிருக்கிறது. சுவடியில் காணப்படும் அகச் சான்றுகளின்படி கதை நடைபெற்ற காலம் 17ஆம் நூற்றாண்டு என நூலில் நிறுவப்பட்டுள்ளது. இச்சுவடியைப் பதிப்பித் திருப்பவர் முனைவர் சூ. நிர்மலா தேவி அவர்களாவார். 1996இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

---

9. இந்தப் பாதகத்தைப் பார்த்தார்கள் - அங்கே பார்பதியும் சிவனாரும்
தூண்டி முத்து முதலியாருக்கு - அவர்கள் சொன்னவரங் குடுத்தார்
சொல்லவரம் வெல்லவரம் குடுக்கவரம் அழிக்கவரம்
கோடிவரத்தைத் தான் அவர்க்குக் கொடுத்தார் சிவனாரும்"
(வரி. 409-412)

கதைச் சுருக்கமாவது

செந்திநகர் எனப்படும் திருச்செந்தூர்ப் பட்டணத்தைச் சேர்ந்த ஏழூர்களுக்குட்பட்ட[10] நிலங்களில் பயிர் செய்து வாழ்பவர்களான பள்ளர்களின் தலைவன் செம்பாரக் குடும்பன். அரண்மனையைச் சேர்ந்த இவ்வூர் நிலங்களில் பள்ளர்களை வாரத்துக்குப் பயிர் செய்ய வைத்து, விளைச்சல் பயனைக் கடமை தவறாது செலுத்தும் பெரும் பொறுப்புடையவனாக அவன் திகழ்ந்தான்.[11] அவனது மகள் சோணமுத்து. இந்த ஏழூர்ப் பள்ளர்களின் அழுக்குத் துணிகளை வெளுத்துத் தருபவர் புரத வண்ணார் சாதியினரான நீல வண்ணான், புரதமங்கை தம்பதி யினர். அவர்களின் மகன் வாசமுத்து. மந்திரப் பயிற்சிகளில் வல்லவனான அவன் மந்திரமூர்த்தி எனப் பெயர் பெற்றான். அவன் தாமிரவர்ணிக் கரையில் குடிசை அமைத்துத் துணி வெளுக்கும் தொழிலைச் செய்துவந்தான். முதற் பூப்படைந்த சோணமுத்து மாற்றுச் சேலை பெற வண்ணார்துறைக்கு வந்தாள். வாசமுத்துவும் சோணமுத்துவும் மாற்றுச் சேலையுடன் மாறிப் புக்கு இதயம் எய்தினர். சோணமுத்துவின் அண்ணன்மார் தங்களிடம் அழுக்குத் துணி எடுத்து வெளுத்துத் தொழில் புரியும் ஈன சாதியைச் சேர்ந்த ஒருவன் தங்கள் தங்கையை விரும்புவதா எனக் கொதித்தெழுந் தனர். குடிசைக்குள் இருவரும் இருந்தபோது கைப்பிடியாய்ப் பிடித்துக் கட்டி அப்பகுதி ஆட்சியாளராக இருந்த வடமலையப்ப பிள்ளையிடம் ஒப்படைத்தனர். வாசமுத்துவை வெட்டிக் கொல்ல ஆணையிடுமாறு வேண்டினர். இத்தகு தவறு செய்த ஒருவன் உயிரோடு இருக்கலாகாது என்று முடிவெடுத்த வடமலையப்ப பிள்ளை அவனை வெட்டிக் கொல்ல ஆணையிட்டார்.[12] சோணமுத்து தற்கொலை செய்து கொண்டாள்.

---

10. ஏழூர்களாக அமைபவை முருகன் குறிச்சி, முளிக்குளம், வெள்ளக்கோயில், தெப்பக்குளம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, வண்ணார்ப்பேட்டை என்பன ஆகும்.
-தடிவீரசுவாமி கதை, ப.124.

11. "அஞ்சுக்கு ரெண்டுவாரம்
அரமனைக்குத் தானளந்து
ஏழுஊரு பச்சேரிக்கும்
(ந)ன்குல மேபுரந்து" (வரி. 6-7)

12. "பொல்லாத துஷ்டனிவன்
பூமியிலே இருக்கொண்ணாது
வெட்டும்படி உத்தரவு
வீரமன்னர் தானுரைத்தார்" (வரி. 391-392)

இக்கதையில் வரும் தலைவன், தலைவியாகிய மந்திர மூர்த்தி - சோணமுத்து ஆகிய இருவரும் கீழ்ச் சாதியைச் சேர்ந்தவர்களே. ஆயினும், ஒருவர் மற்றவரின் அழுக்குத் துணிகளைத் துவைத்துத் தருபவர் என்ற நிலையில் ஒரு படி கீழிறங்கி மற்றவர் 'மேல்' என்றாகிவிடுகிறார். அழுக்குத் துணிகளைத் துவைத்துத் தருவதால் அவன் கீழானவனே என்பது கதைப்பாடலில் அழுத்தமாகச் சுட்டப்பட்டுள்ளது. தங்களுக்குள் மனமொத்த உறவு என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்று தெரிந்தும் மனம் ஒன்றிய காதலுக்கு ஆட்பட்டுச் சொந்த ஊரிலேயே மறைவு வாழ்க்கை நடத்தினர். அந்தரங்கம் அரங்கத்துக்கு வந்தபோது சமூகச் சட்டதிட்டங்களை எதிர் கொள்ள இயலாது இருவரும் அவற்றுக்குப் பலியானார்கள்.

இக்கதைப்பாடல் குறித்து, "தடிவீர சுவாமி கதை, சாதீய சங்கத்தின் சலனங்கள் குறித்த சில கருத்துகள்" என்ற தலைப்பில் திரு. கோ. கேசவன் அவர்கள் (புலமை இதழ், டிசம்பர் 1998) ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரை தம் மறைவுக்குமுன் இறுதியாக அவர் எழுதியதாகும். அவர் குறிப்பிடும் கருத்துகள் சில:

''சாதீயப் படிநிலை உணர்வு தாழ்த்தப்பட்ட மக்களிடமும் குடிகொண்டிருக்கும் அளவுக்குச் சாதீயத்தின் தாக்கம் உச்சத்தில் இருந்தது. சாதீயமே ஒரு சமூக அமைப்பு வடிவமாகவும் சாதீயமே அனைத்து சமூக நிகழ்வுகளின் அளவு கோலாகவும் இருந்த ஒரு காலகட்டமாக இக்கதைப்பாடற் காலகட்டம் திகழ்ந்தது. இக்கதைப்பாடல் சமூக மீறல் சிந்தனைகளை உள்ளடக்கியதாக உள்ளது. சாதீய சமூகத்தில் ஏற்பட்ட சலனங்கள் சமூக மீறல்களாக உள்ளன. தனிநபர் அளவிலான இத்தகைய மீறல்கள் சமூக ஏற்புடைமை பெற்றவை யாக மாறிட இயலவில்லை'' (ப. 90). எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இங்குச் சாதியம் என்பது என்ன? சாதிய சமூகம் என்பது என்ன? இத்தகு சமூகத்தின் அடித்தளமாக அல்லது ஆணிவேராக அமைந்தவை எவை? என்ற கேள்விகள் எழுகின்றன.

சாதியம் என்பது ஒரு சாதி இன்னொரு சாதியுடன் உற்பத்தி உறவுக் கட்டமைப்பிலும் சமூக உறவுக்கட்டமைப்பிலும் இயைந்தும், முரண் கொண்டும் சமுதாயத்துக்கு ஆற்றும்

கடமைகளையும் சமுதாயத்திலிருந்து பெறும் உரிமைகளையும் சாதிய அளவில் வரையறை செய்து கொள்வதாகும் என விளக்கம் அளிக்கின்றனர்.

சாதிய சமூகம் என்பது சாதிகளை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பாகும். இத்தகு சாதிய சமூகத்தின் அடித்தளமாக, ஆணிவேராக அல்லது குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களாக அமைபவை,

1. பிறப்படிப்படையில் தொழிலை நிர்ணயம் செய்தல்
2. அக மணமுறை எனும் சாதிக்குள்ளேயே மணம் செய்து கொள்ளுதல்
3. தூய்மை சார்ந்த தொழிலடிப்படையில் படிநிலை வரிசையாகச் சாதிகளை அமைத்தல்
4. தூய்மையற்ற தொழிலில் ஈடுபடுவோரை, புலால் உண்போரைத் தீண்டாதாராக்குதல்

என்பவையாகும். பல்லவர் காலத்தில் உருவான இத்தகு சாதிய சமூக அமைப்பு சோழர் காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. சாதிய அம்சங்கள் மிக இறுக்கமாகச் சோழர்காலத்தில் செயல்படுத்தப் பட்டன. சாதிக்குரிய தொழிலை ஒவ்வொருவனும் செய்தே ஆக வேண்டும்; தொழிலைக் கைவிட்டு, அல்லது செய்ய மறுத்து எங்கும் ஓடி ஒளிய முடியாது என்ற நிலை இருந்தது. சாதிக்குரிய தொழிலைச் செய்யாமல் ஓடியவர்களைச் 'சிவத் துரோகிகள்' என அடையாளமிட்டுத் தண்டித்தனர். சாதிக்குள் மணம் செய்வதே சமூக ஒழுக்கம் எனக் கருதப்பட்டது. சாதியப் படிநிலையை "அந்தணரிலிருந்து புல்லுப் பறிக்கிற பறையன் வரை" என ஒரு கல்வெட்டு விளக்கிச் சொல்கிறது. ஊர்க்கேணி-பறைக்கேணி; ஊர்ச் சுடுகாடு - பறைச் சுடுகாடு எனச் சாதிய சமூகம் தீண்டத் தகுந்தார் - தீண்டத் தகாதார் என இரண்டாகப் பிளவுபடுத்தப் பட்டிருந்தது.

சோழன் காலத்துக்குப் பின் வந்த முகம்மதியர், நாயக்கர், ஐரோப்பியர் ஆட்சிகளின் போது, அரசியல் சூழல்களினாலும் உற்பத்தித் தொழில்நுட்ப மாற்றங்களினாலும் சமூகக் கட்டமைப்பில் ஆங்காங்குச் சில மீறல்கள் தலைதூக்கின. ஆயினும் இத்தகு மீறல்கள் தனிநபர் அளவினதாக நின்றதையே

சமூகக் கதைப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இத்தகு சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை ஆட்சியதிகாரத்திலிருந்தவர்கள் முதலில் ஏற்றுக் கொள்வதுபோலக் கதைப்பாடல்கள் சித்திரித் துள்ளன. அரசுக்கெதிராகத் துணிந்து கருத்துச் சொல்ல இயலாத நிலையில் கதைப்பாடல் புலவர்களும் இருந்தனர் என்பதையே இது காட்டுகின்றது. காத்தவராயன் கதை, குறுக்குளாஞ்சி கதை போன்றவற்றில் சாதிக்கட்டுப்பாட்டை மீறியவர்களைத் தண்டிக்க அரசன் மனம் ஒப்பவில்லை என்றே பாடப்பட்டுள்ளது. கோட்டை மதிலேறி வீழ்ந்து மாள்வோம் என்று அந்தணர்கள் சொன்னபின்தான் அரசன் காத்தவராயனைக் கழுவேற்ற ஆணையிட்டான். அதே போன்று குறுக்குளாஞ்சி கதையிலும் முத்துவை மன்னித்து விட்டுவிடலாம் என்று பூரணவல்லியின் ஏழு அண்ணன்மாரிடமும் அரசன் முதலில் கருத்துக்கூறியதாக உள்ளது.

"இவனையிப்பங் கொன்றுபோட்டால் வந்த இழுக்குகளும்
போய்விடுமோ
இவன் கொண்டு வந்த பெண்ணை – நாமள் – இவனுக்கு
விட்டிடுவோம்
உங்களுக்கு கலியாணம் உண்மையாய்ச் செய்து வைப்பாம்
ஏழுபேர்க்கு ஏழுஊரு – நாம் – இப்போது விட்டுத் தாரோம்
வாசல் பிரதானியாக இப்பம் ஏழு பேரும் இரிங்களிங்கே
அவனையிப்பம் விட்டிடுங்கள்– என்று – ஆதரவாய்க்
கேட்டாரே" *(376 – 381)*

இவ்வாறு ஆட்சியிலிருப்பவர்கள் முதலில் சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களை முதலில் ஏற்றுக் கொள்வதுபோலக் காட்டி இறுதியில் அத்தகு மீறல்களை, தனிநபர் புரட்சியை, தனி நபரைக் கொன்றுவிடுவதன் மூலம் சாதியத்தைக் காப்பாற்றியே வந்துள்ளனர் என்பது வெளிப்படத் தெரிகின்றது.

ஆயினும் தனிநபர்களைக் கொன்றழித்து விடுவதன் மூலம் சமூகக் கட்டுப்பாட்டு மீறல்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை என்பதையே அவர்களைத் தெய்வமாக்கிய மக்கள் உணர்த்தினர். வாசமுத்து என்ற மந்திரமூர்த்தியைக் கையில் தடியுடன் காவல் காத்து வரும் தடிவீரசுவாமி என்ற காவல் தேவதையாக்கி வணங்கி வருவது கதைப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

சிதம்பர நாடார் கதையில் காதல்வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

சாதி பரந்த மனித உணர்வுகளில் ஒன்றான காதலை ஒடுக்கியுள்ளது. சாதிக் கட்டுப்பாடுகள் உச்சத்திலிருந்த காலமான கதைப்பாடற் காலகட்டத்தில் அதற்குப் பலியானவர்கள் பலர் என்பதைக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. தாழ்ந்த சாதியில் பிறந்தவர்களே சாதிக்கட்டுப்பாட்டை மீறியவர்கள் என்ற நிலையில் சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்தார்கள்; உயிரையும் பலிகொடுத்தார்கள்.

மாண்புடைய மானிட உணர்வான காதல் சாதிக் கட்டுப்பாட்டுக்குள் ஒடுங்கிக் கிடக்க மறுத்து முளைவிட்டுத் துளிர்த்து விருட்சமாக வளர்ந்துள்ளது. சாதிக்கட்டுப்பாடு என்ற பெயரில் இறுதியில் அது வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளது. இதற்குத்தக்க சான்றுகளாகக் கதைப்பாடல்களைக் கண்டோம். சான்றாக உள்ள மற்றும் ஒரு கதைப்பாடலாகச் சிதம்பர நாடார் கதை அமைந்துள்ளது.

சுவடியிலிருந்து நூலாக்கப்பட்டுள்ள இக்கதைப்பாடலின் பதிப்பாசிரியர் சு. தங்கத்துரை ஆவார். 1982இல் கதை பதிப்பிக்கப்பட்டுள்ளது. இக்கதைப்பாடல் குமரி மாவட்டம் மதுசூதனபுரம் முத்தாரம்மன் கோயிலில் வில்லுப்பாட்டாகப் பாடப்பட்டு வருவதாகப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

சிதம்பர நாடார் கதையின் கதையாவது:

குமரி மாவட்டம் பள்ளத்தூரைச் சேர்ந்த செல்லையா நாடார் - நாடாச்சியம்மையின் ஒரே அருந்தவப் புதல்வன் சிதம்பர நாடார். தக்க கல்விப் பயிற்சியுடன் அடவுமுறைகள், யானையேற்றம், குதிரையேற்றம், வாள் பயிற்சி என அனைத்துப் பயிற்சிகளையும் பெற்ற சிதம்பரநாடார் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். பறக்கைக் காடுவரையும் இருந்த ஊர்களின் கிராம முன்சிப் ஆகப் பணியாற்றிய சிதம்பர நாடார் குதிரையில் புங்கடி மடம் வரையும் நாடோறும் வந்து செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். (புங்கடிமடம் என்பது தற்போது பறக்கைக் கால்நடை மருத்துவமனை உள்ள இடத்தில் இருந்ததாகக் கருதப்படுகிறது). அவ்வாறு வந்து செல்லும் ஒரு நாளில் நச்சரவால் தீண்டப்பட்டதால் உயிர்விட்டதாகக் கருதப்பட்ட பார்ப்பன சாதிப்பெண்ணான பாப்பாத்தி என்பாளை

மயானத்தில் அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட்ட நிலையில் கண்டார் நாடார். பாம்பின் கொடு விசத்தை அகற்றி அவளின் உயிரைக் காப்பாற்றிய நாடாரரை உள்ளன்போடு விரும்பி வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொண்டாள் பாப்பாத்தி. நாடாரின் சொந்த ஊரான பள்ளத்தூரில் வந்து கணவன், மனைவியாக வாழ்க்கை நடத்தியதுவரைக்கும் அவர்களுக்கு எவ்விதச் சிக்கலுமில்லாமல் இருந்தது. ஆறுமாதக் கருவைச் சுமந்த பாப்பாத்தி, தன் தாய் தந்தையரைக் காண வேண்டும் என்று அவாவுற, அவளை அழைத்துக் கொண்டு நாடார் பறக்கை வந்தபோது சிக்கல் தோன்றியது. இறந்துவிட்டாள் என்று கருதிய பெண் உயிரோடு இருப்பதும், அவள் ஒரு நாடார் சாதி இளைஞனைத் திருமணம் செய்துகொண்டு தங்கள் அகரத்திற்கே வந்து பலநாட்கள் தங்கி இருப்பதையும் காணச் சகியாதவர்களான பார்ப்பனர்களும் வெள்ளாள இனத்தவர்களும் இத்தகு ஒரு சாதிக் கலப்புத் திருமணத்தைத் தீவிரமாக எதிர்த்தனர்.

> வெள்ளாள ரானவர்கள் வேதியர்க்குத் தானுரைத்தார்
> நாடாந்தா னானவனும் நம்மோடிருக்க முறையுண்டோ
> (வரி. 1226 - 1227)

என்றனர்.

> நம்முடைய அகரமதில் நாடானும் பெண்ணுவைத்து
> இங்கேதான் வந்திருக்க எல்லோருக்குஞ் சம்மதமோ
> (வரி. 1237 - 1238)

என்று அந்தணரும் வினவினர்.

> எப்படியும் இவன்றனையும் இங்கு வைக்க லாகாது
> சர்ப்பத்தின் குட்டியிது தலையறுக்க வேணுமென்றார்
> வெள்ளாளர் முதலாக மிக்கபுகழ் வேதியரும்
> எல்லோரும் நாடார்மேல் இவர்கள்வெகு வர்மமானார்
> வர்மம்வைத்து வேதியர்கள் வாய்த்த நீட்டு தானெழுதி
> (வரி. 1243 - 1247)

வஞ்சி நாட்டு மன்னனிடம் ஒட்டன் மூலமாக அனுப்பினர். செய்தியறிந்த நாடாரும் தக்க ஒரு நீட்டெழுதித் தன் சிறுக்கனிடம் கொடுத்தனுப்பினார். இரண்டையும் வாங்கிப் படித்தறிந்த மன்னர் வெட்ட வேண்டாம் என்று ஆணையிட்டு அனுப்பினார்.

இணைந்தே திரும்பி வந்த ஒட்டனும் சிறுக்கனும் இடைவழியில் சிறிது தூங்கி இளைப்பாறினர். முன்னதாக எழும்பிய அந்தணர் அனுப்பிய ஒட்டன் சிறுக்கனை விட்டுவிட்டு, விரைவாகச் செய்தி கூற வந்தான். இதற்குள் வேதியர்களும் , வேளாளர்களும் மாமனாராகிய மறையவர் வீட்டிலிருந்த நாடாரைப் பிடித்துப் பின்கட்டாகக் கட்டி ஒட்டனை எதிர்பார்த்திருந்தனர். ஒட்டன் தூரத்தில் வந்துகொண்டே 'வெட்ட வேண்டாம்' எனச் சைகை காட்டியதைத் தவறாகப் புரிந்துகொண்ட அவர்கள் நாடாரை இரு துண்டாக வெட்டினார்கள். செய்தியறிந்த பாப்பாத்தி நாவைப் பிடித்திழுத்துத் தற்கொலை செய்துகொண்டாள். இருவரும் தெய்வமாக வணங்கப் பெறும் வரம் பெற்றார்கள்.

இக்கதையில் மனத்தால் ஒன்றுபட்ட இருவரும் உயர்சாதி-கீழ்ச்சாதி என்ற சாதிவேறுபாடு காரணமாகக் கொல்லப்படு கின்றனர். இதிலும் முன்னர்க் கூறிய கதைப்பாடல்கள் போலக் கீழ்ச் சாதியானே தண்டனைக்குட்படுத்தப்படுகிறான். பிற கதைப் பாடல்கள் போலவே மன்னர் இக்கொலைக்கு உடந்தையில்லை என்றே காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆளும் வர்க்கத்தைக் குற்றம் சாட்டும் போக்கு தவிர்க்கப்பட்டுள்ளது. ஒட்டன் வெட்ட வேண்டாம் என்று கூறியதைத் தவறாக வெட்ட வேண்டும் என்று புரிந்து வெட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. சிதம்பர நாடார் தன் மரணத்துக்குக் காரணமான ஒட்டனைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. பின் இங்கு வெட்ட வேண்டாம் என்று கூறிய ஒட்டனைக் கொல்லவேண்டியது ஏன் என்பது கேள்விக்குறியாகி விடுகிறது. வேதியர், வேளாளர் மீது குற்றம் இல்லை என்ற முறையிலும் கதைப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. இத்தகு அமைப்பு மூலம் உயர்குல வர்க்கத்தை நேரடியாகக் குற்றம் சாட்டுவது தவிர்க்கப்பட்டுள்ளது. என்றாலும் நாடார் சாதி இளைஞர் - அந்தணர் குலப்பெண்ணின் வாரிசு வயிற்றிலிருந்து இறங்கும் முன் அவர்கள் கதை முடிக்கப் பட்டதைக் கதைப்பாடல் தெளிவாகச் சொல்லிவிடுகிறது. சாதி மீறிய காதல் வாழ்க்கையை, கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவர்கள் தம் மரணத்தைத் துச்சமெனக் கருதிசெ செயல்பட்டுள்ளார்கள். இவர்களின் சாவு நியாயமற்றது என்பதை மக்கள் உணர்ந்தார்கள். எனவே அவர்களைத் தெய்வமாக்கி வணங்கினார்கள். மரண தண்டனை அளித்த வேதியர்களும் வேளாளர்களும் கூட அவர்களைத் தெய்வமாகத் தொழுதமையைக் கதைப்பாடல் காட்டுகிறது.

"பூசைசெய்ய வேணுமென்று புகழ்பெரிய வேதியர்கள்
வெள்ளாளர் மக்களுமே விரைவுடனே தான்கூடி
பங்குனி மாசமதில் பதினெட்டாந் தெய்தியில்
வேண்டும்வண்ணம் பூசைசெய்ய விரைவுடனே கூடி
தக்கபடி சாமான்வாங்கித் தான்செய்தார் பூசையது"
(1488 – 1492)

எனும் கதைப்பாடல் வரிகள் காணத்தக்கன. நாடார் இனத்தவர்களும் மறைந்த சிதம்பரநாடாரையும், பாப்பாத்தியையும், சிறுக்கனையும் கோயிலில் வைத்துக் கும்பிட்டதாகக் கதைப் பாடல் கூறுகிறது.

கண்டவுடன் நாடார்கள் கருதிஒன்றுபோலக் கலந்து
சிறந்த நல்ல நாடார்க்குஞ் சேய்ந்தநல்ல பாப்பாத்திக்கும்
சிறுக்கனுக்கு மாகவங்கே திருக்கோவில் கட்டினாரே
(1515 – 1517)

என்றுள்ளது.

மதுசூதனபுரத்தில் இவர்கள் குடும்ப வழிபாட்டுத் தெய்வமாக வழிபடப்படுவதாகவும், நாடார், பாப்பாத்தி, சிறுக்கன் என்ற மூவருக்கும் தனித்தனிப் பீடங்கள் இவ்வூர்ப் பொதுக் கிணற்றுக்கு வடக்குப் பக்கத்தில் உள்ளதாகவும், பறக்கையிலுள்ள மதுசூதனபுரக் கோயிலின் நிலவறையில் சிதம்பர நாடார், பாப்பாத்தியின் வழிபாட்டு உருவம் உள்ளதாகவும் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இக்கதைப்பாடல் நிகழ்ச்சிகள் உண்மையில் நடந்தவை என்பதற்கான சான்றுகளும் இப்பதிப்பில் நிறுவப்பட்டுள்ளன. சிதம்பர நாடார் வாழ்ந்த காலம் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு மேல் ஆகலாம் என்றும் கருத்து கூறப்பட்டுள்ளது. முந்நூறு ஆண்டுகட்கு முன் இருந்த சாதிக் கட்டுப்பாட்டையும், கட்டுப்பாட்டு மீறலையும் மீறலுக்குக் கிடைத்த தண்டனையையும், அதன் பின்விளைவுகளையும் விளக்கும் சிறந்த நாட்டார் இலக்கியச் சான்றாக இக்கதைப் பாடலைக் கருதலாம்.

பூச்சியம்மன் வில்லுப்பாடலில் காதல்வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

திருநெல்வேலி மாவட்டத்தில் 1881ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி பள்ளர், பறையர் சாதியினர் 17

சதவீதமாகவும், மறவர் 9 சதவீதமாகவும், நாடார் 18 சதவீதமாகவும், வேளாளர் (பிள்ளைமார்) 8 சதவீதமாகவும், பிராமணர் 4 சதவீதமாகவும் இருந்தனர் எனத் தெரிகிறது. குறைந்த சதவீதமுடைய வெள்ளாள, பிராமண நிலக்கிழார்களின் ஆதிக்கத்தில்தான் நிலங்களும், கிராமங்களும் இருந்தன எனத் தெரிகிறது. அவர்களுக்குரிய வளமான நிலங்களில் அவர்களை விட எண்ணிக்கையில் அதிகமான உழைக்கும் வர்க்கமான பள்ளர், பறையர், நாடார், மறவர் ஆகிய சாதியினர் அவர்களை அண்டி வாழ்பவர்களாக இருந்தனர். நிலக்கிழார்களாக இருந்தவர்கள் தங்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு ஊறு விளையும் என்ற எண்ணத்தினால் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கிடையில் நெருக்கமான பிணைப்பு ஏற்படாமல் பார்த்துக் கொண்டனர். சாதி மீறிய பாலியல் உறவுகளைக் கண்டும் காணாமலும் விட்டுவிட்டாலும் திருமண உறவுகளைப் பொறுத்த வரையில் சாதி மீறிய திருமணங்களைக் கடும் குற்றமாகக் கருதினர். இத்தகு சமூக நியதிகளை மீறியவர்களைக் கொலை செய்வதன் வாயிலாகப் பிறரை எச்சரிக்கவும் செய்துள்ளனர். சாதியத் தனித்துவத்தைப் பாதுகாப்பது அன்றைய சமூக நியதியாக இருந்ததால் கீழ்ச்சாதி இளைஞன் உயர்சாதிப் பெண்ணோடு மணஉறவு கொள்வதை மட்டுமல்லாது உயர்சாதி இளைஞன் கீழ்ச்சாதிப் பெண்ணோடு மணஉறவு கொள்வதும் தடுக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் அவரவர் சாதிக்குள்ளேயே திருமணம் நிகழ்த்தப் பெறல்வேண்டும் என்பது நிலைநிறுத்தப் பட்டது.

சாதியப் படிநிலையில் பள்ளர்களைவிடவும் ஒரு படி மேலான மறவர் சாதியைச் சேர்ந்த இளைஞனொருவன் தன்னிலும் கீழான பள்ளர் சாதிப் பெண்ணை மனைவியாகக் கொண்டு வாழ்ந்ததால் கொல்லப்பட்ட கதையே பூச்சியம்மன் வில்லுப்பாடலாகும்.

பூச்சியம்மன் வில்லுப்பாடலின் கதைச் சுருக்கமாவது:

திருநெல்வேலி - தூத்துக்குடி நெடுஞ்சாலையிலுள்ள வல்லநாடு என்ற ஊரைச் சேர்ந்த பூலுத்தேவர் - பேச்சியம்மாள் தம்பதியினரின் ஒரே மகன் முத்தையா என்ற பட்டபிரான். தக்க வயதில் கல்விப் பயிற்சி, ஆயுதப் பயிற்சி, மல்லடவு, ஆனை யேற்றம், குதிரையேற்றம் போன்ற அனைத்தும் கற்றறிந்தான்.

முத்தையா. தன் சாதித் தொழிலான காவல் தொழிலைச் சிறப்பாகச் செய்து வந்தான். அத்துடன் மாடுகளை வாங்கி விற்கும் வணிகத்தையும் செய்த அவன், ஒரு முறை தென்காசியிலிருந்து கொல்லம் செல்லும் வழியிலுள்ள ஆரியங்காவு என்ற ஊர் வழியாக மாடு ஓட்டிக் கொண்டு வரும்பொழுது, பாவூரைச் சேர்ந்த பள்ளர் சாதியினரான ஒயிலான்- உமையாள் தம்பதியினரின் மகளான பொயிலாம்பூச்சி என்ற பெண்ணைச் சந்தித்தான். அவளால் ஈர்க்கப்பட்ட முத்தையா அவள் வீடுவரை சென்று அவளின் தாய், தந்தையருடனும், அண்ணன்மாருடனும் அன்புடன் பழகி நட்புக் கொண்டான். நாட்கள் நகர, மனத்தால் ஒன்றுபட்ட முத்தையாவும், பொயிலாம்பூச்சியும்,

இங்கிருக்க ஞாயமல்ல
ஏகவேணும் வேறுநாடு
பூமரங்கள் தானிருக்கும்
பூலுடையார் மலைப்பரும்பு
நாமளுமே சென்றிடுவோம்
நாடுபவர் யாருமில்லை
சேமமுடன் வீற்றிருப்போம்
தேடுபவர் யாருமில்லை *(293-300)*

எனத் திட்டம் செய்துகொண்டு உழக்குடியை வந்தடைந்து அவ்வூரின் வடபுறமுள்ள உடைமரக் காட்டுக்குள் புகுந்து மறைந்து வாழ்ந்தனர். உணவுக்கு வழியேதுமில்லாத அவர்கள் மேய்ச்சலுக்கு வரும் ஆடுகளில் ஒன்றைப் பிடித்து அறுத்துச் சமைத்து உயிர் வாழ்ந்தனர். இரவில் சமைத்தால் ஒளி தெரியும்; காலை, மாலையில் சமைத்தால் புகை தெரியும்; அவை தம்மைக் காட்டிக் கொடுக்கும் என அஞ்சி நண்பகலில் உணவு சமைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். தங்கையைக் காணாத அண்ணன்மார் ஊர்கள் முழுவதும் தேடியலைந்து உடங்காடு வந்தடைந்தனர். ஆடு மேய்க்கும் கோனார்களிடம் விசாரித்த போது அவர்கள்,

இந்தவனக் காட்டுக்குள்ளே
சந்துவழி கிடையாதய்யா
ஊசிநுழை யாத வனம்
ஊர்க்குருவி நாடா வனம்
பாசிநல்லோ படர்ந்த வனம்

பார்க்கமுழி கூடாதையா
முள்ளூ வனந்தனிலே
முரட்டுமுட்கள் தைத்துவிடும்
சில்லுஓடங் காட்டுக்குள்ளே
சிறுமுள்கள் தைத்துவிடும் (430 - 439)

என்று வனத்தின் கடுமையை எடுத்துக்கூறிவிட்டு, ஆனால் வனத்தில் மேயும் தங்கள் ஆட்டுக்கிடையிலிருந்து கிடாய் ஒன்று எட்டு நாட்களுக்கு ஒருமுறை காணாமல் போவதாகவும், போன கிடாய் ஒரு நாளும் திரும்ப வந்ததில்லை எனவும், மதிய வேளையில் வனத்துள்ளிருந்து நூல் போல் புகை வருவதாகவும் எடுத்துரைத்தனர். உடன் அண்ணன்மார் புகை தெரிந்த திசை நோக்கிச் சென்று காதலர்களைக் கண்டுபிடித்தனர். சாதி மீறிக் காதல் கொண்ட முத்தையாவை வல்லயத்தாலும் வேலாலும் குத்திக் குடல் சரியக் கொன்றனர். அவன் பட்ட (இறந்த) பிரானாக ஆனான். தங்கையைத் தங்களுடன் வந்துவிடுமாறு அழைக்க அவள்,

ஆசையுள்ள மன்னவரின்
ஆவியது இழந்தபின்னே
நேசமுடன் பூலோகம்
நெடுங்காலம் வாழணுமோ (507–510)

என்று கதறியழுதாள். உடன் தங்கையையும் கழுத்தறும்படி வெட்டிக் கொன்றனர்.

வானுலகத் தேவரெல்லாம்
வாழ்த்தியங்கே குரவையிட்டார்
பொன்னுலகத் தேவரெல்லாம்
பூமாரி பொழிந்தார்கள் (531–534)

எனக் கதைப்பாடல் நிறைவுறுகிறது. காதலுக்காகச் சாதிக் கட்டுப்பாட்டை மீறித் தங்கள் உயிரைப் பலிகொடுத்த காதலர்களுக்கு வானுலகத் தேவர்கள் வாழ்த்துக் கூற மண்ணுலக மக்கள் அவர்களின் அகால மரணத்துக்கு இரங்கி, அவர்களது ஆவியால் தங்களுக்கு ஏதும் ஊறு நேரிடுமோ என அஞ்சி அவர் களின் ஆன்மா நிறைவுறும்வண்ணம் அன்னாருக்குக் கோயில் கட்டிக் கும்பிட்டார்கள் எனத் தெரிகிறது. பொயிலாம்பூச்சி பூச்சியம்மனாக ஆனாள். வில்லுப்பாடலும் அவள் பெயரைக் கொண்டே இலங்குகிறது.

இக்கதைப் பாடலை ஜூலை 1989இல் பதிப்பித்திருப்பவர் ஆ. சிவ சுப்பிரமணியன் அவர்கள் ஆவார். அவர் உழக்குடி, சவலாப்பேரி, கந்தசாமிபுரம் ஆகிய மூன்று ஊர்களில் அவர்கள் தெய்வமாக வழிபடப்பட்டு வருவதாகச் சுட்டியுள்ளார். காட்டிக் கொடுத்த கோனார் சாதியரும், இறந்த பெண் சார்ந்த பள்ளர் சாதியரும் வழிபாடு நடத்துவதாகப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்ணொருத்தியின் பொருட்டுத் தங்கள் சாதி இளைஞன் கொலையுண்டதைப் பெருமையாகக் கருதாத மறவர் சாதியார் அவர்களைத் தெய்வமாக வழிபடுவதில்லை என்றும் குறித்துள்ளார் (ப. 25). பதிப்பிக்க எடுத்துக் கொண்ட வில்லுப்பாடல் கையெழுத்துப் பிரதியாக இருந்து சவலாப்பேரி கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்ற பள்ளர் சாதி முதியவர் அளித்தது என்றும் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். குடும்பத்தில் இருந்த ஓலைச் சுவடியைப் பார்த்து அம்முதியவர் பிரதி செய்ததும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன் இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் இருந்த சமூக நிலையைப் படம் பிடித்துக் காட்டும் கதைப்பாடற் சான்றாக இதனைக் கருதலாம். சமூகக் கட்டுப் பாட்டை மீறியவர்களைக் கொன்று விடுவதன் மூலம் சமூக் கட்டுக்கோப்பு சிதையாமல் பார்த்துக் கொள்ள முயற்சி எடுக்கப் பட்டது என்பதும் தெரிகிறது.

குமாரசுவாமி நாடான் கதைப்பாடலில் காதல்வழியிலான கட்டுப்பாடு மீறல்

நிலவுடைமைச் சமுதாய அமைப்பில் சொத்துரிமைக்கு வாரிசாக வரக் கூடியவன் தனக்குப் பிறந்தவனாக மட்டும் இல்லாமல் தன் சாதிப் பெண்ணுக்குப் பிறந்தவனாகவும் இருத்தல் வேண்டும் என்ற விதிமுறை இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. நிலவுரிமைக்குரிய வாரிசைத் தன் சாதிப் பெண்ணோடு இணைந்து வாழ்ந்து பெற்றுக் கொண்டவர்களையே சமுதாயம் ஏற்றுக் கொண்டது. இதன்மூலம் சாதித் தூய்மையும் வாரிசுரிமையின் புனிதத்தன்மையும் காப்பாற்றப்பட்டு வந்தன. மகனே ஆனபோதிலும் சாதி மீறிக் காதல் கொண்டு தன் வாரிசை உருவாக்கிக் கொண்டு தன் சாதிப் பெண்ணோடு வாழ மறுத்தவனைத் தந்தையே கொன்று அழித்தது தெரிய வருகிறது.

இதற்குத் தக்க சான்றாக அமைவது சின்னநாடான் கதை எனும் குமாரசுவாமி நாடான் கதைப்பாடலாகும்.

குமாரசுவாமி நாடான் கதைப்பாடற் சுருக்கம்

திருச்செந்தூர் வட்டாரத்திலுள்ள சாயர்புரம் அருகில் நட்டாத்தி உள்ளது. இங்குச் சின்னமாடன் நாடார் - குட்டிப் பிள்ளையம்மையின் ஒரே வாரிசாகப் பிறந்தவன் குமாரசுவாமி. சின்ன மாடன் நாடாரின் உடன்பிறந்தவர்கள் 4 பேர், ஒரு தங்கை. குடும்பம் அனைத்துக்கும் ஒரே ஆண்வாரிசாக இருந்தவன் குமார சுவாமி. உரிய வயதில் அஞ்சுபத்து நாடு என்று சொல்லப்படும் தென்பத்து நாட்டை மணியம் பண்ணி ஆறில் ஒரு பங்கு கடமையை மதுரை நாயக்க மன்னருக்குச் செலுத்தி வந்தார் குமாரசுவாமி. இவருக்கு இப்பணியை வாங்கி அளித்தவர் பெரிய தந்தையான வள்ளிக்குட்டி நாடார். இளைஞரான குமார சுவாமிக்கு அத்தை மகளான பூவணஞ்சுவை மணம் செய்து வைத்தனர். அவள் பருவம் வராத குழந்தையாக இருந்தாள். நாவிதர் குலப்பெண் ஐயம் குட்டியுடன், இயற்கை உணர்வான காதல் உந்த அவளுடன் இணைந்து வாழ்ந்தார் குமாரசுவாமி. நிலவுடைமைச் சமுதாய அமைப்பு முறையில் பெற்றோர் திருமணம் நிச்சயிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே திருமண வரைவுக்குட்படாத காதலும் (Illicit love) தொடங்கிவிட்டது என்பார் ஏங்கல்ஸ். இதன்படி அக்காதல் நடந்தது. அத்தை மகள் பூவணஞ்சு பருவம் எய்தியபின் குமாரசுவாமியைக் குடும்பம் நடத்த அழைத்தனர். அப்பொழுது ஐயம் குட்டியைத் தனித்துவிட்டுவிட்டுப் புதிய மனைவியுடன் சென்று குடும்பம் நடத்த அவன் மனம் ஒப்பவில்லை. அஞ்சு பத்து நாடு மணியமும், இதுவரை அவன் மணியம் பார்த்ததன் மூலம் திரட்டிய செல்வமும் ஒத்த சாதிப் பெண்ணின் வாரிசுக்குச் செல்ல வழியில்லாமல் ஆனது. இதைக் குடும்பத்தாரும், உறவினர்களும் ஒப்புக் கொள்ளவில்லை. மணியம் செய்ய வாய்ப்பு வாங்கித் தந்த பெரிய தந்தை வள்ளிக்குட்டி நாடார் கொதித்தெழுந்தார்.[13] அவர் வீட்டுப் பெண்ணும்

---

13. "வல்லநாட்டு நாடான் செல்லமகனே நீதிகேளு
    வையகத்தை யரசாள வைத்தேனே மகனே
நல்லவ னென்றுசொல்லி யரசாள வைத்தேனே
    நம்பாத பாதகா வம்புக்காய்க் கட்டியடித்தாய்
எந்தன் நிலைமை யெங்கேயிருக்குது சொல்லு
    இன்றைக்கு நானும் உனைவிடுகிற தில்லை" (ப.21)

தூபம் போட்டாள். குமாரசுவாமியின் மணியத்துக்குட்பட்ட பகுதிகளில் விளைச்சலைக் கொள்ளையிட்டனர்.[14] குமாரசுவாமியின் பண்ணையாள் கொள்ளையிட்டோரைக் கட்டி வைத்து அடித்தான்.[15] பகைமை மூண்டது. குமார சுவாமியைப் பெரிய தந்தை, சித்தப்பன்மார்களே கொல்லச் சதித் திட்டம் தீட்டினர். குமாரசுவாமி அக்கிரமங்களும் அநியாயங்களும் செய்வதாக மன்னரிடம் முறையிட்டு[16] அவனைக் கொல்ல அனுமதி பெற்றனர். பெண் வேடமிட்ட ஒருவனை நாவிதப் பெண்ணின் வீட்டிற்குள் அனுப்பி ஆயுதமற்றவனாகக் குமார சுவாமியை வீட்டிற்கு வெளியே வரவழைத்தனர். அவனைக் கொன்று தலையறுத்தனர். கணவனையே அறியாத பூவணஞ்சுவும்[17] நாவிதப் பெண் ஐயம் குட்டியும் அவனது சிதையில் விழுந்து உயிர்விட்டனர். குமாரசுவாமிக்குச் சாதிக்குட்பட்ட நேர் வாரிசு

---

14. வண்டத் தனத்துக்காய் நாடான் விளையதுதன்னில்
 மாபாவி யானவன் தொண்கள்தன்னைப் பிடுங்கி
 முத்துக்கா யானதை தன்னையும் தானே முறித்து
 முன்னும் பின்னுமாக நித்தமும்தானே சுமந்தான்" (ப.78)

15. முத்துக்காய் தன்னைகோத்து கழுத்திலே போட்டு
 ....
 கழுத்திலே போட்டு இழுத்துமே ஊரைச்சுற்றி
 கள்ளன் இவனென்று சொல்லியே கட்டியடித்தார் (ப.78)

16. குடிமகள்தன்னை வைப்புவைத்துக் கொடுமுடிமெத்த வீசுகிறான்
 எதிர்த்தபேரை யடிக்கவாரான் எண்ணக்கேடாகவே பேசுகிறான்
 ....
 உறமுறைபேரில்ஆணையிட்டேன் ஓடென்று சொல்லி
 யென்னையடித்தான்
 கார்குறிச்சி மறவருங் காணாது கடுங்கோபமுள்ளவன் குமாரசுவாமி
 என்று சொல்லியந்த மூவேரும் ஏங்கியேங்கித் தானழுதார்" (ப.81-82)

17. "என்னுடைய கணவாயென் நாயகரே என்னை மறந்து நீர் போனீரே
 அஞ்சுரெண்டு வயசுகள் தன்னிலேதான் அசல்கள் அறியாத
 நாளையிலே
 பிஞ்சிலே யென்னை மாலையிட்டீரே பிரியாக் கணவராய்
 நீர்இருந்தீர்
 கொஞ்சியிருந்து நாமிருபேரும் கூடியிருந்துநாம் வாழவில்லை"
 (ப.107)

இன்மையின் காரணமாகப் பெரியப்பாவான, கொலை செய்த வள்ளிக் குட்டி நாடாரே குடமுடைத்துக் கொள்ளி வைத்தது குறிக்கப்பட்டுள்ளது.[18]

இக்கதைப்பாடலுக்கு நட்டாத்தி முதலிய ஐந்து ஊர்களில் பிரதிகள் உள்ளன. நட்டாத்தியைச் சேர்ந்த ப.யோ. தங்கசுவாமி என்பவர் 1994இல் இக்கதைப்பாடலை 'குமார சுவாமி நாடான் வில்லுப்பாட்டுக் கதை' என்ற பெயரில் பதிப்பித்துள்ளார். 3766 அடிகளைக் கொண்டதாக இக்கதைப் பாடல் உள்ளது. குமாரசுவாமி நாடார் வாழ்ந்தகாலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கல்வெட்டு, ஓலைச்சுவடிச் சான்றுகள் கொண்டு பதிப்பாசிரியர் நிறுவியுள்ளார். திருமலை நாயக்கர் பாண்டிநாட்டை மதுரையிலிருந்து கி.பி. 1623 முதல் 1659 வரை அரசாண்டார். அம்மன்னர் வடமலையப்பப் பிள்ளையைத் தென்பாண்டி நாட்டிற்குத் தன் பிரதிநிதியாக நியமித்தார். அதற்குத் தலைநகர் திருநெல்வேலி. வடமலையப்ப பிள்ளைதான் குமாரசுவாமி நாடாருக்கு அஞ்சுபத்து நாடு மணியம் பண்ண அதிகாரம் கொடுத்தார். இதைத் திருச்செந்தூர்த் தாலுகா தேரியிலுள்ள முத்துக் கிருஷ்ணாபுரத்தின் தென் ஓரத்தில் நிற்கும் ஒரு பெரும் சாசனக்கல் உறுதிப்படுத்துகிறது எனப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார் (ப. 31). ப.யோ. தங்கசுவாமிக்கு முன்னர் நா. வானமாமலை அவர்கள் ஆராய்ச்சி இதழில் மார்ச் 1971இல் தமிழ்நாட்டுக் கதைப் பாடல்களில் சோக முடிவு என்ற கட்டுரையில் இக்கதைப் பாடல் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதில் குமாரசுவாமி சாதிய சமூகக் கட்டுப்பாட்டை மீறியதற்காகக் கொலை செய்யப்பட்டவன் எனக் குறிப்பிட்டுள்ளார். இதே ஆண்டு அக்டோபரில் தான் பதிப்பித்த முத்துப்பட்டன் கதை மதுரைப் பல்கலைக்கழக வெளியீடு ஆராய்ச்சியுரையிலும் இக்கதைப் பாடல் குறிப்புகளை நா. வா. பதிவு செய்துள்ளார் (பக். 27).

குறிப்பிட்ட இக்காலகட்டத்தில் இருந்த சமூகச் சட்டங் களையும் வழக்கங்களையும் வெளிப்படக் காட்டுவதாகக் கதைப்

---

18. "பிள்ளை யென்று சொல்லிப் பாராதவன்
பெரிய வள்ளிக்குட்டி நாடானவர் தானுமே
கொள்ளிநல்ல குடங்களை யுடைத்த்வர்
கூடவந்த சனத்தோடே யழுதார்காண்
அந்த நேரத்தில் வள்ளிக்குட்டி நாடான்
அள்ளிவாயில் அரியும் போட்டார்காண்" (ப.111)

பாடல் திகழ்கிறது. வயது வந்த இளைஞனுக்கு வயதுக்கு வராத குழந்தைப் பருவத்தாளை மணமுடித்ததால் வந்த விளைவு காட்டப்பட்டுள்ளது. கொலை செய்த வள்ளிக்குட்டி நாடாரே குமாரசுவாமியைத் தெய்வமாக வணங்கியது கதைப்பாடலில் காட்டப்பட்டுள்ளது.[19] காதல் மூலம் சமூகக்கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்திப் பலியாகிவிட்ட அவனது நினைவைப் போற்றும் வண்ணம் மக்கள் கோயில்கள் கட்டி அவன் வாழ்வைக் கதைப் பாடலாக இயற்றிப் பாடக் கேட்டு வருகிறார்கள். தான் மேற் கொண்ட நோக்கத்தில் கதைப்பாடல் தலைவன் தோல்வியையே தழுவினும் அவன் வாழ்க்கையில் காட்டிய வீரமும் காதலின் உறுதியும் இளைஞருலகைக் கவருவதாக உள்ளன. அந்த உணர்வு சமுதாய மாற்றத்திற்குரிய ஆற்றலாக உருவெடுக்கலாம்; உருவெடுத்துள்ளது என்று உறுதியாக உரைக்க இயலும். இன்றைய சமுதாய மாற்றங்கள், மக்களின் எண்ணங்கள், கலப்பு மணங்கள், அதன் விளைவுகள் ஆகியன இதனை வெளிக்காட்டி நிற்கின்றன.

சின்னணைஞ்சான் கதையில் காதல்வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

இக்கதைப்பாடல் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1998இல் வெளியிடப் பெற்றுள்ளது. இருசுவடிப் பிரதிகளையும் பிற கதை வேறுபாடு களையும் ஒப்பிட்டு இப்பதிப்பு வெளியிடப் பெற்றுள்ளது. ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடி எண் 46-47 - சின்னணைஞ்சான் கதை என்பதும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி எண் 376 சிவனணைஞ்ச பெருமாள் கதை என்பதும் இந்நூல் மூலம் பதிப்பித்து வெளிக் கொணரப் பெற்றுள்ளன. கதை வேறுபாடுகள் காணப்படினும் காதலால் கட்டுண்ட வேறுவேறு பிரிவைச் சேர்ந்த இருவர் சமூகக்

19. "அப்போது வள்ளிக்குட்டி அதிகபனைகள் தானும்வெட்டி
மாயவர்க்குக் கோவில்கட்டி வகையுடனே பீடம்போட்டு
தேசம் புகழ்பெற்ற நாடானுக்குத் தீர்க்கமுடனே பீடம்போட்டு
. . . .
பெற்றபிள்ளையென் றறியாமல் பிடித்துத்தலை நானறுத்தேன்
மெத்தக்கொள்ளை யடிக்கச்சொன்னேன் விதிகள்வார தறியாமல்
மைந்தனென்றும் பாராமல் மடிபிடித்தேன் நான்பாபி
. . . .
எந்தபிழைகள் ஏழைநான் செய்தே னானாலும்
வாரம்வைத்து அடியேனை மனம்வைத்துக் காத்துக் கொள்ளும்"
(ப.129-130)

கட்டுப்பாட்டை மீறியதற்காக உயிரை விட்டனர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. காதல்வழி கட்டுப்பாட்டை மீறிய பிறகதைப் பாடல்களைப் போன்று இந்தக் கதைப்பாடல் தலைவன், தலைவியும் வெவ்வேறு சாதியர் என்பதுடன் தலைவன் ஆளும் வர்க்கமான அரசமரபில் வந்தவன் என்பதும், தலைவி சமூகத்தின் அடித்தள நிலையில் உள்ள அழுக்கெடுத்து வெளுத்துத் தரும் பணியைச் செய்யும் அடிமை வர்க்கமான வண்ணார் சாதியில் பிறந்தவள் என்பதும் கூடுதலான ஒரு செய்தி எனலாம்.

இக்கதைப் பாடலின் கதை பின்வருமாறு:

செங்கோட்டைப் பகுதியை ஆண்ட செம்பவளராசன் - பொன்னுருவியின்[20] ஒரே மகனாகத் திகழ்ந்தவன் சிவனணைஞ்ச பெருமாள் எனும் சின்னணைஞ்சான். இவன் தென்காசிப் பகுதியை ஆண்ட சீவலமாறனின் மருமகனாவான்.[21] மருமக்கள் தாயமுறை வழக்கிலிருந்த அப்பகுதியில் தன் ஒரே மகளை மருமகன் சிவனணைஞ்ச பெருமாளுக்கு மணமுடித்து அவனைத் தென்காசியின் மன்னனாக அரியணை ஏற்ற வேண்டும் என்பது சீவலமாறனின் எண்ணம். சிவனணைஞ்சவரோ வண்ணாத்தி சின்னணைஞ்சி என்பாள் மீது காதல் கொண்டார். அவளை மனைவி போன்று மண்டபத்தில் வைத்து மறைத்து வாழ்ந்தார். அவர்கள் வெளிப்பட வாழச் சமூக நிலை தடையாக இருந்தது. அவர்களின் மறைவு வாழ்க்கை கண்டறியப்பட்ட பொழுது அவளைக் கைவிட்டு விடுமாறு மந்திரியும்[22]

---

20. "ஊரான ஊரதிலே உத்ததென் காசியிலே
அஞ்சிமுடி மன்னவர்க ளாண்டிருந்து போனகாலம்
ஆண்டிருந்தார் செம்பவளராசன் ஆயிழையாள் பொன்னுருவி"
(சுவடி எண்: 46-47 வரி 43-45)

21. "மன்னவர் புகழுஞ் சீவலமார்பன் மருகா
மாப்பிள்ளை ராசாவே மாமனழைக்கிறார் வாரீர்"
(சுவடி எண்: 46-47 வரி: 2744-2745)

22. "மின்னிடை வண்ணாத்திதன்னை வெளியிலே விட்டு
மேலுங் கலியாணஞ் செய்யலாம் வாவென்றுரைத்தார்
வண்ணாத்தி யோடேநீ காலங்கடத்தாதே யப்பா
வாய்த்ததோர் தென்காசி யூருக்கெல்லாம் வசையாச்சே
கண்ணொத்த மாமன் மகளான யின்பக்கனியைக்
காதல் கொள்ளாமல் ஆசைகொண்டாய் வேப்பங்சாய்மேலே
தீண்டாத சாதியைத் தீண்டினாரென்று சிரிப்பார்
தீர்த்தமு மாடி யழுக்கைத் தொடுவையோ சீச்சீ"
(சுவடி எண் 46-47 வரி: 2746-2753)

தாயும்[23] வேண்டிக் கேட்டுக் கொண்டனர். தாயோ ஒரு படி மேலே சென்று அவளும் இருக்கட்டும்; மாமன் மகளையும் மனைவியாக ஏற்றுக் கொள் என்று கூறினாள்.[24] சிவனணைஞ்சவரோ இன்னொரு பெண்ணுக்குத் தன் வாழ்வில் இடமில்லை என்பதில் உறுதியாக இருந்தார். வண்ணாத்தியைக் கைவிட முடியாது என்பதிலும் தீவிரமாக இருந்தார்.[25] அரசாட்சி செய்யும் தகுதிக்குரிய மன்னனே, மக்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழக் கூடியவனே, சமூகக் கட்டுப்பாட்டை உடைத்தெறியத் துணிந்ததால் அவன் உயிரை வாங்க உறவுடைய மாமன் சீவலமார்பனே முனைந்து நின்றான்.[26] போர் மூண்டது. சிறுபடையுடைய சிவனணைஞ்சவரைச் சீவலமாறனின் பெரும்படை சிறைப் பிடித்தது. வெட்டிக் கொல்ல இட்ட ஆணை நிறைவேற்றப்பட்டது. சின்னணைஞ்சி தற்கொலை செய்து கொண்டாள். இருவருமே

---

23. "பழிகாரா வுன்னைநான் பாலகனென்று வளர்த்தேன்
பார்த்தபேர்க் கெல்லாம் பழிப்பிடமாச்சு மகனே
தண்டமிழ் சேரும் சிவனணைஞ்ச பெருமாளே
தாய்வார்த்தை கேளாதான் நாய்வாய்ச்சீலை போலானாய்
வண்ணாத்திக் காகவோ கண்ணாளா ஒன்னைவளர்த்தேன்
மாதர்கள் சீலை வெளுத்திடவேண்டாம் மகனே
. . . .
கள்ளியைத் தள்ளாமல் உள்ளாக்கி வைத்துயிருந்தால்
கல்தூணிலே முட்டிச் சாகிறேனென் பழிகாண்பாய்"
(சுவடி எண்: 46-47 வரி: 2782-2787, 2790-2791)

24. "மோகமாய்த் தொட்டதைக் களைந்திட வேண்டா மகனே
மேதினியில் காசினி யாண்டிடும் படிக்காக
கன்னிக் கலியாணம்செய்து அரசாள வேணும்
காரியம் பேசவே வாவென்று சொல்லிப் போனார்"
(சுவடி எண்: 376, வரி: 2140-2143)

25. "வண்ணாத்தி யோடவே வாழாம லென்னை மறித்தால்
வால சன்யாசியைப் போலவே போவேன் மலைமேல்
தொட்டவள் தன்னையும் விட்டுவிட்டால் வெகுதோசம்"
(சுவடி எண்: 46-47 வரி: 2806-2808)

26. "பட்டங்கட்டி யிவனைவைத்தால் கெட்டகுடி யாமே
பல்லுப்பறி போகாமல் சொல்லுக்கேளா திருந்தான்
கெட்டிக்காரன் புத்தியது சுட்டித்தன மாச்சு
கேள்வியத்த சீமையென்றோ தூசிபோட்டுக் கொண்டாய்
. . . .
கழுவிலிடும் போதுனக்குக் காச்சலுள்ள பேரை
கைகாட்டிக் கூப்பிடுநீ கழத்திவிடச் சொல்லு"
(சுவடி எண்: 46-47 வரி: 2915-2924)

தற்கொலை செய்து கொண்டதாகவும் கதை வேறுபாடு உள்ளது.[27] கொண்ட காதலில் உறுதியாக நின்று உயிரைவிட்ட அவர்கள் தெய்வமாக வணங்கப் பெற்று வருகிறார்கள். வில்லுப் பாடல் வடிவில் அவர்களின் வாழ்க்கை கதைப்பாடலாகப் பாடப்பெற்று வருகிறது.

சிவனணைஞ்சவரும் சின்னணைஞ்சியும் சாதிகளையும் சாதிகளை உருவாக்கிய மனிதர்களையும் சாதிக்குரிய சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள், விதிமுறைகளையும் விட மனித உணர்வான காதல் நேயம் மாண்புமிக்கது; உயர்ந்தது என்பதை உணர்த்த உயிரைப் பலியிட்டவர்கள் ஆவர். காதலுக்காக ஆளும் உரிமையையும் ஆட்சியதிகாரத்தையும் துச்சமெனத் தூக்கி எறிந்த சிவனணைஞ்சவரின் செயல் மகத்தானதாகத் திகழ்கிறது. அதனாலேயே அவர்கள் வாழ்க்கைக்கதை இலக்கியமாக இன்றும் நின்றிலங்குகிறது.

ஆசைக்கு ஒருத்தி, ஆஸ்திக்கு ஒருத்தி என்ற நிலை அக்காலகட்டச் சமுதாயத்தில் நிலவியது. பெற்ற தாயே இந்நிலைக்கு உடன்பட்டு அனுமதித்தாள். அத்துடன் இத்தகு இரட்டை வாழ்க்கையை எல்லா மட்ட நிலையிலுள்ளவர்களும் அன்று வாழ்ந்துதான் வந்தார்கள். இதனை ஒரு குற்றமாகக் கருதாமல் சமுதாயமும் இந்நிலையை அனுமதித்தே வந்தது. என்றாலும் இத்தகு நிலைகள் தவறானவை என்பதை உணர்த்த வந்த மாமணி போல் சிவனணைஞ்சவர் திகழ்ந்தார். தன் வாழ்வில் தான் கொண்ட ஒரு பெண்ணான வண்ணாத்தி சிவனணைஞ்சிக்கு மட்டுமே இடம் உண்டு என்பதை இறுதிவரை நிலைநிறுத்திக் காட்டினார். பிற சாதிப் பெண்ணை, அதிலும் தீண்டத்தகாத சாதிப் பெண்ணை விரும்பிச் சாதிச் சட்டதிட்டங்களைக் குலைப்பவர்களுக்கு மரணதண்டனை[28] என்ற நிலை நிலவிய அக்காலகட்டச் சமுதாயத்தில் தோன்றிய சிவனணைஞ்சவரும்

---

27. "அரனா ரிடத்தில்போர் யிருக்கலா மென்று
ஆகா வென்று கழுத்தை யறுத்தார்
கொண்ட கோலத்துடன் தன்னுட நெஞ்சில்
குத்தினார் குமரப்பன் சமுதாடு கொண்டு"
(சுவடி எண்: 376 வரி: 2238-2241)

28. "வண்ணார் குலந் தொட்டுநீ
மாண்டாங் கிறந்தா லெனக்கு மகனாரு"
(சுவடி எண்: 46-47 வரி: 2127-2128)

சின்னணைஞ்சியும் இந்நிலைகளெல்லாம் தெரிந்தே காதல் கொண்டு காதல்வழி கட்டுப்பாடுகளை மீறி இதனால் மரணத்தைத் தழுவினர். சமூகக்கதைப்பாடல் தலைவர்களில் தான் கொண்ட காதலுக்காகப் போர் புரிந்த முதல் கதைத் தலைவனாகச் சிவனணைஞ்சவரைக் காணுகின்றோம். காதலுக்காகச் செய்த போரில் தோல்வி ஏற்படினும் காதலில் முழு வெற்றி பெற்றவர்களாக ஆகியுள்ளனர்.

பளிச்சியம்மன் கதையில் காதல்வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

இக்கதைக்குக் கதைப்பாடல் சுவடிப் பிரதிகளோ, நூல் களோ எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. கர்ண பரம்பரைக் கதையாக இது வழங்கி வந்துள்ளது. இது திருநெல்வேலி, நாஞ்சில் பகுதிகளில் வழங்கும் கதையாகும். இக்கதை பற்றிய குறிப்புகளை நா. வானமாமலை அவர்கள் தன்னுடைய முத்துப்பட்டன் கதைப் பதிப்பில் குறிப்பிட்டுள்ளார் (மதுரைப்பல்கலைக் கழக வெளியீடு, 1971, பக். 26-27).

காட்டுச் சாதி என்று சொல்லப்படும் பழங்குடி இனத்தைச் சார்ந்த பெண்ணுக்கும் நிலவுடைமை அமைப்பைச் சேர்ந்த, வளர்ச்சியடைந்த சமுதாயத்தில் பிறந்த நாட்டுச் சாதியான சேதுராயர் சாதி இளைஞன் ஒருவனுக்கும் ஏற்பட்ட காதலை மையப் பொருளாகக் கொண்டது பளிச்சியம்மன் கதையாகும். நாட்டிற்குள்ளிருந்த சாதிகளும் காட்டுவாசிகளான பழங்குடி இனப்பிரிவும் கலந்து விடாது சாதித் தூய்மை மிகுந்த கட்டுக் கோப்போடு காக்கப்பட்டு வந்ததை இக்கதை வெளிப்படுத்து கின்றது.

பளிச்சியம்மன் கதைச் சுருக்கமாவது:

மேல்மலையடிவாரத்தில் சிவசைலம் என்றோர் ஊரில் சேதுர்ராயர் சாதி இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் அடிக்கடி மலைவேட்டைக்குச் சென்றான். அங்கு மலைப் பளிங்கருடன் அளவளாவும் வாய்ப்பு ஏற்பட்டது. பளிங்கர்கள் நாகரிகம் அடையாத இனத்தவர்கள். அவர்களின் முக்கியத் தொழில் வேட்டையாடுவதாக இருந்தது. பளிச்சியர்கள் மலை வேளாண்மை செய்தார்கள். கொம்புச் சாமான்களும் செய்யும் கைத் தொழிலையும் அறிந்திருந்தார்கள். எனவே பளிச்சியர்கள் வீட்டில் அடைந்து கிடக்காமல் தொழிலுக்காகப் புறம்

சுற்றுபவர்களாகவே இருந்தார்கள். என்றாலும் அவர்கள் சாதிக்குள்ளும் மிகுந்த கட்டுப்பாடுகள் இருந்தன. திருமண உறவுகள் மிகவும் கண்டிப்பானவை. வேற்று சாதியானுடன் பேசியதை அறிந்தால் வீட்டில் சிறை வைப்பார்கள். வேறு வகையில் தவறு நடந்ததை அறிந்தாலோ கொலையும் செய்து விடுவார்கள். வேட்டையாடுவதன்மூலம் பளிங்கர் சாதி இளைஞர் களுடன் பழகிய சேதுராயர் சாதி இளைஞன் இரவாகிவிட்டால் இளவட்டஞ்சாவடியில் தீக்கணப்படுகே உறங்குவதையும் வழக்கமாகக் கொண்டான். நாளாவட்டத்தில் பளியர் சாதிப் பெண் ஒருத்தியுடன் அவனுக்குக் காதல் ஏற்பட்டது. அவளும் அவனை விரும்பினாள். இளைஞன் அவளைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று பெற்றோரிடம் தன் விருப்பத்தை வெளியிட்டான். காட்டுப் பெண்ணை விரும்புவதாவது, திருமணம் செய்து வைப்பதாவது, அவளை நாட்டுக்குள் கொண்டு வருவதாவது என்று பெற்றோர் சினம் கொண்டு சீறினர். தாங்கள் சொல்லும் பெண்ணையே திருமணம் செய்யவேண்டும், இல்லையாயின் சொத்துரிமை இல்லை என்றனர். அது ஆடு, மாடு, நில, புலன்கள் கொண்ட நாகரிகம் அடைந்த சிறு விவசாயிகள் குடும்பம். நயத்தாலும், பயத்தாலும் புத்தி கூறினார்கள். வீட்டிற்குள் சிறைவைத்தார்கள். இரு மாதங்களாக அவன் வீட்டை விட்டு வெளியேற இயலவில்லை. பளிச்சியோ அவன் வந்துவிடுவான் என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். அவன் வரவில்லை. இறுதியில் வந்தது வரட்டும் என்று ஒரு முடிவெடுத்தாள். தன்னைக் கண்டால் அவன் வந்து விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. அவனது ஊரை நோக்கிப் புறப்பட்டாள். வழியில் கருணையாறு குறுக்கிட்டது. அக்கரையை அடைந்தால் அவனது ஊருக்குப் போகலாம். ஆனால் ஆற்றிலோ வெள்ளம். இக்கரையில் நிலையாக ஒரு பாறை மீது ஏறி நின்றாள். நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓடின. அவன் வரவில்லை. அக்கரையில் அவளைக் கண்ட இளைஞனின் பெற்றோர் காவலைக் கடுமையாக்கினர். அவனால் வர இயலவில்லை. அவளோ திரும்பிப் போக விரும்பவில்லை. காலம் ஓடியது. அவளின் இளமை மாறியது; வனப்பு அழிந்தது; முதுமை தோன்றியது; கடைசியில் உயிர் பிரிந்தது. எலும்புக் கூடுதான் எஞ்சியது. காதலால் கட்டுண்டு சாதிக் கட்டுப்பாட்டை மீறியவர்களை வாழ்வில் ஒன்று சேர விடவில்லை. காதலுக்குப் பலியானவள் 'பளிச்சியம்மன்' ஆனாள். கருணையாற்றங்கரையில் அவளுக்குச் சிலையொன்று உள்ளது. மக்கள் வழிபடுகின்றார்கள்.

இக்கதையில் உள்ளம் ஒன்றுபட்ட இருவர், காதல் பிணைப்பு இருந்தும் நிலவுடைமைச் சாதிப் பிரிவு அப் பிணைப்பைத் துண்டித்து விடுவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. காதலன் இச்சிறையிலிருந்து தப்பி வந்திருப்பினும் அவர்கள் இணைந்து வாழ்ந்திருக்க இயலுமா என்பது ஐயமே. இங்குப் பளியர்களின் கோபத்திற்கு ஆளாகி அவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும். நாட்டில் மட்டுமல்லாது காட்டிலும் இருந்த சாதிக் கட்டுப்பாட்டின் தீவிரத்தையும் நாட்டு சாதியும் காட்டு சாதியும் கலந்துவிடாமல் கவனமாகச் சாதித்தன்மை காப்பாற்றப் பட்டமையை இக்கதை வெளிக்காட்டி நிற்கிறது.

மைக்கேலம்மா கதைப்பாடலில் காதல்வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

சென்ற நூற்றாண்டிலும் கூடக் காதல்வழிக் கட்டுப் பாட்டு மீறல் நிகழ்ந்துள்ளதற்கு இக்கதைப்பாடல் சான்றாகிறது. கதைப்பாடலாகப் பாடப்பெற்று, இன்றும் வயற்காடுகளில் வேலை செய்யும் கூலி விவசாயிகளாலும், கிராமியக் கலைஞர் களாலும் எடுத்துரைக்கப் பெற்று வருவது இக்கதைப்பாடலாகும். இராமநாதபுரம் மாவட்டம் இளையான்குடி வட்டத்தில் நடந்த உண்மை நிகழ்வை அடிப்படையாகக் கொண்ட இக்கதைப் பாடல் வட்டார அங்கீகாரம் பெற்றதாகும். 1960களில் பாடப் பெற்றுள்ள இக்கதைப்பாடல் 267 அடிகள் கொண்ட குறுங் கதைப்பாடலாக உள்ளது. படைப்பாளியின் பெயர் அறியப்பட வில்லை. கதைப்பாடலைப் பதிப்பித்திருப்பவர் கே.ஏ. குணசேகரன் ஆவார்.[29]

கதையாவது:

இளையான்குடி தாலுகாவுக்குட்பட்ட ஊர் வடதிருக்கை. உடையார் சாதியார் அதிகம் வாழும் இவ்வூரில் பள்ளர்களும் சிறுபான்மையினராக வாழ்ந்தனர். உடையார்கள் கிறித்தவ மதம் தழுவியது போன்று பள்ளர்களும் அவ்வூரில் கிறித்தவம் தழுவி வாழ்ந்தனர். கிறித்தவ மிஷினரி அளித்த வசதிகளுள் சிறந்த வசதியாக அமைந்த கல்வி வசதியை உடையார், பள்ளர் சாதியர் கிறித்தவ சமயத்தவர் என்ற நிலையில் நன்கு பயன்படுத்திப் பயனடைந்தனர். கல்விச் சாலையில் ஏசய்யா என்ற உடையார்

29. நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், அன்னம் வெளியீடு, சிவகங்கை, அக்டோபர், 1988, ப. 60-67

சாதி இளைஞனுக்கும் மைக்கேலம்மா என்ற பள்ளர் சாதிப் பெண்ணுக்கும் காதல் மலர்ந்தது. செல்வநிலையில் உயர்ந்த ஏசய்யா மைக்கேலம்மாவுக்குப் படிப்பதற்கான புத்தகங்களுடன் துணிமணிகள் மற்றும் பிற தேவையானவையும் சோப்பு போன்ற ஆடம்பரப் பொருட்களும் வாங்கி அளித்து உதவிகள் செய்து உவகையுற்றான். தன் காதலையும் உறுதியுடன் வளர்த்து வந்தான். தாழ்ந்த சாதியளான தான், உயர்சாதியனான ஏசய்யாவை மணம் செய்து வாழ இயலாது; வாழ விட மாட்டார்கள் என்பதைக் காலம் கடந்து அறிந்து கொண்டாள் மைக்கேலம்மா. ஏசய்யாவிடம் அதனை எடுத்துரைத்தாள்.

> **ஒங்க நல்ல சாதியிலே**
> **நானும் நல்லா வந்தேனுன்னா**
> **ஏசுவாக பேசுவாக – ஏ சேசியரே**
> **எகத்தாளங்க செய்வாகளே** *(ப. 62)*

என்றாள். பணவசதி படைத்த ஏசய்யா,

> **ஏசுனாலும் பேசுனாலும்**
> **எகத்தாளங்கள் செய்தாலுமே**
> **தேவகோட்டை டவுனுக்குள்ளே – ஏ மைக்கேலம்மா**
> **புடிச்சுருவோம் ரூமுகளும்** *(ப. 62)*

என்றான். இதனால் மன அமைதி அடையாத மைக்கேலம்மா தாங்கள் பிரிந்துவிடுவதே தங்கள் நன்மைக்குகந்தது என எண்ணினாள்; தன் தாய்மாமன் மகனை மணக்கச் சம்மதமும் தெரிவித்தாள். அறிந்து கொண்ட ஏசய்யாவோ சினம் கொண்டான். தன்னை அவள் வஞ்சித்துவிட்டதாகக் கருதினான். நீர்த்துறையில் நீராடிக்கொண்டிருந்த அவளைக் கொண்டையைப் பிடித்திழுத்தான். அரிவாளை எடுத்து அவளின் குரல் வளையை அறுத்துக் கொலை செய்தான். பின் தானே காவல் நிலையம் சென்று சரணடைந்தான். தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. ஒரு மணி நேரத்தில் தான் அவளுக்குச் செய்த செலவினங்களையும் புத்தகங்களையும் காட்டித் தான் குற்றமிழைத்ததற்கான முகாந்திரங்களை ஒப்படைத்ததன் மூலம் விடுதலை செய்யப் பட்டதாகக் கதைப்பாடல் கூறுகிறது.

இருபதாம் நூற்றாண்டளவிலும் சாதி ஏற்றத் தாழ்வும் உயர்சாதி, கீழ்ச்சாதிக் கலப்பு மணமும் எவ்வாறு தடைக்குட் படுத்தப்பட்டன என்பதைக் காட்டும் கதைப்பாடல் சான்றாக இது திகழ்கின்றது. மதத்தால் ஒன்றுபடினும் சாதியால் அவர்கள்

வேறுபட்டவர்களாகவே மதிக்கப்பட்டனர். மதத்தை மாற்றிக் கொள்வதனால் மட்டும் ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ள முடியாது; சாதியை உதறி எறிந்து விடவும் முடியாது என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சாதிக் கட்டுப்பாடு களை மீறிக் காதல் கொண்டவர்கள் திரும்பச் சாதி என்ற வட்டத்துக்குள்ளேயே சுற்றிச் சுழல விரும்பும் செக்கு மாடுகளாகவே இருந்தனர் என்பதையே மைக்கேலம்மாவின் நிலை எடுத்துக் காட்டுகின்றது. உயர்சாதியான் என்ற மமதையால் சாதி வேலியைக் கடக்க நினைத்த ஏசய்யாவும் பிணைமாடு அற்ற தனிமாடு போன்று ஆகிக் குற்றச்செயல் புரியும் அவல நிலைக்கு ஆட்பட்டான். சாதியின் வேர்கள் மிக ஆழத்தில் பரவிக்கிடந்தன. அவற்றை அறுக்க நினைப்பவர்களையே அது ஆழ்குழியில் தள்ளி விடும் என்பதையே இக்கதைப்பாடல் வெளிக்காட்டுகின்றது.

இவர்கள் தெய்வமாக வணங்கப் பெறவில்லை. பழகிப் போன ஒரு சமூக நிகழ்வாக மக்கள் இதனை ஏற்றுக்கொண்டு விட்டனர் என்பதையே இது காட்டுகின்றது.

காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்களுடைய கதைப்பாடல்களில் கதை மாற்றங்கள்:

'சாதிக்குள் மணம்புரிய வேண்டும்' என்றிருந்த சமூகக் கட்டுப்பாட்டை மீறிக் காதல் கொண்டு, அறிவிக்கப்படாத தீர்ப்பாக இருந்த கொலைத் தண்டனையைப் பெற்றவர்களின் உண்மை வாழ்க்கை நிலையைப் பதிவு செய்து வைத்துள்ள இலக்கியப் பெட்டகங்களாகச் சமூகக் கதைப்பாடல்கள் திகழ்கின்றன. இத்தகு கதைப்பாடல்கள் 'சாதிப்பிரிவுகள் பொய்யானவை, கற்பிக்கப்பட்டவை, சில பிரிவு மக்களை மேலெழும்பவிடாமல் கீழேயே கிடக்குமாறு திட்டமிட்டுச் செய்துவைத்த சதி வேலைகள்' என்பதை மிகவும் வெட்ட வெளிச்சமிட்டுக் காட்டுபவையாக உள்ளன. கதைப்பாடல்களின் இத்தகைய சமூகச் சீர்திருத்த ஆற்றலையும், சமூக விழிப்புணர்வையும் அகற்றும் வண்ணம் கதையில் பல மாற்றங்களையும், சேர்க்கை களையும், நீக்குதல்களையும் உயர்வர்க்கத்தாரும் ஆட்சியதிகார முடையாரும் மற்றும் இத்தகு சமூகவிழிப்புணர்வு, சீர்திருத்தத்தை விரும்பாதவர்களும், சீர்திருத்தத்தால் செல்வாக்கை இழப்பவர் களும் செய்திருக்கின்றனர். காலப்போக்கில் படிப்படியாக அவை செய்யப்பட்டு வந்திருக்கின்றன. கதையின் உண்மைநிகழ்வையே தூக்கி உண்டு ஏப்பம் விடுபவையாக அவை அமைந்துள்ளன.

இத்தகு பொய்த் திரைகளையெல்லாம் அகற்றிவிட்டுப் பார்ப்பதைக் கதைப்பாடல் ஆராய்ச்சியாளர்கள் தங்களின் முக்கியக் கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டியுள்ளது. இது அவர்களின் சமூகக்கடமையாகவும் இலக்கியக் கடமையாகவும் முன்னிற்கின்றது.

காத்தவராயன் கதையில் கதைமாற்றங்கள்

காத்தவராயன் கதைப்பாடலில் மாற்றுருவங்கள் பல உள்ளன. இக்கதைப்பாடல் பல நூற்றாண்டுகளாகச் செவிவழி, வாய்வழி நிலைத்து வந்திருக்கிறது. மிகவும் பிற்பட்ட காலத்தேதான் இதனை எழுதி வைத்திருக்கிறார்கள். விஜயநகரர் ஆட்சிக் காலத்துக்கும் முன்பே நடந்த நிகழ்வை இக்கதைப் பாடல் அடி யொற்றியது. வழிவழியாகப் பாடப்பட்டு வருதலால் பிற்காலச் சேர்க்கைகள் மிகுதியாக உள்ளன. கும்மி, மோடி எனும் நாடகம், உடுக்கைப்பாட்டு, நாடோடி நாடகம், இசை நாடகம், கூத்து, கதைப் பாடல் என்ற பல்வேறு இலக்கிய வாய்மொழி வடிவங்களில் இக்கதை பாடப்படுகிறது.

மனிதர்கள் சாதியில் ஏற்றத் தாழ்வுடன் பிறந்திருந்தாலும் அன்பால் பிணைக்கப்பட்டு மணம் செய்து கொண்டு வாழலாம்; வாழவேண்டும் என்ற கருத்தை அறிவிப்பதாக, வலியுறுத்துவதாக அமைந்துள்ள இக்கதையில் இக்கருத்து நீக்கப்படும் விதத்தில் பல இடைச் செருகல்களும், பிற்சேர்க்கைகளும் கதை மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

1. பறையர் சாதியில் பிறந்த காத்தவராயனும் அந்தணர் குலப் பெண் ஆரியமாலாவும் காதல் கொண்டு மணம் செய்து வாழ்ந்தனர். இதனால் சாதிக்குள் மணம்புரிய வேண்டும் என்ற சமூகக் கட்டுப்பாட்டை மீறியவர்களாகி விட்டனர். எனவே உயர்குலத்தாராலும், ஆட்சியதிகாரத்தாலும் கழுவேற்றப்பட்டுக் கொல்லப்பட்டான் காத்தவராயன். இதுதான் கதை. கதையின் எதிர்பார்ப்பு சாதிமீறிய காதல் மணங்கள் ஆதரிக்கப்பட வேண்டும் என்பதாகும். இதனை அடியோடு மாற்றும் விதத்தில் கதையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

   அவையாவன: 1. காத்தவராயன் முற்பிறவியில் ஆரிய மாலையின் மகனாவான். எனவே இப்பிறவியில் அவளை விரும்பியது தவறாகும் (கருத்துப் புலப்பாட்டில் கதைப் பாடல்கள் (முனைவர் பட்ட ஆய்வேடு), ப.350).

2. காத்தவராயன் பறையர் குலத்தவனல்ல. அவன் அந்தணப் பெண்ணுக்குப் பிறந்தவன்.[30] மூன்று நாள் பறைச்சி முலைப் பால் உண்டவன் அவ்வளவே. "மூன்று நாள் பறைச்சி முலையுண்டு வீற்றிருப்பாய்" என்கிறது காத்தவராயன் கதை. (நா.வா. பதிப்பு, ப.44) எனவே அந்தணனான அவன் அந்தணர் குலப் பெண்ணான ஆரியமாலாவை மணந்தான் எனக் கூறப்பட்டு ஒரே சாதிக்குள்தான் மணம் நடந்தது என மாற்றியுள்ளனர். இங்கு, பின் ஏன் கழுவேற்றம் நடந்தது என்ற வினா எழுகின்றது. இவ்வினாவிற்கு விடையாகக் கழுவேறிச் சாக வேண்டும் என்பது அவனுக்கிருந்த சாபம். சாபத்தின் விளைவாகத்தான் அவன் கழுவேறினான் என்று கூறப்பட்டுள்ளது.[31]

காத்தவராயன் பறையர் குலத்தவன் என்பதற்குத் தன்னைத் தானே அவன் 'பறையன்' என்று கூறிக்கொள்ளும் கதையின் முற் பகுதி அமைப்புகளும் வளர்ப்புத் தந்தை கூற்றும் சான்றுகளாக உள்ளன.[32]

---

30. காத்தவராயன் தேவலோகச் சாபம் பெற்று எலுமிச்சம் பழமாய் வந்து நீரில் கிடந்தபோது நீர் மொள்ள வந்த களத்தூர் அனந்தநாராயணன் என்ற அந்தணரின் மனைவி அப்பழத்தை எடுத்து உண்ண, அவள் வயிற்றில் கருவாகி வளர்ந்து பிறந்தார். காத்தவராய சுவாமி வரலாறு கும்மி, பெரிய எழுத்துக் கதை, ப. 11, காத்தவராயன் கதை, நா.வா. பதிப்பு ப. 43, 45, "பெற்றாளே பிராமணத்தி பேருமிட்டான் சேப்பிளையான்", காத்தவராயன் கதை, நா.வா. பதிப்பு, ப. 48.

31. "தகப்பனந்த ஈஸ்பரனார் தான்கொடுத்த சாபமது
பறையா பெரும்பறையா வலையா கழுவாவென்று
அவரிட்ட சாபமது அப்போ பலிக்குதங்கே" (மேற்படி, ப.186)

32. காத்தவராயனின் கின்னார இசையில் மயங்கிப் பின் தொடர்ந்த ஆரியமாலாவிடம் காத்தவராயன்,

"பார்தனிலே நானும் பறையன் பறையன்"

காத்தவராயன் கதை, நா.வா. பதிப்பு ப.48

எனக் கூறியதாக உள்ளது.

வளர்ப்புத்தாயும்
பின்புத்திதான் நினைக்கும் பறைச்சிபெத்த பிள்ளையவன்
நாம்பெத்த பிள்ளையென்றால் நம்மைப்போல் ஆகாதோ

எனக் கூறுவதாகவும் உள்ளது.

மற்றொன்று: காத்தவராயன் முற்பிறவியில் தேவனாக இருந்தவன். ஆறு தவமாந்தரை மோகித்துச் சிவபிரானின் சாபத்துக்கு ஆளாக்கிப் பூமியில் பிறந்தான். எனவே தேவனான காத்தவராயன் இவ்வுலகப் பிறப்பிலும் மனுதர்மம் மாறாமல் ஆரியமாலை என்ற அந்தணர் குலப் பெண்ணை மணந்தான் என்ற அமைப்பு ஒரே சாதிக்குள்தான் மணம் நிகழ்ந்தது என்பதை வலியுறுத்தச் சேர்க்கப்பட்டுள்ளது.

சாதி மீறிய காதல் என்ற கதைக்கருவையே ஐயத்திற் குள்ளாக்கும்படி இது இணைக்கப்பட்டுள்ளது. இந்த முற்பிறப்புக் கதை சுந்தரர், பரவையாரையும் சங்கிலி நாச்சியாரையும் மணம் செய்து கொண்ட கதையை ஒத்திருப்பதால் இது சைவர்கள் புனைந்த கதையாகலாம் என்பது நா.வா.வின் கருத்து.[33] கலப்புத் திருமணம் மூலமாகச் சாதிச் சட்டதிட்டங்களை மீறியதால் கழுவேற்றத் தண்டனை பெற்றதைச் சாப விளைவாக மாற்றிக் கதையின் ஆற்றலைப் போக்க எண்ணினார்கள். ஆனால் நாட்டுமக்களின் வாய்மொழி இலக்கியம் என்ற முறையில் முற்பிறப்பு நிகழ்ச்சி சாப நிகழ்ச்சிகளை விடவும் கலப்புத் திருமண நிகழ்ச்சியும், கழுவேறும் நிகழ்ச்சியும் உண்மையின் ஒளி பெற்று வலுவுடையனவாகிக் கதை முடிவில் கேட்போர் உள்ளத்தில் சோகவுணர்வையும் இரக்க உணர்வையும் எழுப்பிக் காத்தவராயன் மீது அனுதாபம் கொள்ளச் செய்வனவாக உள்ளன. காத்தவராயனைச் சமூக மாறுதலுக்கான உணர்ச்சியைத் தூண்டும் வீரனாகவும் கொண்ட காதலுக்காகச் சாதி அமைப்பு விதிகளை எதிர்த்துக் கொள்கைக்காக உயிர் நீத்தவனாகவும் உள்ளத்தில் நிலைபெறச் செய்துவிட்டன. முற்பிறப்புக் கதையும், சாப விளைவுக் கதையும் எடுபடாமல் போய்விட்டன.

காத்தவராயன் அந்தணப் பெண்ணான ஆரியமாலாவுடன் வேறுசாதிப் பெண்கள் சிலரையும் மணந்திருந்தான். அக்கால வழக்கப்படி ஆடவர் பல பெண்டிரை மணந்து கொள்ளுதல் குற்றமாகக் கருதப்படுவதில்லை. அரசன் உட்பட இவ்வாறே நடந்து கொண்டவர்கள்தான். ஆனால் கீழ்க்குலத்துப் பறையனான காத்தவராயன் உயர்குலப் பெண்ணான ஆரிய மாலாவை மணந்ததுதான் குற்றமாகக் கருதப்பட்டது. தான் குற்றவாளி அல்ல என்று அரசன் முன் வாதிட்டான்

33. ஆராய்ச்சி (இதழ்) மார்ச் 1971, ப.134.

காத்தவராயன். தான் குற்றவாளி என்றால் பலசாதிகளிலிருந்து பல பெண்களை மணந்த அரசனும், தெய்வங்களும் முனிவர்களும் கூடக் குற்றவாளிகள்தான் என்று வாதிட்டான். கதையின் இத்தகு முற்பகுதிகள் பழமையானவையாகும். பிற்பகுதியில் தன்னைத் துஷ்டன், குற்றவாளி, தனக்கு நற்புத்தி புகட்டவேண்டும் என்று கூறும் பகுதிகளும் கழுவேற வேண்டாம் என்று அரசன் தீர்ப்பளித்த பின்னும், கழுவேறிச்சாக வேண்டும் என்று தனக்கு ஒரு சாபம் உள்ளதால் அது நிறைவேற்றப் படவேண்டும் என்று காத்தவராயன் கூறிக் கழுவேறுதற்குத் தானே வலியச் செல்வதாக உள்ளவை பிற்சேர்க்கையாகும். தான் குற்றவாளி அல்ல என்று வாதிட்டு விட்டுப் பின் தன்னைக் கழுவேற்றுமாறு கூறுதல் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. இது உண்மை எது என்பதை வெளிக்காட்டி நிற்கிறது.

மனுதர்ம நீதி என்று சொல்லப்படும் 'சாதிக்குள் திருமணம்' என்பதை மனுதர்ம அநீதி என வெளிப்படுத்தும் வண்ணம், அவ்வநீதியை எதிர்த்து அந்தணர் குலப்பெண்ணைப் பறையனான காத்தவராயன் மணந்தது, அதற்காகக் கழுவேறிச் சாகத் துணிந்து தந்தை கையில் அகப்பட்டது, தான் குற்றவாளி அல்ல என்று வாதிட்டது, தான் கொண்ட காதலுக்காகக் கழுவேறி உயிர் நீத்தது ஆகிய பகுதிகளே நாட்டுப்பாமர மக்கள் படைப்பான பகுதிகளாகும். மற்றவை இடைச்செருகல்கள், பிற்சேர்க்கைகள் என்பதைக் கதைப்பாடல் ஆய்வாளர்கள் நன்கு அறிய இயலும். சாதி விட்டுச் சாதி காதல் கொண்டு மணம் செய்ததற்காக நாடு விட்டு நாடுபோய் வாழ்ந்த ஒருவனைப் பிடித்துவந்து கழுவேற்றிக் கொன்றுவிட்டு முற்பிறப்புக்கதை, முற்பிறப்புச் சாபம் என்றுள்ள இடைச் செருகல்களை ஏற்படுத்தியுள்ளனர். இது நந்தனைக் கோயில் முன் எரித்துவிட்டு, அவன் சோதியில் கலந்துவிட்டான் என்று படைத்துள்ளது போன்றது என்று குறிப்பிட்டுள்ளார். நா. வானமாமலை (காத்தவராயன் கதை, ப.5).

கதை பழமையானதாக உள்ளபோது அதில் இடைச் செருகல்களும், பிற்சேர்க்கைகளும் மிகுதியாக உள்ளன என்பதற்குத் தக்க சான்றாக அமைவது காத்தவராயன் கதைப் பாடலாகும்.

பறையன் பிராமணப் பெண்ணை மணந்து நாடு விட்டு நாடுபோய் வாழ்ந்துவிட்ட உதாரணம் பரவிவிட்டால் சாதிமுறை குலைந்துபோகும்; சாதி அமைப்பை அடிப்படையாகக்

கொண்ட நில்வுடைமை முறையும் சீர்குலைந்து போகும். இதனைத் தடுக்கவே பிற்கால மேல்சாதியினர் கதையின் ஆற்றலைப் போக்கப் பல மாறுதல்களைச் செய்துள்ளனர்.

தேவலோகத்தில் சப்த கன்னியராக இருந்தவர்களே சாபம் பெற்றுப் பூமியில் பல்வேறு சாதிகளில் 7 கன்னிகளாகப் பிறக்க அவர்களைக் காத்தவராயன் 'பூமியில் பிறந்து மணம் செய்து வருவாய்' என்ற சிவனின் சாபப்படியேதான் மணந்தான் என்பதும் இடைச் செருகலாகும். அந்தணப் பெண் ஆரியமாலா, செட்டிப் பெண் ஒந்தாயி, சலுப்பச்சி சவுதாயி, இடைக்குலக் கருப்பாயி, மதுவெடுக்கும் குலப் பூவாயி, வண்ணார நல்லி என்ற ஆறு பெண்களை மணந்தபின், தான் கழுவேறி நிற்கும்போது இடைக்குல நல்லதங்காள் மோர் கொண்டு தர, ஏழுபெண்களைத் தான் அடைந்துவிடச் சாபம் நீங்கும் எனக் காத்தவராயன் உரைக்க உடன் அரசனும் அந்தணரும் திருவரங்கம்பட்டியில் வாழ்ந்திருக்கக் கூறினராம். இது அரசும் உயர்குலமும் கீழ்க்குலத்தாரிடம் கடுமையான அடக்குமுறைகளுடன் நடந்து கொண்டதை மறைக்கச் செய்யப்பட்ட இடைச்செருகலாகும். சாபத்தின்படி தான் கழுவேறவே வேண்டும் என்று காத்தவராயன் மன்றாடிக் கழுவேறியதாக உள்ளது. (காத்தவராயன் கதை, நா.வா. ப.48). கழுவேற்றம் உண்மையாக நடந்த நிகழ்ச்சி. இதை மறைக்கவோ மாற்றவோ இயலாது. எனவே கழுவேற்றத்துக்கு ஒரு காரணமாகக் கழுவேறக் காத்தவராயனே சம்மதித்ததாகச் சாபக்கதை சேர்க்கப்பட்டுள்ளது. அரசு, அந்தணர் குலத்தின் மீது யாதொரு குற்றமும் இல்லை எனக் காட்டவும், கீழ்க் குலத்தாரோடு சமரசம் செய்து கொள்ளும் போக்கிலும் இப்பகுதி இடைச்செருகலாய் இணைக்கப்பட்டுள்ளது.

காத்தவராயனை உயர்குலத்தானாகிக் காட்டுதற்குரிய காரணத்தை ஆராய்ந்த கோ.கேசவன் அவர்களின் கருத்தாவது: "தாழ்குலத்தானான காத்தவராயனை உயர்குலத்தானாக்கிக் காட்டுதல் இடைச்செருகல் எனக் கருத இயலாது. இது அக்கால மீறல் சிந்தனையின் பலமும் பலவீனமும் ஆகும். அதன் வரையறை எனவும் கொள்ளலாம். இது மீறல் சிந்தனையாகப் பரிணமிக்கும்போது அதன் பலத்தை உணர்கிறோம். அது மீண்டும் ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே சுழன்று முடங்கும் போது அதன் பலவீனத்தை உணர்கிறோம்" என்று தன் கதைப் பாடல்களும் சமூகமும் (பக். 86) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் கூற்றில் கீழ்க்குலத்தான் ஒருவனை மேற்குலத்தானாக்கிக்

காட்டுதல் என்பது பலமாகவும் பின் அவனைக் கீழ்க்குலத் தானுக்குரிய தண்டனையை அனுபவிக்கச் செய்வதால் பலவீனமாகவும் கொண்டு அவர் கருத்துக் கூறியுள்ளார்.

ஆகக் கதைப்பாடல், இலக்கியமாக எழுதப்பட்ட காலத்திலேயே அவனை உயர்குலத்தானாக்கிக் காட்டுதல் என்பது படைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது இவர் கருத்தென்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் முத்துப்பட்டன் போன்ற கதைப் பாடல்களில் முதலில் பொம்மக்கா, திம்மக்கா போன்றோர் கீழ்க்குலப் பெண்களாகக் காட்டப்பட்டுப் பிற்காலத்தே அவர்கள் உயர்குலத்தாராக்கிக் காட்டப்பட்டதற்கான களஆய்வுச் சான்றுகள் கிடைத்துள்ளன. அதனால் கீழ்க்குலத்தாரை உயர் குலத்தாராக்குதல் என்பது பின்னாளில் ஏற்பட்ட இடைச் செருகல் எனக் கொள்வதில் தவறில்லை என்றே தோன்றுகின்றது.

காத்தவராயன் வாழ்ந்து மறைந்த சமுதாயப் புரட்சி வீரன் என்பதற்கான அகச்சான்றுகள் பல உள்ளன. காத்தவராயனைக் கழுவேற்றிய இடம் திருச்சிக்கு வடக்கே 10கி. மீட்டர் தொலைவில் உள்ள ஆற்றங்கரையின் பரந்த திடலில் நடந்ததாக நம்பப்படு கிறது. இத்திடலின் மேற்குப்பகுதியில் கிழக்கு நோக்கிய நிலையில் சிறுகோயில் உள்ளது. கோயிலில் உள்ள 3 அடிநீளமும் ஒன்றரை அடி அகலமும் 1 அடி உயரமும் கொண்ட நீள் சதுரக்கல் காத்தவராயனை அடையாளப்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர்.

பாக்கூரில் பங்குனி, பௌர்ணமி நாளில் நடக்கும் கழுவேற்றப் பாரிவேட்டைத் திருவிழாவுக்கு 1 $^1/_2$ ஏக்கர் நிலம் மானியமாக உள்ளமை தெரிகிறது. இதில் கிடைக்கும் வருவாய் விழாவுக்குச் செலவிடப்படுகிறது. சைவ வேளாளர் குடும்பம் பொறுப்பேற்று ஆண்டுதோறும் இவ்விழாவை நடத்துகிறது.

வார்த்தலை, தஞ்சை, தென் ஆற்காடு மாவட்டங்களில் இவ்விழா நடைபெறுகின்றது. (காத்தவராயன் கதைகள் - ஓர் ஒப்பாய்வு, ந. வாசுதேவன், எம்.ஃபில். ஆய்வேடு, 1986, ப. 103, 126, 129-131.

குறுக்குளாஞ்சி கதை, தடிவீரசுவாமி கதை, சின்னணைஞ்சான் கதைகளின் கதை நிகழ்ச்சிகள் - சில முடிவுகள்

இம்மூன்று கதைப்பாடல்களிலும் காணப்படும் கதைத் தலைவர்கள், கதைத் தலைவியரின் மனத்தை வசியம் செய்து தன்

பக்கலில் திருப்பினர் என்ற நிகழ்ச்சிகள் கதைகளில் காணப் படுகின்றன. வசியம் செய்து பெண்ணை வசப்படுத்துதல் என்ற அமைப்பு இடைச்செருகலாகலாம் எனக் கொள்ள இடமுள்ளது. இவர்களுக்குள் மனமொத்த காதல் இல்லை; வசிய மருந்தின் வேகத்தினால்தான் வாழ்வில் இணைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்ற முறையில் கதை நிகழ்ச்சிகள் உள்ளன. இது வேற்று சாதி ஆண்கள் மீது காதல் கொண்ட பெண்கள் சுய நினைவின்றியே தங்களை அவர்களிடம் இழந்தனர் என்று பெண்கள் நிலையைக் கொச்சைப்படுத்தும் முறையிலும் கதை நிகழ்ச்சிகள் படைக்கப்பட்டுள்ளன. இங்குப் பல கேள்விகள் எழுகின்றன. 1. வசிய மருந்தின் வேகத்தால் தங்களை இழந்த பெண்கள் தங்களை இவ்விதம் ஏமாற்றிய ஆண்கள் மீது மாறாக் காதல் கொண்டது எவ்வாறு? 2. உயிருள்ளளவும் நின்னைப் பிரியேன் என்று கூறுவது எப்படி? 3. தலைவனுடனேயே இறுதி வரை மறைவு வாழ்க்கை வாழ்ந்து அவன் இறப்பின் போது உடன் இறப்பது ஏன்? என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன.

குறுக்குளாஞ்சி கதையில் வரும் அந்தணப்பெண் பூரண வல்லியை முத்து முதலியார் வசிய மருந்து கொண்டு மயக்கிக் காதல் வலையில் வீழ்த்தியதாகக் கதைப்பாடல் கூறுகிறது.

சுக்குப் பொடியைத் தானெடுத்துத் தூத்துனாரே அவள் மேலே
மாயநல்ல பொடியால்தானும் மயக்குனாரே கன்னியரை
கைவசமாய்ப் போனாளிந்தக் கன்னியரும்
பூரணவல்லியுந்தான் *(வரி: 174–176)*

என்பது பாடல் வரிகளாகும். வேற்று நாடான கேரளம் சென்று வாழப் புறப்பட்ட பொழுது, ஒருவருக்கொருவர் இடையில் கைவிடுவதில்லை என்று உறுதி கூறிக்கொண்டு புறப்பட்டனர் என்பது,

என்னுயிரு உள்ள மட்டும் உன்னை இடையிலே
விடுவதில்லை *(வரி. 227)*

என அமைந்துள்ளது. தூண்டி முத்து கொல்லப்பட்ட போது பூரணவல்லி.

என்னைப்போல் நடந்த பெண்கள் இருக்கலையோ
வையகத்தில்
வையகத்தில் இல்லாத–நானும் வங்கொடுமை செய்தேனோ
(419–420)

என்று காதலனை இழந்த துயரில் ஒப்பாரி வைத்துப் புலம்பினாள். இத்தகு வரிகளெல்லாம் அவர்களுக்குள் உண்மையான காதலும், உள்ளன்பும் இருந்ததையே வெளிப்படுத்துகின்றன.

இதுபோன்று தடிவீரசுவாமி கதையிலும் சோணமுத்துவை மந்திரமூர்த்தி அவளது மாற்றுச் சேலையில் மந்திரச் சக்கரங்கள் வரைந்து அவளை வசியப்படுத்தியதாக உள்ள நிகழ்ச்சிகள் உள்ளன. (வரி. 170-200). அவர்கள் சாதி விட்டுச் சாதி காதல் கொண்டு சாதிச் சட்டங்களை மீறவில்லை; வசியம் செய்ததால்தான் காதல் ஏற்பட்டது என்று கதையின் அழுத்தத்தை மாற்றும் நிகழ்ச்சியாக வசியச்செயல் புகுத்தப்பட்டுள்ளது. ஆனால் கொல்லப்படும் நிலை வரை அவர்கள் இணைபிரியாது மறைந்து வாழ்ந்ததையும், தடி வீரசுவாமி வெட்டிக் கொல்லப்பட்ட பின் உயிர் வாழ விரும்பாமல் சோணமுத்துவும் தற்கொலை செய்து கொள்வதையும் கதைப்பாடல் காட்டுகிறது.[34] எனவே வசியத்தால் அவள் மயங்கவில்லை. உள்ளன்போடு கூடிய காதலே அவர் களுக்குள் இருந்தது என்பது தெளிவாகின்றது. காத்தவராயன் கழுவேறத் தானே உடன்பட்டதாக உள்ள அமைப்பு போன்று இதிலும் தடிவீரசுவாமி குளிகைகளை உடலிலிருந்து எடுத்து விட்டு, வெட்டுப்பட்டு இறக்கச் சம்மதித்தாக உள்ள அமைப்பு, உள்ளது.[35] இதுவும் இடைச்செருகல்தான். கொல்லப்பட்டவனின் சம்மதத்துடன்தான் கொலை நடந்தது என்று வலியுறுத்த இந்த இடைச்செருகல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சி அதிகாரத் திலுள்ளவர்கள்மீது பிழை இல்லை என்று காட்டவும் இது உதவியுள்ளது.

---

34. "நாவிலே சீலைசுத்தி
நல்லுயிரை மாய்த்துவிட்டார்" (வரி: 437)

35. பார்த்தானே மந்திர மூற்றி
பாவினையாய் ஏது சொல்வான்
வாருங் காணும் தேவமாரே
வார்த்தையொன்றுஞ் சொல்லக் கேளும்
வலது புசமதிலே ஒருகுளுசம்
வலது துடையதிலே ஒருகுளுசம்
புடதியிலே ஒரு குளுசம்
புளந்து மங்கே தானெடுத்தால்
அடியோடே முடி சாய்வேன்
ஆனதொரு தேவ மாரே" (வரி: 405-409)

சின்னணைஞ்சான் கதையிலும் வசிய மருந்தினாலேயே சின்னணைஞ்சியை மயக்கியதாகக் கூறப்பட்டுள்ளது (வரி. 2536-2564)

காத்தவராயன் கதையில் சாதி விட்டுச் சாதி காதல் கொண்டமைக்கு முற்பிறப்புக் கதையையும் சாப விளைவுக் கதையையும் புகுத்தியுள்ளது போல இக்கதைகளிலும் வசியச் செயல்கள் இடைச்செருகல்களாக இணைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுள்ளது. மனமொத்த காதலை வெளிப்படுத்து வதாக அவர்கள் பேசிக்கொள்ளும் மொழிகள் முதற் சான்றா கின்றன.

> உள்ளி முடிந்தாலும்
> உயிரிழந்து போனாலும்
> ஒன்னைநான் மறப்பதில்லை
> உன்மேலே ஆணையுண்டு
>
> (தடிவீரசுவாமி கதை, வரி: 230-231)

> முந்தியது தனைவிரித்து முகமதிலே வீசுவாளாம்
> செந்திருவே ஒன்னுடைய சிநேகம்விட்டுப் பிரியாது
> இவர்களிரு பேருமாக யிருந்துசுகம் பாராட்ட
>
> (சின்னணைஞ்சான் கதை, வரி: 2683-2685)

என்றமைந்துள்ள வரிகள் காணத்தக்கன. ஒருவர் இறப்பிற்குப் பின் மற்றவரும் உயிர் துறந்து விடுகின்றனர். உள்ளன்பான காதல் அவர்களுக்குள் இருந்தது என்பதற்கான இரண்டாம் சான்றாக இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது. எனவே வசியத்தினால் காதல் வயப்படுத்தினர் என்ற அமைப்பு சாதிவிட்டுச்சாதி காதல் நிகழ வில்லை; அதற்கு வசிய மருந்தே காரணம் எனச் சப்பைக் கட்டுக் கட்டுவதற்காகப் படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்குள் தூய்மையான காதல் இருந்ததைக் கதைப்பாடல்களின் பிற நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

இதுபோன்று சின்னணைஞ்சான் கதையின் ஒரு பிரதியில் (சுவடி எண்: 46-47) சின்னணைஞ்சான் மணமான பெண்ணான சின்னணைஞ்சியை விரும்பினான் எனக் கூறி அவன் கொண்ட காதலுக்குக் களங்கம் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் சுவடி எண். 376- சின்னணைஞ்சான் கதைப்பிரதியில் அவள் மணமாகாதவள் என்பதும் பூப்பெய்திப் பூப்புனித நீராட்டு விழா எடுக்கப்பட்ட பின் அணிகலன்கள் பூண்டு, அணிகலனே பல அணிகலன்கள்

பூண்டு வந்த பாவனையில் சின்னணைஞ்சி வந்தபொழுதுதான் அவளைக் கண்ணுற்றுச் சின்னணைஞ்சான் காதல் கொண்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அவள் கன்னி என்பது அவளைக் காணாமல் தேடிய அவளின் தந்தை மொழிவழியாகக் கீழ்க்காணுமாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> கன்னி யழியுமுன்னே கணவனிடஞ் சேருமுன்னே
> காணாமல் மறைத்துக் கொண்டார் பாவி
>
> (வரி: 2057-2058)

என்ற வரிகள் சான்று. மேலும் அவளுக்குத் திருமணம் நிச்சயிக்கப் பட்டிருந்தது என்பதும் தந்தை மொழியாக வெளியிடப்பட்டுள்ளது.

> கட்டுடனே நிச்சயித்த கனமக்கா (வரி: 2078)

என்பது பாடல்வரியாகும். எனவே மற்றொரு பிரதியிலுள்ள சின்னணைஞ்சி மணமானவள் என்ற கதைமாற்றம் சின்னணைஞ்ச வரின் பண்பைக் கீழிறக்கிக் கீழ்க்குலத்தாள் என்று தெரிந்தும் காதல் கொண்ட அவரின் நற்பண்பை, உள்ளார்ந்த காதலைத் திரித்துக் கூறுவதாக உள்ளது.

சிவனணைஞ்சவர், திருமணம் முடித்துக் கணவனோடு வாழ்பவளை விரும்பியவன் என்று கூறிப் பிறன்மனை நயப்பவனாகவும் காமுகனாகவும் காட்ட முயற்சி செய்துள்ளமை வெளிப்படத் தெரிய வருகிறது. இவ்வாறு காலப்போக்கில் கதையின் சீர்திருத்த ஆற்றலையும் அழுத்தத்தையும் மாற்றும் கதை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை தெரிகிறது. இரு பிரதிகள் உள்ள போது கதை மாற்றங்களை ஒப்பிட்டு அறிந்து கொள்ள முடிகின்றது. தடிவீரசுவாமிகதை, குறுக்குளாஞ்சி கதைகள் போன்றன ஒற்றைக்கொரு சுவடிப்பிரதியாய்க் கிடைத்துள்ளதனால் ஒப்பிட்டு அறிய இயலவில்லை. கதைப்பிரதிகள் அதிகமாக உள்ளவற்றில் கதை மாற்றங்களும் அதிகஅளவில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. காத்தவராயன் கதை இதற்குத் தக்க சான்று.

தடிவீர சுவாமி கதைப்பாடலில் தடிவீரசுவாமி ஏற்கெனவே மணமானவன்; மணமான அவனே சோணமுத்து மீது காதல் கொண்டான் எனக் கூறப்பட்டுள்ளது. மணமான ஒருவன் வேறு ஒரு பெண்ணையும் விரும்பி அவளுடனும் வாழ்வது என்பது அக்காலகட்டச் சமுதாயத்தில் தவறான ஒன்றாகக் கருதப்படவில்லை; அத்துடன் அது ஆணின் வலிமை

எனக் கருதும் ஆணாதிக்க நிலையாகவும் கருதப்பட்டது. எனவே தடிவீர சுவாமியின் காதல் சமூக விதிகளுக்கு மாறானது இல்லை என்பது தெரிகின்றது. என்றாலும் கூட இக்கதைப்பாடலின் பிறபிரதிகள் கிடைத்தால் கதை மாறுதல்களை எளிதில் அறிய வாய்ப்பு ஏற்படும். இதுவரை கூறிய ஆய்வு முடிவுகளும் மாற்றம் பெறலாம்.

குமார சுவாமி எனும் சின்ன நாடான் கதைப்பாடலில் கதை மாற்றங்கள்

பணக்காரக் குடும்பங்களின் இளைஞர்கள் திருமணம் செய்யாமல் வேறு சாதிப் பெண்களோடு சேர்ந்து வாழ்வதைக் குடும்பத்தினர் எதிர்ப்பதில்லை. திருமணமாவதற்கு முன்பும் பின்பும் பிறசாதிப் பெண்களோடு தொடர்பு வைத்துக் கொள் வதற்குச் சமூகச் சட்டங்கள் தடைவிதித்ததில்லை. ஆனால் மணமான ஒருவன் மனைவியைத் தள்ளி வைத்துவிட்டு வேற்று சாதிப் பெண்ணுடனேயே வாழச் சென்று விடுவதைச் சமூகச் சட்டங்கள் எதிர்த்தன. அவன் சமூகச் சட்டங்களை, சமூகக் கட்டுப்பாட்டு விதிகளை மீறியவனாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டான். குமாரசுவாமி கதையிலும் இதுதான் நடந்தது. பூப்படையாத பெண்ணை மணம் செய்து வைத்ததால் அப்போதே இளைஞனாக, இல்வாழ்க்கை மேற்கொள்ளத்தக்க வயதை அடைந்திருந்த குமாரசுவாமி, நாவிதர் சாதிப் பெண்ணை விரும்பி, அவளுடன் மனமொத்த வாழ்க்கை நடத்தினான். பூவணைஞ்சு பருவம் எய்தியதும் அவளுடன் வாழ அவன் சென்றிருந்தால் கதையில் சிக்கல் தோன்றியிராது. ஆனால் அவன் நாவிதப் பெண் மீது உண்மையான காதல் வைத்திருந்ததால் இடையில் அவளைக் கைவிட்டுவிடச் சம்மதிக்கவில்லை. இவ்வகையில் அவன் காதலால் சாதியச் சமூகக் கட்டுப்பாட்டை மீறியவனாக ஆகிவிட்டான். தந்தையும், பெரிய தந்தை, சிறிய தந்தையார் உட்பட அனைவரும் அவன் மீது வெறுப்புக் கொண்டனர். அவனுக்குரிய அனைத்துச் சொத்துரிமைகளும் அவனுக்குப்பின் யாருக்குச் செல்லும்? என்ற வினா எழுந்துவிட்டது. நாவிதப் பெண்ணுக்குப் பிறந்த வாரிசுகளுக்குச் சொத்து சென்று விடாமல் இருக்க அவனைத் திட்டமிட்டுக் கொலை செய்தனர். இதன் மூலம் சாதி மீறிய காதல் மூலம் நிலவுடைமை அமைப்புகள் சிதறிவிடாமல் காக்கப்பட்டன. சாதி மீறிய காதல் மணங்கள் நிலவுடைமைக்குரிய வாரிசு ஒரே சாதிக்குள் இருக்க வேண்டும் என்ற சமூக விதியை மீறுவதாக உள்ளன. எனவே

அது தண்டிக்கப்பட்டது. தான் பெற்ற மகனும் இத்தண்டனைக்குத் தப்ப இயலாது என்பதையே இக்கதை காட்டுகிறது.

இக்கதை நிகழ்வு 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தது என்பது முன்னரே கூறப்பட்டது. கதைப்பாடலாகப் பிற்காலத்தில் எழுந்த இது வில்லுப்பாடலாகப்பாடப்பட்டு வருகிறது. பல சுவடிப் பிரதிகள் இதற்கு நட்டாத்திப் பகுதியில் உள்ளன. ப.யோ. தங்கசுவாமி என்பவர் குமார சுவாமி நாடான் வில்லுப்பாட்டுக் கதை என்ற தலைப்பில் மூன்று சுவடிப் பிரதி களை ஒப்பிட்டு நூல் வெளியிட்டுள்ளார். இதில் காத்தவராயன் கதைப்பாடலில் காணப்படும் இடைச்செருகல்கள் போன்று, குமாரசுவாமியின் உயர்பண்பைத் 'தொட்டவளை விட்டிட முடியாது' என்ற கொள்கைப் பிடிப்பைக் கீழிறக்கும் நோக்கோடு பல இடைச்செருகல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒன்று: தன்னை விரும்பி வந்தவனை உள்ளன்போடு ஏற்றுக் கொண்டு அவன் ஒருவனுடனேயே வாழ்க்கை நடத்தி அவன் இறப்பின் பின் உயிர் வாழ விரும்பாது உடன் மடிந்த நாவிதப் பெண் ஐயம் குட்டியைக் கதைப்பாடல் பொதுமகள் என்று குறிப்பிடுகிறது.

> **<u>பொதுமகள்</u> தன்னைக்கண்டு பரதவித்து மையல் கொண்டார் *(ப.60)***
>
> **<u>பொதுமகள்</u> அய்யக்குட்டி புகழ்பெறவே மனமகிழ *(ப.74)***
>
> **உண்பதும் தின்பதும் தாய்வீடு உறங்குவது பொதுமகள் *(ப.74)***

எனும் பாடல் வரிகள் காணத்தக்கன.

இரண்டு: நாவிதப் பெண்ணுடனேயே இறுதி வரை வாழக் குமாரசுவாமி முடிவெடுத்ததற்கு, அதாவது அவன் அவ்வாறு புத்தி கெட்டுப்போனதற்குப் பூவணைஞ்சி பூப்படைந்த நேரம் சரியில்லை என்று சோதிடர் கூறியது காரணம் என்கிறது கதைப்பாடல் (பக். 74-75). சோதிடம் பார்க்கும் வழக்கத்தைக் கதையில் இடைச்செருகலாக இணைத்துள்ளனர் எனத் தெரிகிறது.

மூன்று: அஞ்சுபத்து நாட்டின் மணிய உரிமையை வாங்கி அளித்த பெரிய தந்தை வள்ளிக்குட்டி நாடார், குமார சுவாமி மீது வன்மம் கொண்டு அவனின் மணியம் பார்க்கும் உரிமையைத் திரும்பப் பறிக்க எண்ணம் கொண்டது ஏன் என்பதற்கான

காரணம் கதைப்பாடலில் தெளிவாக விளக்கப்படவில்லை. இந்த உரிமை நாவிதப்பெண்ணின் வாரிசுக்குச் சென்று விடுவதைத் தடுத்தற்குத்தான் என்பது கதைப்பாடலில் மறைக்கப் பட்டுள்ளது; அல்லது விடப்பட்டுள்ளது. 'வெறுமனே பூமி உரிமையைக் குமாரசுவாமி நம்மிடமிருந்து பறித்துக் கொண்டானே' என்று வன்மம் பாராட்டி அவன் உரிமைக்குட் பட்ட பகுதியில் கொள்ளையிடத் துணிந்ததும் அதனால் பகை விளைந்ததும் மட்டும் காட்டப்பட்டுள்ளது. (ப. 77-79) கதைப் பாடல்களில் காலந்தோறும் பல இடைச்செருகல்கள் நேருவதை அடையாளம் கண்டறிந்தால் மட்டுமே கதையின் உண்மைத் தோற்றத்தை உணர முடியும். சாதி மீறிக் காதல் கொண்டு அதற்காகப் பலியிடப்பட்ட குமாரசுவாமி அதற்காகவே தெய்வமாக வணங்கப்பட்டு வருகிறான். அவ்வாறிருக்க அவனின் உயர் பண்பைக் கீழிறக்கும் முயற்சிகளாக இணைக்கப்பட்டுள்ள இடைச்செருகல்களை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டு வெளிப்படுத்த வேண்டியது மிகத் தேவையானதாக உள்ளது. இடைச்செருகல் மூலம் பிற கதைப்பாடல்களில் போலவே குமார சுவாமியைக் காமுகனாகக் காட்ட முயற்சி நடந்துள்ளது என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்

16-19 ஆம் நூற்றாண்டுகளில் செந்நெறி இலக்கியங்களில் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை நெறிகளும், பண்பாட்டுப் போக்குகளும் சமூக இலக்கியத்திற்கான புதிய மதிப்புகளும், சமூக மாற்றங்களுக்கான வித்துகளும், வேர்களும் காட்டப் படாமல் பெரும் தேக்கம் ஏற்பட்டது. இதற்குக் காரணம் செந்நெறி இலக்கியங்களை இயற்றிய புலவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பில் இருந்த சிற்றரசர்கள், பாளையக்காரர்கள், ஜமீன் தார்கள் ஆகியோருக்குக் கட்டுப்பட்டவர்களாக அவர்களிடம், அவர்களின் அரச சபைகளில் ஊதியம் வாங்குபவர்களாக இருந்தனர். எனவே அன்னாரின் மீது உலாக்கள், தூதுகள், பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களைப் படைத்து இன்புறுத்துவதையே முக்கிய இலக்கியப் பணிகளாகக் கொண்டிருந்தனர். எனவே நாட்டு மக்களைப் பற்றியோ, அவர்களின் வாழ்க்கை முறை, வாழ்க்கை மாற்றங்களையோ தாம் படைத்த இலக்கியங்களில் வெளிக்காட்ட இயலாத சூழலில், சுழலில் அவர்கள் சிக்கியிருந்தனர். இந்நிலையில் இக்கால கட்டத்தில் தோன்றிய நாட்டார் இலக்கியங்களும், வில்லுப் பாடல்கள் போன்ற கலைப்படைப்புகளும் நாட்டுப்புற மக்களின் எண்ணங்களை, வாழ்க்கை நிலைகளைப் பதிவு செய்து வைப்பன வாக வளர்ந்தன. நாட்டார் இலக்கியங்கள் மக்கள் மத்தியில் தோன்றி வீரச் செயல்புரிகிற, தியாகம் செய்கிற, பன்முகப்பட்டுக் கிடக்கும் தாங்கள் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிற அல்லது அச் சிக்கலை எதிர்த்துப் போராடுகின்ற, தங்கள் முன்னேற்றத்துக்குப் பணிபுரிகின்ற ஒருவனை அல்லது ஒருத்தியைக் கதை மாந்தராகப் படைக்கும் உள்ளடக்கங்களைக் கொண்டவையாகச் செழித்து வளர்ந்தன.

சாதி அமைப்பு முறைகளோடு முரண்பட்டவர்கள், மரபுவழி விதிகளை மீறியவர்கள், சாதி அமைப்பு முறைக்கு மாறாகத் தம் தனித்திறமையாலும் முயற்சியாலும் உயர்நிலை எட்டியவர்கள் மற்றும் இவர்களின் இத்தகு நன்முயற்சிகளைச் சீர்குலைக்கும் வண்ணம் சாதி உயர்வு, தாழ்வுகளை நிலைநிறுத்த

விரும்பியவர்களால் கொலையுண்டவர்கள் ஆகியோர்கள் கதை மாந்தர்களாக நாட்டார் கதைப்பாடல்களில் அமைந்தனர். நிகழ் காலச் சிக்கல்கள், சமுதாய உணர்வு, நாட்டுமக்கள் வாழ்க்கையைக் கலைப்படைப்பின் உள்ளடக்கமாக்குதல், சாதாரண மக்கள் இலக்கிய உலகின் கதை மாந்தராக ஆதல் என்பவை நாட்டார் இலக்கியங்களின் இலக்கணங்களாக ஆயின. மொத்தத்தில் கதைப் பாடல்கள் கதையடக்கமுடைய உரைநடை இலக்கியங்கள் தோன்றுவதற்கான இடைநிலை முயற்சிகளாக அமைந்திருந்தன. இத்தகு கதைப்பாடல்கள் குறிப்பிட்ட சாதியர் குறிப்பிட்ட தொழிலைச் செய்தல் வேண்டும் என்றிருந்த வரையறைகளை மீறிச் செயல்பட்டவர்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுபவையாகவும் அமைந்துள்ளன. செவ்வியல் இலக்கியங்கள் காட்டாத, நடப்பியலில் காணப்பட்ட இத்தகு மக்களின் வாழ்க்கைச் சித்திரங்களை நாட்டார் இலக்கியங்களே கலைநயத்துடன் காட்டியுள்ளன.

சாதியும் தொழிலும்

பழந்தமிழகத்தில் தொழிலடிப்படையில் பிரிவுகள் இருந்தன. ஆரியர் வருகையின் பின்னர்ப் பிறப்பை அடிப்படை யாகக் கொண்ட சாதிகளாக இவை மாற்றமுற்றன என்று அறிஞர்கள் கருதுகின்றனர். “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று வள்ளுவரும் சாதிப் பாகுபாட்டைக் கண்டிக்கிறார். ‘‘பிறப்பால் எல்லா உயிரும் ஒன்றே’’ என்கிறார். அவரே செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வாது என்று செய்கின்ற தொழில் அடிப்படையில் பெருமை, சிறுமை கூறுவது ஒவ்வாது என்றும் குறிப்பிட்டுள்ளார். சாதியும், சாதித் தொழில் குறித்த பெருமை, சிறுமை பற்றிய எண்ணங்களும் அவர் காலத்திலேயே ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்ற சிந்தனையையே இக்குறள் எழுப்புகின்றது. சாதிப் பாகுபாட்டையும் தொழிலடிப்படையில் பெருமை, சிறுமை கடைப்பிடிப்பதையும் கடியும் நோக்கிலேயே அவர் இக்குறளை இயற்றியிருத்தல் கூடும். எவ்வாறாயினும் குறள் காலகட்டத்திலேயே சாதிப் பிரிவுகள் தொழிலடிப்படைப் பிரிவு களாக அமைந்திருந்தன என்பது உறுதிப்படுகிறது. தொடர்ந்து வந்த பல்லவ, சோழ, பாண்டியர் ஆட்சிகளின்போது சாதி அடிப்படையிலான தொழில்கள் முழுமையாக வலுப்பெற்று வந்ததை வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. உயர் குலத்தோர் என்று கருதப்பட்ட அந்தணர்களால் எழுதப்பெற்ற

மனுதர்ம சாத்திரம், கோதமர் சூத்திரம், சுக்கிரநீதி ஆகியவை நால்வருணத்தாருக்குரிய தொழிற் கடமைகள், உரிமைகள் குறித்து வரையறை செய்து எழுதப்பட்டவையாகும். இவை உயர் குலச் சார்புடைய எண்ணப் பதிவுகளாகி மனிதர்களுக்குள் சாதிப் பாகுபாட்டை வலுப்படுத்துவதற்கே பயன்படுத்தப்பட்டன என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்தாகும். மேலும் இவற்றால் சாதிக்குரிய தொழில் நிர்ணயம் செய்யப்பட்டு, குறிப்பிட்ட தொழிலைக் குறிப்பிட்ட சாதியாரே செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் போக்கே நீதி என்று கருதப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இவ்வாறு வலுப்பெற்று வந்த சாதியும் சாதித் தொழிலும் விஜயநகரர் ஆட்சிக் காலத்தில் மேலும் வலுப்பெற்றவையாக மாறின. இவர்கள் காலத்தில் "சாதிப்பெயர்களைத் தனிநபர் பெயர்களுடன் இணைப்பது பெருமை எனக் கருதப்பட்டது. தொழில், பொருளாதார அடிப்படையில் குலங்கள் பெருகின"[1] விஜயநகரர்களின் வழித் தோன்றல்களான நாயக்க மன்னர்களும் சாதிப்பாகுபாடுகளைப் போற்றி வளர்த்தனர். சாதித் தொழிலைச் செய்யாமல் ஒருவன் எங்கும் ஓடிவிட முடியாது என்ற நிலை இருந்தது. நாடுவிட்டு நாடு ஓடினாலும் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து வந்து தண்டனை அளித்தமைக்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. "அடிமை முறையும் தமிழகமும்" (ஆ. சிவசுப்பிரமணியன்) என்ற நூல் இத்தகு பலசான்றுகளைத் தொகுத்துத் தந்துள்ளமை நூலில் முன்னரே (1. நாட்டார் கதைப்பாடல்கள் - சமூகச் சூழல்) சுட்டப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியின் போதும் இந்நிலை தொடர்ந்தது. சாதித் தொழிலை விட்டுவிட்டுப் பிற சாதித் தொழிலுக்கு வந்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதைக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. இவற்றைத் தொழில்வழியிலான மீறல்களை வெளிப்படுத்தும் கதைப்பாடல்களாக நாம் அடையாளம் காண முடியும். இத்தகு நிலையுடைய சமூகக் கதைப்பாடல்களாக மதுரை வீரன் கதை, முத்துப்பட்டன் கதை, சின்னத்தம்பி கதை ஆகியவற்றைக் கூறலாம். இந்த மூன்று கதைப்பாடல்களிலும் இரு கதைப்பாடற் தலைவர்களாக உள்ள சக்கிலியர் குல இளைஞர்கள் (மதுரைவீரன், சின்னத்தம்பி) தங்கள் குலத் தொழிலை விட்டு நாடுகாவல், காடு காவற் பணிக்கு வந்ததனால்

1. கே. இராசய்யன், தமிழகம் வரலாறும் பண்பாடும், ப. 220.

உயிர் நீத்தவர்களாவர். இவர்களது கதையைக் காணும் முன் இவர்கள் பிறந்த சக்கிலியர் சாதி குறித்த சமூக, வரலாற்று விளக்கங்களை அறிந்து கொள்வது பயன்தரத் தக்கதாக அமையும்.

சக்கிலியர் சாதியினரும் சாதித் தொழிலும்

தொன்மையான தமிழ்க் கல்வெட்டுகளிலோ இலக்கியங் களிலோ சக்கிலியர் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் தெலுங்கு அல்லது கன்னடம் பேசுகின்றனர். இதனால் இவர்கள் தெலுங்கு அல்லது கன்னடம் வழங்கும் மாநிலங்களிலிருந்து தமிழகம் வந்து குடியேறியவர் களாக இருத்தல் வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவர்கள் எக்கால கட்டத்தில் தமிழகம் வந்திருக்கக் கூடும் என்ற வரலாற்றுண்மையை ஆராய்ந்த நா. வானமாமலை அவர்கள் கூறுவதாவது:

> "கிருஷ்ணதேவராயர் மதுரை மீதும் தஞ்சை மீதும் படையெடுக்கத் தன் தளபதிகளை அனுப்பினார். அவர்கள் அந்நகர்களைக் கைப்பற்றினர். ஆயின் அத்தேவராயர் காலத்திலேயே விஜயநகரர் ஆட்சி சீர்குலைந்தது. மதுரைத் தளவாயாக இருந்த விசுவநாத நாயக்கர் சுயாதிகாரம் பெற்ற மன்னராக ஆனார். அவருடைய சேனைகளோடு தமிழகம் வந்தவர்களே சக்கிலியர்கள். அவர்கள் நாயக்கர் சேனைகள் தங்கியிருந்த இடங்களில் இருந்து கொண்டு குதிரைச் சேணம் மற்றும் தோலாலான செருப்பு போன்ற பொருட்களைத் தைத்துக் கொடுத்து வந்தார்கள். மூடநம்பிக்கையுடைய நாயக்க மன்னர்கள் கோயில் கட்டும்போதும், அணைகள், பாலங்கள் கட்டும்போதும் இழிந்தவர் களாகக் கருதப்பட்ட சக்கிலியர்களைப் பிடித்துச் சிறையிலடைத்து நரபலி கொடுத்து வந்தார்கள். எனவே சக்கிலியர்கள் உயிருக்குப் பயந்து ஓரிடத்தில் தங்காமல் தமிழகமெங்கும் சிதறினார்கள். இச்சம்பவங்கள் கி.பி. 1658க்கும் 1738க்கும் இடைப் பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கலாம்.[2]

---

2. நா.வானமாமலை, முத்துப்பட்டன் கதை, ப. 9-10.

எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். சக்கிலியர்கள் உயிருக்குப் பயந்து, நாயக்கர் ஆட்சிக்குட்படாத தென் தமிழ் நாட்டுக்குப் பரவினர். தென்தமிழ் நாடாவது ஆரிய நாடு என்று கதைப் பாடல்களில் குறிப்பிடப்படுகிறது. இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பிரிவாகவும், கேரள மாநிலத்தின் ஒரு பிரிவாகவும் அது அமைந்திருந்தது. அன்று அது திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு உட்பட்டதாக இருந்தது. மேல்மலைத் தொடரின் தென்பகுதி நிலப்பகுதியிலுள்ள சிற்றூர்கள் ஆரிய நாடு எனப்பட்டன. இப் பகுதிகள் திருவனந்தபுரம் அரசர்களின் கீழ் அன்னாரின் ஆளுகையில் இருந்தன. குற்றாலக் குறவஞ்சியில் பொதிகை மலைக் குறத்தி தன் நாட்டைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "திருக்குற்றாலர் தென் ஆரிய நாடு' என்றும், கடவுள் ஆரிய நாடெங்கள் நாடே' என்றும் குறிப்பிட்டதாக உள்ளது. உயிர்ப் பாதுகாப்புக் கருதிய சக்கிலியர்கள் இப்பகுதியில் பெருமளவில் குடியேறினர் எனத் தெரிகிறது. இப்பகுதிகளி லிருந்து தோன்றியவர்களே சின்னத்தம்பி போன்ற சக்கிலியர்குல இளைஞர்களாவர்.

சக்கிலியர்கள் செருப்பு முதலானவற்றைத் தைக்கும் தொழில் செய்வதாலும் இதற்குப் பசுமாட்டின் தோலினைப் பயன்படுத்துவதாலும், பசுமாட்டின் இறைச்சியை உண்பதாலும் பறையரினும் கீழானவர்களாகக் கருதப்பட்டனர்.[3]

ஊன் உண்பதில் முற்பட்டவர் என்ற பொருள்படவே 'சத்குலி' என்ற வடமொழிப் பெயரில் அழைக்கப்பட்டுச் சக்கிலியர் ஆகியுள்ளனர்.[4]

இவ்வாறு செய்யும் தொழிலாலும், ஊன் உண்ணுதல், மது வகைகளை அருந்துதல் முதலான பழக்கவழக்கங்களாலும் மிகவும் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்ட சக்கிலியர்கள் குலத்தைச் சேர்ந்தவர்கள் தம் தனிப்பட்ட திறமை, வீரம், பிற பண்புகளால் பிற தொழிலுக்கு வர, இதனால் அவர்கள் வீழ்த்தப்பட்ட வாழ்க்கை வரலாறுகளை இனிக் காணலாம்.

முதல்நிலையில் மதுரைவீரன் கதை ஆராயப்படுகின்றது.

---

3. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், தொகுதி 2, மணிவாசகர் பதிப்பகம், ப.119.

4. ஆங்கில மூலம் எட்கர் தர்ஸ்டன், தமிழாக்கம் க. இரத்தினம், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி 2, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987, ப.9.

மதுரைவீரன் கதைப்பதிப்பு விவரங்கள்:

மதுரை வீரன்கதைப்பதிப்புகள் 1869 முதல் வெளி வந்திருக்கின்றன. இவ்வாண்டில் கருணானந்த சுவாமிகள் இக்கதையை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். தொடர்ந்து 1873, 1878, 1881, 1882, 1883, 1887, 1892 ஆகிய ஆண்டுகளில் இந்நூல் அச்சிடப்பட்டுவெளிவந்துள்ளது.[5]

1. 1881 மதுரை வீரநாடகம், குட்டி உபாத்தியாயர்
2. 1913 ஸ்ரீ மதுரை வீரசுவாமி பராக்கிரமம், இரத்தினகிராமணி
3. 1928 மதுரை வீரைய்யன் நாடகம், சாலை கிருஷ்ணப்பபிள்ளை.
4. 1952 மருதை வீரன் சரித்திரம், க. திருவேங்கடம் பிள்ளை
5. 1978 மதுரை வீரன் அம்மானை, அ. விநாயக மூர்த்தி
6. 1979 மதுரை வீர சுவாமிகதை, புகழேந்திப் புலவர்
7. 1979 வீரைய்யன் அம்மானை அ.மா. பரிமணம்

என்ற பதிப்புகள் வெளியாகியுள்ளன.

காத்தவராயன் கதையைப் போன்று கதைமாறுபாடுகள் பல கொண்ட கதையாக இது உள்ளது. மதுரை வீரன் கதைகளின் 7 நூல்களை எடுத்துக் கொண்டு வே.ச. திருமாவளவன் அவர்கள் "மதுரை வீரன் கதைகள் - ஓர் ஆய்வு" என்ற தன் நூலில் மதுரை வீரன் கதை நிகழ்ச்சிகளை ஆய்வு செய்துள்ளார். இந்நூலில் அவர் மதுரைவீரன் கதை நிகழ்ச்சிகள் மொத்தம் 73 என்று குறிப்பிட்டுள்ளார். 48 நிகழ்ச்சிகளை உள்ளடக்கி அதிக நிகழ்ச்சிகளைக் கொண்டதாக ஸ்ரீ மதுரை வீர சுவாமி பராக்கிரமம் அமைந்துள்ளது என்றும் 26 நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய மதுரை வீரைய்யன் நாடகம் குறைந்த நிகழ்ச்சி களைக் கொண்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.[6] இவற்றுள் காலத்தால் முந்தைய கதை நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய கதைப் பிரதி எது என்பதை அறிவதில் சிக்கல் உள்ளது. கருணானந்த சுவாமிகள்அச்சிட்ட கதைப்பிரதி காலத்தால் முதலில் அச்சிடப் பட்டது என்பதால் அதனை முதலில் எழுதப்பட்ட கதைப்பிரதி எனக் கொள்ள இயலாது. 'மதுரைவீரன் வரலாறு சற்றேறக்குறைய 300 ஆண்டுகாலப் பழமை உடையது. அவ்வீரன் பற்றிய ஓலைச் சுவடிகள்150 ஆண்டுகாலப் பழமை உடையன' என இக்கதையை

5. க. சண்முகசுந்தரம், நாட்டுப்புற இலக்கிய வரலாறு, 1980, ப.104-105.
6. வே.ச. திருமாவளவன், மதுரை வீரன் கதைகள் ஓர் ஆய்வு, ஸ்ரீ கோமதி அச்சகம், சென்னை-5, டிச.1991, ப.77-78.

ஆராய்ந்த வே.ச. திருமாவளவன் கூறுகிறார்.[7] 150 ஆண்டுகாலத்துக் குள்ளாகவே மதுரை வீரனின் பிறப்பிலும் இறப்பிலும் இடைப்பட்ட வாழ்விலும் பலகதை வேறுபாடுகளைக் கதைப்பாடல்கள் கொண்டுள்ளன. இதனால் இதுதான் நடந்த கதை நிகழ்ச்சிகள் எனத் தெளிவாக வரையறுத்துக் கூறுவதில் சிக்கல் ஏற்படுகிறது. என்றாலும் பிற கதைப் பாடல்களையும், அவற்றில் நிகழ்ந்துள்ள இடைச்செருகல்கள், பிற்சேர்க்கைகள், மாற்று வடிவங்கள் போன்றன கதையில் எவ்வெவ்விடங்களில் நிகழ்ந்துள்ளன என்பதை மனத்துட் கொண்டு மதுரை வீரன் கதையின் உண்மை நிகழ்வுகளையும் ஓரளவுக்குத் தெளிவாக வரையறுக்க முடியும். அதன்படி வகுத்தளித்த மதுரைவீரன் கதை நிகழ்ச்சியமைப்பை அடுத்துக் காணலாம்.

மதுரை வீரன் கதைச் சுருக்கம்

சக்கிலியர் சாதியில் பிறந்தவன் மதுரைவீரன். இவன் இயல்பாகவே தன்னிகரற்ற வீரமும் செயலாற்றும் திறனும் உடையவனாக இருந்தான். திருச்சி பாளையப்பட்டில் அடங்கிய பொம்மண நாயக்கனின் மகள் பூப்படைந்து தனிக்குடிலில் வைக்கப்பட்டாள்.

மதுரை வீரனின் தந்தை மாதிகச்சின்னான் பொம்மண நாயக்கனின் கட்டளைப்படி அவளுக்குக் காவல் காக்கும் பொறுப்பை 27 நாட்கள் செம்மையாகச் செய்தான். 28ஆம் நாள் காற்றும் மழையும் கலந்தடித்ததால் வயது முதிர்ச்சி காரணமாகக் காவலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. தன் காவற் பணிக்குத் தன் மகன் மதுரை வீரனை அனுப்பினான் மாதிகச் சின்னான். உள்ளம் ஒன்றுபடச் சாதி ஏற்றத் தாழ்வு, சமூகநிலை, செல்வநிலை மாறுபாடுகளைத் தாண்டித் தொட்டியர் குலப் பெண்ணான பொம்மிக்கும், மதுரை வீரனுக்கும் காதல் மலர்ந்தது. தாங்கள் ஒன்றுபட மேற்கூறியவை தடையாக அமையும் என்பதைக் கருத்திற் கொண்டு உடன்போக்காகச் சென்ற அவர்களைப் பொம்மணன் படையுடன் வந்து தாக்கினான். தனியொருவனாகப் படையை எதிர்கொண்டு பொம்மணனைக் கொன்றழித்துப் படையைத் துரத்தி அழித்தான் மதுரைவீரன். பின்னர்த் திருச்சி விசயரங்க சொக்கலிங்க நாயக்கரிடம் படையில் சேர்ந்து படைத்தலைவனாக ஆனான்.

7. வே.ச. திருமாவளவன், மதுரை வீரன் கதைகள் ஓர் ஆய்வு, ஸ்ரீ கோமதி அச்சகம், சென்னை-5, டி.ச.1991, ப.29.

மதுரையில் திருமலை நாயக்கரின் ஆட்சியின் கீழ், கள்ளர்களின் தொல்லை மிகுதியாக இருந்தது. அவர்களின் கொட்டத்தை அடக்கத் திருச்சி விசயரங்க சொக்கலிங்க நாயக்கரிடம் மதுரை வீரனைப் படையுடன் அனுப்புமாறு ஆணையிட்டார் திருமலை நாயக்கர். மதுரைவீரனின் தன்னிகரற்ற வீரத்தைக் கேள்விப் பட்டே அவனை அனுப்பக் கூறினார் திருமலை. சேனை வீரர்களோடு மதுரை வந்த மதுரைவீரன் கள்ளர்களைக் கருவறுத்தான். வெற்றியைக் கொண்டாடும் முகமாக ஆரத்தி எடுத்த கோயிற் பணிப்பெண் வெள்ளையம்மாளைக் கவர்ந்து மூட்டையாகக் கட்டித் தூக்கி வந்த போது கள்வன் எனக்கருதி மாறுகால், மாறுகை வாங்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். மதுரை நகரைக் கள்வர் பயமின்றி ஆக்கிய காவலனான அவனைக் காவல் தெய்வமாக மக்கள் வணங்கி வழிபட்டு வருகின்றனர்.

இக்கதையில் காணப்படும் தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

மதுரை வீரன் கதைகள் மதுரை வீரனை மதுரை வீரன், வீரப்பன், வீரய்யன், வீரன் எனக் குறிப்பிடுகின்றன. வீரன், வீரய்யன், வீரப்பன் என்று பெயரிடுவது வழக்கமாக இருந்ததால் இது இயற்பெயராக இருக்கக்கூடும். அதே நேரத்தில் தலைசிறந்த வீரனாகத் திகழ்ந்து மதுரை நகரைக் கள்ளர் பயத்திலிருந்து காத்தவன் என்பதால் பண்படிப்படையில் 'வீரமுடையவன் வீரன்' எனக் கொள்ளப்பட்டு ஊர்ப்பெயர் இணைக்கப்பட்டு மதுரை வீரன் என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். இவ்வாறு தன்னிக ரற்ற வீரனாகத் திகழ்ந்த ஒருவன் தான் பிறந்த சாதியடிப் படையிலான தோற் சாமான்களைச் செய்யும் தொழிலைச் செய்யாமல் நாடுகாவற் பணியிற் மிகத் தேர்ந்தவனாக இருந்ததாகக் கதைப் பாடல்கள் காட்டுகின்றன. இவ்விடத்தில் அவனுடைய தந்தையான மாதிகச் சின்னானும் காவற் பணி செய்து வந்தமை நினைவுகூரத்தக்கது. ஆனால் மாதிகச் சின்னான் பூப்படைந்து தனிக்குடிலில் வைக்கப்பட்ட பெண்ணுக்கு 30 நாள் காவல் காக்கும் பொறுப்பையே ஏற்றிருந்தான். அத்துடன் அவன் தன் குலத் தொழிலான செருப்புத் தைக்கும் தொழிலையும் செய்து வந்தான். இது போன்று மதுரை வீரனும் தன் சாதித் தொழிலான செருப்புத் தைக்கும் தொழில் தெரிந்தவனாகவே இருந்தான். அவன் பொம்மிக்குச் செருப்புத் தைத்துக் கொடுத்ததை மதுரை வீர சுவாமி கதை[8] தெரிவிக்கிறது. ஆனால் அவன் தன்

---

8. புகழேந்திப் புலவர், ப.33.

குலத்தொழிலில் முழுமையாக ஈடுபடாமல் நாடுகாவற் பணிக்கே தன் வாழ்வை ஒப்படைத்துக் கொண்டதைக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. இதுவே அவனுடைய கொலைக்கும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்துவிடுகிறது. அவனுடைய சேவை இனித் தேவையில்லை என்ற ஒரு கட்டத்தில் பெண் தொடர்பு காரணமாகக் காட்டப்பட்டு, அவன் கொலை செய்யப்பட்டான். ஆனால் அவனால் நிகழ்த்தப்பட்ட வீரதீரச் செயல்களையும் அதனால் கள்ளர் பயம் நீங்கிப் பயன் பெற்றதையும் மறக்க இயலாத மக்கள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடி வழிபட்டமை தெரி கின்றது. அவனுடைய சாவுக்குப் பெண்பித்து காரணம் எனக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. ஆனால் பெண்பித்தர்களை நாட்டுப்புற மக்கள் தெய்வமாக ஏற்றுக் கொள்வதில்லை என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது.

வீரம், திறமை, காரியத்திலூக்கம், விடாமுயற்சி, செயற்றிறன் போன்ற நற்பண்புகள் குறிப்பிட்ட சாதிக்குரியன அல்ல. அவை எச்சாதியைச் சார்ந்தாரிடமும் அமையக் கூடும். அத்தகு நல்லியல்புகள் உடையவனாக இருந்த மதுரை வீரன் தன் பண்புநலன்கள் சிறக்கும், வெளிப்படும் நாடுகாவற் பணியில் நற்பணியாற்றினான். தமிழ்நாட்டுக்கு அப்பால் வெளியிலிருந்து வந்த குலத்தைச் சேர்ந்த அவன், தன் சாதித் தொழிலான செருப்புத் தைத்தலும் பிற தோற்பொருட்களும் செய்தலை விடுத்து, நாடுகாவற் பணியில் சிறந்து விளங்குவதா? அவன் தங்களைக் கொன்று கருவறுப்பதா? என்று தமிழ்நாட்டுப் பூர்வீகக் குடிகளான கள்ளர் சாதியினர் பொருமினர்; குமைந்தனர். கள்ளர்களைக் கருவறுத்தவன் கள்ளன் என்ற போர்வையில் கண்டுபிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். பிடிபட்டவன் மதுரை வீரன் என்பது கொல்ல ஆணையிட்ட திருமலை மன்னருக்குத் தெரியாது என்று மதுரை வீரன் கதைப்பாடல்கள் அனைத்தும் கூறுவது அரசு, அரசுக்கெதிரான கருத்துகளைக் கூற விரும்பாத கதைப்பாடற் புலவர்களின் அரசு சார்பான மன நிலையை வெளிக்காட்டுவதே ஆகும். இதனையே "கள்ளன் திருடிய பொருள் இன்னதுதான் என்பதை அறிந்த திருமலை நாயக்கர் அந்தப் பொருளைத் திருடிய கள்ளன் யார் என்பதை அறியவில்லை என்பதில்தான் கதையின் உயிர்நாடி உள்ளது" எனக் குறிப்பிடுகிறார் வே.சா. திருமாவளவன்.[9]

---

9. மதுரைவீரன் கதைகள், ஓர் ஆய்வு, ப.135.

கோயிற் பெண்ணான வெள்ளையம்மாளைக் கடத்தியதால் கள்வன் எனக் கருதப்பட்டு, கடத்தியவன் மதுரை வீரன் என்று அறியப்படாமல் கொலை நடந்தது எனக் கதைப் பாடல்கள் விவரிக்கின்றன. மதுரைக்கோயிலில் கோயிற் பெண்ணான வெள்ளையம்மாளைக் கடத்துதல் என்ற நடந்த ஒரு திருட்டு மன்னனுடைய கவனத்துக்குப் போகாமல் இருந்திருக்க முடியாது. எனவே மன்னன் கள்வன் மதுரைவீரன் என்பதை அறிந்தே அவனுக்குத் தண்டனை வழங்கினான் என்ற கருத்தைக் கோடாங்கிமாலை வெளிப்படுத்துகிறது"[10] இதுவே ஏற்புடைய கருத்தாகவும் உள்ளது. மன்னர்கள் தங்களை விடச் சிறந்த வீரர்கள் இருந்தால் அவர்களைத் தக்க சமயத்தில் பயன்படுத்திக் கொண்டு அவர்களின் பயன்பாடு முடிவடைந்த வுடன் அவர்களை ஏதாவது ஒரு காரணம் காட்டி ஒழித்துக் கட்டியிருக்கின்றமைக்கு இக்கதைப்பாடல் தக்க சான்றாக உள்ளது. தன்னிலும் சிறந்த வீரன் தன் ஆட்சிக்கு எப்போதும் ஆபத்தானவன் என்பதை அறிந்த அரசர்கள் அவர்களை அழித்து விடுவதில் ஆர்வம் காட்டினர்; செயல்பட்டனர். சின்னத்தம்பி கதைப்பாடலும் சான்றாக நின்று இக்கருத்தை வலுப்படுத்து கின்றது. எனவே சாதித் தொழிலைவிட்டு நாடுகாவற் பணிக்கு வந்ததாலேயே மதுரைவீரன் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் ஒழித்துக் கட்டப்பட்டான் என்பது உறுதிப்படுகிறது.

தேவரடியார்கள் உயர்குல ஆடவர்களுடன் தொடர்பு வைத்திருத்தல் வழக்கமாக இருந்திருக்கிறது. அதிலும் மதுரை வீரன் போன்ற ஒரு பெருவீரன் கோயிற் தேவரடியாரான வெள்ளையம்மாள் மீது ஆசை கொண்டு கடத்தினான் என்பதும் அதற்காக மரணதண்டனை பெற்றான் என்பதும் ஏற்புடையதாக இல்லை. பல பெண்டிர் தொடர்பை ஏற்றுக் கொண்ட ஒரு சமுதாயச் சூழலில் அதிலும் திருமலை மன்னனே 200 பெண்டிரை மணந்து கொண்டிருந்த ஒரு சமுதாயத்தில்[11] மன்னனை ஒத்த ஒரு சிறந்த வீரன் நாட்டையே காவல் காத்துக் கள்ளர்களை ஒழித்துக் கட்டிய தீரன், தேவரடியாளான ஒரு பெண்ணின் பொருட்டுத் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனைக்குட்பட்டான் என்பது பொருத்தமானதாக இல்லை. செயற்றிறம் மிக்க ஒரு வீரன், காதல் மணம் புரிந்து கொண்ட ஒரு நற்கணவன் காமுகனாகிப் பெண்ணைக் கடத்தினான் என அவனின் உயர் பண்பைக் கீழிறக்கும் இணைப்பாகவும் இந்நிகழ்ச்சி அமைந்து

10. மேற்படி

11. அ.கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, ப.227.

பொருத்தமற்றதாக உள்ளது. மதுரைவீரனின் கொலைக்குரிய முக்கியக் காரணமான இந்நிகழ்வு காமுகனானதால்தான் அவன் கொல்லப்பட்டான்; தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலால் அவன் கொல்லப்படவில்லை என்பதை வலியுறுத்திக் கூறவந்த நிகழ்வாகக் கதையில் காணப்படுகிறது. இவ்விடத்தில் வலிமை மிக்க வீரனாகத் திகழ்ந்த சின்னத்தம்பியை, நாடுகாவற் தளபதி யாகச் சிறப்புறப் பணியாற்றிய அவனைத் திட்டமிட்டுக் கொலை செய்ததை வெளிப்படுத்தும் சுவடிப்பிரதியும் இருக்க, வேறு சில சுவடிப் பிரதிகள் அரண்மனையுமறியாமல், ஆஸ்தானமும் அறியாமல் இருந்த ஓர் அப்பாவி இளைஞனான சின்னத் தம்பியைப் புதையலெடுக்க நரபலியாக்கினர் என்ற முறையில் சித்திரித்துள்ள சுவடிப்பிரதிகள் உள்ளதையும் ஒப்பு நோக்கலாம். சின்னத்தம்பி கதை போன்று மதுரை வீரன் கதையில் அவன் தொழில்வழியிலான கட்டுப்பாட்டு மீறலால்தான் கொலை செய்யப்பட்டான் என்று வெளிப்படக் காட்டும் கதைப்பாடல் அமைப்புகள் கிடைக்கவில்லை. கதைப்பாடலாக எழுதப்பட்ட காலகட்டத்திலேயே சமுதாயம் ஏற்றுக் கொள்ளக்கூடிய பல மாறுதல்களை உள்ளடக்கியதாகவே கதைப்பாடல் எழுதப் பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இதற்கு மதுரைவீரனின் பிறப்பு கீழ்க்குலமான சக்கிலியர் குலமாக இருக்க அவன் மேற்குலமான அரசர், அல்லது அந்தணர் குலத்தில் தோன்றியவன் என்று கதைப்பாடலைப் புனைந்த காலகட்டத்திலேயே புலவர்கள் மாற்றிப் பாடி வைத்துள்ளதைச் சான்றாகக் காட்டலாம். மதுரை வீரன் கதைப்பாடலின்படி மதுரைவீரன் மதுரைக்கு வந்து கள்ளர்களை அடக்கி நாடுகாவற் பணியைச் சிறப்புற ஆற்றிப் பெருவீரனாகத் திகழ்ந்தான்.

தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஒருவன் நாடு காவற் தலைவனாகி மக்களைக் காத்தான் என்பதைச் சாதியைக் காப்பதில் உன்னிப்பாக இருந்த நாயக்கர் காலச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது. ஆனால் உண்மையாக நிகழ்ந்த இவற்றை மூடி மறைத்து விடவும் முடியாது. பொதுமக்களின் பார்வைக்குச் சென்றுவிட்ட இவ்வரலாற்றில் சில மாறுபாடுகளைச் செய்தால், அவற்றைப் பொதுமக்கள் புறக்கணிக்க மாட்டார்கள். எனவே இவ்வரலாறு கதையாக உருப்பெற்ற காலத்தில் மதுரை வீரன் பிறப்பைப் பற்றிய சில செய்திகளும் கதையோடு இணைக்கப் பட்டன. அவன் சக்கிலியனால் வளர்க்கப்பட்டுச் சக்கிலியன் ஆனானே தவிர உண்மையில் சக்கிலியன் அல்லன்; அரசமரபைச் சேர்ந்தவன்; காசிராசன் மகன் எனப் பாடினர். கதைப் பாடகன்

செய்த இம்மாற்றம் சாதி அமைப்பில் பற்றுக் கொண்ட அரசும் பொதுமக்களும் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அரச மரபைச் சேர்ந்தவன் என்பதை விடவும், வேதியர் குலத்தைச் சேர்ந்தவன் என்று கொள்வதில் உயர்வு இருப்பதாகக் கருதிய சமுதாயம் மதுரை வீரனைக் காசி மன்னன் நாராயணன் மகனாகச் சித்திரித்தது.[12] இது அடுத்த நிலையாகும். அறிவும் ஆற்றலும் உடையவர்கள் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும்; தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவை உரியன அல்ல என்ற எண்ணத்தில் ஊறிப் போன சமுதாயத்தில் இத்தகு சாதி, குல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன; அவை ஏற்புடையனவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலால்தான் மதுரைவீரன் கொலையுண்டான் என்பது எக்கதைப்பாடலிலும் வெளிப் படையாகக் கூறப்படாவிடினும் அவன் தன் சாதித் தொழிலை விடுத்து அரசுக்கும், காவற் தொழில் புரிந்த குலத்தாருக்கும் உரிய நாடுகாவற் தொழிலில் சிறந்து விளங்கிப் பெருவீரனாகத் திகழ்ந்ததையும் இதனால் நாட்டு மக்களான கள்ளர் இனத்தார் கொதிப்படைந்திருந்ததையும் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. மதுரைவீரன் மூன்று முறை நேருக்குநேர் சந்தித்துக் கள்ளர் களைக் கொன்று குவித்ததை மதுரைவீர சுவாமி பராக்கிரமம் வெளிப்படுத்தியுள்ளது.[13] மதுரை வீரைய்யன் நாடகம், மருதை வீரன் சரித்திரம், மதுரை வீரநாடகம், மதுரை வீரன் அம்மானை, மதுரைவீர சுவாமி கதை என்ற அனைத்திலும் கள்ளர்களை மதுரைவீரன் கொன்றழித்த செய்தி விவரிக்கப்பட்டுள்ளது.[14] இதனால் நாட்டில் பெருவாரியான சாதி மக்களான கள்ளர்களின் பகைமையைப் பெற்றுக் கொண்டான் மதுரைவீரன்.

கள்ளர்கள் பாளையப்பட்டு ஆட்சிக்குள் அடங்காமல் தனியாக இயங்கினர். கள்ளர்களில் ஒரு சிலர் உடைமைகள் களவு போகாமல் காவல் காக்கும் பொறுப்பினை மேற்கொண்டிருந்தனர். காவல்காக்கும் பணி செய்வதால் பயணிகளிடமும் ஐரோப்பியர் களிடமும் வரி வசூலித்தனர். மதுரையின் ஆட்சிக்கு வரி

12. வீரய்யன் அம்மானை.

13. மதுரைவீரன் கதைகள் ஓர் ஆய்வு, ப.84.

14. "கள்ளர் படைகளெல்லாம் கலங்கியே மெய்மறந்து
மெய்சோர்ந்து விழுவாரும் விதிவசமோ என்பாரும்
ஈட்டிக்கோல் வைத்தபடி இறந்து மடிவாரும்
இன்று முடிந்ததுகாண் எங்கள்பல மெல்லாமென்றும்
கள்ளரெல்லாம் புலம்பிக் கைசோர்ந்து விழுந்தார்கள்"
- மதுரை வீர சுவாமி கதை

செலுத்தியோர் கள்ளர்களுக்கு வரி செலுத்த மறுத்திருக்கலாம். அவ்வாறு வரி செலுத்த மறுத்தவர்களின் உடைமைகளைக் கள்ளர்கள் களவாடியிருக்கலாம். இது மதுரைத் தலைமைக்குப் பெருந் தலைவலியாக இருந்திருக்க வேண்டும். இப்பெருந் தலைவலியைப் போக்கும் அருமருந்தாகப் பயன்படுத்தப்பட்ட மதுரைவீரன், நோய் குணமானதும் தூக்கி எறியப்படும் மருந்துக் குப்பியாக ஆனதைக் கதைப்பாடல் முடிவு காட்டுகிறது. கள்ளர்களைக் கொன்றழித்தவன் கள்ளன் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வரலாற்று வியப்பு மதுரை வீரன் மரணமாகும்.

மதுரை வீரன் திருமலை நாயக்கரின் காதற்கிழத்தியான வெள்ளையம்மாளை விரும்பியதாலும் மதுரைவீரனின் இறுதிக் காலத்தில் அவனால் அடக்கப்பட்ட கள்ளர்களின் தலைவர்கள் திருமலை நாயக்கரது நண்பர்களாகி விட்டதாகவும் அவர்களின் தூண்டுதலினாலேயே மதுரைவீரன் கொல்லப்பட்டான் என்றும் நா. வானமாமலை குறிப்பிடுகிறார்.[15] இதற்கு அவர் கதைப்பாடல், வரலாற்று சான்றுகள் எதையும் தரவில்லை. நடந்த உண்மைகளை வெளிப்படையாகக் கூறாமல், மக்கள் ஏற்றுக் கொள்ளும் முறையில் சில மாறுதல்களைச் செய்து பாடிய கதைப்பாடல் புலவர்கள் அரசுக்கெதிரான முக்கியச் செய்தியை மறைத் துள்ளனர் என அனுமானிக்கலாம். இத்தகு அனுமானத்தின் பேரில் ஆய்வுக் கருத்துகளையும் ஆய்வு முடிவுகளையும் தெரிவித்தல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்ற நிலையில் மதுரை வீரனின் கொலை மதுரைவீரன் என அறியப்படாததால் நிகழ்ந்தது என்ற கதைப்பாடற் கூற்றை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆயினும் முன்னரே குறிப்பிட்டது போன்று சாதி மீறிய தொழில் புரிந்தோருக்கு மட்டும் நிகழ்ந்துள்ள இத்தகு கொலைத் தண்டனைகள் சிந்திக்க வைக்கின்றன; அனுமானக் கருத்தை உண்மையாகவும் கருத வைக்கின்றன எனலாம்.

முத்துப்பட்டன் கதைக்காலச் சமூகம்

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் இருந்த சமூக அமைப்பு நிலவுடைமைச் சமுதாய அமைப்பாகும். இவ்வமைப்பைப் பாதுகாத்துக் கொள்ள ஆளும் வர்க்கத்தார் சாதிகளையும் சாதிக் கட்டுதிட்டங்களையும் கடுமையாகப் பின்பற்றி வந்தனர். கீழ்ச்

---

15. நா.வானமாமலை, ஆராய்ச்சி (இதழ்), பதிப்பு, மார்ச் 1971, ப.135.

சாதிக்காரர்களாகிய உழைக்கும் வர்க்கத்தின் உழைப்பில் ஓய்வை அனுபவித்து வந்த உயர் வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தைத் தன்னுடன் சேரவிடாமலும் சேர்த்துக் கொள்ளாமலும் தனித்து வாழ்ந்தது. அத்துடன் அது தன்னைச் சார்ந்து வாழ்ந்த அந்தணர், சோதிடர், கலைஞர் ஆகியவர்களையும் உழைக்கும் வர்க்கத்தைத் தன்னுடன் சேரவிடாமல் சாதிச் சுவர்களை எழுப்பிப் பாதுகாப்புடன் பார்த்துக் கொண்டது. வலிமை வாய்ந்த அத்தகு சாதிச் சுவர்களுக்கு வெளியே உழைக்கும் மக்கள் தங்கள் உழைப்பையும் அளித்து, ஆனால் அதற்குரிய பயனைப் பெறாமல் அறியாமை இருளில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தனர். நிலவுடைமைச் சமுதாயம் பின்னிய வலையில் மாட்டித் தவித்தனர்.

இத்தகு சாதி ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு பொருமி வெடித்து, தன் செயலில் அதை வெளிப்படுத்திச் சாதிக் கட்டுப்பாடுகளை உதறி எறிந்து கீழ்க்குல, உழைக்கும் வர்க்க மக்களோடு தன்னை ஒன்றிணைத்துக் கொண்டு அவர்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு, அதனால் உயர்வர்க்கத்தைப் பகைத்துக் கொண்டு பலியான ஒருவனின் கதையே முத்துப் பட்டன் கதை. தான் பிறந்த சாதியைத் துறந்ததன் மூலம் தன் சாதித் தொழிலையும் உதறி, தான் வந்து சேர்ந்து கொண்ட சாதித் தொழிலை விரும்பி ஏற்றுக் கொண்டு தொழில்வழியிலான கட்டுப்பாட்டு மீறலால் உயிர்விட்டவன் முத்துப்பட்டன். உழைக்கும் மக்களின் ஒளி விளக்காகச் சுடர்விட்டவனை ஊதி அணைத்தது உயர்வர்க்கம். இதன்மூலம் சாதிக் கட்டுப் பாட்டையும், சாதித் தொழிலையும் நிலைநிறுத்த முனைந்ததை முத்துப்பட்டன் கதைப்பாடல் எடுத்துரைக்கிறது. ஆயினும் சாதி மீறிய தொழில்கள் சிலரால் பின்பற்றப்பட்டன என்பதற்குத் தக்க சான்றாகவும் இக்கதைப்பாடல் திகழ்கின்றது.

முத்துப்பட்டன் கதைச் சுருக்கம்

இன்று திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பிரிவாகவும் கேரள மாநிலத்தின் ஒரு பிரிவாகவும் காணப்படும் மேற்கு மலைத் தொடரின் தென்பகுதியில் அமைந்த நிலப்பகுதியிலுள்ள சிற்றூர்கள் அனைத்தும் தென் ஆரியநாடு என்று வழங்கப்பட்டு வந்தன. இப்பகுதியில் வாழ்ந்த அந்தணர் குலத்தில் ஏழு அண்ணன்மார்களுடன் பிறந்தவன் முத்துப்பட்டன். கல்வி கேள்விகளில் சிறந்தவனான இளைஞனான முத்துப்பட்டன் தன் தமையன்மாருடன் சண்டையிட்டு ஊரைவிட்டு வெளியேறிக்

கொட்டாரக்கரை வந்து ராமராசன் என்ற மன்னனிடம் சேவகம் செய்து வந்தான். தம்பியைக் காணாமல் தேடிய அண்ணன்மார் கொட்டாரக் கரையில் அவனைக் கண்டுபிடித்து உடன் வருமாறு அழைத்தனர். ஒப்புக்கொண்டு உடன் வந்த முத்துப்பட்டன் தாகவிடை தீர்த்துவருகிறேன் என்று கூறி அண்ணன்மாரை அனுப்பிவிட்டு, சந்தியாவந்தனம் செய்யும் நேரமும் ஆனதால் அப்பூசை செய்யும் நேரத்தில் இனிய நாட்டுப்பாடல் இசையைக் கேட்டான். பாடுவது கிடைக்குச் சோறு கொண்டு செல்லும் இரு சக்கிலியப் பெண்கள் என்பதை அறிந்த முத்துப்பட்டன் அவர்களைப் பின் தொடர்ந்தான். அவர்களையே மணப்பது என்று உறுதி பூண்ட முத்துப்பட்டன் தன் விருப்பத்தை அவர்களிடம் எடுத்துரைக்கத் தாங்கள் கீழ்ச்சாதியர் எனக்கூறி மறுப்புத் தெரிவித்தனர் பெண்கள். கெஞ்சித் தொடர்ந்த அவனிட மிருந்து ஓடித்தப்பிய பெண்கள் தங்கள் தகப்பனிடம் விவரம் கூறினர். பொம்மக்கா, திம்மக்கா என்ற தன் பெண்களிடம் வம்பு பேசியவனைத் தேடிவந்த தந்தை வாலப்பகடை வனத்தில் முத்துப்பட்டன் மயக்கமுற்றுக் கிடப்பதைக் கண்டான் மயக்கம் தெளிவித்தவுடன் முத்துப்பட்டன் தன் விருப்பத்தைக் கூற, வாலப்பகடை சில நிபந்தனைகளைக் கூறினான். அந் நிபந்தனை களின்படி குடுமி, பூணூலை அறுத்தெறிந்து சக்கிலியனாகவே மாறிச் செருப்புத் தைத்துக் கொண்டு வந்த அவனைத் தன் மருமகனாக்கிக் கொண்டான் வாலப்பகடை. வாலப்பகடையின் மரணத்தின்பின் முத்துப்பட்டனே பகடையர் தலைவனான். தான் வந்து சேர்ந்த சாதித் தொழிலைச் செய்து, அச்சாதியரின் பாதுகாவலனாகவே ஆன அவனின் பாதுகாப்புக்குட்பட்ட பகுதிகளில் கொள்ளையடிக்க முடியாத வன்னியக் கரந்தைக் கள்வர்கள் முத்துப்பட்டனின் கிடைக் காவலைச் சீர்குலைக்கும் வண்ணம் அவனுடைய கிடையைக் கவர்ந்து கொண்டு சென்றனர். தகவலறிந்த முத்துப்பட்டன் அவர்களுடன் போரிட்டு அனைவரையும் துரத்தியடித்தான். மறைந்திருந்த ஒருவன், போர் முடிந்ததென்று ஆயுதத்தைக் கழுவிக் கொண்டிருந்த முத்துப் பட்டனைக் குத்திக் கொன்றான். முத்துப்பட்டனின் மனைவியர் உடன்கட்டையேறி உயிர்விட்டனர். இக்கதைப்பாடலை நா. வானமாமலை அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகவழி பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.[16]

---

16. முதற்பதிப்பு, அக். 1971.

கதைப்பாடல் காட்டும் அந்தணர் சாதித் தொழிலும் சக்கிலியர் சாதித் தொழிலும்

"ஓதலுந் தூதும் உயர்ந்தோர் மேன" என்பது தொல்காப்பியச் சூத்திரம். உயர்ந்தோர் என்பது அந்தணரைக் குறிக்கும் என்றும் ஆக அந்தணர்களது தொழில் ஓதல், தூது செல்லுதல் என்பது தொல்காப்பிய உரையாசிரியர்கள் அளிக்கும் விளக்கமாகும். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்ற நால் வகைத் தொழில்களை அந்தணர்கள் செய்துவந்தமையையும் இலக்கணங்கள் வரையறுத்துக் காட்டுகின்றன. இதன்மூலம் கற்றல், கற்பித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல் ஆகிய பணிகளை இவர்கள் ஆற்றிவந்தமை தெரியவருகின்றது. சோழர் காலத்திலும், அதற்குப் பின்னரும் கோயில் கோயில் தொடர்பான பணிகள், அரசு, அரசர் தொடர்பான ஆலோசகர்களாக அந்தணர்கள் திகழ்ந்து வந்ததைக் கல்வெட்டுகளும் பிற வரலாற்றுச் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. நாயக்கர் காலத்தைச் சேர்ந்த முத்துப்பட்டன் கதைப்பாடல் காட்டும் அந்தணர் குலத் தொழில் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை இனிக் காணலாம்.

அந்தணர் குலத்தில் பிறந்த முத்துப்பட்டன்,

பள்ளிக்குத் தானிருந்து பலகணக்கும் தான்படித்து
ஆனையேற்றம் குதிரையேற்றம் அளவிறந்த தொழில்
படித்தான்
மல்லடவு சிலம்பத் தொழில் நோக்குவித்தை குறளிவித்தை
வித்தையெல்லாம் தான் படித்து...... (ப. 31)

வேதாந்தி போலிருந்ததாகக் கதைப்பாடல் கூறுகின்றது. இதனால் முத்துப்பட்டன் அந்தணர் தொழிலான கல்வி கற்றலுடன் அரசர்களுக்கு உரிய யானை, குதிரை ஏற்றங்களையும் மற்தொழில், சிலம்பக் கலை ஆகியவற்றையும் கற்றதாகத் தெரிய வருகின்றது. முத்துப்பட்டன் பிழைப்புக்கு வழிதேடி மலையாள தேசத்துக் கொட்டாரக் கரை மன்னனிடம் வந்து தன் தொழில் திறமையைக் காட்டியதாகக் கதைப்பாடல் தெரிவிக்கின்றது. முத்துப்பட்டன், 'சமுத்திரத்தில் வாள்நிறுத்திச் சக்கரம்போல் சுழன்று வந்ததாகக்' (ப. 32) குறிக்கப்பட்டுள்ளது. 16 வயதுடைய இவனது இந்தத் திறமையையும், பலகணக்கும் படித்த திறமையையும் மெச்சியே அரசன் முத்துப்பட்டனுக்கு நாலாயிரம்

பொன் சம்பளம் அளித்துச் சேவகனாக நியமித்துக் கொண்டான் எனத் தெரிகிறது (ப. 32). ஆக இக்கதைப்பாடல் காலகட்டமான நாயக்கர் காலத்தில் அந்தணர்கள் தங்கள் குலத்தொழிலுடன் உடல் வலிமையை வெளிப்படுத்தும் பல்வேறு வீரசாகசக் கலைகளையும் பயின்று அத்தொழிலையும் மேற்கொண்டிருந்தனர் என்பது வெளிப்படையாகத் தெரிய வருகின்றது.

கதைப்பாடல் காட்டும் சக்கிலியர் சாதித் தொழில்களாக அறிய வருபவை

1. செத்த மாட்டை அறுத்தல்
2. மாட்டிறைச்சியைச் சேரிக்குப் பங்கிட்டளித்தல்
3. ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் போன்றவற்றை அழுக வைத்துப் பதப்படுத்திச் செருப்புத் தைத்தல், தோல்வார் தைத்தல்
4. கடைகளுக்கு அவற்றைக் கொண்டு சென்று விற்றல்
5. ஊர்க்காரர்களின் மாடுகளை மலையில் சென்று மேய்த்தல்
6. மாட்டுக் கிடைக்குக் காவலாக இருத்தல்

என்ற தொழில்களைச் சக்கிலியர்கள் செய்து வந்தனர். முத்துப்பட்டன் கதை (ப. 39, 40, 42).

முத்துப்பட்டன் கதைப்பாடலில் தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

இந்தக் கதைப்பாடலைப் பதிப்பித்துள்ள நா.வா. அவர்கள் கதை நடந்த காலம் கி.பி. 1658 முதல் 1738 முடிய உள்ள காலமாதல் வேண்டும் என்று காலவரையறை செய்துள்ளார். இந்தக் கால வரையறையைக் கதைப்பாடல் குறிப்பிடும் இடப்பெயர்கள், ஆட்சியாளர் பெயர்கள், கதைப் பாத்திரச் சாதி கால் கொண்ட இடம், கதைத் தலைவனின் தெய்வக் கோயில் என்ற நான்கு கருத்துகளின் அடிப்படையில் முடிவு செய்துள்ளார். இந்தக் காலகட்டத்தில் அந்தணர் சாதியினர் தம் சாதிக்குரிய தொழில்களுடன் வீர சாகசக் கலை களையும் கற்று அரசர்களிடம் சேவகப்பணிகளையும் ஆற்றி வந்தனர் என்பதைக் கதைப்பாடல் உறுதிப்படுத்துகின்றது. முத்துப்பட்டனின் முற்கட்ட வாழ்வே இதற்குச் சான்றாக அமைகின்றது.

முத்துப்பட்டன் பொம்மக்கா, திம்மக்கா என்ற சக்கிலியர் சாதிப் பெண்களின் நாட்டுப்பாடலில் மனதைப் பறிகொடுத்து அவர்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு எடுத்தபோது அவன் சக்கிலியர் குலத்தொழிலை ஏற்க மகிழ்வுடன் முன் வந்ததைக் கதைப்பாடல் சுட்டுகிறது. அந்தணருக்கே உரிய தன்குலத் தொழிலை விட்டு, சக்கிலியர் சாதித் தொழிலைச் செய்ய முத்துப்பட்டன் முன்வந்தபோது, இங்குத் தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல் நடந்துள்ளது. சாதிவிட்டுச் சாதி, தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நடத்தியதன் காரணமாக முத்துப்பட்டன் கொல்லப்பட்டுள்ளான் என்பதைக் கதைப்பாடல் வெளிப்படுத்தியுள்ளது.

சக்கிலியர் சாதியைச் சேர்ந்த தன் பெண்மக்களை மணம் முடிக்க விரும்பும் அந்தணர் சாதியினான முத்துப்பட்டன் சக்கிலியனாக மாறிச் சக்கிலியர் சாதித் தொழிலைச் செய்ய வேண்டும் என்று வாலப்பகடை நிபந்தனை விதித்தான். உயர்சாதி ஆண்மகன் கீழ்ச்சாதிப் பெண்களை விரும்புவதும் வாழ்வில் இணைத்துக் கொள்வதும் வரலாற்றில் நிகழ்ந்துள்ளதே ஆகும். ஆனால் கீழ்ச்சாதித் தகப்பன் ஒருவன் தன் சாதியானாக உயர் சாதியான் மாறவேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் புதுமை இக்கதைப்பாடல் காலகட்டத்தில் நிகழ்ந்துள்ளதை உன்னிப்பாக நோக்க வேண்டியுள்ளது. அந்நிபந்தனைக்கு அவ்வுயர்சாதி ஆண் மகனும் உடன்பட்டுத் தன் சாதித் தொழிலை விடுத்ததுடன் தன் சாதியினரால் மிகவும் அவமரியாதையாகவும் கேவலமானதாகவும் கருதப்படும் கீழ்ச்சாதித் தொழில்களைச் செய்ய முன் வந்தான் என்ற சமுதாயப்புரட்சி நிலையை இக்கதைப்பாடல் முன்வைத்துள்ளது. செத்தமாட்டை அறுத்தல், அதன் இறைச்சியை உண்ணுதல், எஞ்சிய தோலை உரித்தல், தோலைப் பதப்படுத்துதல், அத் தோலைக் கொண்டு செய்த தோற் பொருட்களான செருப்பு முதலியவற்றை விற்றல் என்ற தொழில்களைச் செய்வதாலேயே தொழில் அடிப்படையில் உயர்சாதியினரால் கீழானவர்களாகவும் கீழ்ச்சாதியினராகவும் ஒதுக்கி வைக்கப்பட்ட சக்கிலியர் சாதியினனாக அவ்வுயர் குலத்தைச் சேர்ந்த ஒருவனே ஆகியதைச் சித்திரிக்கும் இக்கதைப்பாடல் சமுதாயச் சாதிப்புரட்சி வீரனாக முத்துப் பட்டனைப் படைத்துள்ளமை வெளிப்படத் தெரிகிறது. மதம் மாறித்திருமணம் செய்து கொள்ளும் சான்றுகளை இன்று வரையும் காண முடிகிறது. ஆனால் சாதி மாறி ஒருவன் திருமணம் செய்து கொண்டான் என்ற நிலையை இக்கதைப்பாடலே முதல்

முதலாகக் காட்டுகின்றது. ஒருவன் மதத்தை மாற்றிக் கொள்ளலாம்; ஆனால் பிறப்படிப்படையிலான சாதியைச் சாகும் வரையும் மாற்றிக் கொள்ள இயலாது என்ற கூற்று இக்கதைப்பாடல் வழி பொய்யாக்கப்பட்டுள்ளது.

சக்கிலியர் தலைவனும், தான் விரும்பும் பெண் மக்களின் பெற்றோனுமாகிய வாலப்பகடையின் நிபந்தனையின்படி முத்துப்பட்டன் தோல் வாங்கிச்செருப்புத் தைத்து வருதலால் தன் தொழிலையும், பூணூல், குடுமியை அறுத்து எறிதலால் தன் உயர்சாதி அடையாளங்களைத் துறந்து கீழ்ச்சாதியனின் அடையாளத்தைப் பெற்றதையும் கீழ்க்காணுமாறு கதைப்பாடல் விவரிக்கின்றது.

விக்கிரமசிங்கபுரத்துச் சந்தையில் தோல் வேண்டியபடி
அறுத்து
விநோதமாகச் செருப்புக் கட்டிக் கொண்டு வீதிவழி
நடந்தான்
நடுவழியில் பின் குடும்பியும் பூணூலும் நன்றாக
வேயறுத்து
நாலு திசைக்கு மெறிந்துவிட்டு பட்டன் நடந்தான்.
பசுக்கிடைக்கு
ஆலம்பட்டி கிடைதனிலே வாலப்பகடையுட
குடிசையிலே
அழகு செருப்பை நடையிலே தூக்கிவிட்டப்புறம்
போயிருந்தான் (ப. 40).

திருமணத்தின்போது பட்டனின் தோற்றத்தை வருணித்துப் பாடும் சக்கிலியப் பெண்கள் அவன் முறுக்கு மீசை வைத்துக் கொண்டு அரக்குருமால் அணிந்து கொண்டிருந்ததை,

முறுக்கு மீசையும் பொட்டழகும்
முத்துக் கோர்த்தாப் போற் பல்லழகும்
அரக்குருமாலும் பட்டனைவர்ணித்து
ஆனந்தக்கும்மி யடிப்போமடி (ப. 41)

எனப் பாடினர். தொழிலாலும் தோற்றத்தாலும் ஒரு முழுச் சக்கிலியனாகவே முத்துப்பட்டன் ஆகிவிட்டான். பெண்களை மணம் செய்தபின் பகடைகள் செய்யும் மாட்டுக் கிடைகளை மலைக்கு ஓட்டிச் சென்று பாதுகாப்புடன் மேய்த்துவரும் பணியைப் பட்டன் மேற்கொண்டான். “வாலப்பகடையுடன்

இணைந்து அவனுக்கு உதவியாகப் பட்டன் தொழில் செய்து வந்தான். செருப்புத் தைத்தான். கிடையைக் காவல் புரிந்தான். துஷ்ட மிருகங்களால் சல்லியம் இல்லாமல் அவற்றைத் தனது நண்பர்களோடு வேட்டையாடிக் கொன்றான். பகடைக்குப்பின் இவனே தலைவனானான். 'பட்டவராயன்' என்று பெயரும் பூண்டான்."[17]

பகடைகளின் தலைவனாக ஆன முத்துப்பட்டன் பகடைத் தலைவனுக்குரிய முழுப் பொறுப்பையும் ஏற்றுப் பகடைகள் தலைவனாகவும், மற்றும் மாட்டுக்கிடைக் காவல் தலைவனாகவும் சிறப்புறப் பணியாற்றி வந்தான். அத்துடன் மாடுகளை மேய்ச் சலுக்குக் கொண்டு செல்லும் மலை மற்றும் மலைப்பாதைக் காவலை முத்துப்பட்டன் மேற்கொண்டான்.

முத்துப்பட்டன் கதையை வில்லுப்பாடலாகப் பாடிய முத்துப்புலவர் என்பவர் மலை மற்றும் மலைப் பாதைக் காவலை மேற்கொண்ட முத்துப்பட்டன் செயல்களை விவரித்துப் பாடியதாக இக்கதைப்பாடற் பதிப்பாசிரியர் நா. வானமாமலை குறிப்பிட்டுள்ளார்.

"முத்துப்பட்டன் மலையாளத்துக்குப் போகும் பொதி மாட்டுப் பாதையை வணிகர்களுக்காகப் பாதுகாத்தான். கள்வர் பயமும் துஷ்டவிலங்குகளின் உபத்திரவமும் இல்லாமல் வணிகர்களின் போக்குவரத்துக்கு வசதி செய்து அவர்கள் தங்கவும் வசதி செய்து கொடுத்தான். அவ்விடம் 'குறும்பிலாக் காவு' என்று அழைக்கப்படுகிறது. குறும்பில்லாத காவாக அவ்விடத்தை அவன் மாற்றினான். இதனால் அவன் சிறிது காலத்திலேயே புகழ் பெற்றான்."[18]

இவ்வாறு அந்தணர் தொழிலைவிட்டு அசல் சக்கிலியனாகவே மாறியதுடன் சக்கிலியர் தொழிலையும் செய்து வந்த முத்துப் பட்டன், சக்கிலியர் குலக்காவலன், மாட்டுக் கிடைக்காவலன், மலைக்காவலன், மலைப்பாதைக் காவலன், மலைப்பாதை வழி செல்லும் வணிகர்களின் காவலன் என்று காவல் தலைமைப் பொறுப்புடையவனாகச் செயல்பட்டான். இவனுடைய இக்காவல் பொறுப்பு மேற்கொண்ட கொள்ளையடித்து வாழ் வோருக்குப் பெரிய இடையூறாக அமைந்திருந்தது. சாதிவிட்டுச் சாதி மாறியதுடன் சாதித் தொழிலையும் மாற்றிக் கொண்டு

17. நாட்டுப்புறக் கலையியல், ப.123.

18. மேற்படி

காவல் பொறுப்பை மேற்கொண்ட முத்துப்பட்டனின் செயல் பரம்பரையாகக் காவல் பொறுப்பை மேற்கொண்டு வந்தவர்கள் மத்தியிலும் மிகுந்த எரிச்சலை ஊட்டுவதாக அமைந்திருந்தது.

முத்துப்பட்டனுடைய காவல் தலைமையை ஏற்றுக் கொள்ளாதவர்களும் அவனுடைய காவலில் கொள்ளையடிக்க முடியாதவர்களும் அவனை ஒழித்துக் கட்டத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்திருந்தனர். முத்துப்பட்டனின் காவலில் இருந்த மாட்டுக் கிடையைக் கடத்திக் கொண்டு போயினர். கொள்ளை நடத்தியவர்கள் வன்னியக் கரந்தைத் தேவர்கள் என்று வில்லுப் பாடல் புலவர் முத்துப்புலவரும் சிங்கம்பட்டியைச் சேர்ந்த 90 வயது முதியவர் சுப்பிரமணியக் கவிராயரும் ஒருசேரக் கூறியதாக நா.வா. குறிப்பிட்டுள்ளார்.[19]

"வன்னியக் கரந்தைப் பகுதியில் 11 ஆண்டுக் காலம் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அவர்கள் உக்கிரங்கோட்டைப் பாளையக்காரன் தங்கள் சாதியைச் சேர்ந்தவன் என்பதால் அவனிடம் புகலிடம் கேட்டார்கள். அவன் அவர்களை முத்துப் பட்டனின் காவலுக்குட்பட்ட பொதிகை மலை மாட்டுக் கிடைகளைக் கொள்ளையடிக்க ஏவித் தானும் உடன் ஆட்களை அனுப்பினான். அவனுக்குப் பங்கு கொடுப்பதென்று உடன் படிக்கை ஆயிற்று."[20]

மாட்டுக்கிடை கொள்ளையடிக்கப்பட்ட இச்செய்தி கதைப்பாடலில்,

பட்டனுடைய பசுக்கிடையை கள்ளர் பத்திக்கொண்டு
போனார் என்று சொல்லி வன்னியர்
அண்ணே முத்துப்பட்டா உன்கிடை மாட்டை
அடித்துக் கொண்டு போறார்
ஆறென்று கேட்டேன் அடிக்கவந்தான் நானுங்கூட
மாறியடித் தோடிவந்தேன்
ஊத்துமலையில் வன்னியரும் உப்பரங்கோட்டை
யானுங்கூடி
உன்கிடை மாட்டை திசைசாய்த்துப் போகிறார்
ஓடிப்போ முத்துப்பட்டா (ப. 42-43)

என்று ஒருவன் மாட்டுக்கிடை களவு போனதைத் தெரிவித்தான்.

19. நாட்டுப்புறக் கலையியல், ப. 123-124.

20. மேற்படி, ப.124.

உடன் முத்துப்பட்டன் வல்லயம், தடியைக் கையிலெடுத்துக் கொண்டு, சல்லடம் கட்டி கச்சையிறுக்கி, சமுதாடு சொருகிக் கொண்டு போருக்குப் புறப்பட்டான். சிங்கம்போல் வந்து வன்னியர் கூட்டத்தில் போர் புரிந்தான். அந்தணர் குலத்தவனான முத்துப்பட்டன் ஓர் அரசனைப் போல் போர்புரிந்ததைக் கதைப்பாடல் கீழ்க்காணுமாறு விவரிக்கின்றது.

வாள் கொண்டு வெட்டி மடிந்தார் சிலபேர்
வல்லயத்தில் குத்தி மாண்டார் சிலபேர்
ஊளையிட்டுக் கொண்டுருண்டார் சிலபேர்
ஒதுங்கி அடிபட்டிறந்தார் சிலபேர்
மட்டு மடிந்து கிடப்பார் சிலபேர்
பட்டபின் வெட்டாதே என்றார் சிலபேர் (ப. 44)

முத்துப்பட்டன் இவ்வாறு அனைவரையும் வெட்டிக் கொல்வதைக் கண்டு இருண்ட செடிக்குள் ஒளிந்து தப்பிப் பிழைத்திருந்த ஒருவன் போரில் அனைவரையும் கொன்று குவித்துவிட்டோம் என்றெண்ணி ஆற்றில் கையலம்பிக் கொண்டிருந்த முத்துப்பட்டனை முதுகில் குத்த, திரும்பி அவனைக் குத்திக் கொன்ற பின் முத்துப்பட்டனும் உயிர் துறந்தானென்கிறது கதைப்பாடல் (ப. 44).

சாதிவிட்டுச் சாதி மாறி, சாதித் தொழில்மாறி, தான் சார்ந்த சாதித் தலைவனாக உயர்ந்து, அச்சாதி மக்களின் காவலனாக மாறியதுடன், அப்பகுதியில் வாழ்ந்த அனைத்துப் பிரிவு மக்களின் காவலனாகவும் சிறந்த முத்துப்பட்டன் தொழில்வழியிலான கட்டுப்பாட்டு மீறலைச் சமுதாயத்தில் நிகழ்த்தியவனாகத் திகழ்கிறான். இதனால் தன் இன்னுயிரையும் நீத்தவனாகக் காணப்படுகின்றான்.

தொழில்வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நடத்தியதால்தான் முத்துப்பட்டன் கொல்லப்பட்டான் என்பது கதைப் பாடலில் வெளிப்படையாகக் கூறப்படாவிடினும் தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்திய முத்துப்பட்டன் கொல்லப் பட்டான் என்ற அளவில் இக்கதைப்பாடலை நாம் இப் பிரிவிற்குள் உள்ளடக்க முடிகின்றது. இவனுடைய கொலைக்குச் சாதி வழியிலான தொழில் மீறல் மறைமுகக் காரணமாக இருத்தல் வேண்டும் என்பதும் இதன்மூலம் முன் வைக்கப் பெறுகின்றது. ஏனெனில் எத்தனையோ மாட்டுக் கிடைகள் இருக்க, பொதிகை மலையில் கிடையிருந்த முத்துப் பட்டனின் மாட்டுக்கிடையைக்

களவாடும்படித் தூண்டிய உக்கிரங்கோட்டை பாளையக்காரருக்கு முத்துப்பட்டனை, சாதி விட்டுச் சாதி மாறித் தொழில் வழியிலான மீறலை நிகழ்த்திய அவனை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற உள்நோக்கமிருந்ததையே கதைப்பாடல் நிகழ்ச்சிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்தக் கதைப்பாடலைப் பதிப்பித்த நா.வா. அவர்களும் முத்துப்பட்டனின் காவலுக்குட்பட்ட பகுதிகளில் கொள்ளை நடத்த இயலாதவர்கள் அவனை ஒழித்துக் கட்டினர் என்பதைக் கீழ்க்காணுமாறு விவரித்துள்ளார்.

"சக்கிலியப் பெண்களை மணந்து கொண்ட முத்துப்பட்டன் சில ஆண்டுகளில் சக்கிலியர்களின் தலைவனாகிவிடுகிறான். தென்பாண்டி நாட்டிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் பொதிமாட்டு வாணிபர்களுக்குக் காட்டுப் பாதையில் பாதுகாப்பு அளிக்கிறான். இந்த வாணிபர்களது பொருள்களைப் பக்கத்து ஊர்களிலுள்ள ஜமீன்தார்களது உதவியோடு சில கொள்ளைக் காரர்கள் கொள்ளையடித்து வந்தனர். அவர்கள் முத்துப்பட்டன் பாதுகாவலிலுள்ள காடுகளில் நுழைய முடியவில்லை. அவர்களுக்கு அவன் மீது கோபம். உயர்ந்த சாதியில் பிறந்து சக்கிலியனாகிவிட்ட அவன் மீது பகைமையை வளர்த்து அவனைக் கொன்றுவிடத் திட்டம் தீட்டினர். ஒருநாள் அவன் உடல்நலமின்றி இருக்கும்பொழுது அவனுடைய பாதுகாப்பில் உள்ள மாடுகளை ஓட்டிச் சென்றனர். இதையறிந்து போருக்குச் சென்று அவர்களில் பலரை அவன் கொன்றுவிட்டான். மறைந்திருந்த ஒருவன் அவனை முதுகில் குத்திக் கொன்றான்."[21]

நா.வா. அவர்கள் இக்கருத்துகளை வில்லுப்பாடற் புலவர் முத்துப்புலவர், சிங்கம்பட்டி சுப்பிரமணியக் கவிராயர் ஆகியோரை நேர்முகம் கண்டு உறுதிப்படுத்திக் கொண்டே எழுதியுள்ளார். எனவே முத்துப்பட்டனின் கொலை திட்டமிட்ட சதிச்செயல் என்பதும், அந்தணர் சாதித் தொழிலை விடுத்துக் காவல் தொழிலை மேற்கொண்ட அவன் தொழில் கட்டுப்பாட்டு மீறல் காரணமாக ஒழித்துக் கட்டப்பட்டான் என்பதும் உறுதிப்படுகிறது.

---

21. ஆராய்ச்சி (இதழ்), ப. 137

முத்துப்பட்டன் கதை உண்மை நிகழ்வா?

பொதுவாகச் சமூகக் கதைப்பாடல்கள் அனைத்தும் உண்மையில் நடந்த நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டவை ஆகும். ஆயின் கதையைப் பாடுகின்ற புலவர்கள் சில காரணங்களுக்காக அடிப்படை நிகழ்ச்சிகளை மறைத்தும், விடுத்தும் கதையைப் பாடலாக இயற்றியுள்ளனர். கதைச் சுவைக்காகக் கற்பனை, வருணனையைக் கலந்தும் தம்படைப்பை உருவாக்கியுள்ளனர். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு சமூகக் கதைப்பாடல்களை நோக்கும் பொழுது கதை நிகழ்ச்சிகளில் எந்த அளவு உண்மை உள்ளது; அல்லது கற்பனை உள்ளது என்பதைத் தெளிவாக அறிய முடியும். அத்துடன் கதை நடந்த களத்தில் களஆய்வை மேற்கொண்டும் எந்த அளவு கதைப்பாடலில் உண்மைக் கூறுகள் அடங்கியுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள இயலும்.

இந்த முத்துப்பட்டன் கதைப்பாடலைப் பதிப்பித்துள்ள நா.வானமாமலை அவர்கள் கதை நடந்த களங்களில் கள ஆய்வு நிகழ்த்தியுள்ளார். இதன்மூலம் முத்துப்பட்டன் கதை உண்மையில் நடந்த நிகழ்ச்சி என்பதைத் தன் பதிப்பில் நிறுவிக் காட்டி யுள்ளார். கதை நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கருதப்படும் பொதிகை மலைப் பகுதியில் கதை நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் விதத்தில் இடங்களுக்குப் பெயரிடப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டியுள்ளார்.

பொதிகை மலைமேல் தற்போது காரையாறு அணை கட்டப்பட்டுள்ள இடத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் முத்துப் பட்டனுக்குப் பட்டவராயன் கோயில் உள்ளது. இக்கோயிலுக்குக் கிழக்கேயுள்ள இடம் "பசுக்கிடைவிளை" என அழைக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இங்கேதான் வாலப்பகடையின் பசுக்கிடை இருந்ததாகத் தெரியவருகிறது என்கிறார். அத்துடன் வன்னியருக்கும் பட்டனுக்கும் சண்டை நடந்த இடம் "கச்சை கட்டி முடுக்கு" என வழங்கப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்டி யுள்ளார். இங்குள்ள "படுகளப்பாறை" என்ற பாறையில் தான் பட்டன் இறந்து விழுந்து ஓடைக்கரையில் உருண்டான் என்றும் சொல்லப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். "அரசடித்துறை" அல்லது "பூசைத்துறை" என்பது பட்டவராயன் பொம்மக்காவையும் திம்மக்காவையும் பார்க்குமுன் பூசை செய்து கொண்டிருந்த இடமென்று கூறப்படுவதாகக் குறித்துள்ளார். சக்கிலியர்களும் தொட்டியர்களும் வாழ்ந்த இடமும் "தொட்டியர் வலசை" என்று

சுட்டிக் காட்டப்படுவதாகச் சொல்லுகிறார்.[22] இவையாவும் இக்கதை நிகழ்ச்சிகள் உண்மை நிகழ்ச்சிகளை அடியொற்றியவை என்பதை வெளிப்படுத்துவதாக இயம்பியுள்ளார்.

சாதிவிட்டுச் சாதிமாறி, அதிலும் உயர்சாதியான் கீழ்ச்சாதி யானாக ஆகித் தான் சார்ந்த சாதி மக்களைக் காத்து அச்சாதித் தொழிலில் ஈடுபட்டு, அத்தொழில் பூண்டதாலேயே உயிர் விட்டவன் முத்துப்பட்டன். இந்த உண்மைப் பாத்திரத்தைத் தெய்வ நிலைக்கு உயர்த்திய மக்கள் பட்டவராயனுக்குக் கோயிலெடுத்து வழிபட்டு வருகின்றனர்.

"அக்கோயிலில் பொம்மக்கா, திம்மக்காவின் சிலைகளும் பட்டவராயன் சிலையின் இருபுறமும் காணப்படுகின்றன. வன்னியரை எதிர்த்துச் சண்டை செய்யும்போது பட்டன் பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் ஈட்டியும் வல்லயமும் கோயிலினுள் சார்த்தி வைக்கப்பட்டுள்ளன. அவை போன்ற பல ஈட்டிகளும் வல்லயங்களும் நேர்த்திக் கடனாக மக்கள் அளித்திருக்கிறார்கள். பொதிகை மலையில் சொரிமுத்தையன் கோயிலுக்கு வடக்கே உள்ள இக்கோயிலின் முன்னுள்ள பாறையில் இக்கோயில் தோன்றிய காலம் 999 ஸ்ரீ என்று பொறிக்கப்பட்டுள்ளது. இது கொல்லமாண்டாகும். கி.பி. (ஆண்டில்) 1824இல் இக்கோயில் உருவாக்கப்பட்டதெனத் தெரிகிறது."[23] இவற்றையெல்லாம் நோக்க முத்துப்பட்டன் உண்மையில் வாழ்ந்து மறைந்த ஒரு மகத்தான சமுதாயப்புரட்சி வீரன் என்றும் சாதிக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெரிந்தவன் என்பதும் சாதியடிப்படையில் தொழில் அமைய வேண்டும் என்ற கருத்தை உடைத்தெறிந்தவன் என்பதும், செய்யும் தொழில் அடிப்படையில் சிலரைக் கீழ்ச்சாதியராக நடத்துவதை மறுத்தவன் என்பதும், ஒருவன் தான் சாகும் வரையும் சாதியை மாற்றிக் கொள்ள இயலாது என்ற நிலையைத் தகர்த்தெரிந்தவன் என்பதும் தோற்றம், தொழிலைப் பூணுதல் மூலம் சாதியை மாற்றிக் கொள்ள இயலும் என்பதைச், சாதித்தவன் என்பதும் இக்கதைப்பாடல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 18-19ஆம் நூற்றாண்டுகளில் சாதித் தொழில் கட்டுப்பாட்டு மீறல்கள் நடைபெற்றுள்ளதற்கு இக்கதைப்பாடல் தக்கதொரு சான்றாகத் திகழ்கிறது.

---

22. முத்துப்பட்டன் கதை, 12-14ஆம் பக்கக் கருத்துகளை அடியொற்றியவை.

23. மேற்படி, ப.13.

இதைப் போன்றதொரு கதையான சின்னத்தம்பி கதை பற்றி அடுத்துக் காணலாம்.

சின்னத்தம்பி கதைப் பதிப்பு விவரம்

சின்னத்தம்பி கதைப்பாடற் சுவடி குமரி மாவட்டத்தைச் சேர்ந்த குலசேகரபுரத்துக் குலசைப்பித்தன் என்பவருடையதாகும். சுவடியை எழுதிய ஆசிரியர் வில்லிசைப் புலவர் கோலப்ப பிள்ளையாகும். இந்தச் சின்னத்தம்பி கதை இந்நூலாசிரியர் முனைவர் சு. நிர்மலாதேவி அவர்களால் 1987இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நூலைச் சென்னையிலுள்ள ஆசியவியல் ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது. "The wandering voice" என்ற நூலின் முதல் கதைப்பாடலாக இக்கதைப்பாடல் அமைந்துள்ளது. ஆங்கில மொழிபெயர்ப்புடன் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கதைப்பாடல் சாதி மீறிய தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலுக்குத் தக்கதொரு சான்றாகத் திகழ்வதாகும். சாதித் தொழிலை விட்டுப் பிற சாதியாரின் தொழிலைச் செய்தவன் எவ்வாறு வஞ்சகமாகச் சதிசெய்து வீழ்த்தப்பட்டான் என்பதை இக்கதைப்பாடல் வெளிப்படையாகவே காட்டியுள்ளது.

சின்னத்தம்பி கதைப்பாடற் சுருக்கம்

பதிப்பித்து வெளியாகியுள்ள கதைப்பாடல் அடிப்படையில் கதைச் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

நெல்லை மாவட்டம் நாங்குநேரித் தாலுகாவைச் சேர்ந்த வேப்பிலாங்குளம் என்ற ஊரில் இராமப்பகடை - பூலுடையாளுக்கு மகனாகத் தோன்றியவன் சின்னத்தம்பி. திருக்குறுங்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு அப்பகுதியை ஆட்சி செய்து வந்தவர் மாணிக்கவாசகர். இவர் ஆளுகைக்குட்பட்ட பணகுடி களக்காடு மலைப்பகுதிகளிலிருந்து காட்டுப்பன்றி, கடுவாய் போன்ற கொடிய விலங்குகள் இறங்கிவந்து பயிர்களுக்கும், மக்களுக்கும் தொல்லை விளைவித்தன. இப்பகுதியின் காவல் பொறுப்பை வகித்த மாணிக்கவாசகரின் வடக்குவாசல் காவல் தளபதி வைத்தியநாதர் என்பவரால் விலங்குகளின் தொல்லையை அடக்க இயலவில்லை. அப்போது சின்னத்தம்பி தன் நண்பர் களுடன் வேட்டைக்காரர்களையும் திரட்டிக் கொண்டு மலைப் பகுதிகளுக்குச் சென்று விலங்குகளை வேட்டையாடிக் கொன்று மக்களுக்கும், அவர்களின் பயிர் பச்சைகளுக்கும் பாதுகாவலனாக உயர்ந்தான். அவன் இவ்வாறு இருமுறை மலை வேட்டையாடி விலங்குத் தொல்லையை ஒழித்துச் சிறந்த காவல் வீரனாகத் திகழ்ந்தான். அப்பகுதியில் பெருவீரனாகத் திகழ்ந்து வந்த,

அவனைப் பற்றிக் கேள்வியுற்ற மாணிக்கவாசகர் தன்னிடம் ஓர் அடங்காக் குதிரையொன்று இருப்பதாகவும் அதனை அடக்கி விட்டால் வடக்கு வாசல் காவல் தளபதி பதவியை அவனுக்கு அளித்து விடுவதாக உறுதி கூறி ஓலை அனுப்பினார். இது அவன் அழிவுக்கு ஊன்றிய வித்தாகும். தன் வீரத்தை வெளிக்காட்டும் தகுந்த வாய்ப்பாக இதனைக் கருதிய சின்னத்தம்பி, திருக்குறுங்குடி வந்து அடங்காத குதிரையைத் தீரமுடன் அடக்கி அதற்குரிய பரிசாக வடக்கு வாசல் காவல் தளபதி பதவியை ஏற்றான். இதனால் காவல் பொறுப்பைப் பரம்பரையாக வகித்து வந்த தேவர் சாதியார் கொதிப்படைந்தனர். சக்கிலியர் சாதியான் தங்கள் காவல் தளபதியா? அவனுக்குக் கீழ் அவனுக்குக் கட்டுப்பட்டுத் தாங்கள் காவல் தொழில் செய்வதா? எனக் குமுறினர். வடக்கு வாசல் காவல் தளபதி பொறுப்பை இழந்த வைத்தியநாதர், பாப்பாக்குடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வருபவரும் மாணிக்கவாசகருக்குத் தன் தங்கையைத் திருமணம் செய்து கொடுத்துள்ளவருமான தருமராசாவிடம் சென்று நிலைமையைக் கூறி முறையிட்டார். தருமராசாவும் சக்கிலியர் சாதித் தொழிலை விட்டுக் காவல் தொழிலுக்கு வந்த சின்னத்தம்பியை ஒழித்துக் கட்டத் தக்க தருணத்தை எதிர் நோக்கியிருந்தார். அதற்கு வாய்ப்பாக அவருக்குச் சொந்தமான கரையாளன் வயலில் புதையல் கிடைத்தது. அதை எடுக்க நரபலியாக வீராதிவீரன் ஒருவனைப் பலியிட வேண்டும் என்ற அடிப்படையில் அதற்குச் சின்னத்தம்பியைப் பயன்படுத்தி அவனை ஒழித்துக் கட்டத் திட்டம் தீட்டினார் தருமராசா. மாணிக்கவாசகருக்குப் புதையல் கிடைத்துள்ள செய்தியைத் தெரிவித்து நரபலி தர சின்னத் தம்பியை அனுப்பினால் புதையலில் பாதியைத் தந்து விடுவதாக உள்ளோலையிலும் தனக்குத் தீராத தலைவலியாக உள்ளதால் கொடிய விலங்குகள் உள்ள மலைக்குச் சென்று மூலிகைகள் பறித்துக் கொண்டு வருமாறு சின்னத்தம்பியை அனுப்ப வேண்டுமென வெளி யோலையிலும் எழுதி அனுப்பினார். தன் மாமன் மகளை மணம் செய்ய ஊருக்குச் சென்றிருந்த சின்னத்தம்பிக்கு வெளியோலையை அனுப்பிப் பாப்பாக்குடி செல்லப் பணித்தார் மாணிக்கவாசகர். மலைக்குச் சென்று மூலிகைகளைப் பறித்துக் கொண்டு பாப்பாக்குடி வந்த சின்னத்தம்பி இரவில் மருந்தரைத்துக் கொள்ளலாம் எனக் கூறப்பட்டு, மாடன் சாம்பான் வீட்டில் தங்க வைக்கப்பட்டான். அங்குத் தருமராசாவின் ஏற்பாட்டின்படி சாராயம், அபினி, கஞ்சா, மதனகாமப்பூ போன்ற மயக்கம் தரும் பொருட்களைக்

கலந்தரைத்துத் தயாரித்த உணவைச் சின்னத்தம்பியை உண்ண வைத்தனர். தன்னுணர்வற்ற நிலையில் இருந்த அவனை அழைத்துக் கொண்டு சென்று புதையல் இருக்குமிடத்தில் வெட்டிப்பலி கொடுத்தனர். சிறந்ததொரு வீரனாகத் திகழ்ந்த சின்னத்தம்பி தன் சாதித் தொழிலை விடுத்துக் காவற் தொழிலுக்கு வந்ததனால் ஆட்சியாளர்களாலும் காவற் தொழில் செய்து வந்த சாதியாராலும் ஒழித்துக் கட்டப்பட்டான்.

சின்னத்தம்பி கதையில் தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

சின்னத்தம்பி சக்கிலியர் சாதியில் பிறந்தவன் என்பதும் அச்சாதி நாட்டில் இருந்த சாதியுள் கீழ்ச்சாதி எனக் கருதப் பட்டதும் கதைப்பாடலில் தெளிவாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. சின்னத்தம்பியின் பெற்றோரைக் குறிப்பிடும் கதைப்பாடல் வரிகள் கீழ்க்காணுமாறு அமைந்துள்ளன (பாடல் வரிச் சான்றுகள் பதிப்புக் கதைப்பாடலில் உள்ளவை).

> **சாதியில் ஈனசாதி சக்கிலியப் பகடைச் சாதி**
> **ராமனல்லோ பகடையுடன் அவன் மனைவி பூலுடையாள்**
> (வரி. 3-4)

சக்கிலியர் சாதித் தொழிலாகத் தோல் தொடர்பான பணிகள் செய்யப்பட்டு வந்தன. அரண்மனையிலிருந்து அழைப்பு வந்த வுடன் சின்னத்தம்பி கூறும் கூற்றுகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

> **கல்லணையள் தைக்கணுமோ கடுவாளம் தைக்கணுமோ**
> **தாப்பிணிவார் தைக்கணுமோ தங்குப்பட்டை தைக்கணுமோ**
> **சில்லுண்டி வேலைகள்தான் சிரிட்டுத் தைக்கணுமோ**[24]

ஆனால் சின்னத்தம்பி தன் சாதித் தொழிலை விட்டுப் பதினைந்து வயதிலேயே வேட்டைக்காரர்களை அழைத்துக் கொண்டு மலைவேட்டைக்குச் சென்று விலங்குகளைக் கொன்று கருவறுத்து மக்களையும் அவர்களின் விளைநிலங்களையும் விலங்குகளின் தொல்லையிலிருந்து காப்பாற்றினான். அதன்மூலம் அப்பகுதி மக்களின் ஒரு பெரும் பாதுகாவலனாக உயர்ந்தான். இந்தத் தொழில் வேண்டாம் மகனே என்று தாயும் எச்சரித்தாள்.

> **கரடிபுலி காட்டானை கடுவாய்கள் மெத்தவுண்டு**
> **எதிராடிச் சண்டையிட்டால் எவ்விதமாய் வந்திடுவாய்**

---

24. சின்னத்தம்பி கதை, கேரளப்பல்கலைக் கழகச் சுவடி எண்.11613, ஓலை எண்.12.

கடுவாய்புலி உபத்திரத்தால் காட்டுவழி செல்லார்கள்
என்மகனே கண்மணியே ஏற்றமுள்ள சின்னத்தம்பி
உனக்குமே இந்தத் தொழில் உகந்ததில்லை என்மகனே"
(வரி. 232-236)

தாய் சொல்லையும் தட்டிவிட்டுச் சின்னத்தம்பி தன் சாதி மீறிய தொழிலில் ஈடுபட்டான். இதுவே அவன் உயிருக்கும் எமனாக அமைந்தது. பாப்பாக்குடி, திருப்புடைமருதூர்ப் பட்டணத்து அதிபதியான தருமராசா பகடைச் சாதியைச் சேர்ந்த ஒருவன் வாசல்காவல் தலைவனாக உயர்ந்து இருப்பதா? என்றெண்ணிச் சின்னத்தம்பியைத் தனக்குக் கிடைத்த புதையலெடுப்பதற்கு நரபலியாகக் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டே சின்னத்தம்பியைக் கொன்றான் என்பது கதைப் பாடலில் வெளிப்படையாகவே கூறப்பெற்றுள்ளது. பொதுவாகக் கதைப்பாடற் புலவர்களால் ஆட்சியாளர்களுக்கெதிரான கருத்துகளைக் கூறாது விட்டு விடுதல் அல்லது மறைத்துவிடுதல் அல்லது மறைமுகமாகக் கூறுதல் என்ற போக்குகளே கடைப் பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இக்கதைப்பாடற் புலவர் ஆட்சியாளரின் சதிச்செயலாலேயே, கீழ்ச்சாதியான் வாயிற் காவற் தளபதியாயிருப்பதைச் சகித்துக் கொள்ளாத தாலேயே திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டான் என்பதை வெளிப்படையாகவே பாடியுள்ளார். பாடல் வரிகளாவன:

அறிந்துமே தர்மராசர் ஆலோசிக்கும் வேளையிலே
திருக்குறுங் குடியதிலே வடக்குவாசல் தலைவனவன்
சூராதி சூரனென்றும் சுத்தவீர மன்னனென்றும்
சாதியிலே கீழ்ச்சாதி சக்கிலியப் பகடைச்சாதி
அவனை வைத்திருக்கக்கூடாதென்று மந்திரிமார்
சொன்னதுண்டு
இச்சமையம் வரவழைத்துப் பலியிட வேணுமென்று"
(வரி. 418-423)

திட்டமிட்டுக் கொலை செய்ததாக உள்ளது. ஆனால் சில சுவடிப் பிரதிகளில் இம்முக்கியச் செய்தி மறைக்கப்பட்டுள்ளது.

நமக்குக் கிடைத்துள்ள கேரளப் பல்லைக்கழகக் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகக் கதைப்பாடற் சுவடிப் பிரதியொன்றில் இத்தகு சதிச்செயல் முற்றிலும் மறைக்கப்பட்டுள்ளது தெரிகின்றது. 11613, 8426 என்ற சுவடி எண்களுள்ள இரு சுவடிப் பிரதிகள் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளன. இதில் பின்னது மிகுந்த சிதைவுக்கு ஆளாகியுள்ளதால்

முன்னது மட்டும் ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இச்சுவடியில் சின்னத்தம்பி மலைவேட்டைக்குச் சென்று விலங்குகளைக் கொன்று மக்களையும் பயிர்களையும் காத்து, அப்பகுதியில் சிறந்ததொரு காவற் பெருவீரனாக உருப்பெற்றதோ, மாணிக்க வாசகத்தின் அடங்காக் குதிரையை அடக்கிய வீரதீரச் செயற் சித்திரமோ, அன்னாரின் வடக்கு வாசற் காவற் தளபதியாய் அமர்ந்து செயலாற்றியதோ இதனால் மாணிக்கவாசகமும் தருமராசாவும், திட்டமிட்டு அவனைக் கொல்லச் சதி செய்ததோ இடம்பெறவில்லை. மாறாகச் சின்னத்தம்பி வீரமற்ற ஒரு கோழையாக, உலகறிவற்ற ஒரு வெகுளியாகப் படைக்கப் பட்டுள்ளான். அவனுடைய அத்தகு பண்பே அவனை நரபலியாக்கத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ற போக்கில் கதை நகர்கிறது. ‘பாப்பாக்குடி தருமராசாவுக்கு ஓர் அந்தரங்க ஓலை உண்டு; அதைக் கொண்டு கொடுத்து வா’ என்று மாணிக்கவாசகம் பிள்ளை சின்னத்தம்பியைப் பணிக்க அவன்,

> அரமனையு மறியேனே ஆத்தான மறியேனே
> வீடுவிட்டு நானுமிப்போ வெளியேறி யறியேனே
>
> (ஓலை எண். 13)

எனக் கூறியதாக உள்ளது. அத்துடன் சின்னத்தம்பி காவற் தொழில் எதிலும் ஈடுபடவில்லை. அத்தகு பதவியிலும் இல்லை என்பதுடன் அவன் தன் குலத்தொழிலையே செய்து வந்தான் என்றும் இச்சுவடிப் பிரதி கூறுகின்றது. மாணிக்கவாசகம் பிள்ளை அழைக்கிறார் எனக் கூறும் ஓட்டக்காரனிடம் சின்னத்தம்பி,

> **கல்லணையள் தைக்கணுமோ கடுவாளம் தைக்கணுமோ**
> **தாப்பிணிவார் தைக்கணுமோ தங்குப்பட்டை தைக்கணுமோ**
> **சில்லுண்டி வேலைகள்தான் சீரிட்டுத் தைக்கணுமோ**
>
> (ஓலை எண். 12)

எனக் கூறுவது கவனிக்கத்தக்கது.

எனவே இக்கதைப்பாடற் சுவடியை எழுதிய புலவர் ஆட்சியாளர்களுக்கெதிரான கருத்துகளைக் குறிப்பிடவில்லை என்பதுடன் சின்னத்தம்பி தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நடத்தியதால் கொலை செய்யப்பட்டான் என்பதையும் வெளிப்படுத்தாது விட்டுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

எனவே பதிப்பிக்கப் பெற்றுள்ள சின்னத்தம்பி கதைப் பாடல் மூலமாக, சின்னத்தம்பி சக்கிலியர் சாதியைச் சேர்ந்தவன்

என்பதும், தன் சாதித் தொழிலை விட்டுக் காவல் தொழிலில் நுழைந்து வாயிற் காவற் தளபதியாகத் திகழ்ந்த அவன் தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல் காரணமாகக் கொலை செய்யப் பட்டான் என்பதும் ஒரு விளக்கமாகத் தெரிய வருகின்றது.

சக்கிலியர் சாதியினரின் தொழில்வழியிலான கட்டுப்பாட்டு மீறல்களுக்கான காரணங்கள்

இதுவரை கண்ட மதுரைவீரன் கதை, முத்துப்பட்டன் கதை, சின்னத்தம்பி கதை என்ற மூன்று கதைப் பாடல்களிலும் சக்கிலியர் சாதியைச் சேர்ந்தவர்களும், சக்கிலியர் தொழிலைச் செய்தவர்களும் பிற தொழிலுக்கு அதாவது நாடுகாவல் தொழிலுக்கு வந்ததனால் கொலை செய்யப்பட்டவர்களாக உள்ளனர். இவர்கள் இத்தகு தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியதற்கு எவை அடிப்படையான காரணங்கள் எனக் கண்டறிய வேண்டியுள்ளது. இந்த மூன்று கதைப்பாடல் களிலும் சக்கிலியர் சாதியினரே (முத்துப்பட்டன் அந்தணனா யினும் சக்கிலியனாக ஆகிச் சக்கிலியத் தொழில் செய்தவன் என்ற நிலையில் அவனும் இங்குச் சக்கிலியனாகவே கருதப்படுகிறான்). இத்தகு தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவர்களாகத் தெரிகிறது. இதற்கான காரணங்களாவன:

1. சக்கிலியர்கள் தமிழகத்தின் பூர்வீகக் குடிகளாகத் தெரிய வில்லை. அவர்கள் நாயக்கர் ஆட்சியின்போது நாயக்கர் களால் தமிழகத்துக்கு அழைத்து வந்து குடியேற்றப் பட்டவர்கள் என்பது முன்னரே விளக்கப்பெற்றது.

2. இவர்கள் வெளிமாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு வந்தவர்கள் என்று எட்கர் தர்ஸ்டன் அவர்களும் 'தென்னியக் குலங்களும் குடிகளும்' என்ற நூலில் குறிப்பிடுகின்றார். சக்கிலியர் குறித்து அவர் கூறுவதாவது. "தெலுங்கு பேசப்படும் பகுதிகளுக்குரிய மாதிகர்களுக்கு ஒப்பானவர்கள் தமிழ்நாட்டில் தோலில் பணிபுரியும் சக்கிலியர். இவர்கள் தெலுங்கு அல்லது கன்னடம் வழங்கும் மாவட்டங்களி லிருந்து வந்து குடியேறியிருத்தல் வேண்டும்".

1883ஆம் ஆண்டைய தஞ்சாவூர் மாவட்டக் கையேடு குறிப்பிடு வதாவது: "சக்கிலியர் மிகத் தாழ்ந்த சாதியாராகக் கருதப்படு கின்றனர். மாவட்டத்தில் சில பகுதிகளில் தெலுங்கு பேசுவதோடு

வைணவச் சின்னமான நாமம் தரிக்கும் இவர்கள் தெலுங்குப் பகுதிகளிலிருந்து வந்து குடியேறியவர்களாதல் வேண்டும்."[25]

மேலும், இக் கையேட்டில் தெலுங்குப் பகுதியைச் சேர்ந்த மாதிகர்களுக்கும் சென்னை நகரில் வாழும் சக்கிலியர்களுக்கும் இடையே முக்கியமான உடல் அளவுகளுக்கிடையே மிகுந்த ஒற்றுமை காணப்படுவதும் புள்ளி விவரங்களுடன் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.[26]

இத்தகு கருத்துகளால் சக்கிலியர் சாதியினர் வெளியி லிருந்து வந்தவர்கள் என்பது உறுதிபடத் தெரியவருகின்றது. வெளிமாநிலங்களிலிருந்து தமிழகம் வந்து குடியேறிய இவர்கள் இங்குள்ள சாதிப்படி நிலைகளையும் சாதித் தொழில் கட்டுப்பாட்டு முறைகளையும் சரிவர அறிந்து கொள்ளாததால் பிற சாதியினரின் தொழிலைச் செய்ய முற்பட்டு, தொழில் கட்டுப்பாட்டு மீறலுக்கு ஆளாகிப் பலியாகியுள்ளனர் எனக் கருத இடம் உள்ளது.

சக்கிலியர் சாதியைச் சேர்ந்தவர்கள் சமுதாயச் சாதிப் படிநிலையில் மிகவும் கீழானவர்களாகக் கருதப்பட்டனர். 18ஆம் நூற்றாண்டைய 'சானரெட்' (Sonnerat) என்பவர் சக்கிலியர் செருப்புத் தைக்கப் பசுவின் தோலைப் பயன்படுத்துவதால் பறையரை விடவும் இழிந்தவர்களாகக் கருதப்படுகின்றனர் எனக் குறித்துள்ளார்.[27]

"தீபகற்பப் பகுதி முழுவதிலும் சக்கிலியர் அல்லது செருப்புத் தைப்பவர்கள் பறையர்களை விடத் தாழ்ந்தவர் களாகவே கருதப்படுகின்றனர். இவர்கள் குடிப்பழக்கத்திலும் சிற்றின்ப வெறியிலும் மிகுதியும் ஊறித் திளைக்கும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர். இவர்களின் இந்தக் களியாட்டம் பெரும்பாலும் மாலை வேளைகளிலேயே நடைபெறும். குடி வெறியில் ஒருவரோடு ஒருவர் உரக்க ஏசிப் பேசிச் சண்டையிடும் ஓலம் இவர்கள் வாழும் ஊர்ப்புறங்களில் இரவில் நெடுநேரம் வரை கேட்டபடி இருக்கும். பறையர்களே இவர்களோடு எந்த உறவும் வைத்துக் கொள்ள விரும்பாததோடு தங்கள் விருந்துகளில் கலந்துகொள்ள இவர்களை அனுமதிப்பதும் இல்லை!" என 'அப்பெ துபைஸ்' எழுதுகிறார்.[28]

---

25. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி-2, ப.4.

26. மேற்படி, ப.5.

27. மேற்படி, தொகுதி-2, ப.3.

28. மேற்படி, ப. 3-4.

இவ்வாறு சமுதாயப் படிநிலையில் சக்கிலியர் அடிமட்டத்தினராகக் கருதப்பட்டமை தெளிவுறத் தெரியவருகிறது. இவர்கள் தங்கள் படிநிலையைத் தாண்டி மேனிலையாக்கம்பெறும் முயற்சிகள் நடைபெற்றிருப்பதையே கதைப்பாடல்கள் காட்டுகின்றன. தங்கள் சாதிக்கென விதிக்கப்பட்டிருந்த வரன்முறையையும் விதிமுறைகளையும் சரிவர அறிந்து கொள்ளாமல் எல்லை தாண்டி இவர்கள் உயர்ச்சி பெற முனைந்தபோது முறியடிக்கப்பட்டிருக்கின்றனர்.

3. வீரம் என்ற பண்பு குறிப்பிட்ட ஒரு சாதிக்கென்று ஒதுக்கப்பட்டது அன்று. அது பிறப்பிலேயே, வளர்ப்பிலேயே, இயல்பிலேயே ஊறித் திளைத்து வளர்வது. கீழ்ச்சாதியில் பிறந்த ஒருவன் வீரமுடையவனாக இருத்தல் கூடாது என்று எந்தச் சமுதாயமும் வரையறை செய்தல் இயலாது. ஒருவன் வீரமுடையானாகத் திகழ்வது என்பது இயற்கை வகுத்த நியதி. அந்த வீரப்பண்பை அவன் எவ்விதத்தில், எவ்விடத்தில் எக்காலத்தில் வெளிப்படுத்துகிறான் என்பதைப் பொறுத்து விளைவுகள் நல்லதாகவோ, கெட்டதாகவோ அமையக்கூடும். சக்கிலியர் சாதி என்ற சமுதாயப் படிநிலையில் மிகவும் கீழானதாகக் கருதப்பட்ட ஒரு சாதியில் பிறந்த மதுரை வீரனும், சின்னத்தம்பியும் சக்கிலியனாகவே மாறிவிட்ட முத்துப்பட்டனும் இயல்பிலேயும், பயிற்சியினாலேயும் மிகச் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தனர். இதில் அக்காலச் சமுதாயத்திற்கு எந்தவித நட்டமுமில்லை; மறுப்புமில்லை. ஆனால் இவர்கள் தங்கள் வீரத்தைக் காவற் தொழிலில் ஈடுபட்டு வெளிக்காட்டியதன் மூலம் சாதிக்குரிய தொழில் கட்டுப்பாட்டு மீறலுக்கு ஆளாகிக் குற்றமிழைத்தவர்களாகக் கருதப்பட்டனர். இதனால் சமுதாயத்தால் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வைக்கப்பட்டனர். தங்கள் காலகட்டத்திய சமுதாயச் சாதிப்படி நிலையைச் சரிவர அறிந்து கொள்ள இயலாத இச்சக்கிலியர் சாதி இளைஞர்கள் தங்களுக்கிருந்த வரன்முறையை, எல்லையை அறிந்து கொள்ளாமல் சாதி மேனிலையாக்கம் பெறத் தங்களுக்கே உரிய வீரம், திறமை போன்ற பண்புகளால் முயன்றபோது திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதன்மூலம் சாதியும், சாதிக் கட்டுக்கோப்பும், சாதித் தொழில் வரையறையும் காப்பாற்றப்பட்டுச் சமுதாயம், சாதி எல்லைக்குள் சுற்றும் செக்குமாடாகத் திரும்பவும் ஆக்கி வைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரியவருகின்றது.

4. இந்த மூன்று கதைப்பாடல்களைப் பொறுத்தமட்டில் மதுரைவீரன், சின்னத்தம்பி ஆகியோர் சக்கிலியர் சாதியினர்.

ஆனால் முத்துப்பட்டன் அந்தணன். தான் காதல் கொண்ட சக்கிலியப் பெண்களுக்காகத் தானும் சக்கிலியனாக மாறியவன். தன் சாதி ஆசார, அனுஷ்டானங்களைத் துறந்தவன். அந்த அளவுக்கு அந்தச் சக்கிலியப் பெண்களிடம் என்ன இருந்தது என்ற வினா இவர்களின் கதைப்பாடல்களைப் படிப்பவர்களுக்கு எழவே செய்யும் என்பது உறுதி. இப்பெண்கள் பாடிய நாட்டுப் பாடலில் மனம் பறிகொடுத்து அவர்கள் மீது காதல் கொண்டதாக வில்லுப்பாடலில் பாடப்பெறும் முத்துப்பட்டன் கதை உள்ளதாக நா.வா. குறிக்கிறார்.

மகாபண்டிதனான முத்துப்பட்டன் உழைப்பாளி மக்களான சக்கிலியப் பெண்களின் நாடோடிப் பாடலைக் கேட்டு அதில் மனம் பறி கொடுத்தான். முதன் முதலில் உழைப்பாளி மக்களின் கலை அவனது உள்ளத்தைக் கவர்ந்தது. பின்னர்தான் உழைப்பாளி வர்க்கப் பெண்கள் அவனது உள்ளத்தைக் கவர்ந்தார்கள் என்கிறார்.[29] இவரே, சக்கிலியப் பெண்களான பொம்மக்காவும் திம்மக்காவும் முத்துப்பட்டனைக் கண்டு ஆசைப்பட்டு வெகுநேரம் அவனைப் பார்த்துக் கொண்டிருந்து தங்களையறியாமல் பாடிவிட்டதாகவும் குறிக்கிறார்.[30] இவற்றின் மூலம் எவர் உள்ளத்தில் முதலில் காதல் தோன்றியது என்பதை ஆராய்வதை விடவும் இரு பக்கமும் காதல் இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது.

உயர்குலம் என்ற அந்தணர் குலத்தானாகிய முத்துப் பட்டன் கீழ்ச்சாதிப் பெண்களை விரும்பியதில் நெருடலுக் குரித்தான நம்பகத்தன்மையற்ற சில நிலைகள் இருக்கக்கூடும் எனக் கருதுதற்கு இடமுள்ளது. என்றாலும் இத்தகு நிலைகள் காலங்காலமாக நடைபெற்று வரக்கூடியனவாகவே உள்ளன என்ற நிலையில் இக்கதை நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ளலாம். அத்துடன் சக்கிலியப் பெண்களின் அக, புறப் பண்புகளை வெளிப்படுத்தியுள்ள எட்கர் தர்ஸ்டன், அவர்களும் இந்தச் சாதிப் பெண்களின் தனிப்பட்ட நலன்களைக் கீழ்க்காணுமாறு விரித்துரைத்துள்ளார்.

"சக்கிலியர் சாதியைச் சேர்ந்த பெண்கள் நல்ல அழகிகள் எனக் கருதப்படுகிறார்கள். நெறிமுறைப்படுத்தப்படாத சக்தி வழிபாடு செய்பவர்கள் அதற்காக இச் சாதியைச் சேர்ந்த பெண்களையே தேர்ந்தெடுக்கின்றனர்."[31]

---

29. நா.வானமாமலை, நாட்டுப்புறக் கலையியல், ப.128.

30. மேற்படி, ப.122.

31. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி-2, ப.3.

"சக்கிலியர் இனப் பெண்கள் பத்மினி பிரிவைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அதாவது அப்பெண்கள் தனித்த முகஅழகும் உடற்கட்டும் வாய்க்கப்பட்டிருப்பதோடு நல்ல நடத்தையும் உள்ளவர்களாக உள்ளனர். சக்கிலியர் பெரும் எண்ணிக்கை உடையவர்களாக வாழ்கின்ற பரமக்குடியைச் சார்ந்துள்ள பகுதிகளில் சமீன்தார்களும் செல்வம் மிக்கவர்களும் இச்சாதிப் பெண்களோடு உறவு கொள்வதில் ஆர்வம் மிகுந்தவர்களாக உள்ளனர் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே."[32]

"சக்கிலியப் பெண்ணும் சோளக் கதிரும் பருவம் வரும்போது அழகாக இருப்பர் என்பது தமிழ்ப் பழமொழி"[33] என்ற இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது முத்துப்பட்டன் கதையில் வரும் சக்கிலியப் பெண்களான பொம்மக்கா, திம்மக்கா மீது அந்தண இளைஞனான முத்துப்பட்டன் காதல் கொண்டான் என்பது ஒரு இயல்பான, நடைமுறையில் நடைபெற்றிருக்கக் கூடிய ஒன்றாகவே கருதத் தோன்றுகின்றது.

ஆனால் இங்கு அந்தணனாகிய முத்துப்பட்டன் இந்தச் சக்கிலியைச் சாதிப்பெண்களை மணம் செய்ததால், சாதிவிட்டுச் சாதிமாறித் திருமணம் செய்ததால் கொல்லப்படவில்லை என்பதையும், சக்கிலியனாகவே மாறிவிட்ட அவன் அப்பகுதி முழுமைக்கும் காவற் தலைமை பூண்டு கொள்ளையடிக்க முடியாமல் செய்தமையாலேயே, இவ்வாறு தொழில் கட்டுப்பாட்டு மீறல் நடத்தியதாலேயே கொல்லப்பட்டான் என்பதும் இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கன.

---

32. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி-2, ப.4.

33. மேற்படி, ப.4.

வர்க்கப் போராட்டங்கள் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்

எல்லாக் காலகட்டங்களிலும் உடைமை வர்க்கம் - உழைக்கும் வர்க்கம், ஆளும் வர்க்கம் - அடிமை வர்க்கம் என்ற இருவேறுபட்ட வர்க்க வேறுபாடுகள் இருந்து கொண்டே வந்துள்ளன. உடைமை வர்க்கமும், ஆளும் வர்க்கமும் உழைக்காத வர்க்கமாகவும், உழைக்கும் வர்க்கத்தையும் அடிமை வர்க்கத்தையும் ஆட்டிப்படைக்கும் சுரண்டல்வர்க்கமாகவும் இருந்திருக்கின்றன. அடிமை வர்க்கம் எப்போதும் உழைக்கும் வர்க்கமாகவும் சுரண்டப்படும் வர்க்கமாகவும் இருந்துள்ளது. இது ஒரு இயற்கை நியதி போன்றே காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. 17-18ஆம் நூற்றாண்டு வாக்கில் உழைக்கும் வர்க்கம் உடைமையாளர்களுக்கெதிராகவும், அடிமை வர்க்கம் ஆளும் வர்க்கத்திற்கெதிராகவும் கிளர்ந்தெழும் நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றைக் கதைப்பாடல்கள் பதிவு செய்து வைத்துள்ளன. காலங்காலமாக அமுக்கி வைக்கப் பட்ட, அழுத்தி வைக்கப்பட்டவர்களின் உணர்வுகள் பீறிட்டு வெளிக்கிளம்பியுள்ளதையே இவை எடுத்துக்காட்டுகின்றன. உழைக்கும் மக்களின் அல்லது அடிமைவர்க்க மக்களின் உணர்வுகள் ஓர் எரிமலையைப் போல் வெடித்துக் கிளம்பி யுள்ளன என்று கூற இயலாவிடினும் அவர்கள் மத்தியில் கட்டுப்பாட்டு மீறல்கள் அல்லது எதிர்ப்புச் சலனங்கள் எழும்பி யுள்ளன என்பதைக் கதைப்பாடல்கள் தெளிவுற வெளிக்காட்டு கின்றன. அத்தகு கதைப்பாடல்களாக நாம் அடையாளம் காணும் சமூகக் கதைப்பாடல்களாவன:

1. கௌதலமாடன் கதை
2. வீணாதிவீணன் கதை
3. சின்னான் கதை
4. ஹனுமா கதை
5. பிற கதைப்பாடல்கள்

(ஜம்புலிங்கம், சந்தனத்தேவன், மணிக்குறவன், கருவாயத் தேவன், மம்பட்டியான் கதைப்பாடல்கள்)

உழைக்கும் அடிமைவர்க்கம், உழைக்காத உடைமை யாளர்களான ஆளும் வர்க்கத்துக்கு அடங்கிப் போவதை வெளிப்படுத்தும் கதைப்பாடல்கள் பல உள்ளன. இக்கருத்தையே மையப் பொருளாகக் கொண்ட நிகழ்ச்சிகளுக்குச் சான்றாகச் சின்னாடான் கதையைக் குறிப்பிடலாம். காலங்காலமாக ஆளும் வர்க்கத்துக்கு அடிமைவர்க்கம் அடங்கியே நடந்தது என்பதை உணர்த்தும் மரபெச்சங்களாக இத்தகு கதைப்பாடல்களைக் கருதலாம்.

சின்னாடான் கதையில் வர்க்கப்புலப்பாட்டு நெறி

சின்னாடான் கதையைக் "கதைப் பாடல்கள் - குமரி மாவட்டம்" என்ற ஆய்வுக்கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தி யவர் பி.எஸ்.கே. பக்தவத்சலன்"[1] ஆவார். கதை நடந்த காலம் 18ஆம் நூற்றாண்டு.

கதைச் சுருக்கமாவது:

அக்காலத்திய கேரள நிலஉடைமை அமைப்பு இன்று உள்ளதிலிருந்து நிரம்பவும் வேறுபட்டிருந்தது. மன்னனுக்கோ அல்லது நம்பூதிரி நிலப்பிரபுக்களுக்கோ நிலத்தின் பெரும் பகுதியும் சொந்தமாயிருந்தது. இந்த நிலத்தில் உழைக்கும் சாதாரண மக்களிடமிருந்து வரி வசூல் செய்து அதில் ஒரு பகுதியைத் தாங்களே எடுத்துவிட்டு மீதியை நிலப்பிரபுக்களுக்குக் கொடுத்து டம்பமாய் வாழும் இடைப்பிரபுக்களில் ஒருவனே சின்னாடான் என்ற இக்கதையின் தலைவன். இவனுடைய அதிகாரத்துக்குட்பட்ட மண்ணில் பனையேறும் ஒருவனுக்குச் சின்னப்பிள்ளை என்று ஓர் அழகான மகள் இருந்தாள். அவளை எப்படியாவது அடைந்து விடவேண்டும் என்று ஆசைப் பட்டான் சின்னாடான். அவள் தனித்திருக்கும் வேளைக்காகக் காத்திருந்தான். சின்னப்பிள்ளை மிகவும் சுறுசுறுப்பானவள். ராட்டு வைத்து நூல் நூற்பாள் சின்னப்பிள்ளை.

தலைக்கோழி சத்தத்திலே
தயிர் கடஞ்சி மாத்துடுத்தி
மறுகோழி சத்தத்திலே
பஞ்சுப்பாயும் போடுவாளாம்

---

1. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், பதிப்பாசிரியர், தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செப்டம்பர், 1979. ப. 434-436.

வெட்டெண்ணு விடியும் முன்னே–பஞ்ச
வெட்டிக்கரை ஏறுவாளாம்
கூட்டப்புளித் தட்டோடே
கூண்டுராட்டு வைப்பாளாம்

பகல் ஏறியது. சின்னப்பிள்ளைக்குப் பசி எடுத்தது. பனை ஏறிக் கொண்டிருந்த தகப்பனிடம்,

அப்பாச்சாரே அப்பாச்சாரே – ஒரு
அஞ்செலக்குப் பட்ட போடும்

என்று கேட்டாள். தகப்பனுக்கோ வேலை அதிகம். எனவே மகளிடம்,

கட்டுப்பாள எட்டு முட்டி
கலந்து கட்ட நேரம் செல்லும்
நீ
ஆலம் எலையிலே
அழகுகிண்ணி தான்புடிச்சி
குடுவப் பயினியிலே
கோரிக்குடி மகளே"

என்றான். சின்னப்பிள்ளை ஆல இலை பறிக்க எழுந்து போனாள். அந்த வாய்ப்பான நேரத்தில்,

ஈத்தாமொழிச் சின்னாடான்
எளங் கொண்டையிலே தீ எரிவான்
காலப் பயினியிலே
கலந்தானே மருந்தத்தான

பதநீரில் சின்னாடான் வசிய மருந்தைக் கலந்தான். பதநீரைக் குடித்த சின்னப்பிள்ளை சின்னாடான் மேல் மையல் கொண்டு உடன் போகப்புறப்பட்டாள். அதைக் கண்ட தகப்பன் அவளைத் தடுத்துவிட்டான். அதனால் சின்னாடானுக்குக் கோபம் தலைக் கேறியது. சின்னப்பிள்ளையின் தகப்பனிடம் கரப்பணத்துக் காகவும் குப்பக்காச்சப் பணத்துக்காகவும் கெடுபிடி செய்தான்.

ஈத்தா மொழிச் சின்னாடான்
எளங் கொண்டையிலே தீ எரிவான்
அங்க இங்க போக உடான்
ஆயக்காரன் அதியாரி

கடவப் பணத்துக்கு–சின்னப்புள்ள அப்பச்சிய
கல்லேத்தி உட்டானே
குப்பக்காச்சப் பணத்துக்கு–சின்னப்புள்ள அப்பச்சிய
குனிய நெறுத்தினானே

சின்னப்புள்ள அப்பச்சி தன் வீட்டில் கிடந்த பாத்திர பாண்டங்களை வரிப்பாக்கிக்காகக் கொடுத்தான். சின்னாடான் போதாது என்றான். தன் தொழிற் கருவிகளைக் கொடுத்தான். அதுவும் போதாது என்றான் சின்னாடான். வேறு ஒன்றுக்கும் வழியில்லாத சின்னப்புள்ள அப்பச்சி, 'எல்லாம் வச்சாச்சே, வரிப்பாக்கிக்குப் போதாதெங்கறியே, 'இனி என்னத்த வைக்க?' என்று பரிதாபமாகக் கேட்டான். இந்தக் கேள்வியையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த சின்னாடான். 'ஒன்மக சின்னப் புள்ளயவையி, வரிபாக்கி தீர்ந்துவிடும்' என்றான். வேறு வழியில்லாமல் தன் மகளைக் கொடுத்து வரி பாக்கியைத் தீர்த்தான் தகப்பன். கடைசியில் அதிகாரி வீட்டுக் கோழி முட்டை அம்மிக் கல்லை உடைத்தது.

இந்தக் கதைப்பாடல் குமரிமாவட்டத்திலிருந்த வரிக் கொடுமையால் உழைக்கும் மக்கள் உடைமையாளர்களால் எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தப்பட்டனர் என்பதைத் தெளி வாகக் காட்டுகின்றது. தங்கள் உழைப்பைத் தரும் மக்களிட மிருந்து பெற்ற மகளையும் பறித்துக் கொண்டது உடைமை வர்க்கம். உழைப்பாளர்களுக்கு, உழைக்கும் அடிமைகளுக்குப் பெற்று வளர்த்த மகளும் சொந்தமில்லை. கற்பு, மானம், மரியாதை, அன்பு, காதல், பாசம் என்ற எந்த உணர்வுகளும், பண்புகளும் அவர்களுக்கு இருக்கலாகா என்பதில் உடைமை வர்க்கமாகிய ஆளும் வர்க்கம் மிகுந்த கவனம் செலுத்தி வந்தது. உழைப்பாளர்களுக்குப் பெற்ற பிள்ளை முதற்கொண்டு எவ்வித உடைமையும் உரிமையாக இருக்கக்கூடாது என்பதில் உடைமை வர்க்கம் அதிக எச்சரிக்கையாக இருந்தது. இந்த வகையில் இச்சின்னாடான்கதை வர்க்கப் புலப்பாட்டு நெறியை வெளிப்படுத்தும் தக்கதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது எனலாம்.

இதைப்போன்று வர்க்கப்புலப்பாட்டு நெறியை வெளிப் படுத்தும் மற்றொரு கதை வீரச்சாம்பான் கதையாகும். உழைக்கும் வர்க்கம் தன் உழைப்பைக் கொடுத்தும் உழைப்பு உறிஞ்சிக் கொள்ளப்பட்ட பின் உப்புச் சப்பில்லாத ஏதாவது ஒரு காரணம்

காட்டி உடைமை வர்க்கம் எவ்வாறு அவர்களை உயிர்வதை செய்து கொல்கிறது என்பதை இக்கதை வெளிப்படுத்துகின்றது.

வீரமணிச் சாம்பான் கதையும் வர்க்கப்புலப்பாட்டு நெறியும்

இது அச்சேறாத சுவடியாகும். இக்கதைப்பாடற் குறிப்பைத் தமிழில் கதைப்பாடல்[2] என்ற நூல் தருகின்றது. காரியூர் கருங்குளத்துக் கரையாளர் வம்சத்தவர் நில உடைமை யாளர்களாகத் திகழ்ந்தனர். சாம்பவர் அல்லது சாம்பாக்கமார் என்ற இனத்தவர் இவர்களின் நிலத்தில் பாடுபட்டு உழைப்பவர் களாக இருந்தனர். வீரமணிச் சாம்பான் உண்மையான உழைப்புக்கும் நேர்மையான வாழ்வுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியதனால் கரையாளரால் நன்கு மதிக்கப்பட்டுச் சாம்பவர்களுக்குத் தலைவனாக்கப்பட்டான். அவனுடைய வாழ்வையும் வளத்தையும் தலைமைச் சிறப்பையும் கதைப்பாடல் கீழ்க்காணுமாறு விவரிக்கின்றது.

> வீரமணிச் சாம்பானுடன் மிகுந்தபண்ணை வேலையாட்கள்
> அறுபதுபேர் வேலையாட்கள் அவரவர்கள் குடிசைகட்டி
> திறமுடனே வாழ்ந்திருந்தார் சிவனுடைய அருளாலே
> வாழ்ந்திருக்கும் நாளையிலே மணிச்சாம்பான் ஆனவனும்
> அடிமையாய் எல்லோருக்கும் அவன்தலைவ னாயிருந்தான்
> கார்காலம் வந்தவுடன் கட்டுடனே உணவு செய்து
> வித்தெடுத்துத் தான்விதைத்து வீரமணிச் சாம்பானும்
> கண்டந்த கரையாளர் கனபிரியாமல் மகிழ்ந்து
> வீரமணிச் சாம்பானுக்கு முதல்வரிசை தான்கொடுத்து
> (வரி:10-17)

வைத்திருந்தனர். வீரமணிச் சாம்பானுக்குக் கரையாளர்களிடம் இருந்த செல்வாக்கைக் கண்டு பொறாமையுற்றனர் சிலர். உழைப்பாளர் வர்க்கத்திலிருந்து தலைமைப் பொறுப்பு வகிக்கும் ஒருவன் நாளை உடைமையாளனாகவும் மாறலாம். அவன் அவ்வாறு ஆவதற்கு உடைமை வர்க்கம் சம்மதிக்காது. அவனுடைய வளர்ச்சியையும் செல்வாக்கையும் குறைத்து அவனையே ஒழித்துக்கட்ட முனைந்தனர். ஒருநாள் வீரமணிச் சாம்பான் குடித்துக் கும்மாளமிட்டதையே காரணமாக்கி

---

2. ஏ.என். பெருமாள் ப.171-172, 185.

இல்லாததும் பொல்லாததும் திரித்துக் கூறிக் கரையாளரின் கோபத்தைத் தூண்டிவிட்டனர். உடன்,

> வீரமணிச் சாம்பானை வீருடனே கரையாளர்
> கண்டபடி தானும் வைது கட்டிவைத்துத் தானடித்தார்
> அடித்த அடி பொறுக்காமல் அபயமிட்டான் சாம்பானும்
> சாம்பானும் தானழவே சாம்பாத்தி யானவளும்
> தீவிரமாய் ஓடிவந்து தீவினையை அறியாமல்
> அவளும் அபயமிட்டு அய்யாவே பொறுக்க வேண்டும்
> என்றவளும் அழுதிடவும் இரங்காமல் கரையாளர்
> வம்புவகை தான்பேசி மங்கையரைத் தானடித்தார்
> சண்டித்தனம் செய்ததொரு சாம்பானையும் கூட்டி
> தட்டப்பாறை ஆலமூட்டில் தானவர்கள் கட்டிவைத்து
> கட்டிவைத்து விட்டார்கள் ஆலமூட்டில் சாம்பானை
> சாம்பானும் மடிந்திடவே தையலரும் உடன் மடிந்தாள்
>
> (தமிழில் கதைப்பாடல், ப. 171)

தன்னிடம் உழைக்கும் உழைப்பாளப் பெருமகனின் உயிரும் உடைமையாளர்களின் சொந்தமாக இருந்தது. வேண்டியவரைக்கும் வைத்திருக்கவும், வேண்டாதபோது அவர்களின் உயிரை எடுத்து விடுவதற்கும் உடைமையாளர் களுக்கு உரிமை இருந்தது. இவ்வகையில் உடைமைவர்க்கம் - உழைப்பாள வர்க்கத்தின் வர்க்கப் புலப்பாட்டு நெறியை இக் கதைப்பாடல் சிறப்புற விளக்குவதில் தனியிடம் பெற்றுள்ளது எனலாம்.

மேற்கூறிய சின்னாடான்கதை, வீரமணிச் சாம்பான் கதை என்ற இருகதைப்பாடல்களிலும் வர்க்கப் புலப்பாட்டு நெறி சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் கட்டுப்பாட்டு மீறல் நிலையும் கோடு காட்டப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது. சின்னாடானின் வசிய மருந்துக்கு ஆட்பட்டுச் சின்னப்புள்ளை அவனுடன் செல்ல எழுந்ததைத் தடுத்த தகப்பன் அதுவரை ஆளும் வர்க்கத்துக்கு அடங்கிப் போகவேண்டும் என்ற கட்டுப்பாட்டை மீறியவனாகக் காணப்படுகின்றான். இது போன்று வீரமணிச் சாம்பான் குடித்துவிட்டுக் கரையாளர் குறித்து அவதூறாகப் பேசுவது அவன் நிகழ்த்திய மீறலே ஆகும். அதனாலேயே அவனும் கொல்லப்பட்டான்.

இவ்வாறு அடிமைப்படுத்தப்பட்டுக் கொடுமைப்படுத்தப் பட்டு வந்த உழைக்கும் வர்க்கம், தன் உரிமைக்காகப் போராடி, தங்கள் கட்டுகளை மீறிக் கொண்டு, கட்டுகளை அறுத்துக் கொண்டு, அதில் உயிரையும் பறிகொடுத்துள்ளதற்குத் தக்க சான்றாகக் கௌதலமாடன் கதை அமைந்துள்ளது.

கௌதலமாடன் கதையும் வர்க்கக் கட்டுப்பாட்டு மீறலும்

கௌதலமாடன் கதை பற்றிய கதைக்குறிப்புகளை நா.வா. அவர்கள் **Studies in Folk literature** (தமிழர் வரலாறும் பண்பாடும்) என்ற நூலில் (ப. 120) 1969இல் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடாக வெளியிட்டுள்ளார். இக்கதை குறித்த செய்தி களையும் சில ஆய்வு முடிவுகளையும் ஆராய்ச்சி இதழிலும் (ப. 140) விளக்கியுள்ளார். இக்கதை நிகழ்ச்சிகள் 1800 வாக்கில் நடந்ததாகத் தெரிகிறது. நாஞ்சில் நாட்டிலும், பணகுடி, வேப்பிலாங்குளம் பகுதிகளிலும் இக்கதை வழங்கி வருகிறது. இக் கதைப்பாடல் ஏட்டுப்பிரதியில் உள்ளதாக நா. வா. குறித்துள்ளார். இதனை யாரும் பதிப்பித்திருப்பதாகத் தெரியவில்லை; பழம்பதிப்பாக வெளி வந்திருக்கலாம்.

கதைச் சுருக்கமாவது

பூவாயி என்ற ஒரு சக்கிலியப் பெண் தன் ஊரிலிருந்து சிறிது தூரம் உள்ள நகரத்திற்குச் சென்று மோர்விற்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். அவ்வூரில் தான் உயர்சாதி என்ற மமதையுடன் இருந்த தேவர்சாதி இளைஞனான கௌதல மாடன் என்பவன் பூவாயியை வழிமறித்து வம்பு செய்வதை வழக்கமாக வைத்திருந்தான். இதைத் தடுப்பவர் எவருமில்லாமல் இருந்தது. இத்தகு ஒரு நிலைமை கீழ்ச்சாதிப் பெண்களுக்குத் தமிழ்நாட்டுக் கிராமங்களிலும், கேரளக் கிராமங்களிலும், நிகழ்வது சர்வ சாதாரணமான ஒன்றாகவே இருந்தது. அழகான கீழ்ச்சாதிப் பெண்ணை மேல்சாதி இளைஞனொருவன் கைப் பிடித்து இழுத்தால் அதைத் தடுக்க யாரும் முன்வரமாட்டார்கள். கீழ்ச்சாதி ஆண்மகன் மேல்சாதிப் பெண்ணின் சம்மதத்தோடு தொடர்பு கொண்டிருந்தால் இருவரையுமே, சமுதாயம் தண்டிக்கும். ஒருநாள் பூவாயி நகரிலிருந்து திரும்ப நேரமாகிவிட்டது. ஊர் மந்தையில் கௌதல மாடன் தன்னை மறித்து வம்பு செய்வான் என்பதை அவள் நன்கு அறிவாள். எனவே வழக்கமாக மோர் விற்கும் ஒரு பட்டார்ணியரின் வீட்டில் யாரையாவது துணைக்கு

அனுப்புமாறு கேட்டுக் கொண்டாள். அவர்களும் தங்கள் குடும்பத்து மூத்தமகனைப் பாதுகாவலாக உடன் அனுப்பி வைத்தனர். அவனைப் 'பட்டாணி அண்ணன்' என்று அண்ணன் முறையிட்டுப் பூவாயி அழைப்பாள். இருவருமாகத் திரும்பி வரும் வழியில் கௌதலமாடன் எதிர்ப்பட்டான். பூவாயியை வன்முறையாகத் துன்புறுத்தி அணைய முற்பட்டான். உடன்வந்த பட்டாணி அதைத் தடுத்தான். தடுப்பதற்குப் பட்டாணிக்கு உரிமையில்லை என்று கௌதலமாடன் சொன்னான். மேல்சாதிக் கார இளைஞர்கள் கீழ்ச்சாதிச் சக்கிலியப் பெண்களோடு சரசமாடுவது குற்றமன்று என்றும், இந்துவல்லாத முஸ்லீம் இளைஞர்களோடு பழகுவதுதான் குற்றம் என்றும் கூறிக் கௌதலமாடன் பட்டாணியைப் பலமாகத் தாக்கினான். பட்டாணி திருப்பித் தாக்க, போராடி இருவரும் உயிர்விட்டனர். பூவாயியும் தற்கொலை செய்து கொண்டாள்.

கீழ்ச்சாதிப் பெண்ணுக்கு மேல் சாதி இளைஞன் ஒருவன் இழைக்க இருந்த அநீதியைத் தட்டிக் கேட்டு அதனாலேயே உயிர்விட்ட பட்டாணி இளைஞன் வர்க்கப் போராட்ட வீரனாகத் திகழ்வதை அறிய முடிகின்றது. வர்க்க வேறுபாடு காரணமாக ஒரு வர்க்கம் எப்போதும் துன்பத்தைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை என்பதைச் சாதியமைப்புச் சமுதாயத்திற்கு உணர்த்திய தீரனாகப் பட்டாணி இளைஞன் திகழ்கிறான். இன்னும் சொல்லப் போனால் இதனால் அவனுக்குச் சுயலாபமும் ஏதுமில்லை. பிறர் எதிர்க்காத, பாதிக்கப்பட்ட சாதி சமுதாயமே எதிர்க்காத, எதிர்பார்க்காத ஒன்றை, எவ்விதப் பயனும், பலனும் கருதாது எதிர்த்து, நீதியற்ற, ஒழுக்கம் கெட்ட முரடனால் உயிரை இழந்தவன் பட்டாணி. வர்க்க வேறுபாடு காரணமாக ஓர் அப்பாவிப் பெண்ணுக்கு அநீதி இழைப்பதை எதிர்த்து அஞ்சாது போராடும் ஒரு வீரனாகத் தன்னலமற்ற ஒரு தியாகியாக, ஏழை மக்களின் துயர் போக்கத் தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்ற இரக்க உணர்விற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறான் பட்டாணி இளைஞன். 'கொடுமை செய்யும் உரிமை உயர்சாதிக்காரர்களுக்கு உண்டு' என்ற எண்ணத்தைத் தன்னுடைய போராட்டத்தின் மூலம் தவிடு பொடியாக்கியவன் பட்டாணி.

வர்க்கப் போராட்டத்துக்கு ஒரு வலுவான தளம் அமைத்துக் கொடுத்தவனாகப் பட்டாணியைக் கதைப்பாடல் காட்டுகிறது. உடைமை வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தின்மீது செலுத்திய ஆதிக்கப் போக்கை அறுத்தெறிய முனைந்தவனாகப்

பட்டாணி திகழ்கிறான். அடுத்ததாக இப்பொருண்மை வரிசையில் அமையும் வீணாதிவீணன் கதையைக் காணலாம்.

வீணாதி வீணன் கதை - பதிப்பு விவரங்கள்

906 வரிகளுடைய வீணாதிவீணன் கதை தனி நூலாக நா.வா. அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது.[3] இவரால் ஐவர் ராசாக்கள் கதை பதிப்பித்து வெளியிடப்பட்டபோது[4] அந்நூலின் பிற்சேர்க்கையாகவும் இக்கதை பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. அகஸ்தீஸ்வரம் என்ற ஊரில் கிடைத்த சுவடிப்பிரதியில் வீணாதி வீணன் கதை பிற்சேர்க்கையாக இருந்ததாகவும் அருணாசலக் கவுண்டர் தந்த பிரதியில் இக்கதை ஐவர் ராசாக்கள் கோட்டை கட்டிய வரலாற்றுக்குப் பின் இருந்ததாகவும் குறிப்பிடும் நா.வா. அவர்கள் இது தனிக்கதையாக இருந்து ஐவர் ராசாக்கள் கதையுடன் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது எனக் கூறியுள்ளார்.[5] ஐவர் ராசாக்கள் கதைப்பாடல் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் இக்கதை காணப்பட வில்லை எனத் தெரிவித்துள்ளார். வள்ளியூரிலிருந்து கிடைத்த கையெழுத்துப்பிரதியில் மட்டும் இக்கதை உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.[6] இக்கதைப்பாடல் தனிப்பாடலாக இருந்தாலும் ஐவர் ராசாக்கள் கதைப் பாத்திரங்கள் மற்றும் கதை நடந்த இடங்களோடு தொடர்புடையதாகவும் காணப்படுகின்றது.

கதைச் சுருக்கம்:

பிற்காலப் பாண்டியர் வரிசையில் வந்த குலசேகர பாண்டியன் தன் தம்பியருடன் வள்ளியூரில் கோட்டை கட்டி ஆட்சியை நிறுவிவிட்டு, காளிங்கன் என்ற தளபதியையும் நியமித்துவிட்டு மதுரை சென்றான். மன்னனின் நேரடிக் கண்காணிப்பில்லாத நாட்டில் பல முறைகேடுகளும் அக்கிரமச் செயல்களும் தாண்டவமாடின. உழைத்துப் பிழைப்போருக்கு மதிப்பில்லை. உழைக்க விரும்புவோருக்கு வேலை இல்லை. இந்தச் சூழலில் பிறந்து வளர்ந்தவன்தான் வீணாதி வீணன். வேளாளர் குலத்தவனான அவன் சிறு வயதிலேயே தாய்,

---

3. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, ஜனவரி, 1967.
4. மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு, முதற்பதிப்பு, ஜனவரி, 1974.
5. ஐவர்ராசாக்கள் கதை, ப.221.
6. மேற்படி, ப.30.

தந்தையை இழந்து அநாதையானான். பிழைப்புக்கு வழி யில்லாமல் அல்லாடினான். இறந்துவிடலாம் என்று எட்டு நாள் வீடடைத்துப் பட்டினியாய் இருந்து பார்த்தான். பிச்சை எடுத்தான்; வண்ணானிடம் வேலை கேட்டான்; காட்டுக் காய்களைப் பறித்து வியாபாரம் செய்தான்; விறகு வியாபாரம் செய்தான்; அனைத்திலும் ஏமாற்றப்பட்டான். அந்நாட்டுச் சூழலின்படி 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்பதை அறிந்தான். தானும் அவ்வாறு ஆனான். பொந்தந்தடி கைக் கொண்டு தடி பிடித்த கையினராய் நூறு பேர்களையும் உதவியாளராகச் சேர்த்துக் கொண்டு குடத் தண்ணீருக்கும், சாவுக்கும், திருமணத்துக்கும் வரிவசூல் செய்தான். பெரிய வீடு கட்டிக் கீழறையில் வரிவசூல் செய்த பணத்தைச் சேர்த்து வைத்தான். காளிங்கன் என்ற தளபதியோ வீணாதி வீணனின் அதிகார வரி வசூலிப்பைக் கண்டு, மன்னனால் தனக்குத் தெரியாமல் அமர்த்தப்பட்ட அதிகாரி போலும் என்று வாளா இருந்தான். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற இந்நிலைக்கு மன்னனே காரணம் என்பதால் அவனுக்கு நாட்டுச் சூழ்நிலையை விளக்கவே வீணாதி வீணன் இவ்வாறு பல செயல்களைச் செய்தான். ஒரு நாள் நகர் சோதனைக்காக மன்னன் வந்தான். அப்போது ஏழைப் பெண் ஒருத்தி தன் கணவன் இறந்துகிடக்கும் நிலையில், இந்தச் சாவுக்கும் வரி கொடுக்க வேண்டுமே, ஆனால் கையில் பணமில்லையே என்று கதறி அழுது கொண்டிருந்தாள். மன்னன் விசாரிக்க, சாவுக்கு வரி வசூலிப்பது வீணாதி வீணன் என்று அறிந்தான். உடன் வீணாதி வீணனைத் தன்முன் அழைத்து வருமாறு ஆணையிட்டான். வீணாதி வீணனோ வர மறுத்த துடன், மன்னனுக்குப் போட்டியாகக் கட்டிய கோட்டையினுள் இருந்துகொண்டு போட்டியாட்சி நடத்தினான். குலசேகர பாண்டியன் தன் தம்பியரைப் படையுடன் வரவழைத்து, வீணாதி வீணனைச் சிறைப்பிடித்தான். தன் செயல்களுக்கு மன்னனே முழுப் பொறுப்பு என்று வீணாதிவீணன் விளக்கிச் சொன்னான். கேட்ட மன்னன் மனந்திருந்தி நாட்டை நல்லமுறையில் ஆட்சி செய்யத் தொடங்கினான். அத்துடன் வீணாதி வீணனைத் தன் இளைய மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான்.

வீணாதி வீணனை இராபின் ஹுட்டுடன் ஒப்பிட்டு இறுதியில் மன்னனை மனந்திருந்த வைத்ததால் இராபினை விடவும் உயர்ந்தவன் வீணாதி வீணன் என்று இக்கதைப்பாடற் பதிப்பாசிரியர் நா. வா. குறிப்பிடுகின்றார்.

வீணாதி வீணன் கதை உண்மை நிகழ்ச்சியா?

வீணாதி வீணன் பாத்திரம் கற்பனையாக இருக்கலாம் என இக்கதைப்பாடலின் ஆராய்ச்சியுரையில் குறிப்பிடும் நா. வா. அவர்கள் இக்கதைப்பாடலின் பிற்சேர்க்கையில் இப்பாத்திரம் உண்மையாக வாழ்ந்து மறைந்த பாத்திரம் என்று குறிப்பிட்டுள்ளார். வள்ளியூரில் களஆய்வு மேற்கொண்ட பின் தன் முடிவை மாற்றிக் கொண்டதாகவும் குறித்துள்ளார். வீணாதி வீணன் பாத்திரம் உண்மைப் பாத்திரமே என்பதற்கான சான்றுகளைப் பிற்சேர்க்கையில் தொகுத்துத் தந்துள்ளார். வள்ளியூரில் 'வீணாதி வீணன் நீராவி' என ஒன்று உள்ளதையும், அதன் பாசனப்புறவில் 30 ஏக்கர் விளைநிலம் 'வீணாதி வீணன் பற்று' என்ற பெயரில் அமைந்துள்ளதையும் எடுத்துக்காட்டி யுள்ளார். அத்துடன் வீணாதிவீணனால் கட்டப்பட்டது எனக் கருதப்படும் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தின் முகமண்டபம், அர்த்தமண்டபம் மற்றும் தூண்களையும், இக்கோயிலின் முன்புள்ள கிணற்றில் 70 ஆண்டுகளுக்கு முன் தூர்வையெடுத்த போது கிடைத்த சிலை வீணாதி வீணன் சிலை என்று கோயில் பூசாரி குறிப்பிட்டதையும் எடுத்துக் காட்டியுள்ளார். கிடைத்த சிலையின் அமைப்பு தலையில் கொண்டை, கழுத்தில் மாலை, இடையில் வளைந்த வாள், தட்டாடை, கையில் உடைந்த நிலையில் பொந்தந்தடி போன்றனவற்றுடன் அமைந்து, விஜயரங்கப் பாணி பரவுமுன் செய்யப்பட்ட சிலை போலத் தோன்றுவதால் இது வீணாதி வீணன் சிலையே என்றும் நா.வா. குறிப்பிட்டுள்ளார். இத்தகு கள ஆய்வுச் சான்றுகள் மூலம் வீணாதி வீணன் சமூக நீதியைப் போதித்த, வாழ்ந்து மறைந்த உண்மைப் பாத்திரமே என்று உறுதிப்படுத்தியுள்ளார்.

இக்கதை காட்டும் வர்க்கப் போராட்ட வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

பிற்காலப் பாண்டியர் காலத்தில் வாழ்ந்த வீணாதி வீணன் ஆளும் வர்க்கத்துக்கே ஆட்சி ஒழுங்குமுறையைத் தன் அதிரடிப் போராட்டத்தின் மூலம் கற்றுக் கொடுத்த உழைப்பாளர் வர்க்கப் பிரதிநிதியாகத் திகழ்வதை இக்கதைப் பாடல் காட்டுகின்றது. இந்நிலையில் இது ஒரு சிறந்த சமூகக் கதைப்பாடலாகவும் சமூகப் புரட்சிக் கதைப்பாடலாகவும் திகழ்கிறது. உடைமைவர்க்கம் தவறு செய்யும்பொழுது உழைப்பாளர் வர்க்கம் அடங்கி ஒடுங்கிக் கட்டுப்பட்டுக் கிடக்க

வேண்டிய அவசியம் இல்லை என்பதையும், ஆளும் வர்க்கத்தையும் திருத்தி நல்லாட்சி புரிய வைக்க உழைக்கும் வர்க்கத்தால் இயலும் என்பதையும் நிரூபித்த சிறந்த பாத்திரப் படைப்பாக வீணாதிவீணன் கதைப்பாத்திரம் அமைந்துள்ளது. உழைத்துப் பிழைக்க விரும்புபவனுக்கு உரிய வேலையை அளித்து அதற்குரிய கூலியை அவன் பெற்று வாழ வழி செய்ய வேண்டியது ஓர் அரசனின் கடமை என்பதை வீணாதிவீணன் அரசனுக்குத் தன் செயல்மூலம் விளக்கிக் காட்டினான். அவ்வாறு ஒரு குடிமகன் உழைத்துப் பிழைக்குமாறு வழி செய்யாவிடின், அவன் ஊரைக் கொள்ளையடிக்கும் ஒரு கொள்ளைக்காரனாகவும், பொந்தந்தடி கைக்கொண்டு மன்னனால் நியமிக்கப்பட்ட தண்டல்காரன் (வரி வசூலிப்பவன்) என ஏமாற்றும் பேர்வழி யாகவும் ஆவான் என்பதை வீணாதிவீணன் தன் வாழ்க்கை வரலாறு கொண்டே மன்னனுக்கு நிரூபித்துக் காட்டினான். உழைக்கும் வர்க்கம் நினைத்தால் ஆளும் வர்க்கத்தையே ஆட்டம் காணச் செய்ய முடியும் என்பதைக் குலசேகர மன்னனுக்கு எதிராக ஆளும் அரண்மனையும் கட்டிப் போட்டியாட்சி நடத்தியதன் மூலம் நிறுவிக் காட்டினான். பிற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் நடந்த சிறப்பற்ற ஆட்சியின் அவலங்களைத் தன் புரட்சிச் செயல், போராட்டச் செயல்மூலம் வெளிப்படுத்திக் காட்டிய செயல் வீரனாக வீணாதி வீணன் திகழ்ந்தான். வர்க்கப் போராட்டத்தின் மூலம் உயர்வர்க்கத்தின் தவறுகளைச் சுட்டிக் காட்டி அவ்வர்க்கத்தைத் திருத்திய உழைக்கும் வர்க்கப் பிரதிநிதியாக வீணாதி வீணன் காணப்படுகின்றான். வீணாதி வீணனால் திருந்திய மன்னவன், நாட்டில் செய்த நற்செயல் களாகக் கதைப்பாடல் குறிப்பிடுவதாவது:

ஆறிலொன்று பணத்தைப் பகிர்ந்துதான்
ஆண்டவன் வள்ளியூர் தெய்வத்துக் காக்கினான்
மாறிலொரு பங்கை எடுத்தவன்
வறுமை கண்ட பெரியோர்க் கீந்தனன்
பின்னொரு பங்கை எடுத்தவன்
பிராமணர் வேள்விக்காகக் கொடுத்தனன்
பின்னொரு பங்கை சிவாலயம்
பூசை செய்திடத் தேசத்திலிட்டனன்
பொக்கிஷத்தில் ஒரு பங்கு போட்டனன்
புகழும் வீணாதி வீணனுக்கோர் பங்கு
இலக்குத் தப்பாமல் வீணாதி வீணனை
இளைய மந்திரியாய் வைத்துக் கொண்டனன்

(வரி: 886-897)

இதன்மூலம் ஆளும் வர்க்கத்துக்கே அறிவுரை வழங்கிய உழைக்கும் வர்க்கத்தானொருவன் ஆளும் வர்க்கத்தானாகவும் ஆகி உயர்ந்ததை இக்கதைப்பாடல் வெளிப்படுத்தி நிற்கிறது. உழைத்துப் பிழைக்கும் வர்க்கம் உயர் வர்க்கமாகிய ஆளும் வர்க்கத்தைக் கேள்வி கேட்கக் கூடாது; அடங்கிப் போக வேண்டும் என்ற எண்ணத்தைச் சிதறடித்தவனாகவும் வழிவழி வந்த அத்தகு ஒரு மரபை உடைத்தெறிந்தவனாகவும் வீணாதி வீணன் திகழ்ந்து வர்க்கப் போராட்ட வழி, உழைப்பாளருக் கிருந்த கட்டுப்பாட்டை மீறியவனாகவும் காணப்படுகின்றான்.

சின்னான் கதையும் வர்க்கப் போராட்டவழி கட்டுப் பாட்டு மீறலும்

குமரி மாவட்டத்தில் வழங்கிவரும் இக்கதைப்பாடலை "கதைப்பாடல்கள் - குமரி மாவட்டம்" என்ற கட்டுரையின் மூலம் பதிவு செய்து வைத்துள்ளவர் பி.எஸ்.கே. பக்தவத்சலன் ஆவார். இக்கட்டுரை "தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு" (ப. 430-431) என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. மதுரை மாவட்ட மக்களிடையேயும் இக்கதை வழக்கில் உள்ளது. கதைப்பாடலாக இல்லாமல் நாட்டுப்புறக் கதை வடிவில் இது கூறப்பட்டு வருகிறது. கதைப் பாடலாகப் பண்டு இருந்திருக்கலாம்.

கதைச் சுருக்கமாவது:

திருமணமாகாத பெண் ஒருத்தி காட்டில் வேலை செய்து கொண்டிருந்த வேலைக்காரர்களுக்குக் கஞ்சி கொண்டு போனாள். வழியில் அவள் தாழைவேர் தட்டி விழுந்துவிட்டாள். கஞ்சிக் கலயம் உடைந்து போயிற்று. அவள் உடம்பையும் ஆடையையும் தாழைமுள் கிழித்துவிட்டது. அவள் வீட்டுக்கு அழுதுகொண்டு திரும்பினாள். நடந்த உண்மையைச் சொன்னால் வீட்டிலுள்ளோர்கள் கோபிப்பார்கள் என்ற அச்சத்தில் அவள் "தான் கஞ்சி கொண்டு போன வழியில் தன்னைச் சின்னான் என்ற தங்களுடைய வேலைக்காரன் பிடித்து இழுத்ததால் கஞ்சிக் கலயம் உடைந்து ஆடை கிழிந்துபோயிற்று" என்று பொய் சொன்னாள். அது கேட்டு வெகுண்ட அவளுடைய சகோதரர்கள் ஓடிப்போய் சின்னான் என்ற அந்த வேலைக்காரனைப் பிடித்து அடித்துக் கொன்று புதைத்தார்கள். அவனைப் புதைத்த இடத்தில் ஓர் அரளிச் செடி வளர்ந்து பூத்தது. கொஞ்ச காலம் கழித்து அந்தப் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. பெண்ணுக்குச் சூடுவதற்குப் பூமாலை வேண்டும். பூத்தேடி அலைந்த அவளுடைய உறவினர்கள் அந்த அரளிச் செடியிடம்

வந்தார்கள். அவர்களை அடையாளம் கண்டு கொண்ட அரளிச்செடி பாடியது.

தாள கிழிச்சதென்ன – தாள
தம்மானி பட்டதென்ன
சின்னான் கிழிச்சான்னு
சொன்னாளே நீலியவ
நீலிக்கு மாலை
நெடுமால இங்கில்ல
பாவிக்கு மாலை
பகுந்து இங்கே குடுப்பதில்லை.

இந்தப் பாட்டைக் கேட்டதும் பூப்பறிக்க வந்தவர்கள் அதிர்ச்சியடைந்து வீட்டுக்குத் திரும்பினார்கள். அங்கே அந்தப் பெண்ணிடம் செய்தியைச் சொன்னபோது நடந்த உண்மையை அவள் சொன்னாள். உடனே அவர்கள் சின்னானுக்குப் பூசை கொடுத்து அவன் கோபத்தைத் தணித்தார்கள்.

உடைமை வர்க்கம், தம்மிடம் உழைக்கும் வர்க்கத்தின் மீது இக்கட்டான நேரங்களில் எத்தகு பழியையும் சுமத்தத் தயங்கியதில்லை என்பது இக்கதையில் வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு பழி சுமத்தப்படும் பொழுது அவ்வாறு கூறப்பட்ட பழி உண்மைதானா? என்று சிறிதும் ஆராய்ந்து பார்த்து விசாரித்தறியாமல் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. தங்களிடம் வேலை பார்க்கும் உழைப்பாள மக்களின் உயிரை எந்த நேரத்திலும் எடுத்துக் கொள்வதற்கு உடைமை வர்க்கத்திற்குத் தக்க உரிமை இருந்திருக்கிறது என்பதையே இது காட்டுகின்றது. வாழ்கின்ற காலத்தில், தான் செய்யாத ஒரு குற்றத்திற்காகத் தன் உயிர் எடுக்கப்பட்டபோது அதிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள எந்த வழி வகையையும் மேற்கொள்ள இயலாத நிலையிலிருந்த உழைக்கும் வர்க்கத்தையே இக்கதை வெளிப்படுத்தியுள்ளது. பின்னால் இந் நிகழ்ச்சி கதைப் பாடலாக வடிக்கப்பட்ட பொழுது உழைக்கும் வர்க்கத்தானின் எதிர்ப்பு உணர்வுகள் இறந்தபின் எழுந்ததாகப் படைக்கப் பட்டுள்ளது. நடந்தது அநீதி என்பதை உணர்ந்த ஒரு கால கட்டத்தில் சேர்ந்த இணைப்பாக இதனைக் கொள்ள வேண்டும். சாதி அமைப்பிலும் பொருளாதார நிலையிலும் தாழ்ந்து இருந்த உழைக்கும் வர்க்கம் உயிரோடு இருந்தபோது எதிர்க்க இயலாததையும் இறந்தபின் எதிர்ப்பதையும் காட்டி உடைமை வர்க்கத்தைப் பணியவைத்ததாகப் படைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நடந்த உண்மையையும் உடைமை வர்க்கம் மூலமாகவே வெளிக்கொண்டு வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. உடைமை வர்க்கத்துக்கு உழைக்கும் வர்க்கம் எப்போதும் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டியதுதான் என்ற சூழல் இறந்தபின் கட்டுப்பாட்டு மீறலாகக் காட்டப்பட்டுள்ளது. புதைத்த இடத்திலிருந்து முளைத்த அரளிப்பூ "பூத்தர இயலாது" என்று பாடியது ஒரு கற்பனைப் புனைவுதான் என்றாலும் இதன் மூலம் எதிர்ப்புணர்வு அல்லது கட்டுப்பாட்டு மீறலுணர்வு வெளிப் படுத்திக் காட்டப்பட்டுள்ளதால் இந்தக் கதைப்பாடலையும், வர்க்க வேறுபாட்டுக் கட்டுப்பாட்டு மீறலுடைய கதைப் பாடலாகக் கருத இடமுள்ளது. சின்னாடான் கதை, வீரமணிச் சாம்பான் கதையில் உடைமையாளர்களால் நிகழ்த்தப்பட்ட கொடூர நிகழ்வுகளைச் சந்தித்த உழைக்கும் வர்க்கம் இறக்கும் பொழுதும் எவ்வித எதிர்ப்பும் காட்டாத நிலை சுட்டப் பட்டுள்ளது. இந்தச் சின்னான் கதையில் இறந்தபின் எதிர்ப்பைக் காட்டியதாக அமைத்துள்ள சிறு மாற்றத்தை அறியமுடிகிறது. உடைமையாளர்களுக்கு எதிராக எழுந்த சிறு சலனத்தை இக்கதைப்பாடல் வெளிப்படுத்தியுள்ளது எனலாம். இந்தச் சிறுசலனமே பின் கட்டுப்பாட்டு மீறலாக வெளிப்படக் காரணமாக அமைந்துள்ளது என்பது கருதத்தக்கது.

இந்தக் கதையின் அழுத்தத்தையும், உண்மையையும், மாற்றிக் கதைப்போக்கைத் திசை திருப்பி, இக்கதை வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறலை உடைய கதைப்பாடல் இல்லை என்று கருதச் செய்ய, கதையின் முக்கிய நிகழ்ச்சியை மாற்றியமைத்த, கதை வேறுபாடுடைய கதைப் பிரதிகளும் கிட்டியுள்ளன. அவற்றின் மூலம் சின்னான் என்ற பாத்திரம் சின்னண்ணன் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஏழு அண்ணன்மாருக்கும் இளைய அண்ணன் சின்னண்ணன் என அமைக்கப்பட்டு உறவுமுறை கற்பிக்கப்பட்டுள்ளது. முத்துப்பட்டன் கதையில் சக்கிலியப் பெண்களைப் பிராமணப் பெண்கள் என மாற்றிக் கதையின் அழுத்தத்தை மாற்றியது போன்றதே இது.

ஹனுமா கதையில் வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

உடைமை வர்க்கம் உயர்சாதியாக இருந்தது. உழைக்கும் வர்க்கம் கீழ்ச்சாதியாக இருந்தது. இவ்வாறு வர்க்க அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் கீழாக இருந்த

உழைக்கும் வர்க்கம், உடைமை வர்க்கம் விதித்திருந்த பலவிதமான விதிமுறைகளுக்கும் கட்டுதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருந்தது. இந்நிலை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்தது. ஏதோ ஒரு குறிப்பிட்ட தலைமுறை இதனை, இந்தக் கட்டுப்பாட்டை மீறி நடக்க முயற்சி எடுக்கிறது. இம்முயற்சி அத்தலைமுறையின் மரணத்தின்பின் எடுக்கப்பட்டதாகக் காட்டப்படுவதுகூட எதிர்ப்புணர்வின் துவக்கம் என்ற நிலையில் கட்டுப்பாட்டு மீறல் எனக் கணக்கில் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலையில்தான் சின்னான் கதை முன்பு அலசப்பட்டது. கட்டுப்பாட்டு மீறல் மரணத்தில் முடிந்துள்ளதற்கு மற்றொரு சான்றாகக் கௌதலமாடன் கதையும் காட்டப்பட்டது. முயன்ற தலைமுறை மரணத்தைச் சந்தித்தாலும் அது வர்க்கக் கட்டுப்பாட்டை மீற எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றியே பெற்றுள்ளது. இங்குக் கூற விழையும் ஹனுமா கதையைப் பொறுத்தமட்டில் வர்க்கக் கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவன் தன் முயற்சியிலும் வெற்றி பெறுகிறான்; அதே சமயம் அவன் உயிரிழப்பையும் சந்திக்கவில்லை. உழைக்கும் வர்க்கத்துக்குக் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி என்றே இதைக் குறிப்பிடலாம். இனி ஹனுமா கதையைக் காணலாம்.

ஹனுமா கதை பற்றிய ஒரு சிறு குறிப்பை நா. வானமாமலை அவர்கள் தன்னுடைய 'நாட்டுப்புறக் கலையியல்' (ப.179) என்ற நூலில் தந்துள்ளார். அதன்படி அறியவரும் கதையாவது:

ஊரில் வாழும் ஒவ்வொருவரும் நிலப்பிரபுவும், ஊர் அதிகாரியுமான ஊர்க் கௌடனுக்குக் கட்டுப்பட்டவர்கள். தன்னுடைய தலைமைப் பதவியையும் உடைமை வர்க்க ஊக்கத்தையும் மனத்துட் கொண்ட ஊர்க் கௌடன் ஒரு வரன்முறையற்ற வழக்கத்தை ஊர் வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தான். அந்த வழக்கத்தை அனைவரும் கடைப் பிடித்தே தீர வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியிருந்தார்கள். வழிவழி வந்த வழக்கமாக அது மீறப்படாமல் செயல்படுத்தப் பட்டு வந்தது. அநியாயம், அக்கிரமம் என்று தெரிந்தும் அதனை எதிர்க்க வேண்டும்; அந்த வழக்கத்தை மீற வேண்டும் என்ற எண்ணம் எவர் மனத்திலும் உதிக்கவில்லை. ஊர்த் தலைவனும், பணபலமும் ஆள்பலமும் உடைய அக்கௌடனை எதிர்த்துக் கொண்டால் ஊரில் வாழ முடியாது என்ற அச்சவுணர்வே

காரணமாகும். அந்தக் கொடூர வழக்கம் என்னவென்றால் புதிதாக மணமுடித்துக் கொண்ட ஒவ்வொருவரும் தம் புது மனைவியை முதல் நாளில் ஊர்க் கௌடனிடம் அனுப்பி வைக்க வேண்டும் என்பதாகும். இது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்த ஒரு வழக்கமாக இருந்தது. வழக்கத்தை மீற யாருக்கும் துணிவில்லை. அந்தத் துணிவு 'ஹனுமா' என்ற ஒருவனுக்கு வந்தது. தான் மணமுடித்த பெண்ணை ஊர் கௌடனிடம் அனுப்ப மறுத்தான் ஹனுமா. அத்துடன் அது தொடர்பாக எழுந்த மோதலில் ஊர்க் கௌடனை ஹனுமா குத்திக் கொன்றான். அது முதல் அத்தகு வழக்கம் நடைபெறாமல் தடுத்தான். . தன் எதிர்ப்புணர்வால் தன்னையும் தன் மனையாளையும் காத்துக் கொண்டதுடன் இத்தகு வழக்கத்தால் அல்லல்பட்டு வந்த அனைத்து மக்களையும் தன் துணிச்சலான செயலால் அவன் காத்தான். மோசமான ஒரு வழக்கத்தைப் பின்பற்றி வந்த ஊர்க் கௌடனையும் அழித்தொழித்ததால் இனிவரும் புதிய ஊர்த் தலைவனும் இத்தகு வழக்கத்தை மேற்கொள்ள அஞ்சுமாறு செய்தான். இவ்வகையில் உடைமை வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தின் மீது 'வழக்கம்' என்ற பெயரில் திணித்திருந்த கட்டுப்பாட்டை மீறி வர்க்க வழியிலான கட்டுப் பாட்டு மீறலை நிகழ்த்தியவனாக ஹனுமா காணப்படுகின்றான்.

இக்கதை நிகழ்ச்சிகள் தமிழக - கர்நாடக எல்லைப் பகுதியில் நடந்ததாகத் தெரிகின்றன. இது கதைப்பாடலாகப் பாடப்பட்டுள்ளதா? இல்லையா? என்ற விவரம் தெரியவில்லை. சாதி உயர்வினாலும், தலைமைத்தன்மையாலும், பணபலம், ஆள் பலத்தாலும் அநியாயமான ஒரு வழக்கத்தை நியாயமான ஒரு வழக்கம்போல் கைக்கொண்டிருந்த ஊர்த்தலைவன் ஒழித்துக் கட்டப்பட்டான். இது போன்ற பல ஊர்களிலிருந்த ஊர்த் தலைவர்களுக்கு இச்செயல் ஓர் எச்சரிக்கை மணியாகவும், அபாய அறிவிப்பாகவும் ஆகியிருக்கலாம். அத்துடன் உழைக்கும் வர்க்கம் தன் கட்டுக்களை அறுத்துக்கொண்டு தலை தூக்கி நிமிர ஒரு வாய்ப்பேற்படுத்தியதாகவும் அமைந்திருக்கலாம் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

பிற கதைப்பாடல்களில் வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்

ஆளும் வர்க்கமும் உயர்சாதி வர்க்கமும் ஆகிய உடைமை வர்க்கம் தன் உடைமைகளால் பணபலம் மிக்கதாக இருந்தது. அடிமைவர்க்கமும் கீழ்ச்சாதி வர்க்கமும் ஆகிய உழைக்கும்

வர்க்கம் தன் உழைப்பை மட்டுமே உடைமையாகக் கொண்டு பணபலமின்றி இருந்தது. 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்றபடி இவ்வுலகில் அவர்கள் வாழ்ந்தாலும் இவ்வுலகம் அவர்களுக்குச் சொந்தமானதாக இல்லை. தங்கள் உழைப்புக் கேற்ற ஊதியத்தையும் பெற இயலாமல் அவர்கள் வஞ்சிக்கப் பட்ட பொழுது, அவர்களின் சினம் பணக்கார வர்க்கம் மீது பொங்கி எழுந்தது. அவ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை எதிரி களாகக் கருதி அவர்களிடமிருந்த பணத்தைக் குறிவைத்துக் கொள்ளைகள் நடத்தி அவற்றை ஏழை, எளியோருக்கு அளிப்பதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் சிலர். இவர்கள் உழைக்கும் வர்க்க மத்தியிலிருந்து உதித்தவர்கள் ஆவர். சமூகப் பொது நோக்கில் இவர்கள் கொள்ளைக்காரர்கள் என்று குறிக்கப்பட்டிருப்பினும் உழைக்கும் வர்க்கம் உடைமை யில்லா வர்க்கமாகவே இருக்க வேண்டும் என்ற உடைமை வர்க்கத்தின் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டவர்கள் என்ற நிலையில், வர்க்க வழியிலான கட்டுப்பாட்டை மீறியவர்களாக இவர்கள் அடையாளம் காணப்பட்டு, இங்கு ஆய்வுக்குட்படுத்தப் படுகிறார்கள். உழைக்கும் வர்க்க மத்தியிலிருந்து எழுந்து உடைமை வர்க்கத்தின் அக்கிரமச் செயல்களை எதிர்த்து, ஆட்டம் காண வைத்த இத்தகு கொள்ளைக்காரர்கள் குறித்த கதைப்பாடல்களாக ஜம்புலிங்கம் புகழ், கருவாயத் தேவன்கதைப் பாடல், மணிக்குறவன் கதைப்பாட்டு, மம்பட்டியான் கதைப் பாடல், சந்தனத் தேவன் கதைப்பாடல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

'ஜம்புலிங்கம் புகழ்' மூலம் வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

'ஜம்புலிங்கம் புகழ்' நாடோடிப் பாடல்கள் தொகுப்பான 'மலையருவியில்' காணப்படுகின்றது (ப. 176-187). ஆறு, ஆறு வரிகளாக 57 பாடல்கள் என மொத்தம் 342 வரிகள்கொண்டதாக இப்பாடல் பகுதிகள் உள்ளன. இறுதி இரு வரிகள் அனைத்துப் பாடல்களிலும்

> வாரார் சொக்கத் தங்கம் – நம்ம
> நாடார் ஜம்பு லிங்கம்"

---

7. கி.வா. ஜகந்நாதன், தொகுப்பாசிரியர், சரசுவதி மகால் நூலக வெளியீடு, 1958.

என்றே முடிவுறுகின்றன. நா.வா. அவர்கள் தன்னுடைய நாட்டுப்புறக் கலையியல் என்ற நூலில் (ப. 159-164) 'கொள்ளைக் காரர்களும் நாட்டுப்பாடல்களும்' என்ற தலைப்பின் கீழ் 'ஜம்புலிங்கம் புகழ்' நாட்டுப்பாடல் குறித்து ஆய்வு நிகழ்த்தியுள்ளார். ஜம்புலிங்கம் என்பவரின் வரலாற்றைப் பாடல் வடிவில் கூறுதாகவும் நெடும்பாடலாகவும் உள்ள இதனைக் கதைப்பாடலாகக் கருதலாம்.

நா. வானமாமலையின் ஆய்வின் வழி ஜம்புலிங்கத்தின் வரலாறாவது:

ஜம்புலிங்கம் 1925க்கு முன் நெல்லை மாவட்டத்தின் தென்பகுதியில் பணகுடிக்கருகிலுள்ள ஓர் ஊரில் பிறந்தான். அவன் நாடார் சாதியைச் சேர்ந்தவன். இச்சாதியினர் உழைப்பாளிகள். புன்செய்ப் பயிர் செய்தலும், பனையேறுதலும் இவர்கள் தொழில்கள். சமூக அடக்குமுறைக்கு உள்ளானவர்கள். பணகுடிப் பகுதியில் பெருநிலக் கிழார்களாகவும், முஸ்லீம் ஆட்சியின் அதிகாரிகள் பரம்பரையினராகவும் வாழ்ந்து வந்த பணகுடித் துரைகள் என்ற குடும்பத்தினர் உழைப்பாளி மக்களைக் கொடுமைப்படுத்தி அடக்கி ஆதிக்கம் செய்துவந்தனர். அவர்களுடைய புன்செய் விளைகளில் நாடார்களும் அவர்கள் குல மாந்தர்களும் பணிபுரிந்து வந்தனர். அவர்களுக்குச் சொந்தமான பனைகளில் நாடார்கள் கள்ளும், பதனீரும் இறக்கி வந்தனர். அவர்களுடைய நஞ்செய் நிலங்களில் நாடார் மாதர் களை பிடுங்குதல், அறுவடை செய்தல் போன்ற வேலைகளைச் செய்து வந்தனர். பணகுடித் துரைகளின் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அவர்களிடம் நெருங்கி உறவு கொள்ளுவதும் நெடுநாள் பழக்கம். இதனை எதிர்க்க நாடார் மக்களுக்கோ, அவர்களோடு கிராமங்களில் வாழ்ந்து வந்த உழவர்களுக்கோ துணிவு இல்லை. அத்துரை மக்களின் கொடுமைகளைப் பற்றி மறைவாகப் பேசி வேதனையடைந்தனர். 1920இல் இளைஞனாக இருந்த ஜம்புலிங்கம் பணகுடித் துரைகளின் பண்ணையில் உழைத்து வந்தான். ஒரு சமயம் அவன் பண்ணைக்குச் செல்லும் பொழுது, வைக்கோல் போர் மறைவிலிருந்து ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டது. அங்கு ஓடிச் சென்றான். அவனது உறவினள் ஒருத்தியைத் துரைமகன் ஒருவன் வலிந்து அணைய முயன்றதைக் கண்டான். துரைமகனைத் தூண்டிக்கோலால் அடித்து வீழ்த்தி அவளை வீட்டிற்கு அனுப்பினான். இதுவரை துரைமக்களின்

கொடுமைகளை எதிர்க்க எவரும் துணியவில்லை. ஜம்புலிங்கம் துணிந்தான். அடிபட்ட புலிபோல துரைமக்களின் கோபம் ஜம்புலிங்கம் மீது பாய்ந்தது. அவன் மீது சோடனை வழக்குகள் போட்டார்கள். போலீசும் பணம் உடைய அவர்களுக்கு ஆதரவாக நின்றது. ஜம்புலிங்கம் இக்கொடுமைகளுக்கும் பயமுறுத்தலுக்கும் பணியவில்லை. தன்னோடு சேர்ந்து நின்ற இளைஞர்கள் சிலரோடு துரைமக்களின் கொடுமையை எதிர்த்தான். அவர்களுடைய வைக்கோல் போர்களுக்குத் தீ வைத்தான். அவர்களின் தானியக் களஞ்சியங்களைக் கொள்ளை யடித்தான். இவ்வாறு அவன் சமூகத்தில் உயர்தட்டில் உள்ளவர்களின் கொடுமைகளுக்குப் பணியாமல் எதிர்த்து நின்றான். அவர்களும் போலீசின் துணை கொண்டு அவனைச் சமூக எதிரியாகக் காட்டி வழக்குகள் தொடர்ந்து சிறைக்குள் தள்ளிவிட முயன்றனர். அவனும் அவனுடைய கூட்டத்தாரும் போலீசையும் அடித்து விரட்டினர். சிறைக் கூடங்களினின்றும் தப்பியோடினர். தப்பியோடியவர்களுக்கு மக்கள் புகலிடம் அளித்தனர். கடைசியில் அவன் போலீசாரால் சூழப்பட்டுக் கொல்லப்பட்டான்.

ஜம்புலிங்கத்தின் தீரச் செயலும் அவனுக்கு விளைவிக்கப் பட்ட கொடுமையான மரணமும் மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்தன. அவனுடைய வீர வரலாறு நாட்டுப் பாடலாக மலர்ந்தது. நாட்டுப் பாடல்களில் அவன் சமூகக் கொடுமைகளை எதிர்ப்பவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். பயங்கரமான கொள்ளைக்காரனாகச் சித்திரிக்கப்படவில்லை. மற்றவர்கள் நெடுநாளைய கொடுமைகளை எதிர்க்கத் துணிவில்லாமல், அடிமை மனப்பான்மையில் மூழ்கிச் செயலற்றிருந்த போது ஜம்புலிங்கம் துணிந்து கொடுமைகளை எதிர்த்தான். அத்துணிவு இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டியது. மக்கள் அவனைச் சமூகக் கொடுமைகளை எதிர்ப்பவனாகக் கண்டார்கள். அவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். 'ஜம்புலிங்கம் புகழ்' என்ற அவனைக் குறித்த நாட்டுப் பாடல் தலைப்பு அமைந்துள்ளதே தக்க சான்றாகும்.

போலீசாரை ஜம்புலிங்கம் எதிர்த்ததைப் பற்றியும் சிறையிலிருந்து தப்பியோடியதைப் பற்றியும் கீழ்க்காணுமாறு புகழ்ந்து பாடியுள்ளனர்.

முச்சந்தி ரோட்டுமேலே
மூன்று போலீஸ் பாராநிற்க

முதுகுப்பக்கம் திரும்பச் சொல்லி
மூன்றடி கொடுத்துவிட்டு
வாரார் சொக்கத்தங்கம்–நம்ம
நாடார் ஐம்புலிங்கம் (பா.எண். 39)

முந்நூறு பேர்வளைக்க
முள்ளம்பன்றி போலுலுப்பி
மூன்று பேரைப் பஸ்பம் பண்ணி
முள்ளுவேலி யெல்லாந்தாண்டி
வாரார் சொக்கத்தங்கம்– நம்ம
நாடார் ஐம்புலிங்கம் (பா.எண்.40)

இப்பாடல்கள் போலீசாரின் கோழைத்தனத்தையும் மேலோட்டமான போலி வீரத்தையும் கேலி செய்கின்றன. போலீசாரை மக்கள் தங்கள் நலன்களைக் காப்பவர்களாகக் கருதவில்லை. தங்களைக் கொடுமைப்படுத்துபவர்களின் துணைவர்களாகவே கண்டனர் என்பது வெளிப்படையாகக் காட்டப்பட்டுள்ளது.

பாடல்கள் காட்டும் ஐம்புலிங்கமும் அவனின் பண்பு நலன்களுமாவன:

1. ஐம்புலிங்கம் நாடார் இனத்தவர்
2. வீர, தீரத்தில் வல்லவர்
3. போலீசுக்கு அஞ்சாதவர்
4. பணக்காரர்களிடமிருந்து செல்வத்தைக் கொள்ளையிட்டவர்
5. அச்செல்வத்தை ஏழை, எளிய மக்களுக்கு வாரி வழங்கியவர்
6. எப்.ஏ., பி.ஏ. படித்தவர் எப்போதும் இங்கிலீசு பேசுபவர். தப்பாமல் தாய்ப்பாஷையையும் மதிப்பவர் (பா.எண்.2)
7. ஆளில் அழகானவர். ஆசார போசனவர் (பா.எண். 3)
8. முறுக்கிவிட்ட மீசை, மினுக்கும் கத்தி, கையில் வெடிகளோடு திரிந்தவர் (பா.எண்.4)
9. தாய், பிள்ளை விட்டு, தன் வீடும் விட்டு, தர்மத்தை மனதில் வைத்து, தைரியத்தைக் கையில் பிடித்தவர் (பா.எண்.5)
10. அத்தை மக்களைச் சட்டை பண்ணாமல் அந்நியப் பெண்கள் மேல் ஆசை வைத்து மோசம் போனவர் (பா.எண்.10)

ஜம்புலிங்கம் பணக்காரர்களைக் கொள்ளையடித்தது குறித்தும் அவர்களுக்குச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தது குறித்தும் பாடல்கள் விரிவாகப் பேசுகின்றன.

பணக்காரப் பெண்பிள்ளைகள்
பழமைபேசிப் போகையிலே
பதனமா நகைகளெல்லாம்
பயமில்லாமே பறித்துக் கொண்டு
(பா.எண். 16)

லட்சாதி பதியையெல்லாம்
லட்சியம் ஒன்றும் பண்ணாமே
வெட்கப்படுத்தியும் பற்றாமே
விரட்டி விரட்டி அடித்துவிட்டு
(பா.எண். 19)

உயிரைக்கையி லேபிடித்து
ஓடினாரே பணக்காரர்
சாடி அவரைப்பிடித்து
சங்கிலியில் கட்டிவைத்து (பா.எண். 20)

மேல்மெத்தை மேலேதான்ஏறி
மேல்மாடிக் குள்ளேதான் போயி
நேராய்த்துப் பாக்கியை நீட்டி
ஜோராய்ப்பணம் எல்லாம்வாங்கி
(பா.எண்.22)

ஏழைகளுக்குத் தருவதற்காகப் பணக்காரர்களைக் கொள்ளையடித்தார். அவ்வாறு, தான் பணக்காரர்களிடமிருந்து கொள்ளையடித்த பணத்தையெல்லாம் ஏழைகளுக்கு வாரி வழங்கினார் ஜம்புலிங்கம். இது குறித்தும் பாடல்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

ஆயிரரூ பாயை அவர்
அரைக்காசென்று தான் எண்ணி
அள்ளி ஏழைக் கிறைத்துவிட்டு
அன்னதானம் செய்துவிட்டு (பா.எண்.24)

பில்லுக்காரப் பெண் பிள்ளைக்குப்
பேரைச் சொல்லிப் பிழைத்துக்கண்ணு
நல்லநல்ல நகைகளெல்லாம்
நல்லமனசாப் பூட்டிவிட்டு (பா.எண்.25)

நெல்லறுக்கப் போனவளை
நிற்கவைத்துப் பாதையிலே
சொக்கத்தங்க நகைகளெல்லாம்
பக்குவமாய்ப் பூட்டிவிட்டு (பா.எண்.26)

கையெடுத்த பேருக்கெல்லாம்
கைநிறையப் பணங்கொடுத்து
பைகளைத் திறக்கச்சொல்லி
பற்றாததுக்கும் போட்டுரொப்பி
(பா.எண்.27)

பெண்களுக்கு நகைகளையும் பணமில்லாதோருக்குப் பணத்தையும் வாரி வழங்கிய ஜம்புலிங்கம் இல்லாதாருக்குத் தானதர்மங்களும் பல செய்தார்.

தங்கம்பொன் வெள்ளியெல்லாம்
தண்ணிக்குச் சம்மாய் எண்ணித்
தர்மத்தை மனசில் எண்ணித்
தானதர்மம் எல்லாம் பண்ணி
(பா.எண்.28)

காட்டுக்குள்ளே ஆடுபோக
ஆட்டிடையன் பின்னேபோக
ஆட்டிலே கொழுத்ததொன்றைத்
தோட்டிக்குத் தர்மம் பண்ணி (பா.எண் 31)

எனப் பாடல்கள் பேசுகின்றன.

'தானத்தில் சிறந்தது அன்னதானம்'. இதன்படி ஜம்புலிங்கம் ஊனமுன்றோருக்கும் பாவப்பட்ட ஏழைகளுக்கும் பசியமர்த்தும் பணியையும் விருப்பொடு செய்ததைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

கைஇல்லாத ஏழைகளுக்கும்
கால் இல்லாத ஏழைகளுக்கும்
கண்இல்லாத ஏழைகளுக்கும்
கஞ்சிதர்மம் கொடுத்துவிட்டு (பா.எண்.32)

பணக்காரனை இளைக்கவைத்துப்
பாவங்களைத் தழைக்கவைத்து
பக்கத்திலேயே உட்கார்ந்து
பசிகளெல்லாம் அமர்த்திவிட்டு
வாரார்சொக்கத் தங்கம்-நம்ம
நாடார்ஜம்பு லிங்கம் (பா.எண்.33)

என உள்ளமை காண்க.

பணக்காரர்களுக்கு ஆதரவாக நின்று தன்னை அடக்கி ஒடுக்க நினைத்த போலீசை நடுங்க வைத்தார் ஜம்புலிங்கம்.

குதிரைமேலே ஏறிவர
குதிரைக்காரன் ஓடிவர
குறுக்கே நின்ற போலீஸ்காரன்
கும்பிட்டொரு பக்கம் நிற்க (பா.எண்.37)

முச்சந்தி ரோட்டுமேலே
மூன்று போலீஸ் பாராநிற்க
முதுகுப்பக்கம் திரும்பச் சொல்லி
மூன்றடி கொடுத்துவிட்டு (பா.எண்.38)

முந்நூறு பேர்வளைக்க
முள்ளம்பன்றி போலுலுப்பி
மூன்றுபேரைப் பஸ்பம்பண்ணி
முள்ளுவேலி யெல்லாந்தாண்டி
வாரார் சொக்கத் தங்கம்–நம்ம
நாடார் ஜம்புலிங்கம் (பா.எண்.40)

என்பது பாடற் காட்சிகளாகும்.

ஏழைகளின் ஆபத்பாந்தவனாகவும் போலீசாரின் சிம்ம சொப்பனமாகவும் திகழ்ந்த ஜம்புலிங்கம் இறுதியில் ஒரு பெண்ணால் காட்டிக் கொடுக்கப்பட்டுப் பிடிபட்டதாகப் பாடல்கள் கூறுகின்றன.

ராசாதி ராசரெல்லாம்
ராக்காச்சி பெண்களாலே
நாசமாய்ப் போனாற்போலே
மோசம் போறதுக்குத்தானே (பா.எண்.47)

மூளிசண்டாளி – அந்த
முண்டச்சி பெற்றமகள்
காக்காய் நிறத்துக்காரி
காட்டிக் கொடுக்கும்ராத்திரி (பா.எண்12)

ஜம்புலிங்கத்தின் மரணத்தின்பின் இரங்கிப்பாடும் மக்கள் குரல்களாக ஒலிக்கும் பாடல்களாவன:

எரிந்தகுலைகள் அமர
ஈரக்குலைகள் குளிரப்

போலீசுப் புலிகளெல்லாம்
புகழ்ந்து மகிழ்ந்து பேச்சுப்பேச (பா.எண்.49)

மலையாள பகவதியே
மறைந்தையோடி அந்த நேரம்
பூமியெல்லாமே புகழ
பூமிக்குள்ளே தான்மறைய

என ஏங்கி ஒலிக்கின்றன பாடல்கள்.

உடைமைவர்க்கத்தின் அக்கிரமச் செயல்களை எதிர்த்து வர்க்க வேறுபாட்டை ஒழிக்கப் பாடுபட்ட ஐம்புலிங்கம் மறைந்தான். ஆனால் அவன் புகழ் பூமியெல்லாம் பரவிற்று.

சந்தனத்தேவன் கதைப் பாடலில் வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

ஐம்புலிங்கம் போன்ற ஒருவனே சந்தனத்தேவன். இவனைப் பற்றிய கதையும் பாடல்களும் தென்பாண்டி நாட்டில் வழங்கி வருகின்றன. இவனைப்பற்றிய சில குறிப்புகளை நா.வா. அவர்கள் தன் நாட்டுப்புறக் கலையியல் என்ற நூலில் (ப. 164-165) தந்துள்ளார். மலையருவி நூலிலும் சந்தனத்தேவன் பெருமை என்ற தலைப்பில் (ப.155-159) பாடல்கள் காணப்படுகின்றன. இவனும் வர்க்க வேறுபாட்டை ஒழிக்கும் விதமாகப் பணக்காரர்களைக் கொள்ளையடித்தான். அப்பணத்தைக் கொண்டு விதவைகளுக்கும், ஏழை, எளியவர்களுக்கும் உதவி செய்தான். அவனைப் பற்றிய செவிவழிச் செய்தியைக் கருவாகக் கொண்டு புதுமைப்பித்தன் ஒரு கதை படைத்துள்ளார். 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' (நா.வா. தொகுப்பு) நூலில் சந்தனத் தேவன் குறித்த பாடல்கள் உள்ளன. அவை சந்தனத் தேவன் பணக்காரர்களுக்கு எமனாக வாய்த்தவன் என்று பேசுகின்றன.

ஏட்டை இழுத்து வச்சு
இன்ஸ்பட்டரைக் கட்டி வைச்சு
துவரங்காயைத் தின்னச் சொல்லி
மாட்டுறானே சந்தனமும்[8]

என்பது பாடலாகும்.

'சந்தனத் தேவன் பெருமை' என்ற தலைப்பில் மலையருவியில் காணப்படும் பாடல் வரிகள் 108 உள்ளன.

8. நா.வானமாமலை, நாட்டுப்புறக் கலையியல், ப.165.

ஒவ்வொரு வரியும் ஏலங்கிடி லேலோ' என முடிவுறுகின்றன. சாதாரண மக்களையும் சந்தனத் தேவனையும் ஒப்பிட்டு அவனுடைய உயர்ச்சியைப் பாராட்டும் போக்கில் பாடல் வரிகள் அமைந்துள்ளன. பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஏழை, எளிய மக்களுக்கு அளித்து அவர்களைக் காத்த சந்தனத் தேவன் தலைமையும், உயர்ச்சியும் பெற்றவனாகக் காட்டப்பட்டுள்ளான்.

சந்தனம் படிக்கும் இடம்
சரியான ஜெயிலுக்கூடம்
சந்தனம் குடியிருப்பு
சரியான கரட்டுக்காடு
எல்லாரும் போலீசென்றால்
ஏழைக்கேற்ற நடுக்கந்தான்
சந்தனத்துக்குப் போலீசென்றால்
சரியான சக்காந்தமாம்

என்பவை பாடல் வரிகளில் சிலவாகும். நாட்டுப்புற எளிய மக்களைக் காத்த சந்தனத் தேவனின் மரணம் அவர்களை வன்மையாகத் தாக்கியுள்ளது. நாட்டுப்புற மக்கள் பாடிய சில ஒப்பாரிப் பாடல்களும் கிடைத்துள்ளன. சந்தனம் தூக்கி லிடப்படும் பொழுது அவன் பெண்டாட்டி அடைந்த துயரை ஒரு பாடல் பேசுகிறது.

சந்தனம் பெண்டாட்டி
சபைநிறைஞ்ச மூக்கம்மாளாம்
சந்தனத்தைத் தூக்கும்போது
சதுரம் கொஞ்சம் வாடுதடி
(தமிழர் நாட்டுப்பாடல்கள்)

உழைக்கும் வர்க்கத்தை உதைத்து அடக்கும் காவல் துறையை எதிர்த்தல், தங்கள் வர்க்கத்தைக் கசக்கிப் பிழிந்து பெறும் செல்வத்தில் சுகபோகமாயிருக்கும் செல்வந்தர்களைக் கொள்ளையடித்தல், இல்லாத எளிய, ஏழை மக்களுக்குக் கொள்ளையடித்த பொருளை வாரி வழங்குதல், உழைப்பாள மக்களுக்குக் காவலராய்த் திகழ்தல் என்ற வழிகளில் இவனின் பெருவீரம் பெருமையாகப் பேசப்பட்டுள்ளது. உழைக்கும் வர்க்கத்திலிருந்து எழுந்து வர்க்க வேறுபாட்டை விலக்கப் பாடுபட்ட இவன் வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவனாகத் திகழ்கிறான்.

மணிக்குறவன் கதைப்பாட்டில் வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

மணிக்குறவன் கதைப்பாட்டு 'நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்'[9] நூலில் (ப. 55-57) காணப்படுகின்றது. ஆறு ஆறு வரிகளாகப் பத்தி பிரித்து வரிகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 96 வரிகள் உள்ளன. 1953இல் மன்னன் மணிக்குறவன் கதைப்பாடல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. மணிக்குறவனின் வாழ்க்கை வரலாறு மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் பரவலாகப் பேசப்பட்டு வரும் ஒன்றாக உள்ளது. அடக்கி ஒடுக்கப்பட்ட கீழ்நிலைச் சாதி மக்களின் தலைவனாகக் கருதப்பட்ட மணிக்குறவன் 'மன்னன்' என்ற பெயர் பெற்றுத்தன் குலத்திற்குத் தன் வீரத்தின் வழி பாதுகாப்புத் தேடிக் கொடுத்தவனாக மக்களிடையே நினைக்கப்பட்டு வருகிறான்.

கீழ்ச்சாதி என்று கருதப் பெறும் குறவர் குலத்தில் பிறந்து, தன் சுய வீரத்தாலும் சுய கௌவரத்தை விட்டுக் கொடுக்க மறுத்த தன்மையாலும் உடைமை வர்க்கத்தால், கேடியாக அடையாளமிடப் பட்டவன் மணிக்குறவன். டி.வி.எஸ். பேருந்து ஓட்டுநரை எதிர்த்து உடைமை வர்க்கத்தைப் பகையாக ஆக்கிக் கொண்ட மணிக்குறவன் அந்த ஓட்டுநரை வெட்டியும் விடுகிறான். உடைமை வர்க்கத்தின் அடக்குமுறையை எதிர்த்தவன் என்ற அவனது துணிச்சலுக்கும், வீரத்துக்கும் தலைவணங்கிய மக்களால் அவன் தலைவனாக உயர்ந்து அவன் வரலாறு மக்கள் மத்தியில் பாடலாகவும் உருப்பெற்றுள்ளது எனலாம். காலங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்திலிருந்து கட்டுகளை அறுத்துக் கொண்டு கிளம்பிய வீரக் காளையாக மணிக்குறவன் திகழ்கிறான்.

கருவாயத்தேவன் கதைப்பாடல் காட்டும் வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

இந்தக் கதைப்பாடலும் 'நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்' என்ற நூலில் (ப. 52-54) காணப்படுவதாகும்.

> புண்ணியராம் குரு எஸ். பெருமாள் – கவி
> பூத்துச் சொலிக்குது சாரம்

என்றுள்ள வரிகளால் இக்கதைப்பாடலை எழுதியவர் எஸ். பெருமாள் என்பது தெரிகிறது. 1951-52இல் நிகழ்ந்த

9. கே.ஏ. குணசேகரன், அக்.1988.

கருவாயனின் மரணத்தின் பின் இக்கதைப்பாடலை மதுரை எஸ். பெருமாள் எழுதியதாகக் குறிப்பும் காணப்படுகின்றது.

கரிமேடு கருவாயன் என்றழைக்கப்பட்ட கருவாயன் மதுரைக் கரிமேடு பகுதியைச் சேர்ந்தவன். மறவர் குலத்தவன். இந்தியப் பட்டாளத்தில் பணி புரிந்தவன். கருவாயத் தேவனது சொந்த ஊர் இராமநாதபுர மாவட்டத்தில் இராமநாதபுரத்துக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமமாகும். மதுரைப் பாண்டியன் மில்லிலும் பணியாற்றியுள்ளான். பாண்டியன் மில் தெருவில் குடியிருந்துள்ளான். ஏழை மக்களுக்காகப் பாடுபட்டவன். கருமருந்தால் சூடுபட்டதால் கருவாயன் என்ற காரணப் பெயர் பெற்றவன். அதிகார வர்க்கத்தால் நசுக்குண்டு கிடந்த ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற கடமை உணர்வு உந்த உடைமை வர்க்கத்தை எதிர்க்கத் துணிந்தான்.

டி.வி.எஸ். டிரைவரை உதைத்தார்
ஜெயிலில் சூப்பிரண்டெண்டையும் அடித்தார்
தீங்கு வருமென்று தெரிஞ்சதினாலே
சிவில் கேசுமே எடுத்தார்

அதிகாரவர்க்கத்தை எதிர்த்து வர்க்கக் கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்திய கருவாயனைக் கண்ட அடிமை வர்க்கம் வியந்து போற்றியது.

உலகத்திலே அவரைப்போல ஊக்கம்
ஒருவருக்காயினும் வருமா

என்பது பாடல் வரிகளாகும். அதிகாரவர்க்கத்தைப் பகைத்துக் கொண்ட அவரைப் பிடிக்க அதிகார வர்க்கத்துக்குத் துணையாக நின்ற காவல் துறை தீவிரமாகச் செயல்பட்டது. "கவட்டை வில்லுக் கருவாயனின் கவட்டை வில்லில் அடிபட்டு 'கவர்மண்ட் உத்தியோகம் வேணாம்னு கசந்துமே சொன்னது போலீசு". இறுதியில் சோழவந்தான் சினிமாக் கொட்டகையில் வைத்துக் கருவாயனைப் பிடித்து வர, அவன் தப்பி ஓட, அவனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது காவல்துறை. இவ்வாறாக அடிமை வர்க்கத்திலிருந்து வந்து துணிவோடு அதிகார வர்க்கத்தை எதிர்த்த கருவாயனைக் கொன்றதால் அவனது வர்க்கக் கட்டுப்பாட்டு மீறலுக்கு ஒரு முடிவு கட்டப்பட்டது. அது முடிவல்ல, தொடக்கம் என்பதைக் காலம் உணர்த்தியது.

மம்பட்டியான் கதையில் வர்க்கக் கட்டுப்பாட்டு மீறல்

மம்பட்டியானின் வரலாறு 15-7-2004 மற்றும் 16-7-2004 ஆம் ஆண்டைய 'தினந்தந்தி' "வரலாற்றுச் சுவடுகள்" பகுதியில் வந்தது. அவனது வீர வரலாறு திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுச் சிறப்பாக ஓடியது.

மம்பட்டியானின் வரலாறாவது:

50 ஆண்டு காலத்துக்கு முற்பட்ட வரலாறாக இது தோன்றுகின்றது. சேலம் மாவட்டம் கொல்காரனூர் மம்பட்டியானது சொந்த ஊராகும். இவ்வூர் மேச்சேரி காவல்துறை சரகத்தைச் சேர்ந்ததாகும். மம்பட்டியானின் உண்மைப் பெயர் அய்யாத்துரை என்பதாகும். கீழ்த்தாடை மண்வெட்டி போல் இருந்ததாலும், கூலிவேலை செய்ய எப்போதும் மண்வெட்டியுடன் அலைந்ததாலும் காரணப் பெயராக 'மம்பட்டியான்' என அமைந்தது. மம்பட்டியானுடைய ஊரில் இரு மிராசுதாரர்கள் இருந்தனர். ஒருவர் முத்துசாமி. மற்றொருவர் மாரிமுத்துசாமி. இருவரும் நெருங்கிய உறவினர்கள். ஆனால் ஊர்க்கோயில் திருவிழாவில் பெட்டிக்கடை போட்டு முத்துசாமி நல்ல பணம் சம்பாதித்தார். பெட்டிக்கடை போட்டிருத்தல் தொடர்பாக இரு மிராசுதாரர்களுக்கிடையில் கடும்பகை தோன்றியது. மம்பட்டியான் மாரிமுத்துசாமியின் ஆதரவாளன். முத்துசாமி தாக்கப்பட்டார். தாக்கப்பட்டது தொடர்பாக மம்பட்டியான் உள்பட 17 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மம்பட்டியான் விடுதலையாகி வெளியே வந்தபோது மம்பட்டியானின் தந்தை ஆண், பெண் குழந்தைகள் உள்பட உறவினர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருந்தனர். இரு மிராசுதாரர்களின் மோதலுக்கிடையே எக்குற்றமும் செய்யாத தானும், தன் உறவினர்களும் பாதிக்கப்பட்டதை உணர்ந்த மம்பட்டியான் ஆளும் வர்க்கத்துக்கு எதிராகக் கொலைக் கருவியைக் கையிலெடுத்தான். மம்பட்டியானால் ஆளும் வர்க்க ஆட்கள் 9 பேர் கொல்லப்பட்டனர். தொடர்ந்து நடந்த மோதல்களினால் மம்பட்டியான் தலைமறைவு வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. காட்டு விலங்குகளும் மம்பட்டியானின் பெயர் சொன்னால் அஞ்சி நடுநடுங்கின. அவன் விவகாரம் அன்றைய சட்டசபையிலும் எதிரொலித்தது. அவனது மிகுவீரத்தாலும் மக்கள் மத்தியில் அவனுக்கிருந்த ஆதரவாலும் காவல் துறையால் அவனைப் பிடிக்க இயலாமல் இருந்தது. அவனைக் காட்டிக்

கொடுப்போருக்கு 5000 ரூபாய் பரிசு என அறிவிக்கப்பட்டது. இறுதியில் மம்பட்டியான் நண்பனால் சுட்டுக் கொல்லப் பட்டான். விஷமிட்டுக் கொல்லப்பட்டான் என்றும் கூறுவர். அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராடிய அவனை வீரனாக மக்கள் மதித்தனர். அவன் வீரத்தைப் போற்றினர். நாட்டுப்புற மக்களிடையே அவனது வரலாறு கதை கதையாகப் பேசப்பட்டது. அடங்கி ஒடுங்கிக் கிடந்த உழைப்பாளர் வர்க்கத்திலிருந்து எழுந்து ஆளும் அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராடிய அவனின் வீர வரலாறு மக்களால் இன்றும் பேசப்பட்டு, போற்றப்பட்டு வருகிறது. இந்த வகையில் ஆளும் வர்க்கம் விதித்திருந்த அடங்கிக் கிடந்த அடிமை வர்க்கத்தின் அடையாளம் என்ற கட்டுப்பாட்டை மீறியவனாக மம்பட்டியான் காணப்படுகிறான்.

இதுவரையும் பார்க்கப்பட்ட வர்க்க வழியிலான கட்டுப் பாட்டு மீறல்களில் தங்கள் உயிரைப் பறி கொடுத்துள்ளவர்கள் பலராக உள்ளனர் என்றாலும் வர்க்க வேறுபாட்டை வெறுத்த அல்லது வர்க்கத்தின் பெயரால் சில கட்டுப்பாடுகளை, சில கட்டுகளை விதித்திருந்த சமுதாய விதிகளை மீறியவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் காலகட்டத்தில் பல வர்க்கக்கட்டுப்பாட்டு மீறல்கள் நிகழ்ந்துள்ளமை இதன்மூலம் அறியப்படுகிறது. இவற்றை வர்க்கச் சமன்பாட்டை உருவாக்கும் முயற்சிகள் என்றும் அடையாளப்படுத்தலாம்.

பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்

பழைய கற்காலம் புதிய கற்காலம் என்ற மனித வரலாற்றின் தொடக்கக் காலமான கற்காலகட்டத்தில், தான் பெற்ற பிள்ளைகளுக்கு உணவு முதலியன அளித்து, காட்டு விலங்குகளினின்றும் பாதுகாத்து அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டிய பெரும் பொறுப்பு அன்னையைச் சார்ந்திருந்தது. ஆகவே அது தாய்வழிச் சமுதாயமாக, அதாவது பெண்ணாதிக்கச் சமுதாயமாக அமைந்திருந்தது. நிலத்தைப் பண்படுத்தி விதைகளைத் தூவி உணவு உற்பத்தி செய்த விவசாயக் காலகட்டத்திலும் தாய் வழிச் சமுதாயமே இருந்தது. ஆண்மகன் பெண்ணுக்கு, அவள் ஆற்றிய கடமைகளில் உற்ற துணையாக இருந்தான். கால வளர்ச்சியில் இனக்குழுக்கள் உருவாகி ஒன்றுடன் ஒன்று போட்டியும் போருமாக, போராடினால், வெற்றி பெற்றாலே வாழ்வு என்ற நிலையை அடைந்த போது ஆணாதிக்கச் சமுதாயம் தோன்றியது. தன் உடல் வலிமை காரணமாக ஆணாதிக்கச் சமுதாயம் பலகாலகட்டங்களையும் வெற்றியுடன் கடந்து தன் நிலையைத் தக்கவைத்துக் கொண்டே வந்துள்ளது. அடங்கிக் கிடந்த பெண்மை, விழிப்புணர்வு பெற்றுத் தன் உரிமைகளுக்காகப் போராடி வந்துள்ளது. இது தனி மனிதப் போராட்டமாக இருந்ததால் அவ்வப்போது அது அடக்கப்பட்டு ஆணாதிக்கமே கோலோச்சி வந்தது. இத்தகு தனிமனிதப் போராட்டங்களைச் சித்திரிக்கும் சிறந்த இலக்கியச் சித்திரங்களாகக் கதைப்பாடல்கள் திகழுகின்றன. இன்று பெண் சமுதாயம் முழுமையாகத் திரண்டு தங்கள் உரிமைகளுக்காகச் சங்கம் அமைத்துப் போராடும் நிலைக்கு வளர்ந்துள்ளமைக்குக் கதைப்பாடல்களில் காணப்படும் பெண்ணிய எழுச்சிகள் பெரும் அடித்தளம் எனக் கூறலாம். தங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுகளை அறுத்துக் கொண்டு பெண்ணியம் வெளிக்கிளம்பி யுள்ளதைக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. சில கதைப்பாடல் களில் பெண்ணாதிக்க வெளிப்பாடு மிகப் பெருமளவில் வெளிப்பட்டுள்ளது. இவற்றுக்குச் சான்றாக அல்லியரசாணி மாலை, ஏணியேற்றம், பெண்ணரசியர் கதை என்ற புருஷாதேவி

கதை[1] ஆகிய கதைப்பாடல்களைக் குறிப்பிடலாம். இதிகாசக் கதைப் பாத்திரங்களை மக்கள் தங்கள் மனநிலைக்கு ஏற்பத் திரிபாகப் படைத்து அதில் படைப்பின்பம் காண்பதற்காகப் படைக்கப்பட்ட பாத்திரங்களாக இவை திகழ்கின்றன. நடப்பியலிலிருந்து வேறுபட்டு ஆண்மகனை அலைக்கழிக்க வைத்தாள் பெண் என்று காட்டி நகைச்சுவை நோக்கோடும் பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. அத்துடன் விதிவிலக்காகச் சில பெண்மணிகள் இவ்வாறு இருந்தனர் என்பதையும் இத்தகு கதைப்பாடல்கள் சான்றுகளாக நின்று நிறுவுகின்றன எனலாம். எனவே இவற்றைக் கொண்டு குறிப்பிட்ட அக்கதைப்பாடற் காலகட்டத்தில் பெண்கள் ஆண்களை அடக்கி ஆளும் விதத்தில் உச்சத்தில் இருந்தனர் எனக் கொள்ள இயலாது.

உண்மையாகப் பெண்ணிய விழிப்பை வெளிப்படையாகக் காட்டும் கதைப்பாடல்கள் வரிசையில் ஒன்றாக இசக்கி அல்லது நீலி கதையைக் குறிப்பிடலாம். இதில் ஆணாதிக்கச் சமுதாய நிலையில் ஒரு பெண் தனக்கிழைக்கப்பட்ட அநீதியை உயிருடன் உள்ளபோது எதிர்க்க இயலாமல், இறந்த பின் மீண்டும் பிறந்து வந்து பழிவாங்குவதாக அமைக்கப் பட்டுள்ளது. இம்மாதிரியான இக்கதைப் போக்கைப் பெண்ணிய விழிப்பின் தொடக்க நிலையாகக் கருதலாம்.

இசக்கி அல்லது நீலி கதை – பெண்ணிய விழிப்பின் துவக்கம்

தமிழகத்திலுள்ள பல்வேறு சுவடி நூலகங்களிலும் பல்வேறு சுவடிப்பிரதிகளாக இக்கதைப்பாடல் காணப்படுகின்றது. பல பதிப்புகள் வெளிவந்துமுள்ளன. பதிப்பு விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. கதைத் திரிபு வடிவங்கள் பல காணப்படும் கதையாக இது உள்ளது. என்றாலும் அடிப்படைக் கதைநிகழ்வில் மாற்றம் இல்லை. ஆணாதிக்க அடக்குமுறைக்கு எதிரான பெண்ணிய விழிப்பின் பிரதிபலிப்பு இக்கதைப்பாடல் எனலாம்.

நீலிகதையின் தோற்றம் கிறித்து பிறப்பதற்கு முன் என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்தாகும். நீலகேசி, திருத்தொண்டர் புராணம், திருஆலங்காட்டுத் தலபுராணம், மூவர் தேவாரம்,

---

1. ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு, மார்ச், 1996.

இரத்தின கண்டகம், பெரியபுராணம், திருப்புகழ் போன்ற பல்வேறு இலக்கியங்களிலும் நீலிகதை குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. முதலாம் நூற்றாண்டு என்றும் கி.பி. 10ஆம் நூற்றாண்டு என்றும் இருவேறு காலங்களாகக் கணிக்கப்படும் நீலகேசியில் நீலிகதை குறிப்பிடப் பெறுவதால் நீலியைப் பற்றிக் கூறும் மிகத் தொன்மையான நூல் நீலகேசி என்பது நீலிகதை குறித்து ஆய்ந்த ஹமீது அவர்களின் கருத்தாகும்.

நீலி அல்லது இசக்கி கதையின் கதையாவது

பழகை நல்லூர் அல்லது பழைய நல்லூர் என்ற ஊரில் நம்பி என்ற கோயில் பூசாரிக்கும் கோயில் விளக்கேற்றும் முறைக்காரி (1934இல் வெளியான அச்சுப் பிரதிக் குறிப்பு), (தாசி என்றும் சில பிரதிகள் கூறுகின்றன). சந்தன நங்கைக்கும் தொடர்பு ஏற்பட்டது. (கணவன் - மனைவி என்ற கருத்தும் கிடைத்துள்ளது. சான்று: சேக்கிழார் பிள்ளைத்தமிழ், அபிதான சிந்தாமணி). அவள் வசம் பொருட்களை இழந்த அவன் தேசாந் திரமாகக் கிளம்பினான். அவன் மீது அப்போதும் மாறாக் காதலுற்ற சந்தனநங்கை உடன் வந்தாள். இடைவழியில் வழிநடந்த வருத்தத்தால் நம்பியின் மடியில் தலைசாய்த்துத் தூங்கிய அவள் தலையில் கல்லைப்போட்டுக் கொன்றுவிட்டு அவளணிந்திருந்த நகைகளை எடுத்துக் கொண்டு தொடர்ந்து நடந்தான் நம்பி. தாகமுற்றுக் கிணற்றடி சென்றவன் பாம்பால் தீண்டப்பட்டு மரணமுற்றான். தங்கையைத் தேடிவந்த அண்ணனும் தங்கை இறந்த கல்லில் தலையை மோதிக் கொண்டு இறந்தான். மறு பிறவியில் செட்டியாகப் பிறந்திருந்த நம்பியை சோழனின் மகளாகப் பிறந்து பகலில் குழந்தையாகவும் இரவில் பேயாகவும் மாறும் நீலி பழிவாங்கினாள் என்பது கதை.

பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு அவ்வாணுக்குத் தண்டனை தருதல் அக்காலகட்டச் சமுதாய நிலையில் ஒவ்வாததாக இருந்ததால் அடுத்த பிறவியில் பழி வாங்கினாள் என்பதாகக் கதை அமைந்துள்ளது. ஒரு பிறவியில் இழைக்கப் பட்ட அநீதிக்கு அடுத்த பிறவியில் வந்து பழி வாங்கினாள் என்பதை இங்கே பெண்ணிய விழிப்புக்கு இடப்பட்ட முதற் சுழியாகக் கருத வாய்ப்புத் தருகிறது.

முன்பிறவியில் தான் தூங்கும்போது வஞ்சகமாகத் தன்னைக் கொன்ற நம்பியை, இப்பிறவி அனந்தன் செட்டியை நீலி எவ்விதம் கொடூரமாகக் கொன்றாள் என்பது கதைப்பாடலில் கீழ்க்காணுமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

கொல்லுவேன் என்றவள் மெல்லவே செட்டியார்மேல்
விழுந்து வெறிகொண்டு பல்லினால் தொண்டையை
பற்றிக் கடித்திட்டாள். தொண்டையைத் துண்டுபடுத்தி
சோரையைத் தான்குடித்து தொம்மி திம்மியென்றவள்
தோதாகக் கூத்தாடி நெஞ்சைப் பிளந்து
நெடுமூச்சு எறிந்தாள் நெற்றியில் பொட்டுமிட்டாள்[2]

காலங் காலமாக ஆணுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த பெண்ணினத்தின் ஒட்டு மொத்த வெறியின் சின்னமாக நீலியைக் காணலாம். பெண்ணுக்குத் துரோகம் செய்து கொன்றவன் மறுபிறவி எடுத்தாலும் நிம்மதியாக இருக்க இயலாது என்பதும் மறுபிறவி எடுத்தாலும் பழி தீர்க்கப்படுவான் என்பதும் இக்கதைப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"பெண் பாவம் பொல்லாதது"

"பெண்ணென்றால் பேயும் இரங்கும்"

என்ற பழமொழிகளின் விளக்கமாக இக்கதைப்பாடல் அமைந்துள்ளது எனலாம்.

ஆனால் பெண்ணுக்கு நிகழும் அநீதியைச் சமூகம் உற்று நோக்கி வந்துள்ளது. பெண் கொடுமைக்குச் சமூக நடப்பியலில் சரியான தீர்வு வழங்கப்படுவதில்லை என்றாலும் இலக்கிய நோக்கில் அத்தீர்வை வெளிப்படுத்தப் புலவர்கள் விரும்பியுள்ளனர். ஒரு பிறவியில் தனக்கிழைக்கப்பட்ட கொடுமைக்கு மறுபிறவியில் அப்பெண் பிறந்து வந்து பழிவாங்கினாள் என்று அவர்கள் பாடிப் பெண் கொடுமைக்குத் தீர்வு கூறியுள்ளனர். பெண் சமூக விழிப்புணர்வுக்கு வழிகாட்டியுள்ளனர். இலக்கியம் என்பது இலக்கை நோக்கியது என்பதன்படி பெண் கொடுமைக்குத் தக்க தீர்வைப் படைத்து இலக்கியத்தை இலக்கு நோக்கிச் செலுத்தியுள்ளனர். இவ்வகையில் சமூகத்திலிருந்த கட்டுகளை மீறிக் கொண்டு வெளிப்பட்ட பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறலாக இக்கதைப்பாடலைக் கொள்ளலாம்.

---

2. தொகுப்பாசிரியர், சு. சண்முகசுந்தரம், பழையனூர் நீலி கதை, கொடுமுடி சண்முகப் பிரகதம், ஜனவரி, 1978.

அனந்தாயி கதையில் பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

பெண்ணுக்குச் சொத்துரிமை கிடையாது. கணவன் இறந்தபின் மனைவிக்கு ஆண்மகவு இருந்தால் மட்டுமே கணவன் சொத்து மனைவிக்குக் கிடைக்கும். பெண் குழந்தை மட்டும் இருந்தால் சொத்தில் பங்கு கிடையாது என்ற நிலை இருந்தது. கணவனையும் இழந்து பெண் குழந்தையைப் பெற்றிருப்பதால் சொத்தையும் பெற இயலாமல், குடும்பத்தைக் காப்பாற்றிக் குழந்தையையும் வளர்க்க முடியாமல் கணவனை இழந்த கைம்பெண்கள் திண்டாடி இருந்திருக்கின்றனர். சில பெண்கள் பெண் குழந்தைகளை மட்டும் பெற்றுச் சொத்துரிமை இல்லாத போது சொத்தில் பங்கு கேட்டு வழக்குத் தொடுத்திருக்கின்றனர். வழக்கில் தோல்வி அடைந்த போதும் காலங்காலமாகப் பெண் குழந்தை மட்டும் பெற்ற கணவனை இழந்த பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லை என்ற சமூகக் கட்டுப்பாட்டினை மீறிச் சொத்துரிமைக்காகப் போராடியவர்கள், கட்டுப்பாட்டை மீறியவர்கள் என்ற நிலையில் இவர்களைப் பெண்ணிய வழியிலான சமூகக் கட்டுப்பாட்டை மீறியவர்களாகக் கருதலாம். இந்த வகையில் இங்கு அனந்தாயி கதையைக் காணலாம்.

அனந்தாயி கதை பதிப்பித்து வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. பழைய பதிப்புகள் வெளியாகி இருக்கலாம். மாரியம்மன் கதை என்றும் இது அழைக்கப்படுகிறது. இக்கதை பற்றிய குறிப்புகளைத் தமிழ் வில்லுப்பாட்டுகள்[3] தமிழில் கதைப்பாடல்[4] ஆகிய நூல்களில் காணலாம்.

அனந்தாயி கதைச் சுருக்கம்

சீவைகுண்டப் பதியில் வாழும் அரிகிருட்டிணன் எனும் அந்தணனின் மனைவி அனந்தாயி, இருபது ஆண்டுக் காலம் பிள்ளையின்றி ஏங்கினாள். பின் இறையருளால் பெண் மகவு ஒன்றைப் பெற்றாள். தவமிருந்து பெற்ற பிள்ளைக்குச் 'சர்ப்ப தோஷம்' எனச் சோதிடம் சொன்னது. எனவே தோஷம் தீர்க்க ஒரு கீரிப்பிள்ளையை வீட்டில் வளர்த்தார்கள். ஒருநாள் அனந்தாயி வீட்டில் இல்லாதபோது, குழந்தையின் அருகே சீறி வந்த

3. தி.சி. கோமதி நாயகம், தமிழ் வில்லுப்பாட்டுகள், ப.57.

4. அ.நா. பெருமாள், தமிழில் கதைப்பாடல், ப.198.

பாம்பினைக் குதறி எறிந்தது கீறிப்பிள்ளை. கீரை அறுத்துக் கொண்டிருந்த அனந்தாயியிடம் வாயெல்லாம் குருதி வழிய அக்கீரி வந்து நின்றதும், குழந்தையைக் கொன்றதெனக் தவறாகக் கருதிக் கீரைக் கத்தியால் எறிந்து கீரியைக் கொன்றாள் அனந்தாயி. பின் ஓடிவந்து வீட்டில் பார்த்து உண்மையை அறிந்தாள். ஆராயாது பழி செய்ததால் அலறி அழுதாள். செய்தியறிந்த அந்தணன் மனைவியின் பாவம் தீர வேண்டித் தீர்த்தமாடத் தோழருடன் கூடிப் பாபநாசம் சென்றான். தீர்த்தமாடித் திரும்பி வரும் வழியில் பாம்பு தீண்டப்பெற்று மாண்டான். தோழர்கள் வாயிலாகச் செய்தியறிந்த அனந்தாயி துடிதுடித்தாள். சொக்காரனோ (பங்காளி) ஆண்மகவு அவளுக்கில்லை எனக்கூறி, அவளுக்குரிய சொத்துகள் அனைத்தையும் பறித்துக் கொண்டு விட்டை விட்டு வெளியே துரத்தினான். ஊர்த் தலைவனிடம் வழக்குரைத்தாள் அனந்தாயி. அவன், சொத்துகள் யாவும் அவளுக்கே சேரும் என்று தீர்ப்பளித்தான். அது கேட்ட சொக்காரன் ஊர்த்தலைவனுக்குக் கைக்கூலி ஆயிரம் பொன் கொடுத்து அவனைச் சரிக்கட்டி விட்டான். மறுநாள் ஊர்த் தலைவனான நாட்டாண்மைக்காரன் நடுநிலை தவறி அனந்தாயிக்கு ஏதும் கிடையாதென அநீதி வழங்கினான். பொங்கி எழுந்த துயருடன் அனந்தாயி மகளையும் கையிலேந்தியவளாய் நாட்டாண்மைக் காரனின் ஒரே பெண்ணும் நாசமாய்ப் போக என்று சாபமிட்டுப் பொதிகைமலைச் சுனைக்கு வந்து சேர்ந்தாள். குழந்தையுடன் சுனையுள் வீழ்ந்து உயிர்விடத் துணிந்து தவமிருந்தாள். ஊரிலே நாட்டாண்மை மகளுக்குத் திருமண நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. திருப்பூட்டு நிகழ இருக்கையில் பெருமழை, பேய்மழை பெய்தது. பொதிகை மலைச் சுனையிலும் அதே மழை பெய்தது. அதனால் பொங்கிப் பாய்ந்த சுனையுள்ளே குழந்தையுடன் வீழ்ந்து மடிந்தாள் அனந்தாயி. மேலும் மேலும் பொங்கிப் பெருகிய வெள்ளம் சீவைகுண்டப்பதி நோக்கிப் பாய்ந்து வந்தது. நாட்டாண்மை மகளுக்குத் திருப்பூட்டு நடைபெறவில்லை. சீறிவந்த வெள்ளத்தால் திருமண வீட்டார் அனைவரும் அடித்துச் செல்லப்பட்டனர். அழிவழக்குச் சொன்னவன் சீமையும் அழிந்தது. அனந்தாயியின் சாபம் அழிவின்றிப் பலித்தது. வெள்ளத்தில் மிதந்துவந்த குழந்தையை யும் தாயையும் கண்ட சிவனும் உமையும் அவர்களைக் கயிலைக்கு அழைத்துச் சென்றனர். அரனார் அருளால் அன்னையும் குழந்தையும் மஞ்சனமாரி, வெள்ளமாரி என மறு பெயர் பெற்றனர். நல்லோர்க்கு நன்மையும் தீயோர்க்குத் தீமையும்

செய்யும் வரங்களையும் இறைவனிடமிருந்து பெற்றனர். இறைவன் மேலும் அருளிய பதினெட்டு மாரிப் பெயர்களுடன் பூவுலகம் வந்து கோயில் கொண்டனர்.

இக்கதையின் முன்பகுதி சிலப்பதிகாரத்தில் வரும் கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை போன்று உள்ளது. பின்பகுதி மாரியம்மன் கதையாகிப் புராணப்போக்கில் அமைந்துள்ளது. ஆனால் இடைப்பகுதி கணவனை இழந்த, பெண் குழந்தையை மட்டும் பெற்றெடுத்துள்ள கைம்பெண்கள் சொத்துரிமை இல்லாததால் வாழ வழிதெரியாமல் தற்கொலை செய்து கொண்டனர் என்ற சமூகச் சித்திரத்தை, சமூக நடப்பியலை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த ஒரு சமூகக் கதைப்பாடல் அமைப்பைக் கொண்டுள்ளதாக உள்ளது. சொத்துரிமை கேட்டு அனந்தாயி வழக்கு மன்றம் சென்றதைக் கதை கூறுகிறது. ஊர்த் தலைவன் அவளுக்குச் சொத்தில் பங்கு உண்டு என்று முதலில் தீர்ப்பு சொன்னான். இது சமூக நடப்பியலின்படி கூறப்பட்ட தீர்ப்பா? அல்லது அவளது கையற்ற நிலைக்கு இரங்கிக் கூறப்பட்ட தீர்ப்பா என்று விளக்கமாகத் தெரியவில்லை. சொக்காரன் எனப்படும் பங்காளி இரவோடிரவாகக் கையூட்டு அளிக்க, ஊர்த்தலைவன் முன்னர்ச் சொன்ன தீர்ப்புக்கு மாறாகச் சொத்தில் அனந்தாயிக்குப் பங்கு கிடையாது என்று மறுநாள் தீர்ப்புரைத்தான். இதனைக் கதைப்பாடல்,

> அவள்தனக்கே செல்லுமென்று
>   அவன் வழக்கைத் தீர்த்துவிட்டார்
> இவர்மனைக்குத் தான்போனான்
>   இரவினில் சொக்காரனவன்
> துணிவுடனே ஆயிரம்பொன்
>   தொகையாகத் தானெடுத்து
> மணியக்கார னிடமதிலே
>   மாபாவி கொடுத்துவிட்டான்
> கைக்கூலி வாங்கினபின்
>   காலையிலே ஆளனுப்பி
> மெய்ப்புடனே கூட்டிவந்து
>   மேலுமவன் சொல்லுகிறான்
> வாடிபெண்ணே அனந்தாயி
>   வஸ்துவகை செல்லாது
> மாடாடு வயல்கரையும்
>   மங்கையரே செல்லாது[5]

---

5. அ.நா. பெருமாள், தமிழில் கதைப்பாடல், ப.198-199.

என்றான். சொத்துரிமை ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஆண் மகனுக்கு அடுத்து ஆண்மகனுக்குச் சென்றுள்ளது. கணவனுக்கும் கணவன் வழி மகனுக்கும் சென்றுள்ளது. கணவன் உயிருடன் உள்ள வரை அச்சொத்தை அனுபவிப்பதிலும், பாதுகாப்பதிலும், பெருக்குவதிலும் மனைவி பங்கெடுத்திருக்கிறாள். கணவன் இடையில் இறந்து, ஆண் மகவு அவளுக்கு இல்லை எனின், அச்சொத்து நேரடி வாரிசான பெண்மகவுக்கோ, மனைவிக்கோ செல்லாமல் அடுத்தவாரிசான தம்பிக்கே சென்றுள்ளது. இதற்குப் பல கதைப்பாடல்கள் சான்றுகளாக உள்ளன. மருதநாயகம் பிள்ளை கதையைத் தக்க சான்றாகக் கூறலாம். மன்னான் சின்னாண்டி கதை, வெள்ளையம்மாள் கதைப்பாடல் ஆகியவற்றையும் பெண் மக்களுக்குச் சொத்துரிமை இல்லாததற்குச் சான்று காட்டலாம்.

கணவனை இழந்த பெண்ணின் துயரத்தை மேலும் மிகுதிப்படுத்தும் வண்ணம் அவளுக்குச் சொத்து கிடைக்காமல் பங்காளிகள் செய்திருக்கின்றனர். ஆண் மகவு இருந்த பெண்களுக்கும் இந்த நிலை நேர்ந்துள்ளது. கணவனற்ற அவளின் கையற்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சொத்துரிமையைப் பறித்து ஊரைவிட்டே அவள் ஓடும்படிச் செய்திருக்கின்றனர்; அல்லது தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளியிருக்கின்றனர்.

பெண்மகவு பெற்ற தனக்குச் சொத்தில் பங்கு வேண்டும் என்று வழக்கு மன்றம் சென்ற அனந்தாயி 'பெண் மகவு பெற்ற மனைவிக்குக் கணவனின் சொத்தில் பங்கு இல்லை' என்ற சமூகக் கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவளாகக் காணப்படுகின்றாள். அவள் தன் முயற்சியில் தோல்வியையே தழுவி உயிரையும் பலி கொடுத்தாலும் சமுதாயக் கட்டுதிட்டங்களுக்கு உட்படாமல் தன்னுரிமைக்காகப் போராடிச் சமூக அமைப்பில் சலனத்தை ஏற்படுத்தியவள் ஆகிறாள்.

இசக்கி கதை போன்று இவளும் உயிருள்ள போது தனக்கிழைக்கப்பட்ட அநீதிக்குப் பழிவாங்க இயலவில்லை. இறப்பின் பின்னர் மாரியம்மனாகி அநீதி செய்வாரை ஒறுக்கும் பெண் தெய்வமாக உயர்வது காட்டப்பட்டுள்ளது. சமூக நடப்பில் ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட அநீதியைத் தட்டிக் கேட்க இயலவில்லை. ஆனாலும் அத்தகு அநீதிகள் தொடரலாகா; அத்தகு அநீதி இழைத்தோர் தண்டிக்கப்படவேண்டும் என்பதைக் காட்டுவது இலக்கு நோக்கிய இலக்கியத்தின் கடமையாக ஆகிறது. அந்த வகையில் இறந்த அனந்தாயி மாரியம்மனாக மாறி, தெய்வமாக உயர்ந்து அனைவராலும் வணங்கப்படும் மேலான

நிலையை எய்தி, நடந்த அநீதிக்குத் தண்டனை தருபவளாகக் காட்டப்பட்டுள்ளாள்.

நல்லதங்காள் கதையில் பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறல்

நல்லதங்காள் கதை புகழேந்திப் புலவரை ஆசிரியராகக் கொண்டு பல பதிப்புகள் வெளிவந்துள்ளது. பெரிய எழுத்துக் கதை வரிசையில் தக்கதொரு இடம்பெற்று வெளிவந்துள்ள இக்கதை, பெண்கள் விரும்பிப் படிக்கும், கேட்கும், நாடகமாகப் பார்த்து இரசிக்கும் சொல்லோவியமாகத் திகழ்ந்து வந்துள்ளது. இக்கதை குறித்துப் பலர் ஆய்வு நிகழ்த்தியுள்ளனர். பல்வேறு ஆய்வு முடிவுகளையும் வெளியிட்டுள்ளனர்.

இக்கதை தொடர்பாக ஆய்வு நிகழ்த்தியவர்களுள் நா.வா. அவர்கள் குறிப்பிடத் தகுந்தவர் ஆவார். இவர் இக்கதைப்பாடல், வரலாற்று ரீதியில் மிகப் பழமையான கொலைச் சிந்தாகலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். இராமநாதபுரம் ஹன்சா புரத்தில் நல்லதங்காள் இறந்த கிணறு இன்றும் உள்ளதாகவும் அவ்வூர்க் கம்மவார் மக்கள் இன்றும் அவளைத் தெய்வமாக வணங்கி வருவதாகவும் கூறியுள்ளார். ஆந்திர நாட்டுக் கம்மம் பகுதியிலிருந்து வந்தவர்கள் கம்மவார். அப்பகுதியில் இது போன்ற கதை வழக்கிலிருப்பதால் இக்கதை அங்கிருந்து வந்திருக்கலாம் என்றும் நா. வானமாமலை கருதுகிறார். இக்கதை வாய்மொழி மரபிலிருந்து (Oral-ballad) எழுத்து இலக்கியமாக மாறியபோது புராணச் சாயல் பெற்று நாட்டுப்புறக் காப்பியமாக (Folk-Epic) உருமாறியது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். நா. வானமாமலை அவர்கள் ஹன்சாபுரத்தில் வழங்கிய வாய்மொழிக் கதைப்பாடலையும் சேகரித்துள்ளார். அதில் நல்ல தங்காளும் அவள் அண்ணன் நல்லண்ணன் என்பவனும் சாதாரண உழவர் குடும்பத்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டு உள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார். எழுத்திலக்கியமாக நல்ல தங்காள் கதை உருப்பெற்றபோது நல்லதங்காளும் நல்லண்ணனும் மதுரையை ஆண்ட அரசன் இராமலிங்கம், அரசி இந்துவனியின் பிள்ளைகளாகக் காட்டப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டியுள்ளார். அத்துடன் அரசனும் அரசியும் குழந்தைப்பேறு இன்றி வருந்தியதாகவும், இறைவனை நோக்கித் தவம் செய்து சிவனருளால் இக்குழந்தைகளைப் பெற்றதாகக் காவிய மரபாக உயர்த்திக் கூறியுள்ளதை வெளிப்படுத்தியுள்ளார். வாய்மொழி

வடிவில் நல்லதங்காள் பக்கத்துக் கிராமத்தானை மணம் செய்வதாக உள்ள அமைப்பு எழுத்து மரபில் காசி மன்னனைத் திருமணம் செய்வதாக உள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.[6] இவ்வாறாக எழுத்து மரபில் நாட்டுப்புறக் காப்பியமாக நல்லதங்காள் வரலாறு உருமாறியுள்ளது தெரிய வருகின்றது.

எழுத்து மரபில் நல்லதங்காள் கதைச்சுருக்கம்:

மதுராபுரிப் பட்டணத்தை ஆண்ட அரசன் இராம லிங்கத்துக்கும் அரசி இந்திராணிக்கும் பிறந்தவர்கள் நல்லதம்பி, நல்ல தங்கை. நல்ல தங்கையைக் காசி இராசனுக்கு மணமுடித்து வைத்தனர். நல்ல தங்கை 'ஏழு வருஷத்துக்குள் ஏழு பிள்ளைகள் பெற்றெடுத்தாள்'[7] சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் நாளில் நாட்டில் பன்னிரண்டு வருடக் காலம் மழை பெய்யாததால் கடும் பஞ்சம் ஏற்பட்டது. வாழ்க்கை நடத்துவது மிகக் கடினமாக ஆன போது, அண்ணன் வீட்டுக்குக் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள் நல்ல தங்காள். அண்ணன் வேட்டையாடப் போயிருக்க, அண்ணி மூளிஅலங்காரி நல்லதங்காள் வருகையால் வெறுப்படைந்து, உண்ண ஏதும் கொடுக்காமல் கொடுமைப்படுத்தினாள். குழந்தைகள் பசி பொறுக்காமல் கதறும் காட்சி கண்டு பொறாத நல்ல தங்காள் காட்டுக்குள் சென்று பாழுங் கிணற்றில் ஒவ்வொரு குழந்தையாகத் தள்ளித் தானும் விழுந்திறந்தாள். செய்தியறிந்து ஓடிவந்த அண்ணன், மூளியலங்காரியின் கொடுமைச் செயல்களை அறிந்து அவளைக் கொன்றான். காசி இராசனிடம் செய்தி சொல்ல, காசி இராசன் துயரம் தாங்காமல் தற்கொலை செய்துகொள்ள, நல்லதம்பியும் தற்கொலை செய்து கொண்டான்.

நாட்டிலேற்பட்ட பஞ்சம் காரணமாகப் பிள்ளைகளைக் காப்பாற்ற முடியாமல், அண்ணன் வீட்டில் வந்து தங்கிப் பிள்ளைகளைப் பாதுகாத்து வளர்க்கலாம்; மழைபொழிந்து செழிப்பு தோன்றும் வரை அண்ணன் வீட்டில் தங்கியிருக்கலாம் என்ற 'தற்காலிகத் தங்கல்' எண்ணத்துடன் வந்த நல்லதங்காள்,

---

6. தொகுப்பாசிரியர் சு.சண்முகசுந்தரம், தன்னனானே (இதழ்) கொங்கு நாட்டுப்புறவியல் (நூல்), கொங்குநாட்டுக் குறுங்கதைப் பாடல்கள் (கட்டுரை), சி.மா. இரவிச்சந்திரன், ப.147.

7. புகழேந்திப் புலவர், நல்ல தங்காள் கதை, ப.11.

தன் உயிரையும், தான் பெற்ற குழந்தைகளையும் பலி கொடுக்கும்படி ஆனாள். திருமணம் முடிந்து கணவன் வீடு செல்லும் பெண்களுக்குப் பிறந்த வீட்டோடு உள்ள செல்வ உரிமைகள் அனைத்தும் அற்றுப்போயின. திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு மிகுந்த சீதனங்கள் தருவது அவள் சீரும் சிறப்புமாகச் செழிப்பான வாழ்க்கை வாழவேண்டும் என்பதுடன் திரும்பவும் அவள் வந்து செல்வத்திலும், சொத்திலும் பங்கு கேட்டு வரலாகாது என்பதற்காகவுமாகும் எனக் கருதலாம். நல்ல தங்காள் திருமணம் முடிந்து சென்றபோது அவளுக்குத் தந்த சீதனச் சிறப்புகளைக் கதைப்பாடல் பட்டியலிட்டுச் சொல்லி யுள்ளது.[8]

> பட்டி நிறைந்திருக்கும் பால்பசுவாஞ் சீதனங்கள்
> ஏரி நிறைந்திருக்கும் எருமைமாடாஞ் சீதனங்கள்
> காடு நிறைந்திருக்கும் கருப்பாடாஞ் சீதனங்கள்
> மேட்டுக் கழனிமுனைக் கழனிச் சீதனங்கள்
> பள்ளக் கழனி பயிர்க்கழனி சீதனங்கள்
> இத்தனை சீதனங்கள் பெற்றா ளிளங்கொடியாள்
> இன்னமுண்டு சீதனங்கள் எங்க ளிளங்கொடிக்கு

இத்தகு பற்பல சீதனங்கள் பெற்றுச் சென்றபோதும் பஞ்சம் காரணமாக அனைத்துச் சீதனப் பொருட்களையும் நல்ல தங்காள் இழந்து வெறுமையாய்க் கையற்று நின்றதையும் கதைப் பாடல் காட்டுகின்றது.

> தாலி தவிரவைத்து தங்கமெல்லாம் விற்றுவுண்டாள்
> மாலை தவிரவைத்து மற்றதெல்லாம் விற்றுவுண்டாள்
> ஆலாத்திப் பெண்களிலே ஆறுநூறும் விற்றுவுண்டாள்
> பாக்கு நெருக்கியிடும் பணிப்பெண்ணை விற்றுவுண்டாள்
> வெற்றிலைச் சுருள்மடிக்கும் மெல்லியரை விற்றுவுண்டாள்
> மரங்கள் முதலானதும் வந்தமட்டும் விற்றுவுண்டாள்
> குத்து முலக்கைகளைக் கூடைமுறம் விற்றுவுண்டாள்
> அண்ணனிட சீதனத்தை அத்தனையும் விற்றுவுண்டாள்
> தமையனிட சீதனத்தைத் தவறாமல் விற்றுவுண்டாள்
> தங்கப் பணிதியெல்லாம் தவிட்டுக்கு விற்றுவுண்டாள்
> இத்தனையும் தான்விற்று ஏழையாய் நின்றாளே (ப. 12)

---

8. புகழேந்திப் புலவர், நல்ல தங்காள் கதை, ப. 8-9.

(இதுவும் இதன்கீழ் எடுத்துக்காட்டப்பெறும் மேற்கோள் வரிகளும் புகழேந்திப் புலவரை ஆசிரியராகக் கொண்ட நல்ல தங்காள் கதைப்பாடல் நூலில் உள்ளவையாகும்).

செல்வ வளங்குலைந்ததும் உடனே அண்ணன் வீடு செல்லலாம் என்றும் எண்ணவில்லை. அவள் எண்ணிய போதும் கணவர் தடுத்தார். பிழைப்புக்கு வேறுவழி தேடுவோம் என எடுத்துரைத்தார்.

> **சாணி யெடுத்தாகிலும் தட்டிப் பிழைப்போமடி**
> **கூலி யெடுத்தாகிலும் கூடிப் பிழைப்போமடி**
> **வேலி விறகெடுத்து விற்றுப் பிழைப்போமடி** (ப. 12)

என்று கணவர் கூற, தான் வளர்த்த, வாழ்ந்த செல்வாக்கை எண்ணி அண்ணன் வீடு செல்வதில் நல்ல தங்காள் பிடிவாதமாக நின்றாள்.

> **பூமுடிக்குங் கூந்தலில் புல்லெடுக்கக் காரணமோ**
> **வேர்முடிக்குங் கூந்தலில் விறகெடுக்கக் காரணமோ**
> **குங்கும மெடுக்குங் கையால் கூலிவேலை செய்யலாமோ**
> **ஆனைகட்டி யெங்களண்ணன் குவலயத்தை யாளுகிறான்**
> **ஆளுகிறான் சீமையெல்லாம் அரண்மனையும் பேர்போக**
> **– என்**
> **அண்ண னரண்மனைக்கு அரசாளப் போகிறேனான்**
> **தமைய னரமனைக்குத் தாய்வீடு போறேனென்றாள்**
> (ப. 13)

அண்ணனிடம் சென்றால் தன் வறுமை நீங்கும்; குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்கலாம்; மழை பொழிந்து பஞ்சம் நீங்கியதும் வரலாம் என்பது நல்லதங்காளின் எண்ணம்.

> **புத்திரரை நான் வளர்த்து வருவேன்காண் புண்ணியரே**
> **மைந்தரை நான் வளர்த்து வருவேன்காண் மன்னவரே**
> **போய்ப்பிழைத்து வாரேனெனப் பொற்கொடி நமஸ்கரித்தாள்**
> (ப. 13)

என்கிறது கதைப்பாடல்.

செல்வ வளத்தை இழந்ததால் செல்வவளத்துடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்துவரும் அண்ணன் வீட்டுக்குத் தங்கை என்ற உறவுமுறையுடன் செல்வதற்கு உரிமை உள்ளது என

எண்ணினாள். அத்துடன் அண்ணன் வீட்டுச் சொத்தைத் தானும் தன் பிள்ளைகளும் அனுபவிப்பதற்கு உரிமை உள்ளது என்ற முறையிலும் செல்லலாம் என நினைத்தாள் நல்லதங்காள். ஆனால் ஒரு பெண் மணமுடித்துக் கணவன் வீடு சென்றபின், அண்ணன் முறை கொண்டாடிக் கொண்டு பிறந்தகம் வந்து நெடுநாள் தங்குவதற்கும், அண்ணன் வீட்டில் பிள்ளைகளை வைத்துக் கொண்டு வளர்த்து ஆளாக்குவதற்கும் எவ்வித உரிமையுமில்லை என்பதை அண்ணன் நல்லதம்பியின் மனைவி அலங்காரி நிரூபித்தாள்.

பசிக் கொடுமை தாளாமல் பிள்ளைகள் வீட்டறையில் குவிந்து கிடக்கும் தேங்காயையும் மாங்காயையும் எடுத்தபோது மூளியலங்காரி வேகமாய் ஓடிவந்து கைகளிலிருந்து பிடுங்கி எறிந்தாள்.

மூளியலங்காரி மூதேவி சண்டாளி
திட்டென் றெழுந்திருந்து தீவிரமாய்க் கைமுறித்தாள்
ஓட்டமாய் ஓடிவந்து ஓரறை தான்கொடுத்தாள்
மாங்காயைத் தான்திருகி மாங்காயுடன் போட்டாள்
தேங்காயைத் தான்திருகி தேங்காயுடன் போட்டாள் (ப.23)

பசித்தீ ஆற்ற பஞ்சடைந்த கேழ்வரகை ஓட்டைத் திருகையில் ஒன்றிரண்டாய் உடைத்துப் பச்சை வாழை மரத்தை விறகாக்கி எரிக்கச் செய்தாள். கொதித்த கூழையும் குடிக்க விடாமல் செய்தாள் அண்ணி அலங்காரி.

பன்னிரண்டு வருஷம் பஞ்சடைந்த கேழ்வரகை ஓட்டைத்
சில்லியைந்து பானையிலே இல்லையென்றுலை வைத்தாள்
ஓட்டைத் திருகையெடுத் தொன்றிரண்டாய் மாவாக்கி
வாசலிலே நிற்குமந்த வாழைமரந் தான் பிளந்து
ஈனாத வாழை இளவாழைத் தண்டொடித்து
வாழைமரம் பிளந்து வைத்தா ளடுப்பிலேதான்
ஊதுகிறாள் பாவி ஒருவாய் புகைகிளம்ப
சிந்தினாள் மூக்கையங்கே திருக்கண் சிவந்திடவே
(ப. 23-24)

என்கிறது கதைப்பாடல்.

தான் நினைத்து வந்ததற்கு மாறாக நடப்பதைக் கண்டு மனம் வெதும்பிய நல்லதங்காள் குழந்தைகளுடன் தானும்

கிணற்றில் விழுந்து தற்கொலை செய்ய முடிவெடுத்தாள்; முடிவைச் செயல்படுத்தினாள். அண்ணன் வீட்டுச் சொத்தை அனுபவிக்கத் தனக்கு உரிமை உண்டு; அண்ணன் சொத்தில் தனக்கும் பங்கு உண்டு என்று எண்ணிய பெண்ணியச் சிந்தனையின் முதல் விழிப்புணர்வு இவ்வாறாக நல்ல தங்காளிடமிருந்து துவங்கியதைக் கதைப்பாடல் வெளிப்படுத்து கின்றது. வாழ்வு வளமுடன் உள்ளபோது தாய் வீட்டுக்குச் செல்லலாம்; திரும்பலாம். ஆனால் வாழ்வு தாழ்வுற்ற போது அங்குச் சென்றால் உலகம் ஏசும் என்ற சமூக நடப்பைக் கணவன் பலவாறாக எடுத்துரைத்த போதும், அண்ணன் வீடு சென்று அவன் செல்வத்தில் தன் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கலாம், அண்ணன் சொத்தில் தனக்கும் உரிமை உண்டு என்ற சிந்தனை நல்ல தங்காளுக்கு எழுந்தது. இதைச் சமூகக் கட்டுப்பாட்டு மீறலாகக் கருதலாம். மணமுடித்துக் கணவன் வீடு சென்ற பெண்ணுக்கு அண்ணன் வீட்டுச் சொத்தை அனுபவிக்க எவ்வித உரிமையுமில்லை என்ற நிலையே சமுதாயத்தில் நிலவியது. இதனையே நல்லதங்காளின் கணவன் எடுத்துரைத்தான்.

> **வாழ்ந்துகெட்டுப் போனாயானால் வலது சிரிப்பாரடி**
> **கெட்டுநொந்து போனாயானால் கிளையிலுஞ் சேர்க்காரடி**
> **கண்டார் சிரிப்பாரடி காசினியோ ரேசிடுவார்**
> **பார்த்தார் நகைப்பாரடி பாரிலுள்ளோ ரேசிடுவார்**
>
> ....
>
> **தண்டிக்குத் தண்டிபெண்ணே சரியாக வாழ்ந்தோமானால்**
> **வாவென் றழைப்பார்கள் வகையுண்டாய்ப் பேசுவார்கள்**
> **கெட்டமகள் போனாயானால் கிழிந்த தடுக்கிடுவார்**
> **வாழ்ந்தமகள் போனாயானால் வண்ணத் தடுக்கிடுவார்**
>
> *(ப. 12)*

சமுதாய நடைமுறைக்கு மாறாக நல்லதங்காள் தாய்வீட்டுச் சொத்தை அனுபவிக்க வந்து உயிரை இழந்தாள். தன் பிள்ளைகளையும் கொன்ற பாவத்துக்கு ஆளானாள். இவ் வகையில் மணமாகிச் சென்ற பெண்ணுக்குத் தாய் வீட்டுச் சொத்தில் உரிமை கொண்டாடி வாழ உரிமை இல்லை என்ற சமூக நடப்பியலை, சமூகக் கட்டுப்பாட்டை மீறியவளாக நல்லதங்காள் காணப்படுகிறாள். உடன்பிறந்த தங்கை தன் வீட்டில் பிள்ளைகளை வைத்து வளர்த்து ஆளாக்கிச் செல்லட்டும் என்று அண்ணன் எண்ணினாலும் அதைச்

செயல்படுத்த அண்ணி தடையாக நின்றாள். கணவன் சொத்தைக் கணவன் உள்ளவரை அனுபவிக்க மனைவியாகிய தனக்கு மட்டுமே உரிமை உண்டு என்று அலங்காரி நினைத்தாள். அதில் கணவனின் தங்கைக்கோ, தங்கை பிள்ளைகளுக்கோ உரிமை இல்லை என்று எண்ணினாள். அதுவே சமூகநடைமுறையாக இருந்தது. இந்த நடைமுறையின் ஒளிப்பதிவாக மூளிஅலங்காரி திகழ்ந்தாள். செழிப்பாகக் கணவன் வீட்டில் உள்ளபோது ஒரு பெண் பிறந்தகத்துக்கு வரலாம்; போகலாம்; ஆனால் பிறந்தகத்தில் பிள்ளைகளுடன் நெடுநாள் தங்குவது சமூக நடைமுறையில் வழக்கில் இல்லாததாக இருந்தது. இதை நடத்திக் காட்ட முனைந்த நல்லதங்காள் உயிரை இழந்தாள். ஆனால் சமூகக் கட்டுப்பாட்டை மீறியவளாக, சமூக நடைமுறைக்கு மாறாக நடப்பவளாக இவள் அடி எடுத்து வைத்ததால் மணமாகிச் சென்ற பெண்ணுக்கும் சொத்துரிமை வேண்டும் என்ற எண்ணம் முகிழ்க்கக் காரணமானவளாக ஆகிப் பெண்ணிய வழியில் சமூகக் கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவளாக நல்லதங்காள் திகழ்ந்தாள் எனலாம்.

வெள்ளையம்மாள் கதைப்பாடலும் பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறலும்

நல்லதங்காள் கதைப்பாடல் மணமாகிக் கணவன் வீடு சென்ற பெண் கணவன் வீட்டில் வறுமையுற்ற பொழுது, தன் வறுமையை நீக்கும் வழி தேடிப் பிறந்தகம் வந்ததையும், பிறந்தகத்தில் ஆண்வாரிசான அண்ணனின் சொத்துகள் அண்ணன் மனைவியாகிய அண்ணியின் ஆளுகைக்குட்பட்டு இருந்ததால் அந்த அண்ணியை மீறித் தன் வறுமையை நீக்கிக் கொள்ள வழி கிடைக்காத நிலையில் பிறந்தகம் வந்த அப்பெண் தன் உயிரையும் தன் குழந்தைகள் உயிரையும் மாய்த்துக் கொண்ட வரலாற்றையும் கூறுவதாக இருந்தது கூறப்பெற்றது. திருமணம் ஆகிச் சென்றபின்னும் தன் அண்ணன் வீட்டுச் சொத்தை அனுபவிக்கத் தனக்கு உரிமை உண்டு என்று நம்பி வந்த ஒரு பெண்ணின் நம்பிக்கை தூளானதை நல்லதங்காள் கதை காட்டுகிறது. மணமாவதற்கு முன் பிறந்தகச் சொத்துப் பெருகு வதற்குத் தன் உடலுழைப்பை அப்பெண் தந்திருக்கக்கூடும். ஆயினும் மணமாகி மறுவீடு சென்ற பெண்ணுக்குப் பிறந்தகச் சொத்தில் எவ்விதப் பங்கும் இல்லை என்பதை நல்லதங்காள் கதை காட்டுகின்றது.

கணவன் இறந்த பின்னர்ப் பெண் மகவை வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்புடைய ஒரு மனைவிக்குக் கணவன் சொத்தில் பங்கு உண்டு என்று முதலில் நியாயத் தீர்ப்பு வழங்கிய ஊர்த்தலைவர் பின் கையூட்டுப் பெற்றுக் கொண்டு கணவன் சொத்து பெண் மகவை மட்டும் பெற்றுள்ள மனைவியைச் சேராது என்று தீர்ப்பை மாற்றிக் கூறி, கைக்குழந்தையுடன் வாழ வழிவகையில்லாமல் அப்பெண் தற்கொலை செய்து கொண்டதை அனந்தாயி கதை கூறுகின்றது.

சிற்சில காரணங்களால் பெற்றோர்களால் பெண் பிள்ளைகளுக்குச் சொத்துரிமை அளிக்கப் பெற்றபோதும், பெற்றோரின் மரணத்தின் பின் அச்சொத்துரிமையை அடைய விடாமல் தடுத்த அண்ணன்மார்களின் சதிச் செயலையும், தன் உரிமைக்காகப் போராடித் தக்கார் உதவியுடன் அச்சொத்துரி மையை அடைந்த பெண் குறித்த கதைப்பாடலாக "வெற்றித் திலகம் வெள்ளையம்மாள் கதைப்பாடல்" அமைந்துள்ளது.

'வெள்ளையம்மாள் கதைப்பாடல்' ஆண்மக்களைப் பெற்றிருந்தும் சொத்துரிமை கிடைக்காமையால் போராடிய பெண்ணின் கதையைக் கூறுகின்றது. 'வெள்ளையம்மாள் கதைப் பாடல்' கண்ணாடிப் பெருமாள் என்பவரால் எழுதப்பெற்றதாகும். காங்கயம் பகுதியிலுள்ள காடையூரில் நடந்த நிகழ்ச்சியையே கண்ணாடிப் பெருமாள் அவர்கள் கதைப்பாடலாகப் பாடியுள்ளார் எனத் தெரிகின்றது. இந்த வெள்ளையம்மாள் கதைப்பாடல் குறித்த ஓர் ஆய்வுக் கட்டுரை 'தன்னனானே' 'கொங்குநாட்டுப்புறவியல்' இதழில் காணப்படுகின்றது.[9] 'தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு' என்ற நூலிலும் வெள்ளையம்மாள் கதைப்பாடல் குறித்த சில குறிப்புகள் காணப் படுகின்றன. கண்ணாடிப் பெருமாள் எழுதிய வெள்ளையம்மாள் கதைப்பாடலைத் தாராபுரம் வட்டமலைப் புதுப்பாளையத்தைச் சேர்ந்த காமதேனு துரைச்சாமி என்பவர் 1991இல் பதிப்பித்துள்ளார்.[10] வெள்ளையம்மாள் வரலாறு பற்றிய செய்திகளைப் பிற கொங்கு ஆவணங்களும், இலக்கியங்களும் தெரிவிக்கின்றன. **அவையாவன:**

1. மெக்கன்சியின் காங்கய மன்றாடியார் வம்சாவளி (தமிழக அரசின் சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சுவடி எண். டி-3038, பாளையப்பட்டுகளின் வரலாறு, தொகுதி - 1, ப. 92-104)

---

9. சு. சண்முகசுந்தரம், தொகுப்பாசிரியர், பக்.135-145.

10. தன்னனானே (இதழ்), கொங்கு நாட்டுப்புறவியல், ப.145.

2. கார்மேகக் கவிஞரின் கொங்குமண்டல சதகம், பாடல் எண் 75
3. காங்கய மன்றாடியார் வீட்டுக் கையெழுத்துப் பிரதி
4. தனிப்பாடல்கள்
5. கருமாபுரம் செப்பேடு

வெள்ளையம்மாள் கதைப்பாடற் சுருக்கம்

கொங்கு மண்டலத்தில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் கருமாபுரம் எனும் ஊரில், கொங்கு வேளாளரில், பொருளந்தை குலத்தில் (பொருள் தந்த குலம்) காங்கேயன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவ்வூரில் மழையின்றிப் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. காங்கேயன் தன் கால்நடைகட்கு மேய்ச்சல்பட்டி தேடிக் காங்கய நாட்டு நட்டூர்க்குத் தன் கால்நடைகளை ஓட்டிக் கொண்டு வந்தான். காங்கய நாட்டுப் பரஞ்சேர்வழிக்கும் காஞ்சிக் கோயில் நாட்டுக் கூகலூருக்கும் 'நட்டூர்' என்ற பெயருள்ளதாகத் தெரிகின்றது. நட்டூர்க் காணியாளராக இருந்தவர்கள் கொங்கு வேளாளரில் சேடகுலத்தார். அங்கிருந்த சேடகுலத் தலைவருக்கு, வெள்ளை நிறத்தில் ஒரு பெண் பிறந்தாள். அப்பெண்ணுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். நீண்ட காலமாக அப்பெண்ணை யாரும் திருமணம் செய்து கொள்ள முன்வர வில்லை. அப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறவர் களுக்குக் காடையூரில் கால்பங்கு காணியாட்சி கொடுக்கிறோம் என்று சேடகுலத் தலைவர் அறிவித்தார். தம் ஊருக்கு வந்திருக்கும் பொருளந்தை காங்கேயனுக்குப் பெண் கொடுக்க விரும்பினார்.

சேடகுல முதல்வர் கருமாபுரம் சென்று காங்கேயனின் பெற்றோரைப் பார்த்து ஒப்புதல் பெற்றுக் காங்கேயன் - வெள்ளை யம்மாள் திருமணத்தை இனிதே நடத்தினார். காங்கேயன் நட்டூரிலேயே தங்கியிருந்தான். மாப்பிள்ளை, மைத்துனர் எல்லோரும் ஒரே குடும்பமாய் இருந்தார்கள். காங்கேயன் நான்கு ஆண் குழந்தைகளுக்குத் தந்தை ஆனான். அந்நிலையில் காங்கேயனின் மாமனாரும் மாமியாரும் இவ்வுலக வாழ்வை நீத்தனர். அவர்களின் மரணத்தின் பின்னர்க் காங்கேயனுக்குத் துன்பம் தொடர்ந்து வந்தது.

மைத்துனன்மார் நால்வரும் காங்கேயனுக்குக் கால்காணி கொடுக்க மறுத்தனர். காங்கேயனும் வெள்ளையம்மாளும் நாட்டு மக்களிடம் விவரம் கூறினர். ஆனால் நாட்டார் யாரும் நியாயம் கேட்க முன்வரவில்லை. அந்நிலையில் காங்கேயனை

வெள்ளையம்மாளின் சகோதரர்கள் ஆற்று வெள்ளத்தில் தள்ளிக் கொன்றனர். அத்துடன் நில்லாமல் சகோதரி வெள்ளை யம்மாளின் கற்புக்கு இழுக்குக் கற்பித்தும் பேசினர். ஊரைவிட்டுப் போகுமாறும் வற்புறுத்தினர். கருமாபுரம் சென்று பிழைக்கலாம் என்றெண்ணிய வெள்ளையம்மாள் வடக்குத் திசை நோக்கிச் சென்றாள். செல்லும் வழியில் இசுலாமியப் படைத் தலைவர் சர்தார் என்பவரையும் அவருடைய படைவீரர்களையும் கண்டாள். அந்த இசுலாமியப் படைத்தலைவர் சர்தார் மாலிக்கா பூரின் படைத்தலைவருள் ஒருவராக இருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது.

பயந்து ஒடுங்கி நின்ற பிள்ளைகளையும் வெள்ளை யம்மாளையும் பார்த்து அந்த சர்தார் 'நீங்கள் யார்? எங்குச் செல்கிறீர்கள்?' எனக் கேட்டார். வெள்ளையம்மாள் தன் குறையைக் கூறினாள். கேட்ட சர்தார் மனமிரங்கினார். தாம் வரி வசூலித்துத் தாராபுரத்தில் கொடுத்து வரும்வரையும் காங்கேயம் அகிலாண்டபுரம் கோட்டையில் பாதுகாவலுடன் அவர்களை இருக்கச் செய்தார். பின்னர் மீண்டு வந்த சர்தார் வெள்ளையம்மாளின் சகோதரர்களையும், நாட்டாரையும் அழைத்து விசாரித்தார். சகோதரர்களும், நாட்டாரும் பெற்றோர் காணி கொடுக்கிறோம் என்று சொல்லவில்லை என ஒரே விதமாகப் பொய் கூறினார்கள். வெள்ளையம்மாள் தன் தந்தை தன்னைத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குக் கால்காணி கொடுக்கிறோம் என்று சொன்னது உண்மை என்றாள். மீண்டும் மீண்டும் அதை வற்புறுத்திக் கூறினாள். வெள்ளையம்மாளின் அண்ணன்மார் மூன்று விதமான சத்தியங்கள் செய்தால் காணி கொடுப்பதாகச் சொன்னார்கள்.

1. பசுமண் கலத்தில் நீர் எடுக்க வேண்டும்.

2. எடுத்த அந்தத் தீர்த்த நீரை மண் குதிரை மீது தெளிக்க வேண்டும். அப்போது அந்தக் குதிரை கனைக்க வேண்டும்.

3. கழுமரமாகச் சீவி வைக்கப்பட்ட விடத்தலை மரத்தில் தண்ணீர் ஊற்ற, அது தழைக்க வேண்டும்.

என்ற மூன்று சத்தியங்களிலும் வெள்ளையம்மாள் தெய்வீக சக்தியாலும் கற்பின் ஆற்றலாலும் வெற்றி பெற்றாள். சகோதரர்கள் தாம் கூறியவாறு காணியை வெள்ளை யம்மாளுக்கும் அவளுடைய நான்கு ஆண் மக்களுக்கும்

கொடுத்துவிட்டு ஊரைவிட்டுச் சென்றனர். இவ்வாறாக, இழந்த காணியை வெள்ளையம்மாள் இசுலாமியச் சர்தாரால் பெற்றாள். காடையூரில் பொருளந்தைக் குலத்தார் காணி பெற்று நிலையாகப் பேரும் புகழும் பெற்றுப் பல்கிப்பரவி வாழ்வோடும் வளத்தோடும் பெரு வாழ்வு வாழ இசுலாமியச் சர்தாரே முழுமுதற் காரணமாக ஆனார். இச்செய்நன்றியை மறவாமல் இருக்க முக்கியமான சடங்கு ஒன்றைச் செய்வதாகச் சர்தாருக்கு வாக்குறுதி கொடுத்து வம்ச வழியாக அதை நிறைவேற்றியும் வருகின்றனர்.

அச்சடங்காவது :

பொருளந்தைக் குலத்தில் காடையூர்க் காங்கேய வழி வந்தவர்கள், கருமாபுரத்தைப் பூர்வீகமாக உடையவர்கள் தங்கள் குழந்தைகளை இசுலாமியர் போல் வளர்த்து, உரிய ஒரு நாளில் உற்றாரையும் உறவினர்களையும் அழைத்துச் சீரும் சிறப்புமாய்த் திருமணம் நடத்துவது போன்று பெரிய ஏற்பாடுகள் செய்து குழந்தைகட்குக் 'காது குத்திக் கலியாணம்' நடத்தி, இந்து மதத்திற்கு மாற்றுவது போலச் செய்யும் புனிதச் சடங்கைக் காடையூர்க் காங்கேய வழியினர் அனைவரும் பரம்பரை பரம்பரையாக இன்றும் செய்து வருகின்றனர்.

கொங்குமண்டலச் சதகப்பாடலில் வெள்ளையம்மாள் வரலாறு

கார்மேகக் கவிஞர் வெள்ளையம்மாள் வரலாற்றை உள்ளடக்கிய சதகப்பாடலைப் பாடியுள்ளார். அப்பாடலாவது:

காடையில் சேடகுலத்தான் மகள்மெய்க் கழுவறைந்து
மேடையில் சங்கப் பலகையுண் டாக்கிநல் வேப்பமலர்த்
தோடையும் பாடகம் காங்கேயன் தன்னானச் சுமந்து பெற்று
மாடையு நேர்தெய்வம் பேறுபெற் றாள்கொங்கு மண்டலமே[11]

வெள்ளையம்மாள் வரலாற்றை விளக்கும் தனிப்பாடற் பகுதிகள்

காசினி தன்னிலே காங்கய நாட்டினில்
காடைமா நகர்தன்னிலே
கற்பை நிலைநாட்டியே காராளர் போற்றவே
காட்சிகள் புரிந்த கோவே

11. தன்னனானே (இதழ்), கொங்கு நாட்டுப்புறவியல், ப.144.

காராள குலவேளிர் வெள்ளையம்மாள் தன்னின்
கற்பைநிலை நாட்டி வைத்தாய்[12]

கதைப்பாடல் – மெக்கன்சி ஆவணம் – வேறுபாடுகள்

வெள்ளையம்மாள் கதைப்பாடலுக்கும் வெள்ளையம்மாள் வரலாறு கூறும் மெக்கன்சி ஆவணத்திற்கும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை:

கதைப்பாடல்	மெக்கன்சி ஆவணம்
1. வெள்ளையம்மாள் வெள்ளை நிறமாக இருந்தாள்	வெள்ளையம்மாள் முடப் பெண்ணாக இருந்தாள்
2. வெள்ளையம்மாளின் அண்ணன் மார் காங்கேயனை நாட்டு வளம் காண அழைத்துச் சென்று வெள்ளத்தில் தள்ளிக்கொன்றனர்	காங்கேயன் தானாகவே தெய்வ கதி அடைந்தான்
3. மூவகைச் சத்தியம் செய்யக் கூறியதாக உள்ளது	கூர்மையான விடத்தலை மரத்தில் கை அறைந்தால் ஒட்டிக் கொள்ள வேண்டும். காயம் படக்கூடாது எனும் சத்தியம் (நிபந்தனை) செய்யக் கூறியதாக உள்ளது.
4. வெள்ளையம்மாளின் நான்கு மக்களின் பெயர்கள் சோமன் காங்கேயன், தடியன் காங்கே யன், கழுவேறிக் காங்கேயன் வேண்டாங் காங்கேயன் என்கிறது.	கழுவறஞ்ச காங்கேயன், சோமன் காங்கேயன், தடிக் காளி காங்கேயன், சேனியன் காங்கேயன் என்கிறது.[13]

இத்தகைய சிற்சில வேறுபாடுகளே காணப்படுகின்றன. காடையூரில் வழங்கும் செவிவழிச் செய்தி வெள்ளையம்மாள் வெள்ளையாகவும் முடமாகவும் இருந்தாள் என்கிறது.[14]

---

12. தன்னனானே (இதழ்), கொங்கு நாட்டுப்புறவியல், ப.144.

13. மேற்படி, ப.142.

14. மேற்படி, ப.142-143.

முழுக்காது சீர் – சாமி செய்தலில் சிறப்புச் செய்திகள்

இன்றும் நடைபெற்று வரும் முழுக்காது சீர் சாமி செய்தலில் பின்பற்றப்படும் சடங்குமுறைகளாவன:

1. பையனின் தாய்மாமனே சாமி செய்தலின் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
2. மாமன் கொண்டு வந்த சீர்ப்பொருட்களை உப்பில்லா வீட்டில் வைக்க வேண்டும்.
3. முதல்நாள் விருந்தில் ஆட்டுக்கறி சமைத்துக் கண்ணைக் கட்டிக் கொண்டு பரிமாறுவர்
4. சீர் நடக்கும் வீட்டுக்குள் முழுக்காது குலத்தார் மட்டுமே போகலாம்.
5. ஆங்காங்கு அமைக்கப்பட்ட வெள்ளையம்மாள் கோயில்கள் மூடிய கோயில்,மோடியம்மன் கோயில், புட்வைக்காரி கோயில், வீரமாந்தி கோயில் எனப் பலவாறாக அழைக்கப்படும்.
6. வழிபாடு முடிந்ததும் மூடிய கோயிலை எலந்த முள் வைத்து மூடுவர். சாமி செய்தோர் மறுநாள் நட்டூர் (காடையூர்) வந்து வெள்ளையம்மாளை வழிபடுவர்.
7. சாப்பிட்டு மீதியானவற்றை மிடாவில் போட்டுப் புதைப்பர்.
8. வெள்ளையம்மாளுக்கு வறண்ட மரம் தழைத்துக் காட்டிய வெடத்தலா மரத்தைத் தெய்வீக மரமாக வழிபடுகின்றனர்.[15]

இக்கதைப்பாடலில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

தனக்குத் தன் பெற்றோரால் தரப்பட்ட கால் காணியை உடன்பிறந்த சகோதரர்கள் தரமறுத்தபோது மனங் கலங்கித் துயருற்றாள் வெள்ளையம்மாள். தரமுடியாது என மறுத்ததுடன் நில்லாது அண்ணன்மார் அவளைப் பலவாறு பழித்தும் இழித்தும் பேசினர். கற்புக் கெட்டவள் என அவதூறு கூறினர்.

> அப்போது அண்ணன்மார் ஆரணங்கைத் தான்பார்த்து
> கற்பிழந்த உந்தனுக்குக் காணி ஒரு கேடா
> குடும்பத்தின் பெயரைக் குலைத்துவிட்ட பாதகிநீ
> பூமிஒரு கேடா புறம்போன மங்கையர்க்கு

15. தன்னனானே (இதழ்), கொங்கு நாட்டுப்புறவியல், ப. 143-144.

முகத்தில் விழிக்காதே மூதேவி ஆனவளே
உந்தனுக்கு உதவிசெய்தால் உலகோர் பழித்திடுவார்
பழித்து ஒதுக்கிவைப்பார் பாதகியே உன்னாலே[16]

என ஏசிப் பேசினர். அத்தகைய ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் சகிக்க முடியாத வெள்ளையம்மாள் நாட்டு மக்களிடம் முறையிட்டாள். அவர்களும் யாரும் அண்ணன்மாரைத் தட்டிக் கேட்கவோ, உரிமையைப் பெற்றுத் தரவோ முன்வரவில்லை. பிழைக்க வழியில்லாத நிலையில் ஊரைவிட்டுக் கிளம்பிய வெள்ளையம்மாளுக்கும், பிள்ளைகளுக்கும் இசுலாமியச் சர்தார் உதவி செய்தார். பிள்ளைகளும் இசுலாமியச் சர்தாரும் பேசிக் கொண்ட பரிவுடன் கூடிய விவரங்கள் மெக்கன்சி ஆவணத்தில் கீழ்க்காணுமாறு இடம்பெற்றுள்ளன.

உத்திரதிசை நோக்கி யிந்தப் புள்ளைகளும் முடப் பெண்ணும் புறப்பட்டுப் போறபோது அவ்விடத்தில் இருந்த துலுக்க சருதாறியிடத்தில் இந்த நியாயத்தைச் சொல்லிக் கொள்ளுவோமென்று அவடத்தில் நின்று சர்தாரை யிந்தப் புள்ளைகள் காண்பிச்சுக் கொண்டயிடத்தில் இந்தப் புள்ளைகளைப் பார்த்து அந்தச் சருதார் நீ யாருயென்று கேட்டார். நாங்கள் ஒங்களுடைய புள்ளைகள் காத்துயிருக்கிறோமென்று சொன்னார்கள். அது சேதி சருதாரணவர் மனதினில் வைத்து என்னுடைய புள்ளையென்று சொன்னாயே என்னுடனே கூட சாப்பிடு என்று கேட்டதில் ஒன்னுடைய புள்ளையென்று சொன்னது மெய் தானென்றும் தங்களுடைய மனசுப்படிக்கு வுக்காந்து சாப்பிடுகுறோமென்றும் பொகுதய்யிறிய வத்தரு களாயி சொன்ன வாக்கு வசனத்துநாலே சருதாருக்கு ரொம்ப சந்தோஷம் வந்து யிந்தப்புள்ளைகளைப் பாத்து ஒங்களுடைய சாதினீதி முதலானதுகளும் கேழ்க்கும் யிடத்தில் நட்டூறுலே காணியில்லை யென்று சொல்லப்பட்ட வயணங்கள் முதலான சேதிகளும் சொல்லிக் கொண்டார்கள். இந்தப் புள்ளைகளுடைய சேதிகள் அந்த சருதாறீ கேட்டு அந்த நட்டூறுலேவுள்ள செனங்களை சம்மாரம் பண்ணிப் போட்டு அந்தக் காணிகளையெல்லாம்

16. தன்னனானே (இதழ்) கொங்கு நாட்டுப்புறவியல், ப.142.

ஒங்களுக்குக் குடுப்பிவிக்குரோ மென்று சொன்னார். அதுக்கு அந்தப் புள்ளையள் நாலுபேரும் அப்படிக்கு துர்குறதமாகி அந்தவூருக் காணியை கட்டிக் குடுக்க வேண்டிய அக்கறையில்லை. தங்களுக்கு எங்களிடத்தில் தயவு இருந்தால் சனங்களை தருவிச்சு நியாயங்களை விளக்கி நிசமாயி குடுக்குறோமென்று சொல்லப்பட்ட கால்பங்கும் வாங்கிக் குடுப்பிக்க வேணுமென்று கேட்டுக் கொண்டார்கள்[17]

மேற்கண்ட உரையாடல் பகுதி மூலம் பிள்ளைகளின் இனிய அணுகுமுறையும், எளிமையும், பேராசைப்படாத அரிய குண நலன்களும் வெளிப்பட்டுள்ளன. ஊரார் அனைவரும் சேர்ந்து கால்காணி தருகிறோம் என்று பெற்றோர் சொல்லவில்லை என்று மறுத்தபோதும் உண்மையை நிலைநாட்டுவதில் ஊக்கம் கொண்ட வெள்ளையம்மாள் சொன்னது உண்மை என்று இறுதிவரை சாதித்தாள். சத்தியம் செய்தும் நிரூபித்தாள். சர்தாரின் முயற்சியுடன் வெள்ளையம்மாளின் உண்மையும், விடாத் தன்மையும் சொத்துரிமையை அவள் அடையத் தக்க துணை புரிந்தன எனலாம்.

கதைப்பாடற் களத்தில் முஸ்லீம் ஆட்சிக் காலத்தில் பெற்றோரின் சொத்தில் பங்கு பெற்ற முதற் பெண்மணியாக வெள்ளையம்மாள் திகழ்கிறாள் எனலாம். இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தும் சிறந்த கதைப்பாடலாக இது திகழ்கிறது.

பெற்றோர் வாக்களித்தபடி, அவர்களின் மரணத்தின் பின்னர் மறுக்கப்பட்ட சொத்துரிமையை, ஆட்சியாளரின் அரவணைப்போடு, போராடிப் பெற்ற தீரப்பெண்ணாக வெள்ளையம்மாள் விளங்குகிறாள். ஆண் சமுதாயத்தின் அடக்கு முறைக்கு அடிபணியாமல் ஆண் சமுதாயம் அவப்பெயரை உண்டாக்கி ஊரை விட்டுத் துரத்திய போதும் கலங்காமல் நின்று சொத்துரிமையைப் பெற்றாள் வெள்ளையம்மாள். பெண்ணுக்குச் சொத்துரிமையில்லை என்ற ஆணாதிக்க மனப்பான்மையைக் கட்டறுத்து மீறலை நடத்தியவளாக வெள்ளையம்மாள் காணப்படுகின்றாள். இவளது இத்தீரச் செயலால் இன்றும் அவள் அப்பகுதியில் தெய்வமாக வணங்கப்படுகிறாள். இக்கதைப்பாடல்

17. தன்னனானே (இதழ்), கொங்கு நாட்டுப்புறவியல், ப.140.

மூலம் முஸ்லீம் ஆட்சிக்காலத்தில் குறைபாடுடைய பெண் மக்களுக்குப் பிறந்தகத்துச் சொத்தெழுதி வைக்கும் வழக்கம் இருந்ததை அறிய முடிகின்றது. அத்துடன் பெற்றோர் அவ்வாறு பெண்மக்களுக்குச் சொத்தெழுதி வைத்தாலும் பெற்றோரின் மரணத்தின் பின்னர், உடன்பிறந்த சகோதரர்களே அவ்வுரிமைச் சொத்தைத் தர மறுத்துக் குழந்தைகள் உள்ள அப்பெண்களை வாழ வழி வகை இல்லாமல் அலைக்கழித்துள்ளனர் என்பதும், நிராதரவான அப்பெண்களுக்காக, அப்பெண்கள் பிறந்து வளர்ந்த ஊராரும் உற்ற உதவி ஏதும் செய்யவில்லை என்பதையும், ஆண் சமுதாயத்துக்கு ஆதரவாகவே ஊர்ச் சமுதாயமும் திகழ்ந்தது என்பதும், அத்தகு பெண்கள் தம் சொந்த ஊரிலேயே வாழ முடியாமல் வேற்றூருக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதையும், ஆட்சியாளர்களின் உதவியுடனேயே அத்தகு பெண்கள் தாம் இழந்த சொத்துரிமையை மீண்டும் பெற முடிந்தது என்பதையும் கணவனை இழந்த அத்தகு பெண்கள் தாங்கள் கற்பரசி என்று சத்தியங்கள் பல செய்து உறுதிப்படுத்திக் காட்டிய பின்னரே இழந்த சொத்தைப் பெற முடிந்தது என்பதையும் தெளிவாக அறிய முடிகின்றது.

மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்கள்

'மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்'[18], 'மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்'[19] என்ற இரு நூல்கள் பதிப்பிக்கப்பட்டு வெளியாகியுள்ளன. இவற்றுள் முந்தையது மிகுந்த இயற்கையிறந்த நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளதால் பிற்கால வடிவமாகலாம் எனக் கருதத் தோன்றுகின்றது. கதை அடிப்படை நிகழ்ச்சிகளில் பெருத்த மாற்றமில்லை. நாட்டுப்புற இலக்கியத்துக்கே உரித்தான மாற்று வடிவ அமைப்புடையன இக்கதைப்பாடல்கள். இங்கு நாம் இதுவரை பார்த்துவரும் பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறலில் பெண்ணின் சொத்துரிமைப் போராட்டத்தை மையக் கருவாகக் கொண்டதாகவே இந்தக் கதைப்பாடல்கள் திகழ்கின்றன.

---

18. பதிப்பாசிரியர் ச. முருகானந்தம், தேன்மழை வெளியீடு, ஆலந்தூர், சென்னை-16.ஆகஸ்டு, 1991.

19. பதிப்பாசிரியர் அ.ம. சத்தியமூர்த்தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.

காலத்தால் பிந்தைய பதிப்பான (1999ஆம் ஆண்டுப் பதிப்பு) மன்னான் சின்னாண்டி கதைப்பாடல் முதற்கண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்

கதைச் சுருக்கம்

வெள்ளலூர் நாட்டு அரசனான முதற்சோனை எனப் படுபவன் சிறுகுடி நாட்டு அரசர்களான மூளிநல்லவீரப்பன், முனையாளி அம்பலம், முளிச்ச குட்டி அம்பலம், மூளி குட்டி அம்பலம், மூத்தண்ண வாகனம், பெரியட வாகனம், சின்னட வாகனம் என்னும் எழுவரோடு பிறந்த 'எழுவக்கா நாச்சியா' என்பவளை மணம் செய்து கொண்டான். திருமணச் சீராகத் தங்களுடைய தங்கைக்கு அந்த ஏழு அண்ணன்மார்களும் சிறிது நிலத்தினைத் தந்தனர். பின்னர் அத்தம்பதியினர் காராள புறந்த கருத்தவனம் என்ற பெண் குழந்தையையும் பேப்பெருமாள், சின்னாண்டி என்ற இரட்டை ஆண் குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். அத்தகு சூழ்நிலையில் தன் மைத்துனர்கள் தன் மனைவிக்குச் சீதனமாக அளித்த நிலத்தினை உழுது பயிர் செய்ய மன்னவன் முதற் சோனை சென்றான். எழுவரின் மனைவியரும் அதனை மறுத்துக் கணவன்மாரைத் தூண்டிவிட்டனர். இளைய மைத்துனனால் முதற்சோனை கொலை செய்யப்பட்டான். அதனையறிந்த எழுவக்கா நாச்சியாளும் கணவனோடு உயிர் விட்டாள். காராளபுறந்த கருத்தவனத்தின் தலையில் குடும்பச் சுமை முழுவதும் விழுந்தது. அவள் தன்னுடைய உடன்பிறந்த தம்பியர் இருவரையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். தங்கள் குடும்பம் அழிவதற்குக் காரணமாயிருந்த தங்கள் மாமன் குடும்பத்தோடு சின்னாண்டி பல்வேறு சூழல்களில் போரிட்டு வென்று வந்தான். இறுதியாக நடந்த போரில் அவனும் அவனுடைய அக்காள் காராள புறந்த கருத்தவனமும் அழகர் கோவில் மலையில் கல்லாகச் சமைந்தனர். சின்னாண்டி நடத்திய இறுதிப் போரில் சிறுகுடி நாட்டு அரசர்களான எழுவரும் கட்டபொம்மன், ஊமைத்துரை ஆகியோரின் துணையுடன் சின்னாண்டியுடன் மோதியதாகத் தெரிகிறது. கதையின் இறுதிக் கட்டமாகப் பேப்பெருமாள் தன்னுடைய மாமன் குடும்பத்தை அழித்துத் தன் உடன் பிறந்தவர்களின் அருகிலேயே கல்லாகச் சமைந்ததாகக் கதைப்பாடல் காட்டுகின்றது.

கதைப்பாடல் – பிற விவரங்கள்

இந்தக் கதைப்பாடல் இராமநாதபுரம் மாவட்டம் புத்தேந்தல் எனும் ஊரைச் சேர்ந்த ஆடு, மாடு மேய்த்து வாழும் திரு. சண்முகம் என்பவரால் வாய்மொழி வழக்கில் பாடக் கேட்டுப் பதிப்பானதாகத் தெரிகிறது. இக்கதை உண்மையாக நடந்த நிகழ்வெனவும் கதையைப் பாடியவர் கருத்துத் தெரிவித்ததும் நூலில் கூறப்பட்டுள்ளது. அதற்குச் சான்றாக அழகர்மலையில் காராளபுறந்த கருத்தவனம், பேப்பெருமாள், சின்னாண்டி ஆகியோர் சமைந்த இடத்திலுள்ள கல்லிற்கு இன்றும் வழிபாடு நடப்பது சுட்டப்பட்டுள்ளது.

கதை நிகழ்ச்சியுடன் கட்டபொம்மன், ஊமைத்துரை ஆகியோர் இணைத்துப் பேசப்படுவதால் கி.பி. 18ஆம் நூற்றாண்டு முதல் இக்கதையானது முழுவடிவம் பெற்று மக்களிடையே வழங்கப்பெற்றிருத்தல் வேண்டும் எனத் தெரிகின்றது.

'மன்னவன் முதற் சோண கதை' என்பது கதைப்பாடலைப் பாடியவர் கூறிய தலைப்பு என அறிய வருகின்றது. மன்னான் சின்னாண்டியினால் இக்கதையின் பெரும்பகுதி இயங்கு வதால் தஞ்சை மாவட்டத்தின் சில இடங்களில் 'மன்னான் சின்னாண்டி கதை' என்றும் பெயர் வழங்குவதும் தெரிகின்றது. மன்னான் என்பது மன்னன் என்பதன் நீட்டிய பேச்சு வழக்கு வடிவாகலாம்.

இக்கதைப்பாடல் காட்டும் கட்டுப்பாட்டு மீறல்

இக்கதைப்பாடலின் கதைக்கருவானது அக்காலகட்டச் சமுதாயத்தில் இருந்த பெண்களின் சொத்துரிமையை மையமாகக் கொண்டுள்ளது. சமுதாயத்தில் பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லாத நிலை இருந்த போதிலும் அப் பெண்ணின் உடன்பிறந்தோர் எழுவரும் தங்கள் சொத்தில் ஒரு சிறுபங்கைத் தங்கள் தங்கைக்கு மனமுவந்து அளித்தனர். ஆனால் அதனை அந்தக் காலகட்டப்பெண் சமுதாயமே ஏற்கவில்லை என்பதை அத்தங்கையின் அண்ணிமார்களின் எதிர்ப்பு வெளிப்படுத்துகின்றது. மனைவிக்கு அளிக்கப்பட்ட சொத்துத் தகராறில் கணவன் உயிரே பலிவாங்கப்பட்டது. கணவனாகிய மன்னவன் முதற் சோனையைக் கொலை செய்வதுடன் பெண் சொத்துரிமைப் போராட்டம் நின்று விடவில்லை. அதற்கு உயிர்

கொடுக்கும் வகையில் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த காராள புறந்த கருத்தவனத்தின் மூலம் போராட்டம் தொடர்கிறது. இத்தகு சொத்துரிமைப் போராட்டத்தில் எவருக்கும் வெற்றி கிட்டாமல் இரு குடும்பங்களும் அழிந்துவிடுகின்றன. ஆக இவ்வாறாகச் சொத்துரிமைப் போராட்டம் முடிவு காணப்பெறாத ஒரு தொடர் போராட்டமாக அமைவதைக் கதைப்பாடல் தெளிவுபடுத்துகின்றது.

அண்ணன்மார்கள் தங்கள் தங்கைக்கு நிலம் எழுதி வைக்க வேண்டும் என்று திட்டம் செய்ததைக் கதைப்பாடல் கீழ்க்காணுமாறு கூறுகின்றது.

எல்லாத்துக்கும் இளையவன் சொல்லுவானே
அண்ணன்ணேன் நம்ம தங்கச்சிக்கு
ஆடுகுடுத்தா அழிஞ்சு போகும் மாடு குடுத்தா அழிஞ்சு போகும்
கனத்த பணங்காசி நகய்கள் குடுத்தா அழிஞ்சுபோகும்–நம்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன்
கோவிலுக்குத் தென்பாங்கு கூட்டப்புளி ஊரணிக்கு மேல்பாங்கு
அருகுவெத்திப் பிஞ்சையங்கே அம்பது மாகாணி குறுக்கமும்
நம்பதங்கச்சிக்கு செப்புப்பட்டயம் எழுதிக்குடுப்பமுன்னு
(ப. 23)

செப்புப் பட்டயம் எழுதிக் கொடுப்பதாகச் சொன்னது போல் எழுதியும் கொடுத்ததைக் கதைப்பாடல் காட்டுகின்றது.

வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன்
கோவிலுக்குத் தென்பாங்கு கூட்டப்புளி ஊரணிக்கு மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்சையங்கே அந்த அம்பது மாகாணி குறுக்கமும்
அப்ப செப்புப்பட்டயம் எழுதிலங்கே குடுத்தொடனே
முதச்சோன வாங்கிகிட்டு வந்திலங்கே
வெள்ளலூரு நாடு திலும்பிதான் வந்திலங்கே
அதயுந்தானும் இருப்புப் பொட்டி கீழ பூட்டிமுக வைத்துவிட்டு (ப. 24)

இவ்வாறு நில உரிமையைச் செப்புப்பட்டயத்தில் எழுதிக் கொடுத்தபின்னும் சொத்துரிமை இல்லை என மறுத்துப் பேசும் நிலை இருந்தது. முதற் சோனை தனக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தை உழுது அதில் எள்ளும் பருத்தியும் விதைத்துக் கொண்டிருப்பதைத் தண்ணீர் எடுக்க வந்த ஏழு அண்ணன் மாரின் மனைவியரும் பார்த்து அதைத் தடுக்குமாறு அண்ணன் மாரை ஏவிவிட்டனர்.

> அப்போது சொல்லுவாளே ஏழுநல்ல பேர்களும் போயி
> உங்களாலே முடியலன்னு சொல்லுங்க
> நாங்க உடுத்தும் சீலய நீங்க உடுத்தி
> நாங்க புடிக்கும் அகப்பய நீங்க புடிங்க
> நாங்கபோயி முதச்சோனய அடிச்சி விரட்டி வாறம்
> இல்லையின்னு சொன்னாக்கா அவன அடிச்சி விரட்டி
> வாங்கன்னு (ப. 28)

கணவன்மாரைத் தூண்டிவிட்டனர் என்பது கதைப்பாடல் வரிகளாகும்.

உழுது விதைக்கும் இடத்திற்கு வந்த அண்ணன்மாரின் வஞ்சகத்தை அறியாமல் வெற்றிலை போடுமாறு வேண்டிக் கொள்கிறார் முதற்சோனை.

> வெள்ளஊரு வெள்ளப்பாக்க விதம்போல அள்ளிவச்சி
> கீழுரு வெத்திலய கிழிச்சி மடிச்சிலங்கே
> மேலூரு சுண்ணாம்ப மெதுவாலே தான்தடவி (ப. 29)

அனைவரும் வெற்றிலையைத் தின்று கொண்டு இருக்கும்போது முதற் சோனையின் அருகே உட்காரச் சொல்லியும் உட்காராமல் நின்று கொண்டிருந்த இளைய மைத்துனன் முதற் சோனையின் தலையை அறுத்துக் கொன்றான்.

சொத்துரிமையை அளித்தவர்களே அவ்வுரிமையை அடைய முடியாமல் தடுத்துக் கொலை செய்தது தெரிய வருகின்றது. இந்த உரிமைப் போராட்டம் அடுத்த தலை முறையிலும் தொடர்கிறது. முதற் சோனையின் கூற்றின் வழி இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> எத்தனை காலமடா என்னுடைய தலய
> அறுக்க வேணுமுன்னு நினச்சி இருந்தியெ
> என்னுடையதல ஒருதல போயிருச்சினு கொஞ்சம்
> நெஞ்சத்திலே எண்ணாதீர்கள்

காணிக்குப் புறந்திருக்கு மாணிக்கக் கன்டுகடா
என்று மங்கே சொல்லிலங்கே முதச்சோனக்கிப் பிராணன்
அடங்கிச்சங்கே (ப. 29)

மாணிக்கக் கன்றுகள் என்று தன் மகன்களான பேப் பெருமாள், சின்னாண்டியைக் குறிப்பிட்டான் முதற்சோனை. தன் தந்தை கொலைக்குப் பழிவாங்கவும் தங்கள் தாய்க்குத் தரப்பட்ட நில உரிமையைத் திரும்பப்பெறவும் பேப்பெருமாளும் சின்னாண்டியும் மாமன்மாருடன் தொடர்ந்து போராட்டம் நடத்தினர். மாமன்மார் கயத்தாறு சென்று கட்டபொம்மன், ஊமைத்துரையிடம் படை உதவி கேட்டனர்.

அப்ப ஏழுதலமக்காரனும் புறப்பட்டானே அப்போதும்
கட்டபொம்மன் ஊமத்தொர எடத்திலே
கவுத்தாத்துக்குத் தெக்கேயங்கே
அப்போது வந்துதானும்
ஊமத்தொர எடம் வந்துதானும்
எட்டோட எட்டுநாளா காலுலயும் விழுந்துதானும்
எங்கள சின்னாண்டி தானுமங்கே
வாழவிட மாட்டேன்குறான் எங்களத் தானும்
அவன் இருக்க வேணும் இல்லையினா நாங்க இருக்க வேணும்
என்றுமங்கே சொல்லிலங்கே
இங்கே எட்டுநாளா காலுல விழுந்துமுக கிடந்திலங்கே
எட்டாவது நாளுத்தானும் கட்டபொம்மன் ஊமத்தொர
தானும்
அப்ப அவுகளுடைய பட்டாளத்த அனுப்பிச்சி வச்சிலங்கே
(ப. 75-76)

என உள்ளது. கட்டபொம்மன் படையுடன் சின்னாண்டி நேருக்கு நேர் மோதாமல் வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரனை வேண்டிக் கொண்டு தங்களுடைய வெள்ளலூரு அரண்மனை இடிந்து தகர்ந்து போகவும், தான் கல்லாகச் சமையவும் வேண்டிக் கொள்ள அவ்வாறே நடந்ததாகக் கதை அமைந்துள்ளது (ப. 77). பேப்பெருமாள் மாமன்மார் குடும்பத்தைக் கொலை செய்து பழிதீர்த்துக் கொண்டு தானும் கல்லாகச் சமைந்தார் (ப. 79).

பெண்ணுக்குச் சொத்துரிமை அளிக்கப்பட்டாலும் அதை அந்தத் தலைமுறையிலேயே அனுபவிக்கவிடாமல் உரிமை

அளித்தவர்களே தடுத்ததும், அடுத்த தலைமுறையிலும் இப்போராட்டம் தொடர்ந்ததும் இதனால் இரு குடும்பங்களுமே அழிந்ததும் இக்கதைப்பாடலில் காட்டப்பட்டுள்ளன. தன் தாய்க்கு அளிக்கப்பட்ட சொத்துரிமை பறிக்கப்பட்டதுடன் இதனால் தன் தந்தை கொலை செய்யப்பட்டதையும் சிறுவர்களான தன் தம்பிகளுக்கு எடுத்துக்கூறி மீண்டும் அச்சொத்துரிமையைப் பெறுவதற்கு அக்கா காராள புறந்த கருத்தவனம் போராடினாள் (ப. 41). பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவளாக இவள் காணப்படு கின்றாள். தான் நேரடியாகக் களத்தில் இறங்காவிட்டாலும் தன் தம்பிகளைக் கொண்டு பெண்வழிச் சொத்தை அடையப் பாடுபட்டாள். தன் முயற்சியில் தோல்வியையே அடைந்தாள் எனினும் பெண்ணுக்குச் சொத்துரிமை வேண்டும் என்ற சமூக விழிப்புணர்வு ஏற்பட இவளுடைய வரலாற்றுக்கு முக்கியப் பங்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

'காராள புறந்த கருத்தவனம்' என்ற இவளது பெயரில் உள்ள 'கருத்தவனம்" என்பது இயற்பெயராக இருத்தல் வேண்டும். 'காராள புறந்த' என்பது இயற்பெயரின் முன் வந்த அடைமொழியாகத் தெரிகின்றது. 'காராளப் பிறந்த' என்பதன் பேச்சு வழக்குச் சொல்லாக இது இருத்தல் வேண்டும். கார் ஆள்வதற்குப் பிறந்த என்பது இதன் சொற்பிரிப்பாகும். கார் என்பதற்குக் கார் நெல், பசுமை எனப் பொருள் கூறுகிறது தமிழகராதி. இவ்வாறு விளை தானியம் மற்றும் வளமையுடன் தொடர்புடைய இவளது பெயரின் முன் வரும் அடைமொழி இவள் இழந்த நிலத்தை மீட்டும் பெறப் பிறந்தவள் அல்லது போராடியவள் என்பதால் பெற்ற பெயராக இருக்கலாம். எவ்வாறோ தங்களுக்கென உரிமையாக்கப்பட்ட சொத்தைப் பெற ஒரு பெண் போராடியதை மையக் கருத்தாகக் கொண்டு இக்கதைப்பாடல் திகழ்கிறது என்பது சிறப்பாகக் குறிக்கத்தக்க தாகும்.

மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடலில் கட்டுப்பாட்டு மீறல்

இந்தக் கதைப்பாடலிலும் பெண் வழியிலான சொத்துரிமையை அடைவதில் நடக்கும் தொடர் போராட்டம் சிறப்புற எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தன் அக்காள் அழகம்மாள் வீட்டிற்குச் சென்றிருந்த மன்னான் சின்னாண்டியையும் அவன்

தாய் கருப்பாயம்மாவையும் அக்காள் அழகம்மாள் அவமானப் படுத்தி அனுப்பினாள். இதற்கு என்ன காரணம் என்பதைக் கதைப்பாடல் தெளிவாக எடுத்துக் கூறவில்லை. இருகாரணங்கள் இருக்கலாம்.

ஒன்று: மன்னான் சின்னாண்டியை இறக்குந் தறுவாயி லிருந்த அவன் தகப்பனார் அழைத்துப் 'பன்னிரண்டு சீரும் அக்கா அழகம்மாளுக்குப் பாங்குடன் தரவேண்டும்' (ப. 16) என்று கூறினார். இந்தச் சூழலிலிருந்துதான் கதை தொடங்குகிறது. ஆனால் அப்போது ஏழு வயதுச் சிறுவனாக இருந்த மன்னான் சின்னாண்டி தந்தானா? என்பது பற்றிக் கதைப்பாடலில் குறிப்பு இல்லை. ஒருவேளை தனக்கு உரிய சீரைத் (சீதனம்) தன் பெற்றவர்கள் தரவில்லை என்ற கோபம் அழகம்மாளுக்கு இருந்ததால் அவள் தன் வீடு வந்த தாய், தம்பியை அவமானப்படுத்தியிருக்கலாம்.

இரண்டாவது : தனக்குரிய சீரைப்பெற்று வர மன்னான் சின்னாண்டி தன் அக்கா, மாமா வீடு வந்ததாகக் கதை குறிப்பிடுகிறது. அது என்ன சீர் என்பது தெரியவில்லை. அது ஒருவேளை தன் தாய் வீட்டுச் சீதனமாக இருக்கக்கூடும். மன்னான் சின்னாண்டியின் மாமன்மார் அவனுடைய தாயின் உடன் பிறந்தாராகலாம். இக்கருத்தே மன்னான் சின்னாண்டி கதைப் பாடலில் காணப்படுவதால் அதனை இங்கு ஒப்பு நோக்கலாம். தாய்வீட்டுச் சீதனம் பெற வந்தவனுக்கு அதைத்தர மறுத்து இது தான் உன்சீர் என்று அவர்கள் கொடுத்ததாகக் கதைப்பாடல் கூறுவதாவது:

> மன்னாஞ் சின்னாண்டி தான்வந்து நம்ம வீட்டுல
> ஒக்காந்திருக்கான்
> அவனுடைய சீரத்தான குடுத்து விடுங்கண்டு சொல்லும்போது
> என்ன சீரண்டு தன்னுடைய பொண்டாட்டி கேக்கும்போது
> பன்னிரண்டு வருஷ காலத்துக்கு முன்னவெளஞ்ச
> பட்ட கேப்பயில ஒருபடியும் குலுக்கக் கடியில இருக்கிற
> குண்டாங் கல்லுல ஒருகல்லும் ஒட்டத் திருகையில ஒரு
> திருகையும்
> ஒட்ட ஒலமுட்டியில ஒரு ஒல முட்டியும்
> பச்ச வாழத்தண்டும் பட்டமிளகாயும் குடுத்தா
> ஒட்டத் திருகையில போட்டு ஒன்னு ரெண்டாக
> கேப்பயத் திரிச்சு கூழக்காச்சிக் குடிச்சிட்டு
> அவன் போகட்டுமம்மா போகட்டுமம்மா (ப. 22-23)

சீர் கேட்டு வந்ததால் சினமுற்று அக்கா, மாமன்மார் அவமானப் படுத்தியிருக்கலாம். எவ்வாறாயினும் உறவுக்குள் பகை மூளச் சொத்துரிமை காரணமாகிவிட்டதை அறிய முடிகின்றது.

தன்னை அவமானப்படுத்தியதற்குப் பழி வாங்கத் தன் அக்கா மகள் பிச்சையம்மாளைக் கடத்தி வந்து மணம் செய்து கொண்டான் மன்னான் சின்னாண்டி. அதை அறிந்த மாமன்மார் முதலில் சினமுற்றாலும் பின் தங்கள் மகளுக்குச் சீதனம் எனப் பன்னிரண்டு குழி செவல் நிலத்தைச் செப்புப்பட்டயத்தில் உரிமை எழுதித் தந்தனர்.

யப்பா உனக்குக் குடுக்குற சீரு செவக்காடு பன்னிரண்டு குழி
பிஞ்சக் குழிக்காடு செப்புப் பட்டாவுள பதிஞ்சிருக்கு
அந்தக்காடு உன்னுடைய பிச்சையம்மாளுக்குச் சீதனம்
அதெயும் வாங்கிக்கிட்டு உனக்குக் குடுக்குற சீரயும்
வாங்கிக்கிட்டு
நீ போ என்று சொல்லுறாங்க சொல்லுறாங்க (ப. 50)

என்பது பாடல் வரிகளாகும்.

நிலத்தை உழுது விதைத்து விட்டால் அந்தநிலம் உடைமையாளனுக்கு உரியது என்றாகிவிடும். அந்த வகையில் 'மழை பெய்து விட்டது, உழுது, விதைக்க வா' என்று மன்னான் சின்னாண்டிக்குக் கடிதம் எழுதினர் மாமன்மார்.

பன்னிரண்டு பிஞ்சக் குழிக்காடு செவக்காடு தான
மழபேஞ்சு ஈரமா இருக்கு ஏரு மாட்ட ஓட்டிக்கிட்டு
எள்ளுவெதப் பெட்டிய எடுத்து வேகமா வந்து
வெதச்சிட்டுப் போகணுமின்டு இவிங்கே
காகிதமே எழுதிட்டாங்கெ எழுதிட்டாங்கெ (ப. 52)

நிலத்தில் சாய்ந்து கிடக்கும் வன்னிமரத்தைப் புரட்டித் தள்ளினால் மட்டுமே உழவு செய்ய முடியும் என்ற நிலையில் வன்னிமரத்தைப் புரட்டும் போது வன்னிமரத்தை மன்னான் சின்னாண்டி மீது போட்டுக் கொல்லத் திட்டமிட்டனர் மாமன்மார்.

வன்னிமரத்தச் சாச்சி விட்டுருவோம் அந்த
வன்னிமரத்தப் புரட்டும்போது வலதுபக்கம் ஆறு பேரும்
எடதுபக்கம் இவனயும் நிப்பாட்டி
மரத்தப் புரட்டும்போது மரத்த இவன்மேல சாயவிட்டு
இவனத்திட்டமிட்டுக் கொண்டுபுடனு மின்னு
இவுக கூடி நல்லாப் பேசிட்டாங்க பேசிட்டாங்க (ப. 52)

தன் மகள் தாலி யறுத்தாலும் பரவாயில்லை. மருமகன் சாக வேண்டும் என்று திட்டம் தீட்டினர். தன் மகளுக்குச் சீதனம் என்று பன்னிரெண்டு குழி நிலத்தைச் செப்புப் பட்டயத்தில் பதிந்து தந்தவர்களே அவர்கள் தலைமுறையிலேயே அச் சொத்துரிமையைத் தன் மகளும், மருமகனும் அடையாமலிருக்கச் சதி செய்தனர். சொத்துரிமை தொடர்பாகப் பலமுறை போர் நடந்தது. இறுதியில் மன்னான் சின்னாண்டி வேறு வகையில் மரணமடைந்ததைக் கதை காட்டியுள்ளது. ஆயினும் அவன் பிள்ளைகள் இராமர், இலட்சுமணர் தலைமுறையிலும் போராட்டம் தொடர்ந்தது. கடைசியில் இரு குடும்பத்தாரும் சமாதானமாகிக் கொண்டதைக் கதை காட்டுகிறது.

இக்கதைப்பாடல் மூலமாகத் தேவர் சமுதாயத்தில் பெண்ணுக்குச் சொத்துரிமை இருந்தது என்பதும், ஆனால் அதை அனுபவிக்கவிடாமல் ஆண், பெண் சமுதாய எதிர்ப்பும் இருந்தது என்பதும், இதனால் குடும்ப உறவுகளுக்குள் பகையும், பூசலும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்தன என்பதும், பெண்வழிச் சொத்துரிமையை விட்டுக் கொடுக்கக்கூடாது என்பதற்காகவே இந்த இனச் சமுதாயத்தில் அக்காள் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் முறை தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டிருக்கலாம் என்பதும் தெளிவாக விளங்குகின்றன.

இந்தக் கதைப்பாடலைப் பொறுத்த அளவிலும் பெண்வழிச் சொத்துரிமைக்காகப் பாடுபடுபவன் ஆணாக இருந்தாலும் அவனை வழி நடத்துபவள் அவனுடைய அத்தை கருத்தவனம் என்பதால் இங்குப் பெண் வழியிலான கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியவளாக அத்தை கருத்தவனம் காணப்படு கின்றாள். பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லை என்ற சமுதாயக் கட்டுப்பாட்டை மீறிச் சொத்துரிமையை அடையப் பாடுபட்ட வளாகக் கருத்தவனம் திகழ்கிறாள். கதை நிகழ்ச்சிகள் தொடர்வதற்கும், மன்னான் சின்னாண்டி பலமுறை உயிர் தப்புவதற்குரிய வழிமுறைகளைக் கூறுபவளாகவும் அத்தை கருத்தவனம் அமைகிறாள். இறந்த சின்னாண்டியை உயிருடனும் கூட இவள் எழுப்பினாள்

செத்தவன் பொழைச்சா சீமை பொறுக்காது (ப. 64)

என்று சின்னாண்டி திரும்ப மரணமானான்.

ஆக இந்த வகைகளையெல்லாம் நோக்க இந்த இரு கதைப்பாடல்களும் பெண் வழிச் சொத்துரிமை மறுக்கப்பட்ட அக்காலச் சூழலைப் படம்பிடித்துக் காட்டும் சொற் சித்திரங்களாகத் திகழ்கின்றன எனக் கூறலாம். தங்களுக்கு அளிக்கப்பட்ட சொத்துரிமையை அனுபவிப்பதற்கு எத்தகு இடையூறுகளையெல்லாம் பெண்கள் தாண்டி வர நேர்ந்தது என்பதையும் இதனால் தலைமுறைகள் தாண்டித் தொடர்ந்த பகையுணர்வையும் குடும்ப உறவுச் சீர்குலைவுகளையும் நேரடியாகக் காண முடிகின்றது.

மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல், மன்னான் சின்னாண்டி கதைப்பாடல் வேறுபாடுகள்

இந்த இருகதைப் பாடல்களும் அடிப்படை நிகழ்ச்சி களிலும் பெண் சொத்துரிமைப் போராட்டம் என்ற கதைக்கரு அடிப்படையிலும் பாத்திர அமைப்பொப்புமையிலும், கதை நடந்த் கள அடிப்படையிலும், கால அடிப்படையிலும், போர் நடந்ததாகக் குறிப்பிடும் இடப்பெயர் அடிப்படையிலும்[20] ஒற்றுமையுடையனவாகக் காணப்பட்டாலும் பல வகைகளில் வேறுபாடு காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

வேறுபாடுகள்

மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்	மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்
1. வெல்லூர் நாடு	வெள்ளலூர் நாடு (பேச்சு வழக்கு மாற்றமாகலாம்)
2. இந்நாட்டரசன் பேய்க் கருப்பத்தேவன்	இந்நாட்டரசன் முதற்சோனை எனப் பாத்திரப் பெயர்மாற்றம் நிகழ்ந்துள்ளது.
3. பெயரில் தேவன் என்று பாத்திரத்தின் சாதி குறிக்கப்பெற்றுள்ளது	சாதிக் குறிப்பு காணப்பெற வில்லை

20. "சோழ வந்தான்பட்டி தொந்தி மணலிலே", ப. 68
"சோழவந்தான் பொட்டெ தொந்தி மணலிலே", ப. 69
- மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்

"தொந்தூரு மணலுக்கு நீ சண்டைக்கு வரணும்", ப. 54
"மன்னாஞ் சின்னாண்டிய தொந்தூரு மணல் மேட்டுல" ப. 55
- மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்

மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்	மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்
4. சிறுகுடி நாட்டு அரசர் பெயர்கள் இல்லை	எழுவர் பெயர்களும் குறிப்பிடப் பட்டுள்ளன (சின்னடவாகனம், பெரியடவாகனம், மூத்தண்ண வாகனம், மூளிகுட்டி அம்பலம், முளிச்ச குட்டி அம்பலம், முனையாளி அம்பலம், மூளி வீரப்பன்)
5. சிறுகுடி அரசர்கள் எழுவரின் தங்கையையே பேய்க் கருப்பத்தேவன் மணந்தான் என்ற செய்தி இல்லை	செய்தி உள்ளது
6. தங்கைக்குச் சீதனமாக நிலம் அளித்திருந்தனர் என்ற செய்தி கதை இடையில் குறிப்பாகக் கூறப்பட்டு உள்ளது (ப.45.46.50)	முதற்சோனை மனைவிக்குக் கொடுத்த சீதன நிலத்தினா லேயே கதையில் சிக்கல் உண்டாகிறது என்பது கதைத் தொடக்கத்திலேயே தெளி வாகக் குறிக்கப் பெற்றுள்ளது (ப. 26-28)
7. பேய்க் கருப்பத்தேவனுக்கு சின்னாண்டிக்கு முன்பு அழகம்மாள் என்ற மகள் இருந்ததும் அவளை அழகா புரியில் திருமணம் செய்து கொடுத்ததும் உள்ளது	முதற்சோனைக்குப் பேப்பெருமாள், சின்னாண்டி என்ற இரு ஆண் மக்களே இருந்ததாக உள்ளது. பெண் குழந்தை பற்றிய செய்தி இல்லை
8. கருத்தவனம் பேய்க் கருப்பத் தேவனின் உடன்பிறந்த அக்காவாக, மன்னான் சின்னாண்டியின் அத்தை யாகக் காட்டப்பட்டுள்ளாள்	காராளபுறந்த கருத்தவனம், பேப்பெருமாள், மன்னான் சின்னாண்டி ஆகியோர் உடன் பிறந்தாராகக் காட்டப்பட்டுள் ளனர்
9. பேப்பெருமாள் என்ற மன்னான் சின்னாண்டியுடன் பிறந்தவன் பற்றிய செய்தியே குறிப்பிடப்பெறவில்லை	பேப்பெருமாள் பாத்திரப் படைப்பு கதை முதலிலிருந்து இறுதி வரை செம்மையாகப் படைக்கப்பட்டுள்ளது

மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்	மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்
10. மன்னான் சின்னாண்டி மாமன் மகள் பிச்சை யம்மாளைக் கடத்தி மணம் செய்து கொண்டதாக உள்ளது	மாமன் மகளைக் கடத்தி வந்து அவமானப்படுத்தித் திருப்பி அனுப்பிவிட்டதாக உள்ளது
11. மாமன் மகள் பிச்சை யம்மாளை மணந்து கொண்ட மன்னான் சின்னாண்டியின் பிள்ளைகள் இராமர், இலட்சுமணர் என உள்ளது	குழந்தைகள் பற்றிய செய்தி இல்லை
12. தன் பேரன்கள் இராமர், இலட்சுமணர்களைச் சதி செய்து கொல்ல பிச்சையம் மாளின் தாய் அழகம்மாளே புறப்பட்டதாக உள்ளது	இத்தகு செய்திகள் இல்லை
13. சின்னாண்டி தன் ஈட்டி பாய்ந்து தானே இறந்ததாக உள்ளது.	அவன் கல்லாகச் சமைந்த தாகக் காட்டப்பட்டுள்ளது
14. பேய்க் கருப்பத்தேவன் இயற்கை மரணம் எய்தியதாக உள்ளது	முதற்சோனையைப் பகை யாளிகள் வெட்டிக் கொன்ற தாக உள்ளது
15. சின்னாண்டியுடன் போரிட மலையாளச் சீமையார் படை உதவி செய்ததாக உள்ளது	கட்டபொம்மன், ஊமைத் துரை படை உதவி செய்ததாக உள்ளது
16. காராம்பசு பாலில் சத்தியம் செய்து கொண்டு ஒற்றுமை யுடன் அனைவரும் வாழ்ந்த தாக முடிகிறது	இரு குடும்பங்களும் சொத்து ரிமைச் சண்டையில் அழிந்து பட்டதாக உள்ளது

ஒரே பொருண்மை பற்றிப் பாட எழுந்த இந்த இரு கதைப் பாடல்களில் காணப்படும் இத்தகு வேறுபாடுகள் காலப் போக்கிலும் கதை எழுந்த இடமாற்றத்தாலும் ஏற்பட்டிருக்கலாம். இவற்றுள் எது முந்தைய கதை வடிவம் என்பதை அறிவதில் சிக்கல் உள்ளது. இரண்டிலும் ஆங்கிலச் சொற்கள் பயின்று வந்துள்ளன. மன்னான் சின்னாண்டி கதைப்பாடலில் பீஸி (ப. 66) என்ற ஓர் ஆங்கிலச் சொல் இடம் பெற்றிருக்கிறது. மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடலில் மேஜர் (ப. 25), ரெடி (ப. 43), லைட்டு (ப. 65) என்ற ஆங்கிலச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல் மன்னான் சின்னாண்டியின் மகன்களான இராம, இலட்சுமணர் வரலாறு பற்றியும் கூறுகிறது.

மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடலில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவை:

1. சின்னாண்டித் தேவர் ஈ உருவங்கொண்டு அரண்மனையுள் நுழைந்து பிச்சையம்மாளை அழைத்துக்கொண்டு செம்பருந்தாக மாறித் தூக்கிச் செல்லுதல் (ப. 27-31)

2. அத்தை கருத்தவனம் இறந்த சின்னாண்டித் தேவரை உயிருடன் எழுப்புதல் (ப. 64)

3. மன்னான் சின்னாண்டியின் சாம்பல் மூங்கிலாக வளருதல் (ப. 67).

4. அம்மூங்கிலை வழிபட்டு வணங்கியதன் பயனாகப் பட்டிமாட்டுக்குச் செம்மாலுக் காளை பிறத்தல் (ப. 67).

5. செம்மாலுக் காளை இராம, இலட்சுமணருடன் பேசுதல் (ப. 80).

6. சிற்றெறும்பு கருத்தவனத்துடன் பேசுதல் (ப. 63-64) என்பன போன்ற நிகழ்ச்சிகள் உள்ளன.

இந்த இரு கதைப்பாடல்களுமே பாட்டுக்கும் உரைநடைக்கும் இடைப்பட்ட ஒரு வித நடையைக் கொண்டதாக உள்ளன. உரைப்பாட்டு மடை எனும் சிலப்பதிகார நடை வடிவத்தை இவை நினைவூட்டுகின்றன. மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல் வில்லிசை, மகுடாட்டம், கதாகாலட்சேபம் போன்ற நிகழ்ச்சிகளில் காணலாகும் நடையுடையதாக உள்ளது.

இசை நீட்சியுடன் கதையை எடுத்துச் சொல்லும் தொனி கவனிக்கத்தக்கதாக உள்ளது. மக்கள் மனதில் கதையைப் பதிய வைக்கும் வண்ணம் ஒவ்வொரு செயலையும் கூறுகிற பத்தி அல்லது கண்ணியின் முடிவில் வரும் சொல், மடக்காக அமைந்து கதையைக் கேட்போர் சிந்தனையில் அழுத்தம் சேர்க்கிறது.

சான்றாக,

> **எனக்கு ஆறு மாமனவுக அரமனைக்குப் போக வேணும்னு நான் வந்தேனுங்க வந்தேனுங்க** *(ப. 22)*
>
> **ஒரு மூங்கியாக மொளச்சு அந்த மூங்கியில ஒரு முக்கோணமான கம்புதான அங்க வளந்திருக்கு வளந்திருக்கு** *(ப. 67)*

இத்தகு நடையிலிருந்து வேறுபட்டதாக மன்னான் சின்னாண்டி கதைப்பாடல் உள்ளது.

இந்த இரு கதைப்பாடல்களையும் இத்தகு வகைகளில் ஒப்புநோக்க சற்று முன் பின்னாக இக்கதைப்பாடற் கால கட்டங்கள் அமைந்திருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது. அதிகமான ஆங்கிலச் சொற்கலப்பு, அதீத நிகழ்ச்சிகளின் மிகுதி மன்னான் சின்னாண்டியின் பிள்ளைகளின் வரலாறும் அமைதல், நடை வேறுபாடு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல் காலத்தால் சற்றுப் பிற்படத் தோன்றியதாகலாம். இது குறித்து மேலும் ஆய்வு செய்ய வேண்டும் எவ்வாறாயினும் இவ்விரு கதைப்பாடல்களுமே பெண் சொத்துரிமைப் போராட்டத்தை மையக் கருவாகக் கொண்டிலங்குகின்றன. இதே சொத்துரிமைப் போராட்டத்தை மையமாகக் கொண்ட அழகுத் தேவர் கதைப்பாடலை இனிக் காணலாம்.

அழகுத்தேவர் கதைப்பாடல் பதிப்பு விவரங்கள்

இக்கதைப்பாடலின் பதிப்பாசிரியர் ச. முருகானந்தம் ஆவார். தேன் மழைப் பதிப்பக வெளியீடாக 1991இல் வெளியாகி யுள்ளது. முன்னுரை, கதைச் சுருக்கம், மூலம் என்ற மூன்று பகுதிகளாக நூல் அமைந்துள்ளது. இக்கதைப்பாடல் முத்தம்மாள் என்ற 40 வயது விவசாயக் கூலித் தொழிலாளியால் பாடப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. தொழிற்

சிரமத்தை மறக்கவும் சுற்றிலும் தொழில் செய்வோர் வேண்டுகோளுக்கு ஏற்பவும் இக்கதைப்பாடல் பாடப்படுவது வழக்கம் எனத் தெரிகின்றது. சமூகக் கதைப்பாடல் வகையினதான இக்கதைப் பாடல் மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல் போன்று மதுரை மாவட்டம், திண்டுக்கல்லுக்கு அண்மையிலுள்ள மல்லையபுரம் (செம்பட்டி அஞ்சல்) என்ற ஊரில் சேகரிக்கப்பட்டதாகும். நடையைப் பொறுத்த அளவில் முன்னர்க் கண்ட மன்னான் சின்னாண்டி கதைப்பாடல், மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல் ஆகிய இரு கதைப் பாடல்களின் நடையை ஒத்ததாகவே காணப்படுகின்றது. மன்னர்கள் தம்பெயரை ஊருக்கு வைக்கும் வழக்கத்தால், கதையில் சல்லிக்கட்டு நடக்கும் ஊராக 'விக்கிரம மங்கலம்' என்ற ஊர்ப் பெயர் இடம்பெறுவதை வைத்து, விக்கிரம பாண்டியனின் காலமான, கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்கு முன் இக்கதைப்பாடல் தோன்றியிருக்க வாய்ப்பில்லை எனப்பதிப்பாசிரியர் மேல் எல்லை வகுத்துள்ளார். கீழ் எல்லை ஆய்வுக்குரியது எனவும் குறித்துள்ளார்.

அழகுத்தேவர் கதைப்பாடல் – கதைச் சுருக்கம்

கதைப்பாடல் வழி அமையும் கதைச் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

தன் ஏழு அண்ணன்மார்களுடன் ஏற்பட்ட பகைமை காரணமாகத் தன்மகன் அழகு கைப்பிள்ளையாக இருந்த பொழுதே தூக்கிக் கொண்டு ஊரை விட்டு வெளியேறியவள் கருப்பாயி. மகன் அழகு வளர்ந்து இளைஞனானபோது, தன் மாமன்மார் ஊர் சென்று மாமன் மகளைப் பெண் கேட்க வருமாறு தன் தாயை அழைத்தான். தாய் வர மறுக்கவே, அழகு தானே தன் மாமன்மார் ஊர் சென்று பெண் கேட்டான். தங்கள் உடன் பிறந்தாள் வந்து கேட்டால் பெண் தருவதாக மாமன்மார் கூறினர். மாமன்மார் அறியாமல் மூத்த மாமன் மகள் கருத்தவனத்தைச் சிறையெடுத்து வந்து மணம் செய்து கொண்டான் அழகு. சின்ன வெள்ளை, பெரியவெள்ளை என்ற ஆண் மக்களும் பிறந்தனர். இதன் பின்னர் மகள், மருகனை விருந்துக்கழைத்தனர் மாமன்மார். விருந்துண்டு முடிந்ததும் 'விருந்துக்கு அழைக்கவில்லை; சம்பராயத்துக்கு (போட்டி) அழைத்தோம்' என மாமன்மார் மூன்று போட்டிகளைக் கூறினார்கள்.

ஒன்று : பன்னிரண்டு குழி நிலத்தில் இடுப்புயரத்துக்கு இரும்புச் சோளம் அறுத்துவிடப்பட்டுள்ளது. அதில் கட்டை குத்தாமல் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு ஓடி வரவேண்டும்.

இரண்டாவது : ஆனை கட்டினாலும் அசையாத கல் தூணை ஒரு கையால் பிடுங்கித் தலையைச் சுத்தி எறிய வேண்டும்.

மூன்றாவது : வீட்டில் வளர்க்கப்பட்டு வரும் ஏழு சல்லிக்கட்டு காளைகளை அணைய வேண்டும் என்பதாகும். முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்ற அழகு ஏழு சல்லிக்கட்டுக் காளைகளின் பெயரைச் சொன்னால் எழுதிக் கொண்டு போவேன் என்று கூற, மாமன்மார் பெயர் சொல்ல எழுதி முடித்த அழகு ஊருக்குக் கிளம்பினான். விருந்துக்கு வந்து மூணு நாள், ஆறு பொழுதாகிவிட்டது. ஆத்தா கருப்பாயி அம்பாரக் கல்லு மேலே இருந்து அன்னந் தண்ணீர் அருந்தாமல் வழிமேல் விழி வைத்துக் காத்துக் கிடப்பாள் என்று பலவாறு எடுத்துச் சொல்லியும், மூன்றாவது போட்டியையும் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று மாமன்மார் மாமியார் வழிமறித்தனர். மனைவி கருத்தவனத்தை அழைத்துக் கொண்டு மீறி ஊர் வந்து சேர்ந்தான் அழகு. உடன் மாமன்மார் சாம்பான் ஒருவனிடம் அழகுக்குக் கடிதம் கொடுத்தனுப்பினார்கள். அதிலிருந்த செய்தியாவது : 'வரும் வெள்ளிக்கிழமை விக்கிரமங்கலம் சல்லியக்கட்டுக்கு ஏழு மணிக்குள் வந்து சேரவேண்டும். வராவிட்டால் தலையை மொட்டையடித்து மஞ்சள் குளிப்பாட்டி, சேலையை உடுத்தி ஊர் மந்தையில் நிறுத்துவோம்' என்பதாகும். கடிதம் கண்ட அழகு தன் உயிரைப் போக்க நடக்கும் சதி இது என்பதை உணர்ந்தவனாய்த் தீய சகுனங்களைப் பொருட்படுத்தாமல் சாம்பானுடன் விக்கிரமங்கலம் அடைந்தான். மாடணைவதில் உடன் இருக்கும் சாம்பான் 'உன் மீது பாயும் மாடு என்மீது பாய்ந்து உயிர் போனால் என் பெண்டாட்டி, பிள்ளைகளை யார் பார்ப்பது' எனக் கேட்க, அழகு, 'என்னுடைய நஞ்சையில் பாதி, புஞ்சையில் பாதி, ஐந்து விரல் மோதிரத்தில் ஒரு சோடி, கட்டியிருக்கிற வேட்டியில் ஒரு சோடி, கல்யாணத்துண்டில் ஒரு சோடி தருவேன்' என்று கூற மாடணையும் பணி தொடங்கியது. ஒவ்வொரு காளையையும் அணைந்து கொண்டு போய் ஆவாரங் காட்டுக்குள் கண்ட துண்டமாய் வெட்டிக் குவித்தனர். ஐந்தாம் காளையை அணைந்து போகும்பொழுது அழகுவின் கால் மிஞ்சி கழன்று ஓடியது. தடை நோக்காமல் ஆறாவது காளையையும் அணைந்து ஆவாரங்

காட்டுக்குள் நறுக்கிக் குவித்து வந்தனர். அதைக் கண்ட மாமன்மார் ஏழாவது காளைக்கு ஏழுபெட்டி சாராயத்தை ஊற்றி வெறி ஏற்றி வைத்தனர். அந்தக் காளையை அணைந்து செல்லும் பொழுது மாடு முட்டி அழகுவின் வயிற்றுக் குடல் வெளிவந்தது. சாம்பான் அறியாமல் குடலை உள்ளே தள்ளி மேல் துண்டினால் வயிற்றைக் கட்டிக் கொண்டு அந்தக் காளையையும் வெட்டிக் குவித்தனர். ஊர் திரும்பும் பொழுது, வயிற்றின் இரத்தப் பெருக்கு கண்ட சாம்பான் அலறினான். வீடு சென்றடைந்த அழகு சாம்பானுக்கு வாக்களித்தபடி அனைத்தையும் தருமாறு தன் தாயிடம் தெரிவித்து, தன் தாய், மனைவி, குழந்தைகளைச் சாம்பான் வசம் ஒப்படைத்து உயிர்விட்டான். மனைவி கருத்தவனம் உடன் கட்டை ஏறினாள். சாம்பானும் கருப்பாயியும் ஆற்றில் அங்கங் கரைத்து இருவரையும் தெய்வமாக வணங்கி வந்தனர்.

ஒரே கதையின் மாற்று வடிவங்கள்

மன்னான் சின்னாண்டி கதைப்பாடல் மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல், அழகுத் தேவர் கதைப்பாடல் என்ற மூன்றையும் ஆழ்ந்து படித்துப் பார்த்த அளவில் இந்த மூன்று கதைப்பாடல்களுமே ஒரே கதையின் மாற்று வடிவங்கள் தான் என்பது உறுதிப்படுகின்றது. நாட்டார் இலக்கியத்தின் முக்கிய இலக்கணமான மாற்று வடிவத் தன்மை இக்கதைப் பாடல்களில் அமைந்துள்ளது. மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப் பாடலையும், அழகுத் தேவர் கதைப்பாடலையும் பதிப்பித்த ச. முருகானந்தம் அவர்கள் அழகுத் தேவர் கதைப்பாடல் பதிப்பில் இந்த ஐயத்தை எழுப்பியுள்ளார். அவர் குறிப்பிடும் கருத்துகளாவன:

"மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடலுக்கும் அழகுத்தேவர் கதைப்பாடலுக்கும் தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் தட்டுகிறது. ஏதோ ஓர் இழை இவ்விரு கதைப் பாடல்களையும் பிணைப்பது போலத் தோன்றுகிறது. இவ்விரு கதைகளும் ஒரே குடும்பத்தின் கதைகளாக இருக்கலாமோ எனும் ஐயம் எழுகிறது. இவை தேவர் சமுதாயத்தைப் பற்றிய கதைப் பாடல்கள் என்பது மட்டுமல்லாமல் கருத்த வனம் எனும் பாத்திர ஒருமையும் கருதத்தக்கதாக உள்ளது".[21]

21. பதிப்பாசிரியர் ச. முருகானந்தம், அழகுத் தேவர் கதைப்பாடல், ப. 5 - 6.

என்ற பதிப்பாசிரியரின் கருத்து முற்றிலும் சரியானதென அறியலாம். மேற்கூறிய இரு கதைகளும் ஒரே குடும்பக் கதைதான் என்பதற்குக் கீழ்க்காணும் சான்றுகளையும் தரலாம்.

1. நடை ஒற்றுமை
2. மன்னான் சின்னாண்டி, அழகுத் தேவருக்கு இரு ஆண் மக்கள் இருந்தனர் என அமைவது.
3. காளை மாட்டின் பங்கு
4. தாய்-சகோதரர் இடையே தீராப்பகை இருத்தல்
5. மாமன் மகளைக் கடத்தி வந்து மணம் செய்தல்.
6. மாமன்மார் மருமகனைக் கொல்ல, பல வழிகளை மேற்கொள்ளுதல்.
7. மருமகனை மாமனார் பழி வாங்குதல்
8. மாமன்மாரைச் சந்திக்கத் தாயை உடன் வருமாறு அழைத்தல்
9. தாயை அழைத்து வந்தால் பெண் தருவோம் என மாமன்மார் கூறுதல்

என்ற இது போன்றவற்றை எடுத்துக்காட்டலாம்.

கதைக்கரு மறைப்பு

மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல் போன்று சொத்துத்தகராறே கதைக்கரு என்பது அழகுத்தேவர் கதைப்பாடலில் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. அது சொத்துரிமையாக இருக்கலாம் என்ற ஐயத்தைப் பதிப்பாசிரியரும் எழுப்பியுள்ளார்.

"உரிமையுள்ள உறவாயினும் மாமன்மார் தீராத பகை கொள்வதற்குக் காரணம் என்ன என்பது முக்கியமான கேள்வியாகும். அழகுத் தேவர் கதையில் கெட்டிக்கார அழகுவின் தாய் கருப்பாயிக்கும் ஏழு சகோதரர்களுக்கும் இடையே முன்னர் ஏற்பட்ட பகை ஒரு காரணமாக அமைகிறது. தங்கள் சகோதரியாகிய கருப்பாயி வந்து பெண் கேட்டால் தருவதாகக் கூறும் மாமன்மார், அவ்வாறு தமது சகோதரி வந்து பெண் கேட்காமையால் கெட்டிக்கார அழகுக்குப் பெண் தர மறுத்து

விடுகின்றனர். கெட்டிக்கார அழகு யாரும் அறியாமல் கருத்தவனத்தை அழைத்துக் கொண்டு போகிறான். குடும்பக் கௌரவம் அழிந்துபட்ட காரணத்தால் மாமன்மாரின் சினம் அதிகமாகிப் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சகோதரன் சகோதரிகளுக்கிடையிலான உறவுச் சிக்கல்களுக்குக் காரணம் சொத்துரிமையாக இருக்கலாமோ எனும் சந்தேகம் எழுகிறது"[22] எனக் குறிப்பிட்டுள்ளார் பதிப்பாசிரியர்.

கைக்குழந்தையாக அழகுத்தேவர் இருந்த பொழுதே அவ்வூரை விட்டு, தாய் கருப்பாயி வெளியேறியதற்குக் காரணம் சொத்துத் தகராறாகவே இருக்க வேண்டும் என்பதற்கு இந்தக் கதையுடன் கதை ஒப்புமை உடைய மன்னன் சின்னாண்டி கதைப் பாடல் மற்றும் மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்களின் கதைக் கருக்களாகச் சொத்துரிமை அமைந்துள்ளதையும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

அத்துடன் மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடலில் வரும் பன்னிரண்டு குழி நிலம் தங்கள் சகோதரிக்கு அளித்தனர் என்பது அழகுத் தேவர் கதைப்பாடலில் வரும் பன்னிரண்டு குழி நிலத்தில் இரும்புச் சோளம் இடுப்புயரத்துக்கு அறுத்து விடப்பட்டுள்ளதில் அழகுத் தேவர் இரு கைகளையும் பின்னால் கட்டிக் கொண்டு ஓடி வரவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது ஒப்பு நோக்கற்குரியதாக உள்ளது. இந்தப் பன்னிரண்டு குழி நிலம் என்பது பெண் வழிச் சீராக வந்த சொத்து என்பது புலப்படுகின்றது. சொத்தையும் கொடுத்துவிட்டு 'மழை பெய்துள்ளது. அதில் விதைத்துப் பயிரிடவா' என்றழைத்துவிட்டு வன்னிமரத்தைச் சாய்த்துக் கொல்வதையும், வெட்டிக் கொல்வதையும் மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. எனவே இந்த மூன்று கதைப்பாடல்களிலும் பெண்வழிச் சொத்துரிமைத் தகராறே கதைக்கரு என்பது தெளிவாகப் புலனாகின்றது. பிற இருகதைப் பாடல்களில் இக்கதைக்கரு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்க அழகுத் தேவர் கதைப்பாடலில் இக்கதைக்கரு சொல்லப்படாமல் மறைக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்பது ஆராயத்தக்கது.

பல கதைப்பாடல்களில் கதைக் கருக்களை மாற்றும் மறைக்கும் முயற்சி நடைபெற்றுள்ளது. சான்றாகச் சில கதைப்பாடல்களை எடுத்துக்காட்டலாம்.

---

22. பதிப்பாசிரியர் ச. முருகானந்தம், அழகுத் தேவர் கதைப்பாடல், ப. 4 - 5.

காத்தவராயன், முத்துப்பட்டன் கதைப்பாடல்கள் சாதி விட்டுச் சாதி காதல் கொள்ளுதலைக் கதைக் கருவாகக் கொண்டவை. இக்கரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. காத்தவராயன் பறையர் சாதியைச் சேர்ந்தவன். அவனை விரும்பிய ஆரியமாலை அந்தணர் குலத்தவள். இவர்கள் இருவருக்குள்ளும் சாதி மீறிக் காதல் மலர்ந்ததையும் அதில் விளைந்த சிக்கலையும் அந்தச் சாதி மீறிய காதலால் விளைந்த முடிவையும் விளக்க வந்ததே காத்தவராயன் கதை. இந்தக் கதைக்கருவை அடியோடு மாற்றும் வண்ணம் காத்தவராயனின் பிறப்பு உயர்நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

1. காத்தவராயன் மாரியம்மனின் மகன்[23]
2. காத்தவராயன் கைலாய நந்தவனக் காவலாளி[24]
3. காத்தவராயன் பார்ப்பனப் பெண்ணுக்குப் பிறந்தவன்[25] - உயர்குலமாக்குதல். மணம் செய்த பெண் குலமாக்குதல்)
4. காத்தவராயன் முற்பிறவியில் ஆரியமாலையின் மகன்[26] - ஒரே குலமாக்கும் முயற்சி.

இவ்வாறு காத்தவராயனின் சாதியை உயர் சாதியாக்கியும், தெய்வ நிலைக்குக் கொண்டு சென்றும் கீழ்ச்சாதியான் ஒருவன் உயர்சாதிப் பெண்ணை மணம்புரிந்ததால் விளைந்த சிக்கலை எடுத்துரைக்க வந்த கதைக்கரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று முத்துப்பட்டன் கதையிலும் அந்தணனான முத்துப்பட்டன் சக்கிலியர் சாதிப் பெண்களை மணந்தான் என்ற சாதி விட்டுச் சாதி காதல் கொண்டதால் விளைந்த சிக்கல்களை எடுத்துரைக்க வந்த கதைக்கரு மாற்றம் செய்யப்பட்டு, சக்கிலியப் பெண்கள் அந்தணப் பெண் ஒருத்திக்குப் பிறந்தவர்கள் என அமைக்கப்பட்டுள்ளது.[27]

---

23. சா. சவரிமுத்து, கருத்துப் புலப்பாட்டில் கதைப்பாடல்கள், பிஎச்டி ஆய்வேடு, ப. 351.
24. த. வாசுதேவன், காத்தவராயன் கதைகள் - ஓர் ஒப்பாய்வு, எம்.பில். ஆய்வேடு, ப. 20.
25. மேற்படி.
26. கருத்துப் புலப்பாட்டில் கதைப்பாடல்கள், ப. 350.
27. ஆராய்ச்சி (இதழ்), ஆசிரியர் நா. வானமாமலை, தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவு, (கட்டுரை), ப. 137-138.

சின்னத்தம்பி கதையிலும் வீர, தீரத்தில் சிறந்த சக்கிலியனான சின்னத்தம்பி தன் வீரம், திறமையால் காவல் தளபதி பதவிக்கு வந்ததால் ஏற்கெனவே காவல் பொறுப்பில் இருந்த தேவமார் இனத்தாரின் பகைமைக்கு ஆளாகி, புதையலுக்கு நரபலி என்ற பெயரில் ஒழித்துக் கட்டப்பட்டான் என்றுள்ளது அடியோடு மறைக்கப்பட்டு நரபலிக்காக அப்பாவி இளைஞனான சின்னத்தம்பி பயன்படுத்திக் கொள்ளப்பட்டான் என்ற முறையில் கதை இயம்பியுள்ள கதைப்பிரதிகளும் காணப்படுகின்றன.[28]

இத்தகு கதைகள் போன்றே அழகுத் தேவர் கதைப் பாடலிலும் பெண்ணின் சொத்துரிமைப் போராட்டம் என்பதே கதைக்கருவாக அமைந்திருத்தல் வேண்டும். இது வெளிப்படையாகக் கூறப்படாமல் 'முன்பகை' என்று மட்டும் சொல்லி ஏன் முன்பகை ஏற்பட்டது என்ற காரணம் சொல்லாமல் விடப்பட்டுள்ளது. இந்தக் கதைப்பாடலைப் படிப்பவர்கள் பெரியவர்கள் சம்மதமின்றிப் பெண்ணைக் கடத்தி வந்து மணம் செய்து கொண்டதால் அழகுத்தேவர் தன் மாமன்மார்களால் பழி வாங்கப்பட்டார் என்று கருதும் வண்ணமாகக் கதைப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. மறவர் சாதியைப் பொறுத்த அளவில் மாமன் பெண்ணை மணத்தல் என்பது முழு உரிமை படைத்த ஒரு செயலே ஆகும்.

"அண்ணன் பெண்டாட்டி அரைப்பெண்டாட்டி" என்பது போல "மாமன் பெண் மனைவி" என்பது மறவர் சாதி வழக்கமாகும்.

கொண்ட பெண்ணை விட்டாலும்
குறித்த பெண்ணை விடுவதில்லை
மற்ற பெண்களை விட்டாலும்
மாமன் மகளை விடுவதில்லை[29]

என்பதே மறவர் சாதிப் பண்பாடாக இருந்தது. அதாவது தனக்கே உரியவளாகக் கொண்ட மனைவியை விட்டாலும் தனக்கு

---

28. சுவடி எண். 11613 - சின்னத்தம்பி கதை, கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசை நூலகச் சுவடி, வெளிவராதது.

29. பதிப்பாசிரியர் சு. நிர்மலாதேவி, தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை, வரி: 264 - 265.

மனைவியாகும் முறைப் பெண்ணை விடுவதில்லை என்ற இந்தக் கருத்து குறிப்பிட்ட சமூகத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தது. தன்மாமன் மகளை மணம் செய்து கொள்ள வேண்டும்; முறைப் பெண்ணை விட்டுவிடக் கூடாது என்பதற்காகவே சாதித் தொழிலான களவு செய்யக் கிளம்பிய வன்னியராயனை வன்னியராயன் கதை காட்டுகின்றது.

எனவே இந்த அழகுத்தேவர் கதைப்பாடலிலும் மாமன் பெண்ணைக் கடத்தி வந்து மணம் செய்துகொண்டதால், அதிலும் இரு ஆண்மக்களுக்கு அழகுத்தேவர் தகப்பனாக ஆனபின் பழி வாங்க மாமன்மார் புறப்பட்டனர் என்பதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. அழகுத் தேவரின் தாய் கருப்பாயிக்குக் கிடைக்க வேண்டிய பெண்ணுரிமைச் சொத்தான நிலம் கொடுக்கப்படாததனால்தான் தாய் கருப்பாயி தன் சகோதர்களுடனான உறவை முறித்துக் கொண்டு வந்துவிட்டாள்; இதுவே சகோதர, சகோதரிக்கிடையிலான முன் பகையாக இருத்தல் வேண்டும் என்பது உய்த்துணர்வதாக உள்ளது. இந்தப்பகை ஒழியத் தம் சகோதரி வந்து பெண் கேட்டால் தருவதாக அழகுத் தேவரிடம் மாமன்மார் கூறுகின்றனர். ஆனால் தாய் கருப்பாயிக்கோ தனக்கு வஞ்சகம் செய்த சகோதரர்களுடன் சமரசம் செய்து கொள்வதில் சிறிதும் விருப்பமில்லை. அத்துடன் மன்னான் சின்னாண்டி கதைப்பாடல் குறிப்பிடுமாறு தன் பங்குக்குரிய நிலத்தில் உழுது விதைக்கச் சென்ற தன் கணவனை வெட்டிக் கொன்றவர்களுடன் முறைப் பெண்ணைப் பெண் கேட்பதற்காகச் சென்று உறவு வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லை என்று அழகுத் தேவரின் தாய் கருதியிருத்தல் கூடும்.

ஆக அழகுத் தேவர் குறிப்பிடும் முன்பகை பெண்வழிச் சொத்துத் தகராறாகவே இருத்தல் கூடும். இந்த வகையில் பெண்ணுக்குச் சொத்துத் தந்தவர்களே அதற்கு எதிர்ப்பாக இருந்ததும், அடுத்த தலைமுறையில் பிறந்த அப்பெண்ணின் மகனை உயிர்ப்பலி வாங்கினர் என்பதும் தெரியவருகின்றன.

பெண்ணுக்குச் சொத்துரிமை தராததால் விளைந்த சிக்கலைக் கருவாகக் கொண்ட இக்கதைப்பாடலின் கதைக்கரு சொல்லாமல் விடப்பட்டுள்ளதால் முந்தையவற்றை விடக் காலத்தால் பிற்பட்ட கதைப்பாடலாக இது ஆகலாம்.

மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்களிலிருந்து அழகுத் தேவர் கதைப்பாடல் பல நிலைகளில் வேறுபாடு காட்டுகின்றது. அவை:

1. கதைத் தலைவன் பெயர், கதைத் தலைவனின் தாய் பெயர், மனைவி பெயர், பிள்ளைகளின் பெயர் எனப் பாத்திரப் பெயர்கள் மாறுபட்டுள்ளன.

2. முன்பகை எனக் கூறப்பெற்றுள்ளது. அது பெண்வழிச் சொத்துரிமைத் தகராறு எனச் சொல்லப்படவில்லை.

3. மாமன்மார் தங்கள் மருமகன் அழகுத்தேவருக்குப் பல போட்டிகள் வைத்து அவற்றில் அவன் வென்றதாகக் காட்டப்பட்டுள்ளது.

4. வென்றபின்னும் மற்றுமொரு போட்டி வைத்து அதில் கலந்து கொள்ளக் கட்டாயப்படுத்துதல் காட்டப்பட்டுள்ளது. ஆக அவனுடைய உயிர் பலியாகும் வரை போட்டி தொடர்தல் காட்டப்பட்டுள்ளது. "மகள் தாலியறுத்தாலும் பரவாயில்லை; மருமகன் சாக வேண்டும்" என்ற நிலையில், நடந்த நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பல நிலைகளில் வேறுபாடு காட்டி நாட்டார் இலக்கியமான கதைப்பாடல்கள் மாற்று வடிவங்கள் கொண்டவை என்பதற்குச் சான்றாக இக்கதைப்பாடல் திகழ்கின்றது.

மன்னான் சின்னாண்டி கதைப்பாடல்கள் போன்றே பெண் வழிச் சொத்துரிமையை அடைவதில் தலைமுறைகள் தாண்டியும் தோல்வியையே சந்தித்தனர் என்பது இக்கதைப் பாடல் வழி தெரிய வந்தாலும் பெண்வழிச் சொத்துரிமையை அடையத் தலைமுறைகள் தாண்டியும் போராட்டங்கள் நிகழ்ந்தன என்பதை இக்கதைப் பாடல் வெளிப்படுத்துகின்றது. ஆக இந்நிலையில் பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லை என்ற கட்டுப்பாட்டை மீறிய கதைப்பாடல் வரிசையில் இக்கதைப் பாடலும் இணைந்து சிறக்கிறது எனலாம்.

பிற வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்

இதுவரை பார்த்த,

1. காதல் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்
2. தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்
3. வர்க்கப் போராட்டங்கள் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்
4. பெண்ணிய வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்

என்ற நான்கு பிரிவிற்குள்ளும் அடங்காத சில கட்டுப்பாட்டு மீறல்களைப் பிற வழியிலான கட்டுப்பாட்டு மீறல்களுக்குள் அடக்கலாம். இவற்றுள் 6 வகையான கட்டுப்பாட்டு மீறல்கள் உள்ளன. அவை:

1. சமுதாய மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்
2. தலைமுறை மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்
3. மணமறுப்புச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்
4. காவல் தொழில் புரிவோரிடையேயான கட்டுப்பாட்டு மீறல்
5. வெளியூர்க்காரன் செல்வாக்குக்கு எதிரான போராட்டத்தில் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்
6. ஆளும் வர்க்க அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்

முதற்கண் சமுதாய மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறலை இனிக் காணலாம்.

1. சமுதாய மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்

காலந்தோறும் சமுதாயத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருப்பதை வரலாறு உறுதிப்படுத்துகின்றது. மானுட வர்க்கம் பெருகிய பொழுது அது பல இனக் குழுக்களாகப் பிரிந்தது. இருப்பிடம், உணவு, பிற தேவைகள் பொருட்டு இனக் குழுக்களிடையே மோதல்கள் நிகழ்ந்தன. வென்ற இனக்குழு தோற்ற இனக்குழுவை இருப்பிடத்தை விட்டுத் துரத்தியது; அல்லது தன் வயமாக்கிக் கொண்டது; அல்லது சமாதானம் செய்து கொண்டது. இந்நிகழ்வுகள் காலந்தோறும் நடந்தேறியுள்ளன. காடுகளை இருப்பிடமாகக் கொண்ட வேடுவர் குலச் சமுதாயத்திற்கும் காடுகொன்று நாடாக்கிய வேளாண் குலச் சமுதாயத்திற்கும் நிகழ்ந்த மோதலை அடிப்படையாகக் கொண்ட அண்ணன்மார் சுவாமி கதை சமுதாய மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறலுடைய கதைப்பாடலுக்குத் தக்க சான்றாகத் திகழ்கின்றது. காடுகளில் இயல்பாக விளையும் காய், கனிகளை உண்டும், விலங்கு; பறவைகளை வேட்டையாடியும் வாழ்ந்த வேடர்குலச் சமுதாயம் காட்டைத் தன் ஆளுகைக்குட்பட்டதாகக் கருதி வந்தது. காட்டை அழித்து, வேளாண் தொழிலுக்கு ஏற்றதாக அதை மாற்றிப் பயிர்த் தொழில் செய்ய விரும்பிய நாடு வாழ் மக்கள் கூட்டம் இயல்பாகவே காட்டாளிகளான வேடுவர் மக்களுக்குப் பகைவர்களாக ஆயினர். ஆயின் காலப்போக்கில் காடுகொன்று நாடாக்குதல் என்பது மனிதன் நாகரிகம் அடைய அடையத் தவிர்க்க முடியாததாக ஆனது. வேடர் சமுதாயம் வேளாண் சமுதாயமாக மாற்றமுறுதல் காலத்தின் கட்டாயமாக ஆனது. இத்தகு சமுதாய மாற்றம் நிகழும் பொழுது கட்டுப்பாட்டு மீறல்கள் ஏற்பட்டுள்ளன. அவரவர் அவரவர்களுக்கென்று இருந்த எல்லைகளை மீறிச் செயல்பட்டுள்ளனர். இதனால் போர்களும் நிகழ்ந்துள்ளன. சில சமயம் வேடர் சமுதாயமும் சில சமயம் வேளாண் சமுதாயமும் தோல்வியைத் தழுவியுள்ளன. ஆனால் ஒரு சமுதாயத்தை இன்னொரு சமுதாயம் விஞ்சும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றே வந்துள்ளன. இத்தகு பின்புலத்தில் இனி அண்ணன்மார் சுவாமி கதையை ஆராயலாம்.

அண்ணன்மார் சுவாமி கதை - பதிப்பு விவரம்

பாடல் வடிவிலுள்ள இக்கதை ஏட்டுச் சுவடியிலிருந்து சக்திக்கனல் என்பவரால் 1971இல் கோயம்புத்தூர் வெற்றிவேல் பதிப்பகத்தால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. உடுக்கடித்து இன்றும் மக்கள் மத்தியில் பாடப்பட்டு வரும் இக்கதைப் பாடலின் பல்வேறு வடிவங்களும் பதிப்பாகி வெளிவந்துள்ளன. பதிப்பு விவரங்களுக்குச் சமூகக் கதைப்பாடல் அகரவரிசைப் பட்டியலைக் காண்க.

'பிச்சன்' என்னும் புலவர் இந்த அண்ணன்மார் சுவாமி கதையைப் பாடியுள்ளதாகத் தெரிகின்றது. இதே கதையை விளக்கும் பொன்னழகர் என்னும் கள்ளழகர் அம்மானை என்ற நாடோடி இலக்கியத்தின் வரிகளில் பெரும்பாலானவை இதில் கையாளப்பட்டுள்ளதால் பிச்சன் பாடிய இந்நூலுக்குக் கள்ளழகர் அம்மானை முதல் நூலாகலாம் எனக் கருத்துக் கூறப்படுகின்றது.[1] இக்கதைப் பாடல் கொங்கு வேளாள இன மக்களால் செவி வழியாகப் பாடப்பட்டு ஏட்டில் ஏறியுள்ளது எனத் தெரிகின்றது.

அண்ணன்மார் சுவாமி கதைச் சுருக்கம்

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் குழப்பமும் கொந்தளிப்பும் நிலவின. வடக்கே ஒய்சளர் பயமுறுத்தல், தெற்கே பாண்டியர் பகைமை, மேற்கே சேரர் படையெடுப்பு, கிழக்கே குறுநில மன்னர் தொல்லை என்ற இவற்றால் அமைதி இழந்திருந்த கொங்கு நாட்டில் 'தடி எடுத்தவன் தண்டல்காரன், கோல் எடுத்தவன் கொண்டல்காரன்' என்ற நிலை நிலவியது. அத்துடன் இடங்கை, வலங்கைச் சாதி வேறுபாடுகள், சோழர்குடி - பாண்டியர்குடி என்ற விரோதங்களும் இருந்தன. சோழராட்சி நிலவிய அக்காலத்தில் சோழர் குடியைப் பாண்டியர் குடி என்ற வேட்டுவர் பகைத்து வந்தனர். ஒருவர் வீட்டு நாயும், பூனையும் மற்றவர் வீட்டு நாய், பூனையுடன் சண்டை போடும் நிலை இருந்தது. இத்தகு பூசல்களிடையே ஆன்மீக வாழ்வு மலரவும், மற வீர மாண்பு வளரவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்று நடந்தேறியது.

---

1. அண்ணன்மார் சுவாமிகதை, ப. 36.

அது:

கருவூர் அருகே வாங்கல் பக்கம் சோழர் பிரதிநிதியாய்க் குன்றுடையான் என்பவன் ஆட்சி நடத்தி வந்தான். அவன் மனைவி தாமரை நாச்சியார். அவர்களுக்கு நெடுங்காலம் பிள்ளைப்பேறு வாய்க்கவில்லை. போகாத கோயிலில்லை; ஆடாத தீர்த்தமில்லை. தரை மெழுகித் தவங்கிடந்த தாமரையாளுக்குத் திருவருட்பயனாய் இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. பங்காளிகளின் சூழ்ச்சியால் அவை பிறந்ததுமே காணாமல் போயின. காணாமற்போன பிள்ளைகள் சிவயோகி ஒருவரின் ஆதரவில் பொன்னர், சங்கர் என்ற பெயர்களுடன் மறைவில் வளர்ந்து வந்தார்கள். அவர்களுக்கு அருக்காணி என்ற ஒரு தங்கையும் பிறந்திருந்தாள்.

சோழனிடம் கோள் மூட்டிக் குன்றுடையானை அவனுடைய பங்காளி நாடு கடத்தினான். குன்றுடையானும் பாண்டி நாடு சென்று, காடு திருத்திக் கழனி ஆக்கிச் சொத்துச் சேர்த்துச் சொந்த ஊர் மீண்டான். வாங்கலுக்கு அருகே திருக்காம்புலியூரிலே குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து வந்தான். அது கண்ட பங்காளி அவனுக்கு மேன்மேலும் தொல்லை கொடுத்து வந்தான். ஆபத்தான வேளை ஒன்றில் எதிர்பாராதபடி கட்டிளங்காளையரான பொன்னர், சங்கர் பெற்றோரிடம் வந்து சேர்ந்தனர். ஞான வீரனும் மானவீரனுமாக அவர்கள் சோழனிடம் சென்று, தங்கள் வல்லமையை மெய்ப் பித்துக் காட்டி, வாங்கல் உள்ளடங்கிய திருக்காம்புலியூரின் ஆட்சியுரிமையை அடைந்தார்கள். குன்றுடையானின் தலைமையிலே அது சிற்றரசாக மலர்ந்தது.

பதவியிழந்த பங்காளி கொங்கு மேனாட்டு வேடுதளமாகிய தலையூரிலிருந்த வேட்டுவக் காளியிடம் சென்றான். தன்னைப் புறக்கணித்த சோழவேந்தனைத் தலையூர்க் காளியும் பகைத்து வந்தான். பல சதித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவற்றில் எல்லாம் பொன்னர், சங்கர் வெற்றி கண்டனர். தான் பேசி விளையாட வீரமலைக்காட்டில் கிளி, மயில், புறா பிடித்துத் தருமாறு தங்கை அருக்காணி அண்ணன்மாரை வேண்டினாள். அவள் வேண்டுகோளை நிறைவேற்ற அண்ணன் சங்கர் வீரமலைக் காட்டிற்குப் புறப்பட்டார். கிளி, மயில், புறா பிடித்துவரும்போது அறுபதடி வேங்கை ஒன்று சங்கரைத் தாக்க வந்தது. வாளால் இரு

துண்டுகளாக வேங்கையை வெட்டி வீழ்த்தினார் சங்கர். அதனால் வினை விளைந்தது.

ஏனெனில் மேனாட்டு வேடுபடைத் தலைவன் தலையூர்க் காளியின் எல்லையிலுள்ள காட்டில் வளர்ந்த வேங்கை அது. தனது எல்லையில் சங்கர் வேங்கையை வெட்டியதையும் கிளி, மயில், புறா பிடித்துச் சென்றதையும் அறிந்த தலையூர்க் காளி கொதித்தெழுந்தான். அண்ணன்மார் புகழ் அவன் நெஞ்சில் தீயாக எரிந்தது. அண்ணன்மாரை அழித்தாலன்றித் தனது புகழ் பரவாதென எண்ணினான். படையைக் கூட்டினான். வேங்கையைக் கொன்று, தங்கை அருக்காணிக்குப் பஞ்சவர்ணக் கிளியைப் பரிசாகக் கொண்டு சென்றதால் அருக்காணியை அந்தக் கிளியுடன் சிறையெடுத்து வருமாறு படை வீரர்களை ஏவினான். நள்ளிரவில் கன்னிமாடம் புகுந்த வீரர்கள் உறங்கிக் கொண்டிருந்தவளைக் கட்டிலோடும், கிளியைக் கூண்டோடும் எடுத்து, எதிர்த்த தாமரையாளையும் கொன்றுவிட்டு வெளியேறினார்கள். தலையூரிலே போய்ப் பார்த்தபோது கட்டிலிலே உறங்கிக் கிடப்பது அருக்காணி அல்ல; அவள் தோழி குப்பாயி என்பது தெரிய வந்தது.

தலையூர்க் காளிக்குப் பெருத்த ஏமாற்றம். சீற்றங் கொண்ட தலையூர்க்காளி அத்தோழியை அம்மனுக்குப் பலியிட முற்பட்டான். தங்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் வாழும் மக்கள் எவருக்கும் எந்தவிதத் துன்பமும் நேராமல் காக்க வேண்டிய பொறுப்பின் காரணமாகப் பொன்னர் தன் தம்பி சங்கரை அனுப்பி, வேடுபடையைத் துரத்தியடித்துக் குப்பாயியைச் சிறை மீட்கப் பணித்தார். சிறை மீட்ட சங்கர் தலையூர்க் காளியைச் சிறையிட்டுச் சென்றார். தோல்விக்குமேல் தோல்வியால் வெகுண்ட தலையூர்க்காளி வெள்ளாங்குழி ஏரிக்கரையில் பொன்னரைக் கொல்லச் சதி செய்தான். தகுந்த சமயத்தில் சங்கர் தோன்றிப் பொன்னரைக் காப்பாற்றினார். தலையூர்க்காளி, தன் படைகளைத் திரட்டிப் புலியூர் விளை புலங்களிலே வளர்ப்புப் பன்றிகளை ஏவிப் பயிர் பச்சைகளை நாசம் செய்தான். அறிந்த சங்கர் பன்றிகளைக் கொன்று வேட்டுவப் படைகளை விரட்டிச் சென்றார். வீரமலைக் காட்டில் நடந்த போரில் பல நூறுபேர் பலியாயினர். தலையூர்க் காளி தோற்றோடினான். தாகத்தால் சங்கர் தவிப்பது கண்டு அவருடைய சக்கிலியத் தோழன் வீரபாகு தண்ணீர் கொண்டு வரச்சென்றான். அந்தச் சமயத்தில் புறங்காட்டி ஓடிய தலையூர்க்

காளி வன்னி மரத்தடியிலே மறைந்து நின்று சங்கர் முதுகிலே குறி பார்த்து அம்பு எய்தான். அம்புபட்ட சங்கர் துள்ளித் துடித்து வீழ்ந்தான்.

தம்பியைத் தொடர்ந்து அங்கே வந்த பொன்னர் தன் தம்பியின் நிலை கண்டு வாள் ஓச்சி தலையூர்க் காளியை வெட்டி வீழ்த்தினார். முதுகிலே புண்பட்டதால் தன்னுடைய வீரம் மாசுபட்டது என்று சங்கர் வடக்கிருந்து உயிர் துறந்தார். தம்பியைப் பிரிந்து வாழ மனம் இன்றி, பொன்னரும் தன் மார்பிலே வாள் பாய்ச்சி, தம்பியின் வலதுபால் வீரமண்டியிட்டு யோகத்திருக்க, அவர் உயிர் பிரிந்தது. தண்ணீர் கொணர்ந்த வீரபாகு அதுகண்டு பதறிப் பதைத்து ஓடோடிப் போய் அருக்காணியிடம் கூறித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டான்.

அண்ணன்மார் பிரிவாற்றாது, பேதுற்று, படுகளம் நோக்கிப் புறப்பட்ட தங்கை அருக்காணி, கன்னியாகிய பெரியகாண்டி அம்மனின் துணைகொண்டு, படுகளத்திலே அண்ணரைத் தேடினாள். வீர மண்டியிட்டு யோக நிலையில் மடிந்திருந்த அண்ணரைக் கண்டு, கதறிப்புலம்பி வீர கண்டியுடன் மலையேறி மறைந்தாள்.

கதைப்பாடற் காலம்

அண்ணன்மார் சுவாமி கதையின் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டாகலாம் என்பது அறிஞர்கள் கருத்தாகும். கி.பி. 1470ஆம் ஆண்டு வாக்கில் உறையூரைத் தலைநகரமாகக் கொண்டு 'அக்கள தேவ சோழ மகாராஜா' என்ற பெயருடைய சோழர் ஒருவர் ஆண்டு வந்ததாகப் புதுக்கோட்டை மாவட்டம் கோனாட்டிலுள்ள வெள்ளனூர்க் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இதே சோழ மன்னர் உறையூரை ஆண்டதைத் திருவானைக்கா (திருச்சி மாவட்டம்) கல்வெட்டு ஒன்றும் உறுதி செய்கின்றது.

இம்மன்னனது ஆட்சிக் காலத்தில் கோனாடு முழுவதும் இவனது ஆளுகையின் கீழ் இருந்துவந்தது. ஆயினும் இவன் விசயநகர அரசன் சதாசிவ மகாராயனுக்கு அடங்கியவனாக ஆண்டு வந்திருக்கிறான் எனத் தெரிகின்றது. இவனுக்கும் கோனாட்டிற்கும் உள்ள தொடர்பைக் காணும்போது கோனாட்டின் ஒரு பகுதிக்குப் பொன்னரும் சங்கரும் சோழனுடைய பிரதிநிதியாகச் சிலகாலம் ஆண்டமை இச்சோழக்

குறுநில மன்னனுடைய காலத்திலே ஆதல் வேண்டும் என்று தெரிகிறது. இக் காலத்திலேயே கொங்குநாடு சரியான அரசாளுவோர் இன்றி அல்லலுற்றுக் கிடந்தது. 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற நிலை நிலவியது. எனவே இச்சோழர் குலச் சிற்றரசன் காலத்திலேயே அண்ணன்மார் சுவாமி கதைத் தலைவர்களான பொன்னரும், சங்கரும் உயிரோடு வாழ்ந்து இருக்கிறார்கள் என்று கொள்வதே பொருத்தமானதாகும். எனவே பொன்னர் - சங்கரின் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி என உறுதியாகக் கூறலாம். மேலும் அண்ணன்மார் சுவாமி கதையில்,

> பதினெட்டு நாட்டுக்கும் தலையூர்க்காளி
> பாங்காகச் சீட்டெழுதி (ப. 265)

என்ற வரி வருகின்றது. சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள கையெழுத்துச் சுவடிச் சாசனம் ஒன்றும் கொங்கின் மணலூர் நாட்டில் வேட்டுவர் 18 பங்காளிகளாகப் பங்கு போட்டுக் கொண்டனர் என்ற செய்தியைத் தெரிவிக்கின்றது. இவ்வாறு பங்கு போட்டுக் கொண்ட காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டின் இடைக்காலமாகும். இவ்வாறு 18 பங்காகப் போட்டுத் தமது தலைமையின் கீழ் உள்ள நாட்டை வேட்டுவர் ஆண்டு வந்தமையால்தான் தலையூர்க்காளி பதினெட்டு நாட்டுத் தலைவர்களையும் வரவழைத்துக் கலந்தாலோசனை செய்த செய்தி அண்ணன்மார் சுவாமி கதையில் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே இத்தகு சான்றுகளைக் கொண்டு கணிக்க அண்ணன்மார் சுவாமி கதையின் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டெனக் கூறலாம்.

எனவே கி.பி. 15ஆம் நூற்றாண்டு வாக்கில் வேடர்களுக்கும் வேளாளர்களுக்கும் இனப் போராட்டம் நடந்துள்ளது என்பதும் இது சமுதாய மாற்றம் காரணமாக நடந்த ஒரு முக்கிய நிகழ்வு என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கதாக உள்ளது.

அண்ணன்மார் சுவாமிகதையில் சமுதாய மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்கள்

வேளாளர் குலச் சமுதாயத்தில் வந்த பொன்னர், சங்கர், வேடர் குலச் சமுதாயத் தலைவனான தலையூர்க்காளி என்பவனின் எல்லைக்குள் புகுந்து வீரமலைக் காட்டுவாழ்

பறவை, விலங்குகளைப் பற்றிக் கொண்டும், கொன்று கொண்டும் வந்ததால் கதையில் சிக்கல் தோன்றுகின்றது. சமுதாய எல்லைகள் எவ்வகையிலானும் மீறப்படும் பொழுது அந்தக் கட்டுப்பாட்டு மீறல் போராட்டக் களத்தைத் தோற்றுவிக்கும் காரணமாக ஆகி விடுகின்றது.

குன்றுடையானுக்குப் பல தொல்லைகள் தந்த பங்காளிகள் குன்றுடையானின் பிள்ளைகளான பொன்னர், சங்கர் தலையெடுத்ததன் பின் அடங்கிக் காணப்பட்டனர். தங்களுக்கு மேலும் வலிமை சேர்க்க அப்பங்காளிகள் வேடுவர் குலத் தலையூர்க்காளியின் துணையை நாடினர். ஆனால் தலையூர்க் காளிக்குப் பொன்னர் சங்கருடன் மோத எக்காரணமும் இல்லாமலிருந்தது. தங்கையின் வேண்டுகோளின்படி சங்கர் வேடர் சமுதாய எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து புறா, கிளி பிடித்து வந்ததுடன் தலையூர்க் காளிக்கு உரிமையான அறுபதடி வேங்கைப்புலியை இரு துண்டுகளாக்கிக் கொன்றுவிட்டு வந்ததால் தலையூர்க்காளிக்குத் தன் எதிராளியிடம் மோத, தக்க காரணம் கிடைத்தது. சங்கர் காட்டெல்லைக்குள் புகுந்து காட்டிலுள்ள பறவை, விலங்குகளைப் பிடித்தல் வேடர்கள் மீதான வேளாளரின் ஆதிக்க மனப்பான்மையை வெளிப்படுத்து வதாக அமைந்துள்ளது. வேடர்கள் வேளாளரின் இச்செயலைத் தங்களின் எல்லை உரிமைக்கேற்பட்ட பங்கமாகவே கருதினர். போரில் குதித்தனர். தங்கள் எல்லை புகுந்து பறவை பிடித்ததும் விலங்கு கொன்றதும் தங்கள் வேடுவர் குலத்துக்கு ஏற்பட்ட ஒரு பங்கமாகக் கருதியே தலையூர்க்காளி வேடுவர் இனத்தவர் வாழும் பதினெட்டு நாட்டுத் தலைவர்களையும் கூட்டி ஆலோசித்தான்; செயல்பட்டான். சங்கரின் தங்கை அருக்காணி என்று கருதி அவள் தோழியைத் தலையூர்க் காளி கடத்தியதும் அதை அவமானமாகக் கருதிய அத்தோழி தற்கொலை செய்து கொள்வதும் போர் மேலும் தீவிரமாகக் காரணமாகின்றன.

வேளாளர் குலத்தினும் வேடுவர் குலம் தாழ்வானது என்ற சமுதாய ஏற்றத்தாழ்வு சுட்டும் எண்ணம் கதைப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு,

> **வெள்ளாளர் சிறையெடுக்க வெகுசமர்த்தனா**
> **வேட்டுவன்தான்** (ப. 200)

வெள்ளாளர் பெண்ணையுமே வேட்டுவன்சிறை
செய்கிறதா (ப. 200)

வெள்ளாள பெண்ணை வேட்டுவன் சிறை
செய்கிறதா (ப. 201)

என்றுள்ள சங்கர் பேசும் வரிகளைச் சான்றாக்கலாம்.

தங்கள் எல்லையில் கிளி, புறா, மயில் பிடித்து வேங்கை, கவரிமானைக் கொன்றும் சென்றதால் விளைந்த பகையால் வேடர்கள் வேளாளர் தேசத்துக்குள் புகுந்து ஊரைக் கொள்ளை யிட்டுப் பருவப்பெண்ணைக் கடத்திச் சென்றதுடன் அதில் தோல்வி கண்டபின் அடுத்த நிலையில் பயிர்களை அழிக்கக் காட்டுப் பன்றிகளை ஏவினர். அதில் தோற்றும் போர் தொடர்கிறது. இறுதியில் வேளாளர் குலப் பொன்னர் - சங்கர் மரணமுற்றதோடு கதை முடிவு பெற்றாலும் இதனால் வேடர் குலம் தழைத்து வேளாளர்குலம் ஒழிந்தது என்றுள்ள சூழலைக் கதை காட்டவில்லை. வேடரின் வெற்றி தற்காலிகமானதாகவே உள்ளது. வேளாளர் சமுதாயம் தங்கள் சமுதாயத்தின் ஆதிக்கப் போக்கை வேடர்குலச் சமுதாயத்தின் மீது செலுத்த முயன்ற ஒரு வரலாற்றுப் பதிவாக இக்கதைப் பாடலை அடையாளம் காண முடிகின்றது. காலப்போக்கில் நிகழும் சமுதாய மாற்றமும் அதனால் விளையும் சில கட்டுப்பாட்டு மீறல்களும் கடக்க முடியாத படி நிகழ்ந்தே தீரக் கூடியவை என்பதை உறுதிப் படுத்தும் உன்னதப் படைப்பு இக்கதைப்பாடல் எனலாம்.

நாட்டாட்சி செய்பவர்கள் காட்டில் வேட்டையாடப் போதல் என்பது தொன்று தொட்டு வந்த ஒரு மரபாகக் காணப்படுகின்றது. வனவிலங்குகள் பெருகி நாட்டுப் பகுதிக்குள் புகுந்து பயிர் பச்சைகளுக்கும், மக்கள் உயிர்களுக்கும் அழிவு ஏற்படுத்தி விடக்கூடாது என்ற எண்ணம் இத்தகு வேட்டைப் புறப்பாடுகளுக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. அத்துடன் வேட்டையாடுதல் என்பது ஆட்சியாளர்களின் ஒரு வீர விளையாட்டாகவும், அவர்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாகவும் திகழ்ந்து வந்திருக்கிறது. அந்த வகையில் சோழர்களின் கீழ் குறுநில மன்னர்களாக ஆட்சி செய்து வந்த பொன்னர் - சங்கர் கொங்கின் மேனாடு என்று கூறப்படும் வீரமலைக் காட்டுப் பகுதியில் வேட்டை மேற்கொள்ள விரும்பியதைக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது.

அத்தைமக்கள் மூவருமே அன்பாக வந்தார்கள்
எல்லோருங் கூடி இருக்குமந்த வேளையிலே
அண்ண ரிருவரும் அன்புடனே ஏதுசொல்வார்
வேட்டைக்குப் போய்வருவோம் வீரியனே என்று சொன்னார்
(ப. 175)

என்றுள்ள வரிகள் காணத்தக்கன.

மன்னர்கள் மலைவேட்டையாடச் செல்லும் பொழுது மலைவாழ் மக்கள் தங்களுக்குடைமையான காடும், காட்டுடைப் பொருட்களும், காட்டுவாழ் உயிரினங்களும் கொள்ளை போவதைத் தடுக்க முயன்றிருக்கின்றனர். இக்கதைப்பாடலைப் பொறுத்த அளவில் மலைவாழ்வேடுவர்களுக்கும் பொன்னர் - சங்கருக்கும் அவரவர் உரிமையை நிலைநாட்ட முயலல் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. வேட்டையாடுதல் ஆட்சியாளர் உரிமையாகவும் வேட்டையாடுதலைத் தடுத்துத் தங்கள் இடம், பொருள், உயிரினம் காத்தல் மலைவாழ் மக்களின் உரிமை யாகவும் இருத்தல் சிக்கல் தோன்ற முதற்படியாக அமைந்துள்ளது. கதையில் இவர்களுக்குள் முன்விரோதம் இருந்ததும் சுட்டப் பட்டுள்ளது. இதுவும் சிக்கல் பலமாக ஆவதற்குக் காரணமாகி யுள்ளது எனலாம். பங்காளிகளுக்குப் பயந்து வாழ்ந்த பொழுது வேடுவர் குலத்தலைவனிடம் பணத்தைக் கொடுத்து வைத்த தாகவும் அவன் தங்களை ஏமாற்றி விட்டதாகவும் தாய் தாமரை தன் புதல்வர்கள் பொன்னர் சங்கரிடம் புலம்புதல் கதைப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது,

பங்காளிக்குப் பயந்து பாங்காக நாங்களுந்தான்
மேனாடு கொடியரசு வேட்டுவ ராஜனிடம்
பணத்தைக் கொண்டுபோய் அடைக்கலம் வைத்தேனான்
– அவன்
பணத்தை எடுத்துக்கொண்டு பாதகம் செய்துவிட்டான்
(ப. 178)

என்ற வரிகள் காணத்தக்கன.

பொன்னருக்கு வேட்டுவ அரசன் வரிகட்ட மறுத்ததும் மோதலுக்குக் காரணம் எனச் சுட்டப் பட்டுள்ளது. அக்குறிப்பு கீழ்க்காணுமாறு அமைந்துள்ளது.

'வரகு உண்ணாத பெருங்குடி வேளாள கவுண்டர்' மரபில் பிறந்தவர் குன்றுடையாக் கவுண்டர். இவருடைய குமாரர்கள்

பொன்னர், சங்கர். இவர்கள் கரூர் வட்டத்தில் உள்ள புலியூர்ப் பகுதியை ஆண்ட சிற்றரசர்கள். பொன்னர் உறையூர்ச் சோழனுக்குக் கப்பம் செலுத்தி ஆட்சி செய்து வந்தார். அப்பொழுது கொங்கு நாட்டின் 24 பிரிவுகளில் ஒன்றான வாளவந்திப் பகுதியில் வரி வசூலித்துக் கொள்ளப் பொன்னருக்கு உறையூர்ச் சோழன் அனுமதி வழங்கியிருந்தான். பாண்டியனது பிரதிநிதியாக வாளவந்திப் பகுதியை வேட்டுவக் கவுண்டர் இனத்தைச் சேர்ந்தவர் ஆண்டு வந்தார். அவர் பொன்னருக்கு வரி கொடுக்க மறுக்கவே இருதரப்பினருக்கும் "வீரமலை" என்ற இடத்தில் கடும்போர் நிகழ்ந்தது.[2]

மேற்கண்ட வரலாற்றுச் செய்தி முன்பகை இருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. ஆக முன்பகை, ஆதிக்க மனப்பான்மை ஆகியவற்றின் காரணமாக நாட்டுவாழ் மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் இடையே நிகழ்ந்த போர்ப் பதிவாக இக்கதைப் பாடல் திகழ்கிறது. இனப்போராட்டம் எல்லாக் காலங்களிலும் பலநிலைகளிலும் ஏற்பட்டே வந்துள்ளது. ஏற்றத் தாழ்வு மிக்க சமுதாய மாற்றத்தில் இத்தகு நிகழ்வுகள் தவிர்க்க முடியாதவையாகிக் கட்டுப்பாட்டு மீறல்களாகப் பரிணமித்துள்ளன என்பது தெளிவாக விளங்குகின்றது.

இக்கதை நிகழ்வுகள் உண்மையாக நடந்தவை என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. "கதை நிகழ்ச்சிகள் நடந்ததாகச் சொல்லப்படும் சங்கர வலைப்பட்டி இன்று ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கின்றது. அவ்வூர் கரூருக்கும் மாயனூருக்கும் இடையில் உள்ள மணவாசி என்ற இரயில்வே நிலையத்துக்கும் அருகில் இருக்கிறது. மணவாசியிலிருந்து மாயனூர் போகும் பாதையில் கொஞ்ச தூரம் சென்று, பின் தெற்குப்புறமாக ஒரு மைல் தூரம் நடந்து சென்றால் சங்கர மலைப்பட்டியை அடையலாம். அங்குள்ள குன்றின் பெயர் சங்கர மலையாகும். அந்த மலையின் வடபுறமாகக் குண்டுப் பாறையொன்று உள்ளது. அதன் அடித்தளம் குகை போன்று உள்ளது. அங்குச் சமணப் படுக்கைகள் உள்ளன. அதனை அவ்வூர் மக்கள் பொன்னர் படுத்திருந்த இடம் என்று சுட்டுகிறார்கள்.[3]

"சங்கர் மலையிலிருந்து காட்டில் சிறிது தூரம் நடந்து சென்றால் ஒரு பெரிய பாறை காணப்படுகின்றது. அதனைச்

2. அண்ணன்மார் சுவாமிகதை, ப. 48

3. மேற்படி, ப. 49

'சக்கரப்பந்தல் பாறை' என அழைக்கிறார்கள். அந்தப் பாறையில் சுமார் 200 பேர் அமரும்படியான வட்ட அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அந்த வட்டத்தைச் சுற்றிப் பதினாறு குழிகளைத் தோண்டி வைத்துள்ளனர். இந்தக் குழிகளில் கால்களை நிறுத்தி வட்டமான பந்தல் போடுவார்களாம். பன்றியொன்று வயலில் மேய்ந்ததைத் தொடர்ந்து இருபிரிவினருக்குள் அக்காலத்தில் போர் மூண்டதாகவும், சங்கர் அப்பன்றியைக் கொன்று, அப்பாறையில் வைத்துக் கூறு போட்டு, போரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் அப்பகுதி மக்களுக்குப் பகிர்ந்து அளித்ததாகவும் சொல்லப்படுகின்றது"[4] எனவே உண்மையாக நடந்த நிகழ்வை அடியொற்றிப் பாடப்பட்டுள்ள இக்கதைப்பாடல் வேட்டைச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம் என்ற இருவேறு சமுதாயத்தாருக்குள் எல்லை மீறிப்புகுந்ததால் ஏற்பட்ட போர், பூசல்களைக் காவிய நயத்துடன் விளக்குகின்றமை தெளிவாகின்றது.

---

4. அண்ணன்மார் சுவாமிகதை, ப. 50

2. தலைமுறை மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்கள்

தலைமுறை இடைவெளி என்பது தவிர்க்க முடியாத தொரு சமூகச் சிக்கல் என்பதை வரலாறும், இலக்கியமும் சான்றுகளாய் நின்று வெளிப்படுத்தி வந்துள்ளன. தலைமுறை இடைவெளிச் சிக்கலைத் தற்கால இலக்கிய ஆசிரியர்கள் நாவல், சிறுகதை, நாடகம், கவிதைகள் மூலம் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டி வருகின்றனர். 'தலைமுறைகள்' என்றே நீல. பத்மநாபன் அவர்கள் மிகச் சிறந்த நாவல் படைப்பிலக்கியத்தை உருவாக்கி அளித்துள்ளார். பொன்னீலன் அவர்களின் 'புதிய தரிசனங்கள்' (மூன்று பாகங்கள்) நாவலும் தலைமுறை மாற்றங்களை விரிவாக எடுத்துக்காட்டுகின்றது. தலைமுறை தோறும் எண்ணங்களும் கருத்துகளும் அவற்றின் வெளிப்பாட்டு முறைகளும், பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் பிற சமூக நடைமுறைகளும் மாறுபட்டு வருவதால் ஒரு தலைமுறைக்கும் மற்றொரு தலைமுறைக்கும் எவ்விதம் இடைவெளி நேர்கிறது என்பதை இத்தகு படைப்புகள் சிறப்புற வெளிக் காட்டியுள்ளன. இதன்மூலம் இத்தகு தலைமுறை மாற்றமும் அதனால் விளையும் சிக்கலும் அதன் காரணமாகத் தோன்றும் கட்டுப்பாட்டு மீறலும் தவிர்க்க முடியாதவையாகி வருகின்றன என்பது தெளிவாகத் தெரிகின்றது.

தலைமுறை மாற்றத்தையும் அதனால் விளைந்த சிக்கலையும், கட்டுப்பாட்டு மீறல்களையும், நாட்டுப்புற இலக்கியமான கதைப்பாடல்களும் பதிவு செய்து தந்துள்ளன. இதற்குத்தக்க சான்றுகளாக அமைபவை:

1. சின்னண்ணன் – சின்னத்தம்பி கதை

2. வன்னியடி மறவன் கதை

3. மருதநாயகம் பிள்ளை கதை

என்ற கதைப்பாடல்களாகும்.

சின்னண்ணன் – சின்னத்தம்பி கதை : வெளியான விவரம்

இக்கதை சின்னண்ணன் - சின்னச்சாமி கதை, பெரியண்ணன் - சின்னண்ணன் கதை என்றும் அழைக்கப் படுகின்றது. இக்கதை பற்றிய குறிப்புகளும் கட்டுரைகளும்

இதழ்களிலும் நூல்களிலும் வெளியாகியுள்ளன.[5] முழுமையான கதைப்பாடலை இதுவரையும் யாரும் பதிப்பித்து வெளி யிட்டுள்ளதாகத் தகவல் இல்லை. ஆயின் தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு என்ற நூலில் (ப.237-242) இக்கதைப் பாடலின் சுருங்கிய வடிவம் போன்ற ஒன்றும், கதை குறித்த விளக்கங்களும் காணப் படுகின்றன.

ஆய்வுக்கோவை (தொகுதி I - 1994)யிலும் ஆய்வுக் கட்டுரை ஒன்று இது தொடர்பாகக் காணப்படுகின்றது.

சின்னண்ணன்-சின்னத்தம்பி கதைச் சுருக்கம்

தருமபுரி மாவட்டத்தில் வழங்கப்படும் கதைப்பாடலான இதன் பல்வேறு வடிவங்கள் மதுரை, சேலம், கோவை மாவட்டத்திலும் வழங்கி வருவதாகத் தெரிகின்றது. தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை வட்டாரத்தில் சுருங்கிய வடிவில் இக்கதைப்பாடல் வழங்கி வருகின்றது. அதனை அடிப்படை யாகக் கொண்ட கதைச் சுருக்கமாவது:

அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி இம்மூவர்தாம் கதைப்பாடலில் முக்கியக் கதைப்பாத்திரங்கள். கால்நடை வளர்ப்பையும் விவசாயத்தையும் தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டுக் குடும்பத்தில் அண்ணனுக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் இருந்தது. வேட்டையாடுதல் அண்ணன் தம்பியரின் பொழுது போக்காகும். தருமபுரி மாவட்டத்தில் மலையோரக் கிராமப் புறங்களில் வாழும் மக்கள் மான், நரி, காட்டுப்பன்றி ஆகியவற்றை வேட்டையாடுவது வழக்கம். தொலைவான காட்டுப்பகுதியிலிருந்து திரும்பி வந்த தம்பியிடம் மான் வேட்டைக்குச் செல்ல வீட்டில் சென்று அம்புகளை எடுத்து வருமாறு அண்ணன் கூறினான். அவன் அம்புகளை எடுத்து வருவதற்குத் தாமதமாகிவிட்டது. வீட்டில் அண்ணனுடைய மனைவி இருந்தாள். இது அண்ணன் மனதில் ஐயப்பாட்டை வளர்த்து விட்டது. ஆகவே மானைக் கொல்லும் சாக்கில் தம்பியின் மீது அம்பெய்து கொன்றான். வீட்டில் மனைவியிடம் வந்து, மான் மீது எய்த அம்பு தம்பியின் மீது தவறிப்பட்டு அவன் இறந்துவிட்டதாகக் கூறினான். அதைக் கேட்ட அவனுடைய மனைவி காட்டில் சென்று ஆடுமேய்ப்பவர்களின்

---

5. சமூகக் கதைப்பாடல்கள் அகரவரிசைப் பட்டியல் காண்க.

உதவியுடன் தேடிக் கொழுந்தனின் உடலைக் கண்டுபிடித்தாள். கட்டைகளை அடுக்கி அதன் மீது அவன் உடலைக் கிடத்தி நெருப்பிட்டு, நெருப்பு மூண்டெரியும் போது தானும் அந்நெருப்பில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொண்டாள்.

கதைப்பாடலின் அமைப்பு

கவிக் கூற்று ஏதும் இல்லாத உரையாடல்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வருமாறு இக் கதைப்பாடல் உள்ளது. அமெரிக்கக் கதைப்பாடல்களில் காணப்படும் அமைப்பு போன்றதொரு அமைப்பு இக்கதைப்பாடலில் உள்ளது. சரியாகப் பின்பற்றப்படாவிட்டால் கதையே விளங்காமல் போகக் கூடிய நிலையும் ஏற்படக்கூடும். சுமார் 70 வரிகளில் இக்கதைப்பாடல் அமைந்துள்ளது.

கதையின் மாற்று வடிவங்கள்

இக்கதைப்பாடலின் பிற்கால வளர்ச்சி என்று கருதத்தக்க மாற்று வடிவங்களும் கிடைத்துள்ளன. அரூர் வட்டார நாட்டுப்பாடல் கலைஞர் சடையப்பன் அவர்களாலும், டாக்டர் தெய்வம் அவர்களாலும் சேகரிக்கப்பட்டு, பேராசிரியர் வானமாமலை அவர்களிடம் இருந்த கையெழுத்துப் பிரதி யொன்றில் இக்கதைப்பாடலின் மாற்று வடிவம் காணப்பட்டது. முந்தைய கதைப்பாடல் வடிவம் வேட்டைச் சமுதாய நிலையிலிருந்த ஒரு குடும்ப உறவைப் படம்பிடித்துக் காட்டி யிருக்க, இக்கதைப்பாடலின் மாற்று வடிவம் வேட்டைச் சமுதாயம் மாறி நிலவுடைமைச் சமுதாயமாக வளர்ச்சி பெற்ற ஒரு நிலையில் அக்குடும்ப உறவின் நிலையை மாறுபட்ட கோணத்தில் சித்திரிப்பதாகக் காணப்பட்டது.

கதையின் மாற்று வடிவமாவது:

> ஆடு மேய்த்துவிட்டு உணவு உட்கொள்ள வீட்டுக்கு வந்த தம்பியிடம் அண்ணன் மனைவி தவறாக நடந்துகொள்ள முயற்சித்தாள். அண்ணியைத் தாயாகக் கருதிய தம்பி அவள் விருப்பத்திற்கிணங்க மறுத்தான். நடந்த செய்தியை அண்ணனிடம் தம்பி சொல்லி விடுவானோ என்றஞ்சிய அண்ணி முந்திக் கொண்டு தன் கணவனிடம் செய்தியை மாற்றிச் சொன்னாள். தம்பியின் தவறான நடத்தைக்குப் பழி

வாங்க எண்ணிய அண்ணன் மான் வேட்டைக்குத் தம்பியை அழைத்துச் சென்று மானைக் கொல்லும் சாக்கில் தம்பியைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டான்.

இக்கதையில் காணலாகும் தலைமுறை மாற்றச் சிக்கல்

தருமபுரி மாவட்டத்தில் பாலுறவு முறைகளில் சில நெகிழ்ச்சியான போக்குகள் காணப்படுகின்றன. தருமபுரி, கோவை மாவட்டங்களில் மருமகளுக்கும் மாமனாருக்கும் உள்ள பாலுறவுகளைப் பற்றி மானிடவியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதன் எச்சங்களை இன்றும் காணலாம். இது ஒரு குறிப்பிட்ட சாராரிடையே மட்டும் காணப்படுகின்றது. இதைப் போலவே தருமபுரி மாவட்டம் அரூர் வட்டாரப் பகுதிகளில் ஒரு பிரிவினரிடையே அண்ணன் மனைவிக்கும் தம்பியர்களுக்கும் இடையில் பாலுறவுகள் சென்ற தலைமுறை வரை அனுமதிக்கப்பட்டன. இன்றும் அதன் எச்சங்களைக் காணலாம். பண்பாட்டு மானிட இயல் ஆய்வாளர்கள் அண்ணன் மனைவிக்கும் தம்பியர்களுக்கும் இடையேயுள்ள பாலுறவுகளை ஆராய்ந்து கூறியுள்ளனர். ஆனால் ஒரு குடும்பத்தில் இத்தகைய உரிமை தம்பிகளுக்கு மட்டுமே அண்ணன் மனைவி மீது உண்டு. தம்பிகளின் மனைவியர் மீது அண்ணனுக்கு இத்தகைய உரிமை கிடையாது. கூட்டுக் குடும்ப முறை அமைப்பிற்கு இத்தகைய உறவு முறை மிகவும் அடிப்படையானது என்ற நம்பிக்கை இன்றும் நிலவி வருகிறது. சமூக மாறுதல்களின் காரணமாகக் கூட்டுக் குடும்பங்கள் உடைந்து, தனிக் குடும்பங்கள் பெருகி யுள்ளதற்கும் சகோதரர்களிடையே சொத்துரிமைத் தகராறுகள் பெருகி, பூசலும் பொறாமையும் நிலவுவதற்கும் இத்தகைய பாலுறவு முறைகள் அழிந்ததே காரணம் என்று நம்புகின்ற பெரியவர்கள் பலர் இன்றும் உள்ளனர். முறையான பண்பாட்டு மானிடவியல் ஆய்வுகள் செய்யப்பட்டால் இவ்வுண்மைகளைத் தெளிவுபடுத்தலாம்.

இங்குக் குறிக்கப்பட்ட கதைப்பாடலில் அண்ணன் மனைவிக்கும் தம்பிக்கும் இடையிலான உறவுகள் பற்றிய பழைய சமூக மதிப்புகள் தகர்ந்து புதிய சமூக மதிப்புகள் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது. தம்பிக்கும் தனது மனைவிக்கும் உள்ள உறவுகளை அனுமதிக்கச் சின்னண்ணன் தயாராக இல்லை. ஆகவே தம்பியை வேட்டைக்கென்று நயவஞ்சகமாக அழைத்துச் சென்று அம்பெய்து கொன்று பழி தீர்த்துக் கொள்ளும் எல்லை

வரை அவன் சென்று விட்டான். ஆனால் அவன் மனைவியோ பழைய சமூக உறவு முறைகளை உயர்த்திப் பிடிப்பதோடு, கணவனாகக் கருதிய தம்பி மரணமுற்றதால் மனைவி உடன்கட்டையேறி மடிவது போன்று தானும் உடன்கட்டையேறி உயிர் விடுகின்றாள். தலைமுறை மாற்றச் சமூக மாறுதலுடைய காலகட்டங்களில் ஒரே தலைமுறையைச் சேர்ந்த கணவன் புதிய சமூக மதிப்பைக் கைக் கொள்வதையும், அதே தலைமுறையில் வாழும் மனைவி பழைய சமூக மதிப்பைக் கைக்கொண்டு மடிவதையும் இக்கதைப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது. சமூகப் பண்பாடுகள் தலைமுறை தோறும் மாற்றமுறுவதற்கும் மாற்றத்துக்குத் தலை வணங்காத, பழைய தலைமுறை வழக்கத்தைக் கடைப்பிடிக்கும் புதிய தலைமுறை, தன் பழைய கொள்கைகளுக்காகத் தன்னுயிரை விடுவதையும் இக்கதைப் பாடல் சிறப்புறப் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

தலைமுறை மாற்றச் சிக்கலால் தோன்றும் கட்டுப் பாட்டு மீறல்

அண்ணன் மனைவியுடன் தம்பி பாலுறவு வைத்துக் கொள்ளுதல் என்ற தலைமுறைகள் கடந்து வந்த ஒரு வழக்கத்தை, குறிப்பிட்ட ஒரு தலைமுறையைச் சேர்ந்த ஒரு அண்ணன் மீற முனைகிறான். அதுவரையும் பலதலைமுறையும் கட்டுக்கோப்புடன் கையாண்டு வந்த ஒரு வழக்கம், ஒரு தலைமுறை அண்ணனுக்குத் தவறானதாகத் தோன்ற, அவன் அக்கட்டுப்பாட்டை மீறித் தன் மனைவி தனக்கு மட்டுமே உரியவளாக இருக்க வேண்டும் என நினைக்கிறான். அவனுடைய கட்டுப்பாட்டு மீறலையே இக்கதைப் பாடல் கதைக் கருவாகக் கொண்டு திகழ்கின்றது. தலைமுறையும் சமூகமும் மாறுதலுறும் போது இத்தகு கட்டுப்பாட்டு மீறல்கள் நிகழ்வது தடுக்க முடியாததாக ஆகிவிடுகின்றது.

காட்டிலிருந்த அண்ணன் காடுகளில் சுற்றி அலைந்து களைப்புற்று வந்த தம்பியை நேக்கி,

புழுதியிலே அடியைக் கண்டேன்- ரெண்டு
புள்ளிமானும் மேயக் கண்டேன்
சேத்திலே அடியைக் கண்டேன்-ரெண்டு
செல்ல மானும் மேயக் கண்டேன்
சின்ன வீட்டைத் திறந்தல்லவோ
சின்னம்பை எடுத்து வாரும்

பெரிய வீட்டைத் திறந்தல்லவோ
பெரிய அம்பை எடுத்து வாரும்[6]

என்று ஏவுகிறான். வீடு வந்த தம்பி அம்பை எடுத்துத் தருமாறு அண்ணியிடம் கூற அவள்,

பாலு அடுப்பு மேலே
உங்கள் அண்ணன் பெத்த
பாலகனும் மடிமேலே
கூழு அடுப்பு மேலே
உங்கள் அண்ணன் பெத்த
குழந்தையதும் மடிமேலே
சோறு அடுப்பு மேலே
உங்கள் அண்ணன் பெத்த
சுந்தரனும் மடி மேலே[7]

என்று கூற, அம்பெடுப்பதில் தாமதம் ஆனது.

தாமதமாக அம்பெடுத்து வந்த தம்பியைச் சந்தேகத்துடன் நோக்கினான் அண்ணன். தனித்து வீட்டிலிருந்த தன் மனைவியுடன் தம்பியின் தாமதத்தை ஒப்பிட்டு நோக்கிய அண்ணன், தம்பியை நோக்கித் தாமதத்துக்குக் காரணம் வினவினான். தம்பி சொன்னான்:

படிக்காரப் பறையருக்கு
படியளக்க நேரமாச்சு
கூலிக்காரப் பறையருக்குக்
கூலியளக்க நேரமாச்சு[8]

என்றான். இந்தப் பதிலால் நிறைவடையாத அண்ணன் தாமதத்துக்குத் தம்பியுடன் தன்மனைவிக்கான தவறான உறவே காரணம் என்று நம்பியதால் மானைக் குறி பார்ப்பது போல் தன் தம்பி மீது அம்பெய்து கொன்றான். வீழ்ந்து கிடந்த தன் தம்பியிடம் அண்ணன் கேட்டான்:

மானுக்குப் பட்ட அம்பு- உனக்கு
மார்பிலே பட்டதடா

6. பதிப்பாசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 239.

7. மேற்படி.

8. மேற்படி.

முசலுக்குப்பட்ட அம்பு–உனக்கு
முதுகிலே பட்டதடா–அந்த
மானை எடுப்பேனா–தம்பி
உன்னை எடுப்பேனடா[9]

தன்னை எடுத்துப் போனால் மதுரையிலுள்ள பெண்கள் பகையினால் கொன்று விட்டதாகப் பேசுவார்கள். எனவே மானையே எடுத்துச் செல்லுமாறு தம்பி கூறினான்.

மைத்துனனின் படுகளம் கண்டறிந்த அண்ணி அவன் பிணத்துக்குத் தீ மூட்டித் தானும் உடன்கட்டையேறி மாண்டாள்.

கதைமாற்று வடிவம்–கருத்தும்–காரணமும்

இக்கதைப்பாடலின் மாற்று வடிவத்தில் தம்பி ஒத்துக் கொள்ளாததால் அவனை முந்திக் கொண்டு தன் கணவனிடம் தம்பியே தன்னிடம் தவறாக நடக்க முயன்றான் என்று கூறி அவன் சாவுக்குக் காரணமான அண்ணியைக் காணமுடிகின்றது. இந்த மாற்றுவடிவ அமைப்பு பிற்காலத்தில் தோன்றியது எனக் கருதப்படுகின்றது. இவ்வாறு கதைப்பாடல்கள் பிற்காலத்தில் மாற்றப்படும் என்பதற்கு முத்துப்பட்டன் கதையைத் தக்க சான்றாக்கலாம். அந்தணர் சாதியில் பிறந்த முத்துப்பட்டன் சக்கிலியப் பெண்களை மணந்து கொள்வதே மூலக்கதை. ஆனால் பிற்காலத்தில் முத்துப்பட்டன் கோவிலுக்கு மேல்சாதிக்காரர்களும் வரத் தொடங்கிய போது, சக்கிலியப் பெண்கள் ஓர் அந்தணப் பெண்ணுக்குப் பிறந்து காட்டில் போடப்பட்டவர்கள் என்றும், அவர்களை வாலப்பகடை என்ற சக்கிலியர் எடுத்து வளர்த்தார் என்றும் கதையை மாற்றினர். இந்த மாற்றத்தைத் தானே செய்ததாக முத்துப்புலவர் என்ற முதிய வில்லிசைக் கலைஞர் ஒப்புக் கொண்டதைப் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் தனது முத்துப்பட்டன் கதைப்பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அதுபோன்றே இந்தச் சின்னண்ணன் -சின்னத்தம்பி கதையிலும் கதை நிகழ்ச்சிகள் மாற்றப்பட்டுள்ளன. வேட்டைச் சமூக அமைப்பில் உள்ள பாலுறவு முறைகள் பிற்காலத்தில் நிலவுடைமை முறை பலப்படுத்தப்பட்டுப் பெண்கள் ஒடுக்கப்படும் பொழுது பெண்ணின் ஒழுக்கக் குறைவால் ஏற்பட்ட விளைவாக, மாற்றப்பட்டுள்ளது எனலாம். கதையின் மாற்றுவடிவத்தில்

---

9. பதிப்பாசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 239-240.

நிலவுடைமை முறையின் வளர்ச்சியைத் தெளிவாகக் காண முடிகின்றது.

சின்னண்ணன் சின்னத்தம்பி செந்நாயி குட்டியும்
காலைமாலை தவறாத பட்டியை காவலும் காக்கறாங்க
ஆயிரம் மாடுகளும் ரண்டாயிரம் கன்னுக்குட்டி
அத்தனையும் ஒத்துமையா படுத்ததுவாம்[10]

என்று கால்நடைகளைப் பற்றியும்,

போறாண்டு சோளம்புட்டை கட்டிக் கிடக்குது
கம்பு கலங்கலமா தொம்பையிலே கிடக்குது
கேவுரு கலங்கலமா கெரசையிலே கிடக்குது
சேலத்துச் சின்ன சம்பா சிந்தி வழியுதுங்க
ஆத்தூர் தூயமல்லி அளவத்து கிடக்குதுங்க
கோண சம்பா நெல்லரிசி கொட்டிவச்சி கிடக்குதுங்க[11]

என்று வேளாண்மை விளைபொருட்கள் பற்றியும் கதை மாற்றுவடிவம் காட்டுகின்றது. இத்தகைய வேளாண் சமூக வளர்ச்சி முறையில் கதைப்பாடலும் மாறுதல் அடைந்துள்ளது. ஆனால் பழைய சமூக மதிப்புகளுக்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்த ஓர் உயர்ந்த பெண்மணி தன்னுடைய உடல் வேட்கையைத் தணித்துக் கொள்ள இணங்காததற்காகத் தன் கணவனைத் தூண்டிவிட்டு ஒரு கொலை நடப்பதற்கும் காரணமாக ஆகித் தன் பாத்திர அமைப்பிலிருந்து இழிந்து விடுவதைக் காண முடிகின்றது. ஆணாதிக்க வளர்ச்சியின் உச்சத்தில் இக்கதைப்பாடல் மாறுதலடைந்து "இராமன் கெட்டதும் பெண்ணாலே இராவணன் கெட்டதும் பெண்ணாலே" என்ற நிலையை அடைந்துவிட்டது எனக் கூறலாம்.

குடும்ப உறவுமுறைச் சிக்கலை எடுத்துக்காட்டும் இக்கதைப்பாடலை வேட்டைச் சமுதாயத்தின் எச்சம் எனச் சொல்லலாம்.

வன்னியராயன் கதை

தலைமுறை மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறலுக்கு இக்கதைப்பாடலும் தக்க சான்றாகத் திகழ்கின்றது.

---

10. பதிப்பாசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 240-241.

11. மேற்படி, ப. 241:

வன்னியராயன் கதை, வன்னியடி மறவன் கதை, வன்னிராசன் கதை என்ற பெயர்களில் இக்கதைப்பாடல் மூவரால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. விவரங்களைச் சமூகக்கதைப்பாடல்கள் அகரவரிசைப் பட்டியலில் காண்க.

கதைச்சுருக்கம்

தென்பாண்டி நாட்டின் வடபகுதியான ஊத்துமலைப் பகுதியை வன்னியர் குலத்தைச் சேர்ந்த ராமசுவாமித் தேவர் என்பவர் காவல்தலைமை பூண்டு ஆண்டுவந்தார். இவர்களின் திருமகன் வன்னியராயன். உற்றவயதில் அவனுக்குத் தன் தமையன் பெண்ணை மணமுடிக்க விரும்பிய வன்னிச்சி தமையனிடம் பெண்கேட்டுச் சென்றாள். சாதித் தொழிலாகிய காவல் காத்தல், களவு செய்தல் போன்றவற்றை அறியாத வன்னியராயனுக்குப் பெண்கொடுப்பதில்லை என்று தமையன் கூறினான். செய்தியைத் தன் தாயிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்ட வன்னியராயன் ‘களவு செய்து வந்து மாமன் மகளை மணப்பேன்’ என்று கூறிப் புறப்பட்டான். தீய சகுனங்களைப் பொருட்படுத்தாமல் திருநெல்லை வந்து சேர்ந்தான். களவு செய்யும் தக்க தருணத்தை எதிர்நோக்கி இருந்தபொழுது, நெல்வேலி நாதர், காந்திமதி ஆனித்திருவிழா நடைபெற்றது. தெய்வத் திருவுருவங்களுக்கு அனைத்து ஆடை, அணிகலன்களையும் பூட்டி வீதியுலாவாகக் கொண்டு வந்து, பின் திரும்பக் கோயிலில் வந்து, ஆடை, அணிகலன்களைக் கழற்றிக் கருவூல அறையில் வைத்துத் திருக் காப்பு இட்டனர். வன்னியராயன் நடு இரவில், கருவூல அறையில் கன்னமிட்டு ஆடை, அணிகலன்களைத் திருடி வந்து மறைத்து வைத்தான். திருட்டு நடந்ததை அறிந்த கோவிலாளர்கள் காவல் துறையினரிடம் கூற, அவர்கள் தெருத் தெருவாய்ச் சுற்றிப் பார்த்துக் கோயில் நகைகளைக் கொள்ளையடித்த வன்னிய ராயனை மடக்கிப்பிடித்தனர். அப்போது நாயக்க அரசரின் பிரதிநிதியாக நெல்லைச்சீமையில் ஆட்சியிலிருந்த வடமலையப்ப பிள்ளையிடம் வன்னியராயன் ஒப்படைக்கப்பட, அவர் வெட்டிக் கொல்லுமாறு ஆணையிட்டார். ஆணை நிறைவேற்றப்பட்டது. வன்னியராயனின் இரத்தத்தில் புரண்டெழுந்து ஓடிய அவனுடைய நாய் வன்னிச்சியைப் படுகளத்துக்கு அழைத்து வந்தது. மகனின் படுகளம் கண்ட தாய் நாவில் சீலை சுத்தி மாண்டாள். வன்னிய ராயன் தெய்வங்களிடம் வரம்பெற்றுத் தன்னைப் பலிவாங்கியவர் களைப் பழி வாங்கினான்.

இக்கதையில் காணலாகும் தலைமுறை மாற்றச் சிக்கல்

நாடுகாவல், காடுகாவல் என்ற இருவகையான காவற் பணிகளைச் செய்த வன்னியர்கள் தங்கள் காவலுக்கு உட்படாத பகுதிகளில் களவு செய்யும் கள்ளர்களாகவும் இருந்தனர் எனத் தெரிகின்றது.

உக்கிரங் கோட்டை வன்னியர்கள் மாடுகளைக் களவு செய்து சென்றதை முத்துப்பட்டன் கதை தெரிவிக்கின்றது.

கொண்டையங் கோட்டை மறவர் படைத்தலைவர்கள் நெல் களவு செய்ததைத் தடிவீரசுவாமி கதைப்பாடல் கூறுகின்றது.

கள்ளர்கள் செய்த அட்டூழியத்தை மதுரை வீரன் கதைப்பாடல் விவரிக்கின்றது. அவர்களுடைய கொட்டத்தை அடக்குவதற்கென்றே மதுரை வீரனைத் திருமலை நாயக்கர் தக்க வழியில் பயன்படுத்திக் கொண்டதை அக்கதைப்பாடல் விளக்குகின்றது.

எனவே காவல் தலைமை பூண்டிருந்த மறவர் இனத்தவர் களே களவுத் தொழில் மேற்கொள்ளும் கள்ளர்களாகவும் இருந்தமை தெளிவாகின்றது.

இந்த மறவர்களுக்கு வன்னியர் என்பது பட்டப்பெயராக அமைந்த ஒன்று என்று தெரிய வருகின்றது.

வன்னியர் என்பது அம்பலக்காரன், வலையன், சில மறவர்களுக்குரிய பட்டப்பெயர் என்று அபிதானசிந்தாமணி தெரிவிக்கின்றது.

வன்னியன், வன்னியக்குட்டி என மறவர் இனத்தவர் அழைக்கப்படுவதாகப் பிற நூல்களும் குறிப்பிடுகின்றன.[12]

ஆக காவற் பணி செய்த இவர்களே கள்ளர்களாகவும் இருந்தமை தெளிவாகத் தெரிய வருகின்றது. காவற்பணி, களவுத் தொழில் என்ற இரண்டையும் குலத் தொழிலாகவே இவர்கள் மேற்கொண்டிருந்தனர். கதைப்பாடலிலேயே இதற்குப் பல இடங்களில் தக்க சான்றுகள் உள்ளன. குலத் தொழிலான இந்த இரண்டையும் அறியாத வன்னியராயனுக்குப் பெண் கொடுக்க மறுத்தார் அவனது தாய்மாமன். இதுவே இக்கதைப்பாடலின் கதைச்சிக்கலாக அமைந்துள்ளது. வன்னியராயனின் தாய் தன்

12. "Some Maravans are known as Vanniyar or Vannikutti" E. Thurston, Castes and Tribes of South India, p. 321.

அண்ணன் மகளைப் பெண் கேட்டுச் சென்றபோது அந்த அண்ணன் பெண் தர மறுத்தார். காரணமாக அவர் கூறுவதாவது:

ஒன் மகன் வன்னிய ராயனுக்கு
உற்ற தொழில் தெரியாது
சாதித் தொழில் தெரியாதே
தாடாளன் ஒன்மகன் தான்
கம்பெடுத்துக் காவல் காற்கக்
களவு செய்யத் தெரியாது
களவு செய்யாத மன்னனுக்குக்
கன்னியரைக் கொடுப்பதில்லை[13]

என்றும்,

கம்பெடுத்துக் காவல் காற்று
களவுசெய்து வர வேணும்
களவு செய்யாத மன்னனுக்கு
கன்னியரைக் கொடுக்க மாட்டேன்[14]

என்றும் கூறுவதாக உள்ளது. இதன்மூலம் வன்னியர் என்றழைக்கப்பட்ட மறவர் அல்லது தேவர்களின் குலத் தொழிலாகக் காவற் பணியும் களவும் அமைந்திருந்தமை தெளிவாகத் தெரிகின்றது.

பெண் தரமறுத்த செய்தியையும் மறுத்ததற்கான காரணத்தையும் வன்னியனின் தாய் வன்னியனிடம் கீழ்க்காணுமாறு உரைத்தாள்.

சாதித்தொழில் தெரியாதாம்
தாடாளா ஒன்றனக்கு
கம்பெடுத்துக் காவல் காற்க
களவு செய்யத் தெரியாதாம்
களவு செய்யாத மன்னனுக்கு
கன்னியரைக் கொடுப்பதில்லை
பெண்கொடுப்ப தில்லை யென்று
பிரபலமாய்ச் சொல்லி விட்டான்[15]

---

13. பதிப்பாசிரியர் சூ. நிர்மலாதேவி, தடிவீரசுவாமி கதை & வன்னியராயன் கதை, வரி: 224-227.

14. மேற்படி, வரி: 234-235.

15. மேற்படி, வரி: 258-261.

என்று கூற வன்னியராயன், ஆங்கார கோபம் கொண்டு வலது மீசை படபடவெனச் 'சாதித் தொழிலைச் செய்து தாய்மாமன் பெண்ணை மணமுடிப்பேன்' என வஞ்சினம் கூறினான்.

> கொண்ட பெண்ணை விட்டாலும்
> குறித்த பெண்ணை விடுவதில்லை
> மற்ற பெண்களை விட்டாலும்
> மாமன் மகளை விடுவதில்லை
> இந்தப் பெண்ணே யொழிய
> இனியொரு பெண் முடிப்பதில்லை
> களவு செய்து வந்தல்லவோ
> கன்னியரை முடிக்க வேணும்[16]

என்றும், கூறித் தன் தாயை நோக்கிக் கீழ்க்காணுமாறு ஆணையும் பிறப்பித்தான்.

> களவு செய்யப் போறேனடி
> கன்னக்கோலை யெடுத்து வாடி
> கட்டமுது கட்டடியோ
> கைக்கம்பை யெடுத்து வாடி[17]

என்றான். தாய் மறுத்தாள். அத்துடன் செல்வ வளம் கொழிக்க இருக்கும் நாம் ஏன் களவுத் தொழில் செய்யவேண்டும் எனக் கேள்வியும் எழுப்பினாள். வேறு பெண்ணை உனக்கு மணமுடித்து வைப்பேன் எனச் சமாதானமும் சொன்னாள்.

> ஏழு கிடாரற் திரவியந்தான்
> இருப்புத் தண்டியல் தூங்குதடா
> களவு செய்யப் போகவேண்டாம் - அந்தக்
> கன்னியரை முடிக்க வேண்டாம்
> கண்மணி போற் பெண்பாற்று
> கல்யாணஞ் செய்திடுவேன்[18]

என்றாள். ஆனால் குலத்தொழிலாக இருந்த களவுத் தொழில்செய்து மாமன் மகளையே மணமுடிக்க வேண்டும் என்பதில் வன்னியராயன் உறுதியாக இருந்தான். திருநெல்வேலி வந்தான். களவு செய்யத் தோதான வாய்ப்பாக ஆனித் திருவிழா

---

16. பதிப்பாசிரியர் சூ. நிர்மலாதேவி, தடிவீரசுவாமி கதை & வன்னியராயன் கதை, வரி: 264-268.

17. மேற்படி, வரி: 270-271.

18. மேற்படி, வரி: 273-275.

நடந்தது. நெல்லையப்பர் சந்நிதியில் நெல்லையப்பர், வடிவாம்பாளின் உற்சவ ஊர்வலத்தின் பின் கருவூலத்தில் ஆடை, ஆபரணங்கள் வைத்துப்பூட்டப் பெற்றன. அந்தப் பொக்கிஷ அறைக்குள் வன்னியராயன் கன்னமிட்டு நுழைந்து ஆடை, ஆபரணங்களைக் களவு செய்தான். வீடு வீடாகக் காவல் துறையினர் சோதனை யிட்டு வன்னியராயனைக் கையும் களவுமாகப் பிடித்தனர். ஆட்சியாளர் வடமலையப்ப பிள்ளையின் ஆணைப்படி வன்னிய ராயனை வெட்டிக் கொன்றனர்.

களவு செய்தல் குற்றமாகக் கருதப்பட்ட காலகட்டத்தில் களவு செய்வதையே குலத்தொழிலாகக் கொண்டவர்கள் சமூகக் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். கோயிற் பொருளைக் கொள்ளையிட்டால் மரண தண்டனை உறுதி என்பதை அறிந்திருந்தும் களவுத் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டமையால் களவு செய்தல் தன் குலப் பெருமை எனக் கருதி அதில் ஈடுபட்டுத் தன் உயிரை இழந்தான் வன்னியராயன்.

முன் தலைமுறை களவு செய்தல் குலத்தொழில் எனக் கருதியதை இளந்தலைமுறைக்கும் அக்கருத்தைத் திணித்து உயிர் பலியாகக் காரணமாக ஆகின்றது. தலைமுறைகள் மாறும் பொழுது குறிப்பிட்ட வழக்கங்கள் தீயவை என ஒதுக்கப்பட்டன. பழந்தலைமுறை அந்த வழக்கத்தை நல்லதே எனக் கருதி இளந் தலைமுறை மீது சுமத்துவதால் கதையில் தலைமுறை மாற்றச் சிக்கல் உருவாகியுள்ளது. திறமையாகக் களவு செய்து வருபவனே மிகச் சிறந்த வீரன்; குலப்பெருமை காப்பவன்; குலத்தொழிலைச் செய்பவன்; அதன்மூலம் வரும் வருவாயினால் தன் மகளைக் கண் கலங்காமல் வைத்து வாழ்பவன்; மாப்பிள்ளையாக ஆவதற்கு அத்தகையவனே தகுதியானவன் என முன் தலைமுறை கருதியதால் கதையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காலத்துக்கு ஒவ்வாத முன் தலைமுறை எண்ணத்தை ஏற்றுப் பிரதிபலிக்க முயன்றதால் இளந்தலைமுறையினான வன்னியராயன் உயிர் இழந்தான்.

களவுக்குக் கொலைத் தண்டனை என்பது சிலப்பதிகாரம் தொட்டு வரும் தண்டனை முறையாக அறியப்படுகின்றது. அரசியின் கால்சிலம்பைத் திருடிய கள்வன் எனக் கருதப்பட்ட கோவலனுக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டது. களவு செய்ததால் கொல்வதற்காகக் கொண்டு செல்லப்பட்ட கள்வனைக் குண்டலகேசி காட்டுகின்றது. இதற்குப் பின்னர்க்

களவுத் தொழில் செய்தவர்களைக் கொலைத் தண்டனைக்கு உட்படுத்தியமைக்குப் பிற இலக்கியச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே இக்கதைப்பாடலைப் பொறுத்த அளவிலும் களவுக்குக் கொலைத் தண்டனை என்ற தண்டனை முறை பொருத்தமாகவே தோன்றுகின்றது. அரண்மனைப் பொருள், கோயிலுக்குச் சொந்தமான பொருள் போன்றன உயரிய வாதலாலும், களவை மேற்கொண்டவன் களவைக் குலத் தொழிலாகக் கொண்டவன் என்பதாலும், களவுப் பொருள் திரும்பக் கிடைத்தபோதும் மரணதண்டனை அளிக்கப் பட்டிருக்கிறது. மாமன் மகளை மணப்பதற்காகக் குலத்தொழில் என்று குறிக்கப்பட்ட களவுத் தொழிலை முதன்முதலாகச் செய்ய வந்து பிடிபட்டுக் கொலைத் தண்டனைக்கு ஆளான வன்னிய ராயனின் முடிவு மிகுந்த சோகமயமானது என்பதில் ஐயமில்லை. களவு செய்தலைக் குலத்தொழில் என்று கூறிக் கொள்ளும் முன் தலைமுறையினனுக்கும் களவுசெய்தல் மரண தண்டனைக்குட் படுத்தப்படும் மாபெரும் குற்றம் எனக் கருதும் ஆட்சியாள ருக்கும் இடையில் இளந்தலைமுறையினான வன்னியராயன் சிக்கிப் பலியாவதை மிகச் சிறப்பாக இக்கதைப்பாடல் வெளிக்காட்டியுள்ளது.

மருதநாயகம் பிள்ளை கதைப்பாடல்

தலைமுறை மாற்றச் சிக்கலால் தோன்றும் கட்டுப்பாட்டு மீறலுக்குத் தக்கதொரு சான்றாக மருதநாயகம் பிள்ளை கதைப் பாடலையும் எடுத்துக்காட்டலாம். முழுக்கதைப்பாடலும் இது வரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. குமரி நாட்டுப்புறவியல், தன்னனானேயில் (இதழ், டிச. 2001, ப. 148-152) மருதநாயகம் பிள்ளை கதைப்பாடலின் தொடக்க வரிகள் 107 தரப்பட்டு உள்ளன. தம்பி, சொத்தைப் பங்கிட்டுத் தருமாறு கேட்டுப் பகிர்வது வரை கதை உள்ளது. கதை பற்றிய குறிப்புகளும், விளக்கங்களும் காணப்படும் நூல்கள் 'சமூகக் கதைப்பாடல்கள்-அகர வரிசைப் பட்டியல்' என்ற பின்னிணைப்பில் தரப் பட்டுள்ளன.

கதைச் சுருக்கம்

நெல்லை, குமரி மாவட்டங்களில் பரவலாகக் காணப்படும் இக்கதை நிகழ்ந்த இடம் நெல்லை மாவட்டம் செயங்கொண்டான் வட்டம் வீரேச நல்லூரின் அருகிலிருந்த அருகேச நல்லூர் ஆகும். இவ்வூரில் நல்லநாயகம் பிள்ளை, மருதநாயகம் பிள்ளை என்ற

அண்ணன், தம்பியர் இருந்தனர். அண்ணனுக்குப் பிள்ளை இல்லை. தம்பிக்கு 9 பிள்ளைகள். நிலவுடைமை அமைப்பில் கூட்டுக் குடும்ப உறவுநிலையில் தந்தை வழிச் சமுதாய நெறிமுறையில் தந்தைக்குப் பின் மூத்த மகனுடைய மேற்பார்வையில் அனைத்துச் சொத்துகளும் இருந்தன. மருதநாயகம் பிள்ளை தனக்குரிய சொத்தைப் பிரித்துத் தருமாறு கேட்க, அண்ணனும் அவனுடைய குடும்பப் பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு 3 பங்குச் சொத்தில் இரு பங்குச் சொத்தினைத் தம்பிக்கு அளித்தான். குடித்தும், ஊதாரித்தனமாகவும் செலவு செய்து சொத்துகளை விரைவில் அழித்த தம்பி, அண்ணனின் சொத்துகளையும் கவர அண்ணனைக் கொலைசெய்யத் துணிந்தான். தக்க தருணத்தில் அண்ணனைக் கொன்று கர்ப்பமுற்றிருந்த அண்ணி குழந்தை பெற்றால் அக்குழந்தையால் பிற்காலத்தில் சொத்து கவரப்படலாம் என எண்ணி அவளையும் கொல்ல முனைந்தான். தப்பி வேறு இடத்துக்குச் சென்று குழந்தை பெற்று வளர்த்த அண்ணி தவிர்க்க இயலாத ஒரு சூழலில் தன் வளர்த்த மகனிடம் சிற்றப்பனின் கொடுமைகளைக் கூற, அந்த மகன் சொந்த ஊர் வந்து சிற்றப்பனைப் பழிவாங்கிச் சொத்துகளை மீட்டுத் தன் தாயுடன் இனிது வாழ்ந்தான்.

கதைப்பாடல் வரிகள் காட்டும் கதை விளக்கம்

நிலவுடைமைச் சமுதாய அமைப்பில், கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வரும் ஒரே தலைமுறையைச் சேர்ந்த அண்ணன் - தம்பியரிடம் தோன்றும் தலைமுறை மாற்ற எண்ணங்களை வெளிக்காட்டுவதாக இக்கதைப்பாடல் காணப்படுகின்றது. தந்தையின் மரணத்தின் பின்னர்ச் சொத்து முழுமையும் குடும்பத்தின் மூத்தமகனால் கட்டிக் காப்பாற்றப்பட்டு வரும். தந்தையின் மற்ற ஆண் பிள்ளைகளும் அவர்களுடைய மனைவி, குழந்தைகளும் மூத்தவனைச் சார்ந்தே வாழ்ந்து வருவர். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் குடிப்பெருமைக்கு இழுக்கில்லாதவாறு நடந்து வருவர். ஆனால் இக்கதைப்பாடலில் தலைமுறை தோறும் பின்பற்றப்பட்டு வரும் இவ்வழக்கத்தை மீற முனைந்தான் தம்பி மருதநாயகம் பிள்ளை. தனக்குரியப் பங்கைப் பிரித்துத் தருமாறு அண்ணனை வற்புறுத்தினான். தலைமுறைகள் மாறும்பொழுது சிக்கல் இவ்வாறாக இக்கதைப்பாடலில் உருவெடுக்கிறது.

ஆண்டுக்கிட்டு வாராரே அண்ணன்
அண்ணனே விடப்புடாது என்று
அஞ்சாறு போக்கிரியள திரட்டி

குடியாத கள்ளுகள் குடிச்சி
அண்ணனுட வீடுதேடி வந்து
வஸ்துகளே வேணுமின்னு சொல்லி
அடம்புடிச்சி கேட்டானே தம்பி[19]

தம்பியின் ஊதாரித்தனத்தையும், தீய குணங்களையும் நன்கு அறிந்திருந்தார் அண்ணன் நல்லநாயகம் பிள்ளை. பெயருக்கு ஏற்றாற் போன்று நல்ல குணங்கள் கொண்டவரான அண்ணன் நன்செய், புன்செய், ஆடுமாடுகள் அனைத்தையும் மூன்று பங்கிட்டு இரண்டு பங்கைத் தம்பிக்கும் ஒரு பங்கைத் தானும் வைத்துக் கொண்டார். தனக்குப் பிள்ளையின்மையையும் தம்பிக்கு ஒன்பது குழந்தைகள் இருப்பதையும் கருத்தில் கொண்டே அவர் அவ்வாறு செய்தார். தமிழ்நாட்டுக் கிராமியச் சமுதாய அமைப்பில் மூத்த மகனுக்குச் சேட்டன் பங்கு (சிரேஷ்ட பாகம்) என்று சொத்தில் கூடுதலான பங்கு உண்டு என்பர். இதனை மானிடவியலார் 'Lae of Primo - geniture' என அழைப்பர். இத்தகு சமுதாய விதிமுறையையும் மீறித் தன் தம்பிக்கு இரு பங்குச் சொத்தளித்தார் அண்ணன். தம்பி கேட்பதும் அண்ணன் கொடுப்பதுமாக இவ்வாறு கட்டுப்பாட்டு மீறல் இக்கதைப் பாடலில் நடைபெற்றுள்ளது. அண்ணன் பெருந்தன்மையோடு கொடுத்த இருபங்குச் சொத்தையும் தீய வழியில் சென்று விரைவில் அழித்தான் தம்பி.

சேராதவன் கூடசேந்து
சீட்டு விளையாடி தோத்தான்
குடியாத கள்ளுகள குடிச்சான்
கோதம்பு ரொட்டிகள தின்னான்
அடியாத பேர்கள அடிச்சான்
அடிதண்டம் மிதிதண்டம் கொடுத்தான்
ஆறுமாசத்துக் குள்ளே
அவளவும் தூத்தரிச்சி போட்டு
கஷ்டப்படறானே தம்பி[20]

நிலவுடைமைச் சமுதாய அமைப்பில் சொத்து இருக்கும் வரைதான் சமுதாயம் அவனை மதிக்கும். சொத்திழந்த

---

19. தன்னனானே, நெல்லை நாட்டுப்புறவியல், மருதநாயகம் பிள்ளை கதை, (கட்டுரை) நா. இராமச்சந்திரன், மே, 2004, காவ்யா பதிப்பகம், பெங்களூர்.

20. மேற்படி, ப. 193-194.

மருதநாயகம் தன் மதிப்பை இழந்தான்.

ஏமின்னு கேப்பாரும் இல்லே
எதுக்குண்ணு கேப்பாரும் இல்லே
வந்தியான்னு கேப்பாரும் இல்லே
பாலோடு சாப்பாடும் இல்லே[21]

எனவே,

குடிக்கக் கஞ்சி கெடையாமல்
கெட்டதுக்கு கந்தல் கெடையாமல்
தேக்கிலை சுழலுவது போலே[22]

மிகுந்த துயரமுற்றான். எனவே சொத்தாசை கொண்டு அண்ணனுடைய சொத்தையும் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று எண்ணமிட்டான். சொத்து உள்ளதால் அண்ணன் சமூகத்தில் மதிக்கப்படுவதையும், தான் அவமதிக்கப்படுவதையும் எண்ணி அவனுள் தாழ்வு மனப்பான்மையும் ஏற்பட்டது. அத்தாழ்வு மனப்பான்மை பொறாமை உணர்வைத் தூண்டியது. அப்பொறாமையுணர்வு அண்ணனைக் கொன்று அவன் சொத்தைக் கைப்பற்றும் பகைமையுணர்வாக மாறியது.

பெரியவர் பெரியவர் என்று
பேரேறி வாராரு அண்ணன்
அண்ணனைக் கொண்ணுபோட்ட மானா
அவஞ்சொத்து நமக்காகிப் போச்சு
ஆளலாம் பலவான பூமி[23]

எனத் திட்டமிட்டான். அக்கால வழக்கப்படி அண்ணனுக்குப் பிள்ளையில்லாமல் அவன் இறந்துபட்டால் அவனுடைய சொத்து அனைத்தும் அடுத்த வாரிசான தம்பிக்கே செல்லும். மனைவியைச் சேராது. குழந்தை இருந்தால்தான், அதிலும் ஆண்

21. தன்னனானே, நெல்லை நாட்டுப்புறவியல், மருதநாயகம் பிள்ளை கதை, (கட்டுரை) நா. இராமச்சந்திரன், மே, 2004, காவ்யா பதிப்பகம், பெங்களூர், ப. 194.

22. பதிப்பாசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 432.

23. தன்னனானே, நெல்லை நாட்டுப்புறவியல், மருதநாயகம் பிள்ளை கதை, (கட்டுரை) நா. இராமச்சந்திரன், மே, 2004, காவ்யா பதிப்பகம், பெங்களூர், ப. 196.

குழந்தை இருந்தால்தான் மனைவியைச் சென்று அச்சொத்து சேரும். பெண் குழந்தை இருந்தாலும் சொத்தில் மனைவிக்குப் பங்கு கிடைக்காது. அண்ணனின் உடன்பிறப்பான தம்பிக்கே செல்லும். தம்பி, விதவை அண்ணிக்குக் 'கூலிப்படி' கொடுப்பான். அதனை 'அறுப்புச் சொகம்' அல்லது 'அறுப்புக் கூலி' எனக் குறிப்பிடுவர். அம்மனைவி அதனைப் பெற்றுக் கொண்டு தன்னுடைய தாய் வீட்டுக்குச் செல்வாள்; அல்லது தன் மைத்துனனுடைய வீட்டில் வேலைக்காரியாக இருந்து கூலி பெற்று அதில் தன்னுடைய வாழ்க்கையை நடத்துவாள்; கி.பி. 1950ஆம் ஆண்டு வரையும் தமிழ் நாட்டில் ஆண் குழந்தை இல்லாத விதவை மனைவியர்களின் நிலை இதுவாகவே இருந்தது. தமிழ்நாட்டுப் பாடல்கள்[24] இவர்களின் இத்தகு நிலைபற்றி எடுத்துக் கூறியுள்ளது. அப்பாடல் கீழ்வருமாறு:

மஞ்சண தொந்தியிலே
மைந்தன் பிறந்தாக்க
மைந்தனுக்குப் பங்குண்டும்
மதுரை கோட்டிலேயும் நியாயமுண்டும்
மஞ்சணத் தொந்தியிலே
மைந்தன் பிறக்கலியே
மைந்தனுக்குப் பங்குமில்ல
மதுரைக் கோட்டுலயும் ஞாயமில்ல

அண்ணனைக் கொல்லத் தேடி அண்ணன் வீடு வந்தான் தம்பி. தன் எண்ணத்தை மறைத்து வீட்டிலிருந்த அண்ணியிடம் கீழ்க்காணுமாறு கூறினான்.

பால்மோரு சாப்பிடவும் வரலே
பசியாறிப் போகவும் வரலே
அண்ணன, கண்டுதாம் மயினி
ஆறுமாசம் ஒருவருசம் ஆச்சி
தேட்டமா இருக்கடி மைனி
அண்ணனப் பாக்கதுக்கு வந்தேன்[25]

---

24. நா. வானமாமலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1964, ப. 559-560.

25. தன்னனானே, நெல்லை நாட்டுப்புறவியல், மருதநாயகம் பிள்ளை கதை, (கட்டுரை) நா. இராமச்சந்திரன், மே, 2004, காவ்யா பதிப்பகம், பெங்களூர், ப. 196.

என்று நயவஞ்சகமாக, அண்ணன் மீது மிகுந்த பாசம் உள்ளவன் போன்று நடித்துக் கூறினான். கொழுந்தனுடைய வஞ்சக எண்ணத்தைச் சற்றும் உணராத அண்ணியாகிய நெல்லை வடிவு தன் கணவன் வயலுக்குச் சென்றிருப்பதாகக் கூறினாள். உடன் வயலுக்கு விரைந்தோடினான் தம்பி மருதநாயகம். வயலில் வேலை செய்து கொண்டிருந்த அண்ணனைச் சொத்தாசை கண்ணை மறைத்ததால் கடுமையாகத் தாக்கினான் தம்பி மருதநாயகம்.

விறுவிறுண்டு குடுகுடுண்ணு ஓடி
கொண்ட மைத்தெட்டிப் புடிச்சி
நச்சென்று கீழதூக்கிப் போட்டு
அடியாத அடிகளும் அடிச்சான்
மிதியாத மிதிகளும் மிதிச்சான்[26]

நல்ல குணநலன்கள் அமையப் பெற்ற அண்ணன், தன் தம்பியை எதிர்த்துத் தாக்கவில்லை. சொத்தாசை கண்ணை மறைப்பதால்தான் அவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை நன்குணர்ந்த அண்ணன் தன் தம்பியிடம் கீழ்க்காணுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

சொத்துகள வீதிச்சி கொடுத்தேன்
அவளவும் தூத்தரிச்சிப் போட்டே
வேணுமா சொத்துக இன்னும்
அவளவும் எழுதியே தாரேன்
நானுமென் பொஞ்சாதியுமாக
ஓடோண்டி போறேண்டா தம்பி[27]

என்றதுடன் நில்லாமல் தன் மனைவி கர்ப்பமுற்று இருப்பதையும் கூறி, அதனால் ஒரு வேளை தம்பி மனம் மாறித் தனக்கு உயிர்ப் பிச்சை அளிப்பான் என நம்பினார்.

ஆண்டவன் கிருபையினாலே
என்னுட பொஞ்சாதி தனக்கு
உன்னுட மைனியார் தனக்கு

---

26. தன்னனானே, நெல்லை நாட்டுப்புறவியல், மருதநாயகம் பிள்ளை கதை, (கட்டுரை) நா. இராமச்சந்திரன், மே, 2004, காவ்யா பதிப்பகம், பெங்களூர், ப. 197.

27. மேற்படி, ப. 197.

வயத்திலே மூணுமாச கர்ப்பம்
சாவாம பெறுவாளே ஆனா
ஒம்பேரு விடுவேண்டா தம்பி
பெண்பிள்ளை பெறுவாளே ஆனா
ஒம்பெஞ்சாதி பேர விடுவேன்
எனவிட்டுப் பிடிக்கவேணும் தம்பி
நாடிய பிடிச்சாரு அண்ணன்
நல்ல வார்த்த சொன்னாரு அண்ணன்[28]

தம்பியிடம் இரக்க உணர்வைத் தூண்ட அண்ணன் கூறிய "என் மனைவி கர்ப்பம்" என்ற புதிய செய்தியே தம்பியிடம் கொலை உணர்வை அதிகப்படுத்த ஒரு காரணமாக அமைந்துவிட்டது. இது கதைப்பாடகரால் நாடகக் கீழறை நிலை உத்தியாகக் (Dramatic irony) கடைப்பிடிக்கப்பட்டுள்ளதாகக் கதைப்பாடற் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். அண்ணனைக் கொன்றால் சொத்தினை அனுபவிக்கலாம் எனக் கருதிக் கொலை செய்ய முயன்ற தம்பிக்கு இப்பொழுது கர்ப்பமாக உள்ள அண்ணியின் வயிற்றில் ஆண் குழந்தை பிறந்து அது வந்து சொத்துக்கு வாரிசாகி விடுமே என்ற புதிய கவலை தோன்றி, அக்கவலை அண்ணியையும் கொன்றுவிட வேண்டும் என்ற புதிய கொலைத் திட்டத்தையும் உருவாக்க ஏதுவாகிவிட்டது.

தன் அண்ணனின் கெஞ்சுதல்களைச் செவிமடுக்காத மருதநாயகம் பிள்ளை, அண்ணனை

அடியாத அடியும் அடித்து
மிதியாத மிதியும் மிதித்து
காலிக் கழுதையில் ஏத்தி
கரும்புள்ளி செம்புள்ளி குத்தி
எருக்கிலை மாலையும் போட்டு
ஊர்மூணு வளையம் அடிச்சி
மேள தாளங்கள் போட்டு[29]

---

28. தன்னனானே, நெல்லை நாட்டுப்புறவியல், மருதநாயகம் பிள்ளை கதை, (கட்டுரை) நா. இராமச்சந்திரன், மே, 2004, காவ்யா பதிப்பகம், பெங்களூர், ப. 197.

29. பதிப்பாசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 432-433.

ஊருக்கு மேலக் கடைசியிலிருக்கும் தன் குடும்பச் சாஸ்தா கோயிலுக்கு அண்ணனைக் கொண்டுவந்து சாஸ்தாவுக்கு முதலில் சூல் கடா, சூல் பன்னி வெட்டிப் பலி கொடுத்துப் பின் அண்ணனைக் குளிப்பாட்டி அரளிப்பூ மாலை சூட்டி சாஸ்தாவுக்கு நரபலியாகக் கொடுத்தான்.

கர்ப்பமாக உள்ள அண்ணியையும் கொலை செய்ய உறுதி கொண்டான்.

இன்னக்கி மைனியாரை விட்டா
நாளக்கி எதிராளியா வருவா
ஆணோ பெண்ணோன்னு தெரியலே
ஆணா பெறுவாளே யானா
ஒரு வேள அனுபவிக்க வருவான்
பேசாம போவாளான்னு நெனச்சி[30]

அண்ணியைக் கொலை செய்தால் அடையும் பலனை மனத்துள் எண்ணிப்பார்த்தான்.

அவளவும் கொலை செய்வோ மானா
ஆயிரங் கோட்ட வெதப்பாடு
அவளவும் நமக்காகிப் போச்சு[31]

எனக் கருதி அண்ணியைத் தேடினான்.

அவனது கொலை வெறியை அறிந்த அண்ணி ஊர் விட்டுத் தப்பிச் சென்று ஆண் குழந்தை பெற்று வளர்த்து வந்தாள். உரிய நேரத்தில் நடந்தவற்றைத் தன் வாலிப மகனிடம் கூற அவன், சிற்றப்பனைப் பழிவாங்க எண்ணம் கொண்டான்.

ஒன்னய வெட்டாமப் போனா
வச்சது மேமீச அல்லல
பெத்தது வெள்ளாடிச்சி அல்லே
பொறந்தது நெல்லவடிவுக்கல்ல[32]

என்று சொந்த ஊர் வந்து தன் தந்தையைப் பலிகொடுத்த அதே சாஸ்தா கோயிலில் தன் சிற்றப்பனையும் பலி கொடுத்துச் சொத்துகளைக் கைப்பற்றித் தாயோடு வாழ்ந்து வந்தான்.

கிராமங்களில் இன்னமும் கூட்டுக் குடும்ப அமைப்புகள் காணப்பட்டே வருகின்றன. இந்தக் கதைப்பாடலைப் பாடினால்

---

30. தன்னனானே, நெல்லை நாட்டுப்புறவியல், ப. 198.

31. மேற்படி.

32. மேற்படி, ப. 199.

கூட்டுக்குடும்பம் சிதைந்துவிடக்கூடும் எனக் கருதுகின்றனர். அத்துடன் கூட்டுக் குடும்பச் சிதைவுகளுக்கு இக்கதைப்பாடல் ஒரு தூண்டுகோலாக இருந்துவிடக் கூடாது என்றும் எண்ணுகின்றனர்.

இந்த மருதநாயகம் பிள்ளை கதைப்பாடல் குறித்த கதைப் பாடல் திறனாய்வு இருநூல்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை முன்னரே சுட்டப்பட்டது. இவ்விருவகைக் கதைப் போக்கிலும் காணப்படும் சிற்சில வேறுபாடுகள் கீழே தரப்படுகின்றன.

தமிழ்நாட்டுப்புற ஆய்வில் மருதநாயகம்பிள்ளை கதைப்பாடல்	தன்னனானே, நெல்லை நாட்டுப் புறவியலில் மருதநாயகம்பிள்ளை கதைப்பாடல்
1. கதை நடந்த இடம் அருகச்ச நல்லூர் என உள்ளது.	அருகேச நல்லூர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.
2.அண்ணன் பெயர் நிலநாயகம்பிள்ளை.	அண்ணன் பெயல் நல்லநாயகம் பிள்ளை.
3.அண்ணனைக் கொல்ல முஸ்லீம் ஆட்சி நடந்த நெல்லைப் பகுதி அதிகாரி யான நவாப்துரை என்ற நண்பரிடம் அனுமதி பெற்றான்.	யாரிடமும் அனுமதி பெற்றதான குறிப்பு காணப்பெறவில்லை.
4.தாமிரபரணி ஆற்றில் பூசை செய்துகொண்டிருந்த அண்ணனை அடித்து உதைத்து வெட்டிப் பலி கொடுக்க இழுத்து வந்த தாக உள்ளது.	வயல் வேலையில் ஈடுபட்டிருந்த அண்ணனை வெட்ட இழுத்து வந்ததாக உள்ளது.
5.தன் அக்காளும் நிலநாயகத் தின் மனைவியுமான நெல்லை வடிவு கர்ப்பமுற் றுள்ளதாக மருதநாயகத்தின் மனைவி கூறுவதாக உள்ளது.	அண்ணன் கூறுவதாக உள்ளது.
6.மனைவியின் தூண்டுதலின் பேரில் அண்ணனைக் கொல்லத் தேடுவதாக உள்ளது.	தானே முன்னின்று முனைந்ததாகக் காட்டப்பட்டுள்ளது.
7.உயிர் தப்பிய அண்ணி மதுரைத் தாசி வீட்டில் அடைக்கலமாக வாழ்ந்ததாக உள்ளது.	நெல்லை மாவட்டம் அத்தாள நல்லூர்த் தாசி வீட்டில் அடைக்கல மானதாக உள்ளது.

இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கதைப்பாடல்களிலேயே பல வேறுபாடுகள் காணப்படுகின்றமைக்கு இக்கதைப் பாடலும் விதிவிலக்காக அமையவில்லை என்பது தெரிய வருகின்றது.

இக்கதைப் பாடலில் காணப்படும் தலைமுறை மாற்றச் சிக்கலும் கட்டுப்பாட்டு மீறலும்

இக்கதைப்பாடல் நிலவுடைமைச் சமூக அமைப்பில் ஒரு கூட்டுக் குடும்பத்தில் நிகழ்ந்த சொத்துரிமைச் சிக்கலைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பிள்ளைமார் சாதியில் அண்ணனிடமிருந்து சொத்தினைத் தம்பி அடாவடியாகப் பறித்துக் கொள்வதனை இக்கதைப்பாடல் விளக்கிக் கொண்டு செல்கின்றது. அண்ணன் குடும்பம், தம்பி குடும்பம் என்ற இரு குடும்பங்களடங்கிய ஒரு சிறு கூட்டுக் குடும்பம் எனினும் பெருஞ் சொத்துடைய குடும்பம் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

ஆயிரங் கோட்ட வெதப்பாட
நஞ்சக புஞ்சக எல்லாம்
ஆடுமாடுக எல்லாம்

என்ற கதைப்பாடல் வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

கூட்டுக்குடும்ப அமைப்பு

கிராமியக் கூட்டுக்குடும்பம் பெரிதும் ஒருங்கிணைக்கப் பட்டதும் கட்டுப்பாடுடையதுமாகும். கிராமியக் கூட்டுக் குடும்பத்தின் தலைவனாகத் தந்தையின் பின், மூத்த மகன் திகழ்வான். மற்ற குடும்ப உறுப்பினர்களின் மீது முழு அதிகாரம் செலுத்துபவனாக அவன் இருப்பான். குடும்பத்திலுள்ளோரின் பால், வயது வேறுபாடுகள் அடிப்படையில் வேலையைப் பங்கிட்டுக் கொடுப்பான். இளைஞர்களை வருங்கால விவசாய வேலைகள், சமூக வாழ்க்கை போன்றவற்றில் ஈடுபடுத்துவான். குடும்பத்திலுள்ள ஆண்மக்கள், பெண் மக்களின் திருமணம் போன்ற நற்காரியங்களை நடத்தி வைப்பான். எல்லாவிதமான அதிகாரங்களும் உடையவனாக அவன் இருப்பான். குடும்பத்திலுள்ள மணமான ஆண்பிள்ளைகளும், அவர்களுடைய மனைவி, குழந்தைகளும், குடும்பத்தின் மூத்த மகனைச் சார்ந்து

வாழ்வர். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் குடிப்பெருமைக்கு இழுக்கு நேரா வண்ணம் அத்தலைமகனுக்குக் கட்டுப்பட்டு வாழ்வர். அத்தகு கிராமியக் கூட்டுக்குடும்ப அமைப்பில் திகழ்ந்து வந்த ஒரு குடும்பம் தலைமுறை மாற்றத்தினால் சிக்கலைச் சந்தித்து, கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியதை இக்கதைப்பாடல் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

தலைமுறை தோறும் பின்பற்றப்பட்டு வந்த, குடும்பத்தின் மூத்த மகன் அனைத்துச் சொத்துகளையும் ஆள்பவன்; அவனுக்கு அடங்கிக் குடும்பத்தின் பிற உறுப்பினர்கள் நடக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டைத் தம்பி மருதநாயகம் பிள்ளை மீறினான். முன் தலைமுறை பின்பற்றி வந்த ஓர் ஒழுங்கையும், கட்டுப் பாட்டையும் மருதநாயகம் பிள்ளை மீறினான். தானும் தன் குடும்பமும் அண்ணனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதை அவன் விரும்பவில்லை. தனக்கென்று சொத்துரிமை வேண்டும் என்று எண்ணமிட்டான். தலைமுறைகள் மாறும்பொழுது புதிதாகத் தோன்றும் தலைமுறையினர் தம் சொந்த விருப்பு, வெறுப்புக்கேற்பத் தலைமுறைதோறும் பின்பற்றப்பட்டு வந்த ஒரு வழக்கத்தை மீறியதைக் கதைப்பாடல் காட்டுகின்றது.

சொத்தினைப் பிரித்துத் தந்த பின்னும் தீய வழியில் தன் பங்குச் சொத்தினை அழித்துவிட்டு, அண்ணனின் பங்குச் சொத்தை அடைய உடன்பிறந்த அண்ணனைக் கொல்லும் நிலைக்குக் கீழிறங்கினான் தம்பி. ஆண்வாரிசு பிறந்தால், தான் சொத்துகளை அடைவதில், ஆள்வதில் தடையேற்படும் என்பதால், அண்ணியையும் கொல்ல முனையும் நிலைகள் காட்டப்படு கின்றன. இறுதியில் வஞ்சகச் செயல்களுக்காகப் பழி வாங்கப் பட்டதாகக் கதை முடிகிறது.

இக்கதைப்பாடலில் தலைமுறை மாற்றச் சிக்கலை உருவாக்குபவனாகத் தம்பி திகழ்கிறான். தலைமுறை மாற்றச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்துபவர் களாக அண்ணன் தம்பி இருவரும் அமைந்துள்ளனர். தம்பி கேட்டதால் சொத்தைப் பிரித்துக் கொடுத்ததன் மூலம் அண்ணனும், சொத்தைக் கேட்டதால் தம்பியும் கட்டுப்பாட்டு மீறலை நிகழ்த்தியுள்ளனர்.

கூட்டுக்குடும்ப அமைப்புகள் சிதறியதற்கு ஒரு காரண மாகக் குடும்ப உறுப்பினர்களின் எண்ண மாற்றங்களை இக்கதைப் பாடல் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளது.

இக்கதைப்பாடல் உடுக்கையடித்துப், பாடப்படுவதாகும். வயலறுவடையின்போது களத்துமேடுகளில், பாடிக்கொண்டு வருவார்கள். உடன்பிறந்தவர்களிடையே ஏற்பட்ட மோதலைக் கூறிக் கூட்டுக் குடும்பச் சிதைவைப் பற்றிப் பேசும் கதைப்பாடல் ஆதலான் இக்கதைப்பாடலைப் பாடத் துவங்கும்போதே பாடுபவர்களுக்கு நெல்லைக் கொடுத்து அனுப்பி விடுவார்கள் எனத் தெரிகிறது.

3. மணமறுப்புச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறல்கள்

பல்வேறு காரணங்களால் மணம் மறுக்கப்படுவதையும் அதன் பின்விளைவுகளையும் இலக்கணங்களும் இலக்கியங்களும் காலந்தோறும் எடுத்துப் பேசி வந்துள்ளன. தொல்காப்பியம் இத்தகு மணம் மறுத்தலையே 'மகட்பாற்காஞ்சி' எனத் துறை வகுத்துக் கூறியுள்ளது.

நிகர்த்து அடல்வந்த வேந்தனொடு
முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பாலும்
(தொல்காப்பியம், பொருள். புறத்துறை. 77)

பெண் கேட்டபொழுது பெண்கொடுக்க மறுப்பவர் மீது அரசன் படை நடத்திச் சென்று வலியப் பெண்ணைச் சிறையெடுக்கும் வழக்கத்தையே மேற்காணும் சூத்திரம் வெளிப்படுத்துகின்றது. இத்தகு வன்முறைத் தாக்குதல் சிற்றிலக்கியக் காலகட்டத்தில் கலம்பக உறுப்பாகி 'மறம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. குறுநில மன்னன் பாரியின் மக்களான அங்கவை, சங்கவையரைச் சங்ககால மூவேந்தர்கள் பெண் கேட்க, பாரி மறுத்தான். மூவேந்தர்களோடு போரிட்டால் வெல்லமுடியாது என்று தெரிந்தும் பாரி போர் தொடுத்து வந்த அம்மூவேந்தர்களுடன் போரிட்டான். போரில் தோல்வியடைந்து இறந்தான். மூவேந்தரின் அடக்குமுறை பாலியல் வன்முறையாக இருந்ததைப் பாரியால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. பாலியல் அடக்குமுறைக்கு எதிரான இலக்கியச் சான்றாக உள்ள முதற்போராக இதனைக் கருதலாம். இத்தகு பாலியல் வன்முறை திணிக்கப்பட்டு மணம் நடைபெற்றாலும் அது உண்மையான மனமொன்றிய திருமணமாக இருக்காது. மணமானபின் அப்பெண்டிர் அரண்மனை அந்தப்புரத்தில் பத்தோடு பதினொன்றாகவே இருக்க நேரிடும். இதனாலேயே தங்களை விடவும் உயர்ந்த பதவி, பண வசதி, ஆள்பலம் படைத்தவர்களாக இருந்தாலும் தம் பெண்ணைக் கொடுக்க மறுத்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

இத்தகு எடுத்துக்காட்டுகள் பல பிற்கால வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. கதைப்பாடல்களிலும் பழமரபுக் கதைகளிலும் பல சான்றுகள் கிடைக்கின்றன. இங்குக் கதைப் பாடல் சான்றுகள் மட்டும் எடுத்தாராயப்படுகின்றன. மணம் மறுப்பதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. அவை:

1. உயர்குலம் - தாழ்குலம் என்ற குலவேறுபாடு.
   சான்று: வெங்கலராசன் கதை, தோட்டுக்காரி கதை
2. ஆளும் அதிகார வர்க்கம் - உழைக்கும் அடித்தள வர்க்கம் என்ற வர்க்க வேறுபாடு.
   சான்று: பாலம்மாள் கதை
3. உயர்தொழில்-தாழ்தொழில் என்ற தொழில் ஏற்றத்தாழ்வு.
   சான்று: பூலங்கொண்டாளம்மன் கதை
4. உயர்சாதி-கீழ்ச்சாதி என்ற சாதிவேறுபாடு.
   சான்று: நாஞ்சில் குறவன் கதை.

1. உயர்குலம், தாழ்குலம் என்ற குலவேறுபாடு காரணமாக மணமறுத்தலும் சிக்கலும்

உயர்குலம்-தாழ்குலம் என்ற இருவேறுபட்ட குலத்தார் இடையே குல உயர்வு காரணமாக மணம் மறுக்கப்பட்டு அது சிக்கலாக உருவெடுக்கும் பொழுது, பல விதமான கட்டுப்பாட்டு மீறல்கள் நிகழ்ந்துள்ளன. இத்தகு மீறல்களுடைய கதைப்பாடல் களுக்குச் சான்றாக,

1. வெங்கலராசன் கதை

2. தோட்டுக்காரியம்மன் கதை

ஆகிய கதைப்பாடல்களைக் கூறலாம். தங்கள் குலப்பெருமையை, குல உயர்வைக் காத்துக் கொள்ள எத்தகு நிலைக்கும் அவர்கள் மீறிச் சென்றுள்ளதைக் கதைப்பாடல்கள் தெளிவுறுத்துகின்றன.

முதற்கண் வெங்கலராசன் கதையைக் காணலாம். பதிப்பு விவரம் சமூகக் கதைப்பாடல் அகரவரிசைப் பட்டியலில் தரப்பட்டுள்ளது.

வெங்கலராசன் கதை - கதைச் சுருக்கம்

கால, இடஒருமை (unity of time and place) காண இயலாத இக்கதைப்பாடல் புராண நிகழ்ச்சிகள், வரலாற்று நிகழ்ச்சிகள்,

சமகால வாழ்வியல் நிகழ்ச்சிகள் பின்னப்பட்டுள்ளதாகக் காணப் படுகின்றது. ஏர்வாடி என்றழைக்கப்படும் ஏராடி என்ற இடத்திலுள்ள ஏலாசீனி எனும் ஆற்றில் நீராட வந்த தெய்வக் கன்னியர்களைக் கண்டு வித்தியாதர முனி மோகம் கொண்டார். சிவபெருமானின் துணையோடு அவர் மழையையும், குளிர் காற்றையும் ஏவி இருள் சூழச் செய்து தெய்வக்கன்னியர் எழுவரையும், செல்லும் திசை தெரியாது மயங்க வைத்து உறவு கொண்டார். அவ்ஏழு கன்னியர்களுக்கும் பிறந்த ஏழு மைந்தர்கள் வலங்கையர்கள் என அழைக்கப்பட்டனர்.

குழந்தைகள் வளர்ந்ததும் அவர்களின் துணையுடன் காளி, தாருகாசுரனை வதம் செய்தாள். காளியும் வலங்கையர் களும் இணைந்து பல கொடியவர்களைக் கொன்று அழித்தனர். காளி வலங்கையர்களுக்குப் பனையேறும் தொழிலையும், தொழிற் கருவிகளையும், அறிவுரைகளையும் வழங்கினாள்.

பெருமழை பொழிந்து, காவிரிக்கரை உடைய கரிகாலன் மண்சுமந்து கரையை அடைக்குமாறு வலங்கையரை ஏவினான். அவர்கள் மறுக்க இரு வலங்கையர்களை யானைக் காலில் இட்டுத் தலையை இடற ஆணையிட்டான். யானை இடற உருண்டோடிய வலங்கையர்களின் தலைகள் 'கூடைதொடோம்' எனக் கூறிக்கொண்டே ஓடின.

எஞ்சிய ஐந்து வலங்கையர்கள் எழுநூறு பேராகப் பெருகிப் பல நாடுகளுக்கும் தலைவராயினர். இவர்கள் வழிவந்த வெங்கலராசன் என்பவன் நாஞ்சில் நாட்டிலுள்ள மணவைப் பதியை அடுத்த சாமிக்காட்டுவிளை என்ற இடத்தில் வெங்கலக் கோட்டையிட்டுத் தங்கினான். அவனுடைய இரு பெண் மக்களான திரை முகத்தழகி, சங்கு முகத்தழகி என்பவர்கள் பறக்கை நகரில் எழுந்தருளியிருந்த மதுசூதனப் பெருமாளுக்கு நடைபெற்ற ஆராட்டு விழாவைக் காணச் சென்றனர். அம் மகளிரின் அழகு கண்ட வஞ்சிநாட்டு மன்னன் அவர்களை மணக்க விரும்பி வெங்கலராசனிடம் மணத் தூது அனுப்பினான். குலப்பெருமை கருதி மணம் செய்து தர மறுத்த வெங்கல ராசனின் கோட்டை மீது வஞ்சி மன்னன் போர் தொடுத்தான். படை பலம் இல்லாத வெங்கலராசன் தோல்வியடைவது உறுதி என்ற நிலை ஏற்பட்டது. அப்பொழுது மூத்த மகள் திரைமுகத் தழகியின் வேண்டுகோளின்படி அவளுடைய தலையை அறுத்துக் கோட்டைக்கு வெளியே எறிந்தான் வெங்கலராசன். வஞ்சி நாட்டு மன்னன் அத்தலையை எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்தான்.

வஞ்சிமன்னனின் தொல்லைக்கு அஞ்சிய வெங்கலராசன் தன் இளையமகள் சங்கு முகத்தழகியை அழைத்துக் கொண்டு குறும்பூரில் குடியேறினான். ஒருநாள் குளித்துவிட்டுக் கோட்டை மீது நின்று முடி உலர்த்திய சங்கு முகத்தழகியின் நீண்ட கூந்தல் முடியொன்று தெருவில் வந்து கொண்டிருந்த குறும்பூர் மன்னனின் பல்லக்கில் விழுந்து சுற்றியது. அம்மன்னன் அம்முடியின் நீளத்தை அளந்து பன்னிரு சாண் நீளமுள்ளதை அறிந்தான். தன்னுடைய நாட்டுப் பெண்களுக்கு அத்தகு நீண்ட கூந்தல் இல்லையென்பதை அறிந்திருந்த மன்னன் சங்கு முகத்தழகியை மணம் முடிக்க, வெங்கலராசனுக்கு மணத் தூது அனுப்பினான். வெங்கலராசன் மணம் மறுத்தபோது தக்க சூழ்ச்சியால் தன் எண்ணத்தைக் குறும்பூர் மன்னன் நிறைவேற்ற விரும்பினான்.

வேள்வி செய்து செங்கிடாய்க்காரன் என்ற தீய தேவதையை எழுப்பி, அத்தேவதையை மாங்கனி வடிவத்தில் சங்கு முகத்தழகியின் குடத்தில் நுழையவிட்டான் குறும்பூர் மன்னன். அரசனுக்குரிய காவல் மரத்தின் மாங்கனியை, சங்குமுகத்தழகியின் குடத்திலிருந்து எடுத்த காவலர்கள் அவளைக் 'கனி திருடிய கள்ளி' எனக் குற்றம் சாட்டி அரசன் முன்பு கொண்டு நிறுத்தினர். அதை அறிந்த வெங்கலராசன் அவமானத்தால் கோட்டையை அடைத்து உள்ளே இருந்து உயிர் துறந்தான். அரசனின் இழிமொழிகளைப் பொறுக்காத சங்குமுகத்தழகி ஈசனை வேண்டி மன்னனின் நகரத்தில் மண்மாரி பொழியச் செய்து அந்நகரை அழித்துத் தானும் உயிர் துறந்தாள்.

வெங்கலராசன் கதை காட்டும் குலப்பெருமைக் கூறுகள்

வெங்கலராசன் கதைப்பாடலில் பெரும்பாலான நிகழ்ச்சிகள் வலங்கையர்களின் குலப்பெருமையை உயர்த்திக் காட்டுவதாகப் படைக்கப்பட்டுள்ளன. அவை:

1. அந்தணனாய ஒரு முனிவனுக்குப் பிறந்தவர்கள் வலங்கையர்கள் எனப் பிறப்பால் அந்தணர் குலத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளனர்.
2. காளியுடன் இணைந்து தாருகாசுரனைக் கொன்ற தீரம், கரிகாலன் படையில் பணியாற்றியமை, தாங்களே கோட்டை, கொத்தளங்கள், கொடி, படைகளுடன்

அரசர்களாக ஆண்டமை, காரானைக் கையர் (வரி. 675), வீரச் சான்றோர் எனும் பொருள்படும் வண்டச் சான்றோர் (வரி. 1096) என வலங்கையரின் சத்திரியப் பண்பான வீரம் கதைப்பாடலில் புகழப்பட்டு அவர்கள் அரச மரபினர் என நிறுவக் கதைப்பாடல் முயன்றுள்ளது.

3. வலங்கையரைக் காளியே வளர்த்தாள் என்ற வளர்ப்புப் பற்றிய நிகழ்ச்சிகள்.
4. வலங்கையர்க்குரிய தொழில்களாகப் போர்த்தொழில், பனைத் தொழில், வாணிபம் என்பன அமைந்திருந்தன என்றும் இத்தொழிலின் உன்னதம் பற்றிப்பேசும் பகுதி ஆளும் குல உயர்வைக் காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
5. பிற சாதிகளைத் தாழ்த்துவதன் மூலம் தம் சாதி உயர்வானது எனக் கூறும் முயற்சிகள்.
6. வலங்கையரின் உயர்ந்த கொள்கைச் சிறப்புப் பற்றிப் பேசும் பகுதிகள்.
7. சிறப்புப் பட்டங்களைக் குறிப்பிடும் நிகழ்ச்சிகள்.
8. இயற்கையும் வலங்கையருக்கு உறுதுணையாக அமைந்தது எனக் கூறும் பகுதிகள்.
9. வலங்கையர் குலப் பெண்டிரின் பெருமை பேசும் நிகழ்ச்சிகள்.

ஆகியன வலங்கையர் குல உயர்வை நிலைநாட்டக் கதைப் பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இக்கதைப்பாடலில் காணப்படும் மணமறுப்புச் சிக்கலும் கட்டுப்பாட்டு மீறலும்

வெங்கலராசன் தென் நாஞ்சில்நாட்டிலுள்ள சாமிக் காட்டு விளையில் வெங்கலக் கோட்டையிட்டுத் தன் மக்கள்மாருடன் வாழ்ந்து வரும்பொழுது பறக்கை நகரிலுள்ள மதுசூதனப் பெருமாளுக்குத் தீர்த்தவாரித் திருவிழா என்ற ஆறாட்டு விழா நடைபெற்றது. மூத்தமகள் திரைமுகத்தழகி அந்த ஆராட்டு விழாவைக் காண விருப்பம் மிகக் கொண்டு தந்தையிடம் அனுமதி வேண்டினாள்.

ஏராரும் பூவுலகில் மக்கா எல்லாரும் அதில்வருவார்
ஆருபிள்ளை ஆரெனவே அல்லோரும் பார்த்திடுவார்
வாராருங் குழலாளே வல்வினையை விளையாதே

....

நாடாளும் ராஜாவும் நல்லமகளே அதில்வருவார்
சாடாதே என் மகளே சல்லியத்தை விளையாதே[33]

எனத் தந்தை அனுமதி மறுத்துக் கூறியபோதும் தன் தங்கை சங்குமுகத்தழகியுடன் ஆறாட்டு காணச் சொன்றாள் திரைமுகத்தழகி. அங்கு, தந்தை அஞ்சியது போன்றே வஞ்சி மன்னனின் மந்திரிமாரும் மன்னனின் உற்ற நண்பர்களும் வலங்கையர் குலப் பெண் மக்களின் மிக்க பேரழகு கண்டு வியந்தனர். மற்றோரும் இவர்கள் நிற்குமிடம் வந்து நெருங்கினர். அப்போது மன்னனின் மந்திரிமார்,

ஆர்தான் வளைந்தாலும் அடுக்க நின்று பார்த்தாலும்
சேரமன்னன் தனக்கல்லாது சேராது ஒருவருக்கும்
வஞ்சி மன்னர்க் கல்லாதே வல்லவர்க்குங் கிட்டாது[34]

என எண்ணிக் கொண்டு கொஞ்சுங் கிளிமொழியினரின் அழகைக் கொற்றவர்க்கு எடுத்துரைத்தார்.

அதே சமயம் மன்னருக்கு உற்ற தோழர்களும் அப் பெண்களைப் பற்றி மன்னரிடம் கீழ்க்காணுமாறு விவரிக்க லானார்கள்.

ஐயாவே தம்புரானே அரசமன்னா நீர் கேளும்
வையகத்தில் கண்டதில்லை வலங்கைக்குலந் தனிலொருவன்
மன்னவனே இப்படிப் பெண் மலைநாட்டில் கண்டதில்லை
பன்னிரு சாண் முடியழகும் பட்டுடையு மொப்பினையும்
பள்ளிக் கட்டிற் கொத்தபெண்தான் பாவையர்க ளிருபேரும்
கள்ளமில்லை மன்னவனே கட்டுரை வீணல்லவென[35]

உரைக்கலானார்கள்.

பெண் மக்கள் இருவரும் சாமிக்காட்டு விளையில் வெங்கலக் கோட்டை கட்டி வாழ்ந்து வரும் வெங்கலராசனின் மகள்கள் என விசாரித்தறிந்த மன்னன் மணத்தூது அனுப்பினான்.

---

33. பதிப்பாசிரியர் இரா. நிர்மலாதேவி, The Dateless Muse (வெங்கலராசன் கதை), வரி. 1470-1473, 1475-1476.

34. மேற்படி, வரி: 1516-1518.

35. மேற்படி, வரி: 1522-1527.

ஓட்டன் கொணர்ந்த ஓலையை வாசித்தறிந்த வெங்கலராசன் தன்னிலும் தாழ்ந்த குலத்தானான வஞ்சி மன்னன் தன் பெண் மக்களை மணம் பேசுவதா என வெகுண்டான்.

> கூலிக்குக் கூத்திமகன் குவலயத்தை ஆள
> கொடுப்பதில்லை ஓட்டா நீ கோட்டைக்கப்பால் போடா[36]

என ஓலையைக் கிழித்தெறிந்து ஓட்டனையும் வெருட்டித் துரத்தினான். மணமறுப்பு இக்கதையில் இவ்வாறு சிக்கலாக உருவெடுத்துள்ளது. குல ஏற்றத்தாழ்வு சிக்கலுக்குக் காரணமாகி யுள்ளது.

தந்தைவழிச் சமுதாய அமைப்பின் வழிவந்த வெங்கல ராசன் தாய்வழிச் சமுதாய அமைப்பின் வழிவந்த வஞ்சி மன்னனுக்குத் தன் பெண்மக்களைக் கொடுக்க விரும்பவில்லை. தன் குலம் பின்பற்றி வரும் தந்தைவழிச் சமுதாய அமைப்பு உயர்ந்தது; சிறந்தது என அவன் நம்பினான். தாய்வழிச் சமுதாய அமைப்பில் ஆண் வாரிசுகளுக்கு அரசுரிமை இல்லை என்பதனால் தாய்வழிச் சமுதாய அமைப்பைப் பின்பற்றும் வஞ்சி நாட்டு மன்னனின் குலம் தாழ்வானது என வெங்கலராசன் கருதினான். தன் பெண் மக்களை வஞ்சிநாட்டு மன்னனுக்கு மணம் செய்து தந்தால் தன் பெண்கள் பெறும் ஆண் வாரிசு களுக்கு அரசுரிமை இருக்காது என்பதை அறிந்தே வெங்கல ராசன் மணம் மறுத்தான். இருவேறு மண விதிகளும், உரிமை முறைகளும் கொண்ட சமூகத்தாரிடையே மணம் செய்து கொள்வது என்பது இயலாது. இந்த நிலவுடைமைக் கருத்தினா லேயே மணம் மறுத்தான். மணமறுப்பை அறிந்த வஞ்சி நாட்டு மன்னன் வெகுண்டெழுந்தான்.

> மாலையிட்டுத் தரமாட்டோ மென்றவனுஞ் சொல்லி
> வையகத்தில் கோட்டையிட்டுத் தானுமிருப் பானோ
> சாமிக்காட்டு விளைதனிலே சான்றோர்க ளென்று
> தங்கமணிக் கோட்டையிலே வெங்கல ராஜன்
> ஆண்டகப்பந் தாராமல் கோட்டையது மிட்டு
> அரசருக்கு ஒப்பாக அவனுமிருப் பானோ
> மாலையிட மாட்டேனென்ற வெங்கல ராஜன்
> மகளையிப்போ சிறையெடுத்து வரவேணு மென்ன

36. பதிப்பாசிரியர் இரா. நிர்மலாதேவி, The Dateless Muse (வெங்கலராசன் கதை), வரி: 1579-1580.

கோட்டையது தானிடித்துக் கொடியதுவு மறுத்துக்
கொண்டு வர வேணுமிப்போ.....[37]

என்று கோடிபடையுடன் வஞ்சி மன்னன் புறப்பட்டான். வெங்கலராசனின் கோட்டை படையால் சூழப்பட்டது.

வலிமை வாய்ந்த ஒரு நாட்டின் மன்னனுடன் மோத இயலாத வலிமை குறைந்த சிறுபடையுடைய சிற்றரசனான வெங்கலராசன் வழியறியாது திகைத்தான். தங்களை மணம் வேட்டுவரும் வஞ்சி மன்னனிடமிருந்து தங்கள் தந்தையையும் தங்கள் குலப்பெருமையையும் உயர்வையும் காக்கத் தன் தலையை அரிந்து கோட்டைக்கு வெளியே எறிந்து விடுமாறு இளைய மகள் திரைமுகத்தழகி கூறினாள். தங்கள் குல உயர்வு, தந்தைவழிச் சமுதாயம் என்ற நிலவுடைமை அமைப்பு முறை ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கும் தந்தை வெங்கலராசன் இவற்றைக் காத்துக் கொள்ள, இவற்றை நிலை நிறுத்திக் கொள்ள தான் பெற்று வளர்த்த மகளைப் பலியிட்டான்.

வஞ்சி மன்னன் சேர நாட்டின் பேரரசன்; பெரும்படை பலம் உடையவன் என்ற எண்ணத்தில் சிறுபகுதியின் சிற்றரசனாயிருந்த, சிறுபடை பலம் கொண்ட மற்றொரு வலங்கையர் குல வெங்கலராச மன்னன் மீது தன் ஆதிக்கத்தை, பாலியல் விருப்பத்தைத் திணிக்க முயன்றான், வஞ்சி நாட்டு மன்னன். அந்தப் பாலியல் கட்டுப்பாட்டை, அந்தப் பாலியல் எண்ணத்துக்குக் காரணமாக அமைந்திருந்த தன் மகளையே கொன்றதன் மூலம் தன் மீது திணிக்கப்பட்ட பாலியல் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்தான் வெங்கலராசன். பாலியல் வன்முறைக்கு எதிரான ஒரு போர் முறையாகவே இதனைக் கருதலாம். இதன்வழிப் பாலியல் கட்டுப்பாட்டை மீறிக் கட்டுப் பாட்டு மீறலை நடத்தியவனாக வெங்கலராசன் காணப்படு கின்றான். ஆளும் வர்க்கம் தன் ஆதிக்கத்திற்குட்பட்டவன்மீது செலுத்த முயன்ற பாலியல் தாக்குதல் இதன் மூலம் முறியறி யடிக்கப்பட்டுத் தற்காலிகமாக முற்றுப் புள்ளியும் வைக்கப் பட்டுள்ளது.

இதே போன்றதொரு கதைப்பாடல்தான் தோட்டுக் காரியம்மன் கதைப் பாடலாகும்.

---

37. பதிப்பாசிரியர் இரா. நிர்மலாதேவி, The Dateless Muse (வெங்கலராசன் கதை), வரி: 1595-1604.

தோட்டுக்காரி கதைப்பாடற் சுருக்கம்

இக்கதைப்பாடல் பதிப்பு விவரங்கள் கதைப்பாடல் அகர வரிசைப் பட்டியலில் தரப்பட்டுள்ளன. இக்கதைச் சுருக்கம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடான தோட்டுக்காரி கதையை அடிப்படையாகக் கொண்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த முட்டப்பதியில் கோனாண்டி ராசா, குண்டு கண்ணு ராசா என்ற மன்னர்கள் கோட்டை கட்டி ஆண்டு வந்தனர். கோனாண்டி ராசாவின் மகள் தோட்டுக்காரி தோழியருடன் பந்தடித்து விளையாடும் பொழுது குண்டுகண்ணு ராசாவின் மகன் குமரப்பராசா கண்ணுற்று மணம் புரிய விழைந்தான். தந்தையிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். குமரப்ப ராசாவின் தந்தை குண்டுகண்ணு ராசா மணத் தூது அனுப்பினான். கோனாண்டிராசா மணம் செய்து தர மறுத்தான். படைகொண்டு சென்று வென்று பெண்ணைச் சிறையெடுத்து வரலாம் என்று புறப்பட்ட தந்தையை நிறுத்தி விட்டுக் குமரப்ப ராசா, தானே வேட்டையாடப் புறப்படுவது போல் படை கொண்டு சென்று சுனையில் தோழியருடன் நீராடிக் கொண்டிருந்த தோட்டுக்காரியைச் சிறையெடுத்து வந்தான். செய்தி அறிந்த கோனாண்டி ராசா படையுடன் வந்து போரிட்டான். இருபுறமும் பேரழிவு ஏற்பட்டது. கோனாண்டி ராசா மடிந்தான். முட்டப்பதி கோட்டையும் அழிந்தது. தன்னால் நிகழ்ந்த பேரழிவைக் கண்ணுற்ற தோட்டுக்காரி தீப்பாய்ந்து மடிந்தாள். குமரப்ப ராசாவும் தீயில் விழுந்திறந்தான். இருவரும் தெய்வமானார்கள்.

இக்கதையில் காணலாகும் கட்டுப்பாட்டு மீறல்கள்

மன்னர் குலம் என்ற ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தனக்கு நிகரானவன் அல்ல; தன் உறவினனும் அல்ல என்ற காரணங்களால் மணம் மறுக்கப்பட்டதைக் கதைப்பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

ஆமோடா அவன் எனக்கு நிகரோதான்
அறியானோ என் கீர்த்தியும் செய்கையும்
. . . . .
எந்தனக்கு இவன் சரிதா னோடா

ஈத்தாங்காட்டுக் குள்ளே கோட்டை போட்டதாலே
எனக்குச் சரியென் றிருக்கிறானோ பயல்

பயல் பெண்கேட்டு வந்தவ னாரடா
முறைமாமன் மகனோ அவனோடா[38]

செல்வ வளம், செல்வாக்கு, புகழ், பெருமை போன்றவற்றோடு ஒப்ப இல்லாதவரோடு மணவுறவு வைத்துக் கொள்ள இயலாது என மணம் மறுக்கப்பட்டது. மணம் மறுக்கப்பட்டதும், மணத் தூது வந்த தூதனை இழித்துப் பேசி, அடித்துத் துரத்தியதும் எதிராளியைக் கொதித்தெழச் செய்ய, கதைப்பாடலில் சிக்கல் முறுக்கேறுகிறது. வேட்டையாடப் போவதுபோல் படை கொண்டு சென்று பெண்ணைக் கடத்தி வந்து மாடத்தில் சிறை வைக்கவே, பெண்ணை மீட்டுக் கொண்டு வரவேண்டும் அல்லது உயிர் துறக்க வேண்டும் என, மான, அவமானச் சிக்கலாகக் கதை நிகழ்வுகள் மாற்றம் பெறுகின்றன. இரு தரப்பாருக்கும் பெண் பொருட்டு நடைபெறும் போரில் பெண்ணைப் பறி கொடுத்தவனின் கை தாழ்ந்து, கோட்டை அழிக்கப்படல், உயிர் இழக்கப்படல் என்ற பேரழிவுகள் நடைபெறுகின்றன தனக்காக நடைபெற்ற போரில் உற்ற தந்தை, உறவினர், படைபலம், இருப்பிடமாய கோட்டை, கொத்தளங்களை இழந்த தன்மை தற்கொலைக்குத் தூண்டுகோலாக அமைய, உயிர்வாழ விரும்பாத தோட்டுக்காரி தீப்பாய்ந்து இறந்தாள். வலிய படை மூலம் எளிய படையையும், எளியவனின் பெண்ணையும் அடைய நினைத்த எதிராளியின் முயற்சி இவ்வாறு முறியடிக்கப்படுகிறது. இதில் பெண் தற்கொலைக்குத் துரத்தப்படுகிறாள் என்பது வெளிப் படையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. பெண்ணின் உயிரிழப்பிற்கு முக்கியக் காரணியான குமரப்பராசா தன் மனச் சாட்சி உறுத்தல் காரணமாகத் தானும் தற்கொலை செய்து கொண்டான்.

சாலமுடன் நாமிருந்தால் தாரணியோர் ஏசுவாரே
ஏசுவாரே நாம் இருந்தால் இறந்தால் பலன்தான் என்று
வீசும்புகழ் மலைமார்பன் வேந்தன்கும ரப்பராசன்
வேடிக்கையாய் ஓடிவந்து வெள்ளியப் பாறைதனிலே
சாடிவிட்டார் வேள்வியிலே தாரும்வரம் நமக்கெனவே[39]

என்கிறது கதைப்பாடல்.

38. பதிப்பாசிரியர் வ. அலமேலு, தோட்டுக்காரி கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, ப. 99.

39. மேற்படி, ப. 123.

எதிராளியுடன் மோதினால் வெற்றி கிட்டுமா என்பதில் உறுதி இல்லாத நிலை இருந்த போதிலும் மணம் செய்துதர மறுத்த மன்னன் கோனாண்டி ராசனுக்குத் தன் உயிரினும் தன் மகள் உயிரினும் தன் குடி, படைகள், கோட்டை, கொத்தளங் களை விடவும் குலகௌரவம் என்பதே மேலானதாகக் கொள்ளப் பட்டது. தன் குலப்பெருமை, குலகௌரவம் ஆகியவற்றின்மீது பாலியல் விருப்பின் பேரில் தாக்குதல் நடத்திய குண்டுகண்ணு ராசாவின் செயல் தோட்டுக்காரி உயிர்விட்டதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது. தன்மீது திணிக்கப்பட்ட பாலியல் கட்டுப்பாட்டை தன் உயிரைப் பலியிட்டு மீறியுள்ளாள் தோட்டுக்காரி. தன் தந்தை, உற்றார், உறவினர், நாடு, நகரம், படை, குடி என்ற அனைத்தையும் அழித்தொழித்து, தன்னையும் கடத்தி வந்து சிறை வைத்துத் தங்களின் பாலியல் விருப்பை நிறைவேற்றத் துடித்த குமரப்ப ராசாவின் விருப்பத்தை முறியடிக்க விரும்பினாள் தோட்டுக்காரி. தன் உடல் மீது ஏற்பட்ட வேட்கையினால் நடத்தப்பட்ட இத்தகு கொடும் அழிவுகளுக்குத் தன் உடலை அவனிடம் ஒப்படைக்காமல் இருப்பதே தான் தரும் தக்க தண்டனை என அவள் எண்ணினாள். அதனால் தன் உடலைத் தீயிட்டுக் கொளுத்தி அழித்தாள் தோட்டுக்காரி. இதன்மூலம் தன் மீது திணிக்கப்பட்ட பாலியல் வன்முறை என்ற கட்டுப்பாட்டை, அதிகார வெறியினால், படை பலத்தால் சாதிக்க எண்ணிய எண்ணத்தை முறியடித்து வெற்றி கொண்டாள் தோட்டுக்காரி. எதிர்த்துப் போராடப் பலம் அற்றவர்கள் தங்களையே அழித்துக்கொள்வதன் மூலம் தங்களின் மீது நடத்தப்படும் பாலியல் பலாத்காரத்தை இவ்விதம் எதிர்த்துள்ளார்கள். வேட்கப்பட்ட தங்கள் உடலை மாய்த்துக் கொள்வதன் மூலம் தங்கள் மீது திணிக்கப்பட்ட பாலியல் கட்டுப்பாட்டை மீறியுள்ளார்கள் என்பது வெளிப்படத் தெரியவருகின்றது.

2. வர்க்கவேறுபாடு காரணமாக விளைந்த மணமறுப்புச் சிக்கலில் கட்டுப்பாட்டு மீறல்

ஆளும் வர்க்கம் - அடிமை வர்க்கம் (ஆளப்படுபவர் வர்க்கம்) என்ற இரு வர்க்க வேறுபாடுகள் சமுதாயத்தில் இருந்து கொண்டே இருக்கின்றன. இந்த வர்க்க வேறுபாட்டின் காரணமாக இவை சமுதாயத்தின் இருவேறு அங்கங்களாகப் பிரிந்தே வாழ்ந்து வந்திருக்கின்றன. இந்த வர்க்க வேறுபாடு

கொண்டவர்களுக்குள் மணவுறவுகள் நிகழ்வதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. மணவுறவு வேட்கை ஆளும் வர்க்கத்திலிருந்து எழுந்தபோது அது தன் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிக்கல்களை நீக்கி மணவுறவுகளைக் காலங்காலமாக மேற்கொண்டு வந்ததைப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அப்போது அடிமை வர்க்கமான ஆளப்படும் வர்க்கம், அத்தகு மணவுறவுகளைச் சிலபோது வேறு வழியேதும் இல்லாமல் ஏற்றுக் கொண்டும், சிலபோது ஏதாவது ஒரு வகையில் எதிர்த்தும் வந்துள்ளதற்கும் இலக்கியச் சான்றுகள் உள்ளன.

சங்க காலத்தில் மூவேந்தர்கள், குறுநில மன்னன் பாரியிடம் அவனுடைய மகள்களான அங்கவை, சங்கவை ஆகியோரை அவர்களுக்கு மணம் முடித்துத் தரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பாரி மணம் மறுத்தான். மூவேந்தர்களும் சிற்றரசனான சிறுபடை கொண்ட பாரியின் பறம்பு மலை நாட்டைத் தங்களின் பெரும்படையுடன் வந்து முற்றுகையிட்டனர். எதிர்த்துப் போரிட்டால் தோல்வி உறுதி என்றபோதும் மூவேந்தரின் அடக்குமுறைக்கு, அதிகாரத்திற்கு, கட்டுப்பாட்டிற்கு அடங்கலாகாது என்ற எண்ணத்துடன் பாரி போரிட்டான். இறுதியில் பாரி போரில் இறந்தான். நமக்குக் கிட்டும் இலக்கியச் சான்று வழி அதிகாரவர்க்கத்தின் மண வேட்கைக்கு மணமறுப்புக் கூறிக் கட்டுப்பாட்டு மீறல் நடத்திய முதல்வனாகப் பாரியைப் பார்க்க முடிகின்றது.

நாட்டுப்புறக் கதைப்பாடலான பாலம்மாள் கதையும் மணமறுப்புச் சிக்கலால் எழுந்த கட்டுப்பாட்டு மீறலைத் தெளிவுற எடுத்துக்காட்டும் தக்கதொரு சான்றாகத் திகழ்கிறது எனலாம்.

பாலம்மாள் கதை விவரம் கதைப்பாடல் அகரவரிசைப் பட்டியலில் தரப்பட்டுள்ளது. ஆளும் அதிகார வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தின் மீது நடத்திய பாலியல் கட்டுப்பாடு எவ்விதம் மீறப்பட்டது என்பதை இக்கதைப்பாடல் விவரித்துள்ளது.

கதையாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராதாபுரத்திலிருந்து அஞ்சு கிராமத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ஊர் இருக்கந்துறை என்பதாகும். அவ்வூரில் பால்வண்ணத் தேவர் என்பவர் தன்னுடைய நான்கு தம்பிமார்களுடன் வாழ்ந்து

வந்தார். அவருக்கு அனைத்து விதமான செல்வங்கள் இருந்தும் குழவிச் செல்வம் மட்டும் இல்லாமலிருந்தது. முருகனை வழிபட்டு வேண்ட, பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு 'பாலம்மாள்' என்று பெயரிட்டுச் சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தார். மிகச் சிறந்த அழகியாக வளர்ந்த அவள், பெரிய பெண்ணானவுடன் பூப்பு நன்னீராட்டு விழா நன்முறையில் நடத்தப் பெற்றது. அவளுடைய தலைமுடி ஆறுபாகம் கொண்டதாக அடர்ந்து நீண்டு அழகுக்கு அழகு சேர்த்தது. அந் நிலையில் இருக்கந் துறைக்கு வரிப்பணம் வசூலிக்க விசயாபதி என்ற ஊரில் இருந்து வெள்ளைக்காரத் துரை ஒருவர் வந்தார். அவர் பால்வண்ணத்தேவர் வீட்டைக் கடக்கும்போது அவர் வந்த வெள்ளைக் குதிரையின் காலில் ஒரு நீண்ட முடி சிக்கியிருந்ததைப் பார்த்தார். முடியின் நீண்ட அளவைப் பார்த்த வெள்ளைத் துரைக்கு அத்தகு நீண்ட முடியுடைய அவ்வீட்டுப் பெண்ணை அடைய வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. விசையாபதிக்கு வந்தவுடன் இருக்கந்துறையிலுள்ள வீட்டுத் தலைவர் பால் வண்ணத் தேவரையும் அவருடைய தம்பிகளையும் வரவழைத்தார்; பெண் கேட்டார். அவர்களால் மறுப்பேதும் சொல்ல இயல வில்லை. வீடு திரும்பினர். கொடுத்தாலும் குறைவு, கொடுக்காமலும் இருக்க முடியாது. அண்ணனும் தம்பிமார்களும் அனைத்து விதமான ஆலோசனைகளையும் செய்தார்கள். ஒன்றும் புலப்பட வில்லை. இறுதியாக ஒரு முடிவு செய்தார்கள். பெண்ணைக் கொன்று விட வேண்டும் என்பதே அம்முடிவு. அதனைச் செயல்படுத்த முனைந்தார்கள். அதன்படி, ஆறடி ஆழத்தில் குழி தோண்டினார்கள். "தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் இன்று ஊருக்குள் வருவதாகத் தகவல் எட்டியதால் ஏணி மூலமாக இக்குழிக்குள் இறங்கி ஒளிந்து கொண்டால், அத்திருடர்கள் சென்றபின் வெளியேற்றி விடுகிறோம்" எனப் பொய்சொல்லி, பாலம்மாளைக் குழிக்குள் இறங்க வைத்தனர். அவள் இறங்கியவுடன் ஏணியை மேலே தூக்கிவிட்டுக் குழியை மண்போட்டு மூடத் துவங்கினர். கண்ட பாலம்மாள் அழுதாள்; அரற்றினாள்; புலம்பினாள். சாபம் தந்து மடிந்தாள். பால்வண்ணத் தேவரும், அவருடைய தம்பிமார்களும் வெள்ளைத்துரைக்குப் பயந்து ஊரைவிட்டு ஓடினர். தொடர்ந்து அவர்களுடைய குடும்பத்தில் தொல்லைகளும் துயரமும் அதிகரித்தன. இறுதியில் தாங்கள் செய்த பாவத்தின் பலன்தான் துயரங்கள் என்பதை உணர்ந்து பாலம்மாளைக் கன்னித் தெய்வமாக வழிபட்டனர்.

பாலம்மாள் கதை பாலம்மாள் என்ற கன்னித் தெய்வக் கொடை விழாவில் வில்லுப்பாடலாகப் பாடப்பெற்றதாகும். இப் பாடலைக் கதையின் வரலாற்றை அறிந்து கட்டிப்பாடியவர் மேலச் செவல் கிருஷ்ணாம்பாள் ஆவார்.[40] வில்லுப்பாட்டு வடிவிலேயே எழுத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ள இக்கதைப் பாடல் மொத்தம் 132 வரிகள் கொண்டதாகும்.

இன்றும் இராதாபுரத்தில் பால்வண்ணத்தேவர் வம்சாவளி வந்த ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் கூறியதாவது:

> **பாலம்மாளைக் குழிக்குள் இறக்கி மண்ணள்ளிப் போட்ட பொழுது அவளது கண்ணில் மண்விழுந்து முதலில் கண் பார்வை போயிற்று. அதனால் அக்குடும்பத்தில் வீட்டுக்கு ஒருவருக்குக் கண் தெரியாமல் போகும் நிலை ஏற்பட்டது. இன்று வரை இந்நிலைமை தொடர்கிறது.[41]**

என்றார்.

இக்கதையில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

வெள்ளைக்காரத் துரை ஆட்சி அதிகாரத்தில் உள்ளவன். பால்வண்ணத் தேவர் அத்துரையின் அதிகாரத்துக்கு ஆட்பட்டவர். பெண் கொடுத்துப் பெண் எடுப்பது அனைத்து நிலைகளிலும் சமமானவர்களுக்குள் நடக்கும் பொழுதே அது பொருத்தமானதாக, வெற்றிகரமானதாக அமையும் தன் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பெண் கேட்ட துரைக்குத் தன் மகளைக் கொடுத்தால் அடிமையான தனக்கு நேரும் கதியையே தன் மகளும் வாழ்நாள் முழுதும் அடைய நேரும் என்பதைச் சிந்தித்தே, மணம் முடித்துத் தருவதைவிடவும் அவளைக் கொன்று விடுவது தக்கது என்ற முடிவுக்கு வந்தார் பால்வண்ணத் தேவர். அவரைப் பொறுத்த அளவில் தன் பெண்ணை வெள்ளைக்காரத் துரைக்கு மணம் முடித்துக் கொடுப்பதும், அவளை மரண வாயிலுக்கு அனுப்புவதும் ஒன்றுதான் என்று கருதினார். அத்துடன் மணத்தைத் தவிர்க்கத் தன் மகளின் உயிரை

---

40. சு. சண்முகசுந்தரம், ஐந்து கதைப்பாடல்கள், ப. 168.

41. மேற்படி, ப. 177.

அழிப்பதைத் தவிர அவருக்கு வேறு வழி தெரியவில்லை. தங்கள் மீது திணிக்கப்பட்ட பாலியல் கட்டுப்பாட்டைத் தன் மகளைப் பலியிடுவதன் மூலம் மீறியுள்ளார் பால்வண்ணத்தேவர் இனத்தாலும், நாட்டாலும், மொழியாலும் வேறுபட்டிருப்பதுடன் அத்துரையின் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்டுள்ள தாங்கள், பெண்ணை அத்துரைக்கு மணம் செய்து கொடுத்து விடுவதால் மட்டும் இந்த வேறுபாடுகள் ஒழிந்துவிடாது என்பதை நன்குணர்ந்திருந்தார் பால்வண்ணத் தேவர். அதிகாரத்துக்கு அஞ்சித் தன் மகளைப் பலியிட்டுவிட்டார் என்றும், செல்வ மோகத்தால் தன் மகளை விற்றுவிட்டார் என்றும் கூறும் ஊரார் பழிச்சொல்லுக்கு அஞ்சி, இத்தகு இழிமொழிகளைக் கேட்பதை விடவும் மகளைக் குழிதோண்டிப் புதைத்து விடுவது நல்லது என்று தீர்மானித்தே காரியத்தைச் செயல்படுத்தினார் பால் வண்ணத்தேவர். ஆனால் தான் எதற்காகக் கொல்லப்படுகிறோம் என்பதை உணராமலே உயிரை விட்ட பாலம்மாளின் நிலை மிகக் கொடுமையானது என்பதைக் கதைப்பாடல் தெளிவுறச் சித்திரித்துள்ளது.

3. தொழில் ஏற்றத் தாழ்வு காரணமாக விளைந்த மணமறுப்புச் சிக்கலில் கட்டுப்பாட்டு மீறல்

ஒரே சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அன்னார் செய்யும் தொழிலில் ஏற்றத்தாழ்வு உள்ளபோது மணமறுப்பு நிகழ்ந்துள்ளது. இத்தகு மணமறுப்புச் சிக்கலால் விளைந்த கட்டுப்பாட்டு மீறலுக்குத் தக்க சான்றாகப் பூலங்கொண் டாளம்மன் கதைப் பாடலைக் கூறலாம்.

பூலங்கொண்டாளம்மன் கதை – அறிமுகம்

இக்கதைப் பாடல் 1977இல் அகஸ்தீஸ்வரத்தைச் சேர்ந்த ஆறுமுகப் பெருமாள் நாடாரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அகஸ்தீஸ்வரம் என்ற ஊர் இக்கதைப் பாடலில் 'கும்பமுனிபுரம்' எனக் குறிக்கப் பெற்றுள்ளது (வரி. 1). 'அகத்தீசர்புரம்' என்றும் சுட்டப்பட்டுள்ளது (வரி. 34). இக்கதைப்பாடலைப் பதிப்பித்த ஆறுமுகப் பெருமாள் நாடார் கதைப்பாடலில் வரும் பாத்திரமான மாலைக் குட்டிநாடார் கொல்லமாண்டு 850 அளவில் (கி.பி. 1675) பொடியன் விளையில் வந்து குடியேறிய தாகத் தன் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். குறிக்கப்

பட்டுள்ள ஆண்டினைக் கதைப்பாடலின் கதைத் தலைவியான பூலங்கொண்டாளின் உறவினர் கூறியதென்ற குறிப்பும் காணப் படுகின்றது. கதையில் எட்டாவது குழந்தையாகப் பூலங் கொண்டாள் பிறந்ததாகக் கூறப்படுவதால் பூலங்கொண்டாளின் இறப்பு கி.பி. 1700க்குப்பின் ஆகலாம். அவள் இறந்து 150 ஆண்டு களின் பின் கதை தோன்றியிருக்கவேண்டும். எனவே இக்கதைப் பாடலின் காலம் 18ஆம் நூற்றாண்டாகலாம் எனக் கணிக்கலாம். கதைப்பாடலின் மொத்த அடிகள் 865ஆகும்.

இக்கதை உண்மையில் நடந்த வரலாறு என்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. "பூலங்கொண்டாள் இறந்து கிடந்த கிணறு இன்று மூடப்பட்டுள்ளது. அது 'ஞானாம்பாகுளம்' எனும் வயற் பகுதியில் உள்ள எட்டு மூலைக் கிணறு எனக் கூறப்படுகிறது. இந்த இடம் அகஸ்தியர் கோவிலுக்குத் தென்கிழக்காகச் சுமார் அரைக் கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது."[42]

பூலங்கொண்டாளுக்கு இரு ஊர்களில் இரு கோயில்கள் உள்ளன. ஒன்று மாலைக்குட்டி நாடார் வந்து குடியேறிய பொடியன் விளையிலும், மற்றொரு கோவில் வடுகன் பற்று என்ற ஊரிலுள்ள அகஸ்தியர் கோயிலின் முன்புறமாகவும் உள்ளன. இரண்டிலும் பொடியன் விளைக்கோயிலே காலத்தால் முற்பட்டது. தற்போது கட்டிடம் எதுவும் இல்லை. ஓர் ஆலமரம் மட்டும் இங்குள்ளது. பூலங்கொண்டாளின் உடல் இங்குத்தான் புதைக்கப் பட்டது. புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மண் எடுக்கப்பட்டு இரண்டாம் கோவில் உருவாக்கப்பட்டது. பூலங்கொண்டாளின் ஆவிக்குப் பயந்த பொடியன் விளை மக்கள் அகஸ்தீஸ்வரம் மற்றும் அதன் அருகிலுள்ள மாடுகெட்டிவிளை எனும் ஊர்களுக்குக் குடிபெயர்ந்துவிட்டனர்.[43] பூலங்கொண்டாள் நூல் நூற்ற ராட்டை பூலங்கொண்டாள் கோயில் பூசாரியான சுயம்பு என்பவரது உறவினர் வீட்டில் இருப்பதாகவும் அறியப்படுகிறது.[44]

இக்கதைப்பாடல் பூலங்கொண்டாள் கோவில் திருவிழா நாட்களில் வில்லுப்பாட்டாக ஓரிரண்டு முறை பாடப்பட்டுள்ளது. சிறப்பாக விழா எடுத்தால் பூலங்கொண்டாள் வம்சாவளியினர்

---

42. பொன். கோவிந்தசாமி, தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுக் கட்டுரைகள், ப. 64.

43. மேற்படி, ப. 62-64.

44. மேற்படி, ப. 65.

குடும்பத்தில் சில துக்ககரமான நிகழ்ச்சிகள் நடப்பதாக அறியப்பட்டதால் சிறப்பான விழா எடுப்பது காலப்போக்கில் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.[45]

பூலங்கொண்டாள் கதை - கதைச் சுருக்கம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கல்லிடைக் குறிச்சி என்ற ஊரிலிருந்து மாலைக்குட்டி நாடார் என்பவர் தம் குடும்பத்துடன் இடம்பெயர்ந்து அகஸ்தீஸ்வரம் என்னும் ஊருக்கு அருகிலுள்ள 'பொடியன் விளை' எனும் இடத்துக்கு வந்தார். அங்குள்ள முட்காட்டினைத் திருத்தி ஒரு வீடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தார். அவருக்கு ஏழு ஆண் குழந்தைகள் பிறந்ததன் பின் எட்டாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் பூலங்கொண்டாள் எனப் பெயர் சூட்டி வளர்த்து வந்தார்.

பூலங்கொண்டாள் பருவமெய்தினாள். அப்பொழுது அவளுக்கு ராட்டையில் நூல் நூற்க வேண்டும் என்ற விருப்பு ஏற்பட்டது. தன் அண்ணன்மார்களைப் பார்த்துத் தனக்கொரு ராட்டை வாங்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். அண்ணன்மார் இருவரும் ராட்டை வாங்குவதற்காக இரணியல் என்னும் ஊரிலுள்ள 'திங்கள் சந்தை' எனும் சந்தைக்குச் சென்றனர். சென்ற வழியில் அவர்கள் பள்ளத்தூர் எனும் ஊரிலிருந்து மாடு பிடிப்பதற்காகத் திங்கள் சந்தைக்கு வந்து கொண்டிருந்த இரண்டு நாடார்களுடன் இணைந்து சந்தைக்கு வந்தனர்.

சந்தையிலிருந்து திரும்பிவரும் பொழுது நன்றாக இருட்டிவிட்டதால் பள்ளத்தூர் நாடார்கள் அண்ணன்மார்களைத் தங்கள் வீட்டில் இரவு தங்கி விடிந்ததும் செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அதன்படித் தங்கிய அண்ணன்கள் தங்கள் குடும்பக் கதை முழுவதையும் பள்ளத்தூர் நாடார்களிடம் பேசி இருந்துவிட்டு விடிந்ததும் கிளம்பி ஊர் வந்தனர்.

அது நடந்து சில நாட்கள் கழித்துப் பள்ளத்தூர் நாடார், உறவினர் சிலருடன் மாலைக் குட்டி நாடாரின் வீட்டுக்கு வந்தார். பகல் உணவிற்குப் பின்னர்ப் பள்ளத்தூர் நாடார் மாலைக்குட்டி நாடாரின் மகள் பூலங்கொண்டாளைத் தன் மகனுக்கு மணம்

45. பொன். கோவிந்தசாமி, தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுக் கட்டுரைகள், ப. 65.

பேச வந்ததாகத் தெரிவித்தார். "என் மகளைப் பெண் கேட்கும் தகுதியுடையவனோ நீ" எனக் கூறிச் சினந்த மாலைக் குட்டி நாடார் பள்ளத்தூர் நாடார் கொண்டுவந்த பொருட்களை யெல்லாம் வீசி எறிந்தார். அதனால் அவமானம் அடைந்த பள்ளத்தூர் நாடார் 'எண்ணி எட்டு நாளைக்குள் உன் மகளைக் கடத்திக் கொண்டு போகாவிட்டால் நான் பள்ளத்தூர் நாடான் அல்ல' எனச் சபதம் கூறி அகன்றார்.

அதே போன்று எட்டாவது நாள் அதிகாலை 'பூலங்கொண்டாள் ஒரு விதவை மூலம் கடத்தப்பட்டு, அவள் பிணம் அகத்தியர் கோவிலுக்கு நீர் இறைக்கும் எட்டுமூலைக் கிணற்றில் மிதந்தது. சில நாட்கள் கழித்துக் கிணற்றினைத் தூர் எடுக்கும் வேலை நடந்தது. வேலையில் ஈடுபட்டிருந்த சிலர் ஏற்றம் ஒடிந்து விழுந்து இறந்தனர். அதைச் செய்தது பூலங் கொண்டாளின் ஆவியே என்று நினைத்துப் பயந்து ஓடியவர்களில் ஒருவனும் விழுந்து இறந்தான். அவ்வேளையில் திடீரெனஅந்தணப் பெண் ஒருத்தியும் இறந்தாள். ஆக அனைத்து மரணத்துக்கும் காரணம் பூலங் கொண்டாளின் ஆவியே என எண்ணிய மக்கள் அகால மரணமுற்ற பூலங்கொண்டாளின் ஆவியை அமைதிப்படுத்த, அவளைத் தெய்வமாக்கி வழிபடத் தொடங்கினர்.

இக்கதைப் பாடலில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

ஒரே சாதியான நாடார் சாதியைச் சேர்ந்த இருவர் குடும்பங்களுக்குள் தொழில் ஏற்றத் தாழ்வு காரணமாக மணம் மறுக்கப்பட்டது. பள்ளத்தூர் நாடார் பனையேறும் தொழில் செய்து வந்தவராவார். மாலைக்குட்டி நாடார் முன்னேறிய வேளாண் தொழில் செய்து வந்தவராகும். இவர்கள் பனையேறும் தொழில் செய்யும் நாடார்களைத் தம்மிலும் கீழாக மதிப் பிட்டனர். பனையேறிக் கள்ளிறக்கும் தொழில் செய்பவர்களில் பலர் கள் குடிப்பவர்களாகப் பண்பு நிலையில் தாழ்ந்தும், குறைந்த வருவாய் கொண்ட பனையேறும் தொழில் காரணமாகச் செல்வ நிலையில் தாழ்ந்தும், மரமேறும் ஆபத்தான தொழில் காரணமாக எப்போதும் மரணம் ஏற்படலாம் என்ற ஆயுள் நிலையில் தாழ்ந்தும் காணப்பட்டனர். எனவே இவர்கள் பிற நாடார் பிரிவு மக்களால் தாழ்ந்தவர்களாக எண்ணப்பட்டனர்.

இத்தகு சமூகப் பொருளாதார நிலையிலும் சாதிப் பிரிவு நிலையிலும், தொழில் நிலையிலும் தாழ்ந்த பள்ளத்தூர் நாடார்

தன் மகளைப் பெண் கேட்டதால் மாலைக்குட்டி நாடார் மணம் மறுத்தார். இதனைப் பெருத்த அவமானமாகக் கருதிய பள்ளத்தூர் நாடார், இத்தகு அவமானத்துக்குப் பழி வாங்க, மணம் மறுத்தவரின் பெண்ணைக் கொல்லத் துணிவு கொண்டார். ஒரு விதவை மூலமாகப் பெண்ணைக் கடத்திவந்து கிணற்றில் மூழ்கடித்துக் கொலை செய்தார். தாழ்ந்த சாதிப்பிரிவினர் என்றும், செய்யும் தொழிலால் தாழ்ந்தவர் என்றும், செல்வநிலையில் குறைந்தவர் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டதைப் பலகாலமாகப் பொறுத்து வந்த ஒரு சமுதாயத்திலிருந்து ஓர் எதிர்ப்புச் செயல் எழுகின்றது. அதன் விளைவாக ஒரு கொலை நிகழ்த்தப்பட்டது. சாதிப் பிரிவையும், செய்யும் தொழிலையும், பொருளாதாரக் குறைவையும் காரணம் காட்டிப் பல வகைகளிலும் கட்டுப்படுத்தப்பட்டுக் கிடந்தவர் களின் ஒட்டு மொத்த மீறல்களின் முன் எழுச்சியாகப் பள்ளத்தூர் நாடாரின் செயலைக் குறிப்பிடலாம். அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு சமுதாயத்தின் பிரதிநிதி தன் அடிமைத்தனம் சுட்டிக் காட்டப்பட்டு, தான் இழிவுபடுத்தப்பட்ட பொழுது தன்னுடைய அனைத்துக் கட்டுக்களையும் உடைத்துக் கொண்டு பழிவாங்கல் உணர்வோடு எழுந்த மீறல் தன்மை இக்கதைப்பாடலில் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது எனலாம்.

செங்கிடாய்க்காரன் என்ற தெய்வத்தின் மூலமாகப் பூலங்கொண்டாள் கடத்தப்பட்டுக் கிணற்றில் தள்ளிக் கொல்லப்பட்டாள் என உள்ள பூலங்கொண்டாள் கதையில் காணப்படும் மாறுபட்ட நிகழ்ச்சி பிற்காலத்ததாக இருத்தல் வேண்டும். இவ்வாறு மனிதரால் செய்யப்பட்ட ஒரு செயல் தெய்வத்தால் செய்யப்பட்டதாக மாற்றப்பட்டதற்குப் பல காரணங்கள் இருத்தல் வேண்டும். அவை:

1. உண்மை நிகழ்ச்சியை மறைத்தல் வேண்டும்
2. இலக்கிய நயம் பட உரைத்தல் வேண்டும்
3. அநீதி செய்தவருக்குத் தண்டனையைத் தெய்வமே வழங்கியது என்ற எண்ணத்தை விதைத்தல்
4. பெண்ணை வரவழைக்க வாதையைப் பயன்படுத்தல் என்ற மந்திர முறைப் பயன்பாடு நடைமுறையில் இருந்ததைப் பயன்படுத்திக் கொள்ளுதல்

போன்றன காரணங்களாக இருத்தல் கூடும்.

எவ்வாறாயினும் கட்டுப்பட்டுக் கிடந்த மக்கள் பிரதிநிதி யாகக் குலத்தாழ்ச்சி சொன்னவரைப் பழி வாங்கியதன் மூலம் மீறல் நடத்தியவராகப் பள்ளத்தூர் நாடார் காணப்படுகின்றார்.

4. சாதி ஏற்றத்தாழ்வு காரணமாக நிகழ்ந்த மணமறுப்புச் சிக்கலால் கட்டுப்பாட்டு மீறல்

தமிழ்நாட்டு நிலவுடைமை அமைப்பில் சாதி ஏற்றத்தாழ்வு மிகவும் வலிமையுடையதாக இருந்தது. கீழ்ச்சாதியைச் சேர்ந்த ஒருவன் பொருளாதார நிலையில் மேம்பட்டாலும் அவன் கீழ்நிலையில் வைத்தே எண்ணப் பட்டான். அவன் தன்னுடைய பொருளாதார மேம்பாட்டை முன்வைத்து உயர்சாதி அதிகாரங்களை எவ்வகையிலும் அனுபவிக்க அனுபவிக்க அனுமதிக்கப்பட மாட்டான். சாதி என்பது பிறப்போடு ஒட்டி வருவதால் பிறந்தபின் அவன் அடையும் எத்தகு உயர்நிலையும் அவனைச் சாதி மாற்றத்துக்கு உட்படுத்தாது என்பதே நடப்பியல் நடைமுறையாக அமைந்திருந்தது. பொருளாதார நிலையில் சிறந்ததொரு மேம்பாட்டை அடைந்திருந்த கீழ்ச்சாதிக்கார னொருவன் உயர் சாதியாருடன் மணவுறவு கொள்ள முயன்றதால் தன் சாதி சனங்களுடன் ஒருமிக்க மடிந்த வரலாற்றைக் கூறும் நாஞ்சில் குறவன் கதை மேற்கூறிய நிலைகளுக்குத் தக்க சான்றாக அமைவதாகும்.

நாஞ்சில் குறவன் கதை – கதைச் சுருக்கம்

இக்கதை நாஞ்சில் நாட்டில் வழங்கி வருவதாகும். நா. வானமாமலை அவர்கள் தன்னுடைய நாட்டுப்புறக் கலையியல் என்ற நூலில் (ப. 141) இக்கதைக் குறிப்புகளை அளித்துள்ளார்.

தாடகை மலைச்சாரலில் கோணங்கிக் குறவன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் மலைகளிலிருந்து கூடை முடைவதற்கு மாறு முதலியனவற்றைச் சேகரித்து, கூடை முதலான பொருட்களைச் செய்து விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தான். ஒரு சமயம் அவன் மாறு வெட்டும்போது அருகிலிருந்த தைல ஊற்றில் அரிவாள்பட அது தங்கமாக மாறிற்று. அதுகண்டு மகிழ்ந்த அவன் இரும்புச் சாமான்களை மிகுதியாகத் திரட்டி அந்தத் தைல ஊற்றில் தோய்த்துத் தங்கமாக்கிப் பெருஞ் செல்வனாகிப்பின் அதிபதியாகவும் ஆனான். தேய்ந்த கொழு மற்றும் அற்றுப்போன மண் வெட்டி ஆகியவற்றையே தீர்வையாகப் பெற்று வந்தான். அவனுடைய மகனான பொம்மையாக்குறவன் என்பவன் பெரும்படை வைத்துக் கொண்டு நாஞ்சில் மலை நாட்டை ஆண்டு வந்தான். அவனுக்குப்

பின் ஆண்ட நாஞ்சில் குறவன் என்பவன் வெகுகாலத்துக்குப்பின் பிறந்த தன் மகனுக்கு மணம் முடிக்க விழைந்தான். அழகிய பாண்டியபுரம் சென்று அங்குள்ள பெரிய முதலியாரிடம் பெண் கேட்டான். பெரிய முதலியார் மணத்துக்கு இசைவு தெரிவித்தார். நாஞ்சில் குறவனை அவனுடைய குலத்துடன் அழித்துவிடக் கருதி வஞ்சக எண்ணத்துடன் பொய் மண்டபம் ஒன்றைக் கட்டினார். மாப்பிள்ளை வீட்டார் அனைவரையும் அம் மண்டபத்தில் தங்கவைத்துப் பொறியை இயக்கிக் கொல்வித்தார்.

உண்மைக் கதை:

நாஞ்சில் குறவன் கதை 150 முதல் 350 ஆண்டுகளுக்கு முன் நிலவுடைமைச் சமுதாய அமைப்பில் உண்மையில் நடந்த கதை என்பதைக் கள ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. மெக்கன்சி அவர்கள் தொகுத்த நாடோடிக் கதைகள் வரிசையில் இக்கதை இடம்பெற்றுள்ளது. அழகிய பாண்டியபுரத்தின் பக்கத்தில் குறத்தியறை என்ற பெயரில் ஊர் ஒன்று உள்ளதையும், அங்கே குறவன் தட்டுவிளை என்ற ஒரு பகுதியிருப்பதையும் சோரன் வயல், அரசன்பாடு வயல் என்னும் இரு வயல்கள் இருப்பதையும் இக்கதை நிகழ்ச்சிகள் உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் என்பதற்கு ஆதாரமாகக் கருதுகின்றனர்.

இக்கதையில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

குறவர் சாதி, முதலியார் சாதியை விடவும் நிலவுடைமை அமைப்பில் தாழ்ந்ததாகக் கருதப்பட்டு வந்தது. முன் தலைமுறையைச் சேர்ந்த குறவர் சாதியைச் சேர்ந்த ஒருவன் தற்செயலாக அமைந்த ஒரு நிகழ்வின் காரணமாகப் பெரும் பணக்காரனாக ஆனான். அந்த இரகசியத்தை அறிந்து கொண்ட அடுத்த தலைமுறையும் பணத்தைப் பெருக்கியது; பணம் படைத்த தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, ஆட்சி செய்யும் அதிகாரம் படைத்ததாகவும் ஆனது. பணபலம், ஆள்பலம், ஆட்சி அதிகாரம் என்ற அனைத்திலும் மேம்பட்ட போதிலும் பிறப்பிலேயே ஒட்டிக் கொண்டு வந்த சாதியை மட்டும் உயர் சாதியாக ஆக்க முடியவில்லை. ஆனால் பிற அனைத்து நிலையிலும் உயர்ந்த, தான் சமுதாய மட்டத்தின் மேல்நிலைக்கு வந்ததாகவும் சாதி உயர்வை அடைந்துவிட்டதாகவும் அது கருதிக் கொண்டது. அந்த எண்ணத்துடன்தான் அது உயர்சாதியெனக் கருதப்பட்ட

முதலியார் சாதியினருடன் மணவுறவு கொள்ள விழைந்தது. ஆனால் எல்லா நிலைகளிலும் உயர்நிலையை அடைந்து விட்டால் மட்டும் சாதி நிலையிலும் உயர்ந்துவிட இயலாது என்பதை உயர்சாதி உறுப்பினர் அழகிய பாண்டியபுரம் பெரிய முதலியார் உணர்த்தினார்.

நிலவுடைமைச் சமுதாயத்தின் முக்கியக் கொள்கையாக இருந்தது சாதிக்குள் மணவுறவு கொள்வது என்பதாகும். எந்தக் காரணத்தாலும் இதிலிருந்து வழுவுவதை அச்சமுதாயம் ஏற்றுக் கொள்வதில்லை. பணபலம், ஆட்சி அதிகார பலத்தை மையமாகக் கொண்டு உயர் சாதியினருடன் மணவுறவு கொள்ள நாஞ்சில் குறவன் முற்பட்டது கட்டுப்பாட்டு மீறலாகும். மணமறுப்பின் மூலமும், மணவுறவு வேண்டியவர்களைக் குலத்துடன் கொல்வித்ததன் மூலமும் நிலவுடைமை அமைப்பைப் பேணும் உயர்சாதி வர்க்கம் கட்டுப்பாட்டு மீறல்களைக் கொடூரமாக அடக்கியுள்ளமை தெரிய வருகிறது.

இக்கதை கதைப்பாடலாகப் பாடப்படாவிடினும் இதன் கட்டுப்பாட்டு மீறல் தன்மை கருதி இவ்வாய்வில் அடக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

காவல் தொழில் புரிவோரிடையேயான கட்டுப்பாட்டு மீறல்கள்

காவல் காக்கும் தொழிலைக் குறிப்பிட்ட இனத்தார் செய்து வந்தமைக்கான சான்றுகள் பல கதைப்பாடல்கள் மூலமாகக் கிடைக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாக, 1) சின்னத் தம்பி கதை, 2) பிச்சைக்காலன் கதை, 3) வன்னியராயன் கதை, 4) மதுரைவீரன் கதை, 5) முத்துப்பட்டன் கதை ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். சில கதைப்பாடல்கள் இத்தகு காவல் காக்கும் தொழில் செய்வோரிடையே நிகழ்ந்த கட்டுப்பாட்டு மீறல்களைப் பதிவு செய்துள்ளன. அத்தகு கதைப் பாடல் களாவன:

1. பலவேச சேர்வைக்காரன் கதை
2. சிவராமப் பாண்டியன் கதை
3. சோண முத்துப் பாண்டியன் கதை
4. மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை
5. வன்னியராயன் கதை

தமிழகக் காவல் முறை

காவல் தொழிலில் ஏற்பட்ட சில கட்டுப்பாட்டு மீறல்களைக் காணும் முன் தமிழகத்தில் கதைப்பாடல் காலத்தில் வழக்கிலிருந்த காவல் முறை குறித்த சில விளக்கங்களைக் காணலாம்.

தனியுடைமை (private property) பெருகிப் பணிப் பங்கீடு (division of labour) வளர்ந்த நிலையில் 'காவல் காத்தல்' என்பது ஒரு தனிப் பணியாக உருப்பெற்றது. அதற்குரிய மரபுச் சட்டங்களும் தோன்றின. ஓர் இனத்தாரிடமிருந்து மற்றோர் இனத்தாரையும் அவர்களுடைய பொருட்களையும் காக்கும் பொறுப்பினைக் குறிப்பிட்ட இனத்தவர் மேற்கொண்டு ஒரு தனி வர்க்கமாக வளர்ந்தனர். கதைப்பாடற் களனை அடிப்படையாகக் கொண்டு காணும்பொழுது காவல் தொழிலை மறவர் எனப்படும் தேவர் இனத்தவர் மேற்கொண்டு வந்தனர் எனத் தெரிய வருகின்றது. காலப்போக்கில் காவல் முறை பல பிரிவுகளாக வளர்ச்சியுற்றது. அவை: நாடுகாவல், திசைகாவல், பரவுகாவல், தேவஸ்தான காவல், ஏரி, குளம் காவல், குடிக்காவல் என்பன வாகும். இவை அனைத்தையும் ஸ்தலம் காவல் அல்லது கிராமக்

காவல், தேசக் காவல் அல்லது நாடுகாவல் என்ற இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம் என்பார் டாக்டர் கதிர்வேல்.[46]

காவல் பொறுப்பினை நிர்வகித்து வந்தவர்கள் நாட்டார்கள், நாட்டாண்மைக்காரர்கள், அம்பலக்காரர் என்று அழைக்கப்பட்டனர்.[47] "ஒரு காவல் மறவன் தனக்குரிய காவல் பங்கினை இழந்தால் அவன் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குரிய வசதியையும் சமுதாய நிலையினையும் இழக்கிறான் என்பது பொருளாகும். காவல் காப்பவர்கள் அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே வாழ்க்கையை நடத்தி வந்தனர். காவலில் பெரும்பங்கு உடையவர்கள் வசதியாக வாழ முடிந்தது. அது பெரும்பாலும் தலைமைக் காவல்காரர்களுக்கே சாத்தியமாக இருந்தது.

காவல் காப்பவர்கள் தம் காவல் எல்லைக்குட்பட்ட பொருளைத் தமது சொந்தப் பொருளாகக் கருதி, உயிரைப் பணயம் வைத்துக் கள்வர்களையும் எதிரிகளையும் துரத்திக் கொன்று, காத்துக் கொடுப்பர். ஆயின் உடைமைக்கு உரிமை கொண்டாட இயலாது. காவல் காத்துக் கொடுத்தால், எவ்வளவு கூலி தரப்படும் என்று முடிவு செய்யப்பட்டதோ அதுமட்டுமே அவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டது.

புதிதாக ஒருவனைக் காவல் தொழிலில் சேர்த்துக் கொண்டால் கிடைக்கும் பங்கில் ஒரு பகுதியை அவனுக்கும் கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் ஏற்கெனவே உள்ளவர்கள் பங்கில் குறை விழும். எனவே புதிதாக எவரும் அவ்வளவு எளிதில் காவல் தொழிலில் உள்நுழைந்துவிட இயலாத நிலையே இருந்தது. பழையவர்களை ஏதாவது காரணத்தால் (உட்பூசல் போன்றவை) வெளியேற்றும் நிலைகள் இருந்தன. இதனால் காவல் தொழில் புரிவோரில் சிலர் காவல் உரிமையை இழந்து ஊரை விட்டு வெளியேறும் நிலைகள் இருந்துள்ளன. தலைமைக் காவல்காரரின் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் பிற காவல்காரர்களும் அப்பகுதி மக்களும் வாழ்ந்தனர். ஆணையை மீறுபவர்கள் அபராதம் கட்டினர். தலைமைக் காவல்காரனுக்குத் தெரியாமல்

---

46. There were two types of Kāval, The sthalam kaval, meaning the 'village watch' and the 'Desa Kaval' meaning the 'Country watch' - A History of the Maravars, p. 17.

47. பி.முத்துத் தேவர், மூவேந்தர் குலத் தேவர் சமூக வரலாறு, ப. 285.

யாரும் காவல் காக்கவோ, காவலில் பங்கு பெறவோ இயலாத நிலை இருந்தது. காவல் காப்பவர்கள் தங்கள் காவலுக்குட்பட்ட பகுதியில் தங்களுக்கு வேண்டிய சில பொருட்களை இலவசமாகக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வழியிருந்தது. காவல் மறவர்கள் தங்கள் காவலுக்குட்படாத பகுதிகளில் சென்று கொள்ளை யடிக்கும் வழக்கமிருந்தது. ஆயின் இது பெரும்பாவமாகக் கருதப் பட்டது.[48]

மறவர் அல்லது தேவர் இனத்தவர் செய்துவந்த இக்காவல் பணியைச் செய்வதற்குப் பிற சாதியார் முனைந்தபொழுது அவர்கள் வஞ்சகமாக ஒழித்துக் கட்டப்பட்டனர். சான்று: சின்னத்தம்பி கதை, மதுரை வீரன் கதை. சக்கிலியர் குலத்தவர் களான சின்னத்தம்பியும், மதுரைவீரனும் காவல் தொழிலுக்கு வந்து உயிரைவிட்டனர்.

காவல் தொழிலை மேற்கொண்டவர்கள் தங்கள் காவலுக்குட்படாத பகுதிகளில் களவு, கொள்ளையில் ஈடுபட்ட பொழுது அதற்கு அப்பகுதி வாழ் ஜமீன்தார்கள், ஆட்சி யாளர்களின் ஒத்துழைப்பும், உதவியும் இருந்ததாகத் தெரிகிறது. களவு, கொள்ளைப் பங்கில் அவர்களும் பங்கு பெற்றனர். முத்துப்பட்டன் கதைப்பதிப்பில் நா. வானமாமலை அவர்கள் இதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.[49]

காவல் உரிமையை இழந்தவர்களிடையே இரு தலை முறைகள் தாண்டியும் உட்பூசலும் பகைமையும் தொடர்ந்தன. இதனால் பழி வாங்கலும் காவல் உரிமையைத் திரும்பப் பெறும் போராட்டமும் நடந்தேறின. சான்று: வன்னியராயன் கதை, பலவேச சேர்வைக்காரக் கதை.

காவல் தொழில் புரிவோரிடையே தலைமுறை தாண்டியும் காவல் உரிமைப் போராட்டம் எவ்வாறு தொடர்ந்தது; காவல் தொழிலில் எவ்வாறு கட்டுப்பாட்டு மீறல் நடந்தது என்பதற்கான முதல் பதிவுச் சான்றாகப் பலவேச சேர்வைக்காரன் கதையைக் காணலாம்.

---

48. 'The Unsung Melodies', ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு, ப. xlv - xlvi என்பதிலிருந்து கருத்துகள் பெறப்பட்டன.

49. நாட்டுப்புறக் கலையியல், ப. 124

பலவேச சேர்வைக்காரன் கதைப்பதிப்புகள்

மூவரால் இக்கதைப்பாடல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. (விவரம் சமூகக்கதைப்பாடல் அகரவரிசைப் பட்டியலில் காண்க) சு. தங்கதுரை, ஏ.என். பெருமாள், இரா. நிர்மலாதேவி (சூ. நிர்மலா தேவி) ஆகியோரால் 1983, 1988, 1989ஆம் ஆண்டுகளில் இக்கதைப் பதிப்புகள் வெளியாயின. மூவர் பதிப்புகளிலும் கதை வேறுபாடுகள் காணப்படுகின்றன. கதை நிகழ்ச்சி மாறுபாடுகளுடன் கதை நிகழ்ச்சிச் சேர்க்கைகள், விடுகைகளும் உள்ளன. பாத்திரப் பெயர் மாற்றம், பாத்திரப் பண்பு மாற்றம் போன்றவையும் இருக்கின்றன. நாட்டுப்புற இலக்கியத்திற்குரிய இந்நிலைகள் அனைத்தும் மேலாய்வுக்கு உரியன.

பலவேச சேர்வைக்காரன் கதை – கதைச் சுருக்கம்

பலவேச சேர்வைக்காரன் கதைச்சுருக்கம் ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டு இங்குக் கூறப்படுகின்றது.

தென்பாண்டி நாட்டின் தென்பகுதியிலுள்ள ஆம்பூரில் இருளப்பத் தேவன் என்பவன் வாழ்ந்து வந்தான். தக்க பருவத்தில் இனத்தாரும் ஊராரும் கூடி அதே ஊரைச் சேர்ந்த முத்தாயி என்பவளை அவனுக்கு மணம் செய்து வைத்தனர். மணமக்கள் இருவருக்கும் நீண்ட காலமாகக் குழந்தை இல்லாததால் வருத்த மடைந்தனர். முத்தாயி ஆம்பூர் அய்யனாரையும் மதுரைச் சொக்கநாதரையும் வணங்கிவந்தும் குழந்தை பிறக்காதிருக்கவே, குறத்தியிடம் குறி கேட்டாள். திருச்செந்தூர் சென்று ஆறுமுகப் பெருமானைத் தரிசித்து வந்தால் குழந்தை பிறப்பது உறுதியெனக் குறத்தி கூறிய குறியின்படி செந்தூர் சென்று வந்தாள்; கருவுற்றாள்; ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்குத் தம் குலதெய்வப் பெயரான 'பலவேசம்' என்ற பெயரைச் சூட்டி வளர்த்தனர். இரண்டாம் முறை கருவுற்ற முத்தாயி மீண்டும் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்க அதற்குச் 'சின்னப் பலவேசம்' எனப் பெயரிட்டனர்.

பெரிய, சின்னப் பலவேசக்காரர் இருவரும் கல்வி, போர்ப் பயிற்சி பலபெற்று, தக்க பருவமெய்தினர். பெரிய பலவேசத்துக்கு முத்தாயியின் அண்ணன் மகளை மணம் முடித்து வைத்தனர்.

பலவேசக்காரர் இருவரும் தம் தந்தையிடம் கேட்டறிந்து, அரசூரில் தமக்குக் காவல் உரிமையுண்டு என அறிந்தனர். காவல்

தலைமைப் பொறுப்பு வகித்துவரும் பூலாவுடையாத் தேவனும் மற்றும் அங்குள்ள காவல் தலைவர்களும் கொடியவர்கள் என்று தந்தையும், மாமனும் தடுத்தும் கேளாது, பலவேசக்காரர் தங்களுக்குரிய காவல் உரிமையைப் பெற அரசூர் செல்ல விழைந்தனர். அத்துடன் தந்தை, தாயையும் வற்புறுத்தி அழைத்துச் சென்றனர்.

அரசூரில் தங்கள் பெரியப்பா மகன் மற்றும் உறவினர் சார்பில் ஒரு வீடு கட்டித் தங்க முற்பட்டனர். வீடு கட்டித் தங்கி விட்டால் அரசூர் காவலில் பங்கு கேட்பர் என உணர்ந்த பூலாவுடையாத் தேவன், தன் காவல் உரிமைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் உள்ளோர் யாரும் பலவேசக்காரருக்கு வீடுகட்ட நாரும், மட்டையும் தரலாகாது என்று தடை பிறப்பித்தான். வீடு கட்டும் பொருட்களான நார், மட்டை தர மறுத்த ஒருவன் மூலம் உண்மையை அறிந்த பலவேசக்காரர், தங்களுக்கேற்பட்ட இந்த அவமானத்துக்குப் பழி தீர்த்துக் கொள்ள, பூலாவுடையாத் தேவனின் காவலுக்குட்பட்ட ஊரில் கொள்ளையடித்தனர்.

பலவேசக்காரரின் பலத்தையறிந்து கொண்ட பூலா வுடையான், தனக்குரிய பகுதியைச் சேர்ந்தவர்களையெல்லாம் ஒன்று திரட்டி, பலவேசக்காரரை வெல்லத் திட்டம் தீட்டினான். திருமணம் ஒன்றுக்குப் பலவேசக்காரரை அழைப்பது என்றும், பணிவாகத் தம் இனத்தாருடன் அமராமல், ஆணவமாகத் தமக்கு நிகர் இல்லை என்று காவல் தலைமை உடையவர்களுக்குச் சரி சமமாக வந்து அமர்ந்தால், அவர்களைத் தீர்த்துக் கட்டுவது என்றும் தீர்மானித்தனர். மணவோலையை அனுப்பினர்.

மணவோலையைப் பெற்றபின் திருமணத்துக்குப் போகாதிருந்தால் தங்கள் வீரத்துக்கு இழுக்கு என்று பலவேசக் காரர் இருவரும் நினைத்தனர். அதனால் திருமணத்துக்குச் சென்று அங்குச் சபையில் சரியிருப்பாக அமரச் சண்டை தொடங்கியது. பலவேசக்காரரின் முன்னால் நிற்க இயலாது என உணர்ந்த பூலாவுடையானைச் சேர்ந்த கூட்டம் சிதறியோடியது. சிதறி யோடியவர்கள் பின்னர் ஒன்று திரண்டு, வெற்றியுடன் சென்று கொண்டிருந்த பலவேசக்காரரிடம், ஓட்டன் ஒருவன் மூலம் செய்தி அனுப்பித் திரும்பப்போர் தொடுத்தனர். அந்தப் போரிலும் பலவேசக்காரரே வெற்றி பெற்றுப் பகைவரைத் துரத்தியடித்தனர்.

தங்களுக்கெதிராக, ஒன்பது ஊர்த் தலைவர்களும் ஒன்று திரண்டு பகை கொண்டிருப்பதால், தங்களுடைய பக்கத்தையும் வலுப்படுத்திக் கொள்ள, கட்டபொம்மன் உதவியைப் பலவேசக் காரர் நாடினர். கட்டபொம்மனும் படை உதவி செய்தான். அப்படையின் துணையுடன் பூலாவுடையானின் காவலுக்குட் பட்ட ஊர்களைக் கொள்ளையடித்துச் செல்வம் சேர்த்துப் படை பரிவாரங்களுடன் செழிப்பாக வாழ்ந்தனர். சீரும் சிறப்புடனும் சின்னப் பலவேசத்துக்குத் திருமணம் நடந்தது.

பலவேசக்காரரை ஒடுக்கத் திட்டம் தீட்டிய ஒன்பது குறிச்சி நாட்டாரும், வெள்ளைக்காரன் சின்னத் துரையைச் சந்தித்துத் தங்கள் நிலைமையைக் கூறி முறையிட்டனர். சின்னத் துரை படை உதவி செய்ததுடன், பலவேசக்காரரைக் கொல்லவும் ஆணை பிறப்பித்தான்.

அந்த ஆணையை அறிந்த பலவேசக்காரர், அய்யனார் கோவிலில் தலைமறைவாக இருந்தனர். கையில் ஆயுதங்கள் உள்ள போது பலவேசக்காரரைப் பிடிக்க இயலாது என்பதை உணர்ந்த ஒன்பது குறிச்சி நாட்டாரும், படையும் சதிசெய்து ஆயுதங்களைப் பறிக்க எண்ணினர். பலவேசக்காரரின் உற்ற நண்பனான பக்கிரி இதற்குப் பயன்படுத்தப்பட்டான்.

தந்திரமாகப் பேசி ஆயுதங்களைக் கைமாற்றி விட்டான் பக்கிரி. பலவேசக்காரரைப் படை சூழ்ந்து சிறைப்பிடித்தது. இருவருக்கும் உணவு ஏதும் தராமல் மூன்று நாள் கட்டி வைத்து உருட்டி, மூன்றாம் நாள் கண்டந்தேரிப் பகுதிக்குக் கொண்டு சென்று, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க இயலாதபடி நிறுத்தி அண்ணனை முதலில் வெட்டினர். அண்ணன் உடலிலிருந்து தெறித்த ஒரு துளி இரத்தம் சின்னப் பலவேசத்தின் மீது பட அவன் அலறி உடல் திமிறியதில் அணைக்கயிறுகள் தெறித்து விடுபட்டான். உடன் சின்னப் பலவேசம் ஆவேசம் கொண்டு கண்ணில் கண்ட படையினரை எல்லாம் வெட்டிச் சாய்த்தான். படையினர் அஞ்சி ஓடும்போது சின்னப் பலவேசம் தப்பித்து ஓடினான். தப்பித்துப் பாய்ந்து ஓடும்போது கருவேலம்பட்டை காலில் தைத்துவிட மரணமுற்றான். படையினர் திரும்ப வந்து மரணமடைந்தவனின் கழுத்தை அறுத்து, பலவேசக்காரர் இருவர் தலைகளையும் எடுத்துக் கொண்டு ஊர் திரும்பினர்.

இறந்தவர்கள் இருவரும் அய்யனார் கோயில் சென்று வரம் பெற்று, கேலி பேசிக் கொண்டு செல்லும் படையினரைக்

கொன்றனர். எஞ்சிய படையும் வீடு செல்லும் முன் வாயில் இரத்தம் கொப்புளிக்க மாண்டது.

காவல் உரிமை மறுக்கப்படல்

காவல் தொழில் புரிந்து வந்த மறவர் இனத்தாருக் குள்ளேயே, இத்தொழில் தொடர்பாகக் கட்டுப்பாட்டு மீறல் நிகழ்ந்துள்ளமைக்கு, இக்கதைப்பாடல் தக்க சான்றாகத் திகழ்கின்றது. பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வரும் காவல் உரிமை அப்பரம்பரையினருக்குத் தொடர்ந்து அளிக்கப் படாமல் கவர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்த தலைமுறை அவ்வுரிமையைப் பெறுவதற்காகப் போராடியுள்ளது. அப்போராட்டத்தில் வெற்றி கிடைத்ததா? இல்லையா? என்பது முக்கியமில்லை என்றாலும் காவல் தொழிலில் உரிய உரிமையைத் தராமல் கட்டுப்பாட்டு மீறல்கள் நிகழ்ந்துள்ளதை இக்கதைப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன என்ற அளவில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கின்றன.

இந்தப் பலவேச சேர்வைக்காரன் கதையில் வரும் இருளப்பத்தேவனுக்கு அரசூரில் காவல் உரிமை இருந்தது. அவ்வுரிமையை அவனுக்குத் தராமல் காவல் தலைவன் பூலாவுடையான் காவல் தொழிலுக்கென்றுள்ள கட்டுப்பாட்டை மீறினான். காவல் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் அரசூரை விட்டே அகன்று ஆம்பூரில் குடியேறினான் இருளப்பத்தேவன்.

இவ்வாறு பரம்பரையாக வரும் காவல் உரிமை ஏன் மறுக்கப்பட்டது என்பதற்கான காரணத்தையும் கதைப்பாடல் தெரிவித்துள்ளது.

காவல் உரிமை மறுக்கப்படக் காரணம்

மறவர்சாதி உட்பிரிவுகளில் பெருந்தாலி கட்டும் பிரிவைச் சேர்ந்தவன் இருளப்பத் தேவன். காவல் தலைமைப் பொறுப்பு வகித்த பூலாவுடையானோ சிறு தாலி கட்டும் பிரிவைச் சேர்ந்தவன். சிறுதாலி கட்டும் பிரிவினர் தங்களை உயர்ந்தவராகக் கருதிக் கொள்பவர்கள். காரணம் பெருந்தாலி கட்டும் பிரிவினர் பாளையக்காரர்களுக்குச் சேவை செய்யும் சேர்வைக்கார மறவர்கள் ஆவார். அத்துடன் சிறு தாலி கட்டும் மறவர் பிரிவினரின் திருமணத்தின் பொழுது, பந்தியில் சோறு, கறி பரிமாறும் பணி செய்பவர்களாகவும் இருந்தனர் எனத் தெரிகின்றது. எனவே தங்களிலும் கீழான பிரிவைச் சேர்ந்த

பெருந்தாலி கட்டும் பிரிவைச் சேர்ந்த இருளப்பத் தேவனின் காவல் உரிமையைப் பூலாவுடையாத்தேவன் தராது மறுத்தான் என்பதைக் கதைப்பாடல் தெரிவிக்கிறது.

சாதிச் சிக்கலை மையமாகக் கொண்டு சுழலும் கதைப் பாடல்கள் தமிழில் பல உள்ளன. ஆயின் சாதி உட்பிரிவுகள் குறித்த கதைப்பாடல்கள் சிலவே உள்ளன. சாதி பற்றி எழுந்த கதைப்பாடல்களுள் ஒரே சாதியின் உட்பிரிவு இரண்டனுக்குள் நடந்த பூசலை அடியொற்றியதாகப் பலவேசக்காரர் கதைப் பாடல் திகழ்கின்றது. ஒரே சாதியில் இரு வேறுபட்ட உட்பிரிவுகளுக்குள் நிகழ்ந்த பூசலைக் கதைக் கருவாகக் கொண்டது என்ற நிலையில் இக்கதைப் பாடல் தனியிடம் பெற்றுள்ளது.

பலவேசம் சேர்வைக்காரர் என்றும், மறவர் குலத்தவர் என்றும் கதைத் தலைவர்கள் இருவரையும் கதைப்பாடல் குறிப்பிடுவதனால், இவர்கள் மறவர் இனத்தில் 'சேர்வைக்கார மறவர்' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வருகின்றது.

மறவர் இனத்தில் 7 பிரிவு உண்டு என்றும்,[50] 11 பிரிவுகள் உண்டென்றும்[51] வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. 7 பிரிவுகள் உள்ளதாகக் குறிப்பிடுபவர்கள் இச்சேர்வைக்கார மறவர் பற்றிக் குறிப்பிடவில்லை. இது அச்சாதியில் பிற்காலத்தில் தோன்றிய பிரிவாக இருத்தல் கூடும். ஆயினும் மேற்சுட்டிய அந்த ஏழு பிரிவுகளும் தொழில் அடிப்படை, தாலி அடிப்படையை

---

50. செம்பிநாட்டு மறவர், கொண்டையங் கோட்டை மறவர், ஆப்பனூர் நாட்டு மறவர், அகத்தாமறவர், ஒரூர் நாட்டு மறவர், உப்புகட்டி மறவர், குறிச்சிக்காட்டு மறவர் என எழுவகை உண்டு - மறவர் சாதி விளக்கம் (சென்னைக் கீழ்த்திசைச் சுவடி எண். 370 - காகிதச் சுவடி).

51. Among the Maravas there were eleven sub-castes namely Sembi nattu maravas, Kontayan kottai maravas, sirutali-katti maravas, vanniya-maravas, pandara maravas, karana-maravas, appanur nattu maravas, agatta marava[, uppu-kottai maravas, kurucci maravas and servaikkara maravas.
- S. Kadirvel, A History of Maravas, 1977, P. 9

52. "நலமுடைய சனங்களிலே நாலாறு பேர்களும் நாம்" (வரி.102) என்பது பாடல் வரியாகும். இதன் பொருளாவது: நாலாறு பேர்கள் + நாம், நான்கும் ஆறும் ஆகிய பத்தும் அதனுடன் நாமும் ஆக பதினொரு பிரிவுகள். இப்பதினோரு பிரிவுகளிலும் சேர்வைக்கார மறவர் பதினோராவது வகையினர் எனலாம்.

வைத்துப் பிரிக்கப்படாமல், இடத்தை அடியொற்றிப் பாகுபடுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாக உள்ளது. இந்தப் பலவேச சேர்வைக்காரன் கதைப்பாடல் மறவர் இனத்தில் 11 பிரிவுகள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றது.[52] எனவே இக்கதைப் பாடல் எழுந்த காலகட்டத்தில் இவ்விரு பிரிவுகளும் நிலைத்து விட்டமை தெளிவாகத் தெரிகின்றது.

பாளையக்காரர்களுக்குச் சேவை செய்தவர்கள் சேர்வைக் கார மறவர் என அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.[53] எனவே இப்பிரிவு பாளையப்பட்டு ஆட்சி தொடங்கப்பட்ட பின்னர் எழுந்த பிரிவாதல் வேண்டும். சேர்வைக்கார மறவர் போன்று நாடாரிலும், "சேர்வைக்கார நாடார்" என்ற ஒரு பிரிவுள்ளதாகத் தெரிகிறது. இவை 'சேவை செய்பவர்' என்ற பொருளடிப் படையில் தோன்றியிருத்தல் வேண்டும். இதனால் சில சாதியர்க்குச் சேவை செய்தலுக்காக உள்ளவர்களே சேர்வைக்காரர்கள் என அழைக்கப்பட்டனர் எனலாம்.

சேர்வைக்கார மறவர், மறவர் சாதிச் சமீன்தாரர்களுக்கும் பாளையக்காரர்களுக்கும்அடங்கி அவர்களுக்குச் சேவை செய்து வந்தனர். இதனால் சிறுதாலி கட்டி மறவர், பெருந்தாலி கட்டி மறவர்களான சேர்வைக்கார மறவர்களைத் தாழ்வாகக் கருதினர். சேர்வைக்கார மறவர் பெருந்தாலி கட்டும் வழக்கமுடையவர் என்பதைக் கதைப்பாடல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. பலவேச சேர்வைக்காரனின் தந்தையைக் குறிப்பிடும் கதைப் பாடல்,

"பெருந்தாலி கட்டுகிற குலத்தில் பிறந்தோனே" (வரி. 19)[54] எனக் குறிப்பிட்டுள்ளது. சிறுதாலி கட்டி மறவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்ட, இத்தாலி வேறுபாட்டு முறையை இவர்கள் கடைப்பிடித்திருத்தல் வேண்டும். அத்துடன்

---

53. ".... servants of Marava Zamindars forming another sub-division are known as Pulukka Maravas, of Parivarams, and usually bear the title Servaikaran". H.R. Pate, quoted in Nicholas B. Dirks.

"The pasts of a Palaikarar: The Ethno history of a south Indian little king", Temples Kings and peasants, perceptions of South India's past, Ed. George W. Spencer (Madras, 1987), p. 124.

54. The Unsung Melodies, ஆசியவியல் ஆய்வு ர் றுவன வெளியீடு. ப. 4.

மறவர் பிரிவுகளில் திருமண முறைகள் எல்லாம் பெரும் பான்மையும் ஒன்று போலவே இருப்பதும், தாலி மட்டுமே இவர்களின் திருமணத்தில் வேறுபாடு காட்டுவதாக அமைந்திருக்கும் என்றும் தெரிகிறது.[55] இதனால் இக்குலப் பிரிவுகளின் முக்கிய அடையாளமாகத் தாலி திகழ்ந்திருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது.

சேர்வைக்கார மறவரின் மற்றொரு பெயரான 'புழுக்க மறவர்' என்பதிலுள்ள 'புழுக்கன்' என்ற சொல் இன்றும் பேச்சு வழக்கில் பிறரைத் தாழ்த்திக் கூறப் பயன்படும் வசைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். தம்மை விடவும் சேர்வைக்கார மறவர் தாழ்வானவர் என்ற எண்ணம் சிறுதாலி கட்டி மறவர்களிடம் இருந்தமையைக் கதைப்பாடல் தெளிவுற எடுத்துக் காட்டுகின்றது. சிறுதாலி கட்டி மறவர்களின் திருமணத்தின் போது, அவர்களுக்குப் பந்தியில் சோறு, கறி பரிமாறல் போன்ற எடுபிடி வேலைகளைச் சேர்வைக்காரர்கள் செய்து வந்தனர் என்பது கதைப்பாடல் வெளிப்படுத்தும் செய்தியாகும்.

> **பழைய நாள்போலே சபையில் நீங்கள்**
> **பந்தியில் சோறுகறி விளம்பவேணும்** (வரி. 827-828)

என்ற கதைப்பாடல் வரிகள் காணத்தக்கன.

தங்களை விடவும் தாழ்வானவர்கள் என்ற எண்ணம் காரணமாகவே, பரம்பரையாக வந்து கொண்டிருந்த காவல் உரிமையைத் தருவதற்குச் சிறுதாலி கட்டி மறவர் பிரிவைச் சேர்ந்தவர்கள் மறுத்திருக்கக் கூடும். பலவேசக்காரனின் தந்தையான இருளப்பத்தேவரின் காலத்தில் காவல் உரிமை மறுக்கப்பட்டது என்பது கதைப்பாடல் காட்டும் குறிப்பாகும். ஆனால் எதனால் காவல் உரிமை மறுக்கப்பட்டது என்பதைக் கதைப்பாடல் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்றாலும் தங்கள் பிரிவை விடவும் தாழ்வானவர் பெருந்தாலி கட்டி மறவரான இருளப்பத்தேவர் என்பது காரணமாக இருத்தல்

---

55. Although the marriage ceremonies were almost the same for all the maravas, there were differences in the use of Tali. The number and size of the Tali varied according to the sub-caste. Sembi-nattu maravas single tali and a few pavalam; Kontayam - kottai maravas - big cubic size tali; sirutali - katti maravas, a small one of a flat type; Pantara maravas and vanniya maravas- big cubic size tali; added two golden star; Karana - maravas - single tali without the pavalam; uppu-kottai maravas, use only pavalam and the rest only a yellow thread. - A History of the Maravas, S. Kadhirvel, p. 9.

வேண்டும். எவ்வாறாயினும் இதன்மூலம் காவல் உரிமை பறிக்கப்படல் பரவலாக நடைபெற்ற ஒன்று என்பது தெளிவாகத் தெரிகின்றது. காவல் தொழிலில் நடந்த இத்தகு கட்டுப்பாட்டு மீறலை முறியடிக்கும் வண்ணம், பறிக்கப்பட்ட காவல் உரிமையைத் திரும்பப் பெறுவதற்கு, அடுத்த தலைமுறை முயற்சி செய்துள்ளது என்பதும், அம்முயற்சி முறியடிக்கப்பட்டது என்பதுமே இக்கதைப்பாடல் காட்டும் சித்திரமாகும்.

சிவராமப் பாண்டியன் கதையில் காவல் தொழிலில் கட்டுப்பாட்டு மீறல்

நெல்லை வட்டாரத்தில் வழங்கும் ஐந்து கதைப் பாடல்களைத் தொகுத்துத் தன்னனானே பதிப்பகம் வெளியிட்டுள்ளது.[56] ஐந்து கதைப்பாடல்களுமே மறவர் சமூகத்தைப் பற்றியதாகும். அவை:

1. ஈனமுத்துப் பாண்டியன் கதை
2. மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை
3. சோணமுத்துப் பாண்டியன் கதை
4. சிவராமப் பாண்டியன் கதை
5. பாலம்மாள் கதை

என்பனவாகும். நான்காவது கதைப்பாடலாக அமைந்துள்ளது சிவராமப்பாண்டியன் கதைப்பாடல். இது காவல் தொழில் புரிந்து வந்த மறவர் இனத்தாருக்குள் நிகழ்ந்த கட்டுப்பாட்டு மீறல்களைப் பதிவு செய்து வைத்துள்ள கதைப் பாடலாகத் திகழ்கின்றது.

இந்நூலில் கதைச் சுருக்கம் 2 பக்கங்களில் (148-149) தரப்பட்டுள்ளது. அடுத்ததாகக் கதைப்பாடல் 1112 வரிகளில் அமைந்துள்ளது. அதனையும் அடுத்து அருஞ்சொற்பொருள் 40 சொற்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இக்கதைப்பாடல் சிவராமப்பாண்டியன் பீடத்துக்கு எடுக்கப்படும் கொடை விழாவின்போது பாடுவதற்காக நோட்டில் எழுதி வைக்கப்பட்டுப் பதிப்பாசிரியர் சு. சண்முக சுந்தரத்தின் மைத்துனர் பெருமாள் பாண்டியனின் அடுத்த வீட்டுக்காரரான சிவராமத் தேவரிடமிருந்து 1974இல் பெற்றதாகக் குறிப்புக் காணப்படுகின்றது (ப. 149-150).

56. தொகுப்பாசிரியர் சு. சண்முக சுந்தரம், ஐந்து கதைப் பாடல்கள், தன்னனானே பதிப்பகம், சென்னை-24, டிச. 2001.

சிவராமப் பாண்டியன் கதைச் சுருக்கம்

இக்கதைச் சுருக்கம் ஏற்கெனவே ஐந்து கதைப்பாடல் என்ற நூலில் தரப்பட்டுள்ள கதைச் சுருக்கத்தை அடியொற்றி அமையாமல், சிவராமப்பாண்டியன் கதைப்பாடலை அடியொற்றி இங்கே அளிக்கப்படுகின்றது.

கோபால சமுத்திரத்தில் தீர்த்தபதி வமிசத்தில் கிழக்குப் பகுதி வீடுகளின் தலைமைக் காவல் பொறுப்பை நாராயணப் பாண்டியன் என்பவரும் மேற்குப் பகுதி வீடுகளின் தலைமைக் காவல் பொறுப்பைச் சோணமுத்துப் பாண்டியன் என்பவரும் வகித்து வந்தனர். பத்தரைப் பங்காளித் தேவமார்கள் காவல் தொழிலை மேற்கொண்டு வந்தனர். நாராயணத் தேவரின் மகன் சிவராமப்பாண்டியன் ஆவார். இவர் இருபத்தெட்டு வயது இளைஞராக இருந்தார். நாகமுத்து இவரின் மனைவி. இவர்களின் காவலுக்குட்பட்ட மறுகால் தலை என்ற ஊரில் சங்கரநாராயண பாண்டியன், சிவணுத்தேவர், மாலகண்டத் தேவர் என்ற அண்ணன் தம்பியரும் காவல் தொழில் செய்து வந்தனர். இவர்களுள் இளையவரான மாலகண்டத் தேவர் மறுகால் தலையில் மிராசுவேலை பார்க்கும் சொக்கலிங்கப் பிள்ளையிடம் தலையாரியாக இருந்தார். ஒருநாள் மிராசு சொக்கலிங்கம் பிள்ளையுடன் தலையாரி மாலகண்டத் தேவர் சொக்கலிங்கபுரம் சென்று, கிஸ்தி எனும் இருசால் பணம் வசூலித்துவரச் சென்றார். இருவரும் வசூலித்த பகுதிப் பணம் முந்நூறு ரூபாயை ஒரு முடிப்பாகக் கட்டி எடுத்துக்கொண்டு மறுகால் தலை வந்து சேர்ந்தனர். இடையிலேயே மேலச் செவல் என்ற ஊரில் துளசிதாஸ் என்ற நாடகம் நடக்க இருப்பதை அறிந்து, அதைப் பார்க்க ஆவல் கொண்டனர். விரைவில் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட எண்ணினர். பணத்தைச் சொக்கலிங்கம் பிள்ளை தன் மனையாள் தாய்வீடு சென்றுள்ள நிலையில், தன் வீட்டில் பெட்டியிலிட்டுப் பூட்டிச் சாவியை வீட்டில் மாட்டி, வீட்டையும் பூட்டிச் சாவியையும் ஓரிடத்தில் வைத்தார். அனைத்துச் செயல்களும் தலையாரி மாலகண்டத் தேவர் முன்னாலேயே நடந்தன. தன் வீடு சென்று சாப்பிட்டு நாடகம் பார்க்க வருவதாகச் சொன்னார் மாலகண்டத் தேவர். நாடகம் பார்த்துக் கொண்டிருந்த மாலகண்டத் தேவர், பகுதிப் பணம் முந்நூறையும் களவு செய்யத் தீர்மானித்தார். பகலெல்லாம் அலைந்ததால் தனக்கு மிகுந்த களைப்பாக உள்ளதாகவும் நாடகக் கொட்டகைக்கு வெளியே படுத்துறங்குவதாகவும் சொல்லி

வெளிக் கிளம்பி, மறுகால் தலைநோக்கி ஓடிவந்த மாலகண்டத் தேவர், மிராசு பிள்ளை வீடுவந்து, கொடியில் தொங்கிய கொத்துச் சாவியை எடுத்து, பகுதிப் பணத்தைக் களவு செய்து, பதுக்கி விட்டுக் கொட்டகை வந்து சேர்ந்து குறட்டைவிட்டுத் தூங்கினார். நாடகம் பார்த்து முடித்து வெளி வந்த சொக்கலிங்கம் பிள்ளை மாலகண்டத் தேவரை எழுப்பி மறுகால் தலை வந்து சேர்ந்தார். அம்பாசமுத்திரம் சென்று பகுதிப் பணத்தைக் கட்டி விட்டு வந்து விடு என்று மாலகண்டத் தேவரிடம் சொன்ன சொக்கலிங்கம் பிள்ளை, முடிப்போடு பணம் களவு போயிருப்பதை அறிந்து பெருங்கலக்க முற்றார். மாலகண்டரும் அதை விடவும் அதிகமாகக் கலங்கிப் புலம்பினார்.

தலைமைக் காவலிடம் தகவல் தெரிவித்தார் சொக்க லிங்கம் பிள்ளை. உடன் கீழ வீடு தலைமை நாராயணப் பாண்டியன், மேல வீடு தலைமை சோணமுத்துப் பாண்டியன் மற்றும் பத்தரைப் பங்காளித் தேவமார்கள் கோபால சமுத்திரத்தில் அம்பலச் சாவடியில் அதிகாரக் கூட்டம் போட்டனர். 'கஸ்பா பணம் களவு போனால் நம் காவலுக்கு மோசம் வரும். கிஸ்திப்பணம் களவு போனால் கேடுவந்து சம்பவிக்கும். இருசால் பணம் களவு போனால் எல்லார்க்கும் சங்கடம். எனவே களவை எந்தவிதமானாலும் துப்புத் துலக்கியே ஆகவேண்டும் எனக் கூட்டம் முடிவெடுத்தது. ஒவ்வொரு தலையாரியையும் அழைத்து உண்மையைக் கூறுமாறு கேட்டுக் கொண்டனர். "அதிகாரி வீட்டில் தலையாரி களவு செய்தால் காவலுக்கே மோசம் வரும். உண்மையைச் சொல்" என மாலகண்டத் தேவரிடம் மன்றாடிக் கேட்டனர். கன்னம் போட வில்லை. களவு செய்யவில்லை; அநியாயம் சொல்ல வேண்டாம்; அபராதம் கொடுக்க வேண்டாம் என்று மாலகண்டத் தேவர் உறுதியாய் உரைத்தார். உடன் பங்கெடுத்துக் கட்ட முடிவு செய்யப்பட்டது. பத்தரைப் பங்காளிகளும் முழுச் சம்மதம் தெரிவித்தனர். பங்குத் தொகையும் தர விரும்பாத மாலகண்டத் தேவரும் அவர் அண்ணன்மார் சங்கரநாராயணத்தேவர், சிவனுத் தேவர் ஆகியோர் கூட்டத்தைவிட்டு வெளியேறினர்.

இப்படியே சிலகாலம் போனது. நாராயணப் பாண்டியன், சோணமுத்துப் பாண்டியனின் காவலுக்குட்பட்ட நொச்சி மடையருகிலிருந்த தடாகத்தில் கொத்தங்குளத்தைச் சேர்ந்த குடும்பன்மார்கள் மீன்பிடிக்க விரும்பினார்கள். குட்டத்து மீன்களைக் குத்தகைக்குப் பிடிக்க அனுமதிக்குமாறு வேண்டினர்.

'குத்தகைக்குக் கொடுக்கிறது எங்கள் குலத்திலேயே கிடையாது' என்றுரைத்த சோணமுத்துப் பாண்டியன் பாண்டியமார்களுக்குப் பெருமீன்களைக் கொடுத்துவிட வேண்டும்; பத்தரைப் பங்காளிகளுக்குப் பாதிமீன் கொடுக்க வேண்டும்; சம்மதமானால் மீன் பிடிக்கலாம் என உத்தரவிட்டார். மீன்கள் பங்கிடப்பட்ட பொழுது மாலகண்டத் தேவரும் வந்திருந்தார். நாராயணப் பாண்டியன் மாலகண்டனின் பங்கு மீனை மதிப்பு ஏலம் போடுமாறு உத்தரவிட்டார். அஞ்சு பணம் ஏலத்துக்குச் சிவராமப் பாண்டியன் பங்கு மீனை ஏலத்தில் எடுத்தார். பங்கு மீனை ஏலத்தில் அள்ளி எடுத்தால் அந்த மீனைத் தின்பதற்குள் வயிற்றைக் கிழிப்பேன் எனச் சபதம் கூறி வன்மம் வைத்தார் மாலகண்டர். அது போல் சிவராமப் பாண்டியர் தன்வீடு சென்று எண்ணைக் குளியலை முடித்து உணவருந்திப் பண்ணையாரைப் பார்த்து வரப் புறப்பட்டபோது, வழியில் மறைந்திருந்த மால கண்டத்தேவர் குத்துக் கம்பு கொண்டு சிவராமப் பாண்டியனை விலாவில் குத்தினார். "ஆயுதம் மட்டும் என் கையில் இருந்திருக்கு மானால் நீ அணுவளவும் தப்பமாட்டாய்" என்று கூறிக் கொண்டே உயிரைவிட்டார் சிவராமப்பாண்டியன். சுடலைமாட சுவாமியின் முன்னோடும் சேவகனாய் இருக்க வரம் பெற்றுத் தெய்வமாகவும் ஆனார்.

இக்கதைப்பாடலின் காவல் முறையில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

இக்கதைப்பாடலின் காலம் பற்றிய குறிப்பு இப்பதிப்பில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் கதையமைப்பு, கதை நிகழ்ச்சிகள், கதைச் சூழல், கதை நடந்த இடங்கள், கதைப் பாத்திரங்கள், கதை மொழிநடை ஆகியவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்பொழுது மிகப் பிற்காலத்தில் அதாவது 18-19ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலகட்டத்தில் இக்கதை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கலாம் எனக் கருத ஏது உள்ளது. காவல் முறையில் பல குழறுபடிகள் தோன்றி வளர்ந்த தெளிவான சூழலை இக்கதைப்பாடல் படம்பிடித்துள்ளது. அத்துடன் காவல் முறையில் தவறுகள் நிகழும்பொழுது அவை எவ்வாறு சரி செய்யப்பட்டன என்பதையும், இதனால் குற்றம் சாட்டப்பட்டவர்களின் மனநிலையும், எதிர்ப்பும் எவ்வாறு வலுப்பெற்றன என்பதையும் இக்கதைப்பாடல் தெளிவாக வெளிக் காட்டியுள்ளது. அத்துடன் காவல்முறை தன் இறுதிக் காலகட்டத்தை நோக்கிச் செல்வதற்கு இத்தகு குழப்ப நிலைகள் வழிவகுத்திருக்கலாம் என்பதும் வெளிப்படத் தெரிய வருகின்றன.

மிராசுத் தொழில் பார்த்த சொக்கலிங்கம் பிள்ளையிடம் தலையாரியாக இருந்த மாலகண்டத் தேவர், பகுதிப் பணத்துக்குப் பொறுப்பாகக் காவல் காக்க உரியவர். பகுதிப் பணத்தை அம்பா சமுத்திரம் சென்று கட்டிவிட்டுவரும் பொறுப்பான பணியையும் செய்வதற்குரியவர். அத்தகு பணத்திற்குப் பொறுப்பும், பணத்திற்குக் காவலும் ஆகிய தக்க பதவியில் இருப்பவரே "வேலியே பயிரை மேய்ந்தாற் போன்று" அப்பணத்தைக் கவர்ந்துவிட வேண்டும் என்று எண்ணியபோது, கதை கூறுங் காவல் முறையில் முதல் சிக்கல் விழுகின்றது. பணப்பெட்டகச் சாவி வைத்த இடத்தைத் தெரிந்து வைத்திருந்தவர் என்ற முறையில், பணம் களவு போனதும் முதல் ஐயப்பாடு அவர் மேல் தான் எழுந்தது. ஆனால் தான் பணத்தை எடுக்கவே இல்லை என்று அவர் உறுதியாக மறுத்தார்.

அதிகாரி வீடதிலே
தலையாரி களவு செய்வானா
அநியாயமாய்ச் சொல்ல வேண்டாம்
அபராதம் கொடுக்க வேண்டாம் (வரி 875-878)

என்று மாலகண்டத்தேவர் தான் களவு செய்யவில்லை என உறுதியாய் மறுத்தார். களவு செய்பவர்கள் கண்டறியப்பட்டால் அவர்களுக்குத் தண்டனையாக அபராதம் விதித்தல் நடைமுறையிலிருந்தது என்பது தெரிகிறது. மாலகண்டத் தேவர் மறுத்த பொழுது, காவல் தலைமைப் பதவியில் இருந்தவர்கள், காவல்தொழில் புரியும் அனைவரும் களவு போன தொகையைப் பங்கு பிரித்துக் கொண்டு, பகுதிப் பணத்தைக் கட்டிவிட வேண்டும் என முடிவு செய்தனர். மாலகண்டத் தேவர் அவ்வாறு பங்குப் பணம் செலுத்தவும் உடன்படாது கூட்டத்தை விட்டு வெளியேறியது கதையில் இரண்டாம் சிக்கலாக ஆகிக் கதையை முறுக்கேற்றியுள்ளது. கூட்ட முடிவுக்குக் கட்டுப்படாமல் அவர் சென்றது, கூட்டத்தை அவமரியாதை செய்ததாகவே எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்மூலமாகக் காவல் தொழில் மேற் கொள்வோருக்குள்ள சில உரிமைகளையும் அவர் இழந்ததாகவே கருதப்படும்.

இது அடுத்து நடந்த ஒரு நிகழ்ச்சி மூலம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கொத்தங்குளம் குடும்பன்மார்கள் சோணமுத்துப் பாண்டியனின் காவலுக்குட்பட்ட குட்டத்தில் மீன்பிடிக்கக் குத்தகைக்கு விடுமாறு கேட்டுக் கொண்டனர் எனக் கதைப்

பாடல் கூறுவதால், காவல் தலைமை பூண்டவர்களிடம் அனுமதி பெற்றுக் குத்தகைக்கு மீன்பிடித்தல் வழக்கமாயிருந்தது எனத் தெரிகிறது. சோணமுத்துப் பாண்டியன் பாண்டியமார்களுக்குப் (கோபால சமுத்திரம் பகுதியில் பிறந்த மறவர் குலக் காவல் தொழில் புரிந்த கதைத் தலைவர்கள் 'பாண்டியர்கள்' என அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது) பெருமீனைக் கொடுக்க வேண்டும்; பத்தரைப் பங்காளிகளுக்குப் பாதி மீன் தர வேண்டும் என உரைத்ததன் மூலம் இதுவும் ஒரு வழக்கமாக இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

களவு போன தொகை முந்நூறு ரூபாயை அனைவரும் பங்கிட்டுக் கட்டுவது என்று முடிவு செய்யப்பட்டதால் இதுவும் ஒரு நடைமுறை வழக்கமாக இருந்ததையும் அறிய முடிகின்றது. இக்கூட்ட முடிவுக்குக் கட்டுப்படாமல் மாலகண்டத் தேவர் சென்றதால் கூட்ட முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் அவர்கள் கூட்டத்தை விட்டு வெளிநடப்புச் செய்வது உண்டு என்பதும் தெரிய வருகின்றது. கூட்ட முடிவுக்குக் கட்டுப்படாதவர்களை ஒதுக்கி வைக்கும் நிகழ்வுகள் நடந்துள்ளதைக் கீழ்க்காணும் பாடல் வரிகள் விவரிக்கின்றன.

> **மாலகண்டப் பாண்டியனும்**
> **மிராகுபிள்ளை வீடு மிட்டு**
> **பங்குபோடும் இடமதிலே**
> **பிரியமுடன் வந்து நின்றான்**
> **பத்தரை பங்கு போட்டார்**
> **பங்கெடுத்தார் எல்லோரும்**
> **நாராயணப் பாண்டியனும்**
> **நலமுடனே ஏது சொல்வார்**
> **மாலகண்டன் பங்குமீன்**
> **மதிப்பு ஏலம் போடு என்றார்** (வரி. 999-1008)

மாலகண்டத் தேவரின் பங்குக்குரிய மீனை அவருக்குத் தராமல் அதனை ஏலம்விட்டதன் மூலம் அவரை ஒதுக்கி வைத்தமை தெரிகின்றது.

பணப் பொறுப்பு வகிக்கும் காவல் தொழிலை மேற் கொண்டிருந்த மாலகண்டத் தேவரே பணத்தைக் களவு செய்து காவல் தொழிலுக்குரிய கட்டுப்பாட்டை மீறியதைக் கதைப் பாடல் காட்டுகின்றது. அத்தகு இழி செயல் செய்ததால் அவருக்குரிய பங்கை அளிக்காமல் அவர் பங்குப் பொருளை

ஏலத்துக்கு விட்டுவிடுவதால் மாலகண்டரின் காவல் தொழில் கட்டுப்பாட்டு மீறல் எவ்விதம் அடக்கப்பட்டது என்பதும் தெளிவாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகு அடக்குமுறைக்கு அடங்காமல் சினம் கொண்டார் மாலகண்டத்தேவர். தனக்குரிய பங்கு மீனை ஏலமிடச் சொன்னவர் நாராயணத் தேவர். ஏலத்தில் மீனை எடுத்தவர் நாராயணத் தேவரின் மகன் சிவராமப் பாண்டியன் என்பதைக் கதைப்பாடல் வரிகள் கீழ்க்காணுமாறு உரைக்கின்றன.

ஒரு பணம் ஏலமென்று
உற்ற பாண்டியனும் கூறலுற்றார்
மூன்று பணம் ஏலமென்று
முத்துசுவாமித் தேவர் கேட்டார்
அஞ்சு பணம் ஏலமென்றார்
அழகுசிவராமப் பாண்டியனும்
அதற்குமேல் ஏலமது
ஆருமே கேட்கவில்லை
சிவராமப் பாண்டியனுக்குச்
சேகரமாய் சாரி செய்தார் (வரிகள்: 1009 - 1018)

ஏலத்தில் எடுத்த மீனைச் சிவராமப் பாண்டியன் அள்ளி எடுத்த போது,

பங்கு மீனை அள்ளாதடா
பழிக்கு ஆளாகதேடா
மாலகண்டன் என்று சொல்லி
மனதிலேயும் நினைக்கலையா
முட்டத்து மீனைத் தின்பதற்குள்
வயிறைக் கிழித்திடுவேன்
மார்புதட்டி சபதங்கூறி
வருமம் வைத்தான் மாலகண்டன்"

தான் எண்ணியபடி சிவராமப் பாண்டியனைக் குத்திக் கொன்றார் மாலகண்டத் தேவர்.

இக்கதைப்பாடல் மூலமாகக் காவல் தொழில் முறையில் இருந்த பல வழக்கங்கள் தெளிவாகத் தெரிய வருகின்றன. காவல் தொழில் செய்பவர்கள் களவுத் தொழிலில் ஈடுபட்டுக் களங்கம் சேர்த்துக் காவல் முறைக்கென்றிருக்கும் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறியபோது தோன்றும் சிக்கல்களை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வந்தனர் என்பதும் கட்டுப்பாட்டை

மீறியவர்களுக்கு எவ்விதம் தண்டனை அளித்தனர் என்பதும் தண்டனைக்கு ஆளானோர் செய்த பழிவாங்கும் செயலால் ஏற்பட்ட பின் விளைவுகளையும் இக்கதைப்பாடல் விளக்கமுற எடுத்துரைக்கின்றது.

இவ்வகைகளில் காவல் முறையில் நிகழ்ந்த கட்டுப்பாட்டு மீறலை இக்கதைப்பாடல் தெளிவான முறையில் வெளிப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சோணமுத்துப் பாண்டியன் கதைப் பதிப்பு விவரம்

இக்கதைப்பாடல் 'ஐந்து கதைப் பாடல்கள்' என்ற நூலில் மூன்றாம் கதைப்பாடலாக அமைந்துள்ளது (ப. 142-146). 256 வரிகள் கொண்ட இக்கதைப்பாடலுக்குக் கதைச் சுருக்கம் ஒரு சிறு பத்தியாகத் தரப்பட்டுள்ளது.

கோபால சமுத்திரத்தில் சோணமுத்துக் கோயிலில் இக்கதைப்பாடல் வில்லுப்பாடலாகப் பாடப்படுவதாகவும் 1975இல் தம் கைக்கு இக்கதைப்பாடல் கிடைத்ததாகவும் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கதைச் சுருக்கம்

கதைப்பாடல் வழி அறிந்த கதை இங்குச் சுருக்கமாகத் தரப்படுகின்றது.

கோபால சமுத்திரத்தில் கீழவீட்டுத் தேவர் பரம்பரையில் அழகப்பத் தேவர் மிராசு வேலை பார்த்து வந்தார். அவருடைய மூன்று மக்கள் சோணமுத்துத் தேவர், சொரி முத்துத் தேவர், நாராயணத் தேவர் என்பவர்களாவர். தந்தை காலத்தின் பின்னர் இந்த மூன்று பேரும் தந்தையின் தொழிலை மேற்கொண்டு வந்தார்கள். அப்போது கோபால சமுத்திரம், செவல், சொக்கலிங்கபுரம், கொழுமடை, பத்தமடை, பிராஞ்சேரி, நயினார்குளம் உள்ளிட்ட ஊர்களில் மிராசு வேலை பார்ப்பவர் களுக்குக் கூட்டம் பத்தமடையில் எட்டுக் கணக்காப்பிள்ளை வீட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு வருகை தந்த சோணமுத்துத் தேவரையும், சொரிமுத்துத் தேவரையும் வரவேற்ற எட்டுக் கணக்காப்பிள்ளையாகிய முத்துச் சாமிப்பிள்ளை சபைதனில் அமருமாறு கூற, அவருடைய பக்கத்திலிருந்த நாற்காலிகளில் சோணமுத்து, சொரிமுத்துத் தேவர்கள் அமர்ந்தனர். பக்கத்தூர்களிலிருந்து வந்திருந்த தேவமார்கள் கணக்காப்பிள்ளையுடன் அவர்கள் சரிசமானமாக உட்காருவதா? நாங்கள் அதைப் பார்த்துக் கொண்டு கையைக் கட்டிக் கொண்டு

நிற்க வேண்டுமா? இது எங்கும் காணாத அநியாயம் எனக் கணக்காப்பிள்ளையுடன் சொன்னார்கள். பழியைச் சொரிமுத்து, சோணமுத்துத்தேவர் மீது போடவேண்டும் என்று திட்டமிட்டுக் காரியம் செய்த கணக்காப் பிள்ளை, தேவமார்களின் கொதிப்புக்குச் 'சரிஇருப்பைக்' (Rights of Equal Seating) காரண மாக்கினார். சரிசமானமாக வந்தமர்ந்த அத்தேவமார்களைக் கொல்லாமல் விடக்கூடாது என்று அவர்களைக் கொல்ல பத்தமடைத் தேவமார்களையும் ஏவினார் கணக்காப்பிள்ளை. திரும்பிச் சென்று கொண்டிருந்தவர்களை வழி மறித்து வம்புக்கு இழுத்து, பத்தமடைத்தேவர்கள் பதின்மூன்று பேர்களும் சண்டை செய்யத் தொடங்கினார்கள். மரத்தின் பின்னால் மறைந்து நின்ற ஒருவன் சோணமுத்து, சொரிமுத்துவை வஞ்சகமாகக் கொன்றான். தன் தமையன்மாருக்குச் சாதம், கறி கொண்டு வந்த நாராயணத்தேவர் அண்ணன்மாரின் படுகளம் கண்டு கலங்கினார். இறுதிச் சடங்குகளை முடித்தபின் இன்னும் இங்கிருந்தால் தனக்கும் இடர்வரும் என அறிந்து மதுரை சென்று சிலகாலம் தங்கினார். பின்னர்ப் பாஞ்சாலங்குறிச்சி வந்து வீரபாண்டியக் கட்டபொம்மனிடம் பணியிலமர்ந்தார். நாடு சுற்றிப்பார்க்கப் புறப்பட்ட கட்டபொம்மனுடன் உடன் சென்ற நாராயணத் தேவரைக்கண்ட சில போத்திமார்கள் (பூசாரிகளில் ஒருவகையினர்) அண்ணன்மார் மாண்டது குறித்து விசாரித்தனர். அதைக்கேட்ட கட்டபொம்மன் 'அந்த வரலாறு என்னவென்று சொல்' எனக் கூற, தன் வரலாறு கூறினார் நாராயணத்தேவர். நடந்த உண்மைகளை அறிந்த கட்டபொம்மு 'உன் அரண்மனையை மீட்டுத்தாரேன்' என வாக்களித்து, அதன்படி சதிசெய்து நாராயணத்தேவரின் தமையன்மாரைக் கொன்ற கணக்குப் பிள்ளையாகிய முத்துச்சாமிப்பிள்ளையைக் கொன்று, அவன் மனைவி, கைக் குழந்தை எனஅனைவரையும் கருவறுத்து, பத்தமடைப் பங்காளிகளையும் கொன்றழித்தார். அத்துடன் அந்த வட்டார அதிகாரங்களை நாராயணத்தேவருக்கு மீட்டும் கொடுத்தார். நாராயணத்தேவர் பிடிமண்ணெடுத்து வந்து தன் அண்ணன்மாருக்குப் பீடம் அமைத்து வழிபாடு செய்து ஆண்டு வந்தார்.

இக்கதைப்பாடலில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

இக்கதைப்பாடலில் வீரபாண்டியக் கட்டபொம்மன் ஒரு முக்கியப் பாத்திரமாக வந்திருப்பதால் கதை நிகழ்ச்சிகள் கட்டபொம்மனின் காலகட்டத்தில் நடந்தவை என்பது தெளி வாகின்றது. கதைப்பாடல் கதை நிகழ்ச்சிகளை மிகச் சுருக்கமாக விளக்கியுள்ளது. இதனால் கதைச்சிக்கல் தெளிவுற எடுத்துக்

காட்டப் பெறவில்லை. எனினும் ஒரே சாதியைச் சேர்ந்த, ஒரே தொழில் செய்து வந்த தேவர் இனத்தாருக்குள் நடந்த மோதலை இது கதைக்கருவாகக் கொண்டுள்ளது என்பது வெளிப்படத் தெரிகின்றது. கதைப்பாத்திரப் பெயர்கள், இடப்பெயர்கள் மற்றும் ஒரே இனத்தார், ஒரே தொழில் புரிவார் என்பதை வைத்துப் பார்க்கும் பொழுது இக்கதைப்பாடலுக்கும் சிவராமப் பாண்டியன் கதைப்பாடலுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கும் என எண்ணத்தோன்றுகின்றது. சிவராமப் பாண்டியன் கதைப்பாடல் நிகழ்ச்சிகளுக்கு முந்தைய கால நிகழ்ச்சிகளைச் சோணமுத்துப் பாண்டியன் கதைப்பாடல் பதிவு செய்துள்ள தாகத் தெரிய வருகின்றது.

எட்டுக் கணக்குப்பிள்ளையாகிய முத்துச்சாமிப் பிள்ளை கோபால சமுத்திரத்தைச் சேர்ந்த சோணமுத்து, சொரிமுத்துத் தேவர்களைத் தனக்குச் சமானமாக இருக்கையில் அமர வைத்து, இதன் மூலம் மற்ற தேவமார்களிடையே எரிச்சலையும், கோபத்தையும், கொதிப்பையும் உருவாக்கினார். அவர்அவ்வாறு செய்வதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பது கதைப் பாடலில் தெரிவிக்கப்படவில்லை. என்றாலும் அவர்களை ஒழித்துக்கட்ட கணக்குப்பிள்ளை செய்த சூழ்ச்சியே சரிசமமான இருக்கை அளித்து அவர்களை அமர வைத்தது என்பதைக் கதைப்பாடல் தெளிவுறக் காட்டுகின்றது. கண்ட மற்றைய ஊர்த் தேவமார்கள் தங்களினும் அவ்விரு தேவர்கள் மட்டும் எவ் விதத்தில் உயர்ந்தவர்கள்? தங்களை அவமானப்படுத்தவே அவர்கள் எட்டுக்கணக்குப்பிள்ளைக்குச் சமானமாக அமர்ந்துள்ளனர் எனக் கருதிக் கொதிப்படைந்தனர். கணக்குப் பிள்ளையிடம் அதை எடுத்தும் சொன்னார்கள்.

கணக்காப் பிள்ளைகூட அவர்கள்
சதிஇருப்பு இருக்கணுமா நாங்கள்
அரையில் வேட்டிகட்டி
கையைக்கட்டி நிற்கணுமா
காணாத அநியாயம் (வரி: 42-46)

என்றார்கள். தேவமார்கள் கொதிப்படைந்து நிற்பதைக் கண்ட கணக்குப்பிள்ளை சொரிமுத்து, சோணமுத்துத் தேவர்களைக் கொல்லாமல் விட்டோமானால் நமக்குக் கேடுவரும்; அனைத்துத் தேவமாரும் நம்மைப் பகைப்பார்கள் எனக்கருதி சொரிமுத்து, சோணமுத்துவைக் கொல்ல ஆளனுப்பினார்.

வந்திருந்த அனைத்துத் தேவமார்களையும் அமரச் செய்யாமல் அவர்களெல்லாம் நின்று கொண்டிருக்க, அதில் இரு தேவமார்களுக்கு மட்டும் தனக்குச் சமமான இருக்கையளித்து அமரச் செய்தது அந்த இருவரின் உயிருக்கே ஆபத்தாக முடிந்தது.

பலவேச சேர்வைக்காரன் கதையிலும் இந்தச் "சரிசமமான இருப்பு" என்பதே கதைச் சிக்கலாக ஆகிவிடுகின்றதை இங்கு ஒப்பு நோக்கலாம். காவல் தொழிலில் இல்லாத பலவேச சேர்வைக்காரர்கள் காவல் தலைமை பூண்டவர்களுக்கு நிகராக அவர்களுடன் சரிசமமாக அமரவே, காவல் தொழில் புரியாத அவர்கள் எவ்வாறு தங்களுக்கு நிகராக அமரலாம் என்றுதான் பலவேச சேர்வைக்காரன் கதையில் கதைச்சிக்கல் காட்டப் படுகின்றது. இக்கதைப்பாடல் போன்றுதான் சோணமுத்துப் பாண்டியன் கதைப்பாடலிலும் சரி சமமான இருக்கையே கதைச் சிக்கலாகக் காட்டப்பட்டுள்ளது.

கணக்குப்பிள்ளையாகிய முத்துச்சாமிப்பிள்ளை மிராசுத் தொழில் பார்த்து வந்த அனைத்துத் தேவரினத்தாரையும் விட உயர்ந்தவராகக் கருதப்பட்டவர். அவருக்குச் சமமாக இரு தேவரினத்தார் மட்டும் அவரால் அருகில் அமர்த்தப்பட, மற்ற தேவரினத்தார் தங்களுக்கிழைக்கப்பட்ட பெரிய அவமானமாக அதைக் கருதினர். இங்கு, தேவரினத்தாரை நடத்திய முறைக்கு மாறாக நடந்து கட்டுப்பாட்டு மீறலை நடத்தியவராகக் கணக்குப்பிள்ளையாகிய முத்துச்சாமியைக் குறிப்பிடலாம். தேவரினத் தாருக்கென்றிருந்த கட்டுப்பாட்டை மீறிக் கணக்குப்பிள்ளைக்குச் சமானமாக அமர்ந்தவர்கள் எனச் சோணமுத்து, சொரிமுத்துத் தேவர்களைக் கட்டுப்பாட்டை மீறியவர்களாகவும் கருத வாய்ப்புள்ளது. தங்கள் இனத்துக் கென்றுள்ள கட்டுக்கோப்பை மீறியதால் தன் இனத்தாரையே கொன்ற பத்தமடைத் தேவமார்களையும் கட்டுப்பாட்டு மீறல் நடத்தியவர்களாகக் குறிப்பிடலாம். இந்த இருவரை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற உள்நோக்கத்துடனேயே கணக்குப்பிள்ளை சமமாக அமரச் செய்திருக்கலாம். அதற்கு முன் நடந்த நிகழ்வு என்ன என்பதைக் கதைப்பாடல் காட்டவில்லை. பிற தேவரினத்தாரின் கோபத்தை இவ்விதம் தூண்டிவிட்டுப் பின் அவர்களின் பகைமையைத் தணிக்கச் சரிசமமாக அமர்ந்த இருதேவமார்களைக் கொல்லவும் துணிகிறார் கணக்குப்பிள்ளை. தேவரினத்தாருக்குள் நிகழ்ந்த போராட்டங்களை இக்கதைப்பாடல்

பதிவு செய்து வைத்துள்ளது என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. இறுதியில் எஞ்சிய தம்பியான நாராயணத் தேவர் தன் அண்ணன்மார்கள் இழந்த உரிமையைப் பெற்றார்; பழிக்குப்பழியும் வாங்கினார்.

பலவேச சேர்வைக்காரன் கதையில் இழந்த உரிமையை அவர்களால் திரும்பப் பெற இயலவில்லை. அம்முயற்சியில் அவர்கள் உயிரையும் இழந்தனர். இக்கதைப்பாடலில் அதே தலைமுறையில் எஞ்சிய ஒருவன் பழிக்குப்பழி வாங்கி உரிமையையும் பெற்றான். இந்த இரு கதைப்பாடல் தலைவர் களுக்கும் கட்டபொம்மனின் உதவி கிடைத்தது. பலவேசக்காரர் கட்டபொம்மன் உதவி பெற்றும் எதிரிக்கு ஆங்கிலப்படை உதவவே தோல்வியடைந்தனர். இக்கதைப்பாடலில் எதிரிகளுக்கு ஒருவரும் உதவாமல் போக வெற்றி கிடைத்தது. ஒரே இனத் தாருக்குள் நடந்த போராட்டங்களையும் உட்பூசல்களையும் கட்டுப்பாட்டு மீறல்களையும் காட்டுகிறது என்ற வகையில் இக் கதைப்பாடல் தனி முக்கியத்துவம் பெறுகின்றது. அத்துடன் காவல் தொழில் புரிபவர்களை ஏதாயினும் காரணம் காட்டி அத்தொழிலைத் தொடர்ந்து செய்யவிடாமலும், உயிர்க்கொலை செய்தும் உள்ளனர் என்பதை விளக்கும் தக்க சான்றாக இக்கதைப்பாடல் திகழ்கின்றது எனலாம்.

மெச்சும் பெருமாள் பாண்டியன் கதையின் பதிப்பு விவரம்

இக்கதைப்பாடல் சு. சண்முகசுந்தரம் அவர்களால் 1976இல் கொங்கு பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்பட்டுள்ளது. இக் கதைப்பாடலே ஐந்து கதைப்பாடல்கள் நூலில் இரண்டாம் கதைப்பாடலாகத் திரும்பவும் பதிப்பித்து வெளியிடப் பெற்றுள்ளது. இந்தக் கதைப்பாடலும் கோபால சமுத்திரம் என்ற ஊரிலிருந்து கிடைத்ததாகப் பதிப்பாசிரியர் குறிப்பிடு கின்றார். மயிலேறிப்புலவர் என்பவர் தான் வில்லுப்பாடலாகப் பாடும் இக்கதைப்பாடலை 200 பக்க நோட்டில் எழுதி வைத்திருந்ததைப் பதிப்பாசிரியருக்கு அளித்ததாகவும் அறிய வருகின்றது. இக்கதைப்பாடலின் மொத்த வரிகள் 2527 ஆகும். கதைத் தலைவன் மெச்சும் பெருமாள் பாண்டியன் 'போக்காள சாமி' என்ற தெய்வச் சிலை வடிவில் வணங்கி வழிபடப்பட்டு வருவதாகவும் தெரிகின்றது. இந்த மெச்சும் பெருமாளை வளர்த்த வண்ணாத்திக்கு மானியமாக விட்ட நிலம் இன்றும் 'வண்ணாத்திப் போக்கு' என்று அழைக்கப்படுவதால், இது நடந்த உண்மை வரலாறு என்பதும் பதிப்பாசிரியரால் வலியுறுத்தப்

பெற்றுள்ளது. இக்கதைப்பாடலைப் பற்றிய ஆய்வு முன்னுரை நூலில் இடம்பெற்றுள்ளது. இதில் கதை கிடைத்த வரலாறு, கதையின் வரலாறு, மெச்சும் பெருமாளின் பண்புகள், வரலாற்று விளக்கங்கள், சமுதாயச் செய்திகள், இலக்கியமரபுகள் ஆகிய உட்தலைப்புகளில் 15 பக்கங்களில் செய்திகள் விளக்கப் பெற்றுள்ளன.

மெச்சும் பெருமாள் கதைச் சுருக்கம்

கோபால சமுத்திரத்தில் தலையாரியாகப் பணியாற்றியவர் பொன் பெருமாள் தேவர் ஆவார். இவருடைய இளைய மகன் மெச்சும் பெருமாள் பாண்டியன் ஆவார். இவர் கைக்குழந்தையாக இருந்த போது நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டதால் பகுதிப் பணம் கட்ட முடியாமல் ஆனது. பகுதிப்பணம் கட்டாதவர்களை அட்டைக்கிடங்கில் போட்டும், முதுகில் கல்லேற்றியும் தண்டனை யளித்துப் பகுதிப் பணத்தை வசூலித்த தனக்கே பகுதிப்பணம் கட்ட முடியாத சூழல் ஏற்பட்டதால், பொன் பெருமாள் பாண்டியன் நாட்டை விட்டுப் பஞ்சம் பிழைப்பதற்காக உக்கிரங்கோட்டைக்குச் சென்றார். நடுவழியில் மூத்த இருபெண் மக்கள் மட்டும் உடன்வர, தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த கைக்குழந்தை மெச்சும் பெருமாள் பாண்டியனை மறந்து விட்டு வந்தது ஞாபகம் வந்தது. திரும்பி அந்தநாடு செல்ல விரும்பாமல் மனத்தைத் தேற்றிக் கொண்டு உக்கிரங் கோட்டையில் சங்கர பாண்டியத் தேவரின் ஆதரவில் வாழ்ந்து வந்தனர்.

அங்கு அவ்வாறிருக்க, கோபால சமுத்திரத்தில் பொன் பெருமாள் பாண்டியரின் வீட்டில் குழந்தை அழும் குரல் கேட்டு அழுக்கெடுக்க வந்த வண்ணாத்தி குழந்தையை எடுத்துச் சென்று அரசருக்குச் செய்தியை அறிவித்தாள். பன்னிருவயது வரை வளர்த்து அரண்மனைக்கு அழைத்து வரவேண்டும் என்ற அரசரின் ஆணைக்கிணங்கத் தன் சொந்தப் பிள்ளை போல் வளர்த்து வந்தாள். குழந்தை வளர்ப்புப் பரிசாக அவளுக்கு அரசர் வாகைக் குளத்தில் ஐந்து ஏக்கர் நிலம் மானியமாக வழங்கினார். தக்க வயதில் அரண்மனைக்கு அழைத்துவரப்பட்ட மெச்சும் பெருமாள் பாண்டியர் ஐம்பது பொன் அன்றாடச் சம்பளத்தில் அரண்மனையில் வேலைக் கமர்த்தப்பட்டார். அடங்காத குதிரைகளை அடக்குதல், தீராத வழக்குகளைத் தீர்த்து வைத்தல், கம்பெடுத்துக் காவல் காத்தல் ஆகிய பணிகளைச் செய்து வந்தார்.

உக்கிரங்கோட்டையில் சங்கரபாண்டியனின் ஆதரவில் வசித்து வந்த மெச்சும்பெருமாளின் பெற்றோர் மறைந்து விட,

அவர்களின் இரு பெண் மக்களையும் சங்கர பாண்டியரே பொறுப்பேற்றுப் பாதுகாத்து வந்தார். அவ்வூரில் தீராத வழக்கொன்றைத் தீர்த்து வைக்கத் தகுதியானவர் மெச்சும் பெருமாள் பாண்டியன் என அறிந்து அவ்வூரார் அவரை அண்டினர். வழக்கைச் செம்மையாக விசாரித்தறிந்து வெகுவாகப் பாராட்டிச் சென்றதை அறிந்த வண்ணாத்தி இருளி, தான் வளர்ப்புத்தாய் என்பதையும் அவரின் முந்தைய வரலாற்றையும் கூறி விளக்கினாள். வழக்கைக் கொண்டுவந்த சங்கர பாண்டியர் மெச்சும் பெருமாளிடம் விவரம் தெரிவித்துத் தமக்கையரை அவர் வசம் ஒப்புவித்தார். தன் தமக்கையருக்குத் தக்க இடத்தில் மணம் முடித்து மகிழ்ந்தார் மெச்சும் பெருமாள் பாண்டியன்.

இரண்டாவதாக ஒரு கடும் பஞ்சம் வந்தது. காஞ்சிபுரம் பட்டணத்தைக் கடுமையாகத் தாக்கிய அப்பஞ்சத்தால் தென்னாடு சென்று தீவட்டிக் கொள்ளை நடத்த எண்ணினர் கள்ளநாட்டார். தென்னாடு திருடர்களின் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. கள்ளர் தலைவன் கறுப்புசாமி முன்னீர்ப் பாளையத்து வீரபத்திரத் தேவர் 'காவலுக்கு மறவரில்லை' என்று துப்புச் சொன்னதன் பேரில், கோபால சமுத்திரத்திலுள்ள குடும்பமார்களின் களஞ்சியத்தைக் கொள்ளையிடத் துணிந்தான். ஏழு கிடாரத் திரவியத்தைக் கொள்ளையிட்டு வெற்றியுடன் காரியம் முடித்ததன் அறிகுறியாய்ப் பலத்த குலவையிட்டனர். குலவைச் சத்தத்தைக் காதில்கேட்ட மெச்சும் பெருமாள் பாண்டியர் விரைந்து வந்து கள்ளர்களுடன் கடுமையான சண்டையிட்டுப் பதின்மூன்று கள்ளர்களை மாய்த்தார். அதிலொருவன் தப்பி ஓடிவிட்டான். திரவியத்தைக் காப்பாற்றிய மெச்சும் பெருமாள் பாண்டியன் குடும்பமார்களுக்குத் தகவல் தெரிவித்துவிட்டு அரண்மனை சென்று சேர்ந்தார்.

அதிகாலை நேரத்தில் தங்கள் பொன், பொருளைக் காத்துக் கொடுத்த மெச்சும் பெருமாளுக்கு நன்றிக் கடன் செலுத்த பலவிதமான வரிசைப் பொருட்களுடன் அரண்மனைக்கு வந்து அவர் எங்கே என்று அரசரிடம் விசாரித்தனர். முறையாகக் காவல் தொழிலுக்கென்று அமர்த்தப்படாத மெச்சும் பெருமாள் அத் தொழிலைச் செய்ததால் சினமுற்ற அரசர் வேண்டுமென்றே வெகுமதி தன்னிடம் பெற்றுக் கொண்டு வெளியேறுமாறு மெச்சும் பெருமாளிடம் சினந்து கூறினார். அப்போது பாண்டியர் என்னுடைய வெகுமதியாகத் திசை காவல் உரிமையைத் தர வேண்டும் என, அரசர் அதன்படியே செய்தார். பாண்டியரின்

வேண்டுகோளுக்கிணங்க தலைமுறை தலைமுறைக்கும் அழியாமலிருக்குமாறு செப்புப்பட்டயத்தில் திசை குறித்து எழுதித் தர ஏற்பாடு செய்தார் அரசர்.

காவல் தொழிலைச் செம்மையாகச் செய்து வந்த பாண்டியர் இறுசால் பணம் பிரித்து, அம்பாசமுத்திரத்துக்குச் சென்று கட்டி வருவது வழக்கம். ஒரு நாள் பணம் கட்டித் திரும்பும் பொழுது பழைய கள்வர் கூட்டத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டார். கண் வலி காரணமாக அவதியுற்ற போதும் கள்ளர்களை வெட்டி வீழ்த்தி அனைவரையும் கொன்று விட்டோம்; போர் முடிந்தது என எண்ணி, ஆயுதங்களை அகற்றி மருத மரத்தில் சாய்ந்தமர்ந்து, கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தபொழுது பிணத்தோடு பிணமாய் மறைந்து உயிர் தப்பியிருந்த ஒரு கள்ளன், உருண்டுருண்டு வந்து மெச்சும் பெருமாளின் குத்துக்கம்பினால் விலாவில் குத்த, குடல்சரிந்து வீழ்ந்தார் மெச்சும் பெருமாள். அந்நிலையிலும் அக்குத்துக் கம்பைத் திரும்ப வாங்கி, அக்கள்ளனுயிரை மாய்த்துத் தானும் மடிந்தார் பாண்டியர். அவருடன் வந்த அவர் வளர்த்த காவல் நாய்கள் அவருடைய தமக்கையரிடம் சென்று ஊளையிட்டுச் செய்தி அறிவிக்க, தமக்கையர் வந்து தம் அருமைத்தம்பியின் பிணத்தை எடுத்துச் சென்று அரசரின் அனுமதியோடு எரியூட்டினர்.

இக்கதைப்பாடலில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

கோபால சமுத்திரத்தைப் பிற்காலப் பாண்டியர் வம்சம் ஆண்டு வந்தது. அரசர் பெயர்கள் வீரக்கரையாளராசா, வீரமார்த்தாண்டராசா ஆவர். அவர்களிடம் தலையாரியாகப் பணியாற்றிப் பகுதிப் பணம் கட்ட முடியாமல் ஊரை விட்டு ஓடியவரின் ஆண் வாரிசு என்று அறிந்துதான் வண்ணாத்தி இருளியிடம் குழந்தையை வளர்க்குமாறு கூறினர் அரசர்கள். மெச்சும் பெருமாளை வளர்த்ததன் பரிசாக ஐந்து ஏக்கர் நிலமும் அரசர்கள் மானியமாக விட்டனர். அரண்மனையில் நாளொன்றுக்கு 50 பொன் சம்பளமும் அதுதவிர அறுபது பொன்னும் எனப் பணிநியமனமும் செய்து மெச்சும் பெருமாளைக் கவனித்துக் கொண்டார்கள் அரசர்கள். இது,

அம்பது பொன் சம்பளமும்
அருமை பாலகனே தாரோ மென்றார்
அம்பது பொன் சம்பளமும்

அன்றாட செலவு தானே
அறுபது பொன் வெகுமதியும்
அருமையாகத் தந்திடுவேன் (வரி: 1084-1089)

என அரசர்கள் கூறியதாகக் கதைப்பாடலில் காணப்படுகின்றது இந்தச் சம்பளத்துக்கு மெச்சும் பெருமாள் ஆற்றிய பணிகளையும் கதைப்பாடல் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றது.

அடங்காத குதிரைகளை
அடக்கி வைப்பான் பாலகனும்
கட்டுக்கடங்காக் குதிரைகளைக்
கலங்க அடித்திடுவான்
தீராத வழக்குகளைத்
தீர்த்து வைப்பான் பாண்டியனும் (வரி: 1103-1108)

அரண்மனையில் அடங்காத குதிரைகளை அடக்கிச் சவாரிக்கு ஏற்றதாக ஆக்குதல், சொந்த ஊரிலும் பக்கத்து ஊர்களிலும் குடும்பத் தகராறு, நிலத் தகராறு, பிற சொத்துத் தகராறு போன்ற வழக்குகளைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தல் ஆகிய பணிகளை மெச்சும் பெருமாள் செய்து வந்தார்.

தந்தை வகித்த தலையாரிப் பதவி இவருக்கு அளிக்கப்பட வில்லை எனத் தெரிகின்றது. ஆனாலும் "குலவிச்சை கல்லாமல் பாகம் படும்" என்பதற்கேற்ப இயல்பாகவே "காவல் பணியாற்றல்" என்ற பணிக்கூறு இவர் இரத்தத்தில் ஊறியதாக இருந்தது. சிறுபாலகனாக இருந்த பொழுதே வேட்டைக் குணமும், வீரப் பண்பும் இவருள் திளைத்திருந்தன என்பது கதைப்பாடலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வண்ணத்தியின் மற்றொரு மகன் அழுக்குத்துணி எடுத்து கல்லில் அடித்துத் துவைத்தல், துண்டுபோன்ற சிறு துணிகளை உலர்த்துதல் என்ற பணிசெய்தலில் ஆர்வம் காட்டினான். ஆனால் மெச்சும் பெருமாளோ, வேட்டைத்தொழிலில் விருப்பம் காட்டினார். சான்று:

பட்சிகளை முறியடிப்பான்
கவண் கட்டி வீசினால்
காக்கை வந்து தான் விழுமாம்
பறந்து போற பட்சிகளைப்
பந்துபோல உருட்டுவானாம்

அஞ்சு நல்ல வயதினிலே
அட்டாதுட்டி பண்ணுவானாம் (வரி: 879–885)

அரண்மனையில் பார்த்த பணி ஒன்றாயிருக்கக் காவல் காப்பதில் ஆவலுடையவனாய் இராசபாளையத்திலிருந்து இரண்டு நாய்கள் வாங்கி வளர்த்ததும், காவல் காப்பவர் போன்று கம்பெடுத்து வெளியில் இறங்கும் காட்சிகளும் கதைப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ளன (வரி: 1111-1124).

'கோபால சமுத்திரத்தில் காவல் காப்பவர் யாரும் கிடையாது எனவே அங்குக் கொள்ளையிடலாம்' என முன்னீர்ப் பாளையம் வீரபத்திரத் தேவர் துப்புக் கூறுவது கதைப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. கோபால சமுத்திரத்தில் பஞ்சம் வந்தபோது பகுதிப் பணம் கட்டமுடியாமல் தலையாரி உள்ளிட்டோர் ஓடிவிட்டதால் காவல் பணிசெய்வோர் எவரும் அங்கில்லாமல் இருந்தனர் எனத் தெரிகின்றது. அப்பாடல் வரிகளாவன:

ஆனால் ஒரு துப்பதுதான்
அருமையுடன் சொல்லக் கேளும்
கோபால சமுத்திரத்தில்
குடியிருக்கார் குடும்பக்கமார்
நாகநல்ல குடும்பனென்றும்
கனக நல்ல குடும்பனென்றும்
பள்ளருட தாவளத்தில்
பணம் அதிகம் இருக்குதய்யா
ஏழு கிடாரத் திரவியந்தான்
இருக்குதய்யா அங்கேதான்
ஆயக்காலில் தொங்குதய்யா
அனுதினமும் கேட்டதுண்டு
கோபால சமுத்திரம் போனாக்கால்
கொள்ளை போட்டு வரலாமே
காவலில்லை கட்டுமில்லை
காவலுக்கோ மறவரில்லை

என்று வீரபத்திரத்தேவர் கள்ளர்களுக்குத் துப்புக் கூறியதாக உள்ளது.

கள்ளர்கள் ஏழுகிடாரத் திரவியத்தையும் கொள்ளை யிட்டுக் குலவையிட்ட ஒலிகேட்ட மெச்சும் பெருமாள் வீமன், துட்டன் என்ற இரு நாய்களையும் அழைத்துக் கொண்டு வந்து

கள்ளர்களுடன் போரிட்டுக்களவுப் பொருளைக் கைப்பற்றி, பொருளின் உடைமையாளர்களிடமும் செய்தியைத் தெரிவித்து அரண்மனை மீண்டார். காவல்பணிக்கென்று நியமிக்கப்படாத மெச்சும் பெருமாள் காவல் தொழிலில் ஈடுபட்டுக் கொள்ளைப் பொருளை மீட்டார். பொருளுக்குரியோரிடம் பொருள் மீட்கப் பட்டதைத் தெரிவித்த பாண்டியர், மன்னர்களிடம் அச் செய்தியைத் தெரிவிக்கவுமில்லை. மீட்கப்பட்ட பொருளுக்குரிய குடும்பக்கமார் தக்க சன்மானங்களுடன் தங்கள் நன்றியைத் தெரிவிக்க வந்து, "மெச்சும் பெருமாளைக் காண வந்தோம்" என்று மன்னர்களிடமே கூறும் பொழுதுதான் மன்னர்களுக்கு நடந்த செய்திகளே தெரிந்தன எனக் கதைப்பாடல் காட்டுகின்றது *(வரி: 1938-1983).*

காவல் பணியில் நியமிக்கப்படாத ஒருவர் காவல் பணியில் ஈடுபட்டதும், அச் செய்தியை அரசர்களிடம் தெரிவிக்காததும் அரசர்களுக்குச் சினத்தை மூட்டின. அரண்மனையை விட்டு மெச்சும் பெருமாளை வெளியேறுமாறு அவர்கள் ஆணையிட்டனர்.

கூடி இருந்ததென்ன
கூட்டுச் சோறு உண்ட தென்ன
பெற்ற நல்ல பிள்ளைபோல
பிரியமுடன் வைத்திருந்தேன்
இன்றுமுதல் என்னுடைய
இடத்திற்கே ஆகாதே
கொலையாளி கூடத்தானும்
கூட்டுறவு வைத்திருந்தோம் ***(வரி: 1992–1999)***

எனச் சினமுற்றுப் பேசினார்கள். வெளியே செல்லும் முன்னர் "அரண்மனையில் இதுவரைக்கும் இருந்ததனால் வேண்டுமென்ற வெகுமதியைக் கேள்'' என அரசர்கள் கூறிய மொழிப்படி மெச்சும் பெருமாள் திசை காவல் உரிமை வேண்டும் எனவும், அது தலைமுறை தலைமுறைக்கும் அழியாதிருக்குமாறு செப்புப்பட்டயத்தில் எழுதித் தரவேண்டும் எனவும் கூறினார் *(வரி: 2000-2021).* எல்லை குறித்துத் திசை காவல் உரிமை மெச்சும் பெருமாளுக்கு வழங்கப்பட்டது. மானாட்டான் சாலைக்கு வடக்கே, பச்சையாற்றுக்கு மேற்கே, பத்தமடையாபிள்ளை பாலத்துக்குக் கிழக்கே, தவன கோவில் சுலுசு பாலம், கருங்காட்டுக்குத் தெற்கே என எல்லை குறிக்கப்பட்டது *(வரி: 2024-2034).*

இவ்வாறு எல்லை குறித்துத் திசைகாவல் உரிமை வழங்கப்படுவதற்கு முன்னரே அவர் காவல்பணி செய்தது கட்டுப்பாட்டு மீறலாகி அரசர்களின் கோபத்துக்கும் ஆளாகக் காரணமாகின்றது.

தன் தந்தை பொன் பெருமாள் பாண்டியனுக்குப் பின் தனக்கு வரவேண்டிய காவற் பணி கொடுக்கப்படாத போதும், காவற்பணி செய்து கட்டுப்பாட்டை மீறிய மெச்சும் பெருமாள், அரசரிடம் திசை காவல் உரிமை வேண்டும் என்று கேட்டு அது தலைமுறைக்கும் அழியாதவாறு செப்புப்பட்டயத்தில் பதிந்து பெறுவது, இதற்கு முன் அவ்வாறு செய்யப்படாததனால், தான் இழந்த உரிமையைக் கேட்டுப் பெற வேண்டியதிருந்ததே என்ற எண்ணத்தின் விளைவாகலாம்.

இக்கதைப்பாடல் மூலம் காவற்பணியில் இல்லாதோரும் களவு நடைபெறும்போது பொறுப்புடன் செயல்பட்டுக் காவற் பணியாற்றியுள்ளனர் என்பதும், இது கட்டுப்பாட்டு மீறலாகக் கருதப்பட்டு, ஆட்சியாளர்களால் கண்டிக்கப்பட்டு வந்தது என்பதும் புலனாகின்றது.

வன்னியடி மறவன் கதை

இந்தக் கதைப்பாடல் வன்னியடிமறவன் கதை, வன்னிராசன் கதை, வன்னியராயன் கதை என்ற வெவ்வேறு பெயர்களில் மூன்று நூல்களாக மூவரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பதிப்பு விவரங்கள் சமூகக்கதைப் பாடல்கள் அகரவரிசைப்பட்டியலில் தரப்பெற்றுள்ளன. வன்னிராசன் கதை, வன்னியராயன் கதை என்ற இருநூல்களும் ஒரே கதையமைப்பைக் கொண்டன. வன்னியடி மறவன் கதை கூடுதலான ஒரு நிகழ்ச்சியைக் கூறிக் காவல் தொழிலில் நிகழ்ந்த கட்டுப்பாட்டு மீறலை வெளிப் படுத்துவதாக அமைந்துள்ளது. அதன் விவரமாவது:

வன்னியராயனின் தந்தை மாடப்பத் தேவன் மணிக் காஞ்சியில் (மணியாச்சி) காடுகாவல் பணியில் ஈடுபட்டிருந்த வனாவான். ஊத்துமலை நாட்டு மறவர்கள் மாடப்பத்தேவனை வெட்டிக்கொன்று விட்டனர். வெட்டப்பட்டதற்கான காரணம் எதையும் கதைப்பாடல் குறிப்பிடவில்லை. என்றாலும் காவல் தொழில் செய்து வந்த மறவர் இனத்தாராலேயே காவல் தொழிலில் ஈடுபட்டிருந்த மாடப்பத்தேவன் கொல்லப்பட்டதால், தொழில் முறைப் போட்டி கொலைக்குக் காரணமாகலாம் என

ஊகித்தறியலாம். மாடப்பத் தேவனுக்குப் பின் அவருடைய மகன் வன்னியராயன் பணியை மேற்கொண்டு வந்தான்.

> அழகுபார வளையமுடன் சிக்கனவே ரெட்டபங்கு
> சிறந்த மறத் தலைவனுக்கு காடுகாவல் ஆண்டுவர
>
> *(வரி:434-435)*

என்பதில் வன்னியராயன் காவல் பணியாற்றிய செய்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒருநாள் அரண்மனைச் செட்டி ஒருவனிடம் வன்னியராயன் பஞ்சுக்குப் பிண்ணாக்கு தருவாயா? எனக் கேட்டு அதில் நிகழ்ந்த வாய்த்தகராறில் அந்தச் செட்டியைச் செவிட்டில் அடித்து விட்டான். அரண்மனையாரிடம் அந்த அரன்மணைச் செட்டி புகார் செய்ய, அரண்மனையார் வன்னிய ராயனை வெட்டிவிடுமாறு ஆணை பிறப்பிக்க அது செயல்படுத்தப் பட்டது. கதையின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ள 14 வரிகளில் மாடப்பத்தேவன், அவன் மகன் வன்னியராயன் ஆகியோரின் மரணங்கள் விவரிக்கப் பெற்றுள்ளன. காவல் தொழில் செய்வாருக்குள் இருந்த போட்டி, பொறாமையின் வாயிலாக இவர்கள் இருவரின் மரணம் நிகழ்ந்திருக்கக் கூடும். இருவருள்ளும் மாடப்பத் தேவனின் மரணம் காவல் தொழில் புரிவாராலேயே நிகழ்த்தப்பட்டதால், காவல் தொழில் புரிவதில் சிக்கல் தோன்றி, அது உடன் தொழில் புரிபவன் மீதே மீறலை நிகழ்த்தி உயிரைப் பறித்துள்ளது என்பது புலனாகின்றது. அரண்மனைச் செட்டியை அடித்ததற்காக அரண்மனையார் வன்னியராயனை வெட்டி விடுமாறு ஆணை பிறப்பித்தனர் என்று கதைப்பாடல் கூறும் காரணமும் பொருத்தமாகத் தெரியவில்லை.. தந்தை மாடப்பத்தேவனின் மரணத்துக்குப்பின் வன்னியராயன் காடுகாவல் பணி செய்துவந்த பொழுது அத்தொழிலை அவன் செய்வதில் உள்ளூரப் பொறாமையும், புகைச்சலும் இருந்திருக்கக் கூடும் என்பது பெறப்படுகின்றது. இதன் காரணமாக இவன் கொலை நிகழ்ந்திருக்கலாம். எவ்வாறோ காவல் தொழில் செய்வார்களுக்கு இடையே தொழில் ரீதியாகப் போட்டியும், பொறாமையும், புகைச்சலும் இருந்துள்ளன என்பதும் இதனால் உயிர்க் கொலைகள் நிகழ்த்தப்பட்டு அத்தொழிலில் கட்டுப்பாட்டு மீறல்கள் நடந்துள்ளதையும் காட்டும் தக்கதொரு சான்றாக இக்கதைப் பாடல் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன என்பதும் தெளிவாகின்றது.

5. வெளியூர்க்காரன் செல்வாக்குக்கு எதிரான போராட்டங்கள்

வெளியூரிலிருந்து வந்த ஒருவன் ஆட்சிப் பீடத்தில் உள்ளவரிடம் தன் தனிப்பட்ட வீரம், திறமை மற்றும் அரிய பிற பண்புகளால் முக்கியப் பதவி பெற்று உயர்வதை உள்ளூர்க் காரர்கள் பெரிதும் வெறுத்தனர் என்பதைப் பல கதைப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இத்தகு கதைப்பாடல்களை வெளியூர்க் காரன் செல்வாக்குக்கு எதிரான மீறல்களாகப் பதிவு செய்யலாம். தங்கள் ஊர் ஆட்சி அதிகாரங்களில் உள்ளூர்க் காரன் ஒருவனே அங்கம் வகித்தல் வேண்டும் என்பதில் ஒவ்வொரு ஊர்க்காரனும் ஊர் விதிமுறை போன்றே பின்பற்றி வந்தனர். இதில் மீறல் நிகழும் பொழுது போராட்டம் நிகழ்ந்துள்ளது. இத்தகு கட்டுப்பாட்டு மீறல் உடைய கதைப்பாடல்களாக,

1. ஈனமுத்துப் பாண்டியன் கதை
2. அரவமுத்து வீரன் கதை
3. பிச்சைக்காலன் கதை

போன்ற கதைப்பாடல்களைக் கூறலாம்.

ஈனமுத்துப்பாண்டியன் கதைப் பதிப்புகள்

இக்கதைப்பாடல் "ஐந்து கதைப்பாடல்கள்" என்ற நூலில் முதல் கதைப்பாடலாக 826 வரிகளில் அமைந்துள்ளது. கதைப் பாடல் பதிப்புக்கு முன் ஒரு முன்னுரை உள்ளது. அதில் கதைச்சுருக்கம், கதையின் காலம், கதை பற்றிய சில செய்திகள், கதை பற்றிய குறிப்புகள், கதைப்பாட்டு பற்றிய குறிப்புகள் ஆகியன அடங்கியுள்ளன. கதைப்பாடல் பதிப்புக்குப் பின் விளக்கக் குறிப்புகளும், சிறப்புப் பெயர் அகராதியும் அமைந்துள்ளன. இவற்றையும் அடுத்து வரலாற்றுக் குறிப்புகள் என்பதின் கீழ் சிங்கம்பட்டி ஜமீன் வரலாறு என்பது உள்ளது. இதில் சிங்கம்பட்டி ஜமீன்தார் பற்றிய செய்திகள், சவிக்கைக்காவல், கோவில்சிறை, தண்டனை முறை, முப்பந்தல் போர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இறுதியாகத் தற்போது பாடப் பட்டு வரும் வில்லுப்பாட்டு வடிவிலான ஈனமுத்துப்பாண்டியன் கதை தரப்பட்டுள்ளது. முன் கதைப்பாடல் வடிவுக்கும் (19ஆம்

நூற்றாண்டின் முற்பகுதி) இவ்வில்லுப்பாட்டு வடிவுக்கும் (20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) பெருத்த மாற்றம் உள்ளது. வில்லுப்பாட்டில் மிக அண்மைக்காலப் பேச்சு வழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. பாடல் வரிகளும் இடையிடை உரைநடை வடிவங்களும் காணப்படுகின்றன. கதையமைப்பிலும் முதல் கதைப்பாடல் பதிப்பில் குறிப்பாகச் சுட்டப்பெற்றுள்ள ஈனமுத்துவுடனான பெண் தொடர்பு, இந்த வில்லுப்பாடல் அமைப்பில் மிக விரிவாகக் கூறப்பெற்றுக் கொச்சைப்படுத்தப் பட்டுள்ளது.

கதைச்சுருக்கம்

கதைப்பாடலின் கதைவடிவம் இங்குக் கதைச்சுருக்கமாக அளிக்கப்படுகின்றது.

நெல்லைமாவட்டம் வள்ளியூரின் தெற்குப் பகுதியில் நாராயணத்தேவரும் கரிப்பி என்பாளும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தனர். நெடுநாட்கள் குழந்தையில்லாமல் வருந்திய அவர்களுக்குச் சுப்பிரமணியரின் அருளால் ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தைக்கு ஈனமுத்து எனப் பெயர் சூட்டி, பள்ளிக்கல்வி மற்றும் வீரப் பயிற்சிகள் அளித்து வளர்த்தார்கள். ஈனமுத்துக்குப் பதினாறு வயதாகியது. அக்காலகட்டத்தில் சிங்கம்பட்டியில் ஆட்சி செய்தவர் சிவனணைஞ்ச பெருமாள் துரை ஆவார். அவர் தன் மகளை அம்பலவாண புரத்தைச் சேர்ந்த முத்து இருளப்பத்தேவருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். காவல்தொழில் தொடர்பாக முத்துஇருளப்பத் தேவருக்கும் மலையாளம் பொன் பாண்டியத் தேவருக்கும் பகைமை ஏற்பட்டது. இருவருக்கும் இது தொடர்பாகப் போர் நடைபெற உள்ள சூழலில் தன் மருமகனுக்குப் படை உதவி செய்ய சிங்கம்பட்டி சிவனணைஞ்சபெருமாள் புறப்பட்டு வந்தார். தெற்கு வள்ளியூர் கடந்து வரும்போது படையுடன் ஈனமுத்துவும் போர் செய்யப் புறப்பட்டு உடன் வந்தான். முப்பந்தல் எனும் இடத்தில் போர் நடைபெற்றது. போரில் தனிப்பட்ட திறம் காட்டி வீரதீரத்துடன் போர் செய்த ஈனமுத்து, போரின் வெற்றியில் பெரும் பங்கு வகித்தான். கண்ணுற்ற சிங்கம்பட்டி சிவனணைஞ்ச பெருமாள் துரை வள்ளியூர் செல்ல விடைகேட்டு நின்ற ஈனமுத்துவைப் பிரிய மனமின்றித் தன்னுடனேயே சிங்கம்பட்டி அழைத்து வந்து வாயிற்காவல் தளபதியாய் வைத்துக்கொண்டார்.

இவ்வாறாக அம்பலவாணபுரம் முத்துஇருளப்பத் தேவரும் ஆறுபங்கு நாட்டாரும் பெற்றாரும் உற்றாரும் போலக்கூடி வாழ்ந்து வரும் நாளையில் ஆதிக்கம் சங்கர உடையாரும் சங்கர உடைய அம்மாளும் சிங்கம்பட்டி ஜமீனுக்கெதிராகச் சதி செய்தனர். அத்தாள நல்லூர் கள்ள வெண்ணி என்பானை வரவழைத்து ஜமீன்தாரின் தலையை அறுத்துத் தந்தால் 'பண்ணைப்பாட்டம் தந்து பக்கத்தில் வைத்துக் கொள்வேன்' என்று சங்கர உடைய அம்மாள் ஆசை வார்த்தை கூறினார். இந்தச் செய்தியைத் துப்பறிந்த ஈனமுத்து ஜமீன்தார் பெரியசாமி துரையிடம் கூற, அவர் அக்கள்ள வெண்ணியைக் கைப்பிடியாய்ப் பிடிக்கக் கூறினார். அதன்படி கள்ள வெண்ணி கொல்ல வந்தபோது பிடித்து அவனுக்கு ஆயுள் தண்டனை கிடைக்குமாறு செய்யப்பட்டது. தன் உயிரைக் காத்தவன் ஈனமுத்து என்ற அடிப்படையில் ஈனமுத்துவுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கி அண்ணன் தம்பிபோல் ஜமீன்தார் இருந்தார். ஜமீன்தாரிடம் ஈனமுத்துவுக்கு இருந்த செல்வாக்கை விரும்பாத சிலர் ஈன முத்துவைக் குறித்து இல்லாததும் பொல்லாததுமாகக் கூறினர்; மொட்டை மனுப் போட்டனர். அனைத்தையும் நம்பிய ஜமீன்தார் ஈனமுத்துவை அரண்மனையை விட்டு வெளியேறுமாறு பணித்தார். அதன்படி வெளியேறிய ஈனமுத்துவும் வேற்றூர் சென்று தன் மாமன், மைத்துனன்மார் வீடுகளில் தங்கி வாழ்ந்து வந்தார். அதன்பின் தன் ஊரான தெற்கு வள்ளியூர் வந்து இராமுத்தேவர் என்பவரது வீட்டில் தங்கினார். விருந்துண்டு தாம்பூலம் தரித்த போது உள்ளோலை வந்தது. உடன் சிங்கம்பட்டிக்குப் புறப்பட்டார் ஈனமுத்து. ஜமீனின் காவலர்களால் இடைவழியிலேயே பிடிக்கப்பட்ட ஈனமுத்துவை, பணகுடியில் இராமலிங்கேசர் கோயிலில் அடைத்து வைத்தனர். காவலர்கள் வாயிற் படியில் தலை வைத்துப் படுத்தும் கொண்டனர். ஆனால் ஈனமுத்து தப்பித் திரும்ப வள்ளியூர் வந்தடைந்தார். அதன்பின் மறுகால் குறிச்சி பிச்சக்கண்ணுத் தேவர் வீட்டில் தங்கினார். பின் அங்கிருந்த பாப்பான்குளம் பூதத்தேவர் வீட்டில் அடைக்கலமானார். பூதத்தேவர் உள்ளோலை எழுதித் தன் வீட்டில் ஈனமுத்து உள்ளதாகச் சிங்கம்பட்டிக்குத் தகவல் அனுப்பினார். படை வந்து ஈன முத்துவைப் பிடித்துச் சிங்கம்பட்டி கொண்டு சென்றது. அங்கு ஈனமுத்து உடலெங்கும் நெய்ப்பாளம் போட்டு நெருப்பிட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய சாம்பலைத் தாமிரவர்ணி ஆற்றில் எறிந்தனர்.

இக்கதைப்பாடலில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

ஆட்சிப்பீடத்தில் இருப்போரின் அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவராகி எல்லாவித உரிமைகளையும், அதிகாரங்களையும் பெற்றவர்கள் மீது அவர்கள் உள்ளூர்க்காரர்களாக இருந்தாலும் அல்லது வெளியூர்க்காரர்களாக இருந்தாலும் பொறாமை கொள்வது என்பது இயல்பாக இருந்துள்ளது என்பதைப் பல கதைப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. "வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும்" என்பது வையக நடைமுறையாக இருந்து வந்துள்ளது. அரசனின் ஆதரவு பெற்றுத் தலைமைப் பதவி பெற்றவர்கள் மீது மற்றவர்கள் பொறாமை கொண்டு அவர்கள் மீது இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி அவர்களின் உயிருக்கே உலை வைத்திருப்பதை உணர முடிகின்றது. இதற்குத் தக்க ஒருசான்றாக வீரச் சாம்பான் கதையைக் கூறலாம். (இக்கதை குறித்த விளக்கங்கள் "வர்க்க வழியிலான கட்டுப்பாட்டு மீறல்கள்" என்ற இயலில் விளக்கப்பட்டுள்ளன). இக்கதையில் வீரச் சாம்பானின் தலைமைப் பொறுப்பைக் கண்டு பொறாமையுற்ற சிலர், அவன் குடித்துவிட்டு ஆட்சியாளர்களுக்கெதிரான வார்த்தைகளைப் பேசினான் எனக் கூறி வீரச் சாம்பானின் மரணத்துக்குக் காரணமானமை குறிக்கப்பட்டுள்ளது. உள்ளூர்க்காரனுக்கே இத்தகு நிலைமை எனும் பொழுது வெளியூரிலிருந்து வந்து ஆட்சித்தலைமையின் அன்பு, ஆதரவைப் பெற்றவர்கள் மீது பழிதூற்றி உயிரைப் பலிவாங்க உள்ளூர்க் காரர்கள் எவ்வளவு தூரத்துக்கு முனைவார்கள் என்பதற்குத் தக்க சான்றாகத் திகழ்வதே ஈனமுத்து கதைப்பாடலாகும்.

ஈனமுத்து தெற்கு வள்ளியூர்க்காரன். போரில் காட்டிய வீரதீரத்தால் ஜமீன்தாரின் கவனத்துக்கு ஆளானவன்; சிங்கம்பட்டிக்கு அழைத்து வரப்பட்டவன்.

தன் ஊருக்குத் திருப்பச் செல்ல விடை கேட்டு ஈனமுத்து நின்ற போது ஜமீன்தார் பெரியசாமித் துரை ஜமீனால்,

போக வேண்டாம் போக வேண்டாம்
　　புத்தியுள்ள ஈனமுத்து
அரண்மனையில் இருக்கவேணும்
　　வாசப் பிரதானியாய்
இருக்க வேணும்
　　ஒருநாள் ஒருபொழுது
உன்னை வைத்துப் பாராமல்
　　இருப்பேனோ　　　　(வரி: 239-246)

என்று கூறப்பெற்றுச் சிங்கம்பட்டிக்கு அழைத்து வரப்பட்டான். ஜமீனின் தலைக்கு ஆபத்து வந்த போது வெட்டிக்கொல்ல வந்தவனைக் கைப்பிடியாய்ப் பிடித்து ஒப்படைத்ததால், ஜமீனால் பெரிதும் பாராட்டப்பெற்றுப் பலவித அதிகாரங்களையும் கைப்பலனாய்ப் பெற்றான்.

ஆவத்துக்கு உதவப்பட்ட
ஆணழகன் ஈனமுத்து
உன்னாலே என்தலை திரும்பவும்
எழுதினான் பிரமதேவன்
உனக்கு மேழுதலும்
உண்டாக்கித் தருவேன் என்றார் *(வரி: 337-342)*

சொன்னதோடு மட்டுமல்லாமல்,

கும்பிடும் கம்பளியும் எனக்கு என்று
மத்த அதிகாரம் உனக்கே யென்று *(வரி : 343-344)*

உரைத்தார் ஜமீன். அதிகாரங்கள் அனைத்தையும் ஈனமுத்துக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல், தன் உடன்பிறப்பாகவும் ஏற்றுக் கொண்டதை, "அண்ணன் தம்பிபோல் இருக்க வேணும்" *(வரி: 345)* என்ற வரி புலப்படுத்துகின்றது. அதிகாரங்கள் வழங்கியதை ஆணைப்பிரமாணம் செய்து பதிவும் செய்து கொண்டார்கள்.

ஆணை பிரமாணம் பண்ண வேணும்
திருவிளக்கு உப்பு பால் வெடி
வேல்கத்தி பிரமாணம் பண்ண வேணும்
ஆணை பிரமாணம் பண்ணிக்
கொண்டார்கள் *(வரி: 347-350)*

என்ற வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஜமீன் பெரியசாமித் துரையவர்களைக் கொல்ல முயன்றது தோல்வியில் முடிந்து விட, சங்கர உடையார், சங்கரஉடைய அம்மாள் ஆகியோருடன் ஆறுபங்கு நாட்டாரும் கைகோர்த்துக் கொண்டு பட்டம் எனக்கு உனக்கு என்று சண்டை சல்லியத்தைத் தொடங்கினர். அப்போது ஈனமுத்து ஜமீன் பெரியசாமித் துரையுடன் பட்டண வியாச்சியம் செய்யப் பெரும் பணத்துடன் சென்று பெரியசாமித் துரை அவர்களுக்கே பட்டமென்று உத்தரவு பெற்றுவந்தார். இவ்வாறு ஜமீனுக்குப் பலவகைகளிலும்

உறுதுணையாகி ஜமீனின் உயிர்த்துடிப்பாக ஆகியதைப் பொறுக்காத வீண்பழி கூறுவோர்கள் ஈனமுத்து மீது மொட்டை மனுக்களை அனுப்பினர். மிக மோசமான குற்றச்சாட்டுகளையும் கூறினர். அண்ணன்-தம்பிபோன்று வைத்திருந்ததற்கு மானபங்கம் செய்து விட்டானே என்று ஜமீனும் வருந்தினார்; கோபமுற்றார். ஈனமுத்துவுக்குத் தகாதமுறையில் பெண் தொடர்பு இருந்தது என்பது முக்கியக் குற்றச்சாட்டாக அமைந்தது எனக் கதைப் பாடலில் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது.

ஈனமுத்துவும் பெண் தொடர்பும்

கதைத்தலைவர்களை வீழ்த்தத் தக்கதொரு ஆயுதமாகப் பெண் தொடர்பு கதைப்பாடல்களில் காட்டப்பட்டுள்ளது. மதுரை வீரனின் வீழ்ச்சிக்கு வெள்ளையம்மாளுடன் அவன் கொண்ட தொடர்பு ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. அதுபோன்று ஈனமுத்துவின் வளர்ச்சி கண்டு பொறாமை யுற்றவர்கள் அவனிடமிருந்த பெண் தொடர்பைத் தக்கதொரு ஆயுதமாகப் பயன்படுத்தினர். ஜமீனின் மனைவியுடன் ஈனமுத்து தொடர்பு கொண்டிருந்தான் என்று கதைப்பாடல் எந்த இடத்திலும் வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால் நடைமுறையில் பாடப்பட்டு வரும் வில்லுப்பாடலில் பெண் தொடர்பு ஜமீனின் மனைவியுடனானது என்பது வெளிப்படை யாகச் சொல்லப்பட்டு, அதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து மிக விரிவாகக் கூறப்பட்டுக் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளது. ஈன்முத்துவை ஜமீன், அரண்மனையை விட்டு வெளியேற்றிய பின்னும் ஒருத்தி ஓலை எழுதி வரச் சொன்னதாகவும், அவ்வாறு திரும்பவரும் பொழுது ஒருமுறை காவலர்களால் பிடிக்கப் பட்டான்; பின்தப்பினான் எனக் கதைப்பாடல் கூறுகிறது. வேண்டியவர்களெல்லாம் வேண்டித் தடுத்தும் மறுமுறையும் ஈனமுத்து சிங்கம்பட்டி நோக்கிப் புறப்பட பெண் தொடர்பே காரணம் எனக் கதை கூறுகிறது. அப்புறப்பாடு அவன் மரணத்துக்கு வழிகோலியது. எவ்வாறாயினும் வெளியூர்க்காரன் ஒருவன் தங்கள் ஜமீனில் வந்து பெரும் பதவியும் அதிகாரங்களும் பெற்றுச் சீரும் சிறப்பும் பெற வாழ்ந்ததும், அரசு உரிமைகளை ஆணையாகப் பதிவு செய்து கொண்டதும் பலரது உள்ளத்தை உறுத்த, வீண்பழிகளைச் சுமத்தி அவன் உயிர்போகக் காரணமாக அமைந்தமையை இக்கதைப்பாடல் சிறப்புற எடுத்துக் காட்டுகிறது. இவனை வீழ்த்துவதற்குப் பெண் தொடர்பு தக்கதொரு ஆயுதமாகப்

பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஈனமுத்து மீது சுமத்தப்பட்டது வீண்பழி என்பதையும் கதைப்பாடல் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளது.

வீரகோட்ட காரரெல்லாம்
எழுதினார்கள் மொட்டைமனு (வரி: 373-374)

கச்சேரி அடியாள் வந்து
குடித்தனக் காரர் வந்து
அரமனையில் சாடிசொல்ல (வரி: 275-278)

பின்னும் வந்து கோள் சொன்னார்கள் (வரி: 384)

என்றுள்ள இப்பாடல் வரிகளில் "வீரகோட்டகாரர்" எனப் படுபவர் வீண்பழி கூறுபவர்கள் என்ற பொருள் கொண்டதாகும். "சாடி சொல்லல்" என்பது குறிப்பினால் குற்றம் சொல்லல்; கோள் சொல்லல் என்ற பொருளுடையதாகும். எனவே அவர்கள் கூறியது வீண் பழி என்பதைக் கதைப்பாடல் சுட்டிக்காட்டியுள்ளது. ஈனமுத்துவின் உயர்வு கண்டு பொறாமைப்பட்டவர்கள் அவன் மீது சுமத்திய பழியாக இதனைக் கருத இடம் உள்ளது என்றாலும், அரண்மனையை விட்டு ஈனமுத்து வெளியேற்றப் பட்டு வேற்றூர்களில் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்த காலங்களில் அவன் திரும்பவும் சிங்கம்பட்டிக்குத் திரும்பி வருவதற்கு ஒருத்தி அனுப்பிய ஓலைதான் காரணம் என்பதையும் கதைப்பாடல் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

எழுதி விட்டாளே உள்ளோலை (வரி: 449)

என்பது பாடல்வரியாகும். எழுதியவள் யார்? என்ற வினாவிற்குக் கதைப்பாடல் மௌனமே சாதிக்கிறது. இதுபோன்று ஈனமுத்துவைப் பிடித்து வந்து அவன் உடலில் நெய் தோய்த்து ஏழு அடுக்குப் பாளம் போட்டு நெருப்பில் இட்டுக் கொளுத்திய போது,

புழுவாத் துடிக்கிறாப் போல
துள்ளி உழுதாரே
நீறாகி நீரில் கலந்தான்
துடிக்கிறது ஆவியெல்லாம்
வாணாள் மறுகுதே
குடி கெடுத்த சண்டாளியால் (வரி: 815-820)

என அவன் மரணத்துக்குக் காரணம் ஒரு பெண் என்பது கூறப் பட்டுள்ளது. இந்த இடத்திலும் அவள் யார்? என்பது வெளிப் படையாகச் சொல்லப்படவில்லை. அரச மரபினருக்கெதிரான எண்ணங்களை வெளிப்படையாகச் சொல்லக் கதைப்பாடல் புலவர் தயங்கியுள்ளார் என்பதும் இது பலகதைப்பாடல் புலவர்களும் பின்பற்றிய ஒருநெறிமுறைதான் என்பதும் வெளிப் படையாகத் தெரிகின்றது. பின்னால் எழுந்த வில்லுப்பாடலில் பெண் யார் என்பது வெளிப்படையாகக் கூறப்பட்டு அத் தொடர்பு கொச்சைப்படுத்தப்பட்டமைக்கு ஜமீன் அமைப்புகள் ஒழிக்கப்பட்ட நிலை காரணமாகலாம்.

எவ்வாறாயினும் இக்கதைப்பாடலைப் பொறுத்த அளவில் வெளியூரிலிருந்து வந்து அரசனின் நன் மதிப்பைப் பெற்றுத் தன் வீரத்தாலும் திறத்தாலும் உயர்வு பெற்ற ஒருவனின் பெண் தொடர்பு காரணமாக்கப்பட்டு அவன் ஒழித்துக் கட்டப்பட் டுள்ளான் என்ற வரிசையில் வெளியூர்க்காரன் செல்வாக்குக்கு எதிரான கட்டுப்பாட்டு மீறலுடைய கதைப்பாடலாக இதனைக் கருதலாம். உள்ளூரில் உள்ளூர்க்காரனே செல்வாக்குடையவன் என்பது மக்கள் மனப்போக்குக்கிசைந்த எழுதப்படாத கட்டுப் பாட்டு விதி. இக்கட்டுப்பாட்டை மீறியவன் ஈனமுத்து. அவன் தக்க நேரத்தில் ஒழித்துக் கட்டப்பட்டான்.

இதுபோன்று வெளியூர்க்காரன் செல்வாக்குக்கு எதிரான கட்டுப்பாட்டு மீறலுடைய கதைப்பாடலுக்கு மற்றுமொரு தக்க சான்றாகத் திகழ்வது அரவமுத்து வீரன் கதைப் பாடலாகும். அக்கதைப்பாடல் குறித்த செய்திகளைத் தொடர்ந்து காணலாம்.

அரவமுத்து வீரன் கதைப்பதிப்பு விவரம்

அரவமுத்து வீரன் கதை இந்நூலாசிரியர் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக 1998இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 'சின்னணைஞ்சான் கதை' எனப்படும் சிவனணைந்த பெருமாளின் கிளைக் கதையாக இது கருதப்பட்டு அக்கதையினை அடுத்து அந்நூலில் பதிப்பாகி யுள்ளது. அரவமுத்து வீரன் கதைச் சுவடி சென்னை செம்மஞ்சேரி யிலுள்ள ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திலிருந்து பெறப்பட்டது. மொத்தம் 928 வரிகளில் இக்கதைப்பாடல் அமைந்துள்ளது.

அரவமுத்து வீரன் கதை – கதைச்சுருக்கம்

மணிக்காஞ்சி (மணியாச்சி) நாட்டில் ஒத்தைக்காலன் விளை என்ற ஊரில் இணைசூரமாயன்-சிவகாமியம்மை தம்பதியர் வாழ்ந்து வந்தனர். குழவிப் பேறின்றி வருந்திய அவர்களுக்கு மதுரைச் சொக்கநாதர் அருளால் ஆண்மகவு ஒன்று பிறந்தது. அம்மகவுக்கு அரவ முத்து எனப் பெயர் சூட்டிக் கல்வி, ஆயுதம், மற்றும் மந்திரப் பயிற்சிகள் அளித்துச் சிறப்புடன் வளர்த்து வந்தனர். எண்ணான்கு வயது எய்தியபோது அரவமுத்துவின் வீரத்தையும் திறமையையும் அறிந்த திண்டுக்கல் அரசன் அரவமுத்துவைத் தன் அரண்மனைக்கு அழைத்து வருமாறு ஓட்டனை அனுப்பினான். அரவமுத்துவும் தங்கக் கனிகள் சமைத்து, தங்கத்தட்டில் வைத்து மூட்டையாகக் கட்டிச் சிறுக்கன் தலையிலேற்றித் திண்டுக்கல் வந்தடைந்தார். அரசனைக் கண்டு வணங்கி, தங்கக் கனி வகைகளைக் காணிக்கை யாக்கியபின், அரசன் அளித்த விருந்தினை ஏற்று, அரசனின் வேண்டுகோளின்படி அங்குச் சின்னாள் தங்கியிருந்தார். அரசன் சனி வாரத்தன்று எண்ணைக் காப்பிற்காகத் திருவாழி கழற்றி வைத்தபின், மறவீரன் எண்ணை தேய்த்தான். அச்சமயம் சிறுக்கனுடன் அங்கு வந்த அரவமுத்துவீரன், அரசனுக்கு எண்ணை தேய்த்து வருமாறு தன் சிறுக்கனை ஏவினார். மறவீரன் சினத்து விலக, சிறுக்கன் அரசனுக்கு எண்ணை தேய்த்து விட்டான். இவ்வாறு அரசனுக்கு அயலான் வந்து எண்ணை தேய்த்துவிட்டால் அடுத்து அரசன் தன்னை மதிக்க மாட்டானே என்று சிந்தித்த மறவீரன் அரவ முத்துவைப் பழிவாங்கத் திட்டமிட்டான். எண்ணை தேய்த்த பொழுது கண்துயின்ற அரசனின் திருவாழியைக் கழற்றி அரவமுத்துவின் உடைவாள் உறைக்குள் போட்டு விட்டு உடைவாளையும் உறையுள் செருகி வைத்துவிட்டு மறவீரன் அவ்விடத்தை விட்டு அகன்றான். அரசன் நீராடி முடித்து, பரிவட்டம் சார்த்தி 'திருவாழி எங்கே?' எனக் கேட்க, அனைவரும் தேடிப் பார்த்தனர். கருமறவன் சிறுக்கன் கையிலிருந்த அரவமுத்துவின் உடைவாளை உருவி உறையைத் தட்ட, திருவாழி கீழே விழுந்தது. அரசனின் திருவாழியைத் திருடிய குற்றத்துக்காக அரவமுத்து கழுவிலேற்றப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இக்கதைப்பாடல் வெளிப்படுத்தும் கட்டுப்பாட்டு மீறல்

வெளியூர்க்காரன் செல்வாக்குக்கு எதிரான போராட்டமும் அதன் வெற்றியுமே இக்கதைப்பாடற் கருவாக அமைந்துள்ளது. உள்ளூரில் உள்ளூர்க்காரனே செல்வாக்குடையவன் என்பது சமுதாய நீதியாகவும், நியதியாகவும் இருந்த ஒரு காலகட்டத்தில் வெளியிலிருந்து வந்து அரசனின் செல்வாக்குப் பெற்ற அரவமுத்து, அரசனின் திருவாழி திருடிய கள்வனாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கழுவேற்றிக் கொல்லப்பட்டுள்ளான். அரவமுத்துவின் வீரத்தையும், திறமையையும் அறிந்த அரசன் அரண்மனை விருந்தாளியாக அரவமுத்துவை வரவழைத்து உபசரித்தான். மறவீரன் செய்து கொண்டிருந்த அரசப் பணிவிடையில் தன் சிறுக்கனை ஈடுபடுத்திய அரவமுத்துவின் செயல், அரசனிடம் அவனுக்கிருந்த செல்வாக்கை உறுதிப்படுத்துகிறது. அரசனின் மறுப்பின்மையே அதை உறுதி செய்கிறது. இவ்வாறு வெளியூர்க்காரன் அரசனிடம் செல்வாக்குப் பெறுவது, அதுவும் மிக எளிதான செயலான அரசனுக்கு எண்ணை தேய்த்துவிடுதலில் செல்வாக்குப் பெறுவதைக் கூட மறவீரனால் பொறுத்துக் கொள்ள இயலாமல் ஆகின்றது. இவ்வாறு சிறு செயலிலும் கூட அயலூர்க்காரன் அரச செல்வாக்கைப் பெறுவதை உள்ளூர்க் காரனான மறவீரனால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. வெளியிலிருந்து வந்து அரசனின் செல்வாக்கைப் பெற்ற அரவமுத்துவை ஒழித்துக்கட்ட ஆழி திருடிய குற்றத்துக்கு ஆளாக்கினான் மறவீரன். அது அரவ முத்துவின் ஆவியைப் போக்கக் காரணமாகவும் அமைந்தது. உள்ளூரில் உள்ளூர்க் காரனே செல்வாக்குடன் இருக்க வேண்டும் என நினைத்தல் சமூக நடைமுறையில் இருந்த எழுதப்படாத கட்டுப்பாட்டு விதி. இதில் மீறல் நடத்தியவன் அரவமுத்து. இக்கட்டுப்பாட்டு மீறல் உள்ளூர்க்காரனின் தந்திரத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டது என்பதே இக்கதையின் கருவும் கதை நிகழ்வுகளுமாகும். மண்ணின் மைந்தர்கள் போற்றப்பட வேண்டும்; காக்கப்பட வேண்டும் என்ற இன்றைய கருத்துப் போன்றதே இதுவுமாகும்.

வேற்றூரிலிருந்து வந்து ஆட்சித் தலைமையிடம் செல்வாக்குப் பெற்றவர்களை ஒழித்துக் கட்டும் உள்ளூர்க் காரர்களின் மனப்போக்கை வெளிப்படுத்தும் இத்தகு நிலைக்குத் தக்க சான்றாகத் திகழும் மற்றொரு கதைப்பாடலாகப் பிச்சைக்காலன் கதைப்பாடலையும் குறிப்பிடலாம்.

பிச்சைக்காலன் கதையில் கட்டுப்பாட்டு மீறல்

பிச்சைக்காலன் கதை கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் அவர்களால் 1962இல் பதிப்பிக்கப்பெற்றது.[57] தற்போது இந்நூல் கிடைப்பதில்லை. இதனால் பிற விவரங்கள் அறியக் கூடவில்லை. நா. இராமச்சந்திரன் அவர்களும் 1987இல் இக்கதைப்பாடலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். பிற விவரம் கதைப்பாடல் அந்த வரிசைப் பட்டியலில் காண்க. இக்கதையின் கதைக் கரு தங்கள் தலைவனிடம் வேறு ஊரைச் சேர்ந்தவன் செல்வாக்குப் பெறுவதைப் பொறுக்காத பண்ணைக் காரர்களின் சூழ்ச்சி குறித்தது[58] என்பது தெரிய வருகின்றது.

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த பள்ளத்தூரை ஆளும் சிற்றரசராகச் சேனைக்குட்டி நாடார் என்பவர் திகழ்ந்தார். அவருக்கும் சேரமன்னருக்கும் நல்ல உறவு இருந்தது. இறைப் பற்றும், கொற்றவன் பற்றும் கொண்டவராகச் சேனைக்குட்டி நாடார் விளங்கினார். அச்சேறாத சுவடியான வேம்படி சுவாமி கதை சேனைக்குட்டி நாடார் குறித்த சில செய்திகளைத் தருகின்றது.

அதாவது: வன்னியடி மறவனின் தந்தை மாடப்பத்தேவர் கொல்லப்பட்டதால் அவருடைய மனைவி பச்சையம்மாள் தன் மகனுடன் பல ஊர் கடந்து வஞ்சி நாட்டைச் சேர்ந்த நாஞ்சில் நாட்டுக்கு வந்தாள். வஞ்சி நாட்டில் வஞ்சிமன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட பல கஞ்சி மடங்கள் செயல்பட்டு வந்தன. அதிலொன்றில் தன் மகனுடன் வயிறாரக் கஞ்சி குடித்த பச்சையம்மாள், அடுத்து என்ன செய்வதென அறியாது திகைத்து நின்றாள். அப்போது பணிக்கர் ஒருவர் நாஞ்சில்நாட்டுப் பள்ளத்தூர் சேனைக் குட்டி நாடார் குறித்து அவருக்கு எடுத்துரைத்து, பாதுகாப்புடன் தங்குவதற்கு அதுவே தக்க இடம் என விளக்கிக் கூறினார்.[59] வேம்படி சுவாமிகதை இப்பகுதியைக் கீழ்க்காணுமாறு விவரித்துச் சொல்கிறது.

---

57. கதைப்பாடல் சிறப்பிதழ், தன்னானே, வில்லிசைக் கதைப் பாடல்களில் நாடார் தெய்வங்கள் (கட்டுரை), அ.கா. பெருமாள், ஜனவரி 1977.

58. மேற்படி, ப. 134.

59. ஏ.என். பெருமாள், தமிழில் கதைப்பாடல்கள், செப். 1987, ப. 232-233.

அப்போது பணிக்கனவன் ஆயிழைக்குச் சொல்லுவானாம்
இப்போது பிழைப்பதற்கு நான் சொல்லுகிறேன் கேளு
ஒருவரிடம் போகாதே ஊர்தோறும் திரியவேண்டாம்
மறுசாதி யானதிலே மரியாதை யுள்ளவர்தான்
குருநிலை தவறாதான் கொற்றவரின் அருளுமுண்டு
சிறந்த நல்ல சேரமன்னன் உதவி தானுமுண்டு
சிறந்த கடவுள் பக்தியுண்டு செயலிலும் பெரியவர்காண்
பலபேரும் வந்து வார்த்தையது கேட்பதுண்டு
பார்புகழும் பள்ளத்தூர் சிறந்த சேனைக்குட்டி நாட்டார்[60]

இத்தகு சிறப்பு வாய்ந்த சேனைக்குட்டி நாடாரிடம் வேற்றூரிலிருந்து பணியில் வந்தமர்ந்தவன் பிச்சைக் காலன். அயலூரிலிருந்து வந்து அரசனிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த பிச்சைக்காலனைப் பார்த்துப் பொறாமை கொண்ட சிலர் அவனைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகச் சேனைக்குட்டி நாடாரிடம் எடுத்துச் சொல்லி வந்தனர். மனம் வெறுத்த சேனைக்குட்டிநாடார் உண்மையாக உழைத்துச் சேவை செய்து வந்த பிச்சைக்காலனை முறையின்றிக் கொன்றார்.

இக்கதை மூலமாகக் குறிப்பிட்ட பகுதியை ஆளும் அரசரிடம் அப்பகுதியைச் சேர்ந்தவர்களே முக்கியப் பதவிகளில் அமர்ந்து நிர்வாகம் செம்மைபெற நடக்க உதவினர் என்பதும், இத்தகு கட்டுப்பாட்டை மீறிக் கொண்டு அயலூர்க்காரன் எவனாவது அரசனின் நன்மதிப்பைப் பெற்றுப் பெரிய பதவியில் அமர்ந்து பணியாற்ற நேரும்பொழுது அத்தகையவன் மீது பல அவதூறுகளை அள்ளி வீசி அரசனாலேயே அவனை ஒழித்துக் கட்டுமாறு செய்துள்ளனர் என்பதும் தெளிவாக விளங்குகின்றது.

ஆக மேற்கூறிய ஈனமுத்துப் பாண்டியன் கதை, அரவமுத்து வீரன் கதை, பிச்சைக்காலன் கதை என்ற மூன்று கதைகள் வெளியூர்க்காரன் செல்வாக்குக்கு எதிரான போராட்டங்களை எடுத்துக்காட்டுகின்றன என்பதும், உள்ளூரில் உள்ளூர்க்காரன் உயர்பதவிகளை வகிக்க வேண்டும் என்பது விதிக்கப்படாத கட்டுப்பாட்டு விதியாக அமைந்திருந்தது என்பதும், இக் கட்டுப்பாட்டை மீறிய வெளியூர்க்காரர்களின் கட்டுப்பாட்டு மீறல்கள் அவர்களை ஏதாவது ஒருவகையில் ஒழித்துக் கட்டுவதன் மூலம் முறியடிக்கப்பட்டன என்பதும் எடுத்துக்காட்டப் பெற்றன.

---

60. தமிழில் கதைப்பாடல்கள், ஏ.என். பெருமாள், செப். 1987, ப. 234.

6. ஆளும் வர்க்க அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் கட்டுப்பாட்டு மீறல்

ஆளும் வர்க்கத்துக்கும் அடிமை வர்க்கத்துக்கும் வர்க்க மோதல்கள் குறிப்பிட்ட காலத்தில் வெளிப்படையாக நடக்கத் தொடங்கின. உள்ளுக்குள்ளேயே புழுங்கிச் செத்துக் கொண்டிருந்த அடிமை வர்க்கம் தன் உரிமைகளுக்காக அவ்வப் போது எதிர்ப்பைத் தெரிவித்த பொழுது, மிகக் கடுமையான முறையில் ஆளும் வர்க்கத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தது. அடிமை வர்க்கம் தன்னுடைய போராட்ட உணர்வை வெளிப் படையாகக் காட்ட இயலாத பொழுது, மறைமுகமாகவும், வேறு வழிகள் மூலமாகவும், பிறவற்றின் மீது சார்த்திக் கூறியும் வெளிப்படுத்தி வந்தது. இந்த வகையில் ஆளும் வர்க்கமான ஆங்கிலேயே அரசுக்கு எதிரான போராட்ட உணர்வை உச்சினி மாகாளி மீது சார்த்திக் கூறிய உருவகக் கதைப்பாடலாக உச்சினி மாகாளியம்மன் கதைப்பாடல் திகழ்கின்றது. இந்தக் கதைப் பாடலில் காணப்படும் ஆளும் வர்க்க அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் விளைந்த கட்டுப்பாட்டு மீறலை இனி விரிவாகக் காணலாம்.

உச்சினிமாகாளியம்மன் கதைப்பதிப்பும் கதை விளக்கமும்

இந்தக் கதைப்பாடல் முனைவர் சு. நிர்மலாதேவி அவர்களால் ஆசியவியல் ஆய்வு நிறுவனம் மூலமாக 1987இல் பதிப்பிக்கப்பட்டு The Wandering Voice என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. 981 வரிகளில் இக்கதைப் பாடல் அமைந் துள்ளது. 20 பக்கங்களில் கதை குறித்த ஆய்வுரை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அருஞ்சொல் அகராதியும் 15 பக்கங்களில் அளிக்கப்பட்டுள்ளது.

இக்கதையின் சுருக்கமாவது:

இரணிய வதத்தின் பொழுது நரசிங்க மூர்த்தி தன் நகத்தால் கிழிக்கும்பொழுது இரணியனின் உச்சியில் பீறிட்ட இரத்தத்திலிருந்து உச்சினி மாகாளி தோன்றினாள். அக்காளிக்குச்

சிவன் பரிவாரங்களும், வரங்களும் தர, தேவர்கள் வனச மாமலையின் பக்கலில் கோயில்கட்டி அவளை எழுந்தருளச் செய்தனர். விக்கிரமாதித்தன் காலத்தில் இக்கோயில் விரிவு பெறக்கட்டப்பட்டு அரிய செல்வங்களையும் அங்கு வைத்துப் பாதுகாக்கும் கருவூலமாகவும் ஆனது. விக்கிரமாதித்தனின் காலத்தின் பின் அக்காளிகோயில் பூசை செய்வார் இன்றிக் காடுமண்டிக் கிடந்தது. அந்தணன் ஒருவன் அக்கோயிலைக் கண்டு பூசை செய்யப்பணமின்றி ஏக்குற்று வருந்தினான். அதைக்கண்ட காளி நாடோறும் மூன்று பணம் தந்து முப்பூசை தவறாது செய்யப்பணித்தாள். ஒரு நாள் அந்தணன் காளியை நோக்கி, தன் பெண்மக்களுக்கு மணம் முடிக்கச் சிறிது பொன் தருக என உருகி வேண்டிப் பெற்றான். அப்பொன்னை விற்கக் கொண்டு சென்ற அந்தணனைக் கண்டு ஐயுற்ற வெள்ளைத் துரைகளின் காவலர்கள் துரைமார்களிடம் அவனைக் கொண்டு சென்றனர்.

பொன் கிடைத்த விவரத்தை அந்தணன் கூற, அவர்கள் நம்பமறுத்து 'அக்கோயிலைக் காட்டு' என விலங்கிட்டு அந்தணனை அழைத்துச் சென்றனர். காளிகோயிலில் கதவேழு கண்டு திறக்க வழியறியாது மத யானைகளிடம் இரும்புலக்கை கொடுத்துக் கோட்டை மதில்களை இடித்து நொறுக்கிக் கோயிலைக் கொள்ளையிட்டனர். வெகுண்ட காளி பூதப் படையைத் திரட்டி வெள்ளைப்படையைக் கொன்றழித்தாள். பின்னும் சினம் அடங்காது வெள்ளைத்துரையின் சீமையை அழிக்க, பலவித நோய்களைப் பரப்பினாள். நோய் கண்டு அஞ்சிய மக்கள் பூசை, வழிபாடுகள் செய்தனர். தாங்கள் செய்த அழிவுச் செயல்களுக்கு வருந்திய வெள்ளைத் துரைகளும் மன்னிப்புக் கோரிப் பூசை செய்தனர். அம்மன் மனமிரங்கிப் (பூசை) பலிகளை ஏற்றுத் தென்பகுதிக்குப் பயணமானாள்.

சமூகக் கதைப்பாடலா?

இக்கதைப்பாடலின் தலைப்பு, தெய்வமே பாத்திரமாக அமைதல், தெய்வத்தையொட்டிய கதை நிகழ்ச்சிகள் ஆகியன இது ஒரு தெய்வக்கதைப்பாடல் என்று கொள்ள வழி செய்கின்றன. எனினும்,

1. இந்துக் கோயில்களை இடித்துத் தகர்த்தல்
2. இந்தியரின் பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழ்ந்த கோயில்களைக் கொள்ளையடித்தல்
3. இந்து மத உணர்வு கொண்டோரை அடித்துத் துன்புறுத்தி வதைத்தல் என்ற கொடுஞ்செயல்களை மேற்கொண்ட ஆங்கிலேயர்களின் அதிகார அட்டூழியங் களைத் தமிழ் மனங்களுக்குத் தெளிவுற எடுத்துக்காட்டு வதற்காகவே காளியின் பிறப்பு, காளிகோயில் அமைப்பு, காளிதொடர்புடைய பிற புராண நிகழ்ச்சிகள் பயன் படுத்தப்பட்டுள்ளமையால் இக்கதைப்பாடலை ஒரு சமுதாய, வரலாற்றுக் கதைப்பாடல் என்ற நிலையிலும் நோக்கலாம்.

மகாபாரதத்திலுள்ள பாஞ்சாலி சபதப்பகுதியைப் பாரத மாதாவின் சபதமாக உட்பொருள் அமையும்படிப் பொருத்தமுறப் பாரதி பாடியது போன்றே, இந்த உச்சினிமாகாளி கதைப் பாடலும் தெய்வக் கதைப்பாடல் போன்று வெளிப்படைக்குத் தோற்றமளிப்பினும் நாட்டுப்பற்றை அடித்தளமாகக் கொண்ட உட்கருத்துகள் பலவற்றைத் தன்னுள் அடக்கிய சமூக உருவகக் கதைப்பாடலாக அமைந்துள்ளது.

இக்கதைப்பாடலில் காணப்படும் கட்டுப்பாட்டு மீறல்

ஆளும் வர்க்க அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை விளக்கும் இக்கதைப்பாடல் அடக்குமுறையின் கட்டுப்பாட்டை மீறியுள்ளது. அடக்குமுறைக்கு எதிரான மக்களின் எண்ணங்களும் செய்ய நினைத்த செயல்களும் காளியின் மீது ஏற்றிக் கூறப் பெற்றுள்ளன.

உலகில் அநீதி பெருகியவிடத்துத் தீயவர்களை அழித்து நீதியை நிலைநாட்ட காளி போர்த் தேவதையாக வருவாள் என்பது புராண நம்பிக்கை. இந்நம்பிக்கையினடிப்படையில் வேற்றவர்களான வெள்ளையர்கள் கோயிலிடிப்பு, கோயிற் சொத்தைக் கொள்ளையிடல் போன்ற அநீதிகளை நிகழ்த்திய பொழுது அவர்களை அழித்து, நீதியை நிலைநிறுத்த மாகாளி அம்மன் தன் பூதப் படையுடன் வந்தாள் என இக் கதைப்பாடலில் அமைக்கப்பட்டுள்ளது. வெளிப்படையாக வெள்ளைக்காரன் ஆட்சியை ஒழிக்க இயலாத மக்கள், தம் வீரத் தெய்வமான, வெற்றித் தெய்வமான மாகாளியின் மீது தம் நீண்ட நெடுநாளைய வேட்கையினை ஏற்றிக் கூறியுள்ளனர்.

காளி, தன் பூதப்படையை ஏவி வெள்ளைப்படையை அழித்ததாகவே கதைப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளையரை அழித்தொழிக்க வேண்டும் என்ற கவிஞனின் ஆவேச எண்ணம் இக்கதைப்பாடலில் கலை வடிவினைத் தழுவியுள்ளது.

கும்பினியார் இந்நாட்டில் ஆட்சி செய்யும் வரை கோயிலிடித்தல் போன்ற அட்டூழியங்களை அவர்கள் தொடர்ந்து செய்யும் வரை மரணத்தைத் தரும் கொடிய அம்மைபோன்ற நோய்கள் பரவவே செய்யும்; அவர்கள் செய்த கோயிலிடிப்பு போன்ற அநீதிச் செயல்களினாலேதான் காளி சினந்து அம்மை நோய், வாந்திபேதி, சுரம், குளிர்சன்னி போன்ற நோய்களைப் பரப்புகிறாள் என்ற எண்ணம் இக்கதைப்பாடலில் விதைக்கப் பட்டுள்ளது.

அடிமைப்பட்டுச் சித்திரவதைப்படும் பாரத மக்களின் பிரதிநிதியாக அந்தணன் பாத்திரம் இக்கதைப்பாடலில் படைக்கப்பட்டுள்ளது. அந்தணன் வெள்ளையரிடம் பட்ட அடியும், சிந்திய இரத்தமும் பாரத மக்கள் பட்ட அடியையும் சிந்திய இரத்தத்தையும் நினைவூட்டுவதாகும். அந்தணன் கையில் வெள்ளையர் பூட்டிய விலங்கு பாரத மக்கள் பட்டிருந்த அடிமைத் தளையின் குறியீடு ஆகும். கும்பினியார் அடித்த அடி பொறுக்க முடியாமல் அலறி ஓலமிட்ட அம்மன் கோயில் பூசாரியான அந்தணன் ஒரு தனி மனிதனல்ல; வேற்றார் ஆட்சியில் அல்லலுற்று அழுத மக்களின் பிரதிநிதியாக அவன் அமைக்கப் பட்டுள்ளான்.

காலங்காலமாக அந்தணர் பாவம் பொல்லாதது என்ற எண்ணத்தில் ஊறி வளர்ந்த மக்களிடையே ஓர் அந்தணனை அடித்து வதைத்து அந்நியர் கொடுமைப்படுத்தினர் எனக் கூறல் மூலம் மிகத் திறமையான முறையில் இக்கதைப்பாடலில் அந்நியர் வெறுப்பு கிளறி விடப்பட்டுள்ளது.

மூன்று வேளைப் பூசைக்கு மூன்று பணம் பெற்றுக் கொண்டு எளிமையாக வாழ்ந்து வந்த அந்தணன் வாழ்க்கை, இந்திய மக்களின் எளிய வாழ்க்கை முறையைப் பிரதிபலிப்பதாக இக்கதைப்பாடலில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிற் பொன்னைக் கண்டதும் கோயிற் கருவூலத்தையே கொள்ளையடிக்க முனைந்த வெள்ளையர் செயல் அவர்கள் இந்திய நாட்டுச் செல்வங்களை எவ்விதமெல்லாம் சுரண்டிச் சூறையாடினர் என்பதன் அடையாளமாக அமைந்துள்ளது. நூற்றுக்கணக்கான இந்துக் கோயிலிடிப்புகளின் ஒருமித்த எதிர்ப்பொலி, எதிரொலி இந்த உச்சினி மாகாளி கதைப்பாடல் எனலாம்.

வெள்ளையர் இந்துத் தெய்வத்தை இழிவாகப் பேசி அவமதித்தனர் எனச் சுட்டிக் காட்டுவதன் மூலம், இந்தியாவில் பெரும்பான்மையினராக இருந்த இந்துக்களிடையே மத உணர்வைத் தூண்டிவிட்டு இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒருமைப்பாட்டுணர்வுடன் பிற மதத்தினரான வெள்ளையரை எதிர்த்துப் போராட இக்கதைப்பாடலில் வழி வகுக்கப்பட்டுள்ளது. 'மதத்தால் மக்களை ஒருமைப்படுத்துதல்' என்ற இந்த உத்தி ஒரு வகையில் பார்த்தால் கண்ணனையும் சக்தியையும் துதித்துப் பாடுவதன்மூலம் மத ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி, மதத்தால் இணையும் இந்தியரை அந்நியருக்கெதிராக ஏவிவிட்ட பாரதி கையாண்ட உத்திபோன்றதாகும் எனலாம்.

கதைப்பாடலில் காணப்படும் அம்மன் சீறி மொழிவதாக உள்ள சொற்கள் ஒட்டுமொத்த பாரத மக்களின் உள்ளக்குமுறல் களாகும். கோயிலிடிப்புக் கண்ட தங்கள் உள்ளக்குமுறலைத் தம் வீரத் தெய்வத்தின் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளனர் என்பது பொருந்தும். பாரத மக்களின் கூட்டு வெளிப்பாட்டுக் குரலாக அம்மனின் சீற்ற மொழிகள் அமைந்துள்ளன.

'கோயிலை நாசப்படுத்தினர்' என்பது குறிப்பிட்ட மதத்தை அவமதித்தனர் என்ற பொருளில் மட்டும் அமைவதன்று. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை, கலை உணர்வை, பண்பாட்டை, கல்வியை, வேலை வாய்ப்பை, தொழில் வளத்தைச் சீர் குலைய வைத்தனர் என்பதன் அடையாளமாக அது அமையும். பண்டு தொட்டே கோயில்கள் இறைவன் குடியிருக்கும் இல்லமாக மட்டும் அமையாமல் பல்துறை வளர்ச்சி மையங்களாகச் செயல்பட்டு வந்தன. சோழர் காலத்தில் இப்போக்கு உச்ச நிலை எய்தியுள்ளது. கோயில் நாட்டின் கருவூலமாக, சரசுவதி பண்டாரமாக (நூலகம்), கலை வளர்ச்சிக் கூடமாக, வேலை வாய்ப்பு நிறுவனமாக, தொழில் வளர்ச்சி மையமாக, உடற் பயிற்சிக் கழகமாக, பங்கீட்டு நிலையமாக, பாதுகாப்பில்லமாக, நீதிமன்றமாகத் திகழ்ந்து வந்தமையைக் கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. கோயிலை மையமாகக் கொண்டே நாட்டின் அனைத்துப் பணிகளும் இயங்கி வந்தன. சுருங்கக் கூறின் நாட்டின் முதுகெலும்பாகக் கோயில்கள் திகழ்ந்தன.

விக்கிரமாதித்தன் காலத்திலும் அதற்கு முன்பும் இந்நிலை இருந்ததெனத் தெரிகிறது. தான் திரட்டிய திரவியத்தை மாகாளிக் கோயிலிலேயே பாதுகாப்பாக விக்கிரமாதித்தன் வைத்ததாகக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது. அந்தத் திரவியத்தைக் கைப்

பற்றவே கும்பினிப்படை கோயிலை இடிக்கிறது. அந்நியர்களால் நடத்தப்பட்ட பல கோயிலிடிப்புகள், பல கோயில்களிலிருந்து பொருட்களைக் கொள்ளையடித்தமை போன்றவற்றின் ஒட்டுமொத்த எதிரொலியாக உச்சினிமாகாளியம்மன் கதையில் இடம்பெறும் கோயிலிடிப்பு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முன்னர்க் குறிப்பிட்டது போல நாட்டின் பொருளாதாரத்தை, பண்பாட்டை, கலையை, கலாசாரத்தை அந்நியர் அழித்தனர் என்ற பரந்த பொருளிலேயே அவற்றுக்கொரு தக்க சான்றாகவே இக்கோயிலிடிப்பு குறிக்கப்பட்டுள்ளது.

உச்சினி மாகாளிக் கோயில் தொடக்கத்தில் கல், மரம் முதலியவை கொண்டு 21 வாயிலுடையதாகத் தேவர்களால் கட்டப்பட்டிருந்தது. எப்பக்கத்திலிருந்தும் எளிதில் நுழையுமாறு 21 பொற்கதவுகளுடன் திறந்த வெளி அரங்கம் போன்று கட்டப் பட்டிருந்த இக்கோயில் விக்கிரமாதித்தன் காலத்தில் புதுப்பிக்கப் பட்ட பொழுது ஏழு வாசற் கதவுகளை மட்டும் உடையதாக அமைக்கப்பட்டிருந்தது. 21 பொற்கதவுகளைச் சுற்றிச் செல்லப் பாதுகாப்பு கருதி இவை உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிப்பிரதியால் (வரி: 254-380) தெரியவருகின்றது. இவ்ஏழு கதவுகளையும் "சினகரக் கதவேழு" என்று கதைப்பாடல் (வரி: 813) குறிப்பிடுகின்றது. வாயில் முகப்புகளிலும், பக்கங்களிலும் தங்கத்தாலான கோட்டைகள் அமைக்கப்பட்டிருந்தன. அத்தங்கக்கோட்டை களையும், வாசற் கதவுகளையும் கும்பினிப் படை உடைத்துத் தூளாக்கியதெனக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது. ஒரு நாட்டின் தங்கத்தை நாசப்படுத்தினர் என்பது அந்நாட்டின் பொருளாதாரத்தை அழித்தனர் என்பதைக் குறிக்கும்.

ஆக ஒட்டு மொத்தமாக நோக்கும் பொழுது இக்கதைப் பாடல் ஆளும் வர்க்கமாக இருந்த அந்நியரான வெள்ளையர் ஆட்சியின் அடக்குமுறையால் விளைந்த கட்டுப்பாடுகளையும், இன்னல்களையும் மீறியும் எடுத்துரைத்தும் செல்லும் ஒரு உருவகக் கதைப்பாடலாகத் திகழ்கின்றது என்பது வெளிப்படத் தெரிய வருகின்றது. மக்கள் மனங்களில் நிகழ்ந்த மீறல்கள் மாகாளி செய்ததாகத் தெய்வத்தின் மீது ஏற்றிக் கூறப்பட்டுள்ளன. மக்கள் பட்ட இன்னல்கள் அந்தணன் மீது சார்த்திக் கூறப் பட்டுள்ளன. ஆக இந்த உச்சினி மாகாளி கதைப்பாடல் ஆளும் வர்க்க அடக்குமுறையால் விளைந்த கட்டுப்பாடுகளை மீறும் கதைப்பாடலுக்குத் தக்க சான்றாகத் திகழ்கின்றதைக் காண முடிகின்றது.

கட்டுப்பாட்டு மீறல்களின் கூர்மைப்பாடும் விளைவுகளும்

16-19ஆம் நூற்றாண்டுக் காலத்தைக் கட்டுப்பாட்டு மீறல்களின் கூர்மைப்பாட்டுக் காலமாகக் குறிப்பிடலாம். கதைப் பாடற் காலகட்டமான இக் காலகட்டத்தில் எவ்வகைகளி லெல்லாம் கட்டுப்பாட்டு மீறல்கள் நிகழ்ந்தன என்பது இதுவரையும் எடுத்துக்காட்டப்பெற்றது. நா. வானமாமலை அவர்கள் குறிப்பிட்டது போல நிலவுடைமைச் சிதறல் கால கட்டமான இக்காலகட்டத்தில் கட்டுப்பாடுகளில் தளர்வுகள் தோன்றத் தொடங்கியதையே இம் மீறல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. மீறல்கள் திரும்பவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன; சில மீறல்கள் கட்டுக்கடங்காமலும் போயிருக்கின்றன. இந்த இரு நிலைகளில் எவை அதிகம் என்பதை ஒட்டுமொத்தமாகப் பட்டியலிட்டு நோக்கும்பொழுது அறிய இயலுகின்றது. அதன் மூலம் இக்காலகட்டம் கட்டுப்பாட்டு மீறல்கள் நிகழ்ந்த காலகட்டமாகிப் பின்னால் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தின் வித்தாகத் திகழ்ந்துள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது.

இந்தக் கட்டுப்பாட்டு மீறல்களை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு நோக்கினோமானால் மக்களுள் காணப்பட்ட இருபெரும் ஏற்றத்தாழ்வு வேறுபாடுகள்தாம் பல மீறல்களுக்கும் காரணமாகியுள்ளன என்பது வெளிப்படையாகத் தெரிய வருகின்றது. அவை:

சாதிக்குள் ஏற்றத் தாழ்வு
தொழிலுக்குள் ஏற்றத் தாழ்வு
வர்க்கத்துக்குள் ஏற்றத்தாழ்வு
பாலடிப்படையிலான ஏற்றத்தாழ்வு
காலமாற்றத்தாலான ஏற்றத்தாழ்வு

என்ற இந்த வகைகளிலெல்லாம் ஏற்றத்தாழ்வு கொண்டிருந்த ஒரு சமுதாயத்தையே 16-19ஆம் நூற்றாண்டைய சமுதாயம் எனச்

சமூகக் கதைப்பாடல்கள் அடையாளம் காட்டுகின்றன. மீறல்களுக்கு இத்தகு ஏற்றத் தாழ்வுகளின் அழுத்தம் காரணமாகியுள்ளது. காலங்காலமாக இத்தகு அழுத்தத்துக்கு ஆட்பட்டிருந்த மக்களுள் ஒரு சிலர் மீறல்களை நிகழ்த்தியமையையே கதைப் பாடல்கள் பதிவு செய்து தந்துள்ளன. அந்நியர் ஆட்சிக்கெதிரான விடுதலைப் போராட்டத்துக்கு முன்னர்த் தம் சொந்த நாட்டுக்குள்ளேயே சொந்த மக்களின் ஆதிக்க வெறியை எதிர்த்து ஒரு விடுதலைப் போராட்டம் துவங்கப்பட்டதையே கதைப்பாடல்கள் காட்டுகின்றன. மீறல்கள் அவ்வப்போது அடக்கப்பட்டன என்றாலும் அக்கட்டுக்கோப்பு ஆட்டம் காணத் துவங்கியதையே கதைப்பாடல்கள் அடையாளம் காட்டுகின்றன. கட்டுப்பாட்டு மீறல்களை இருபெரும் நிலைகளாகப் பகுத்துக் கொள்ள முடியும்.

1. **அடக்கி ஒடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு மீறல்கள்**
2. **அடக்க இயலாமல் போன கட்டுப்பாட்டு மீறல்கள்**

அடக்கி ஒடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு மீறல்கள்

இத்தகு கட்டுப்பாட்டு மீறல்களே எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளன. கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்தும் 48 சமூகக் கதைப்பாடல்களில் 44 கதைப்பாடல்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு மீறல்களை அடையாளம் காட்டுகின்றன. மீறல்களை நடத்தியவர்களுள் மீறல்களை நடத்தியமைக்காக இந்த 44 கதைப்பாடல் தலைவர்களும் உயிரிழந்துள்ளனர். 4 கதைப்பாடல்கள் மட்டுமே கட்டுப்பாட்டு மீறல்களை நடத்தியும் உயிரிழக்காமல் இருந்தவர்களைக் காட்டுகின்றன. அவர்கள் சின்னண்ணன், வீணாதி வீணன், வெள்ளையம்மாள், ஹனுமா ஆகியோராவார். இவற்றின் மூலம் கட்டுப்பாட்டு மீறல்கள் பெருமளவில் நடைபெற்றுள்ளன என்பதும் மீறல்களை நடத்தியவர்கள் இதனால் உயிரிழந்துள்ளனர் என்பதும் தெரிகின்றது. மீறல்களை நடத்தியவர்களைக் கொல்வதன் மூலம் மீறல்கள் அவ்வப்போது அடக்கப்பட்டு வந்துள்ளன என்றாலும் சமுதாயத்தில் அவர்களுடைய உயிரிழப்புகள் விழிப்புணர்வை ஏற்படுத்திச் சமுதாய மாற்றத்துக்கு வழிவகுத்துள்ளன என்று கருதலாம்.

கட்டுப்பாட்டு மீறல்களின் பின் விளைவுகள்

16-19ஆம் நூற்றாண்டுகளில் சமுதாயத்தில் நடைபெற்ற பல்வேறு வகையிலான கட்டுப்பாட்டு மீறல்கள் 20-21ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த பல விளைவுகளுக்கு அடித்தளமாக அமைந்தன என்பது வரலாற்று உண்மையாகும்.

சாதி மீறிய காதல் காரணமாகச் சாதிக் கட்டுக்கோப்பை மீறிக் காதல் கொண்டமைக்காகக் கொல்லப்பட்டவர்களை 9 கதைப்பாடல்கள் அடையாளம் காட்டுகின்றன. இன்று காதல் மணங்கள் வரவேற்கப்படுகின்றன. கலப்பு மணம் புரிவாருக்கு அரசு உதவித் தொகை அளிக்கின்றது. காதல் கொள்வதும் கலப்பு மணம் செய்வதும் சமூகக் குற்றமாகச் சமூகக் கட்டுப்பாட்டு மீறலாகக் கருதப்படுவதில்லை. அரசு, சமூக அங்கீகாரமும் பெருமளவில் கிடைத்துள்ளது.

இதுபோன்றே இன்ன சாதியான் இன்ன தொழில்தான் செய்ய வேண்டும் என்றிருந்த கட்டுப்பாடு இன்றில்லை. காவல் தொழிலை, மறவர் சாதியினர் பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த நிலை இன்று மாறிவிட்டது. எவர் வேண்டுமாயினும் எத் தொழிலையும் அன்னாரது சூழல், பொருளாதார வசதிக்கேற்பச் செய்து வாழலாம் என்ற நிலை வந்துவிட்டது. சாதித் தொழில் என்ற அமைப்பு தகர்ந்து போய்விட்ட சமூகத்தை இன்று நாம் காண்கிறோம். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்த தொழில் வழியிலான கட்டுப்பாட்டு மீறல்களை நடத்திய மதுரை வீரன், முத்துப்பட்டன், சின்னத்தம்பியை நாம் மறக்க இயலாது.

ஆளும் வர்க்கம் - ஆளப்படும் வர்க்கம் அல்லது அடிமை வர்க்கம், உடைமையாளர் வர்க்கம் - உழைப்பாளர் வர்க்கம் என்ற வர்க்க வேறுபாட்டை மீறியவர்களை 9 கதைப்பாடல்கள் அடையாளம் காட்டுகின்றன. இன்றும் பல நிலைகளில் இந்த வர்க்க வேறுபாட்டுணர்வு இருந்து கொண்டுதான் உள்ளது. என்றாலும் இந்த இரண்டு வர்க்க எல்லைக் கோடுகளும் நிலையானவை; உறுதியானவைகளாக இன்று இல்லை. ஆளப்படும் வர்க்கமாகிய உழைப்பாளர் வர்க்கம் ஆளும் வர்க்க மாகவும், உடைமையாளர் வர்க்கமாகவும் ஆகக் கூடிய வளர்ச்சி, மாறுதல் நிலைகள் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எவர் வேண்டுமாயினும் தன் சுய உழைப்பு, திறமை, செல்வாக்கால்

உயர முடியும் என்ற சூழலுக்கு இன்று நாம் வந்துள்ளோம்; வளர்ந்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1843இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய அடிமை முறை ஒழிப்புச் சட்டத்தால் அடிமை முறை அடியோடு ஒழிந்தும் விட்டது.

இன்று பெண்ணியச் சிந்தனை மாறியுள்ளது; வளர்ந்துள்ளது. பெண்ணுக்குச் சொத்துரிமை கிடைத்துள்ளது. 25-3-1989இல் உண்டாக்கப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி இந்துப் பெண் வாரிசுக்கும் சொத்தில் பங்குண்டு என்பது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் அனந்தாயி, நல்லதங்காள் வெள்ளையம்மாள்கள் உருவாகாமல் தடுக்கப்பட்டுள்ளது.

பாலியல் வன்முறைகள் இன்றும் பரவலாக நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. என்றாலும் இவை கொடுங் குற்றமாகக் கருதப்பட்டுக் குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனைகள் அளிக்கப்படுகின்றன. பாலம்மாள் கதையில் போன்று எந்தத் தகப்பனாரும் தன் பெண்ணை அதிகார வர்க்க ஆணைக்கு அஞ்சி மணம் முடித்துக் கொடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு அஞ்சி மகளைக் கொன்றுவிட்டு ஊரை விட்டு ஓடவேண்டிய நிலை இன்று இல்லை.

எனவே இன்றைய சமுதாயம் இத்தகைய ஒரு மாற்றத்தையும், வளர்ச்சியையும் காணுவதற்கு அடிப்படைக் காரணிகளாக அமைந்தவை கதைப்பாடல்கள் என்பதை இவ்வாய்வு மூலம் தெளிவுற அறிய இயலுகின்றது. ஒரு கால கட்டச் சமுதாய மக்களின் முன் எடுப்பு, பின்வரும் சந்ததியினருக்குப் பாடமாகவும், எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்து வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது என்பதும் இவ்வாய்வு மூலம் வெளிப்படுகின்றது. கட்டுப்பாடுகள் மீறல்களைச் சந்தித்தே ஆக வேண்டும். அதுபோன்று மீறல்கள் பின் விளைவுகளைத் தந்தே ஆகும் என்பதும் மீறல் நல்நோக்கத்துடன் செய்யப்பட்டிருந்தால் அது நல்விளைவையே தரும் என்பதும் இவ்வாய்வு வெளிப் படுத்தும் செய்தியாகும்.

கட்டுப்பாட்டு மீறல்களை வெளிப்படுத்தும் சமூகக் கதைப்பாடல்களின் அகர வரிசைப்பட்டியல்

1. (அண்ணன்மார் சுவாமி கதை) பொன்னர் சங்கர் அம்மானை, கருப்பணன் பிள்ளை, சென்ட்ரல் அச்சுக்கூடம், சென்னை, 1871.

   அண்ணன்மார் சுவாமிகதை, பழநிச்சாமி, வெற்றிவேல் பதிப்பகம், சென்னை, 1971.

   அண்ணன்மார் சுவாமிகதை, சக்திக்கனல், வெற்றிவேல் பதிப்பகம், கோயம்புத்தூர், 1977.

   அண்ணன்மார் கதை, ஆசியவியல் ஆய்வு நிறுவனம், செம்மஞ்சேரி, சென்னை, ஏப்ரல், 1992.

   அண்ணன்மார் சுவாமி கதை, நர்மதா பதிப்பகம், சென்னை, 1994.

   (அண்ணன்மார் சுவாமி கதை) மலைச்சாமி குன்றுடையான், சக்திக்கனல், வெற்றிவேல் பதிப்பகம், 1997.

2. அழகுத்தேவர் கதைப்பாடல், ச. முருகானந்தம், தேன்மழை வெளியீடு, சென்னை-16, ஆகஸ்ட், 1991.

3. அனந்தாயி கதை, கதைக்குறிப்புகள் உள்ள நூல் - 'தமிழில் கதைப்பாடல், ஏ.என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1983, ப.171, 198-199.

4. இசக்கியம்மன் கதை, ஆறுமுகப் பெருமாள் நாடார், பிலோமின் பிரஸ், கொட்டாரம்.

   பழகநல்லூர் நீலியம்மன் கதை, ஆறுமுகப்பெருமாள் நாடார், தங்கம் பிரஸ், நாகர்கோவில், 1978.

   பழையனூர் நீலி கதை, தொகுப்பாசிரியர் சு. சண்முக சுந்தரம், கொடுமுடி சண்முகப் பிரகதம், ஜனவரி, 1978.

   பழையனூர் நீலிகதை, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1979.

5. ஈனமுத்துப் பாண்டியன் கதை, மு. சண்முகம் பிள்ளை & சு. சண்முக சுந்தரம், தமிழாய்வு, தொகுதி 3 ப. IV, சென்னைப் பல்கலைக் கழகம், 1974.

ஈனமுத்துப் பாண்டியன் கதை, சு. சண்முகசுந்தரம், தன்னனானே பதிப்பகம், பெங்களூர், டிசம்பர், 2001.

6. உச்சினி மாகாளி கதை (நூல்: The Wandering Voice) இரா. நிர்மலாதேவி, ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, 1987.

7. உடையார் கதை, தி. நடராசன், கூடல் பப்ளிஷர்ஸ், 1980.

அரவமுத்து வீரன் கதை (உடையார் கதை), முனைவர் சூ. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1998.

8. கருவாயத் தேவன் கதைப்பாடல், இருக்கும் நூல்: நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், கே.ஏ. குணசேகரன், அன்னம் வெளியீடு, சிவகங்கை, அக்டோபர், 1988.

9. காத்தவராய சுவாமி கதை (பெரிய எழுத்து), பி. இரத்தின நாயகர் & சன்ஸ், சென்னை, 1872.

காத்தவராய சுவாமி கதை, ஆறுமுக சுவாமிகள், பரப்பிரம்ம அச்சுக்கூடம், சென்னை, 1878.

காத்தவராயன் கதைப்பாடல், நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1971.

காத்தவராயன் கதை, (பெரிய எழுத்து), ஆர்.ஜி. பதி கம்பெனி, சென்னை-1, 1974.

10. (குமாரசுவாமி கதை), சின்ன நாடான் கதை, நா.வானமாமலை, Studies in Folk Literature, p.120. NCBH, Madras, 1969.

குமாரசுவாமி நாடான் கதை, ப.யோ. தங்கசுவாமி, தங்கம் பதிப்பகம், சென்னை, 1993.

11. குறுக்குளாஞ்சி கதை (The Wandering Voice) இரா. நிர்மலா தேவி, ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, 1987.

12. கௌதல மாடன் கதை, நா. வானமாமலை, Studies in Tamil Folk Literature, NCBH, Madras, 1969, p.120.

13. சந்தனத்தேவன் கதைப்பாடல், தொகுத்தவர் ஓ.முத்தையா, பிற விவரங்கள் தெரியவில்லை.

14. சந்தனத்தேவன் பெருமை, மலையருவி, தொகுப்பாசிரியர் கி.வா.ஜ, சரச்வதி மகால் நூலக வெளியீடு, 1958, ப.155-159.

15. சிதம்பர நாடார் கதை, சு. தங்கதுரை, ஸ்ரீ பரந்தாமன் பிரிண்டர்ஸ், மேலக் கிருஷ்ணன் புதூர், குமரிமாவட்டம், மே, 1982.

16. சிவராமப்பாண்டியன் கதை (ஐந்து கதைப்பாடல்கள்), சு. சண்முக சுந்தரம், தன்னனானே பதிப்பகம், பெங்களூர், டிசம்பர், 2001.

17. சின்னண்ணன்-சின்னத்தம்பி கதை, கதைக்குறிப்புகள் உள்ள நூல்: ஆராய்ச்சி இதழ் 4, மலர் 5, ச. வரதராசலு, பாளையங் கோட்டை, 1977, ப. 223-226.

சின்னண்ணன் - சின்னத்தம்பி கதை, மேற்படி, 1979. (ஒரு கட்டுரையில் பதிப்பிப்பு - சில சொற்களில் வேறுபாடு)

சின்னண்ணன் - சின்னச்சாமி கதை, இரா. பன்னீர் செல்வம் புலமை (இதழ் 7) சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1981, ப. 181-195.

பெரியண்ணன் - சின்னண்ணன் கதை (சின்னண்ணன் சின்னத்தம்பி அல்லது சின்னச்சாமி கதை (ஆய்வுக் கட்டுரை) சு. சக்திவேல், ஆய்வுக்கோவை I, 1994, ப.442-446.

18. சின்னணைஞ்சான் கதை, சூ. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1998.

19. சின்னத்தம்பி கதை (The Wandering Voice), இரா. நிர்மலாதேவி, ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, பிப்ரவரி, 1987.

20. சின்னாடான் கதை, கதைக் குறிப்பு உள்ள நூல்: தமிழர் நாட்டுப்புற இயல் ஆய்வு, ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113, செப்டம்பர், 1979, ப.434-436.

21. சின்னான் கதை, கதைக் குறிப்பு உள்ள நூல்: மேற்படி, ப. 430-431.

22. சேர்வைக்காரன் கதை, ஏ.என். பெருமாள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, டிசம்பர், 1988.

பலவேசம் சேர்வைக்காரன் கதை, சு. தங்கதுரை, சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில், 1983.

பலவேச சேர்வைக்காரன் கதை (நூல்: The Unsung Melodies), ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, 1989.

23. சோணமுத்துப் பாண்டியன் கதைப்பாடல், (ஐந்து கதைப் பாடல்கள்) சு. சண்முக சுந்தரம், தன்னனானே பதிப்பகம், பெங்களூர், டிசம்பர், 2001.

24. தடிவீரசுவாமி கதை, சூ. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.

25. தோட்டுக்காரி அம்மன் கதை, ஆறுமுகப் புலவர், தங்கம் பிரஸ், நாகர்கோவில், 1967.

தோட்டுக்காரி அம்மன் கதை, கு. ஆறுமுகப் பெருமாள் நாடார், 1981.

தோட்டுக்காரி கதை, வ.அலமேலு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மார்ச், 1985.

26. நல்லதங்காள் கதை, புகழேந்திப்புலவர், 1869.

நல்லதங்காள் கதை, புகழேந்திப்புலவர், பத்மநாப விலாசம், சென்னை, 1904.

நல்லதங்காள் கதை, மேற்படி, 1949.

நல்லதங்காள் கதை, ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை.

நல்லதங்காள் கதை, அருணசல ஐயர், மனோண்மணி விலாச அச்சுக் கூடம், சென்னை, 1973.

27. பளிச்சியம்மன் கதை, கதைக்குறிப்புகள் உள்ள நூல்: முத்துப் பட்டன் கதைப் பதிப்பு முன்னுரை, மதுரைப் பல்கலைக்கழகம், அக்டோபர், 1971.

28. பாலம்மாள் கதை (ஐந்து கதைப் பாடல்கள்), சு. சண்முக சுந்தரம், தன்னனானே பதிப்பகம், பெங்களூர், டிசம்பர், 2001.

29. பிச்சைக்காலன் கதை, ஆறுமுகப் பெருமாள் நாடார், 1962.

பிச்சைக்காலன் கதை, இராஜா தம்பையா நாடார், சூரன்குடி.

பிச்சைக்காலன் கதை, கதைக்குறிப்புகள் உள்ள நூல்: (தன்னனானே, சு. சண்முக சுந்தரம்) நா. இராமச்சந்திரன், 1987.

பிச்சைக்காலன் கதை, நா. இராமச்சந்திரன், தமிழ்த்துறை ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, 1987.

30. பூச்சியம்மன் வில்லுப்பாட்டு, ஆ. சிவசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஜூலை, 1989.

31. பூலங்கொண்டாளம்மன் கதை, ஆறுமுகப் பெருமாள் நாடார், அகத்தீசுவரம், 1977.

32. மணிக்குறவன் கதைப்பாடல், உள்ள நூல்: நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், கே.ஏ. குணசேகரன், அன்னம் வெளியீடு, சிவகங்கை, அக்டோபர், 1988.

33. மதுரை வீரன் கதை, முத்துப்புலவர், 1873.

மதுரை வீர சுவாமி கதை, பிரபாகர அச்சுக் கூடம், சென்னை, 1873.

மதுரை வீர சுவாமி கதை, புகழேந்திப் புலவர் (ஆசிரியர்) எஸ்.என்.எஸ்.பிரஸ், சென்னை, 1952.

மதுரை வீரன் கதை (பெரிய எழுத்து), புகழேந்திப் புலவர், ஆர்.ஜி.பதி கம்பெனி, சென்னை, 1969.

(தொடர்ந்து பலபதிப்புகள் பல ஆண்டுகளில் இப்பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டுள்ளன).

மதுரை வீரன் கதை, இரத்தின நாயகர் & சன்ஸ், சென்னை-1, 1972.

மதுரை வீரன் அம்மானை, அ. விநாயக மூர்த்தி, கூடல் வெளியீடு, மதுரை, 1978.

மதுரை வீரன் கதை, சு.சண்முக சுந்தரம், 1980, மறுபதிப்பு: பூம்புகார் பிரசுரம், சென்னை, 1984.

34. மம்பட்டியான் கொலைச் சிந்து, குறிப்பு உள்ள நூல்: தமிழ்நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, ப.40.

மம்பட்டியான் கதை, கதைக்குறிப்பு: தினத்தந்தி (15-7-2004 & 16-7-2004), வரலாற்றுச் சுவடுகள் வரிசை.

35. மருதநாயகம் பிள்ளைகதை (கட்டுரை), நா. இராமச்சந்திரன், தன்னனானே (இதழ்) தன்னனானே பதிப்பகம், பெங்களூர், மே. 2000.

36. மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல், ச. முருகானந்தம், தேன்மழை வெளியீடு, சென்னை - 1, ஆகஸ்டு, 1991.

மன்னான் சின்னாண்டி கதைப்பாடல், அ.ம. சத்தியமூர்த்தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1999.

37. முத்துப்பட்டன் கதை, நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, அக்டோபர், 1971.

38. மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, சு.சண்முகசுந்தரம், கொங்கு பதிப்பகம், சென்னை-20, 1976.

மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை (ஐந்து கதைப் பாடல்கள்), சு.சண்முகசுந்தரம், தன்னனானே பதிப்பகம், டிச. 2001.

39. மைக்கேலம்மா கதைப்பாடல், உள்ள நூல்: நகர் சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், கே.ஏ. குணசேகரன், அன்னம் வெளியீடு, சிவகங்கை, அக்டோபர், 1988.

40. வன்னியடி மறவன் கதை, தி. நடராசன் & சர்வேஸ்வரன், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977.

41. வன்னிராசன் கதை, லாரன்ஸ் நாயகம், (எம்.ஏ. ஆய்வேடு) கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

தடிவீரசுவாமி கதை & வன்னியராயன் கதை, சூ. நிர்மலா தேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1996.

42. வீணாதி வீணன் கதை, நா. வானமாமலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஜனவரி, 1967.

43. வீரமணிச் சாம்பான் கதை (அச்சேறாத சுவடி) கதைக் குறிப்பு உள்ள நூல்: தமிழில் கதைப்பாடல்கள், ஏ.என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, செப்டம்பர், 1987, ப. 171-185.

44. வெங்கலராசன் கதை (நூல்: The Dateless Muse), இரா. நிர்மலாதேவி, ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, 1988.

45. வெள்ளையம்மன் வரலாறு, எம். துரைசாமி, 1940. வெள்ளை யம்மாள் கதைப்பாடல், கதைக்குறிப்பு உள்ள நூல்: தமிழ்நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, அ. பிச்சை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 2003, ப.28.

வெற்றித்திலகம் வெள்ளையம்மாள் கதைப்பாடல், செ. இராசு, தன்னனானே (இதழ்) தன்னனானே பதிப்பகம், பெங்களூர், மே, 2001.

46. வேம்படி சுவாமி கதை (அச்சேறாத சுவடி) கதைக்குறிப்புகள் உள்ள நூல்: தமிழில் கதைப்பாடல்கள், ஏ.என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, ப.232-233 & நாட்டுப்புறக் கலையியல், நா. வானமாமலை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-14, டிசம்பர், 2001, ப.101.

47. ஐம்புலிங்கம் புகழ், உள்ள நூல்: மலையருவி, கி.வா.ஜ. சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1958, ப.176-187.

48. ஹனுமா கதை, கதைக் குறிப்பு உள்ள நூல்: நாட்டுப்புறக் கலையியல், நா. வானமாமலை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை - 14, டிசம்பர், 2001, ப.179.

துணைநூற்பட்டியல்

(நூல்கள்)

1. அடிமை முறையும் தமிழகமும், ஆ. சிவசுப்பிரமணியன், என்.சி.பி.எச்., ஜுன், 1984.
2. ஆய்வுக்கோவை தொகுதி i (1999), iii (1978), i (1994), iii (1985), ii (1998), iii (1989), iii (1999).
3. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம், கோ. தான்யா, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1990.
4. இலக்கிய வரலாறு, மு. கோவிந்தசாமி.
5. ஐந்து கதைப்பாடல்கள், தொகுப்பாசிரியர் சு. சண்முக சுந்தரம், தன்னனானே பதிப்பகம், சென்னை, 2001.
6. கதைப்பாடல்களும் சமூகமும், கோ. கேசவன், தோழமை வெளியீடு, கும்பகோணம், 1985.
7. தமிழ் இலக்கிய வரலாறு, மு. கோவிந்தசாமி, சென்னை, 1986.
8. தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, அ. பிச்சை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003.
9. தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு, பதிப்பாசிரியர் ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-20, 1979.
10. தமிழ்நாட்டுப்புறவியல் ஆய்வுக் கட்டுரைகள், பொன். கோவிந்தசாமி, International printers and publishers, சென்னை, 1984.
11. தமிழ் நில வரலாறு, கோ. தங்கவேலு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், மார்ச் 1976.
12. தமிழ் வில்லுப்பாட்டுகள், தி.சி. கோமதி நாயகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
13. தமிழக ஆட்சி முறை, ந. க. மங்கள முருகேசன், பாரி நிலையம், சென்னை - 108, 1987.
14. தமிழக நாட்டுப்புறவியல், சரசுவதி வேணுகோபால், தாமரை வெளியீடு, மதுரை, 1981.
15. தமிழக வரலாறு, பா. மாசிலாமணி, தஞ்சை, 1980.

16. தமிழகம் வரலாறும் பண்பாடும், கோ. இராஜய்யன், மதுரை, 1976.

17. தமிழில் கதைப்பாடல், ஏ.என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1987.

18. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி 2, தமிழாக்கம்: க. இரத்தினம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சை, 1987.

19. நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல், கே.ஏ. குணசேகரன், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1988.

20. நாட்டுப்புற இயல், சு. சண்முகசுந்தரம், காவ்யா பதிப்பகம், சென்னை, 2003.

21. நாட்டுப்புற இலக்கிய வரலாறு, சு. சண்முகசுந்தரம், 1980.

22. நாட்டுப்புறக் கலையியல், நா. வானமாமலை, பாவை பப்ளிகேஷன்ஸ், 2001.

23. நாட்டுப்புறவியல் ஆய்வுகள், (ஐந்து கதைப்பாடல்கள்) ஆறு. இராமநாதன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1986.

24. நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், சு. சக்திவேல், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1996.

25. நாட்டுப்புறவியல் கருத்தரங்கு, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், பாண்டிச்சேரி, 1987.

26. நாட்டுப்புறவியல் நூலடைவு, சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

27. நா. வானமாமலை, எஸ். தோதாத்ரி, சாகித்ய அகாதெமி, சென்னை, 2001.

28. புருஷா தேவி கதை, பதிப்பாசிரியர்கள் கி. ஜெயக்குமார், த. பூமிநாகநாதன், ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, 1996.

29. மதுரை நாயக்கர் வரலாறு, அ.கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை, 1981.

30. மதுரை வீரன் கதைப்பாடல்கள் - ஓர் ஆய்வு, வி.என். திருமாவளவன், பதிப்புரிமை கி. கஸ்தூரி, புதுச்சேரி, 1991.

31. மலையருவி தொகுப்பாசிரியர், கி.வா. ஜகந்நாதன், சரசுவதி மகால் நூலக வெளியீடு, 1958.

32. மார்க்சியமும் தமிழ் இலக்கியமும், ஞானி, பரிமாணம் வெளியீடு, கோவை, மார்ச் 1988.

33. மூவேந்தர் குலத்தேவர் சமூக வரலாறு, பி. முத்துத்தேவர், உசிலம்பட்டி, 1976.

34. A History of the Maravas, S. Kadirvel, Madurai, 1977.

35. Castes and Tribes of South India, Vol. II, Cosmo Publications, Delhi, 1975.

ஆய்வேடுகள், இதழ்கள்

1. அண்ணன்மார் சுவாமி கதை - பொதுநிலை ஆய்வு, (எம்.ஃபில். ஆய்வேடு), சென்னைப் பல்கலைக்கழகம், 2000.

2. அண்ணன்மார் சுவாமி கதைகள் - ஓர் ஆய்வு (எம்.ஃபில். ஆய்வேடு), க. கனகராஜ், பாரதியார் பல்கலைக் கழகம், கோவை, 1999.

3. கருத்துப்புலப்பாட்டில் கதைப்பாடல்கள் (பி.எச்டி ஆய்வேடு) சா. சவரிமுத்து.

4. காத்தவராயன் கதைகள் - ஓர் ஒப்பாய்வு (எம்.ஃபில் ஆய்வேடு), த. வாசுதேவன், கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரி, விருத்தாசலம், 1986.

5. நல்ல தங்காள் கதைப்பாடல் - ஓர் ஆய்வு (எம்.ஃபில். ஆய்வேடு), பா. ஜெ. சாந்தகுமாரி, சென்னைப் பல்கலைக் கழகம், 1985.

6. ஆராய்ச்சி, நா. வானமாமலை, இதழ் 2, 1971.

7. தமிழியல் ஆய்வு (இதழ்), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1999.

8. தன்னனானே (இதழ்), தொகுப்பாசிரியர், சு. சண்முகசுந்தரம், தன்னனானே, பெங்களூர் மற்றும் காவ்யா வெளியீடுகள், 1977, 1995, 1998, 2000, 2001.

9. தாமரை (இதழ்), 1990.

10. நாட்டார் வழக்காற்றியல் (இதழ்) தொகுதி 1, நிர்வாக ஆசிரியர் தே. லூர்து, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, 1987.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்	40.00
பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்	40.00
தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு	50.00
தமிழ் ஆய்வு இதழ்கள்	50.00
மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்	40.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
இதழாளர் பெரியார்	160.00
காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்	65.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார்	25.00
திருக்குறளில் பொதுநிலை உத்திகள்	30.00
தமிழிலக்கித்தில் மனித நேயம்	115.00
தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம்	30.00
தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின்	40.00
பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை	45.00
பெண்ணியப் படைப்பிலக்கியம்	75.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
பள்ளு இலக்கியம் மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே	75.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை	80.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்கலைபண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	150.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்	40.00
திறனாய்வு அணுகுமுறைகள்	120.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
பெரியாரியப் பெண்ணியம்	35.00
திருப்புகழ் ஒளிநெறி - பகுதி - 1	90.00
திருப்புகழ் ஒளிநெறி - பகுதி - 2	90.00
திருப்புகழ் ஒளிநெறி - பகுதி - 3	80.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் அறிவியல் மற்றும் தகவல் தகவல் தொடர்பு	75.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
பாவாணர்தரும் ஒளி	35.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00

589 கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் 95.00